
கரிசல் களம்



பன்னாட்டு கருத்தரங்கு

கரிசல் இலக்கியத்தந்தை நினைவாக



https://alchetron.com/Ki-Rajanarayanan

https://sahitya-akademi.gov.in/awards/akademi%20samman_suchi.jsp#TAMIL

Dr. M.G.R. Educational and Research Institute University


தமிழ்த்துறை

Dravidian University

கரிசல் களம்

(பன்னாட்டு கருத்தரங்கிற்கு வரப்பெற்ற
ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு)

நூல் தொகுப்பு
தமிழ்த்துறை
திராவிடப் பல்கலைக்கழகம், ஆந்திர மாநிலம்
தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை





கரிசல் களம்

பன்னாட்டு கருத்தரங்கிற்கு வரப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு

முதற்பதிப்பு: ஜனவரி 2024

__வெளியிட நிதியுதவி:__

ந சுப்பு ரெட்டியார் 100

Na Subbu Reddiar 100 Educational Trust

AD-13, 5th Street, 10 Main Road, Anna Nagar West, Chennai—600 040

978-81-968802-1-7

ISBN 978-81-968802-1-7

9 788196 880217

Book Design: NSR 100 Centenary Committee

Printed by: DJ Prints, Chennai - 600 095

அன்புப்படையல்

Prof PV Arunachalam



Founder & Vice-Chancellor [1997-2001]

Dravidian University

[Mathematician & Former President, Indian Math Society]

Interview

https://www.youtube.com/watch?v=5goN_0sNVig



ISBN 978-81-968802-1-7
9 788196 880217

பன்னாட்டுக் கருத்தரங்கம்

கரிசல் களம்

20.02.2024

எண் / பக்கம்	ஆராய்ச்சிக்கட்டுரை / கட்டுரையாளர்
1 / 1	**கி. ரா – ஒரு மானிடவியலாளர்** முனைவர் நா சுலோசனா உதவிப் பேராசிரியர், தமிழ்மொழி(ம)மொழியியல் புலம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை-600113
2 / 8	**கி. ராவின் அழிந்துபோன நந்தவனம் – ஒரு மீள்பார்வை** மோ விஜயலட்சுமி உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை - 95.
3 / 13	**கி. ராஜநாராயணன் புதினங்கள் காட்டும் இந்திய விடுதலைப் போராட்டம்** முனைவர் வே ரேணுகா உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) திருச்செங்கோடு - 637 205
4 / 20	**மானிடவியல் நோக்கில் கரிசல் மக்கள் – கி.ரா படைப்புகளை முன்வைத்து** ஷா முஹம்மது அஸ்ரின் முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்) முதுகலைத் தமிழாய்வுத்துறை ஜமால் முகமது கல்லூரி, திருச்சி-20
5 / 27	**கோபல்லபுரத்து மக்கள் புதினத்தில் சுதந்திரப் போராட்டம்** சு ஜோஸ்பின் மாலதி உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்
6 / 31	**கி. ராவின் பாத்திரப்படைப்பு** முனைவர் ச தனலெட்சுமி உதவிப் பேராசிரியர் முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி சிவகாசி
7 / 37	**கி. ராஜநாராயணன் : வாழ்வும் பணியும்** முனைவர் பூ சு கணேஷ் மூர்த்தி உதவிப் பேராசிரியர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், சீனிவாச வனம், குப்பம், ஆந்திர மாநிலம்

8 40	**கி. ராஜநாராயணின் படைப்புகளில் கரிசல் பண்பாடு** **ப செண்பகவள்ளி,** உதவிப் பேராசிரியர், விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி(தன்னாட்சி) எளையாம்பாளையம் திருச்செங்கோடு-637205, நாமக்கல்(மாவட்டம்).
9 46	கி. ராஜ்நாராயணனும் தீப நடராஜனும் **முனைவர் மு.இராதாகிருஷ்ணன்** தமிழாசிரியர், தி இண்டியன் பப்ளிக் பள்ளி, ஈரோடு.
10 50	**கி.ராவின் தமிழ்ப்பணிகள்** **முனைவர் எஸ் ஏ சம்பத்குமார்** கல்லூரி நூலகர் (ஓய்வு), எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி, திருப்பனந்தாள்.
11 55	*கி. ராஜநாராயணனின் 'கதவு" சிறுகதையில் சமுதாய நோக்கு* **முனைவர் மு கோவிந்தராசுலு** தமிழ்ப்பேராசிரியர் உலகநாத நாராயணசாமி அரசு கல்லூரி (தன்னாட்சி) பொன்னேரி - 601 204.
12 59	"அகராதிப்பேரறிஞர்" கி. ரா. **முனைவர் இர சிவசக்தி** இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத்தலைவர், இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை-600 004.
13 66	கிராவின் "கதைசொல்லி" இதழ் **முனைவர் எஸ் மீனாம்பிகை** கல்லூரி நூலகர், சுவாமி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மஞ்சக்குடி.
14 71	கி. ராவின் 'கோமதி'யும் சினிமாவின் 'கௌரி'யும் **சண்முக விமல் குமார்** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக் கழகம், குப்பம் - ஆந்திரா: 517 426
15 78	**ஜடாயு** **இரா ஷர்மிளா** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மதுரவாயல், சென்னை -600 095
16 83	**கரிசல் காட்டு கடுதாசியில் மண் மணம்** **ப விஜயலட்சுமி** முதுகலை மாணவி, தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம்,சீனிவாசவனம் குப்பம் - 517 426 ஆந்திரப்பிரதேசம், இந்தியா
17 87	**"கோபல்ல கிராமம்" – வாழ்வியல் மற்றும் பண்பாட்டுக்கூறுகள்** **முனைவர் ந.சரஸ்வதி** உதவிப் பேராசிரியர் தன்ராஜ் பெய்த் ஜெயின் கல்லூரி துரைப்பாக்கம். சென்னை-600 097
18 93	கொத்தைப் பருத்தி சிறுகதையில் இன்றைய வாழ்வியல் **முனைவர் பா அனுராதா** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்

19	100	கி. ராஜநாராயணனின் கன்னிமை சிறுகதை வெளிப்படுத்தும் பெண்ணின் மனமாற்றம் முனைவர் சு சத்தியா உதவிப் பேராசியர் தமிழ்த்துறை பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்
20	104	கி. ராஜநாராயணன் : சிறுகதையும் வாழ்வியலும் முனைவர் க முத்தழகி உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி தஞ்சாவூர்.
21	112	கி. ராவின் சிறுகதைகளில் மழலை உள்ளம் முனைவர் ம தனப்பிரியா உதவிப்பேராசிரியர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி, பேரூர், கோவை-641010
22	120	கி. ராஜநாராயணன் சிறுகதைகளில் மனிதநேயம் மு செந்தில்குமார் உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி அரும்பாக்கம், சென்னை
23	126	நாற்காலி - ஒரு பார்வை திருமதி சு ஈஸ்வரி (பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்) உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.
24	132	“சர்க்கார் திட்டமும் விவசாயி குடும்பமும்” (மாயமான்) திருமதி மு புவனேஸ்வரி (பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்) உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், அடையாளம்பட்டு, சென்னை - 600 095.
25	139	சமுதாயப் பார்வையில் கி.ரா.வின் நாற்காலி மதிப்புறு முனைவர் வெ பாலாஜி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை - 600 095.
26	144	“கி.ரா. சிறுகதைகள் காட்டும் கரிசல் மக்களின் வாழ்வியல்” சு பாரதி பதிவு எண் 2023PHDPTTM06 முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடாப் பல்கலைக்கழகம், சீனிவாச வனம் குப்பம் - 517 426 ஆந்திரப்பிரதேசம், இந்தியா.
27	148	கதவு சிறுகதை ஓர் பார்வை மா அமுதா உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மதுரவாயல், சென்னை – 600095.
28	153	கி . இராஜநாராயணின் படைப்புகளில் பன்முகப்பார்வை முனைவர் த ஹேமலதா உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறைத் தலைவர் இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம் - 612 001
29	157	கி. ரா கையாண்ட படைப்புலக உத்திகள் முனைவர் திருமதி இரா கவிதா உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அடையாளம்பட்டு, வளாகம் ஜஜஜ சென்னை – 600 095

30 161	கி .ராஜநாராயணன் படைப்புகளில் காணலாகும் கரிசல் வரலாற்றுச் செய்திகள் **முனைவர் சு சதீஸ்குமார்** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை - 600 095
31 167	கி. ரா எழுத்துக்களில் கரிசல் மண் மணம் **எ நா ஜோதி** பதிவு எண்: 2022PHDPTTM04 முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதிநேரம்), தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், சீனிவாசவனம் குப்பம் - 517 426. ஆ.மா.
32 170	கி. ராஜநாராயணன் சிறுகதைகளில் சமுதாய சிக்கல் **முனைவர் ப தனஞ்செயன்** இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை, சர் தியாகராய கல்லூரி, சென்னை - 600 021
33 173	மாயமான் சிறுகதையின் கதைக்கரு **முனைவர் ச சாந்திமதி** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இதயா மகளிர் கல்லூரி, கும்பகோணம்
34 178	கி.ராவின் கதைகளில் கரிசல் வட்டார வழக்குகளும் பிறமொழிச் சொற்களும் **முனைவர் க மாரியப்பன்** உதவிப் பேராசிரியர் தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம் - 517 426.சித்தூர் மாவட்டம், ஆந்திரப் பிரதேசம்
35 183	கி.ரா. படைப்புகளில் நாட்டார் பண்பாட்டு மரபுகள் **லூ ஜினிஷா** பதிவு எண் 2023PHDFTTM05, முனைவர் பட்ட ஆய்வாளர்(முழுநேரம்), தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப் பல்கலைக்கழகம், சீனிவாசவனம் குப்பம் - 517426 ஆந்திரப்பிரதேசம், இந்தியா
36 186	கி.ராவின் 'பேதை' உணர்த்தும் சமூக அவலம் **முனைவர் அ திலகவதி** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி - 635001
37 192	கி.ராவின் படைப்புகளில் பெண் பாத்திர படைப்பு **முனைவர் வ கலையரசி** உதவிப்பேராசிரியர் - பதிப்புத்துறை திராவிடப் பல்கலைக்கழகம் குப்பம் - 517 426, ஆந்திர மாநிலம்
38 196	கி. ராவின் வட்டார வழக்குச் சொல்லகராதியில் அகராதியியல் உத்திகள் **முனைவர் கோ பிரியா** கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரிமங்கலம், தருமபுரி மாவட்டம் - 635111
39 201	கி. ராவின் நாற்காலிச் சிறுகதையில் கதைக் கூறுகள் **முனைவர் தே தியாகராஜன்** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீ விஜய் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நல்லம்பள்ளி, தருமபுரி.
40 207	நெல்லை வட்டார வழக்கு **MM ஜெயசீலன்** Senior Lecturer Department of Tamil

	Faculty of Arts University of Peradeniya, **Sri Lanka**
41 216	செட்டிநாட்டு வட்டார வழக்கு Dr AR Arunachalm Dean-Academic Phase: II Dr MGR Educational and Research Institute Maduravoyal (Adayalampattu), Chennai – 600 095
42 221	கொங்கு வட்டார வழக்கு Dr K Senthilkumar Dean-Administration Phase: II Dr MGR Educational and Research Institute Maduravoyal (Adayalampattu), Chennai – 600 095
43 226	**வட்டார வழக்கு – ஒரு கண்ணோட்டம்** **பேராசிரியர் சி.பி.பழனிவேலு** பதிவாளர் டாக்டர் எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மதுரவாயில், சென்னை - 600 095
44 233	**தமிழக வட்டார வழக்குகள்** MS Sankari Assistant: JR-CDE (Centre for Distance Education) Dr MGR Educational and Research Institute Maduravoyal, Chennai – 600 095
45 238	**முல்லை நில வாழ்வியலில் கோபல்லபுரத்து மக்கள்** **முனைவர் இரா மணிமேகலை** இணைப்பேராசிரியர் தமிழ்த் துறை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி கோயம்புத்தூர் - 29
46 250	**கி.ராவின் பார்வையில் மொழிநடை** **முனைவர் சி சிவசங்கரி,** மெயின் ரோடு, சி.என்.பாளையம், கருவாட்சி அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம், அ.கு. எண் : 605201.
47 256	கி.ராவின் சிறுகதைகளில் - வாழ்வியல் விழுமியங்கள் **முனைவர் கி அருள்ஜோதி** உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை - 600 095
48 260	**கிராவும் நாளிதழ்களும்....** **கு.ராமராஜன்** உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை – 95.
49 264	**கி. ரா.வின் தமிழ்ச் சொலவடைகள் – ஓர் பார்வை** **முனைவர் கே.சி.ஆர். ஷிஜி** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,

	மதுரவாயல், சென்னை – 600 095
50 272	‘நிலைநிறுத்தல்’ சிறுகதை தரும் பண்பாட்டு வெளி **முனைவர் போ. மணிவண்ணன்** தமிழ்த் துறைத் தலைவர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அவிநாசி – 641 654
51 278	**கி.ரா. வின் சிறுகதைகளில் சமூகப் பார்வை** **முனைவர் ப சிலம்பரசன்,** உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை - 600 095
52 282	***‘Along with the Sun’***: A Profile Prof Dr S Ramalingam Joint Registrar-Languages Dr MGR Educational and Research Institute Maduravoyal, Chennai – 600 095
கோபல்ல கிராமம் **கி இராஜநாராயணன்** https://tamilbookspdf.com/books/gopalla-gramam-by-ki-rajanarayanan/	

முனைவர் இரா.மணிமேகலை
இணைப்பேராசிரியர்
தமிழ்த் துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் – 641 029

அணிந்துரை

கரிசல் இலக்கிய தந்தை என்று போற்றப் பெறும் கி.ராஜநாராயணனின் நூற்றாண்டை முன்னிட்டு பேராசிரியர் ந.சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பில் டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமும் ஆந்திர மாநிலம் குப்பம் திராவிடப் பல்கலைக் கழகமும் இணைந்து நடத்துகின்ற பன்னாட்டுக் கருத்தரங்கம் பொருத்தமான நேரத்தில் நிகழ்கின்ற மிகத் திருத்தமான முன்னெடுப்பாகும்.

முன்னோர்களின் மொழியை ஆவணப்படுத்துவதற்காகவே வட்டார வழக்கில் எழுதத் தொடங்கியதாகக் கூறும் கி.ரா. அவர்கள் தன்னிலிருந்து தோன்றிய பெரும் இலக்கியப் பரம்பரையின் முன்னத்தி ஏராகத் திகழ்கிறார். எளிய உழைக்கும் மக்களின் பக்கமிருந்து பேசுகின்ற இவரின் குரல் மானுடம் பாடும் மரபில் வந்தது எனலாம். மானாவாரி மனிதர்களின் சுகதுக்கம் வியர்வை மணம் வீச இவரது எழுத்துகளில் பயணிக்கிறது. கரிசல் மணத்தை உலகெங்கும் பரவச் செய்த இவரது எழுத்து இலக்கிய உலகில் இருந்த பண்டித மேட்டிமை மனநிலையை மாற்றியமைத்தது. தொல்லியல் ஆதாரங்களின் மூலம் ஓர் இனத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் மீட்டெடுப்பது போல வட்டார மொழியின் மூலம் தாய் மொழியின் மூலவேரைப் பாதுகாக்கின்ற கரிசல் எழுத்து இயக்கத்தின் ஆதிபிதாவாகத் திகழ்கின்றார்.

மொழியியல் அறிஞர்கள் பலரும் கூடி பல காலம் செய்தாலும் முடிக்க முடியாத அருஞ்செயலாக கைமாறு நினையாத மாரியைப் போல கரிசல் வட்டார வழக்குச் சொல்லகராதியைத் தனி ஒருவராக உருவாக்கிய மாபெரும் இமாலய சாதனையைச் செய்தவர். அந்நூலை ஒரு முறை புரட்டி பார்க்கும்போதுதான் கிராமவாசிகளின் உலகியல் அறிவின் மேன்மையும் படிப்பறிவுள்ள நகரவாசிகளின் பட்டறிவு போதாமையும் நமக்கு நன்கு விளங்குகின்றது.

இந்தியாவில் இலக்கியத்திற்கு அளிக்கப்படும் உயரிய அங்கீகாரமாகிய சாகித்திய அகாதமி விருதினை இடைச்செவல் என்னும் ஒரேகிராமத்தைச் சேர்ந்த ஒரே தெருவில் வசித்து ஒன்றாக விளையாடிய தோழர்கள் இருவருமாகிய கு.அழகிரிசாமியும் கி.ராஜநாராயணனும் பெற்றுக் கொண்ட நிகழ்வு வரலாற்றில் எப்போதேனும் நிகழக்கூடிய அற்புத வியப்பாகும்.

சாகித்திய அகாதமி விருது ஏற்புரையில் கி.ரா. பேசும் போது பெருங்கவிஞர்கள் ஆண்டாள், மகாகவி பாரதி முதலாக பல்வேறு படைப்பாளிகள் தோன்றிய மண் தனது என்று சிலாகிக்கின்றார். உண்மையில் கரிசல் மண்ணின் பாலைவனம் தான் கருமுகில் திரட்டி உலகிற்கு உதவ பெருமழை பொழிந்திருக்கிறது பெய்த மழையில் பயிரும் பச்சையுமாய் தமிழ் இலக்கியப் பரப்பெங்கும் நல்ல அறுவடை கண்டு இருக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

கரிசல் களம் எனும் தலைப்பில் நடைபெறும் பண்பாட்டுக் கருத்தரங்கில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் தேர்ந்தெடுத்த பொறுக்கு மணிகளாக இருக்கின்றன. தெள்ளத் தெளிந்து ஆய்வுச் சுழலில் புடைத்தெடுத்த அந்த மணிகள் விதை நெல்லாகவே கரிசல்களத்தில் பயன்படும் எனலாம்.

மனித இனம் பற்றிய அறிவியலாகிய மானுடவியல் சமூகப் பண்பாட்டிலும் மொழி சார்ந்து ஆய்வதற்குரிய கல்வித் துறையாகும். கி. ராஜநாராயண படைப்புகளில் ஆய்வு புரிந்து படைக்கப்பட்டுள்ள இக்கட்டுரைகள் மேற்காணும் இரண்டு வகையிலும் இயங்குகின்ற சமூகத்தைக் குறியீட்டு முறையில் விளங்கிக் கொள்வதுடன் அதை படிப்போர்க்குப் மனித மனம் செயல்படும் விதத்தைக் கற்பிக்கும் பயிலகமாகவும் உதவுகின்றன.

இக்கருத்தரங்க கட்டுரை நூலின் ஆய்வு கட்டுரைகள் மானுடவியல் நோக்கிலும் இந்திய விடுதலைப் போராட்டம் பாமர மக்களின் வாழ்வில் நிகழ்வித்த மாற்றங்கள் குறித்தும் பேசுகின்றன . கி.ரா வின் பன்முகப் பரிமாணங்களை அவரது படைப்புகளில் ஊடும் பாவுமாக நெய்யப்பட்டிருக்கும் மண்மனத்துடன் கட்டுரைகள் எடுத்துரைக்கின்றன. ‘கதை சொல்லி’, என்ற இதழ் கி.ராவின் இதழியல் பணிக்கான மிகச் சிறந்த சான்றாகும்.

பேரிலக்கியம் ஆயினும் அதில் இடம்பெறும் சிறுவர்கள் உள்ளம் தனி உலகமாக இயங்கிக் கொண்டிருக்கும் .கி.ராவின் படைப்புகளில் உலாவும் சிறார்களின் மழலை உள்ளம் தொகுக்கப்பட்டால் குழந்தை உளவியலை அறிந்து கொள்வதற்கான மிகச்சிறந்த படிப்பகம் ஆகும். கி.ராவின் படைப்புகளில் தென்படும் மனிதர்களின் பொதுத் தன்மையாக உலகை நோக்கிய நையாண்டியாகவும் உலகை எதிர்கொண்டு வாழ்வதற்கான நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாகவும் கொள்ளலாம். கருணையும் வீரமும் மன வலிமையும் மிகுந்த இவரது பெண்பாத்திரங்கள் அனைத்தும் உழைக்கும் வர்க்கத்தின் உன்னதக் குறியீடுகள்.

கரிசல் தமிழின் தந்தையாகிய கி.ராஜநாராயணனின் நூற்றாண்டை முன்னிட்டு இப்பெரும் பணியினைச் செய்து படைப்புலகிற்கு வழங்க வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் உழைத்து வருபவர் முனைவர் சு .இராமலிங்கம். தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பல்வேறு களங்களில் நூற்றுக்கணக்கான ஆய்வு நூல்களைப் படைத்தளித்த பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் திருமகனாகிய இவர்கள் இணைப்பதிவாளராக டாக்டர் எம் .ஜி .ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். அவரது எண்ணங்கள் ஒவ்வொன்றும் தமிழ் மொழி வளர்ச்சிக்கான புதிய பாதைகளை வகுக்கின்றன. இவர் அருமையில் எளிய அழகுடன் பெரிதினும் பெரிது கேள் என்ற மனப்பான்மையுடன் உள்ளுவதெல்லாம் உயர்வுடன் உள்ளுபவர் ஆவார். தேமதுரத் தமிழோசை அயலகக் கல்வி நிறுவனங்களிலும் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற ஆவலுடன் அயல்நாட்டு பல்கலைக்கழகங்களுடன் தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பல்வேறு ஆய்வு பொருண்மைகளில் கருத்தரங்குகளைக் களம் காண்கின்றார்.

இவ்விரு பல்கலைக் கழகங்களில் உள்ள தமிழ்த்துறைகள் இணைந்து முன்னிறுத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கில் வெளியிடப்பெறும் இந்நூல் (*கரிசல் களம்*) கி.ராஜநாராயணனை 21 – ஆம் நூற்றாண்டின் இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் அமைந்திருப்பது மிகவும் பாராட்டிற்குரியது. இந்நூல் கனிதரும் பெருமரமாய் மக்களுக்குப் பயனளிக்கின்றது.

DRAVIDIAN UNIVERSITY
ద్రావిడ విశ్వవిద్యాలయం
(An Inter-State University Accredited by NAAC with "B" Grade)
Srinivasavanam, KUPPAM-517 426, Chittoor Dist., (A.P.) INDIA

Prof.Kolakaluri Madhu Jyoti
Vice-Chancellor

FOREWORD

In Tamil literature a good number of writers with valuable credentials have contributed their mind and might for the enrichment of Tamil literature. They anointed their Tamil mother with their valuable literary output. Among Tamil literati, Ki. Ra, who is also known as Ki. Raja Narayanan, occupies a prime place in the literary annals.

He remained as the main source which transformed and reshaped the creative literature of Tamil language in 1960's. He is considered to be the first to throw light on the living conditions of the people of a particular region. His intense focus on the black soil area and making it as an ingredient of his works, attributes flora and fauna to the Tamil literature. His seminal work entitled "Gopala Purathu Gramam" gave him the status of the father of black soil literature. He received Sahitya Akademi award for this work in 1991.

The life and daily chores of the people living in the black soil land form the content of his works. In a way his works stand equivalent to historical records that give information about the society, land and people of a region. Owing to portrayal of people's life in his works in a beautiful manner, Ki. Ra gains the name 'literary weaver.' Mi. Ra studied the works of Ki. Ra and drew inspiration from them.

He moved, travelled and mingled with native people to an extent that he attained mastery over their language and the same has been reflected in his works. He is instrumental in preparing the famous Tamil dictionary "Black Soil Local Dictionary" with an aim of protecting this language from extinction. The short stories of him have always been remaining electrifying and inspiring. Any effort of bringing him and his works close to the reading public will surely enlighten many.

With the aegis of Dravidian University, Tamil department is organizing a seminar on him under the title "Karisal Kalam of Ki. Ra". The momentum of conducting a seminar on Ki. Ra has been initiated and navigated by the auspicious efforts of Dr. M.G.R Education and research institute, Chennai. I thank Dr. S. Ramalingam, founder of 'N. Subbureddiyar Education Foundation and joint registrar of Dr. M.G.R Education and research institute, who is playing a key role in organizing this seminar. I wish Dr. P. S. Ganesh Moorthy, co-ordinator of this seminar, a grand success.

22/1/24

(KOLAKALURI MADHU JYOTI)

Place: Kuppam
Date : 22.01.2024

Office : +91 8570 278236; Mobile: +91 9441000188; Fax : +91-8570-278209
e-mail : dravidianuniversityvc@gmail.com, madhujyotik@gmail.com Web: dravidianuniversity.ac.in

2024.01.23 16:34

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ரா – ஒரு மானிடவியலாளர்

முனைவர் நா சுலோசனா





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் நா.சுலோசனா,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்மொழி (ம) மொழியியல் புலம்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113.
தொடர்புக்கு 09789609591.
suloraja64@gmail.com

கி. ரா. - ஒரு மானிடவியலாளர்

பொருண்மை

கி.ரா., ஒரு மானிடவியலாளர் என்ற பொருண்மையில் இந்த ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் சிறப்புப் பெற்ற துறை மானிடவியல் துறை. இந்தத் துறையில் ஆராய்பவர்கள் மானிடவியலாளர்கள் எனப்பட்டனர். மானிட சமூகத்தின் தோற்றம், அமைப்பு, சமூக நிலை, வாழ்வியல், பாண்பாடு, வளர்ச்சி என அனைத்தையும் ஆராய்வது மானிடவியல் ஆகும். அதாவது ஆங்கிலத்தில் Anthropology. anthropos(மனித), logia(படிப்பு) என்ற இரண்டு கிரேக்கச் சொற்களின் சேர்க்கைதான் இந்தச் சொல்வடிவம். ”மனிதனைப் ‘படித்தல்’ என்றால் மனிதனின் மனப்போக்கு (feeling), நினைவுகள் (thoughts), செயல்கள் (deeds), எவ்வெப்படி அமைந்திருந்தன, எவ்வெப்படி மாற்றமுற்றுள்ளன என்பனவற்றையெல்லாம் நன்கு தெரிந்துகொள்ளும் ஓர் அறிவியல்தான் மானிடவியல்” என்று ம.க.கோபாலகிருஷ்ணன், மானிடவியல் என்னும் நூலின் முகவுரையில் இவ்வாறு குறிப்பிடுகின்றார். இந்த மானுடவியல் மனிதன் வாழும் இடம், இருப்பு குறித்து முழுமையாக அறிந்துகொள்ள உதவுகிறது. மானுடவியலிலுள்ள நான்கு முக்கியமான துறைகளான சமூகக் கலாச்சார மானிடவியல், உயிரியல் மானிடவியல், தொல்பொருள் மானிடவியல், மொழியியல் மானிடவியல் என அனைத்தும் அடங்கியதுதான் கி.ரா.வின் படைப்புகள். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் அவரின் கோபல்ல கிராமம் நாவலே ஒரு மானிட சமூகத்தின் விருட்சத்தை விளக்குகிறது எனலாம். அந்த வகையில் கி.ராவின் கோபல்ல கிராமம் நாவலை முன்வைத்து கி.ரா., ஒரு மானிடவியலாளர் என்பதை ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இவ் ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.



முதன்மைச் சொற்கள்

கரிசல் நிலம். காடு எரிப்பு, சமூகத்தின் அடையாளமான கம்ம, கம்மாளச்சி, வட்டார வழக்குகள், பெயர் முறை, விவசாயம், மக்களின் பாடுகள், பழக்க வழக்கங்கள், வாழ்வியல்,

பழமையைப் போற்றுதல், புதுச் சொற்களின் வரவு, உவமைகள், சொலவடைகள் என இக்கட்டுரைக்கு இவையெல்லாம் வலு சேர்க்கும் விதத்தில் அமைகின்றன.

கரிசல் நிலப்பகுதி

நெல்லை மாவட்டம் கங்கைகொண்டானில் துவங்கி, தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு, கோவில்பட்டி, விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் சூரங்குடி, விருதுநகர் மாவட்டம் சாத்தூர், விருதுநகர், சிவகாசி, ராசபாளையம், வத்திராயிருப்பு, மதுரை மாவட்டம் திருமங்கலம் உள்ளிட்ட பகுதிகளை அடக்கிய நிலம்தான் வானம் பார்த்த பூமியான கரிசல் நிலப்பகுதியாகும். இதற்கு வரைபடம் தந்தவர் கி.ரா. இது கருப்பு நிறத்துடன் நீரின் ஈரப்பதத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் தன்மை கொண்டது. கரிசல் பூமி வெக்கையாக இருந்தாலும் மண் குளிச்சியைத் தருவது. "கரிசல் மண் சில்லி சில்லியாய் வெடித்துக் கீறிப் பொரிந்து கிடந்தது. தூசிப் படலத்தைப் போர்த்துக் கொண்டு பேய்க்காற்று ஊளையிட்டு ஆடிற்று." என்று கரிசலைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் எழுத்தாளர் பொன்னீலன்.(கரிசல், ப.1) கரிசல் நிலத்தைப் புன்செய் நிலம், கரும் பாலை, நெய்க் கரிசல், பூந்தரைக் கரிசல் என்றும் அழைப்பர்.



இடப்பெயர்வு

ஒரு நூற்றாண்டுக்கு முன்பு தெலுங்கு தேசத்திலிருந்து முஸ்லீம் அரசர்களுக்கு அஞ்சி தமிழகத்தில் குருமலைப் பகுதிகளின் சரிவுகளில் குடியேறிய கம்மவார் சமூகத்தின் வரலாறு கோபல்ல கிராமம் நாவலில் சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும் கிழக்கிந்திய கம்பெனியார் இந்திய மண்ணில் கால் வைத்து, ஆட்சி அதிகாரத்தில் பிடித்த காலம் வரையுள்ள ஒரு நூற்றாண்டு வரலாற்றை நாட்டுப்புறக் கதை மரபுடன் எள்ளல், நகைச்சுவையுடன் கலந்து கூறும் படைப்பாக இந்த நாவல் திகழ்கிறது. மேலும் ஒரு தேசத்திலுருந்து அரவதேசம்(தமிழ்நாடு) நோக்கி மக்களின் நகர்வு இங்கே இடம்பெயர்தலாகப் பார்க்கப்படுகிறது. ரெட்டியார், கம்பளத்தார், செட்டியார், பிராமணர், பொற்கொல்லர், சக்கிலியர்…இப்படி எத்தனையோ மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறதை விளக்குகிறார் கி.ரா"(கோபல்ல கிராமம் ப.36). "அனுபவித்திராதப் பட்டினி, காலம் தாழ்ந்து கிடைக்கும் அன்னம், உடம்பு அசதி, மனத்தின் சோர்வு, கூட வருவோரிடம் காரணமற்ற மனக்கசப்பு, மௌனம், குறைகூறல் இப்படியெல்லாம் துன்பப்பட்டோம்" என்று மனித உணர்வுகளை வெளிக்காட்டியிருக்கிறார் கி.ரா., (கோபல்ல கிராமம், ப. 59)

காடுகள் எரித்து ஊர்கள் உருவாக்கம்

கள்ளிக் காடுகள் நிறைந்த நிலப்பரப்பில் மக்கள் குடியேறுவதற்குரிய அமைப்பை உருவாக்க இந்த காடு எரிப்பு முக்கியமானது. காட்டை எரித்து மக்கள் வாழ்வதற்குரிய இருப்பை உருவாக்கிக் கொடுத்ததைச் சங்க காலம் தொட்டு அறியமுடிகிறது.

**காடு கொன்று நாடாக்கிக்
குளம் தொட்டு வளம் பெருக்கிப்
பிறங்கு நிலை மாடத்து உறந்தை போக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ,
வாயிலொடு புழையமைத்து,
ஞாயில் தொறும் புதை நிறீஇப்
பொருவேம் எனப் பெயர் கொடுத்து,
ஒருவேம் எனப் புறக்கொடாது, (பட்டினப்பாலை, 283-290)**

பட்டினப் பாலையில் குறிப்பிட்டது போல கி.ரா., கோபல்ல கிராமத்திலும் காட்டை எரித்து கோபல்ல கிராமம் உருவாக்கப்பட்டதை ஒரு கதை சொல்லியாகப் பதிவு செய்திருப்பார். "காட்டை அழிப்பது லேசு; பிறகு இந்த மாதிரி வேண்டும் என்றால் கிடைக்குமா?" என்பதின் மூலம் இயற்கையை நேசித்தவராகப் பல இடங்களில் காட்டப்படுகின்றார் கி.ரா.,

காடுகள் எரித்து நிலப்பகுதியை உருவாக்கும்போது நிறை சூல் கொண்ட காட்டுப்பசுவின் வரவால் மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர். பசு கன்று ஈன்றவுடன் பசுவே அவர்களின் வாழ்க்கையைச் செழுமையாக்க வந்த தெய்வம் என்று நம்பிக்கை கொண்டனர். பசுக்களின் வரவு அதிகமானது. அதனால் தாங்கள் உருவாக்கிய நிலப்பகுதிக்குக் 'கோபல்ல' என்று பெயர் வைத்தனர். இந்தப் பெயருக்குக் காரணம் பசுக்கள்தான். 'கோ' என்ற ஓரெழுத்து ஒரு மொழிக்கு இறைவன், பசு என்று பொருள். பசுக்கள் நிறைந்த ஊர் என்பதால் 'கோபல்ல' பெயர்க்காரணம் சரியாக இருக்கிறது. கரிசல் நிலப்பகுதியில் ஆடு, மாடுகள் அதிகம். பொதுவாக ஆடுகளைப் பாதுகாக்கப் பட்டி அமைத்தனர். பின்னர் பட்டியைச் சுற்றி வீடுகள் அமைத்துக் குடியேறினர். ஆகையால் அங்கே பட்டி என்று நிறைய ஊர்ப்பெயர்கள் உண்டு. ஊர்ப்பெயரிலுள்ள பின்னொட்டாக உள்ள பட்டிக்குத் தெலுங்கில் 'பல்ல', 'மல்ல', 'வல்ல' என்று சொல்வர். மிட்டவல்ல (மேட்டுப்பட்டி), பண்டவல்ல (பாறைப்பட்டி), காடமல்ல (காக்கிவாடன்பட்டி), கொத்தவல்ல இப்படியாக ஊர்ப்பெயர்கள் கரிசல் நிலப்பகுதியில் உண்டு.



கள்ளிக்காட்டை அழித்தார்கள். பூமியைத் தோண்டும் போது கிடைத்த கோரைக்கிழங்கு, காட்டுக் கிழங்குகள், காட்டுப் பறவைகளின் முட்டைகளையும் உண்டார்கள். சோற்றுக்கற்றாழையை உரித்து தண்ணீரில் கழுவி அவற்றின் கசப்பை நீக்கியும், பறவைகள், விலங்குகளையும் வேட்டையாடி அவற்றின் மாமிசத்தையும் உணவாக்கிக் கொண்டார்கள். உப்புக்கண்டம் போட்டு மாமிசத்தைச் சேமித்திருக்கிறார்கள். மாடுகளோ, கலப்பைகளோ இல்லாத நிலையில் விளை நிலங்களை உருவாக்க மரத்தில் கலப்பை போல் செதுக்கி மாடுகள் போல் அவற்றை இழுத்தார்கள். இடப்பெயர்ச்சியின் போது உடன் கொண்டு வந்த உணவு தானியங்களில் தங்களது தேவைக்குப் போக மீதியுள்ள தானியங்களை விதைத்தனர். அதுவே விவசாயம் முக்கியமானத் தொழிலாக மாறுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது.

அதன் பிறகு ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்களது சக்திக்கேற்ப நிலத்தைச் சொந்தமாகக் கொண்டு பயிர்செய்ய முற்பட்டார்கள். வீடுகள் கட்ட ஆரம்பித்தார்கள். சிற்றூர் முறையாக வளர குடிநீருக்காகக் கிணறுகளையும், கால்நடைகளுக்கானக் கண்மாய்களையும் தோண்டியுள்ளார்கள். தங்களிடம் இல்லாத விவசாய தொழிலாளர்களான தச்சர், கொல்லர் முதலானவர்களைக் தங்களது சிற்றூரில் குடியமர்த்தினார்கள். இவ்வாறாக இடம்பெயர்ந்த மக்கள் வேட்டுவ வாழ்க்கையிலிருந்து விவசாய வாழ்க்கைக்கு மாறியதை இந்நாவலில் கி.ரா., பதிவுசெய்திருக்கிறார்.

இடைப்பட்ட காலத்தில் பயிர்களை வெட்டுக்கிளிகள் அழித்து நாசம் செய்ததால் ஏற்பட்ட பஞ்சம், அதனால் மக்கள் பட்ட துன்பங்களை நாவலில் விவரிக்கப்பட்டுள்ளன.

சமூக உருவாக்கம்




கம்மவார் என்ற பெயர் வந்ததற்கு மங்கத்தாயார் அம்மாள், ”காது வளர்த்து வளையம் போன்ற ’கம்ம’ என்ற காது ஆபரணத்தை இந்தப் பெண்கள் அணிந்து கொள்வதால் இப்பெயர் வந்தது என்று சொல்வாள்” (கோபல்ல கிராமம், ப.40). கம்மவார் நாயுடு (முயஅஅய யேனைர) எனப்படுவோர் ஆந்திரா, தமிழகம் மற்றும் கருநாடக மாநிலங்களில் வாழும் ஒரு சமூகமாகும். இவர்கள் தமிழகத்தில் கொங்கு நாட்டில், ஈரோடு மற்றும் கோவை மாவட்டங்களிலும், தமிழ்நாட்டின் தென் பகுதிகளில் குறிப்பாகத் தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அதிக அளவில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் தமிழ்நாட்டின் பிறபகுதிகளில் இச்சமூக மக்கள் இருப்பதற்கு இடப்பெயர்ச்சியும் காரணமாகிறது. இவர்கள் தெலுங்கு பேசுவார்கள். தெலுங்கு உச்சரிப்பு ’கிளி கொஞ்சுகிற மாதிரி இருந்தது’ என்கிறார் கி.ரா., (கோபல்ல கிராமம், ப.70).

கழுவேற்றம் (impalement)

கழுவேற்றம் என்பது குற்றவாளிக்குத் தரும் மரணதண்டனை முறையாகும். தமிழகத்திலுள்ள பல கோயில்களில் கழுவேற்றம் குறித்தான ஓவியங்களும், சிற்பங்களும் காணப்படுகின்றன. கழுவேற்றம் அரசை எதிப்பவர்களுக்கும், கள்ளர்களுக்கும் வழங்கப்படும் தண்டனையாக இருந்துள்ளது. கூர்மைப்படுத்தப்பட்ட மரம் ஒன்றில் குற்றவாளியை ஆசன வாய் வழியாக ஏற்றுவர். எண்ணை தடவிய கூர்மையில் உடல் மெதுவாகக் கீழே இறங்கும். கழு மெதுவாக உடலை துளைத்துக் கொண்டு மேலேறும். கொஞ்சம் கொஞ்சமாக மரம் உடலினுள் ஏற ஏற வலி தாங்காமல் அவன் இரவெல்லாம் கூப்பாடு போட்டு மடிந்து போவான். சாதாரணமாக இறந்தவர்களுக்கு இறுதிச் சடங்குகள் செய்து புதைப்பார்கள். அல்லது எரியூட்டுவார்கள். ஆனால் கழுவிலேற்றப்பட்ட உடல் பறவைகளுக்கும், நாய்களுக்கும், நரிகளுக்குமே இரையாகும்.

காத்தவராயன் கழுவேற்ற விழா, சமணர் கழுவேற்றம் நடந்திருக்கிறது. கோபல்ல கிராமமும் கழுவேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. கழுவேற்றத்தைக் கண்டு பயந்ததில் காய்ச்சலால் ஒரு பெண் குழந்தை இறந்து போகிறது. நிலைமை மோசமாகிப்போன மற்றொரு குழந்தையின் பெற்றோர்கள் குழந்தை பிழைத்து எழுந்தால் அதற்குத் திருமணமாகிப் பிறக்கும் தலைக் குழந்தைக்குக் ‘கழுவன்’ என்று பெயர் சூட்டுவதாகக் கழுவனிடம் வேண்டிக்கொள்கிறார்கள். கழுவில் ஏற்றியவனைக் கொத்தித்தின்று ஊர் குளத்தில் தண்ணீர் அருந்தும் பறவைகளால் பரப்பப்படும் தொற்று நோயைத் தடுக்க, கழுவேற்றப்பட்டவனைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். பொங்கலிடுகிறார்கள். தங்களின் பெண் குழந்தைகளுக்குக் ‘கம்மாளச்சி’ என்றும் ஆண் குழந்தைக்குக் ‘கழுவன்’ என்றும் பெயர் சூட்டுகிறார்கள். கழுவேற்றப்பட்ட வேப்பந்திரடு, கழுவன் திரடு என்று சொல்லப்படுகிறது. குற்றவாளி கடைசிவரை ஒன்றுமே சொல்லாமல் சாதித்து இறந்து போனாலும் ’கழுவன் சாதனை’ என்று இன்றும் சொல்வதுண்டு.

வட்டார வழக்குகள்



வட்டார வழக்குச் சொற்களைத் தனியாகப் பொருள்கொள்வதைவிட சூழல் அடிப்படையில் பொருள் கொள்வதுதான் சாலச்சிறந்தது. ருசிக்கல், குத்துத்தரம், தைப்பாறுதல், ஏணி நாற்காலி, அகப்பத்தியம், போக்காளி, தொள்ளாளி, மந்தை, தண்டி, எக்குத்தப்பா, சமையல்பிரை, அடுப்பங்கட்டி, பாவாமல், தொறட்டி, இடுங்கி, சிறை, பிரபல்யம், அருக்கு, பலாட்டியம், கெண்டை, டக்கு, சாவகாசம், எக்கண்டம், சிலாக்கியம், பல்லென்று விடிந்தது, அப்பாயி, செங்கமங்கல், சிரத்தை, சந்திப்பு, அத்தாளம், விடுப்பு நேரம், அம்மாசி, தத்தளிப்பு, மலைப்பு, அலுப்பு, அறை, திரணம், காபந்து, ஆளோடி, பட்டக சாலை, அடுப்பங்கூடம், பதனம், சட்டம், நெமை, ரகளை, அனேகம், அபானம், விடலை, வாடாவளி, கெச்சட்டம், தெளிச்சி, ருசிக்கல், சொட்டாங்கி, விட்டில்கள், வாக்கு, சன்னக்குரல், கன்றை இழந்த பசுவையும், தாய்ப்பசுவை இழந்த கன்றையும் இணைத்து வைப்பது ’தழையிறது’, கோடை உழவு முடிந்து, முதல் மழை பெய்ததும் விதைப்புக்குத் தயாராக்க நிலத்தை உழ ஆரம்பிக்கும் உழவுக்கு ’எழுப்படிப்பு’ என்று சொல்லுவார்கள் இப்படியாகக் கோபல்ல கிராமத்தில் பல்வேறு வழக்குச் சொற்களை அறிந்துகொள்ள முடிகிறது.

வழக்காறுகள்

வாழ்வியலுக்கேற்ற பல்வேறு வழக்காறுகளை நாவலின் நயத்திற்காகக் கி.ரா., பயன்படுத்தியுள்ளார். பனை நார்க்கட்டிலில் நூற்று முப்பத்தேழு அகவை நிறைந்த பூட்டி மங்கத்தாயாரு எலும்பும் தோலுமாய் நீண்ட மூக்குடன் இருக்கும் உருவத்தை ‘பார்க்கும்போதெல்லாம் ”ரோமத்தை எல்லாம் இழந்துவிட்ட ரொம்ப வயசான ஒரு கழுகின் ஞாபகம் வரும்’ என்கிறார் கி.ரா., (ப.38). கொள்ளைக்காரர்கள் பற்றிச் சொல்லும் பொழுது

”குளிக்காத காட்டு யானைகள் மாதிரி மேலெல்லாம் மண்ணும் புழுதியும், உடம்பெல்லாம் அடர்ந்த செம்பட்டை பாய்ந்த ரோமக்கற்றைகள், எண்ணெய் படாத சிலிர்த்த தலைகள், அணில் வாலைப் போன்ற நீண்ட மீசைகள், பருத்து துருத்திய முழிகள், ஒவ்வொருத்தர் கையிலும் ஒரு வேல்” (ப.45) என்று குறிப்பிட்டிருக்கிறார். சென்னா தேவியை பாட்டி பிரியத்தோடு தனது மடிக்கு இழுத்து அவளைத் தனது மடியில் தலை வைத்து தடவி கொடுக்கும் பொழுது ”ஓடிக் கலைத்த மான்குட்டி போல் இருந்த சென்னா தேவி” (ப.53) என்று சொல்கிறார். வயதான பெரியம்மாவின் தலை நரைத்திருந்ததைச் 'சுண்ணாம்பாய் இருந்தது' என்கிறார். (ப.74) தலைமுடி சுருள் சுருளாய் இருப்பதைக் ”கொடுக்காப்புளி பிஞ்சுகள் மாதிரி இருந்தது” என்கிறார்.(ப.75) கோவிந்தப்ப நாயக்கரின் மென்மையான மென்னகை ”நெல்மணி வாய்கீறியது போல இருந்தது” என்கிறார். (ப.90) காய்ந்துபோன வாகைக்கு லச்சை கிடையாது; எல்லாத்தையும் உதுத்துட்டு அம்மணமாய் நிற்கிறது.(ப.38) பனை மரங்களும் இலைகளைப் பறி கொடுத்துவிட்டு ”ராட்சச உலக்கைகளைப் போல மொட்டையாக நின்றது”, ”கல்யாணக் கொட்டகை பிரித்த வீடு மாதிரி” ஊரே வெறிச் சென்று கலை இழந்து இருந்தது. (ப.169) என்று கதை நகர்தலுக்கேற்றவாறு வழக்காறுகளைப் பயன்படுத்தியிருக்கிறார் கி.ரா.,



முடிவாக

முடி வளர பயன்படுத்தப்படும் முயல் இரத்தம், காயவைத்த சடைப்பூரானின் கருப்பு மஞ்சள் வளையங்கள் குழந்தைகளின் அரைஞாண் கயிற்றில் கோர்த்து அணிகலனாகப் பயன்படுத்துவது, முள்ளெலிகளின் காய வைத்த தோல் குழந்தைகளின் இருமலைப் போக்க மருந்தாக்கும் முறை, மருந்துக்காகக் கொழுத்த சாரைப்பாம்பின் கொழுப்பில் எடுக்கப்படும் பாம்பு நெய், புனுகுப்பூனையிலிருந்து எடுக்கப்படும் வாசனைப்புனுகு, விலங்குகளுக்கும் கிராம மக்களுக்குமான நெருக்கத்திற்கு ஆகச் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. .மனைவியின் கர்ப்பகாலத்தில் சவரம் செய்யாமல் இருப்பது, இரண்டு மனைவிகள் இல்லாதவர்களை ஏளனமாகப் பார்ப்பது, சஞ்சீவினி மலையின் மூலிகைகள் விழுந்த குருமலை, சாலை அமைத்துக் கொடுத்த ராணி மங்கம்மா,ஏணி நாற்காலி வைத்து முடியைப்பராமரித்த துளசி, நூற்று முப்பத்தேழு அகவை பூட்டி மங்கத்தாயாரு, இரட்டை மாடுகள் பூட்டி உழவு செய்வதற்கான நுட்பம், காட்டு ஆமணக்கு, வேப்பங் கொட்டையிலிருந்து எண்ணெய் தயாரிப்பு, கொள்ளையர்களைக் கையாள்வதற்கான வழிகள், அந்தக் காலத்தில் திருமணமான பிறகுதான் வெற்றிலை போட வேண்டும் திருமணத்திற்கு முன்பு வெற்றிலை பாடும் வழக்கம் இல்லை. திருமணம் அன்றைக்குத்தான் தாடியைச் சவரம் செய்வார்களாம் அதுவரைச் சவரம் செய்ய மாட்டார்களாம், பனை மரத்தின் பயன்பாடுகள் இவெயெல்லாம் வியக்க வைக்கின்றன. மூன்று தலைமுறைகளைப் பேசுகிறது நாவல். நாவல் முழுவதும் கி.ரா. மக்களின் உணர்வுகள், மக்களின் பாடுகள், வாழ்வியல், உழைப்பின் உன்னதம், கி.ரா.,வின் கதாபாத்திரங்கள் எதற்கும்

அசராதவர்கள் என்று நாவல் முழுவதும் கி.ரா., வாழ்ந்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். ஒரு சமூக உருவாக்கத்திறாகான அத்தனை பாடுகளையும் விளக்கிக்காட்டியிருப்பது கி.ரா., ஒரு மானிடவியலாளர் என்பதை நிலைநிறுத்துகிறது. கோபல்ல கிராமம் நாவல் ஒரு சமூக ஆவணமாகத் திகழ்கிறது.

<u>பயன்பட்ட நூல்கள்:</u>

1 கி.ராஜநாராயணன், கோபல்ல கிராமம், அன்னம் வெளியீடு, 2014..


2. ம.க.கோபாலகிருஷ்ணன், மானுடவியல்,தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1963.

3. ரா.இராகவையங்கார், பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம், 1951.

4. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், அடையாளம் பதிப்பகம், 2019.

5. பொன்னீலன், கரிசல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2009.

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ரா.வின் அழிந்துபோன நந்தவனம் ~ ஒரு மீள்பார்வை

மோ விஜயலட்சுமி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

மோ. விஜயலட்சுமி
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 95.
9941862715
vijayasavithri@gmail.com

கி. ரா.வின் அழிந்துபோன நந்தவனம் - ஒரு மீள்பார்வை

ஆதிகால மனிதன் முதல் இன்றுள்ள மனிதன் வரை தான் கண்டெடுத்த பொருள்களுக்கு இன்னார்தான் கண்டுபிடித்தனர் என்று வரலாறு சொல்லும். தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் கிரஹாம்பெல். மின்விளக்கைக் கண்டுபிடித்தவர் தாமஸ் ஆல்வா எடிசன் எனப் பட்டியல் நீண்டுகொண்டே போகும். தொலைக்காட்சி, முகநூல் போன்ற எவ்வித அறிவியல் முன்னேற்றம் அடையாத காலத்தில் மேற்சொன்ன கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புகளை உலகிற்கு எடுத்துக்காட்டியது அறிவியல். அதேபோல் இன்னும் நிறைய துறைகளில் தோற்றுவாளர்கள் அறியப்படாமலேயே போய்விட்டனர். அதுவும் நம் தமிழ் மரபில் இலக்கியப் புலவர்கள், மகாவித்வான்கள், இசை வித்வான்கள் போன்றோர். அப்படி அறியப்படாமல் இருக்கும் இசை வித்வானாகிய இராஜரத்தினத்தைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.



அதேபோல் இசையிலும் பல வித்வான்கள் பல முயற்சிகள் எடுத்து, பல கருவிகளை உருவாக்கி, பலவிதமான ஒலிகளை எழுப்பி இசையை உருவாக்கினர். அந்த இசை லயத்தின்மூலம் அனைத்து உயிரினங்களுக்குள்ளும் இருக்கின்ற பல்வேறு உணர்ச்சிகளை வித்வான்கள் வெளிப்படுத்தினர். அதைத் தொடர்ந்துதான் ***இசைக்கு மயங்கா உயிர்களில்லை*** என்ற பழமொழி உருவானது. ஆனாலும் சில வித்வான்களின் பெயர்கள் நந்தவனம் போல் அழிந்தேபோனது.

கி.ராவின் வாழ்வில் பல இசை வித்வான்கள் வந்து தங்கிச் சென்றுள்ளனர். சீனி நாயக்கர், விளாத்திகுளம் சாமிகள், குருமலை பொன்னுசாமி, காருகுறிச்சி அருணாச்சலம், தோழன் சக்திவேல் போன்றோர். கி.ராவும் இசைத்துறையில் முறையான பயிற்சி பெற்றவர். இசைத்துறைக்குப் போகவேண்டியவர். எழுத்தாளனாகக் காட்சியளிக்கிறார். ஒருவேளை எழுத்தாளனாக இருப்பதால் அவர் சொல்லும் நந்தவனம் திரும்பவும் கி.ராவின் எழுத்துக்கள் மூலம் தழைக்குமல்லவா?

காருகுறிச்சி அருணாச்சலம் நாயனம் வாசிப்பதில் வல்லவரைப் போல பாட்டுப் பாடுவதிலும் வல்லவர். அவர் அந்த அளவிற்கு தேர்ச்சி பெற்றவர் என்றால் அதற்குக் காரணம்

அவரின் குரு ராஜரத்தினம் என்பவர். மாணவனே அப்படி சிறந்தவர் என்றால் குரு அதற்கும் ஒருபடி மேலானவர். இதற்குக் கி.ரா. அளிக்கும் உரை குறிப்பிடத்தக்கது.

இராஜரத்தினத்தின் கண்டத்திலிருந்து வரும் அந்த இசைக்குரலைக் கேட்கும் போதெல்லாம் கு. அழகிரிசாமி சொல்லுவான் ஒரு சங்கிலிருந்து வெளிவரும் நாதம்போல் ஒலிக்கிறது அவருடைய வாய்ப்பாட்டுக்குரல் என்று.

பூந்தோட்டத்தில் பூவைப்பறித்து கோயிலுக்கு பூசை செய்யும் தோழன் சக்திவேலின் குடும்பம் ஒரு சங்கீதக் குடும்பம் என்றாலும் சக்திவேலுக்கு சங்கீத ஞானம் என்பது தூரம்தான். ஆனாலும் குரு ராஜரத்தினம்போல் பெரிய நாயன வித்வானாக ஆகவேண்டும் என்ற பேரெண்ணம் கொண்டவன். அதற்குக் கி. ரா.வே நாயனம் வாங்க பணம் கொடுத்து உதவினார்.

நாயனத்தின் வடிவம்

சக்திவேல் அப்பணத்தைப் பெற்றுக்கொண்டு மதுரைக்குச் சென்று ஒரு புது நாயனம் வாங்கி வந்தார். அந்த நாயனத்தின் வடிவம் மாற்றம் பெற்றிருந்தது. அதைக்கண்ட கி.ரா. நாயனத்தின் வடிவத்தை எடுத்துச் சொல்லும் திறன் எண்ணிப்பார்க்கத் தக்கது.



இதற்கு முன்பெல்லாம் திமிறி என்கிற முக்கால் முழம் நீளமுள்ள வெங்கல அணசு பொருந்திய நாயனம்தான் உண்டு. நாயனத்தில் இந்த மாற்றம் கொண்டு வந்தவரே திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் பிள்ளைவாள்தான். அயிரை மீனைப்போல இருந்த திமிறி வாத்தியம் விலாங்கு மீனைப்போல நீண்ட பாரி வாத்தியமாகியது. இதன் கம்பீரக் குரலைக் கேட்டவர் மயங்கினர்.

கோவில்பட்டி திருவிழாவில் ராஜரத்தினம் நாயனம் வாசிக்கும்போது கூடவே வாசிக்கும் ஒத்துச் சத்தம் பிடிக்காமல் சங்கடப்பட்டு அது மீண்டும் தொடராமல் இருக்க, புது புது நாயனங்களை உருவாக்க ஆரம்பித்தார்.

ஒரு ஆசாரியாரை வரவழைத்து ஆச்சா மரங்களில் வெவ்வேறு விதமாக நாயனங்களைப் பல்வேறு அளவுகளில் கடைந்து, செய்து பார்த்து அதை வாசித்து வாசித்துப் பார்ப்பார். நாயனத்தில் சுரத்துக்கு ஒரு துளைதான் உண்டு. பிரதிமத்திம ராகங்களையும் சுத்த மத்திம ராகங்களையும் வாசிக்க இரு மத்திமங்களுக்கும் தனித்தனியாகத் துளைகள் இருப்பது அவசியம் என்று ராஜரத்தினம் கருதினார். ஆசாரி பாடு சொல்லி முடியாது. துளைகள் போட்டு போட்டு ஊதிப் பார்த்து பார்த்து நிறைய நாயனங்கள் வீணாகிப்போயின. கடைசியில் ஒன்று அமைந்தது. ஆனால் அதிலேயும் ஒரு சங்கடம் வந்து, அதைச் சரிகட்ட ராஜரத்தினம் மெழுகு - தேன் கொண்டுவரச் செய்து பிரதி மத்திம ராகத்தை வாசிக்கும்போது சுத்த மத்திமத் துளையைத் தேன் மெழுகால் அடைப்பதும் சுத்த மத்திம ராகங்களை வாசிக்கும்போது பிரதி மத்திமத் துளையை அடைத்துக்கொண்டார்.

சீவாளி தயாரிப்பதில் ராஜரத்தினம் எடுத்துக்கொண்ட தனிக்கவனம்

சீவாளி தயாரிப்பதில் ராஜரத்தினம் மிக மிகக் கவனம் கொள்வார். காவிரி நதிக்கரையில் வளர்ந்திருந்த ஒருவகை நாணல்தான் சீவாளி தயாரிக்க ரொம்ப விஷேசம். அவருடைய நாயனச் சத்தத்தின் இனிமைக்கே அந்த ஊர் நாணலில் தயாரிக்கப்பட்ட சீவாளிதான் காரணம் என்பர். குறிப்பிட்ட பருவத்தில்தான் அது கிடைக்கும். கவனமாகப் பார்த்து அதை அறுவடை செய்யவேண்டும். அப்பருவத்தில் சீவாளி நாணல் தட்டை விற்க எத்தனையோ ஊர்களிலிருந்து வருவர். அனைத்தையும் வாங்கிப் பார்ப்பாராம். அந்த ஊர் நாணல் தட்டு போல் இல்லையென்றால் தூக்கி வீசிடுவாராம் ராஜரத்தினம்.

ரேகை சாஸ்திரிகள் வைத்திருக்கும் ஒரு பூதக்கண்ணாடியைப் போல இவரும் ஒரு பூதக் கண்ணாடி வைத்து நாணல் நறுக்குகளை திருப்பித் திருப்பிப் பார்த்துத் தேர்ந்தெடுத்து தட்டையின் ஈரம் காய்வதற்குள் ஒரு பக்கத்தை நூலால் இறுக்கிச் சுற்றி மறுபக்கத்தின் நீளத்தை அளவாக வெட்டிவிட வேண்டும். இப்போது பார்ப்பதற்குத் சிறிய தட்டையான புனல் வடிவத்தில் தெரியும் சீவாளி.



சீவாளியின் சடங்கு

இவ்வாறு செய்த பிறகு சீவாளிக்கு துவர்ப்பு ஏற்றுதல் என்ற முக்கியமான சடங்கு உண்டு. வாய்நிறைய வெற்றிலை எச்சிலைக் கூட்டிக்கொள்ள வேண்டும். வெற்றிலை போடும்போது சீவாளி சடங்கின்போது பாக்கின் துவர்ப்புக் கூடுதலாக இருக்கவேண்டும். அப்படிக் கூடுதலான துவர்ப்பு எச்சிலை சீவாளியின் உள்ளும் புறமும் தோயும்படியாக எச்சிலை அபிஷேகம் செய்து, அப்படி பண்ணிய புதிய சீவாளிகளை உலர விடுவதற்காக வீட்டு முற்றத்தில் தோரணமாகக் கட்டி விடுவார். நன்றாக உலர்ந்தவுடன் சுத்தமான தண்ணீரில் போட்டு அலசி நாயனத்தில் சொருகி ஊதிப் பழக்குவார்கள். ராஜரத்தினம் நாயனத்திற்கு ஒரு புது இலக்கணம் கண்டுபிடித்தார். நாயனம் இவ்வாறு இருந்தால்தான் அதன் இனிமை கேட்போரை மயங்கச் செய்யும் என்பது ராஜரத்தினம் கண்டுபிடித்த உண்மை.

முன்பொருமுறை சக்திவேல் வீட்டில் வறுமை தாண்டவம் ஆட காருகுறிச்சி அருணாச்சலத்தின் மூலம் சக்திவேலுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் ராஜரத்தினம் வீட்டிற்கு வேலை செய்ய ஆள் தேவை என்று. உடனே சக்திவேலும் கிளம்பிவிட்டான். வேலை செய்வதற்கு மட்டுமல்ல. நாயனத்தை வாசிக்கக் கற்றுக்கொள்ளவும்கூட.

அதிகாலையில் எழுந்து நாங்கள் ***பனி சாதகம்*** பண்ணுவோம். அப்போது எங்களுக்கு அந்தத் துவர்ப்புப் பாடம் பண்ணிய சீவாளியைத் தந்து வாசிக்கச் சொல்லுவார். அதை வைத்து வாசிக்க ரொம்பச் சிரமப்படுவோம். வாசிக்க வாசிக்கத்தான் ஒலி வசப்படும். ***தம்*** கொடுத்துத்தான்

வாசிக்க வேண்டியதிருந்த சீவாளியில் நேரம் ஆக ஆகச் சுகமான இனிமையான ஒலி வர ஆரம்பிக்கும். அப்போது நமக்கே ஆனந்தமாக இருக்கும். அப்போது அங்கு வந்த ராஜரத்தினம் அந்தச் சீவாளியைக் கழட்டி இன்னொரு புது சீவாளியைக் கொடுத்து ஊதச் சொல்வார் என்று தோழன் சக்திவேல் சீவாளியைப் பழக்கப்படுத்தும் அனுபவத்தை எடுத்துச்சொல்லுவான்.

இப்படி தனது வாத்தியத்தைப் பேணிப் பாதுகாத்து, அதன் பகுதிகளில் புதிய புதிய பரிசோதனைகள் மற்றும் மாறுதல்கள் செய்து பார்ப்பார் ராஜரத்தினம்.

வாசிப்பு முறை

நாயனம் வாசிக்கும்போது இடையே தவில்காரரும் தட்டுவது என்ற பழக்கம் இருந்தது. அதை அடியோடு நிறுத்தியவர் ராஜரத்தினம்தான். நாயனத்தில் ராகம் இசைத்துக் கொண்டிருக்கும்போது இடையில் நிறுத்தம் வரும். அப்போது தவில் வாசிக்க வேண்டும் என்ற புதிய முறையைக் கொண்டுவந்தார். நாயனம் பிரமாதமாக வாசித்துக்கொண்டிருக்கும்போதே நிறுத்து என்பதை எழுத்தாகவோ வார்த்தையாகவோ இல்லாமல் கண்பார்வையிலேயே பிறப்பித்துவிட்டார் ராஜரத்தினம்.



இந்த சைகைகள் நாகஸ்வரக் குழுவிலுள்ள அத்தனை பேரும் அறிவார்கள். ***தில்லானா மோகனாம்பாள் படத்தில் சிவாஜி நாயகி வருவதைப் பார்த்து, நாயனம் வாசித்துக் கொண்டிருக்கும்போதே பக்க நாயனக்காரரைப் பார்த்துக் கண்ணடிப்பார்.*** ஜாடைகளால் இவர்கள் சங்கீத மொழி பேசுவது அழகுமிக்கது.

ராஜரத்தினம் நாயனத்தைக் கழுவி துடைத்து, சீவாளிகளையெல்லாம் நனைத்து. மேல் ஸ்தாயையில் வாசிக்கப்போகும் சீவாளிகளுக்கு முன்புறமும், கீழ் ஸ்தாயையில் வாசிக்க சீவாளியின் அடிப்புறத்திலும் யானை தந்தத்தினால் ஆன குச்சிகளைச் சொருகி வைத்துவிடுவார்.

கச்சேரி ஆரம்பிக்கும்போது ஒத்துவின் ***கும்*** என்ற ஒலி கேட்டவுடன் தவிலின் எடுப்பான இசை வாசிப்பு முடியவும் அதற்குள் ராஜரத்தினம் பதமான சீவாளியை தன் வாயினால் நனைத்து நாயனத்தில் சொருகி வாசிக்க ஆரம்பித்துவிடுவார்.

ராஜரத்தினம் தோடி ராக ஆலாபனை இசைத் தட்டில் முதலில் வந்தபோது கர்நாடக இசை உலகமே அதைக்கேட்டு கேட்டு வியப்பும் ஆனந்தமும் கொண்டது. அதுவரை தோடியை அப்படி யாரும் வழங்கியதில்லை என்று கி.ரா வியந்து கூறுவது போற்றத்தக்கது.

யாராவது ஒருவர் ஒரு கண்டுபிடிப்புக்கு மட்டுமே தோற்றுவிப்பாளர் ஆவர். ஆனால் ***ராஜரத்தினம் நாயனக் கருவிகள் உருவாக்கும் முறை, சீவாளி தோற்றுவிக்கும் முறை, இசை பழகும் முறை, தவில், நாயனம், ஒத்து இவற்றை ஒன்றுக்குப் பின் ஒன்றாக வாசிக்கும் முறை***

என அனைத்துக்கும் தந்தையாக விளங்கினார். இசை உலகத்துக்கு ஒரு புது இலக்கணம் வகுத்தார் என்றார் அது மிகையல்ல.

ஒரு ராகத்தில் பல்வேறு வடிவ வர்ணமெட்டுகளில் ஒரே ராகத்தில் பல கீர்த்தனைகளை உண்டாக்க முடியும். வார்த்தைகள் இல்லாத சுரங்களால் மட்டுமே ஆன கீர்த்தனை வடிவம். சுக்திவேலிடம் இந்தக் கீர்த்தனை வடிவத்தைப் பாடியும் நாயனத்தில் வாசித்தும் காட்டியிருக்கிறார் ராஜரத்தினம். இதுபோன்ற வர்ணமெட்டுக் கீர்த்தனைகளைப் புல்லாங்குழல், நாயனம், மாண்டலின் போன்ற இசைக்கச்சேரிகளில் மட்டுமே வாசிக்கமுடியும். பாடமுடியாது என்று கி.ரா. தெளிவாகக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கீர்த்தனை மெட்டுக்கள் ராஜரத்தினம் உண்டாக்கியதா? அவரது முன்னோர்கள் வாத்திய இசைப்பில் வாசிப்பதற்கென்றே உண்டாக்கினார்களா? இல்லை இதுபோல் மற்ற ராகங்களிலும் இருக்கிறதா என்று தெரியவில்லை.

தற்போது எல்லாத் திறமைகளும் வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பாக ஒலி - ஒளிப்பதிவு செய்ய கேமராக்கள் இருப்பதுபோல் ராஜரத்தினம் காலத்தில் இல்லாததால் அவரது இசை தொடர்பான பதிவுகள் இல்லாமல் ஆகிவிட்டன. இசையின் ஒரு பகுதியாய் மட்டும் இல்லாமல் ஒட்டுமொத்த நந்தவனம் பச்சைப் பசேலென்று பூக்கள் பூத்து எவ்வாறு காட்சியளிக்குமோ அவ்வாறு இசைக்கு அனைத்துமாய் விளங்கியவர் ராஜரத்தினம். இப்போது அவரது பதிவுகளுக்கு சாட்சியாய் எதுவும் இல்லததால் ஒரு நந்தவனமே அழிந்துபோனதாகிவிட்டது. இருப்பினும் கி.ரா.வின் எழுத்துப் பதிவுகளால் அவரின் இசைப்பயணம் இன்னும் உயிர் வாழ்கிறது. நேரடியான இசைக்கச்சேரி நம்மால் கண்டு பயன்பெறாமல் போனது வருந்தத்தக்கது.



கி.ரா. மேலும் குறிப்பிடுவது ராஜரத்தினம் போன்ற பல்வேறு வித்வான்கள் அவர் காலத்தில் வாழ்ந்து இசையில் வல்லுநர்களாக இருந்து பதிவுகள் இல்லாமல் மறைந்தவர்களே. அதனால் எத்தனையோ செய்திகள் தடயம் இல்லாமல் அழிந்துவிட்டன. வித்வான்கள் வாழ்ந்த விளாத்திகுளமும் திருவாவடுதுறையும் இன்று இசையுலகில் இல்லை. அந்த வித்வான்கள் நிறைந்த நந்தவனம் இடைசெவலில் அழிந்துவிட்டதாகக் கூறுவது எண்ணிப்பார்க்கத்தக்கது.

இசை வல்லுநர்கள், இசை ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் இதுபோன்ற வித்வான்களை உலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டும். இவர்கள் எல்லோராலும் அறியப்பட வேண்டியவர்கள். இசையுலகின் அடிப்படையை இனி அழியாமல் பாதுகாக்க வேண்டும்.

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ராஜநாராயணன் புதினங்கள் காட்டும் இந்திய விடுதலைப் போராட்டம்

முனைவர் வே ரேணுகா





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் வே. ரேணுகா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு – 637 205
செல்: 6374329751
rathi.renu1982@gmail.com

கி. ராஜநாராயணன் புதினங்கள் காட்டும் இந்திய விடுதலைப் போராட்டம்

ஆய்வுச் சுருக்கம்

இவ்வுலக வாழ்வியலை உற்றுநோக்கி, இவ்வாழ்வியலில் பொதிந்து கிடக்கும் இயற்கை, மனிதவுணர்வு, பண்பாடு, மதிப்பு முதலானவற்றை உணர்ந்து படைப்பாக்கித் தந்த இலக்கியப் படைப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர் கி. ராஜநாராயணன் ஆவார். இவர் தனது கரிசல் கிராமத்துப் பின்புலத்தை முழுமையான கதைக் களமாக அமைத்து வெற்றி கண்ட பெருமைக்குரியவர். இவரது படைப்புக்களில் வெளிவந்துள்ள புதினங்களில் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக விளங்கும் புதினங்கள் கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள், அந்தமான் நாயக்கர் ஆகியன ஆகும்.



இதில் கோபல்ல கிராமம் எனும் புதினம் 1976 ஆம் ஆண்டிலும், கோபல்லபுரத்து மக்கள் எனும் புதினம் 1990 ஆம் ஆண்டிலும், அந்தமான் நாயக்கர் எனும் புதினம் 1995 ஆம் ஆண்டிலும் வெளியாயின. இப்புதினங்களில் கரிசல் மக்களின் வாழ்வியல் கூறுடன் இந்திய விடுதலைப் போராட்டம் குறித்தும் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைத்துள்ளார் கி.ரா. இவ்விடுதலைப் போராட்டம் குறித்த தகவல்களை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.


முன்னுரை

இசுலாமிய சுல்தான்களின் அச்சுறுத்தல்களுக்குப் பயந்து ஆந்திர தேசத்திலிருந்து அகதிகளாகப் புறப்பட்டுக் குருமலைச் சரிவுகளின் கரிசல் பூமியில் குடியமர்ந்த தெலுங்கு இன மக்களின் வாழ்க்கைமுறையை இம்மூன்று புதினங்களும் எடுத்துரைக்கின்றன. கூட்டுக் குடும்ப வாழ்க்கைமுறை, பண்பாடு, தொழில், பழக்க வழக்கங்கள் எனச் செல்லும் கதைக்களத்தில் வெள்ளையர்களின் வருகைக்குப் பின் ஆட்சி அதிகாரம், அரசியல் மற்றும் விடுதலைப் போராட்டம் குறித்த கதைப்பின்னணிகள் உட்புகுகின்றன. அதற்கடுத்த கட்டமாக, கிராமத்து மக்களை வந்தடைந்த வெள்ளையர்களின் ஆதிக்க அதிகாரங்கள், விடுதலை பற்றிய மக்களின் எண்ண ஓட்டங்கள், புதிது புதிதாய் தோன்றிய விடுதலை இயக்கங்கள் அவற்றின்

கொள்கைகள், நிலைப்பாடுகள், போராட்டங்கள், விடுதலைக்குப் பின்னான இந்திய அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைகள் என விடுதலைப் போராட்டத்தின் அனைத்துப் பக்கங்களையும் படம் பிடித்துக் காட்டுகின்றன கி.ராவின் எழுத்துக்கள்.

விடுதலைப் போராட்டத்தில் நடைபெற்ற உண்மை நிகழ்ச்சிகளைத் தனது புதினத்தின் கதாபாத்திரங்களின் வழி, கதைப் போக்கிலேயே சொல்லிக் கொண்டு செல்லும் உத்திமுறையை இம்மூன்று புதினங்களிலும் கி.ரா அவர்கள் கையாண்டுள்ளார். அன்றைய அரசியல் சூழ்நிலைகளான இந்திய அரசியல் களம், விடுதலைப் போராட்டக்களம், போராடிய இயக்கங்கள், தலைமைகள், தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து மோதல்கள், மக்களுக்கிடையே ஏற்பட்ட மாறுபட்ட நிலைப்பாடுகள் குறித்த தகவல்களை கதாபாத்திரங்களின் உரையாடல்களின் வாயிலாகவே புரிய வைத்திருப்பது கி.ராவின் தனிச்சிறப்பாகும். ஆகவே, இம்மூன்று புதினங்களிலும் தொடர்ச்சியாக காட்டப்பட்டுள்ள விடுதலைப் போராட்டச் செய்திகள் குறித்து ஆய்ந்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

கோபல்ல கிராமம்



இந்திய விடுதலையின் அனைத்துக் கூறுகளையும் சார்பின்றி வெளிக்காட்டுதலை முழுமையான நோக்கமாகக் கொண்டது கி.ராவின் எழுத்துக்கள் ஆகும். அவ்வகையில், “கோபல்ல கிராமம்” புதினத்தின் இறுதி அத்தியாயங்கள் வெள்ளையர் ஆட்சியின் தொடக்க காலத்தை சுட்டுவனவாக அமைந்துள்ளன. பெண் மோகம், வரிச்சுமை, கட்டாய மதமாற்றம், பாதுகாப்பின்மை போன்ற பல்வேறு காரணங்களால் இசுலாமிய சுல்தான்களின் ஆட்சியின் மீது வெறுப்பில் இருந்த கோபல்ல கிராம மக்களுக்கு புதிதாய் நுழைந்த வெள்ளையரின் ஆட்சி மீது அதீத எதிர்பார்ப்பு ஏற்பட்டது. இங்கிலாந்து விக்டோரியா ராணியின் ஆட்சியானது, மறைந்த இந்திய ராணி மங்கம்மாவின் ஆட்சியைப் போன்று சிறப்புற்று இருக்கும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அத்தகைய எதிர்பார்ப்புகள் அனைத்தும் சிதைந்து, மக்கள் நம்பிக்கை இழந்ததாக இப்புதினத்தின் இறுதிப் பகுதியில் சுட்டிச் சென்றுள்ளார் கி.ரா.


> “கும்பினியாரை எதிர்த்தும் ஆதரித்தும் ஜனங்கள்
> தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.
> எங்கேயோ சமுத்திரத்திற்கு அங்கிட்டுள்ள
> சீமையிலிருந்து வந்து நம்மை அடக்கி ஆள
> முடியுமா? என்று கேட்டார் அக்கையா. அவன்
> துப்பாக்கியும் கரி மருந்தும் வச்சிருக்கானாமே. அதைவிடப்
> பெரிசு பீரங்கின்னு ஒண்ணு இருக்காமே! ஒரு
> பீரங்கியை வெடிச்சா ஒரு ஊரே அழிஞ்சு போகுமாமே
> என்றெல்லாம் பேசிக் கொண்டார்கள்.
> பிரம்மாஸ்திரம் எங்கிறது அதுதான். அது அவன் கையில
> இருக்கிறவரைக்கும் யாராலேயும் அவனை ஜெயிக்க முடியாது.
> ஆமா என்றார் பஜனை மடம் பார்த்தசாரதி.

வெள்ளைக்காரனிடம் நாம் சிக்கிக்கொள்ளக் கூடாது. நாம் தனியா இருக்கனும். அவன் சங்காத்தம் நமக்கு வேண்டாம். என்றார் அக்கையா." (கி.ரா, கோபல்ல கிராமம், ப.159)

என்ற வழி, கதை போக்கிற்காக அமைக்கப்பட்டுள்ள உரையாடல்களுக்கிடையே அன்றைய மக்களின் மன ஓட்டங்களையும், அரசியல் சூழ்நிலையையும் கோபல்ல கிராமம் புதினத்தில் பதிவுசெய்துள்ளார் கி.ரா.

கோபல்லபுரத்து மக்கள்

இப்புதினத்தில் கோட்டையார் வீட்டு நரசிம்மன் மற்றும் நுன்னகொண்டார் வீட்டு கஸ்தூரி ரங்கய்யன் போன்றோர் சுதந்திரப் போராட்டங்களில் துடிப்புடன் ஈடுபடுகின்றனர். கள்ளுக்கடை மறியல் நிகழ்வில் கலந்து கொண்டு கோபல்ல கிராமத்து இளைஞர்களிடையே எழுச்சியை ஏற்படுத்துகின்றனர். மெல்ல, மெல்ல காந்தியடிகளை தலைமையாகக் கொண்ட காங்கிரஸ் இயக்கத்தின் மீது கோபல்லபுரம் மக்களுக்கு ஈர்ப்பு ஏற்படுகின்றது. ஆகவே, வெள்ளையர் எதிர்ப்பு, தீண்டாமை எதிர்ப்பு, கள் உண்ணாமை முதலான காங்கிரஸின் கொள்கைகள் குறித்து கிராமத்து மக்கள் தங்களுக்குள் பேசிக்கொள்கின்றனர் எனக் கதைக்களத்தை நகர்த்துகின்றார் கி.ரா.



இவ்வுரையாடல்கள் அனைத்தும் விடுதலைப் போராட்ட கால வரலாற்று உண்மை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு கி.ராவால் எழுதப்பட்டுள்ளவை ஆகும். எடுத்துக்காட்டாக, ஈ.வே.ரா பெரியாரின் வைக்கம் போராட்டம், மதுரை மினாட்சி கோயில் நுழைவுப் போராட்டம் போன்றவை குறித்து கிராமத்து மக்கள் உரையாடும் வகையில்,

"ஒவ்வொருத்தன் கும்பிடறதுக்குன்னே சாமியுமிருக்கு, கோயிலுமிருக்கு, அதவுட்டுட்டு நா மீனாட்சியம்மன் கோயிலுக்குள்ள தாம் போவேன்னுட்டு சொல்றது எதுல சேர்த்தி? காலை ஒடிச்சுப் போடனும் படவா"

(கி.ரா, கோபல்லபுரத்து மக்கள், ப. 161) எனப்பல விமர்சனங்களை முன் வைக்கிறார் கி. ரா. இப்புதினத்தில் இடம்பெற்ற ஆலய நுழைவு எனும் இந்நிகழ்வானது மதுரையில் நடைபெற்ற உண்மை நிகழ்ச்சியாகும். இதனை, "விடுதலைப் போரில் வியப்பூட்டும் நிகழ்ச்சிகள்" எனும் புத்தகத்தில்,


"மதுரையில் மீனாட்சி அம்மன் கோயிலில் ஆலயப் பிரவேசம் நடத்திப் பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். 1933 ஆம் ஆண்டு ஜூலை 8 ஆம் தேதி நடந்தது. அந்தப் புரட்சி தாழ்த்தப்பட்டவர்களுடன் தன் வீட்டிலிருந்து மீனாட்சி கோயிலுக்குச் சென்றார் மதுரை ஏ.வைத்தியநாதய்யர்."

(என். ஸ்ரீனிவாசன், விடுதலைப் போரில் வியப்பூட்டும் நிகழ்ச்சிகள், பாகம் 3, ப. 191) எனக் குறிப்பிட்டுள்ளார் என். ஸ்ரீனிவாசன். இதன் வழி விடுதலைப் போராட்ட உண்மை

நிகழ்வுகளை கி.ரா தனது புதினத்தின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார் என்பது அறியலாகின்றது.

கோபல்லபுரத்து மக்களின் வெளிப்பாடாக கி.ரா குறிப்பிடும் உணர்வுகள் அனைத்தும் அன்றைய இந்திய மக்களின் எண்ணங்களே என்னும் கருத்துக்கு வலு சேர்ப்பதாக பல்வேறு மேற்கோள்கள் கோபல்லபுரத்து மக்கள் புதினத்தில் காணப்படுகின்றன. உதாரணமாக, காந்தியடிகளால் தொடங்கப்பட்ட சத்தியாகிரகமானது இரண்டாம் உலகப் போருக்காக இந்திய மக்களிடம் நிதி திரட்ட முயன்ற ஆங்கிலேயருக்கு எதிராகத் தொடங்கப் பட்டது எனும் கருத்தினை "வீர சுதந்திரம் வேண்டி" என்னும் நூலானது பதிவுசெய்துள்ளது. இந்நூல், "ஒரு நாள் அடையாளமாக மட்டுமே ஆரம்பிக்கப்பட்ட தனிநபர் சத்தியாகிரகம் தேசம் தழுவிய இயக்கமாக வளர்ந்தது. மக்களின் குமுறலும், போராட்ட உணர்வும் தலைவர்கள் எதிர்பார்த்திராத வகையில் வெளிப்பட்டன." எனத் தெரிவிக்கின்றது. (தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், வீர சுதந்திரம் வேண்டி, ப. 50)

"வரலாறு படைத்த வழக்குகள்" என்னும் நூலானது மகாத்மா காந்தியடிகள் சத்தியாகிரக போராட்டம் குறித்து,



> "முடிந்தவரை இப்போராட்டத்தை அமைதியான முறையில் நடத்தவே நான் முயற்சிப்பேன். ஆனால் ஆங்கிலேயர் அரசாங்கத்தையும் அதன் நேச சக்திகளையும் இந்தப் போராட்டம் கவரத் தவறினால் நான் எந்த எல்லைக்கும் செல்ல வேண்டியிருக்கும். அதன் பின்னர் இந்தியாவில் நடக்கின்ற காரியங்கள் அனைத்திற்கும் ஆங்கில அரசாங்கமே பொறுப்பேற்க நேரிடும்! நான் பொறுப்பேற்க இயலாது."

என அறிக்கை விட்டதாகக் குறிப்பிடுகின்றது. (சிவலை இளமதி, வரலாறு படைத்த வழக்குகள், ப. 98)

இந்நிகழ்வுகளைக் கி.ரா தனது புதினத்தில்,

> "இந்த ஸ்தம்பிப்பிலிருந்து எப்படி மீள என்று முடியாமல் திகைத்துக் கொண்டிருந்த போதுதான் முன்பின் தெரியாத ஒருத்தர் வந்து நோட்டிஸ் போன்ற ஒரு தாளை அந்த மாணவர்களிடம் சிக்கனமாக விநியோகித்தார். அது உருட்டு அச்சில் எழுதப்பட்டது. அதில் தந்திக் கம்பிகளை அறுப்பது, தண்டவாளத்தைப் பெயர்க்கிறது போன்ற வி'யங்கள் அடங்கி இருந்தன. வாங்கி ஆர்வமுடன் படித்தார்கள். அதே படி செய்துவிட வேண்டியதுதான் என்று தோன்றிவிட்டது."

(கி.ரா, கோபல்லபுரத்து மக்கள், ப. 216) என இளைஞர்களைக் கட்டுப்படுத்த இயலாத நிலைக்கு போராட்டம் சென்றுவிட்ட நிலையைத் தனது புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

காங்கிரஸில் இருந்த உட்கட்சிப் பூசல்கள், கருத்து மோதல்கள், கொள்கை முரண்பாடுகள், காந்தியின் அஹிம்சைக் கருத்துக்கள், முஸ்லீம் லீக்கின் எதிர்ப்புகள், ஐ.என்.ஏ இயக்கங்கள், கம்யூனிச இயக்கங்கள், திராவிட இயக்கங்கள் என இந்திய மக்களின் உள்ளங்கள் பல்வேறு கொள்கைகளின் உணர்ச்சிப் போராட்டங்களால் பிளவுபட்டு இருந்த வேளையில் இந்திய விடுதலைக்கான எல்லா வழிகளும் முறைப்படி பிரிட்டி'ரரால் தொடங்கப்பெற்றன. ஆனால் இந்திய நாடோ மதக்கலவரங்களால் வன்முறைக் காடாக இருந்தது. காந்தியடிகள் கட்டமைக்க விரும்பிய "இராமராஜ்ஜியம்" அமையவில்லை. சுதந்திரம் நள்ளிரவில் கிடைத்தது. இந்நிகழ்வுகளை,

> "வழக்கம் போல் பொழுது விடிந்தது!
> மறுநாள்
> பேப்பரில் வந்த அந்தச் செய்தியைப் பற்றிய
> பேச்சு வந்தது. தேசமெல்லாம் இந்த சுதந்திர
> தினக் கொண்டாட்டத்தில் மூழ்கி இருக்கிறது.
> கல்கத்தாவில் மகாத்மா காந்தி ராட்டையில்
> வேகமாக நூல் நூற்றுக் கொண்டிருந்தாராம்."

(கி.ரா, கோபல்லபுரத்து மக்கள், ப. 279) என்னும் கி.ராவின் எழுத்துக்கள் காந்தியின் உள்மனதில் மகிழ்ச்சியில்லை என்னும் கருத்தோடு புதினத்தை முற்றுபெற வைக்கின்றது.



அந்தமான் நாயக்கர்

இப்புதினம் தேசவிடுதலைக்குப் பின்னான காலச்சூழலையும், விடுதலைப் போராட்ட வீரர்கள் அடைந்த துன்பங்களையும், வெள்ளையர் ஆட்சியின் போது மக்கள் அடைந்த விவரிக்க இயலாத கொடுமைகளையும் வெளிக்கொணர்வதற்காக கி.ரா எடுத்த முயற்சியின் அடையாளம் எனலாம்.

அந்தமான் நாயக்கர் புதினம் விடுதலை போராட்ட காலத்தில் 1920 களில் தமிழக விவசாயிகளிடம் ஆங்கில அரசு புகுத்திய கடுமையான வரிச்சுமையை எதிர்த்துச் செயல்பட்ட வரிகொடா இயக்கத்தின் மீது ஏற்பட்ட ஈர்ப்பின் விளைவாக, அழகிரி என்னும் கரிசல் நில இளைஞன் கொடிப் போராட்டத்தில் ஈடுபட்டு ஊரின் நடுவே, பிள்ளையார் மேடை உச்சியில் கொடி ஏற்றி, அதற்கான வீண் பழியாக ஆங்கிலேயரால் கொலைக்குற்றம் சாட்டப்பட்டு 40 ஆண்டுகள் அந்தமான் சிறையில் ஆயுள் தண்டனை அனுபவிக்க நேர்ந்த அவலக்கதையை எடுத்துரைக்கின்றது. மேலும், விடுதலைக்குப் பின் ஆட்சியமைத்த காங்கிரஸுக்கு எதிரான கம்யூனிஸ்ட்டுகளின் போராட்டம், சுயமரியாதை இயக்கத்தினரின் இந்தி எதிர்ப்பு போராட்டம், திராவிட இயக்கங்களின் போராட்டம் குறித்து விவரிக்கின்றது. மேலும், அப்பாவி ஏழை மக்களுக்கு எதிரான அதிகாரம், மனிதாபிமானமின்மை, கொடுமை போன்ற நிகழ்வுகள் விடுதலைக்குப் பின்னும் வெள்ளைக்கார போக்குகளின் தொடர்ச்சியாய் கரிசல்

நிலத்தில் நீக்கமற விளைந்து நிற்கும் அருகினைப் போல் பின் தொடர்ந்து வருதலை விவரிக்கின்றது.

> “வெள்ளைக்காரனைப் போலத்தான் இந்த அருகும்
> என்று பல்ராம் நாயக்கரிடம் சொல்லிச் சிரித்தார்.” (கி.ரா, அந்தமான் நாயக்கர், ப. 19)

இப்புதினத்தின் பெரும்பாலான இடங்களில் சுதந்திர இந்தியாவின் ஆட்சியுடன், வெள்ளையக்காரன் ஆண்ட ஆட்சியை ஒப்பிட்டு நோக்கும் தன்மையுடன் கி.ரா புதினத்தை வடிவமைத்துள்ளார்.

விவசாயிகள் அமைதியான முறையில் சாலை மறியல் போராட்டம் நடத்திய போது, கடப்பாரை கொண்டு தண்டவாளத்தை உடைக்க முயன்றதாக பொய் வழக்குகள் அரசியல் தூண்டுதல்களால் காவல்துறையினரால் பதியப்பட்டதையும், அப்பாவி விவசாயிகள் தாக்கப்பட்டதையும் கண்ட அந்தமான் நாயக்கர்,

> “தேச விடுதலைப்போரில் ஈடுபட்ட தொண்டர்கள்
> பேரில் வெள்ளை அரசுதான் இப்படிப் பொய்
> வழக்குகளையும், சதி வழக்குகளையும் போட்டது
> அந்தக்காலத்தில்” (கி.ரா, அந்தமான் நாயக்கர், ப. 108)



என்பதாக புதினத்தை முடிக்கின்றார் கி.ரா.

முடிவுரை

கி. ராவின் புதின இலக்கியங்களான கோபல்ல மக்கள், கோபல்லபுரத்து கிராமம், அந்தமான் நாயக்கர் ஆகிய புதினங்களின் வழி ஆங்கிலேயர் ஆட்சி குறித்த விரிவான கண்ணோட்டத்தை இக்கட்டுரை நுணுகி ஆராய்ந்துள்ளது. விடுதலை போராட்ட கால இந்திய அரசியல் நிலை குறித்து, தெளிவான விளக்கங்கள் மற்றும் எடுத்துக்காட்டுகளை இக்கட்டுரை முன்வைக்கின்றது. பல்வேறு கோணங்களில் கரிசல் மண்ணின் மகத்துவத்தையும், மக்களின் மன உணர்வுகளையும் படம் பிடித்துக் காட்டியுள்ளது. மேலும், இக்கட்டுரையானது ஐரோப்பியர் வருகைக்குப் பின், விடுதலைக்குப் பின் என இரண்டாகப் பிரிந்து, இம்மூன்று புதினங்களின் கதைக்களங்களும் கதை நடத்திச் செல்லும் பாங்கினை தெளிவுற எடுத்துரைத்துள்ளது. மேலும் கி.ராவின் நடைச்சிறப்பு, தெளிவு, கதை சொல்லும் பாங்கு குறித்தும் இக்கட்டுரையின் வழி ஆராயப்பட்டுள்ளது.

<u>துணைநின்ற நூல்கள்</u>

1. கி. ராஜநாராயணன், கோபல்ல கிராமம், அன்னம் பதிப்பகம், தஞ்சை, 2007
2. கி. ராஜநாராயணன், கோபல்லபுரத்து மக்கள், அன்னம் பதிப்பகம், தஞ்சை, 2007
3. என். ஸ்ரீனிவாசன், விடுதலைப் போரில் வியப்பூட்டும் நிகழ்ச்சிகள், பாகம் 3, அல்லயன்ஸ் புத்தக நிறுவனம், சென்னை, 2000

4. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், வீர சுதந்திரம் வேண்டி, சங்கம் வெளியீடு, சாத்தூர், 1997.
5. சிவலை இளமதி, வரலாறு படைத்த வழக்குகள், அலைகள் வெளியீட்டகம், சென்னை, 1998.
6. கி. ராஜநாராயணன், அந்தமான் நாயக்கர், அன்னம் பதிப்பகம், தஞ்சை, 2007

****








ISBN 978-81-968802-1-7
9 788196 880217


கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

மானிடவியல் நோக்கில் கரிசல் மக்கள் ~ கி ரா படைப்புகளை முன்வைத்து

ஷா முஹம்மது அஸ்ரின்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

ஷா. முஹம்மது அஸ்ரின்
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
முதுகலைத் தமிழாய்வுத்துறை
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி – 20
smdazrin1998@gmail.com
+91 97913 09243

மானிடவியல் நோக்கில் கரிசல் மக்கள்
கி.ரா படைப்புகளை முன்வைத்து

முன்னுரை

மதுரைக்குத் தெற்கேயுள்ள திருமங்கலம் தொடங்கித் திருநெல்வேலிக்கு வடக்கேயுள்ள கங்கைக் கொண்டான் வரை கரிய நிறப் புன்செய் நிலங்களைக் கொண்ட பகுதியினைக் **'கரிசல்'** எனும் பெயரால் வழங்குவர். அப்பகுதியில் கோவில்பட்டிக்கு அருகிலுள்ள இடைச்செவல் எனும் ஊரில் பிறந்த கி.ராஜநாராயணனின் புதினம், குறும்புதினம், சிறுகதை, கட்டுரை ஆகிய படைப்புகளில் கரிசல் மக்களின் வாழ்க்கை முறை தொடர்பான பல்வேறு குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. இதனை மனித இனம் குறித்த அறிவியல் துறையான மானிடவியல் நோக்கில் ஆராய்ந்து இன்றைய தலைமுறையினருக்கு வெளிக்கொணர்வது இன்றியாமையாததாக உள்ளது. அவ்வகையில் கரிசல் நில மக்களின் உணவு முறைகள், தொழில்கள், மருத்துவ முறைகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலான மானிடவியல் சார்ந்த கருத்தாக்கங்களைக் **'கரிசல் இலக்கியத்தின் தந்தை'** எனப்படும் கி.ராவின் படைப்புகளை முதன்மையாகக் கொண்டு விளக்கி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.



உணவும் உணவு முறையும்

மனிதன் உயிர்வாழ உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் இன்றியமையாதவையாக விளங்குகின்றன. மக்கள் வாழும் நிலப்பகுதிகளைப் பொறுத்து உணவும், அவ்வுணவை சமைக்கும் முறையும், சமைத்த உணவை உண்ணும் முறையும் வேறுபடுகின்றன. மேலும், இவை ஒரே நிலப்பகுதியில் வாழும் மக்களிடத்தில் பொருளாதார அடிப்படையிலும், பருவநிலை அடிப்படையிலும் பெரிதும் மாறுபடுகின்றன. அவ்வாறு தமிழகத்தில் கரிசல் நிலங்களில் வாழ்ந்த ஏழை மக்களின் உணவாக இரவில் சோறும், காலையில் கஞ்சியும், மதியம் தேநீரும் விளங்கியதைக் கி.ரா 'தாச்சண்யம்' என்ற சிறுகதையில் பதிவுசெய்துள்ளார். மேலும், இம்மக்கள் உணவுக் கிடைக்காத காலத்தில் மூக்குப் பொடியை உணவாக உண்டு வாழ்ந்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

> **"ராத்திரிக்கு பருக்கை மீஞ்சினா காலைல ஒருவா கஞ்சியும் கெடைக்கும். பெறவு ….. வெளக்கு வைக்கிற நேரத்துக்குச் சாப்பிடுற ஒரு நேரத்துச் சாப்பாடுதாம். துட்டு பெறண்டா மதியத்துக்கு ஒரு சுடுதண்ணி கெடைச்சாலுங் கெடைக்கும். மித்த நேரமெல்லாம் நகள்றது பல்லுலெ இளுகிற இந்த ஒரு சிமிட்டாப் பொடியிலெதாம்" (கி.ரா, கி.ரா கதைகள், பக்.329-330)**

கிராமங்களில் ஆண், பெண் எனும் பாகுபாடின்றி உழைத்து வாழும் மக்களிடம் கள் அருந்தும் பழக்கத்தைக் காணலாம். அவ்வாறே கரிசல் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையில் கள் மிகவும் இன்றியமையாத இடத்தினைப் பெற்றிருந்தது. இதனை, **"அவர்கள் குழந்தை பிறந்தவுடனே அந்தக் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதற்கு முன் கள்ளையே சேனையாக வைத்தார்கள். கள் இல்லாத**

வாழ்க்கையை அவர்களால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை" (கி.ரா, கோபல்லபுரத்து மக்கள், ப.120) என்ற கி.ராவின் வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

அறிவியல் அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் இந்நூற்றாண்டில் உணவுப் பொருட்களைக் கேடாமால் பாதுகாக்கப் பல்வேறு வேதிப் பொருட்கள் சேர்க்கப்படுகின்றன. கிராமம், நகரம் என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களும் தங்களது வீடுகளில் குளிர்சாதனப் பெட்டிகளில் உணவுப் பொருட்களை வைத்துப் பயன்படுத்தும் பழக்கத்திற்கு வந்துவிட்டனர். இவற்றால் பல்வேறு நோய்கள் மனித குலத்திற்கு ஏற்படும் என அறிவியல் ஆய்வுகளே உறுதிப்படுத்தியுள்ளன. இந்நிலையில் வேதிப் பொருட்களும், குளிர்சாதனப் பெட்டியும் குறித்து அறிந்திராத காலத்தில் கிராம மக்கள் வெங்காயத்தை இயற்கையான முறையில் பாதுகாத்ததை,

"இவைகளுக்கெல்லாம் கொஞ்சம் தள்ளி ஒரு சிறிய்ய 'பொசல் வண்டி டக்' மாதரி நீளமான வெங்காயக் கோக்காலியை நிரைத்து, அதுக்குள் நிறைய ஈராங்காயம் (வெங்காயம்) போட்டு முகடு கூட்டி வேந்திருந்தார்கள்.

இப்படி வெங்காயத்தை மழைக்கும் நனையாமல் வெயிலுக்கும் காயாமல் காற்றோட்டமாய் வைத்திருந்தால் கெட்டுப் போகாமல் அதை ரொம்ப நாளைக்கு இருப்பு வைத்துக் கொள்ளலாம்" (கி.ரா, பிஞ்சுகள்/அந்தமான் நாயக்கர், ப.1) எனக் கி.ரா அவர்கள் 'பிஞ்சுகள்' எனும் குறும்புதினத்தில் பதிவு செய்துள்ளதைக் காணமுடிகின்றது.

சடங்குகளும் பழக்கவழக்கங்களும்



மனித குலம் பிறப்பு முதல் இறப்பு வரைப் பல்வேறு சடங்கு முறைகளைப் பின்பற்றி வந்துள்ளனர். அவற்றுள் பல காலத்தின் ஓட்டத்தால் மாறுதல் அடைந்த போதிலும், சில சடங்குகள் வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வருவதைக் கிராம மக்களிடம் காண முடிகின்றது. மேலும், அவை மக்களின் வாழ்வில் நீங்கா இடம்பெற்றிருப்பதை உறுதிப்படுத்துகின்றது. இதனை, **"சடங்கு என்பது வாழ்வியல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டது" (காந்தி.க, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.1)** என்கிறார் க.காந்தி.

பழக்கம் என்பது மரபு வழியாகவும், வழக்கம் என்பது ஒரு செயலைத் தொடர்ந்து செய்வதாலும் ஏற்படுகின்றன. பழக்கம், வழக்கம் ஆகிய சொற்கள் குறித்து வே.அண்ணாமலை அவர்கள், **"பழக்கம் என்பது நாம் பழகிக் கொள்வதாகும். வழக்கம் என்பது நம் முன்னோர் பழகிய பழக்கம் நமக்கு வழக்கமாக வருவதாகும். எனவே முன்னோர்கள் பழக்கமே வழக்கமாகும். நம் பழக்கம் பின்னோருக்கு வழக்கமாகும்" (அண்ணாமலை.வே, சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம், ப.2)** என்கிறார்.

- **செவ்வாயும் வெள்ளியும் உப்பின்றி உணவு**

மனிதனின் பிறப்பு, பருவம் அடைதல் (பெண்), திருமணம், வழிபாடு, இறப்பு முதலான நிகழ்வுகளின்போது சடங்குகள் பின்பற்றப்படுகின்றன. அவ்வாறு கரிசல் மக்களின் வாழ்விலும் சடங்குகள் முக்கிய இடம்பெற்றிருந்துள்ளதைக் கி.ரா படைப்புகள் வெளிப்படுத்துகின்றன. அம்மனைத் தெய்வமாக வழிபட்ட கரிசல் மக்கள் மதிய உணவாக உப்பு சேர்க்கப்படாத உணவினை வெள்ளி மற்றும் செவ்வாய் கிழமைகளில் உண்டுள்ளனர். இதனை, **"வெள்ளியும் செவ்வாயும் அம்மனுக்கு மதியம் ஒரு வேலை**

மட்டும் உப்பு இடாத வெண்சோறு படைத்துப் பூசையிடுவார்கள்" (கி.ரா, கி.ரா கதைகள், ப.414) எனும் கி.ராவின் 'கண்ணீர்' சிறுகதையில் இடம்பெற்றுள்ள வரிகளால் அறியமுடிகின்றது.

- **மூன்று நாட்கள் அழுகை**

பெண்கள் திருமண வயதை அடைந்தவுடன் தகுதியான ஆண்மகனைத் தேடி ஊர் மக்கள் முன்னிலையில் திருமணம் செய்வது வழக்கம். அவ்வாறு திருமணமாகிப் பிறந்த வீட்டை நீங்கிப் புகுந்த வீட்டிற்குச் செல்வதை எண்ணி சில பெண்கள் அழுவதை இன்றும் காணமுடிகின்றது. ஆனால், கரிசல் நிலத்தில் திருமணம் நிச்சயம் செய்யப்பட்ட பெண்கள் மாறுபட்ட வழக்கத்தைப் பின்பற்றி வந்துள்ளனர். அப்பெண்கள் நிச்சயம் செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்று நாட்கள் அழுவதைச் சடங்காகவே செய்துவந்துள்ளதை, **"அந்தக் காலத்துப் பெண்கள் தங்களுக்குக் கல்யாணம் நிச்சயமானதுடன் அழுவார்கள். அவர்கள் ஏன் அப்படிச் செய்தார்கள் என்று இன்று வரைக்கும் நான் யாரிடமும் காரணம் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை" (கி.ரா, கி.ரா கதைகள், ப.105)** எனப் பதிவு செய்துள்ளார் கி.ரா.

- **பூப்படைதலை அறிவிப்பவனாக சலவைத் தொழிலாளி**

தனது வீட்டில் சிறுமியாக இருந்த பெண் வளர்ந்துத் திருமணத்திற்கான தகுதியை அடைந்துவிட்டால் என்பதை மக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு, அப்பெண்ணுக்குப் 'பூப்புச் சடங்கு' எனும் பெயரில் சடங்கு செய்யப்படுகின்றது. உடலாலும் உள்ளத்தாலும் திருமணத்திற்குரிய தகுதி பெற்ற பூப்படைந்த பெண்ணைக் கிராமங்களில் புதையல் போன்று பாதுகாப்பர். இக்காலத்தில் மகள் பூப்படைந்த செய்தியைப் பலருக்கு அலைபேசியில் தெரிவித்தும், சுவரொட்டிகளில் விளம்பரம் செய்தும் விழாவாகக் கொண்டாடுவதைச் சில கிராம மக்களிடம் காண முடிகின்றது. அறிவியல் முன்னேற்றமடையாத அக்காலத்தில் கரிசல் பெண் பூப்படைந்த செய்தியைச் சலவைத் தொழில் செய்த மக்களைக் கொண்டு அறிவிக்கப்பட்டது. **"சின்னம்மா ருது ஆயீட்டாங்க. மங்கலச் செய்தி கொண்டு வந்தவனுக்குச் சாரு, வளமைப் படி அரை ரூபாய் நாணயமும் வெற்றிலை பாக்கும் வைத்துக் கொடுத்தனுப்பினாள்" (கி.ரா, கி.ரா கதைகள், ப.414)** எனக் கி.ராவின் தனது படைப்பில் பதிவுசெய்துள்ளார்.



- **மாப்பிள்ளை விருந்து**

பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்த தந்தையால் தனது மருமகனுக்கு மூன்று மாதங்கள் அளிக்கப்பெறும் விருந்திற்கு **'மாப்பிள்ளை விருந்து'** எனப் பெயர். இவ்விருந்தினைத் திருமணமான தனது மகளின்மீது மாப்பிள்ளை அன்பு செலுத்த வேண்டும், மகப்பேறு காலத்தில் கண்ணும் கருத்துமாக அவளைக் கவனித்துக் கொள்ள வேண்டும் எனும் நோக்கில் கரிசல் மக்கள் கடைபிடித்துள்ளனர். இதனை, **"மாப்பிள்ளைக்கு மாமனார் வீட்டில் மூணுமாச விருந்தும் தலை தீபாவளியும் முடிந்தது" (கி.ரா, கி.ரா கதைகள், ப.223)** என 'ஓர் இவள்' எனும் சிறுகதையில் இடம்பெற்றுள்ள தொடரால் அறியமுடிகின்றது.

- **அவ்வை நோன்பு நோற்கும் பெண்கள்**

கிராமங்களில் வாழும் குடும்பங்களில் உணவுகளை ஆண்களுக்குப் பரிமாறிய பின்னர் உணவு உண்பவர்களாக பெண்கள் விளங்குவதைக் காணலாம். தங்களுக்கு உணவு இல்லாவிடினும் வீட்டிலுள்ள

ஆண்கள் வயிரார உண்பதைப் பார்த்து மனமும் வயிறும் நிறைவடைபவர்களாகக் கிராமத்துப் பெண்கள் விளங்குகின்றனர். அத்தகைய சூழலில் கரிசல் நிலப் பெண்கள் பசியைப் பழகிக் கொள்வதற்கும், பசியின் காரணமாகத் தன்னம்பிக்கை இழக்காமலிருக்கவும் **'அவ்வை நோன்பு'** என்ற பெயரில் ஆடி, தை, மாசி அகிய மாதங்களில் விரதம் மேற்கொள்கின்றனர். **"இப்படி தவறாம விரதம் இருந்ததும் அவ உடம்புல சகதி கூடுனது, தெளிவும் மனசுல ஒரு தைரியமும், நம்பிக்கையும் பிறந்தது. நாளாக ஆக, அந்த வீட்டில செல்வாக்கு பொங்குது" (கி.ரா, பாரததேவி (தொ.ஆ), பெண்மணம், ப.36)** எனக் கி.ரா குறிப்பிட்டுள்ளார். இந்நோன்பானது **'செவ்வாய் விரதம்'**, **'அவ்வையார் விரதம்'**, **'ஈஸ்வரியம்மன் விரதம்'** என்ற பெயர்களில் இன்றும் வழக்கத்தில் உள்ளது.

- **பெண்ணடிப் பாயசம்**

ஒரு மனிதன் இறந்தவுடன் அம்மனிதனின் குடும்ப உறுப்பினர்களால் இறப்புச் சடங்குகள் நிறைவேற்றப்படுகின்றன. இச்சடங்குகள் நிலத்திற்கு ஏற்றவாறும், பின்பற்றிய சமயத்திற்கு ஏற்றவாறும் மாறுபட்ட நிலையில் நடைபெற்று வருவதைக் காணமுடிகின்றது. அவ்வகையில் கரிசல் நிலத்தில் இறந்தவரின் பெண் வழியே பிறந்த பெயர்த்திகளைக் கொண்டு பச்சரிசி பாயசம் செய்யும் பழக்கம் இருந்துள்ளது. இதனைப் **'பெண்ணடிப் பாயசம்'** என்ற பெயரில் வழங்கியுள்ளனர். இதனைக் **"கவுண்டரின் பெண் வழி பெயர்த்திகள் 'பெண்ணடிப் பாயசம்' காய்ச்சுவதற்காக நெல்லுக்கு ஆள் அனுப்பி கொண்டு வந்து பச்சரிசி குத்துவதற்கு ஏற்பாடுகளை செய்துவிட்டார்கள்" (கி.ரா, கி.ரா கதைகள், ப.148)** என்பதைக் கொண்டு அறியமுடிகின்றது.



- **கழுவேற்ற தண்டனை**

மிகப்பெரும் குற்றம் செயபவர்கள் உலகில் வாழத் தகுதியற்றவர்கள் என்ற நோக்கில் இக்கால நீதிமன்றங்களால் தூக்கு தண்டனை வழங்கப்படுகின்றது. இதுபோல, அக்காலத்தில் குற்றவாளிகளின் ஆடை நீக்கப்பட்டு, அவனது ஆசன வாயில் கூர்மையாக்கப்பட்ட, எண்ணெய் பூசப்பட்ட கழுமரத்தின் நுனிப் பகுதி செல்லுமாறு அமர வைத்து தண்டனை வழங்கப்பட்டது. உடல் எடையால் மரத்தின் நுனிப்பகுதி உட்சென்று இறுதியில் இரத்தம் உடலை விட்டு நீங்கிக் குற்றவாளி இறந்துவிடுவான். இவ்வாறாக வழங்கப்படும் தண்டனைக்குக் **'கழுவேற்றம்'** எனப் பெயர். இக்கொடிய தண்டனை கரிசல் வட்டாரத்தில் வழக்கில் இருந்துள்ளது. இதனைக் 'கோபல்ல கிராமம்' எனும் புதினத்தில் கி.ரா. விளக்கமாகப் பதிவு செய்திருப்பதைக் காணமுடிகின்றது.

"அவனுடைய கைகளைப் பின்கட்டாகவும், கால்களைப் பின்பக்கம் மடித்துக் கட்டி அவனைத் தூக்கிக் கழுமரத்தின் நுனியில் உட்கார வைத்து அழுத்தினார்கள். கழுவின் நுனி ஊசி அவனுடைய அபானத்துக்குள் புகுந்து பின் கழுத்தின் பிடரி வழியாக வெளியே வந்தது. அந்த வினாடியில் அவந்து உடம்பு நடுங்கித் துடித்தது. மலமும் ரத்தமும் அபானத்தின் வழியாய்க் கசிந்தது" (கி.ரா, கோபல்ல கிராமம், ப.143).

தொழில்கள்

பண்டைக் கால முதல் உழவிற்குப் புகழ் பெற்ற பகுதியாகத் தமிழக நிலங்கள் விளங்கின. கரிசல் பகுதியில் வாழும் மக்கள் உழவு, நெசவு முதலான தொழில்களைச் செய்து அன்றாட வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டனர். நாளடைவில் ஏற்பட்ட இயற்கை மாற்றங்களாலும், அறிவியல் வளர்ச்சியாலும் கரிசல் நிலங்களில் உணவு, உடை சார்ந்த தொழில் செய்த மக்கள் தீப்பெட்டி தொழிற்சாலைகள் இருந்த நகரங்களுக்குக் கூலியாகச் சென்றனர். **"ஊருக்குள் விவசாயக் கூலி என்று**

இருந்தவர்கள் எல்லோரும் அனேகமாய் தீப்பெட்டி போட ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் வீட்டுக் குழந்தைகளைக் கூட விடிய முன்னே மோட்டார்க்காரர்கள் வந்து கூட்டிக்கொண்டு போய்விடுகிறது தீப்பெட்டி ஆ.ஃ.பீஸ்களுக்கு. களையெடுக்கவோ தொழுவேலைக்கோ இதர விவசாய வேலைக்கோ ஆட்கள் கிடைப்பது குதிரைக் கொம்பாகிவிட்டது.'' (கி.ரா, கி.ரா கதைகள், ப.293) எனக் கி.ரா 'தாவைப் பார்த்து' எனும் சிறுகதையில் பதிவுசெய்துள்ளார். இக்கூற்றால் தீப்பெட்டித் ஆலை உரிமையாளர்கள் தங்களது தொழிற்சாலைகளில் குறைந்த ஊதியம் வழங்கிக் குழந்தைத் தொழிலாளர்களை வேலையில் அமர்த்தியதையும் அறியமுடிகின்றது.

மேலும், கடினமாக உழைத்து விளைவிக்கப்பட்ட பருத்தியை ஆலை முதலாளிகள் மிகவும் குறைவான அடிமாட்டு விலைக்கு விவசாயிகளிடம் இருந்துப் பெற்றுக் கொண்டனர். அவ்வாறு பெறப்பட்ட பருத்திகள் நூலாகவோ அல்லது ஆடைகளாகவோ மாற்றப்பட்டு அதிகமான விலைக்கு மக்களிடம் விற்கப்பட்டது. இதனைக் கண்ட விவசாயிகள் மனம் வருந்தியவாறு பருத்தி விளைவிப்பதைக் கைவிட்டுத் தீப்பெட்டி ஆலைகளை நோக்கிச் சென்றனர்.

''அதுபடி பாத்தா இப்பொப் பருத்தி வெலை குண்டாலுக்கு ஆயிரத்து ஐநூறு ரூபா இருக்கணும் என்றார் நாயுடு. ஆமா ஆமா, அதிலென்ன சந்தேகம் என்று ஒப்புக் கொண்ட யேவாரி.

பருத்தி வெலைய நாமளா வெக்கிறோம் அது மில்லுக்காரனில்ல வெக்கான் வெலைய ஏத்துறதும் எறக்குறதும், அவம்பாடு தான்'' (கி.ரா, கி.ரா கதைகள், ப.354) என்பதால் பருத்தியின் விலையை நிர்ணயிக்கப்பவர்களாக ஆலைகளிலுள்ள முதலாளிகளால் விளங்கியதைக் காணமுடிகின்றது.



மருத்துவம் முறைகள்

கிராமங்களில் வாழும் மக்கள் இயற்கைப் பொருட்களைக் கொண்டே உடலில் ஏற்படும் நோய்களைத் தீர்த்துக்கொண்டனர். அதிலும் கரிசல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் காக்கையை மருத்துவ குணம் வாய்ந்த பறவையாகப் பார்த்தனர். **''காகங்களை அவர் தெறிக்கவே மாட்டா. யாராவது காமாலை நோய்க்காக கறிக்கு வேணும் என்று கேட்டால் தெறித்துக் கொடுப்பார்'' (கி.ரா, பிஞ்சுகள்/அந்தமான் நாயக்கர், ப.26)** என்னும் கி.ராவின் வரிகளால் கரிசல் மக்கள் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டபோது காகங்களைக் கறியாகச் சமைத்து உண்டதை அறியமுடிகின்றது. இன்றும், பல கிராமங்களில் மஞ்சள் காமாலை நோய ஏற்பட்டால் கீழாநெல்லிச் செடியைக் கசாயமாக்கிக் குடிக்கும் பழக்கம் வழக்கத்திலுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், இம்மக்கள் ஆவாரஞ் செடியின் பாகங்களைப் பல்வேறு வகையாகப் பயன்படுத்தியதைக் 'கிடை' எனும் குறும்புதினத்தில் கி.ரா பதிவுசெய்துள்ளார். இதனை, **''இந்தப் பூவைக் கஷாயம் போட்டுக் குடிக்கிறோம். மொட்டுக்களுக்குள்ளே இருக்கிற அரிசியை அரைச்சிக் குழந்தைகளுக்கு மருந்தாக்கிக் கொடுக்கிறோம்'' (கி.ரா, கி.ரா கதைகள், ப.45)** என்பதைக் கொண்டு ஆவாரஞ் செடியின் பூவும், மொட்டும் கரிசல் மக்களால் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டதை அறியமுடிகின்றது.

மேலும், உழைப்பின் களிப்பினைப் போக்க அருந்தப்பட்ட கள்ளினை மருந்துப் பொருளாகவும் கரிசல் நில மக்கள் பயன்படுத்தினர். வெப்பத்தால் ஏற்படும் உடல் சூட்டைக் கட்டுப்படுத்தும் மருந்துவப் பொருளாகப் பனை மரத்தில் இருந்து எடுக்கப்பட்ட கள்ளினைப் பயன்படுத்தியுள்ளனர். **''அவர் சூட்டு நோய் தாங்காமல் துன்பப்பட்டார். பாக்காத வைத்தியமில்லை கடேசியில் நாட்டு வைத்தியர்கள்**

அவருக்குச் சொன்ன அறிவுரை ஒரு மண்டலம் பனம்பால் சாப்பிட வேண்டும் என்பது கொஞ்சம் குணம் தெரிந்ததுபோல் இருந்தது" (கி.ரா, கோபல்லபுரத்து மக்கள், ப.150) என்பதால் உறுதியாகின்றது.

நம்பிக்கைகள்

அன்றைய சமுதாயத்தினரின் பெரும்பாலான நம்பிக்கைகளை இக்கால மக்கள் (குறிப்பாக நகரங்களில் வாழும் மக்கள்) ஏற்றுக்கொள்வதில்லை. எனினும், கிராமப் பகுதிகளில் வாழும் மக்களிடம் நம் முன்னோர்கள் விட்டுச்சென்ற எச்சமாக சில நம்பிக்கைகள் வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. **"நம்பிக்கை என்பது மனித மனத்தின் விளைவாகும். இயற்கையால் படைக்கப்பட்ட பொருட்களுக்கும் மனிதனின் செயல்களுக்கும் தொடர்புண்டு என்ற உளவியல் அடிப்படையில் தோன்றிய நம்பிக்கைகள் காட்சி தருகின்றன" (காந்தி.க, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.1**) என்பார் கா.காந்தி.

பண்டைத் தமிழகத்தில் கடவுள், பேய், சகுனம், மறுபிறப்பு, விரிச்சி கேட்டல், நிமித்தம் பார்த்தல் போன்ற நம்பிக்கைகள் மக்களிடம் இருந்த்தைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. அவர்கள் நன்மை தரக்கூடிய நம்பிக்கையை 'நல்ல நம்பிக்கை' என்றும், தீமை அல்லது கேடு விளைவிக்கக் கூடிய நம்பிக்கையைத் 'தீய நம்பிக்கை' என்றும் வகைப்படுத்தினர். கிராம மக்களைப் படிப்பறிவு அற்றவர்களாகக் கருதும் இன்றைய நகரத்து மக்கள், அவர்களது நம்பிக்கையை 'மூட நம்பிக்கை' என்கின்றனர்.

காகத்தை மஞ்சள் காமாலைக்கான மருத்துவம் குணம் நிறைந்த பறவையாகக் கருதிய கரிசல் மக்கள், அவை கூட்டமாக அந்திப் பொழுதில் ஆராவாரத்துடன் கரைவதால் இறப்பு நிகழும் என நம்பினர். இதனை, **"ஒரு நாள் அந்திப் பொழுதில் கரை மரங்களில் காகங்கள் கலைந்து கலைந்து கரைந்து கொண்டே வட்டம் போட்டுக் கொண்டிருந்தது. கிராமத்தில் ஒரு நம்பிக்கை, அடையும் வேளையில் காகங்கள் இப்படிக் கலைந்து வட்டமிட்டால் ஊருக்குள் யாராவது ஒரு பெரிய உசுருக்கு மரணம் ஏற்படும் என்பது" (கி.ரா, பிஞ்சுகள்/அந்தமான் நாயக்கர், ப.18)** என்பதைக் கொண்டு அறியலாகிறது.



மேலும், பெண்களை மையமிட்டுக் குடும்பத்திற்கு நல்ல காலம், கெட்ட காலம் எனும் நம்பிக்கை கிராமங்களில் காணப்படுகின்றது. குறிப்பாகப் பெண்கள் பருவம் அடைதல், திருமணமாகிப் புகுந்த வீட்டிற்குச் செல்லுதல் முதலான காலங்களில் குடும்பத்திற்கு நன்மை உண்டானால் 'நல்ல காலம்' என்றும், மாறாகக் கெடுதல் விளைந்தால் 'ராசி இல்லாதவள்' என்றும் கூறப்படுவதைக் காணமுடிகின்றது. இதற்கு மாறாகக் கரிசல் நிலத்தில் ஆளரவமற்ற காட்டுப் பகுதியில் பெண் பருவம் அடைந்தமையால், அவளைக் காற்று தீண்டி பருவம் அடைந்தவளாகக் கூறப்பட்டதை, **"அத்துவானக் காட்டில் உச்சி வேளையில் யாருமே இல்லாத இடத்தில் மகள் பூத்துச் சடங்கானதால் 'காற்று' தோஷம் பட்டு விட்டதாகக் கருதினார்கள்" (கி.ரா, பிஞ்சுகள்/அந்தமான் நாயக்கர், ப.463)** எனும் வரிகளால் அறிய முடிகின்றது.

முடிவுரை

கி.ராவின் படைப்புகளை ஆழ்ந்து ஆராய்கையில் கரிசல் நில மக்களின் உணவு முறைகள், தொழில்கள், சடங்குகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மருத்துவ முறைகள் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. உழவிற்கு முக்கியத்துவம் கொடுத்து உழைத்து வாழ்ந்த கரிசல் மக்களின் வாழ்வில் கள் இன்றியமையாத உணவுப் பெருளாக விளங்கியுள்ளது. இயற்கையான முறையில் வெங்காயத்தைப் பாதுகாக்கும் முறையை அறிந்தவர்களாக அம்மக்கள் விளங்கியுள்ளனர். வெள்ளி, செவ்வாய் ஆகிய இரு தினங்களில் அம்மனை வழிபட்டு உப்பில்லாத வெண்சோற்றினைப் படைத்து உண்ணல், திருமணம்

முடிந்தபின் மருமகனுக்கு மூன்று மாதங்கள் மாமனார் விருந்து அளிக்கும் **'மாப்பிள்ளை விருந்து', 'கழுவேற்றம்'** எனும் கொடிய மரண தண்டனை ஆகியன கரிசல் மக்கள் பின்பற்றியதைக் கி.ராவின் படைப்புகளால் உறுதியாகின்றது. மேலும், ஆடி, தை, மாசி ஆகிய மாதங்களில் கரிசல் பெண்களால் நோற்கப்படும் **'அவ்வை விரதம்'**, இறந்தவரின் பெயர்த்தியைக் கொண்டு பச்சரியால் பாயசம் படைக்கும் **'பெண்ணடிப் பாயசம்'**, திருமண நாள் உறுதி செய்யப்பட்ட பெண்கள் மூன்று நாட்கள் அழுதல், பெண் பூப்படைந்த செய்தியைச் சலவைத் தொழிலாளியைக் கொண்டு மக்களுக்கு அறிவித்தல் ஆகியன பெண்களை மையமிட்ட சடங்குகளாகவும் பழக்கவழக்கங்களாகவும் கரிசல் நிலத்தில் விளங்கியுள்ளதை அறியமுடிகின்றது. அம்மக்கள் காக்கையை மஞ்சள் காமாலை நோய்க்கும், கள்ளினை சூட்டு நோய்க்கும், ஆவாரஞ் செடியைக் குழந்தைகளின் ஆராக்கியத்திற்காகவும் பயன்படுத்தியுள்ளனர். அந்திப் பொழுதில் கூட்டமாகக் காகம் கரைந்தால் கிராமத்தில் ஒருவர் இறப்பது உறுதி எனும் நம்பிக்கைக் கொண்டவர்களாக கரிசல் மக்கள் விளங்கியதைக் கி.ராவின் படைப்புகள் உறுதிப்படுகின்றன.

<u>துணைநின்ற நூல்கள்:</u>

- அண்ணாமலை.வே, சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், முதற்பதிப்பு: 2000.
- இராஜநாராயணன்.கி, கி.ராஜநாரயணன் கதைகள், அகரம் பதிப்பகம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு: 2002.
- இராஜநாராயணன்.கி, கோபல்ல கிராமம், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், ஏழாம் பதிப்பு: 2010.
- இராஜநாராயணன்.கி, கோபல்லபுரத்து மக்கள், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், எட்டாம் பதிப்பு: 2012.
- இராஜநாராயணன்.கி, பிஞ்சுகள்/அந்தமான் நாயக்கர், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு: 2010.
- இராஜநாராயணன்.கி, பாரததேவி (ப.ஆ), பெண்மணம், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு: 2009.
- காந்தி.க, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இரண்டாம் பதிப்பு: 2013.



****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கோபல்லபுரத்து மக்கள் புதினத்தில் சுதந்திரப் போராட்டம்

சு ஜோஸ்பின் மாலதி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

சு. ஜோஸ்பின் மாலதி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.
அலைபேசி எண் : 8072006862
மின்னஞ்சல் : josephinemalathi@vvvcollege.org
Orcid no : https://orcid.org/0000-0001-8576-965X

கோபல்லபுரத்து மக்கள் புதினத்தில் சுதந்திரப் போராட்டம்

முன்னுரை

மனிதனின் உள்மனதினை வெளிப்படுத்தும் சிறந்த கருவூலமாகப் போராடும் மனப்பாங்கு அமைகின்றது. எதிர்ப்புச் சக்தியின் ஆக்கவிளைவாக மனிதரிடையே இது ஊடுருவிக் காணப்படுகின்றது. இப்போராட்டம் தோன்றுவதென்பது ஒன்றைப் பெறுவதற்கான நோக்கத்தின் வழி அமைகின்றது. தனி மனிதப் போராட்டமும் சமூகப் போராட்டமும் மக்கள் சமூகத்தைச் சார்ந்தே நடைபெறும். சமுதாயத்தையொட்டி அவ்வக்கால நிகழ்வைப் பதிவு செய்யும் முயற்சியைப் படைப்பிலக்கியமும் செய்கின்றது. சமகாலப் போராட்ட நிகழ்வையும் அது குறித்த சமூகச் சிந்திப்பையும் படைப்பாளிகள் பதிவு செய்த வண்ணம் உள்ளனர். புதினத்தில் இடம் பெறும் சுதந்திரப் போராட்டச் சிந்தனைகள் இக்கட்டுரையில் இடம்பெறுகின்றன.



இயக்கங்கள்

போராட்டத்தின் அடிப்படையாக இயக்கம் அமைகின்றது. இது குழுக்களாக இணைந்து செயல்படும் ஓர் நிகழ்வாகும். ஒவ்வொரு இயக்கமும் ஒரு கொள்கையை நிறுவிக் கொண்டு அந்த இலக்கை அடைவதற்காக இயங்குகின்றன. இந்த இயங்கு நிலையில் தனி நபர் தலைமைப் பொறுப்பேற்கும் நிலை உண்டு. இயக்கங்கள் தலைவர்களை நியமித்துக் கொண்டு தமக்கான கொள்கை ரீதியில் தம்முடைய செயல்களை நடத்தக்கூடியவையாகும். இயக்கங்கள் வலுப்பெறவும் கொள்கைகள் மக்களுக்கு நன்மை தரக்கூடியதாகவும் இருப்பது, ஆகியவையே இயக்கங்களின் முதன்மை நோக்கமாக இருக்கும். சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும், பாமர மக்களின் அறியாமை நிலையை அவர்களுக்கு உணர்த்தி, உண்மையைப் பிரகடனம் செய்யும் போக்கினும் இயக்கங்களின் வளர்ச்சி நிலை அமையும்.


இயக்கம் குறித்த பல்வேறுபட்ட பார்வை அறிஞர்களின் கருத்துக்கணிப்பில் வலுப்பெறுவதைப் பின்வருமாறு அறியலாம். இயக்கம் என்பதைப் பரிணாமம் என்ற சொல்லாலும் குறிப்பிடலாம். பரிணாமமானது படிப்படியான தன்மையின் இடையீடு என்றும், அமைதியான படிப்படியான தன்மையின் இடையீடு என்றும் அமைதியான படிப்படியான, மெதுவான வளர்ச்சி என்றும் கொள்ளலாம் (கோ. தான்யா, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் மார்க்கசியக் கொள்கையின் தாக்கம், ப.53). சமூகத்தின் வளர்ச்சிக்காக நிர்ணயிக்கப்படும் இயக்கம் பற்றிய கருத்தை மேலும் வலுப்படுத்த சமுதாய அமைப்பில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டு வருவதே ஒரு சமூக இயக்கத்தின் முக்கிய திட்டம் என்றும் இயக்கங்களின் நோக்கம் சமூகப்பரிணாம வளர்ச்சியினைக் கொண்டு வருதலும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தலுமாகும் என்கிறார்" (Robert E.L. Faries> Hand Book of Modern Sociology> Vol. II> p.430) ②कंकफुलं लंकां வழி இயக்கங்களின் நிலையினை அறிந்து கொள்ளமுடிகிறது.

போராட்டம்

ஆதிகால மனிதனின் செயலிலிருந்தே போராட்டம் தொடங்குகின்றது இயற்கையைக் கண்டு அச்சமடைந்த மனிதன் அவற்றின் தாக்குதலிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப்போராட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நாளடைவில் தலைமைப் பொறுப்பேற்றுச் செய்யப்படும் செயல் என்று விரிந்து, குழுக்கள் அமைத்தல் என்னும் முறையில் சமூகத்தைச் சார்ந்த நிகழ்வாகப் போராட்டம் துளிர்விட ஆரம்பித்தது. இப்போராட்ட நிகழ்வில் வெற்றி தோல்விகள் நிர்ணயிக்கப்பட்டன. போராட்டம் மனிதனை எதிர்ப்புணர்வுக்கு ஆட்படுத்தியும், உரிமையை நிலை நாட்டவும் உறுதுணையாய் இருந்தது. இத்தகைய மனித மனத்தில் ஏற்படும் போராட்ட உணர்வை நாவல் இலக்கியமும் இயம்புகின்றது. போராட்டங்களின் பல்வேறு வகையினைச் சித்தரிக்க முயலும் சுப்பிரமணியம் எதிர்நிலையில் ஏற்படும் போரட்டங்களைப் பின்வருமாறு தொகுத்துரைக்கின்றார். அறிவாளி வர்க்கத்துக்கும் முட்டாள் வர்க்கத்துக்கும் போராட்டம், நாத்திகனுக்கும் ஆத்திகவாதிக்கும் போராட்டம் நன்மைக்கும் தீமைக்கும் போராட்டம், கடவுளுக்கும் சைத்தானுக்கும் போராட்டம் இடைவிடாமல் நடந்து கொண்டுதான் இருக்கிறது (வி.சுப்பிரமணியம் ”நல்லபெருமாளின் போராட்டம்” விடுதலைக்குப் பின் தமிழர்கள், ப.124) என்கிறார்.”

காந்தியம்

காந்தியம் என்பது அகிம்சையைப் புலப்படுத்தும். இது வன்முறையிலிருந்து முற்றிலும் மாறியது. காந்தியத் தத்துவம் வன்முறையை அடியோடு அகற்றும் தன்மை கொண்டது. வன்முறை வழியைக் களைந்து எவ்வித ஆயுதமுமின்றி அமைதி முறையில் போரினை நடத்துவது காந்தியம் என்பர். இதற்குரிய போர்க்கருவி மக்கள் சக்தியே யாகும். மக்களின் அடிமனதில் உறங்கிக்கிடக்கும் மிருகத்தன்மையை அகற்றி, மென்மைத்தன்மையைக் கொடுக்கும் ஆற்றல் காந்தியக் கொள்கைக்கு உண்டு. இதற்குப் பொறுமையும், நம்பிக்கையுமே உரமூட்டுகின்றன. அகிம்சை, சத்தியாக்கிரகம், தீண்டாமைக் கொள்கைகள் மது ஒழிப்பு, கதர்தொடர்பான பணிகள் இவை காந்தியின் நடவடிக்கைகளிலும் சொற்பொழிவுகளிலும் அவருக்கேற்ற ஒரு வடிவம் பெற்றது.



சத்தியாக்கிரகம்

நேர்மையான வழியில் வாழ்க்கையை நடத்திச் செல்வதே சத்தியாக்கிரகமாகும் என காந்தி விளக்குகிறார். இந்தச் சத்தியம் என்பது ஆன்மாவிலிருந்து வெளிப்படுகின்றது. சத்தியத்தைக் கடைபிடிப்பது என்பதே சத்தியாகிரகம் என்பதன் சாதாரணப் பொருள்.

சர்வோதயம்

சர்வோதயம் என்பது கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகும் காந்தியடிகள் தம் வாழ்நாளில் இதனையும் கடைப்பிடித்தார். கிராமங்கள் இத்தேசத்தின் முதுகெலும்பாக உள்ளன. என்பதை மக்களுக்கு விளக்கினார். அனைத்து மக்களும் நன்மையடைய வேண்டும் என்பது முக்கிய குறிக்கோளாகக் காணப்பட்டது. இதனைக் காந்தியடிகளுடைய சமுதாய அரசியல், பொருளாதராக் கொள்கைகள், சர்வோதயம் என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றன. காந்தியடிகள் சர்வோதய சமுதாயம் அமைப்பதையே தமது இலட்சியமாகக் கொண்டு உழைத்தார். சர்வோதயம் என்றால் எல்லாருக்கும் நன்மை, எல்லா एक्कली 2 मां नपं कंपض (Srinivasa Iyengar> Jayaprakash at the Tolstoy Seminar in Venis > p.210) என்பர். காந்தியடிகள் தம் வாழ்நாளில் போராட்டக்

காலங்கள் தவிர மற்ற நேரத்தில் தமது ஆசிரமத்தில் இராட்டையில் நூல் நூற்றுத் தமது ஆடைகளைத் தாமே தயாரித்துக் கொண்டார். தம் சீடர்களையும் அவ்விதம் செய்யத் தூண்டினார்.

தேசமெல்லாம் இந்தச் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் மூழ்கி இருக்கிறது. கல்கத்தாவில் மகாத்மா காந்தி ராட்டையில் வேகமாக நூல் நூற்றுக் கொண்டிருந்தாரம். (கோ.பு.ம. ப.278, 279) என்றும் பத்திரிக்கை செய்தியினைக் கி. ராஜயநாரயணன் பதிவு செய்கிறார்.

சுதந்திரப் போராட்டம்

ஆங்கிலேயர்களின் அடக்கு முறைக்கு இந்திய மக்கள் பெரிதும் விரும்பிய சுதந்திரம் பெறவேண்டும் என்கிற எண்ணம் மக்கள் மனதில் அதிகமாகவே ஊன்றி இருந்தது. ஆங்கில அரசிற்கு எதிரான சுதந்திரப் போராட்டம் இந்தியாவின் பல பாகங்களில் நடந்தது. சுதந்திரப் போராட்டத்தின் தீவிரத்திற்குப் பல்வேறு காரணங்கள் கூறினாலும் ஆங்கிலக் கல்வியைக் குறிப்பிடலாம் இதன் வழி இந்திய மாணவர்கள் பல்வேறு தேசங்களின் வரலாறுகளைப் படித்துப் போராட்டங்களைத் தெரிந்து கொண்டனர். இதன் விளைவாக 1885-இல் இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கப்படுகின்றது. இதன் முன்னோடியாக 1857-இல் நடைபெற்ற சிப்பாய்க் கலகமும் ஓர் உத்வேத்தை அளித்தது. அவ்வகையில் ஆங்கிலேயரின் இந்திய வருகை முதல் இந்திய நாட்டின் சுதந்திரம் வரையிலான செய்திகளைக் கோபல்லபுரத்து மக்கள் நாவல் வழி அறியலாம்.

ஆங்கிலேயர் வருகை



ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வாணிகம் செய்ய வந்தனர். இந்தியாவிலுள்ள துணி மற்றும் வாசனைப் பொருட்கள், எண்ணெய் வித்துக்கள், முத்துக்கள் இவற்றை வாங்கிச் சென்றனர். இவர்களின் வாணிகம் பல்வேறு நிலைகளில் இருந்தபோதும் அதன் ஆரம்பம் எவ்விதமாக இருந்தது என்பதை அப்போதைய கிராமியப்பாடல் வழி அறியலாம்.

ஆட்டுத் தோலுக் கிடங்கொடுத்த தாலே வந்த மோசம் - அத னாலே வந்த மோசம் (6.4.0. ப. 181) எனப்பாடல் அடிகள் மூலம் ஆங்கிலேயர் முதலில் ஆட்டுத்தோல் வாங்க இந்தியா வந்தார்கள். நாட்டைப் பிடித்தனர் என்ற செய்தியைப் பதிவு செய்கிறார்.

கள்ளுக்கடை மறியல்

காந்தியடிகளின் போதனையில் ஒன்றாக மதுவிலக்கு இடம்பெறுகின்றது. காந்தியடிகளின் கருத்தை ஏற்று ஈ.வெ. ராமசாமி (பெரியார்) அவர்கள் மது ஒழிப்பை ஆதரித்தார். மது அருந்துவதால் சமுதாயத்தில் ஏற்படும் சீர்கேடுகளை நேரில் பார்த்த ஈ.வெ.ரா. இக்கொடிய பழக்கத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர எண்ணி மது விலக்குப் போராட்டத்தை நடத்தினார். 1921-இல் மக்கள் ஈரோட்டில் கள்ளுக்கடை மறியல் (அ. தேவனேசன் - தமிழக வரலாறு, ப.286) செய்தல். 1920-ஆம் ஆண்டு தன்னுடைய தோட்டத்தில் நன்கு பலன் கொடுத்திருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். 1929-ஆம் ஆண்டு நடைபெற்ற லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் மது விலக்கைக் காந்தியடிகள் தீர்மானமாகக் கொண்டு வந்தார். இச்செய்தி கிராமத்திலும் எதிரொலித்தது எனும் செய்தியை மகாத்மா காந்தி அவர்கள் கள்ளுக் கடை மறியலையும் தனது நிர்மாணத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டார் என்று சொல்லிக் கூட்டத்தில் பெண்கள் பகுதியைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டுக்கொண்டே தாய்மார்களே உங்கள் வீட்டுக்காரர்களை, சகோதர்களைக் குடிக்க விடாமல் எப்படியாவது தடுத்து நிறுத்துங்கள் என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டார். (கோ.பு.ம.ப.. 182)

ஒத்துழையாமை இயக்கம்

மாணவர்கள், வழக்கறிஞர்கள், தங்கள் பணிகளைச் செய்யாமல் இருந்த காலம் 1920-ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. சாத்வீக ஒத்துழையாமை இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கினார். கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று செய்திட மக்களைத் தயார் படுத்தினார். மக்கள் பதவிகளைத் துறக்க வேண்டும். வழக்கறிஞர் நீதி மன்றங்களைப் புறக்கணிக்க வேண்டும். மாணவர்கள் பள்ளிகளைத் தவிர்க்க வேண்டும் பட்டதாரிகள் தங்கள் பட்டங்களை நீக்கவேண்டும் என்று 1920-இல் கல்கத்தாவில் கூடிய மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது (ஏ. சுவாமிநாதன் - இந்தியா கி.பி. 1707 முதல் இன்று வரை - ப.226)

மூவர்ணக் கொடி

ஜனவரி 26, 1930 ஆம் ஆண்டு முதல் சுதந்திர தினத்தைக் கொண்டாடினர். அச்சமயம் மூவர்ணக்கொடியை ஏற்றினர். இதற்குமுன்னோட்டமாக 1926-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 31-ஆம் நாள் நள்ளிரவில் மூவர்ணக் கொடியை லாகூரில் பண்டித ஜவகர்லால் நேரு ஏற்றுகின்றார். அதன் தாக்கம் கிராமங்களிலும் எதிரொலித்திருப்பதைக் கோபல்லபுரத்து மக்கள் நாவலில் ஊரின் நடுவில் சாலை ஓரத்தில் இருந்த அரசமரத்தில் மூவர்ணக்கொடி இரவோடு இரவாகக் கட்டப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியின் வழி மக்களின் சுதந்திர வேட்கை வெளிப்படுத்தப் பட்டுள்ளது.



ஆலய நுழைவு போராட்டம் 1924-க்க பிறகு தேசமெங்கும் ஆலயத்திற்குள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்களும் நுழைய வேண்டும் என்ற சிந்தனை வலுப்பெற்றது. அரிஜனங்கள் ஆலயத்தில் பிரவேசிக்கத் தமிழகத்திலும் 1937-ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டது. காந்தியடிகள் இவ்விதமான திட்டத்தைச் செயல்படுத்த எண்ணியபோது உயர்குடி மக்களிடம் கடும் எதிர்ப்பு காணப்பட்டது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் வக்கீல் வைத்திய நாதய்யர் தனது தோளில் ஒரு ஹரிஜன் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டும், அவருடைய மற்றொரு கை ஒரு ஹரிஜனக் கிழவியைத் தாங்கிக் கொண்டிருப்பதாகவும், அவருக்குப் பின்னால் ஒரு ஹரிஜனங்களின் கூட்டம் செல்வதாகவும் அவர்கள் கைகளில் தேங்காய்ப்பழம் முதலிய மங்கலப் பொருள்கள் நிறைந்த தட்டுகள் இருந்ததாகவும் அவர்களைக் கோவிலுக்குள் நுழைய விடாமல் தடுக்க வைதீகர்களின் தலைமையில் கம்பும் கையுமாக ஆலயப் பணியாளர்களும் குண்டர்களும் இருந்தனர் என்றும். வைத்திய நாதய்யாரை ஆதரித்த வைத்த பெருமக்கள் இனத்துரோகி என்றும் நாத்திகன் என்றும் தூற்றினார்கள் எனும் செய்தியைப் பதிவு செய்கிறார்.

சுதந்திர இந்தியா உதயம்

பல ஆண்டுகளாக எதிர்பார்த்திருந்த சுதந்திரம் 1947 ஆகஸ்டு 15-இல் கிடைத்த இச்சுதந்திரம் எவ்விதமாகக் கொண்டாடப்பட்டது என்பதைக் கோபல்லபுரத்து மக்கள் நாவலில் கிராம மக்களின் கொண்டாட்டங்களில் சுதந்திரத் திருநாளும் முக்கியமான நாளாக மாறியது என்றும் மக்கள் கிராம தேவதைகளின் கோவிலின் மணிகளை ஒலித்தும் வேட்டுகளை வெடித்தும், மூவர்ணக் கொடியைக் கரகோஷத்தோடும், பெண்கள் குலவையிட்டும் ஏற்றினார்கள் என்ற செய்திகளும் பதிவாகியுள்ளன.

****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ராவின் பாத்திரப்படைப்பு

முனைவர் ச தனலெட்சுமி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் ச.தனலெட்சுமி
உதவிப் பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி
சிவகாசி
sfrdhanam@gmail.com

கி.ராவின் பாத்திரப்படைப்பு

நாவலின் வெற்றிக்கும் நிலைத்த தன்மைக்கும் தேவையான பல காரணிகள் உள்ளன. அக்காரணிகளுள் பாத்திப்படைப்பிற்குச் சிறப்பான இடம் உண்டு. பாத்திரப்படைப்பானது காப்பியம் தொடங்கி புதினம், சிறுகதை வரையிலான ஒவ்வொரு இலக்கிய வகைக்கும் உயிர்த்துடிப்பாக அமையும் தன்மையினை உடையது. காப்பியக் கட்டுக்கோப்பு, கதைப்பின்னல் என்ற சட்டங்களுக்கு உயிரும் உணர்வும் கொடுப்பன பாத்திரப்படைப்பின் ஆக்கங்களாகும். கி. ராஜநாராயணன் அவர்கள் எழுதிய கோபல்லகிராமம் என்னும் நாவலில் இடம்பெற்றுள்ள பாத்திரப்படைப்பினை பல்வேறு கோணங்களில் ஆய்வதாக இவ்வியல் அமைகிறது.



பாத்திரப்படைப்பு விளக்கம்

படைப்பின் சிறப்பினை உயர்த்துவதில் பாத்திரப்படைப்பின் பங்கு முதன்மையானது. தம் அன்றாட வாழ்க்கையில் படைப்பாளன் பல்வேறு விதமான பாத்திரங்களைச் சந்திக்கின்றான். அவற்றில் சில பாத்திரங்களும், அவற்றின் செயல்பாடுகளும் படைப்பாளன் மனதில் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. இந்தச் சூழ்நிலையில் அவன் இலக்கியத்தைப் படைக்கும் போது அவனையும் அறியாமல் பாதிப்பினை ஏற்படுத்திய பாத்திரங்கள் அவன் படைப்பில் இடம் பெறுகின்றன. இதனை கோபல்ல கிராமம் நாவலில் ஆசிரியர் படைக்கப்பட்டுள்ள பாத்திரங்கள் வாயிலாகக் காணலாம்.

ஆய்வாளர்கள் பாத்திரப்படைப்பு என்னும் சொல்லைத் தங்கள் வசதிக்கு ஏற்ப பயன்படுத்துகின்றனர் என்பதை நமது இலக்கியத் திறனாய்வு என்னும் நூலில் சு.பாலச்சந்திரன் அவர்கள் "ஆங்கிலத்தில் கேரக்டர்ஸ்" என்னும் தமிழில் 'பாத்திரங்கள்', 'கதைமாந்தர்கள்', 'கதாப்பாத்திரங்கள்' என்னும் தங்களுடைய தேவைகளுக்கு ஏற்ப பெயர் பெறுகின்று[1] என்று குறிப்பிட்டுள்ளார்.

பாத்திரப்படைப்பு பற்றி வாழ்வியற் களஞ்சியம் 'பாத்திரப்படைப்பு முக்கியமானது ஆனால் முதன்மையானது என்று கூற இயலாது. பாத்திரமே கதைப்பின்னலை உருவாக்குகிறது. கதைப்பின்னல் பாத்திரத்தின் விளைவாவும் அதனைச் சார்ந்ததாகவும் அமைகிது[2] என்று பொருள் விளக்கம் தருகிறது.

க்ரியாவின் தாற்காலத் தமிழ் அகராதி ‘குறிப்பிட்ட தன்மை செயல்பாடு போன்றவற்றைக் கொண்டு உருவாக்கப்படுபவர் அல்லது உருவாக்கப்படுவது கதாப்பாத்திரம்[3] என்று பொருள் விளக்கம் தருகிறது.

பாத்திரப்படைப்பு என்பது ‘வாழ்வில் தாம் கவனத்தறிந்த அல்லது சந்தித்த உண்மை தன்மையினை மனிதர்கள் முன் மாதிரிகளாகக் கொண்டு தம் மாந்தரை உருவாக்குவது உலகப் பொதுவானதோர் உத்தியாகும்[4] என்பர்.

நடப்பியலில் கண்ட மனிதர்களை பாதியாகக் கொண்டு பாத்திரப்படைப்பு அமைவதை ‘கதையினை மிக்க தரமுடையதாகவும், பயனுடையதாகவும் செய்வது பாத்திரப்படைப்பைப் பொருத்துள்ளது.[5] என்று பாத்திரப்படைப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி தா.ஏ.ஞானமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்

அவரை உண்மையான பாத்திரங்களைப் படைக்க விரும்பும் எழுத்தாளர்களைப் பற்றி குறிப்பிடும்போது எண்ணங்கள், நடத்தை, எதிர்வினைகள் (Reactions) இவற்றின் வாயிலரகவும் பாத்திரங்களை நன்கு படைத்துக்காட்டலாம்.[6] என்கிறார்.



நாவல் மனித வாழ்வில் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுவது திரைப்படம் போன்றது. சிறுகதை மனித வாழ்வில் ஒரு முக்கிய நிகழ்ச்சியை மட்டும் எடுத்துக்கூறுவது புகைப்படம் போன்றது. இரண்டிற்கும் பாத்திரப்படைப்பு முக்கியமானது என்பதை “நாவலில் பாத்திரங்கள் வளர்க்கப்படுகின்றன ஆனால் சிறுகதையில் பாத்திரங்கள் வார்க்கப்படுகின்றன.[7] என்று நா. பிச்சமுத்து விளக்கம் தருகிறார். பாத்திரப்படைப்பின் தன்மையினையும் பாத்திரப்படைப்பின் முக்கியத்துவத்தையும் குறித்து பல்வேறு ஆசிரியர்கள் தந்துள்ள விளக்கங்களின் அடிப்படையில் இவ்வாய்வானது மேற்க்கொள்ளப்படுகிறது.

கருவும் பாத்திரப்படைப்பும்

நாவல் இலக்கியத்தில் ஆன்மாவாக இயங்கும் பகுதி கரு என்பதால் கரு தான் நாவலின் முதல் பகுதி என்று சிலர் கூறுவர். இதில் முதன்மையானது, முதன்மையற்றது என்கிற சிந்தனைக்கே இடம் இல்லை என்பது தான் உண்மை.

படைப்பிலக்கிய ஆசிரியர் எடுத்துக்கொண்ட கருவை விளக்குவதற்கு கதைமாந்தர்களோடு தொடர்புடைய நிகழ்ச்சிகளையே சார்ந்திருக்கிறார். எனவே கதைமாந்தர்கள் கருவிற்கு இணையான இடத்தை பெறுகின்றனர் என்று கூறுவர்.


”நாவலாசிரியா் நாவல் படைக்கும் தன் பணியை அடிக்கருத்திலிருந்து தொடங்கினாலும் உயிள்ள கதைமாந்தா்களைப் படிப்போா் மனம் தொடும்வண்ணம் உருவாக்கத் தவறிவிடுவாரேயானால் அவா்தம் நாவலின் அடிக்கருத்து எவ்வளவு சிறந்த ஒன்றாயினும் அந்த நாவல் தோல்வியடைந்துவிடும்.”

இக்கருத்திலிருந்து அடிக்கருத்து வெற்றியடைவதற்கு பாத்திரப்படைப்பு இன்றியமையாதது என்ற கருத்தினைப் பெறமுடிகிறது.

கதைப்பின்னலும் கதைமாந்தா்களும்

கதைப்பின்னலில் நிகழ்ச்சிகள்/ செயல்கள் காரணிகளாக உள்ளன. இவைகள் கதைமாந்தா்களோடு தொடா்பு அடைகிற போதுதான் கதையில் இயக்கநிலை ஏற்படுகிறது. நிகழ்ச்சிகள் சாா்ந்த இயக்கங்களும் கதைமாா்ந்தா்களும் ஒன்றிலிருந்து ஒன்றினைப் பிரிக்க முடியாதவை.

கதைப்பின்னலைவிட இன்றியமையாத ஒன்று புனைக்கதையில் உண்டு. அதுதான் கதைப்பின்னலுக்குப் பொருளையும் சிறப்பையும், உயிரோட்டத்தையும் கொடுக்கிறது. அந்த ஒன்றுதான் கதைமாந்தா் என்று மாறன் எல்வுடு (Moren Elwood) குறிப்பிடுகிறாா். இக்கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதில்லை. கருவை விளக்க கதைப்பின்னல் அவசியமாகிறது. கதைப்பின்னலுக்கு நிகழ்ச்சிகள்/ செயல்கள் தேவை என்பது பெறப்படுகிறது. அந்த நிகழ்ச்சிகளை நடத்திச்செல்ல மாந்தா்கள் தேவைப்படுகின்றனா்.



பாத்திப்படைப்பில் படைப்பாளா் தாக்கம்

படைப்பிலக்கிய ஆசிரியா்கள் வாழ்வின் பல்வேறு சூழல்களிலிருந்து கதைமாந்தா்களுக்குரிய செய்திகளைச் சேகரித்தால்கூட அவா்களின் தனித்தன்மையும் கதைமாந்தா் படைப்பில் இடம் பெறத்தான் செய்கிறது. ஆசிரியரின் சுயசரிதையின் வெளிப்பாடு அதில் இடம்பெறுகின்றது.

நாவல் கதைமாந்தா் படைப்பில் சுயசரிதைப் போக்கு இடம் பெறுவது தவிா்க்க முடியாதது ஆகும். அகிலன் எழுதிய ‘பாவை விளக்கை இவ்வகை நாவலுக்கு எடுத்துக்காட்டாக கூறுலாம். இந்நாவலில் சுயசரிதையின் வெளிப்பாடு கதைபாந்தா் படைப்பின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

கதைமாந்தா் படைப்பு

நாவலின் சிறப்பு ஆசிரியன் உருவாக்கும் பாத்திரத்தின் பண்பு, உயிரோட்டம், எண்ணிக்கை இவற்றைப் பொறுத்தும் சிறக்கும். மேலும் கதைமாந்தா் என்பவா் சமுதாயத்தில் காணப்பெறும் பல்வேறுப்பட்ட பண்புகளின் சின்னமாவா். அத்தகைய பாத்திரங்கள் தலைமை மாந்தா்,

துணைமாந்தர், சார்புநிலை மாந்தர், எதிர்நிலை மாந்தர் எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

தலைமை மாந்தர்

தலைமை மாந்தர் என்பவர் குறிப்பிட்ட புதினத்தில் அதிகமாகச் செயல்படுகிறவராகவும், அச்செயல்களால் தொடர்பினை ஏற்படுத்தக்கூயவராகவும் இருப்பார். இந்நாவில் மங்கத்தாயாரு அம்மாள், சென்னா தேவி, கோவிந்தப்ப நாயக்கா ஆகியோர் தலைமைப் பாத்திரங்கள் வரிசையில் இடம் பெறுகின்றனர்.

மங்கத்தாயாரு அம்மாள்

கோட்டையார் வீட்டில் முத்தவரும் வயதான பெரியம்மாள் ஆவார். இவரின் வயது நூற்றிமுப்பத்தி ஏழு வயதுடையவர். அதிகம் வயதுடைய பெரியம்மாள் எலும்பும் தோலுமாக நீண்ட மூக்குடன் இருக்கும் அந்த அம்மாவின் உருவத்தைப் போது ரோமங்கள் எல்லாம் இழந்து இருக்கக்கூடிய வயதான கழுகின் ஞாபகம் தான் வருகிறது.

மங்கத்தாயாரு அம்மாள் அவர்களின் அருகில் யார் சென்றாலும் அவர்களை தன அருகில் அமரவைத்துக் கொண்டு அவர்களிடம் நலம் விசாரிப்பதும் அவகளுடைய உடம்பினை தடவிக்கக் கொடுப்பதுவுமாக இருப்பார். அவ்வாறு தடவிக்கொடுக்கும் போது அந்த தடவலுக்கு எத்தனையோ அர்த்தங்கள் உண்டு.



மங்கத்தாயாரு அம்மாள் கோவிந்தப்ப நாயக்கருக்கு சிறுவயதில் நடந்தவ ற்றையும், யௌவனத்தில் நடந்தவற்றையும், முதுமையில் நடந்த அதிசய நிகழ்ச்சிகள் ஆனந்த சம்பவங்கள் போன்ற பல நிகழ்வுகளை அவருக்கும் கிராமத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும் மகிழ்ச்சியாகவும் உணர்ச்சிப்புர்வமாவும் தன் கதைகளை கூறி இருக்கிறாள். அங்குள்ளவர்களுக்கு புட்டியம்மாள் ஓர் அனுபவத்தில் நிறைந்தவராகவும் அனுபவக் களஞ்சியமகவும் இருப்பதையும் இக்கதையில் காணமுடிகிறது.

சென்னா தேவி

மங்கத்தாயாரு அம்மாள் அவர்களின் சகோதரி சென்னா தேவி ஆவார். இவர் சிறுவயதிலிருந்தே மிக அழகுடையவலாகவும் அனைவரும் கண்டு வியக்கும் அளவிற்கு எழுச்சிமிக்கவலாவும் காணப்பட்டாள். இவள் இருக்கும் இடத்தில் இவளைச் சுற்றி எப்போதும் ஒரு பிரகாசம் இருந்துக்கொண்டே தான் இருக்கும்.

அவள் அழகில் தேவதையின் லட்சணம் கொண்டவளாகக் காணப்படுவாள். எவ்வாறு பசுமாடுகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் அந்த அந்த பிரதேசத்துக்குரிய அங்கலட்சண

ஜாடைகளோடும் சுத்தத்தோடும் விளங்குவதில்லையா அதைபோல் ஆந்திர தேசத்தின் அழகு தேவதையாகக் காணப்பட்டாள்.

அவளுடைய அழகினை பக்கத்து கிராமங்களுக்கு மட்டுமல்லாது வெகுதூரம் வரை பிரபலம் அடைந்தது. அவளுடைய குரலானது இனிமையாகவும் அவள் பாட ஆரம்பித்தால் இந்தப் பிரபஞ்சமே ஒளியடங்கி மௌனமாகிவிடும். அவள் வாய்விட்டுச் சிரித்தால் மறுபடியும் சிரிக்கமாட்டாளா என்று இருக்கும்.

இவற்றை யெல்லாம் அறிந்த துலுக்க ராஜா அவளை திருமணம் செய்துக்கொள்ள அவளை அழைத்து வரும்படி பட்டாளங்களை அனுப்பிவைத்தார். ராஜாவின் கட்டளையினை மிராது அவர்களளுடன் அவர்கள் சென்றன இருப்பினும் அவர்களுக்கு விருப்பம் இல்லாததால் யாருக்கும் தெரியாமல் இரவோடு இரவாக தப்பித்து சென்றுவிட்டனர்.

கோவிந்தப்ப நாயக்கர்

கோவிந்தப்ப நாயக்கர் வீட்டில் அனைவருக்கும் முத்தவர். இவர் கோபல்ல கிராமத்தில் தலைமைப் பொறுப்பினை வகிக்கக்கூடியவர். பொதுநிர்வாகத்தையும் எடுத்து நடத்தக்கூடியவர். கிராமத்தில் நடத்தக்கூடிய நல்லது கெட்டது அனைத்திலும் தன்னை ஈடுப்படுத்திக் கொள்ளக்கூடியவர்.



கிராமத்தில் எந்தொரு விஷயமாக இருந்தாலும் இவரின் ஆலோசனை இல்லாது எதையும் செய்யமாட்டார்கள். இவர் கிராமத்தில் மணியமாக இருந்தவர். கோவிந்தப்ப நாயக்கர் கிராமத்தில் நிகழக்கூடிய தீவட்டிக் கொள்ளைக்காரர்களின் தொல்லையிலிருந்து காப்பாற்ற இவர் முன் நின்று வழிநடத்தி பாதுகாப்பினை வழங்கக்கூடியவர்.

கோபல்ல கிராமத்தின் மக்கள் விரதம்விடும் போது மட்டும் ஆல இலைகளைக் கொண்டு இலைகளை செய்து சாப்பிடுவதில் வழக்கம். அந்த ஆல இலைகளை தைப்பதில் விருப்பமும் ஆர்வம் கொண்டவர் கோவிந்தப்ப நாயக்கர். இந்த இலைகளை தைப்பது பொழுபோக்கு. இவர் இலைகளை பல விதமாக தட்டுகளைத் தைப்பதில் கைத்தேர்ந்நதவர். இவ்வாறு இலைகளை செய்து கிராமத்தில் இருப்பவர்களுக்கு செய்து கொடுப்பார்.

எதிர்நிலை பாத்திரம்


எதிர்நிலை பாத்திரம் என்பது நாவலில் எதிர்மறையாக செயல்படக்கூடியவர் ஆனால் முக்கிய இடத்தினை இடம்பெறுகின்றவர். அவ்வாறு இதில் கழுவன் என்பவன் இந்தநாவலில் எதிர்நிலை பாத்திரமாகக் காணப்படுகிறான்.

கழுவன்

கழுவன் என்பவன் கொலை கொள்ளளைத் தொழிலினை செய்யக்கூடியவன். இவன் தீரவாசத்தின் என்னும் கிராமத்தினை சேர்ந்தவன். இவன் மங்கம்மாள் என்னும் பெண்ணை கொலை செய்ததால் இதை தெரிந்துக்கொண்ட கிராமத்திலுள்ளவர்கள் அவனை பிடித்து வந்து விசாரணை நடத்தி அவனுக்கு தண்டனை வழங்கவேண்டும் என்று முடிவு எடுத்தனர்.

கழுவனுக்கு ஊரை சேர்ந்து கழுவில் ஏற்ற வேண்டும் என்று முடிவுசெய்தனர். கழுயேற்றுவதிலும் பல முறைகள் உண்டு. அவை உடனே கொல்கின்ற முறை, பலநாள் கழித்து வேதனையில் துடித்துசாகும் முறை என்று இரண்டு விதமாகப் பிரிக்கின்றன. கிராமத்தில் இருக்கும் உப்பு முலையில் ஒரு பெரிய வேப்பமரம் இருக்கிறது. அதன் அருகியில் திரடு ஒன்று உள்ளது. அந்த திரடின் அருகில் கழுமரத்தினை நட்டு அதில் அவனுக்கு தண்டனையானது நிறைவேற்றப்பட்டது. இப்போது அந்த வேப்பமர திரடுவை கழுவன் திட்டு அழைக்கப்படுகின்றனர். அவனை கடவுளாகவும் நினைத்து வழிப்பட்டு வருகின்றனர்.

- பாத்திரங்களை கதையில் அமைத்துள்ள தன்மையினை காணமுடிகிறது.
- பாத்திரங்கள் ஒவ்வொருவரையும் எவ்வாறு கூறியுள்ளார் என்பதை காணமுடிகிறது.
- கதைமாந்தர்களின் பண்பினை அறிய முடிகிறது.
- கதைமாந்தர்களின் தனித்தன்மையினை சுட்டிக்காட்டப்படுகிறது.



சான்றெண் விளக்கம்

1. இரா. காஞ்சனா, இக்கியமும் உளவியலும், ப.25
2. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி – 5, ப.431
3. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி – 1, ப.219
4. சா. கிருஷ்ணமூர்த்தி, தமிழரின் மரபுச் செல்வங்கள் பாகம் - 2, ப.234
5. தி.கு. இரவிச்சந்திரன், சிக்மண்ட் பிராய்டு உளப்பகுப்பாய்வு, ப.319
6. பிரிட்டானிகா கலை களஞசியம், ப.229
7. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி – 5, ப.431

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ராஜநாராயணன் : வாழ்வும் பணியும்

முனைவர் பூ சு கணேஷ் மூர்த்தி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

.

முனைவர் பூ.சு.கணேஷ் மூர்த்தி
உதவிப் பேராசிரியர்,
தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடப் பல்கலைக்கழகம், சீனிவாச வனம்,
குப்பம், ஆந்திர மாநிலம்
Email: pun.gmoorthy@gmail.com
Cell No. 8985319831
Orcid.org/0000-0003-3734-2402

கி.ராஜநாராயணன் : வாழ்வும் பணியும்

கி.ராஜநாராயணன் வாழ்க்கை குறிப்பு

கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று அழைக்கப்படும் கி. ராஜநாராயணன் 1922 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கோவில்பட்டியின் அருகில் உள்ள இடைசெவல் என்ற கிராமத்தில் பிறந்தார். கி.ரா என்கிற கி.ராஜநாராயணனின் முழுப்பெயர் ராயங்குல ஸ்ரீ கிருஷ்ண ராஜ நாராயணப் பெருமாள் ராமானுஜ நாயக்கர். இவரது பெற்றோர்களான ஸ்ரீகிருஷ்ண ராமானுஜம், லட்சுமி அம்மாள் தம்பதியினருக்கு ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தார்.சிறுவயதிலேயே தந்தையிடம் கேட்ட கதைகளும் கரிசல் பூமியும் அதன் மக்களும் இவரை எழுதத் தூண்டின. இவருடைய எழுத்து நடையானது கிராமிய மணத்துடன் சொலவடைகளோடு அமைந்திருப்பதை இவரது படைப்புக்கள் வழியாக அறியமுடிகிறது.



படைப்பாளராக உருவெடுத்தல்

கி.ராஜநாராயணன் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர் இவர் ஒரு தேர்ந்த கதை சொல்லி. 'நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன். பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல் மழையைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன்' என்று தன்னைப் பற்றிக் கூறிக்கொள்ளும் கி.ரா., பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராக பணியாற்றிய பெருமைக்குரியவர். நல்ல இசை ஞானம் கொண்டவர். கவியரசு நா.காமராசன் அவர்கள் நடத்திய இலக்கிய பத்திரிகையான" சோதனை"யின் ஆலோசகராக இருந்துள்ளார்.

கி.ரா.வின் தனித்தன்மைகள்

இவர் 'கதைச்சொல்லி' என்ற இதழை நடத்தி வந்தார். பிரபல இதழ்களில் இவரது கதைகள் தொடர்ந்து வெளிவந்தன. 2007 ஆம் ஆண்டில் இவை அனைத்தும் தொகுக்கபட்டு 944 பக்கங்கள் கொண்ட 'நாட்டுப்புறக் கதைக்களஞ்சியம்' என்ற படைப்பாக தமிழுலகிற்கு வழங்கப்பட்டதை அறியலாம். 2009 ஆம் ஆண்டு மட்டும் இவரது முப்பது புத்தகங்கள் வெளிவந்தன. இவரது முக்கியமான சில கதைகள் தேர்வுசெய்யப்பட்டு ஆங்கில மொழியில் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளதை அறியலாம்.

இவருக்கு "ஒரே மூச்சில் ஒருகதையை எழுதி முடிக்கும் வழக்கம் இவரிடம் இருந்ததில்லை. எழுதியதைப் படித்து மீண்டும் மீண்டும் அடித்துத் திருத்தி எழுதும் பழக்கம் உள்ளவர். இவர் தனது

நண்பர்களுக்கு நீண்ட கடிதங்கள் எழுதுவார். அவர்கள் எழுதும் பதில் கடிதங்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பார்.

திரைப்படமாக்கபட்ட கி.ராவின் படைப்புகள்

இவர் எழுதிய 'கிடை' நாவலினை மையமாக வைத்து 'ஒருத்தி' என்ற திரைபடத்தை அம்சன்குமார் என்பவர் இயக்கினார். மற்றொரு படைப்பான கரண்டு என்ற கதையினை மையமாக வைத்து கே.அரிகரன் 'கரண்ட்' என்ற இந்தி திரைப்படத்தை இயக்கியதை அறியலாம்.

கி.ரா.படைப்புகள்

நாடோடி இலக்கியம், சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள் என்று முப்பதிற்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். 'கரிசல் வட்டார அகராதி' என்று தமிழுக்கு அகராதி உருவாக்கிய முன்னோடியாக திகழ்ந்தவர் இவர். இவருடைய முதல் புதினமான 'கோபல்ல கிராமம்' பெதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றதை அறியலாம்.

1958 இல் சரஸ்வதி இதழில் இவரது முதல் கதை வெளியானது. இவரின் கதையுலகம் கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், வாழ்க்கை முறையையும் காட்டுவதை அறியலாம். வட்டார வாய்மொழிமரபு, செவ்விலக்கியக் கூறுகள்,நேரடியான இதழியல் நடை ஆகிய மூன்று கூறுகளையும் கலந்து தனக்கென தனிநடையை உருவாக்கிக்கொண்டவர்.

கி.ராஜநாராயணன், ஜானகிராமனின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஜானகிராமனைப் போலவே அபூர்வமான அழகுணர்ச்சியும் ரசனையில் திளைக்கும் மனோபாவமும் கொண்டவர். மேலும் இவர் வித்தியாசமான மனிதர்களை தன் கதைகளில் கதாபாத்திரங்களாக திறம்பட அமைக்கும் உத்தியைக் கையாள்வதை இவரது படைப்புகள் வழி காணலாம். வட்டார இலக்கியத்தின் 'முன்னத்தி ஏர்', 'தமிழ் எழுத்துலகின் பீஷ்மர்', தலை சிறந்த கதைச்சொல்லி என்றெல்லாம் போற்றப்பட்டுள்ளதை அறியலாம்.



கி.ரா.வின் குறிப்பிடத்தக்கப் படைப்புகள்

இவரது படைப்பின் ஆகச்சிறப்பு வாய் மொழி கதைச் சொல்லும் மரபாகும். வானம் பார்த்த கரிசல் பூமியின் அசலான மாந்தர்கள் லட்சுமி, லட்சுமியின் தம்பி சீனிவாசன் ஆகியோரின் இளமைப் பருவத்தின் சித்திரங்களின் தொகுப்பு □கதவு" சிறுகதை. ஒரு புறம் குடும்பத்தின் வறுமை, மறுபுறம் குழந்தைகளின் கட்டுப்பாடற்ற கொண்டாட்ட நிகழ்வு என மானுட ஆழ் மனத்தை சித்தரித்திருப்பார் கி.ரா.

'கோபல்ல கிராமம்' என்ற புதினத்தில் பாளையப்பட்டுகளின் ஆட்சி முடிந்து, பிரிட்டிஷ் கம்பெனியாரின் ஆட்சி முழுமையாக அமலுக்குவராத காலகட்டத்தில் நாவலின் நிகழ்வுகள் புனையப்பட்டுள்ளன. 'துலுக்க ராஜாவுக்கு அஞ்சித் தெற்கு நோக்கி ஓடி வந்த தெலுங்குக் குடும்பம் கோபல்ல கிராமம் என்னும் புதிய கிராமத்தை உருவாக்கி, பல குடும்பங்களாகப் பெருகியது. அந்த மக்கள் தங்கள் வாழ்வில் சந்தித்த பிரச்சினைகளைச் சித்திரிக்கும் இந்நாவலில் கரிசல் காட்டுக் கிராம மக்களின் பேச்சு வழக்கையும் சொலவடைகளையும் சரளமாகக் கையாண்டு வாய்மொழிக் கதை மரபில், புதிய வடிவத்தில் இந்த நாவலை உருவாக்கியுள்ளார் கி. ராஜ நாராயணன்

கொரானா காலத்தில் படைத்த நூல்

கொரானா காலகட்டத்தில் மக்கள் பலர் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்து தனிமையில் வாடிக்கொண்டிருந்த நிலையில்,

> **'எழுதப்படிக்க தெரிந்தவருகெல்லாம் தனிமையே தெரியாது, இசை தெரிஞ்சவருக்கு ஏதய்யா தனிமை'**

என கேட்டார். இக்காலகட்டத்தில், தான் படைத்த 'ஆண்ட ரெண்டப்பட்சி' என்னும் நூலை கையெழுத்துப் பிரதியாகவே வெளிட்டதை அறியலாம்.

கி.ரா.பெற்ற விருதுகள்

சாகித்ய அகாடமி விருது, இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசின் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியச் சாதனை விருது உள்ளிட்ட தமிழின் முக்கிய இலக்கிய விருதுகள் பெற்றார். 2016-17 ஆம் ஆண்டுக்கான மனோன்மணியம் சுந்தரனார் விருதும் கி.ராவிற்கு வழங்கப்பட்டது. 98 வயதான கி.ரா. தனது இறுதி காலத்தில் புதுச்சேரியில் வாழ்ந்தார். 2021 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் நாள் தனது 98 ஆம் அகவையில் புதுச்சேரியில் இயற்கை எய்தினார். இவரது உடல் இவரது சொந்த ஊரான இடைசெவலில் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.



முடிவுரை

கரிசல் இலக்கியத்தின் தந்தையான கி.ராஜநாராயணன் அவர்கள் தம் படைப்புகள் வழி தமிழ் கூறும் நல்லுலகிற்கு பல்வேறு ஆக்கபூர்வமான படைப்புக்களை தம் கரிசல் மண் மணத்துடன் வழங்கிய பெருமைக்குரியவர். சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை தம் படைப்புக்கள் வழி மக்கள் மனதில் பதிய வைத்தவர். தமிழுக்கு சேவைபுரிந்து தம் 98-ஆம் வயதில் பரமபதம் அடைந்தார். அன்னார் மறைந்தாலும் அவரது படைப்புகள் என்றென்றும் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை.

****



ISBN 978-81-968802-1-7




கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ராஜநாராயணின் படைப்புகளில் கரிசல் பண்பாடு

ப செண்பகவள்ளி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

ப.செண்பகவள்ளி,
உதவிப் பேராசிரியர்,
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல்
மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
எளையாம்பாளையம்
திருச்செங்கோடு – 637205
நாமக்கல் (மாவட்டம்) .
akshayavalli21@gmail.com
mailto:akshayavalli21@gmail.com

கி.ராஜநாராயணின் படைப்புகளில் கரிசல் பண்பாடு

முன்னுரை

கரிசல் தமிழின் முன்னோடியான இவருக்கு ஓர் இலக்கிய பரம்பரையை உருவாக்கிய பெருமை உண்டு.இவரது அக்கறையும் ஈடுபாடும் அன்பும் அனுதாபமும் எப்பொழுதும் சுரண்டப்படுகின்ற ஏழைக் கூலி விவசாயிகள் பக்கமே இருந்து வருகின்றது. கிராம மக்களின் வாழ்க்கைக்கூறுகளை மனிதாபிமானத்தோடு ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் ஒரு விசாலமான பார்வை அவருக்கு இருக்கிறது. 34 வாரங்களாக கோபல்லபுரத்து மக்கள் என்ற நாவல் ஆனந்த விகடனில் தொடராக வெளி வந்தது.இந்நாவல் விடுதலைப் போராட்ட வீர வரலாறு என்றும் சாதாரண மக்களை நாயகர்களாக்கி படைக்கப்பட்ட நல்ல நாவல் என்றும் ஏராளமான வாசகர்களால் பாராட்டப் பெற்றது.இந்த நாவலுக்கு “சாகித்ய அகாடமி“ விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



வாழ்வியல் முறைகள்

விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் மக்களின் வாழ்வியல் முறை எப்படி இருந்தது என்பதைப் பற்றி கோபல்லபுரத்துமக்கள் நாவல் மூலம் அறிந்து கொள்ளலாம்.இல்லத்தில் அவர்கள் கடைப்பிடித்த பழக்க வழக்கங்களையும் சமுதாயத்தில் நிலவிய கல்வி முறைகளையும் ஒரு சில உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தலாம்.

பழக்கவழக்கங்கள்;

அக்கால சமுதாயத்தில் காணப்பட்ட பழக்கவழக்கங்கள் நாவலில் இடம் பெற்றுள்ளன.அவை பின்வருமாறு

நெருப்பு தானம்

தானம் பல வகைப்படும்.அதில் நெருப்பு தானமும் ஒன்று.நெருப்பைப் பாதுகாத்து வைத்து இல்லாதவர்கள் வந்து கேட்கும் போது சிறிது கொடுப்பது ரேணம்மாவின் வேலையாக இருந்தது அக்கால மக்கள் தானங்களில் சிறந்தது நெருப்புதானம் என்று கருதினர்.

வைகறை துயிலெழல்;

இந்நாவலில் மக்கள் வைகறையில் கோழி கூவியவுடன் துயிலெழுழுவதையே பெருமையாகக் கருதினர்.பொழுது விடிந்து எழுந்தால் அது அம்மாக்களுக்கு அவமானமாக இருக்கிறது என்பதை இதன் மூலம் புலப்படுகிறது.

செவ்வாய்க்கிழமை விரதம்

இந்நாவலில் இடம்பெறும் பெண்களால் ஆடி,தை,மாசி மாதங்களில் இரவு விரதம் கடைபிடிக்கப்படுவதால் ஆண்கள் எல்லாம் மடத்தில் சென்று படுத்து விடுவார்கள்.இந்த விரதத்தை பற்றி ஆண்கள் கூட்டத்தில் பேச்சுக்கள் யூகமாகவும் கற்பனையாகவும் தான் இருந்தது. பெண்கள் செவ்வாய்க்கிழமைகளில் செய்யும் கொழுக்கட்டைகளை ஆண்களுக்கு கொடுத்தால் கண்கள் தெரியாமல் போய்விடும் என்ற கருதினர்.இந்த விரதம் இன்றும் கிராமப்புறங்களில் நடைமுறையில் உள்ளது.



கல்வியும் பயிற்சியும்

ஏட்டுப் பள்ளிக்கூடத்தில் பூ மணல் அடித்து அதில் விரலால் கோடு கிழித்து எழுதிப் படித்தனர்.பிறகுதான் எழுத்தாணி பிடித்து ஓலை ஏட்டில் எழுத பயிற்சி அளிக்கப்பட்டது.ஊருக்கு ஏட்டுப்பள்ளி வந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த மாணவன் அதிகாலையில் எழுந்து முதலில் பள்ளிக்கு வருகிறானோ அவனுக்கு “ஏரான்“ என்று பெயரிடப்பட்டுள்ளது.ஏட்டு பள்ளிக்கு ஆசிரியராக சாமிக்கண்ணாசாரி இருக்கிறார்.அவர் உருவாக்கிய சரஸ்வதி தேவியை அலங்கரிக்கப்பட்ட தேரில் ஊர்வலமாகக் கொண்டு வந்து பாட்டுக் பாடிக்கொண்டே சுற்றிலும் கோலாட்டம் நடைபெறும்.வன்னி மரம் நடப்பட்டிருக்கும் இடத்திற்கு தேர் வந்து சேரும்.ஆசிரியர் வன்னி மரத்தின் மீது வில்லை வளைத்து அம்பு எய்வார். அதை தொடர்ந்து வன்னி மரம் பிடுங்கப்படும்.இந்த மா நோன்பு ஊர்வலம் வருடாவருடம் நடைபெறுகிறது.

சிலம்புப்பயிற்சி (கம்பு சுற்றி ஆடும் ஆட்டம்)

ஏட்டு கல்வியை பகலிலும் சிலம்பப் பயிற்சியை இரவிலும் சாமிக்கண்ணு மாணவர்களுக்கு பயிற்றுவிக்கிறார்.ஆசிரியர் சிலம்பபுப்பயிற்சி கொடுப்பதற்கு முன் தினமும் அவர் தனியாகத் தானே பயிற்சி எடுத்துக் கொள்வார் என்று குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து நாள்தோறும் பயிற்சி செய்துவிட்டு பிறகு மற்றவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டும் என்பது புலனாகின்றது.ஒரு கலையை மற்றவர்களுக்கு பயிற்றுவிக்கும் குரு தான் முதலில் பயிற்சி செய்ய வேண்டிய கடமையுணர்வு உடையவராகின்றார்.

கவிராயர்கள்

பொருராற்றுப்படையில் ஏர்க்களம் பாடுவோர்,போர்க்களம் பாடுவோர் என்ற இரு வகையான கவிராயர்கள் உள்ளனர்.அந்த வகையில் ஏர்க்களம் பாடும் கவிராயர்கள் இந்த

நாவலில்“கம்பர்“என்று அழைக்கப்படுகின்றனர்.இந்த கவிராயர்கள் மிகுந்த மரியாதையோடு நடத்தப்பட்டனர்.அவர்கள் தங்களுக்கு தேவையான கம்பினை(ஒருவகை தானியம்) தாங்களே எடுத்துக் கொள்ள அனுமதிக்கப் பெற்றிருந்தனர். இந்த நிகழ்ச்சி கவிராயரின் செல்வாக்கைக் காட்டுகிறது.இவ்வாறு கோபல்ல புரத்து மக்களின் வாழ்க்கை முறை இருந்தது.

வாழ்வியல் மாற்றம்

மேற்குறிப்பிட்ட வாழ்வியல் முறைகளை கடைபிடித்த மக்களின் வாழ்க்கையில் சில மாற்றங்களும் ஏற்பட்டன.நடைமுறைப் பழக்க வழக்கங்களிலும் சிலவற்றை நாகரிகம் என்று கருதினர்.படித்தவர்கள் சட்டைப் போட்டுக் கொள்வதோடு அதில் ஒரு பவுண்டன் பேனாவையும் சொருகிக் கொண்டனர்.

புதுமைக்கு மறுப்பு

எந்தப் புதுசு வந்தாலும் முதலில் அதை சந்தேகிக்கிறதும் அதையே குறை பேசி பரப்புகிறதும் பிறகு தயக்கத்தோடு வழியில்லாமல் ஏற்றுக் கொள்கிறதுமே,ஏற்றுக்கொண்ட பிறகு புதிய வியாதிகள் அதனால் தான் பரவுவதாகச் சொல்வதும் வழக்கம்.கோபல்லபுரத்து பெரிய குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பையன்கள் நான் முதன் முதலில் ஊரை விட்டு வெளியூர் போய் படிக்க ஆரம்பித்தனர்.ஆங்கிலக் கல்வி பயின்ற பிறகு தலையிலிருந்த குடுமியைக் “கிராப்“பாக வெட்டி கொண்டனர்.அதைக் கண்ட ஊரார்“என்ன இது அசிங்கம்“என்று புலம்பினர்.இவ்வாறு புதிய நிகழ்வுகளுக்கு ஊரில் ஏற்பட்ட எதிர்ப்புகளைப் பல இடங்களில் சுவையாகக் கூறியுள்ளார் ஆசிரியர்.



புதிய பொருட்களை கண்டு வியப்பு

மணி பார்க்கும் கடிகாரம்,மதுரையில் வாங்கி வந்து நுன்ன கொண்ட நாயக்கர் வீட்டில் மாட்டியிருந்தது. ஊரிலுள்ளவர்கள் அந்தக் கடிகாரத்தைக் கண்டு மகிழ்ந்ததோடு மணி பார்க்கவும் கற்றுக் கொண்டனர். ”கடையில் இருக்கும் தீப்பெட்டியை வாங்கி வந்து ஒரு குச்சியை எடுத்து உரசினா தீப்பிடிக்கி” என்று தீப்பெட்டியை வேடிக்கைப் பொருளாகக் கண்டு வியந்தனர். தீப்பெட்டியைப் போலவே, ஜப்பானிலிருந்து வந்த மௌத் ஆர்கன், ஜெர்மன் பூட்டு, பேனாக்கத்தி, மண்ணெண்ணெய் ஊற்றப்பட்ட அரிக்கன் விளக்கு,டார்ச் லைட் இது போன்ற பொருள்கள் மக்களின் கவனத்தைக் கவர்ந்தது.இவ்வாறு பண்பாட்டு மாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள்,புதிய பொருட்களைக் கண்டு வியப்புற்று வரவேற்புத் தந்தனர்.கோபல்லபுரத்தின் தோற்றத்தைப் போலவே அந்த மக்களின் மன இயல்பும் மெதுவாக மாற்றமடைந்து கொண்டே வந்தது.பழக்கவழக்கங்களை விட ஆடை,அணிகள் போன்ற உடம்பு சம்பந்தப்பட்ட காரியங்களில் மட்டும் வெகு துரிதமான மாற்றம் காண முடிந்தது.

சமுதாயப் பிரச்சனை

கி.ரா.விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் இருந்த இந்தியாவின் நிலையையும் விடுதலைப் போராட்டத்தின் போது இந்திய நாட்டின் நிலையையும் அப்பொழுது நிலவிய சமுதாயப் பிரச்சினைகளையும் பலர் மூலம் இந்நாவலில் வெளிப்படுத்தியுள்ளார்.

விடுதலைப் போராட்டம்;

கமுகுமலை ஐயர்,நாடு அந்நியனிடம் அடிமைப்பட்டு கிடக்கிறது.மக்களின் பசியும் ஏழ்மையும் ஒழிய வேண்டும் என்றால் மிக விரைவில் நாடு சுதந்திரமடைந்து ஆக வேண்டும் என்று சுட்டிக் காட்டுகிறார். இதனால்"கரிசல் காட்டில் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் கோபல்லபுரத்து மக்களின் மனதில் இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டக் கனல் ஒன்று தெறித்து வந்து விழுந்து மெல்ல கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது" என்று கூறுகிறார் ஆசிரியர்.

காந்தியக் கொள்கைகள்



விடுதலை போராட்ட வீரர்கள் மூலம் விழிப்புணர்வு பெற்ற மக்கள்,காந்தியக் கொள்கைகளையும் வாழ்க்கையில் கடைபிடித்தனர்.அந்த காலத்தில் வீசிய காந்தியப் பெரும்புயல் அவர்களையும் வெகுவாகப் பாதித்தது.சில உணர்ச்சி மிகுந்த வீரர்கள் கிராம மக்களிடமுள்ள மூடநம்பிக்கைகள் பற்றியும்,அறியாமை,சுத்தமின்மை ஆகியவை பற்றியும் பேசினர்.முதலில் மது ஒழிப்பை மேற்கொண்டனர்.

பின்னர் சாதி ஒழிப்பில் ஈடுபட்டனர்.இவ்வாறு காந்தியக் கொள்கைகள் பரவின.கொடிகாத்த குமரன்,பகத்சிங் போன்ற வீரர்களின் வரலாற்றை அறிந்த இளைஞர்கள் நெஞ்சம் குமுறினர்.பெரியவர்களின் திடமனத்தையும் இச்செய்தியில் பாதித்தன.

புதினத்தில் கையாளும் உத்திகள்

கி.ரா.வின் நாவலில் கையாளும் எழுத்து நடை, வர்ணமே, சொல்லாட்சி, பழமொழி,உவமை,நாட்டுப்புறப்பாடல்,ஆகியவற்றில் ஒரு சில உதாரணங்களை இங்குக் காணலாம். கரிசல் காட்டு மக்களின் வாழ்க்கை முறை,பேச்சு வழக்கு எல்லாம் இவருடைய கதை நடப்பில் எளிமையையும் அழகையும் கூட்டுகின்றன.மேலும் இவர் நடையில் இடையிடையே நகைச்சுவை இழையோடுகிறது.

வர்ணனை

"கொடியில் காயப்போட்டிருந்த சேலையை எடுப்பது போல மஞ்சள் வெயிலை உருவி எடுத்துக்கொண்டு மேக மலைக்கும் இறங்கினால் சூரியதேவி" என்ற அழகான புதிய வர்ணனையோடு,கோபல்லபுரத்து மக்கள் நாவல் தொடங்குகிறது.

”அச்சிந்தலு பால் கறக்க தொடங்கினாள். பாத்திரத்தில் பால் பீச்சும் ஓசை,பால் மீது பால் விழும் ஓசை,பால் நுரையின் மீது பால் விழும் ஓசை, இப்படி கேட்டுக் கொண்டிருந்தது. மத்தியில் நுரையைத் தொட்டு காம்புகளில் தேய்த்துப் பால் கறக்கும் லாவகம் சொரு சொரு சொரு என்று பாத்திரம் நிறைந்து கொண்டு வருவதை ஓசையிலிருந்து நிதானிக்க முடிந்தது” இவ்வாறு அமைந்துள்ள வர்ணனை படிப்பவர்களின் காதில் ஒலிக்கிறது.

நாட்டுப்புற பாடல்

மக்களின் பேச்சு வழக்கில் காணப்படும் நாட்டுப்புறப் பாடல்கள் இந்நாவலில் இடம் பெற்றுள்ளன.நெல்லுச்சோறு என்பது மக்களின் கனவாக இருந்தது.சாமிக்கண்ணா சாரி இதைக் கண்டு நினைத்து நினைத்து அதிசயப்பட்டார்.இந்த அதிசயத்திலிருந்து அவர் விடுபட ரொம்ப நாள் பிடித்தது.கல்யாண வீட்டுக்கு பந்தலில் ஒரே நபர் மாறி மாறி திரும்பவும் திரும்பவும் உட்கார்ந்து சாப்பிட்டதை இங்கேதான் பார்த்தனர் என்று சொல்லுவார்.



நெல்லு சோற்றை பற்றி மக்கள் பாடுகின்ற நாடோடி பாடல் கேட்டு யோசித்தால்.

”நித்தம் நித்தம் நெல்லு சோறு
நெய் மணக்கும் கத்திரிக்காய்”

இப்பாடல் நெல்லுச் சோற்றை பற்றியும்,சுவையான கத்திரிக்காய் குழம்பு பற்றியும் கூறுகிறது.

பழமொழிகள்

வாய்மொழி இலக்கியமாக இருந்த பழமொழி நாட்டுப்புற இலக்கியம் என்ற பெருமைப் பெற்றது.மக்களின் அன்றாட வாழ்க்கையில் பழமொழி இருண்டறக் கலந்துள்ளது.மாடுகள் பழகிய இடத்தில் புல் மேய விரும்பும் புதிய இடத்தை விரும்புவதில்லை என்பதை,

”மாடு மேய்ந்த இடம்
மழை பேய்ந்த இடம்”

என்று பழமொழி விளக்குகிறது.

”கடும் உறவு கண்ணை மறைக்கும்”

என்பது ஒரு மொழி.

”உருக்குத்தி(அம்மை ஊசி)குத்துனயோ
உருக் குலைஞ்சி போனாயோ”

அம்மைக்குத்தின குழந்தையின் அழகு உருக்குலைந்து போய்விடும் என்ற அர்த்தத்தில் இந்த பழமொழி மக்களின் அறியாமையை காட்டுகிறது.

தொகுப்புரை

கி.ராஜநாராயணன் தன்னுடைய சுற்றுப்புற மக்களின் வாழ்க்கை நிலைகளை அதற்குரிய சூழலில் இயல்பாகவும்,கலைத்தன்மையுடனும் பதிவு செய்து ஒரு சிறப்பான பங்களிப்பைத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வழங்கியிருக்கிறார்.இயற்கையோடு இரண்டறக் கலந்த கிராம மக்களின் வாழ்க்கையைக் கூறுவது இவரது தனிச் சிறப்பாகும்.

<u>அடிக்குறிப்புகள்</u>

கி.ராஜநாராயணன்,"நாற்காலி"(கி.ரா.40 சிறுகதைகள்),4-பக்கம்
கி.ராஜநாராயணன்,"கிடாய்"(கிளாசிக் நாவல்),16-பக்கம்
கி.ராஜநாராயணன்,"கோல்லபுரத்து மக்கள்)நாவல்,25-பக்கம்
கி.ராஜநாராயணன்,"கோபல்லகிராமம்)நாவல்,15-பக்கம்

<u>துணைநூற் பட்டியல்</u>

கோபல்ல கிராமம்-முதலில் ஜனவரி அன்று 1976 இல் வெளியிடப்பட்டது.
கோபால கிராமத்து மக்கள்-ஜனவரி-1-1990 இல் வெளியிடப்பட்டது.
கிடாய்-ஜனவரி-1-2017 அன்று வெளியிடப்பட்டது.
கரிசல் காட்டுக்கடுதாசி-ஜனவரி-1-2007 இல் வெளியிடப்பட்டது.
நாற்காலி-12-6-2012 அன்று வெளியிடப்பட்டது.
கதவு என்னும் சிறுகதைகள் ஜூன்-26-2020இல் வெளியிடப்பட்டது.

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ராஜ்நாராயணனும் தீப நடராஜனும்

முனைவர் மு இராதாகிருஷ்ணன்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் மு.இராதாகிருஷ்ணன்
தமிழாசிரியர்,
தி இண்டியன் பப்ளிக் பள்ளி,
ஈரோடு.
Cell : 9952877996
E-mail :neithalradha@gmail.com

கி.ராஜ்நாராயணனும் தீப.நடராஜனும்

தமிழகத்தில் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் கி.இராஜநாராயணன் அவருடைய சிறுகதைகளும், நாவல்களும் உலகப்புகழ் பெற்றவை. இவருடைய படைப்புகளில் கரிசல் மக்களின் கலாச்சாரம் வாழ்க்கை நம்பிக்கை போராட்டங்கள் ஆகியவை உயிரோவியங்களாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

கி.ரா. இலக்கியத்தளத்தில் ஒரு வரலாறு. தனது இளமைப் பருவத்தில் ரசிகமணி, டி.கே.சி. காருக்குறிச்சி, அருணாசலம், விளாத்திக்குளம் சுவாமிகள், கு.அழகிரிசாமி, தீப.நடராஜன் போன்றொரை நண்பர்களாக மட்டுமல்ல வழிகாட்டிகளாகவும் கொண்டவர். இக்கட்டுரை கி.ரா., தீப நடராஜனுடன் நட்பு பாராட்டிய நிகழ்வுகளையும் நட்பின் விளைவாக முகிழ்ந்த கடிதங்களையும் ஆய்வு செய்கிறது.



தீப.நடராஜன்

ரசிகமணி டி.கே.சியின் மகன் தே.சி. தீத்தாரப்பன் என்ற செல்லையா - முத்தம்மாள் தம்பதியினரின் மூத்த மகனாவர் தீ.ப.நடராஜன் இவர் தாத்தா ரசிகமணியின் புகழ்பாடுகின்ற தும்பியாகத் தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர்.

கடித இலக்கியம்

செய்தி தெரிவிக்கும் விருப்பமே கடிதமாக மலர்கிறது. ஆள் மூலம் சொல்லி அனுப்பும் போது தூது எனப்படும். முற்காலத்தில் சொல்லி அனுப்ப இயலாதவற்றை பனையோலையில் எழுத்தாணிக் கொண்டு எழுதினார். அதனை ஓலை என்றனர். பனையோலையை சுருளாகக் சுருட்டி முடங்கி (வளைத்து) யதால் "முடங்கல்" எனப்பட்டது. கடி என்றால் விரைவு என்பது பொருள். அஞ்சல் முறைவந்த பிறகு விரைவாகச் சென்று சேர்வதும் கடிதம் எனக் குறிக்கப்படுகிறது.

வரலாற்றுப் புகழ்பெற்ற கடிதங்கள்

நேரு தன் மகள் இந்திராகாந்திக்கு வரைந்த மடல்கள் உலக வரலாறாக உலவுகிறது. அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, நண்பர்களுக்கு என அறிஞர் மு.வ. எழுதிய கடிதங்கள் கடித இலக்கியங்கள் எனப் போற்றப்படுகின்றன. (சமூக வாழ்வியலில் சிக்கலைத் தீர்க்கும்

சிந்தனை நோக்கில் வரையப்பட்டவை) அறிஞர் அண்ணா தம்பிக்கு வரைந்த கடிதங்கள் இளைஞர்களை தட்டி எழுப்பவள்ளன. ரசிகமணி தனது வாழ்நாளில் தமிழின் முக்கிய ஆளுமைகள் 26 பேருக்கு எழுதிய கடிதங்கள் " ரசிகமணி கடிதங்கள்" என்று தொகுக்கப்பட்டுள்ளன.

கடித இலக்கியமும் கி.ராவும்

கடித இலக்கியத்தை வளர்க்கும் பணியில் ஆர்வம் கொண்டிருந்தவர்களில் ரசிகமணி, கு.அழகிரிசாமி, புதுமைப்பித்தன் ஆகியோர். இதனைப் பின்பற்றி 1960இல் கி.ராஜ்நாராயணும், தீப.நடராஜனும் கையெழுத்துக் கடிதப் பத்திரிக்கையை தொடங்க திட்டமிட்டார்கள் கு.அழகிரிசாமி, வல்லிக்கண்ணன், தி.க.சி. சுந்தரராமசாமி, கிருஷ்ணன் நம்பி, கி.ரா.தீப.நடராஜன், நா.பார்த்தசாரதி ஆகிய எட்டுபேர்கள் ஆசிரியர்கள் தான். வாசகர்கள். இக்கடிதப் பத்திரிகைக்கு "ஊஞ்சல்" என்று பெயர் சூட்டினார்கள்.

ஊஞ்சல்

இந்த ஊஞ்சல் கடிதம் ஒவ்வொருவரிடமும் செல்லும்போது, அதற்குப் பதில் கடிதம் ஒன்றும், சொந்தக்கடிதம் ஒன்றும் எழுத வேண்டும். இவ்வாறு ஏழு பேரிடமும் சென்று இறுதியில் கி.ராவிடம் வந்து சேரும் அப்போது ஓர் இதழ் நிறைவு பெற்றதாக அர்த்தம். ஊஞ்சல் கி.ரா.வின் பெரிதான முயற்சிகளில் வந்து கொண்டிருந்தது. ஆனால் சில காலங்களில் முற்றுப்பெற்றுவிட்டது. இருப்பினும் நண்பர்கள் கி.ரா. தீப நடராஜன் இடையிலான கடிதப் போக்குவரத்து கடந்த 65 ஆண்டுகளுக்கும் மேலாக இருவரது நிறைவுக்காலம் வரையிலும் தொடர்ந்து வந்தது. தன் வாழ்நாளில் கி.ரா. அதிகமாகக் கடிதங்கள் எழுதியது தீப.நடராஜனுக்குத்தான் என்று தெரிகிறது.



"அன்புள்ள கி.ரா.வுக்கு கடிதத் தொகுப்பு"

கடித இலக்கியத்தை சிருஷ்டி இலக்கியமாக கருதி வந்த தீப நடராஜன் கி.ரா.வுக்கு எழுதிய கடிதங்கள் "அன்புள்ள கிராவுக்கு கடித தொகுப்பு" என்ற நூலை உருவாக்கினார். அந்நூலுக்கு கடிதம் எழுதலாமே என்ற தலைப்பில் எழுதியுள்ள அணிந்துரை கவித்துவமானது.

பஞ்சவடியும் ராஜபவனமும்

நண்பர்கள் கிரா.தீப.நடராஜன் இடையிலான கடிதங்கள் "பஞ்சவடியும் ராஜபவனும்" எனும் நூலாக வந்துள்ளன. இங்கு பஞ்சவடி என்பது டி.கே.சியின் இல்லத்தின் பெயர். ராஜ்பவனம் என்பது கி.ரா.வின். இல்லத்திற்கு பெயர் ஆகும். இவர்கள் இவருக்கும் இடையே நிகழ்ந்த கடிதப் போக்குவரத்தையே இந்நூலில் காணப்படுகின்றன.

கி.ரா. தீபநடராஜனுக்கு எழுதிய கடிதம் ஒன்றின் நயம்

கி.ரா. ரசிகமணி மறைவுக்குப்பின் 16.2.1954 அன்று தீப.நடராஜனுக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியை நயத்துடன் குறிப்பிடலாம். "ஐந்தருவிச் சாலையிலுள்ள அந்த டி.கே.சி. இல்லம் ஒரு சர்வகலா சாலை. அந்த சர்வ கலா சாலைக்கு உங்கள் தாத்தா துணைவேந்தர் ஆக இருந்தார். எத்தனை விதமான மனிதர்கள் வந்தார்கள். எத்தனையோ விஷயங்கள் தெரிந்து கொண்டு போனார்கள். அவர்களுக்குள் அரசியல் வேற்றுமை இல்லை இத்தகைய கலா சாலையை உலகத்தில் எங்கேனும் பார்க்க முடியுமா? கலா சாலை இப்பொழுது இருக்கிறது. மாணவர்களும் இருக்கிறார்கள். ஆசிரியர் எங்கே? சூரியன் அஸ்தமித்துவிட்டான்; ஒளிவரும் என்ற நம்பிக்கை போய்விட்டது கொழு ஓடக் கொம்பில்லை, பற்றிக் கொள்ளப்படி இல்லை. ஊன்றிக்கொள்ள கோல் இல்லை, நாம் அனாதைகள் ஆகிவிட்டோம்".

தீப நடராஜனின் கடித இலக்கியம்

இன்று தொலைபேசியும், வாட்ஸ்ஆப்பும் வந்து கடிதம் எழுதும் பழக்கம் குறைந்து விட்டது. தீப.நடராஜன் கடிதம் எழுதுவதின் மகத்துவத்தை அருமையாக இங்கு பதிவு செய்கிறார். "தொலைபேசியில் பேசினால் எல்லாம் காற்றோடு காற்றாய்க் கலந்து போய்விடும். கடிதம் எழுதும்போது எழுதுவதற்குரிய சொற்களும், கருத்துகளும் தானாக வந்து சேரும் போது ஏற்படும் நிறைவை அனுபவத்தில்தான் உணரமுடியும். கடிதம் எழுதினால்தான் எழுதுவதனால் உண்டாகும் சுகம் தெரியவரும்" எனக் குறிப்பிட்டு கடிதங்களை நண்பர்களுக்கு எழுதுவார்.



கடிதங்களுக்கு உடனடியாகப் பதில் அனுப்புதல் என்பது ஒரு நல்ல பண்பு இன்று கடிதம் எழுதுதல் என்னும் வழக்கமே அருகிவருகிறது. இதன் இடத்தினை தந்தி, தொலைபேசி தொலை நகலை கைப்பற்றிக் கொண்டது. ஆனால் இன்று இவை அனைத்தையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு கைபேசியில் குறுஞ்செய்தி அனுப்பும் நிலை முன்னிலை வகிக்கின்றது.

கி.ரா.இயற்கை எய்திய ஆறாவது நாளன்று அவரது நண்பர் தீப.நடராஜனும் காலமாகிவிட்டார். இவர்களுக்கிடையே இறுதிக்காலம் வரை கடிதம் எழுதும் பழக்கம் இருந்ததை அனைவரும் அறிவார்கள். இவ்விருவருக்கும் உள்ளுணர்வு, பிணைப்பு, உயிர்க்கலப்பு இவற்றில் ஏதோ இருந்ததால்தான் இவர்கள் இறப்பும் அமைந்திருக்கின்றது என்று தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இன்று நமது உறவுகள் நட்புகள் வலுப்பெற நமது சிந்தனைகளை மேம்பட கடிதம் எழுதும் பழக்கம் மீண்டும் வளர வேண்டும் என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

துணைநூல்கள்

1. காலச்சுவடு இதழ், ஜுலை 2021

2. பாக்கியமேரி வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, பூவேந்தன் பதிப்பகம், சென்னை - 04, 2019.

3. க.முருகேசன்.ப.ஆ. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழறிஞர்களும் தொகுதி - 1 தமிழ்த்துறை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 29. 2017.

4. தினமணி கொண்டாட்டம், 23.5.2021

****







ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கிராவின் தமிழ்ப்பணிகள்

முனைவர் எஸ் ஏ சம்பத்குமார்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் எஸ்.ஏ.சம்பத்குமார்
கல்லூரி நூலகர் (ஓய்வு),
எஸ்.கே.எஸ்.எஸ். கலைக்கல்லூரி,
திருப்பனந்தாள்.
E-mail : saskumar59@gmail.com
Cell : 94436 77943

கிராவின் தமிழ்ப்பணிகள்

முன்னுரை

கி.இராஜநாராயணன் தமிழகத்தில் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். அவருடைய சிறுகதைகளும், நாவல்களும் உலகப்புகழ் பெற்றவை. இவருடைய படைப்புகளில் கரிசல் மக்களின் வாழ்க்கை, நம்பிக்கை கலாச்சாரம் போராட்டங்கள் ஆகியவை சித்தரிக்கப்படுகின்றன. இவரது படிப்பு, கல்வி, குடும்பம், நண்பர்கள், இலக்கியப்பணி, இதழ்ப்பணி, வகித்தப்பதவி, பெற்ற விருதுகள் பாராட்டுகள் ஆகிய தலைப்புகளில் இவ்ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

பிறப்பு



இவர் கோவில்பட்டிக்கு அருகே உள்ள இடைசெவல் சத்திரப்பட்டி கிராமத்தில் 1922 இல் பிறந்தார். இவருடைய முழுப்பெயர் ராயங்குல ஸ்ரீகிருஷ்ணராஜா நாராயணன் பெருமாள் ராமானுஜம் நாயக்கர், இதன் சுருக்கம் தான் கி.ராஜநாராயணன். இவர் ஏழாம் வகுப்புடன் தன் கல்வியை நிறுத்திக் கொண்டவர்.

குடும்பம்

கி.ராவின் ஊரைச் சேர்ந்த கலாவதி என்ற அம்மையாரை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்கு பின்பு சமையல் செய்ய கற்றுக்கொண்டு வயல் வேலையையும் தெரிந்து கொண்டு அதனையும் திறம்பட செய்து காட்டியவர். இவரால் தான் குடும்ப கஷ்டமே வெளியில் காட்டிக் கொள்ளாமல் கி.ரா. எழுத்தில் அதிகம் கவன செலுத்த முடிந்தது. அந்த வகையில் கணபதி அம்மையாரால் இந்தியத் துணைக்கண்டமே அறியப்படுகிற ஒரு கதை சொல்லி கிடைத்தார். எழுத்துக்கள் வட்டார வாசனை தன் இல்லத்திலும் வீச வேண்டும் என்று விரும்பினார். தனக்கு வந்த கடிதங்களை மனைவிக்கு வாசித்துக் காட்டுவார். அவரையும் வாசிக்க சொல்லி மகிழ்வார். இல்லத்திற்கு வரும் நண்பர்கள் எழுத்தாளர்களுக்கு தக்கவாறு விருந்தோம்பும் பண்பை நன்கு மேற்கொண்டவர். கி.ராவின் எழுத்துப் பணிக்கும் குடும்ப வாழ்வுக்கும் அவரே அச்சாணி.

நண்பர்கள்

கி.ரா. இலக்கியத்தளத்தில் ஒரு வரலாறு தனது இளமைப்பருவத்தில் ரசிகமணி டி.கே.சி., காரைக்குறிச்சி அருணாசலம் விளாத்திக்குளம் சுவாமிகள் கு.அழகிரிசாமி போன்றவர்களை நண்பர்களாக மட்டுமல்லாமல் வழிகாட்டிகளாகவும் கொண்டவர். மேலும் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, இசையமைப்பாளர் இளையராஜாவும் இவரோடு நெருக்கமான நட்பில் இருந்தனர். கிவா ஒரு இசைபிரியர் எனவும் உணரப்பட்டவர். டி.கே.சியின் மறைவுக்குப்

பிறகு அவரது பேரர் தீப.நடராஜன், வேலாயுத முத்துக்குமார் வழக்கிறஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன், மேலும் எழுத்தாளர்கள் வாஸந்தி, சிவசங்கரி, பொன்னீலன், அம்பை, சு.சமுத்திரம், செயப்பிரகாசம், ரவிக்குமார், வல்லிக்கண்ணன், இலங்கை எழுத்தாளர் நூஹ்மான், ஜப்பான் எழுத்தாளர் நொல ஹீகோ உச்சிடா போன்றவர்களையும் நண்பர்களாகக் கொண்டிருந்தார்.

இலக்கியப்பணி

கி.ரா. நாவல் சிறுகதை, கட்டுரை என 55 நூல்கள் படைத்துள்ளார். இவர் எழுதிய முதல் சிறுகதை கதவு. இதன் மூலம் சிறுகதை இலக்கிய கதவை திறந்து வைத்தார் என ஆய்வாளர்கள் கூறுவார்கள்.

கோபல்ல கிராமம்

ஒரு சமுதாயம் நகர்ந்து வெறொரு இடத்திற்கு வரும் போது வந்து சேர்ந்த இடத்தின் பண்புகளையும் பழக்க வழக்கங்களையும் ஏற்றுக்கொண்டு அந்த இடத்திலேயே நிலைத்து விடுதல் என்பது முதல் நாவலில் கூறப்பட்டுள்ளது. அந்த நாவலின் தொடர்ச்சியாக “கோபல்லபுரத்து" மக்கள் நாவல் அமைந்துள்ளது. அந்த இடத்தில் நிலைத்து வாழ்ந்த மக்களின் சமூக நிலையையும் விடுதலை போராட்ட காலத்தில் அந்த சமூகத்தின் நிலையும் இந்நாவலில் விளக்கப்பட்டுள்ளது. இவருடைய நாவல்கள் கரிசல் வட்டாரத்திற்குரிய பொதுவான வாழ்க்கை முறைகளைச் சித்தரிக்கிறது. இந்த இரண்டு நாவல்களும் கரிசல் வட்டார நாட்டுப்புறப் பண்பாட்டு மரபுகளை உள்ளடக்கி அமைந்தவை.



கோபல்லபுரத்து மக்கள் எனும் நாவலில் கி.ரா. பெரும்பான்மையாக நாயக்க இனத்தவரின் வாழ்க்கையைக் கூறியுள்ளார். அதோடு அங்கு உள்ள பல்வேறு சாதியினர் வாழ்க்கையையும் அவர்களிடையே நிலவிய உறவு அமைப்புகளையும் கூறுகின்றார்.

நடை

ஒவ்வொரு எழுத்தாளனும் தனக்கென்று ஒரு தனி எழுத்து நடையை வைத்துள்ளான். ஆனால் கதை கூறுகின்ற விதத்தைப் பொறுத்துத்தான் அவன் தனித்தன்மையுடன் அமைகின்றான். கி.ரா.வின் படைப்பிலக்கிய நடை கரிசல் வட்டார வழக்கில் அமைந்த பேச்சு நடையாகும். கரிசல் பகுதியில் குடியேறிய நாயக்கர் இனத்தாரின் தெலுங்குச் சொற்கள் கலந்த பேச்சுகளும் கரிசல் பகுதியின் பேச்சு வழக்குகளும் இவரது நடையில் பிரதிபலிக்கின்றன. அவர் கரிசல் வட்டாரப் பகுதியைக் சேர்ந்தவர் என்பதும் இதற்குக் காரணமாக இருக்கிறது.

பொன்னீலனின் “கரிசல்” பூமணியின் “வெக்கை”, பா.செயப்பிரகாசத்தின் “காடு”, மேலாண்மை பொன்னுச்சாமியின் “இனி” போன்ற படைப்புகள் கரிசல் பகுதி மக்களின் பண்பாட்டுகளைச் சித்தரிப்பதாக அமைந்திருக்கின்றன. இப்படைப்பாளிகளின் வரிசையில் கி.ராஜ்நாராயணனும் இடம் பெறுகிறார்.

இதழ்பணி

1997 இல் கி.ரா. தன் நண்பர்களுடன் இணைந்து “கதை சொல்லி" என்ற இலக்கியச் சிறப்பிதழ் நடத்தினார். இது ஒரு காலாண்டு இதழ். கி.ரா. இதற்கு பதிப்பாசிரியர். வழக்கிறஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன், இணை ஆசிரியர் பத்திரிக்கை அலுவலகம் பொதிகை - பொருநை - கரிசல் 4-359 ஸ்ரீசைதன்யா அவின்யூ அண்ணா சாலை பாலவாக்கம், சென்னை - 600041 என்ற முகவரியில் இயங்குகிறது. துவக்கத்தில் தனி இதழ் ரூ.25. 2உம் ஆண்டு சந்தா ரூ.100 உம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இவ்விதழ் தற்போது இலவச இதழாக வெளிவருகிறது.

கரிசல் வட்டார வழக்கு அகராதி

கி.ரா. தொகுத்த கரிசல் வட்டார வழக்கு அகராதி என்பது கரிசல் வட்டாரத்தில் சிறப்பாக வழங்கும் தமிழ்ச்சொற்களுக்கான அகராதி. தமிழ் வட்டார அகராதிகளுக்கு இ∴து ஒரு முன்னோடி முயற்சியாகும்.

கரிசல் காட்டின் இளம் எழுத்தாளர்கள் சிறுகதை தொகுப்பு

கரிசல் காட்டின் இளம் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்புகளையும் கொண்டு வந்தார். இதுவும் தமிழகத்தின் ஒரு முன் முயற்சியாகும். இப்படிப்பட்ட ஒரு முயற்சிக்கு கு.அழகரிசாமியும், கி.ராஜநாராயணனும் கரிசல் இலக்கியத்தை முன்வைத்து அடித்தளம் அமைத்தார்கள்.



வகித்த பதவி

பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

பெற்றவிருதுகள்

கோபல்லபுரத்து மக்கள் என்னும் புதினத்திற்காக 1991 ஆம் ஆண்டு சாகித்திய அகாடமி விருது பெற்றார். மேலும் தமிழ்ஆராய்ச்சி விருது (1971) இலக்கிய சிந்தனை விருது (1979) மா.சிதம்பரம் விருது (2008) தமிழ் இலக்கிய தோட்டம் (2016) உ.வே.சா. விருது 2021 ஆகிய விருதுகளை பெற்ற பெருமை உடையவர்.

மொழிப்பெயர்ப்பு

இவருடைய படைப்புகள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஹிந்தி, மலையாளம், தெலுங்கு போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எல்லாத் தகுதியும் கொண்ட இவருக்கு ஞானபீட விருது வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வழங்கப்படவில்லை.

பாராட்டு

கவிஞர் மீரா, கி.ரா.வின் 60 ஆவது மணிவிழாவை மதுரை காலேஜ் ஹவுஸில் நடத்தினார். அப்போது வட்டார வழக்கு அகராதியும், கரிசல் காட்டு எழுத்தாளர்கள் தொகுப்பும் வெளியிடப்பட்டது. அவரது 70 ஆவது பிறந்தநாள் சென்னையில் நடைபெற்றது. 75 ஆவது பிறந்த நாளை ஒட்டி "கி.ராஜநாராயணன் கதைகள் 74" கதைகள் தொகுப்பு அகரம் பதிப்பகம் வெளியிட்டது.

பின்னர் 85ஆவது பிறந்தநாளை வைகோ போன்ற தலைவர்கள் முன்னிலையில் வழக்கறிஞர் இராதாகிருஷ்ணன் நடத்தினார். 90ஆவது பிறந்தநாளை தினமணி நாளிதழும், தில்லி தமிழ்ச்சங்கமும் தில்லியில் நடத்தியது. 95ஆவது பிறந்த நாள் விழா புதுச்சேரியில் சிறப்பாக நடைபெற்றது.

அமெரிக்கா ஹார்வர்டு பல்கலைக்கழகத்திற்கு கி.ராவின் நூல்

கி.ரா. தாம் எழுதிய கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள் ஆகிய நூல்கள் இரண்டையும் அமெரிக்கா ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கைக்கு அனுப்பி வைத்தார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் பெனிங்டன் நூலகத்திற்கு நூல் கொடை



கி.ரா. தாம் சிறுவயது முதல் சேகரித்த படித்த புத்தகங்களை ஸ்ரீவில்லிபுத்தூர் பெனிங்டன் நூலகத்திற்கு மனநிறைவோடு கொடுத்து விட்டார். கி.ரா. படித்து புத்தகங்கள் அவருக்குப்பிறகு அனைவரும் பயன்படும் விதமாக நூலகத்திற்கு கொடுத்து விட்டதாக துணைவியாரும் பெருமையோடு தெரிவித்துள்ளார்கள்.

கி.ரா. மறைவு

இவரது நூறாவது பிறந்தநாளை எழுத்தாளர் நாஞ்சில் நாடனும் நடிகர் சிவக்குமாரும் சிறப்பாக நடத்த திட்டமிட்டிருந்தார்கள். எதிர்பாராத விதமாக கி.ரா. 17.05.2021 அன்று மறைந்து விட்டார். கி.ரா.வின் இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடைபெற்றது. இவருக்கு கோவில்பட்டியில் நினைவிடமும் சிலையும் அமைக்கப்பட்டது.

<u>துணை நூல்கள்</u>

1. க.முருகேசன் ப.ஆ. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழ் அறிஞர்களும் தொகுதி - 1, தமிழத்துறை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 29, 2017.
2. கி.ராஜநாராயணன், லீலை அன்னம், தஞ்சாவூர் - 17, 2016.
3. தினமணி, 19.5.2021
4. தினமணி கொண்டாட்டம், 23.5.2021
5. கதை சொல்லி காலண்டிதழ், ஜனவரி 2021, இதழ் 36.

****







ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ராஜநாராயணின் 'கதவு' சிறுகதையில் சமுதாய நோக்கு

முனைவர் மு கோவிந்தராசுலு





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

பேராசிரியர் முனைவர் மு. கோவிந்தராசுலு
தமிழ்ப்பேராசிரியர்
உலகநாத நாராயணசாமி அரசு கல்லூரி (தன்னாட்சி)
பொன்னேரி – 601 204.
அலைபேசி : 98846 06076

கி. ராஜநாராயணனின் ‘கதவு’ சிறுகதையில் சமுதாய நோக்கு

ஆசிரியர் அறிமுகம்

கி. ராஜநாராயணன் அவர்கள் 16.09.1923 அன்று கோவில்பட்டிக்கு அருகில் உள்ள இடைச்செவல் கிராமத்தில் பெற்றோர்கள் கிருஷ்ணராமானுஜன் - இலக்குமி அம்மாளுக்கும் மகனாகப் பிறநந்தார். இரண்டு மகன்களின் பெயர் திவாகர், பிரபாகர் ஆவர். இவர் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவர். இவருடைய மனைவி பெபயர் கணபதி அம்மாள். இவர் நாற்பது வயதுக்குப் பிறகு எழுத ஆரம்பித்து சிறுகதை, நாவல், குறுநாவல் கிராமியக் கதை, அகராதி, கடிதம் என்று தமிழின் பல்வேறு இலக்கியங்களில் தடம் பதித்துள்ளார்.

இலக்கியப் படைப்புகள்



1. கோபல்ல கிராமம்
2. கோபல்லபுரத்து மக்கள்

என்ற இரு புதினங்களும் சமூக வரலாற்றுப் புதினங்களாகத் திகழ்கின்றன. ஒரு புது முயற்சியாகக் கோபல்லபுரத்து மக்கள் என்ற நாவலைக். கி.ரா. படைத்துள்ளார்.

“ஒரு நாவலாசிரியனே தமது சமூகத்தைப் பற்றி எழுதுவதில் முதன்மையானவர்”’ எனக் காதரின் லிவர் என்பவர் கூறியுள்ளார்.

பெற்ற பரிசுகள்

1. கதவு (சிறுகதைத் தொகுப்பு) - தமிழ்வளர்ச்சி மன்றப் பரிசு 1965.
2. பிஞ்சுகள் (குழந்தைகள் நாவல்) - இலக்கியச் சிந்தனைப் பரிசு - 1979
3. கோபல்லபுரத்து மக்கள் (நாவல்) - சாகித்ய அகாதெமி விருது - 1991
4. மா. சிதம்பரம் விருது - 2008
5. தமிழிலக்கியத் தோட்டம் - 2016
6. உ.வே.சா. விருது - 2021

தமிழ் இலக்கிய வரலாற்றில் பெறுமிடம்

கி.ரா. அவர்கள் பல்வேறு துறைகளில் தன்முத்திரை பதித்தாலும், கரிசல் இலக்கிய முன்னோடி என்ற வகையில் தமிழிலக்கிய வரலாற்றில் இடம் பெறுகிறார்.

> **“நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடத்தில்**
> **ஒதுங்கினேன் பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல்**
> **மழையையே பார்த்துக் கொண்டிருந்து விட்டேன்.”**

என்று சொல்லும் கி.ரா.வை புதுவைப் பல்கலைக் கழகம் பேராசிரியராக்கிப் பெருமையளித்துள்ளது. இவர் கதவு என்ற சிறுகதை மூலம் தமிழ் சிறுகதை வரலாற்றில்

ஒரு புதுமையைப் படைத்துள்ளார். இவர் எழுபதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்ததோடு இரண்டு நாவல்களையும் படைத்துள்ளார்.

தனித்தன்மைகள்

நாவலாசிரியர் தனக்குக் கிடைத்த கருவை விளக்கிக் காட்டலே கதைப்பின்னல், பாத்திரங்கள் பின்னணி என்று பலவற்றை அமைத்துக் கொள்கிறார். அந்த வகையில் கி.ரா. விவசாயிகளின் போராடடத்தில் கலந்துகொண்டு விவசாயிகளின் நிலையை உணர்ந்து கிராம மக்களின் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு நாவலைப் படைத்துள்ளார்.

பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் வாழ்க்கையைக் குறியீடாக்கி மனிதரக்ள் மனநிலையை விளக்கியுள்ளார். சங்க இலக்கிய இயற்கையோடு இணைந்த மக்கள் வாழ்க்கையைச் சித்தரிப்பதைப்போல. உரைநடை இலக்கியத்தில் இயற்கையோடு இரண்டறக் கலந்த கிராம மக்களின் வாழ்வைக் கூறுவது இவரது தனிச்சிறப்பாகும்.

கதவு சிறுகதைக் கதைத் தொடக்கம்



கதைப் பொருளுக்கும் கதைக் கருவிற்கும் ஏற்ற கதைத் தொடக்கம் அமையும்போது சிறுகதைகள் சிறக்கின்றன. அந்த வகையில் கி.ரா.வின் கதவு சிறுகதை 'கதவு' என்னும் சொல்லை வைத்தே 'கதவு ஆட்டம் ஆரம்பமாகிறது' என்று சுவாரஸ்யமாகத் தொடங்கி உரையாடல் வளர்த்துக்கொண்டு செல்கிறது.

முதல் பகுதியிலிருந்து அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்ற ஆவலைத் துண்டும் வண்ணம் கதை நகர்ந்து செல்லும் முறை குறிப்பிடத்தக்கது.

கதவு சிறுகதையின் தொடக்கமாவது வாசகர்களைக் காந்தம்போலக் கவர்ந்து அவர்கள் சிந்தனையைச் சிதறவிடாமல் மேலே படிக்கத் தூண்டுவதில் சற்றும் தளரவில்லை.

'எல்லோரும் டிக்கட்டு வாங்கிடுங்க' என்றான் சீனிவாசன். உடனே "எனக்கொரு டிக்கட், உனக்கொரு டிக்கட்" என்று சத்தம் போட்டார்கள். "எந்த ஊருக்கு வேணும்? ஏய் இந்த மாதிரி இடிச்சித் தள்ளினா என்ன அர்த்தம்? அப்புறம் நான் விளையாட்டுக்கு வரமாட்டேன்"

"இல்லை இல்லை இடிச்சித் தள்ளலெ"
"சரி எந்த ஊருக்கு டிக்கட் வேணும்"

இப்படித் தொடக்கமே சுவையான உரையாடலாக இருப்பது கதையை மென்மேலும் படிக்கத் தூண்டுகிறது.

கதைக்கரு

"சிறுகதைகள் எளிய கருப்பொருளைக் கருவாகக் கொள்ளுதலே சிறப்புடையது" என்கிறார் சிறுகதை உலகின் தந்தை எனப் போற்றப்படும் செகால். அந்த வகையில் 'கதவு' சிறுகதை ஏழைகளின் பாதுகாப்பற்ற நிலையை விளக்குகிறது. வருமானத்தை மறைத்து வரி கட்டாமல்

ஏய்ப்பவர்களும் கறுப்புச் சந்தையில் இறங்கி கள்ளப்பணம் சம்பாதிப்பவர்களும் நிம்மதியாக வாழ்கிறார்கள். இல்லாத காரணத்தால் தீர்வைக் கட்டி முடியாத ஏழைக்கு இருந்த ஒரே பாதுகாப்பாக கதவும் பறபோகிறது என்ற செய்தியின் வழியாக ஆசிரியர் கதையின் கருவை விளக்கியுள்ளார்.

பாத்திரப் படைப்பு

'கதவு' என்கிற சிறுகதையில் பல கதைப்பாத்திரங்கள் வருகின்றன. சீனிவாசன், லட்சுமி, பக்கத்து வீட்டுக் குழந்தைகள், கைக்குழந்தைகள், தலையாரி, ரங்கம்மா, ரங்கம்மாளின் கணவன், என்று பல பாத்திரங்களை ஆசிரியர் படைத்துள்ளார். இதில் சீனிவாசனும் இலட்சுமியும் கதை முழுவதும் வருகிறார்கள். இப்படி எத்தனை பாத்திரங்களை ஆசிரியர் படைத்திருந்தாலும் கதவு என்னும் பாத்திரமே கதையின் கட்டாயப் பாத்திரமாகப் படைக்கப்

பட்டுள்ளது.

சமுதாய நோக்கு



இக்கதையில் ஆசிரியரின் மானிடவியலும், சமூக நோக்கும் வெளிப்படுகிறது. அதாவது அக்காலக்கட்டத்தில் கஞ்சிக்கே வழியில்லாத மக்களிடம் தீர்வைச் செலுத்தும்படி தொந்தரவு செய்யும் ஒரு கூட்டத்தாரை இக்கதையில் படம்பிடித்துக் காட்டுகிறார். அவர்களின் கொடூர செயலால் ஓர் அப்பாவி கைக்குழந்தையின் உயிர் பறிக்கப்படுகிறது.

கி.ரா. இவ்வாறான விசயங்களைப் பேசியிருப்பதற்கான காரணம் சமூகத்தில் இந்த இழிநிலைகள் கொஞ்சமாவது மாறவேண்டும் என்பதற்காகவே ஆகும்.

உத்திகள்

கதை சொல்லுதல் எல்லோருக்கும் பிடித்தமான ஒன்றாகும். அதிலும் கதை கேட்பவதாவது சுகமானதாகும். அந்த வகையில் ஆசிரியரே கதை சொல்வதாகவே அமைந்திருப்பது படிப்போர்க்கு மிகச் சிறந்த அனுபவமாக வழங்குகிறது. இது ஆசிரியர் கையாண்டிருக்கும் மிகச் சிறந்த உத்தியாகும். பேச்சு வழக்கு வாசகர்களைக் குறித்த விசயத்துடன் இயல்பாக ஒன்றிணைக்கும் அந்த வகையில் இக்கதையில் முழுக்க முழுக்க பேச்சு வழக்கினையே கி.ரா. பயன்படுத்தியிருப்பது வாசகர்களைக் கதையுடன் பின்னிப்பிணைத்து விடுகிறது.

அத்தோடு திருநெல்வேலி வந்தாச்சு சொல்லேல், பார்த்துக்கிட்டு கொடுத்துள்ளேன், கம்மஞ்சோறு கொண்டா, சாயந்திரம், மூனு வருஷம், கொளந்தைகள், தைலாறச் செடிகள், சீக்கிரம் போன்ற ஊர்வழக்குச் சொற்கள் கதை முழுவதும் இடம்பெறுகின்றன. இவை வட்டார வழக்காக நமக்கு உணர்த்துகிறது. அத்தோடு இடையிடையே உரையாடல் போக்கிலும் கதை மெருகூட்டிச் சொல்லப்படுகிறது.


தலைப்புப் பொருத்தம்

சந்தோஷம், துக்கம், எதிர்பார்ப்பு, ஏமாற்றம், ஏக்கம், அழுகுரல் என எல்லாவகையான உணர்வுகளும் கதவு என்கிற இந்த ஒரே பாத்திரத்திலேயே கி.ரா. பிரதிபலிக்கச் செய்திருக்கிறார். சிறுகதைகளைப் படிக்கும்போது 'கதவு'' என்கிற பாத்திரமே வாசகர்களின் மனத்திரையில எழுகிறது.

சிறுகதை படித்து முடிக்கும்போது வாசகர்களுக்குத் தோன்றுகிற கவலை, கண்ணீர், பெருமூச்சு ஆகியன யாவும் குழந்தைகளுக்கு அந்தக் கதவு மீண்டும் கிடைத்திருக்கலாம் என்று தோன்றுகிறது. எனவே, இக்கதை முழுவதும் கதவின் தாக்கம் தலைகாட்டுவதாலும் கதை அம்சம் முழுவதும் கதவு சார்ந்தே காணப்படுவதாலும் தலைப்புப் பொருத்தம் இக்கதைக்கு திறம்பட அமைந்திருக்கிறது.

கதை முடிவு

வாழ்வு என்பது எப்போதும் மகிழ்ச்சியானது அல்ல. அழுகையும் உண்டு. ஆகவே, துன்பியல் முடிவுகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த வகையில் இக்கதையை ஆசிரியர் ஒரு சோகமான வழியில் நகர்த்திச் செல்கிறார்.



கதையின் முடிவில் குழந்தைகள் கதவினைக் கட்டி அணைத்துக் கொள்கிறார்கள். கதவு தங்களுக்குக் கிடைக்காவிட்டாலும் குழந்தைகள் முகத்தில் மகிழ்ச்சியின் அடையாளம் காணப்படுகிறது. ஆனால், வாசகர் முகங்களில் கவலை தாண்டவம் ஆடுவதோடு குழந்தைகளுக்கு கதவு கிடைத்திருக்கலாம் என்று மனதும் செல்கிறது. வாசகர் மனத்தில் சந்தோஷமான காட்சிகள் இடம் பெறுவதைவிட துயரமாக காட்சிகள் நீங்கா இடம் பிடிக்கும். அந்த வகையில் ஆசிரியர் இங்கே வெற்றி பெற்றிருக்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

நிறைவுரை

இக்கதையின் ஆசிரியர் அறிமுகம், இலக்கியப் படைப்புகள், பெற்ற பரிசுகள், தமிழிலக்கிய வரலாற்றில் பெறுமிடம், தனித்தன்மையுடைய கதவு சிறுகதை - கதைத் தொடக்கம், கதைக்கரு, பாத்திரப்படைப்பு, சமுதாய நோக்கு, உத்திகள், தலைப்புப் பொருத்தம், கதை முடிவு ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

“அகராதிப்பேரறிஞர்” – கி.ரா.

முனைவர் இர சிவசக்தி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் இர சிவசக்தி
இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத்தலைவர்,
இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி),
சென்னை – 600 004.
sivasakthi_tamil@queenmaryscollege.edu.in

……………………………………………………………………………….........................

“அகராதிப்பேரறிஞர்” – கி.ரா.

‘கரிசல் வட்டார வழக்கு அகராதி’ தமிழில் வட்டார வழக்கு அகராதிகளின் முன்னோடி முயற்சி. கி.ராஜநாராயணன் கரிசல் வட்டார எழுத்தாளராயினும் சிறந்த அகராதி தொகுப்புக் கலைஞராக விளங்குவதை இந்நூல் மூலம் அறியமுடிகிறது. 1982ல் வெளிவந்த இவ்அகராதி, தமிழில் வெளிவந்த முதல் வட்டார வழக்கு அகராதி ஆகும்.

கரிசல் நிலம் அல்லது கரிசல் வட்டாரம் என்பது மதுரைக்குத் தெற்கிலுள்ள திருமங்கலம் முதல் திருநெல்வேலிக்கு வடக்கிலுள்ள கங்கைகொண்டான் வரையான எல்லையைக் கொண்டது என்று இந்நூலின் முன்னுரை தெளிவாக்குகின்றது, விருதுநகர், சங்கரன்கோயில, புளியங்குடி, விளாத்திக்குளம், ஒட்டப்பிடாரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. கரிசல் மண் என்பது ஈரப்பதத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் இயல்புடையது, இந்நிலத்தைப் புன்செய்நிலம் என்பர்.



தமிழின் அகராதி வரலாறு என்பது தொல்காப்பிய இடையியல், உரியியல் மரபியலில் தொடங்குகிறது. புணர்ச்சி கூறும் இயல்களிலும் பொருள் கூறும் அகராதி இயல்பைக் காணமுடிகிறது, அகராதியில் ஆதி என்பது வடசொல் எனவே, ‘அகரமுதலி’ என்றே கூறுவார் தேவநேயப்பாவணர். நிகண்டுகள் தோன்றிய பதினோராம் நூற்றாண்டு முதல் அகராதிகள் படைப்பது உச்சம் பெற்று விளங்கிய நிலையை அறியமுடிகிறது.

பொதுவாக, ஆங்கில, தமிழ் அகராதிகள் ஒவ்வொரு பக்கத்திலும் தொடங்குகின்ற முடிவுபெறுகின்ற சொற்களின் தொடக்க எழுத்துக்களை அவ்வப்பக்கங்களின் மேல்புறத்தில் குறிப்பது மரபு. இவ்வகையிலேயே இந்த வட்டார வழக்கு அகராதியும் ஒவ்வொரு பக்கத்திலும் தொடங்குகின்ற சொற்களை அவ்வப்பக்கத்தின் மேற்புறத்தில் கொடுக்கிறது.

அதுபோலவே ‘பிற்சேர்க்கை’ என்பதும் அகராதிகளில் இடம்பெறும் இன்றியமையாக் கூறாகும். இவ்அகராதியிலும், பிற்சேர்க்கை உள்ளது. அதில், கி.ரா.வின் தொகுப்புத்திறனை அறியமுடிகிறது. 275வகையான விளையாட்டுக்கள், விளையாடும் முறைகள், ஆடுவகை - நிறம், சொல்வடைகள்(319), காலநேரம் பற்றிய சொற்கள், பெயர்களைப் பற்றிய சொற்றொடர்கள்(318) மாட்டை விலை பேசும்போது நிகழ்வன, கோழியினங்கள், மாட்டின் வயது - சுழிநிறம் கொம்புவகை, லட்சணவகை, களைவகை, பருப்புவகை, ஆபரணவகை, பல்வகை முடிச்சுக்கள், வண்டி சம்பந்தப்பட்ட சொற்கள்,

நிலம் ஏரி சம்பந்தப்பட்ட சொற்கள், காற்றுவகை, நம்பிக்கைகள் எனத் தலைப்பிட்டு தொகுக்கப்பட்டுள்ளமை தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். மேலும், நூலில் உள்ள பிழைகளையும் சுட்டித் திருத்தங்களையும் பதிவுசெய்துள்ளார்.

இவரது அகராதிப் பணி – தனிச்சொற்களுக்குப் பொருள், விளக்கம் தருதல், அவற்றைப் படங்களாக்கித் தருதல், ஏற்ற மேற்கோள்கள், நாட்டுப்புறப்பாடல்கள், சான்றுகள் மூலம் பொருத்தமுரைத்தல், என மக்கள் வழக்கிலுள்ள அனைத்தையும் தொகுத்து இவ்அகராதியில் தந்துள்ளார். இந்நூலை 'அகராதி' என்பதைக் காட்டிலும் கரிசல் மக்களின் வாழ்வியல் வரலாறு என்றே கூறலாம்.

'பண்பாட்டுச்சொற்கள், இலக்கண இலக்கியக் கலைச்சொற்கள், சடங்குகள், நாட்டுப்புற வழக்காற்றுச் சொற்கள் போன்ற பல்வகைச் சொற்களுக்கும் விளக்கச் சொற்பொருள் தருதல்வேண்டும்.' (அகராதியியல்.ப:384) என்ற அகராதிக் கோட்பாட்டிற்கேற்ப இவ்இகராதி அமைந்துள்ளது.



'சொல்லுக்குப் பொருளாகப் பரியாயச்சொற்களைக் கொடுப்பது போதாது, சொல்லுக்குரிய பொருளில் லட்சணத்தையும் வரையறை செய்யவேண்டும் என்ற எஸ்.வையாபுரிப்பிள்ளையின் கருத்தினை நிறைவு செய்யும் அகராதியாக இந்நூல் விளங்குகிறது.

எதிர்ச்சொல் தருதல்

பதிவுச்சொற்களுக்கான எதிர்சொற்களைத் தருவது பொருள் விளக்கநெறியைச் சார்ந்ததே எனலாம். எதிர்ச்சொற்களையும் தரும்போது பொருண்மை எளிதில் விளங்கும். ஊராவீடு – ஊராவீடு X நம்மவீடு (ப:43)

குறுத்தோலை - இளம் ஓலை - குறுத்தோலை X சாரோலை (ப:92)
சாரோலை – முற்றியப் பச்சைஓலை - சாரோலை X குறுத்தோலை (ப:125)
சுத்தவாளி – நிரபராதி - சுத்தவாளி X குத்தவாளி(ப:131)
தணுசு – தணிந்து இருப்பது - வெடுசு X தணுசு (ப:147)
தொவயாக்கை – அனுபவமில்லாதகை. தொவயாக்கை X தொவஞ்சகை (ப:166)

பருவட்டு–பெரிய பொருட்களைக் குறிக்கும்சொல்

மேலெழுந்தவாரியாக. பருவட்டாப் பூசிவிடு – பருவட்டான ஆளு. கருப்பட்டியில் பருவட்டு X பொடிவெட்டு (ப:191)

பித்தி - பிந்தி, குறை, தாழ்ச்சி 'ஒனக்கு நா ஒண்ணும் பித்தி இல்லை''கெட்டிக்கும் பித்திபாத்திடுவோமா?' பித்தி X கெட்டி (ப:200)

பிப்பாரம் - பின்பாரமாக இருப்பது. பிப்பாரம் X முப்பாரம் (ப:200)

பொடிவட்டு சிறியசைஸ் பொருளைக் குறிப்பது.

பொடிவட்டு X பருவட்டு (ப:214)

பதிவுச்சொல்லின் பொருளையும் குறிப்பிட்டு, அதன் எதிர்ச்சொல்லையும் கி.ரா.வின் அகராதியில் காணமுடிகிறது. எதிர்ச்சொல் தருவதன் மூலம் பதிவுச்சொல்லின் பொருண்மையை முழுமையாக உணரமுடிகிறது. சான்றாக, 'முப்பாரம்' 'பிப்பாரம்' என்பதனைக் குறிப்பிடலாம். பொருளின் முழுமைதான் எதிர்ச்சொல்லைப் புரியவைக்கிறது.

எதிரொலிச்சொற்கள்

காசு – கீசு என்பது போல் வரும் ஒலிக்குறிப்புச் சொற்களை 'எதிரொலிச் சொற்கள்' என்பர் மொழியியலார். அத்தகைய ஒலிக்குறிப்புச் சொற்களும்,

இட்டடிமுட்டடி – எதிர்பாராமல் தோன்றும் நெருக்கடி (ப:28)
அந்திசந்தி - இருட்டுநேரங்கள் (ப:12)
அஞ்சிஓஞ்சி – முடியாமலாகி (ப:23)
ஆந்துசோந்து – அசந்துசோர்ந்து (ப:23)
தத்தக்கா புத்தக்கான்னு – நிலைத்து நிற்பதற்கு முன்னுள்ள ஆரம்பச் சிரமங்கள் (ப:147)
அல்லும் சில்லுமாய் - முழுத்தொகையாய் இருந்து சில்லறையாகக் கணக்குச் சொல்ல முடியாமல் செலவழிந்துவிட்டது, (ப:17)

என்று இவ்அகராதியில் விளக்கம் பெற்றுள்ளன.



ஆங்கிலச்சொற்கள்

பேச்சுவழக்கில் தமிழ் போலவே கலந்துவிட்ட ஆங்கிலச் கொற்களுக்கும் இவ்அகராதி சூழல் விளக்கமும் சொல்விளக்கமும் தருகிறது.

ஈரங்கி – ஆர்க்யூமெண்டவாய்தா (ப:35)
ஒப்பினியம் - கட்டுப்பாடு (ப:56)
கெகிட்டேரி – செக்ரட்டரி (ப:56)
நிமாண்டு – தட்டுப்பாடு, பற்றாக்குறை (ப:204)
மான்சூர் - மானேஜர் (ப:231)

காலம்காலமாக மக்கள் வழங்கி வருகின்ற இச்சொற்கள் திரிபடைந்து தமிழ்ச்சொற்கள் போலவே ஒலிமாற்றம் பெற்று விளங்குவதை இப்பதிவுகள் மூலம் அறியமுடிகிறது.

இவ்வாறாக, சொல்லுக்கான பொருளைத் தெளிவுபடுத்தும் இவ்அகராதி "இந்தச் சேகரிப்பில் சொற்களோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் பிரயோகங்களையும் சேர்த்திருக்கிறேன். சில

நேர்ச்சொற்களும் உண்டு” என்று அகராதித் தொகுப்பாளரான கி.ரா. முன்னுரையில் கூறுவது போலவே பலதொடர்களும் இதில் விளக்கம் பெறுகின்றன.

தொடரின் பொருள்

சொல்லின் பொருள் மட்டுமின்றி, தொடரின் பொருளைத் தருதலையும் இவ்அகராதியில் காணமுடிகின்றது. ஒரேதொடர் சிற்சில சொற்சேர்க்கையுடன் வருமிடத்து அத்தொடர்களின் பொருண்மையையும் மீண்டும் சேர்ந்த சொற்களின் அடிப்படையில் கூறுவதை இந்த அகராதியில் காணமுடிகிறது.

(எ-டு) சோலி முடிந்தது – அவருடைய காரியம் - சம்பந்தப்பட்ட மரணச் சடங்குகளெல்லாம் முடிந்தன (ப:141)

சோலிய முடிச்சிட்டான் - குளோஸ் பண்ணிட்டான், கொன்று தீர்த்துவிட்டான். (ப:141)

அவரு சோலி முடிஞ்சது – அவர் இந்த உலகத்திற்கு வந்த வேலை முடிந்தது; புறப்பட்டார். (இறந்து போய்விட்டார்) ப:19



இத்தகைய பதிவுகள், பொதுவாக அகராதிகளில் மீண்டும் பொருள் கூறுதல் இன்றி, காண்க, பார்க்க என வெளிப்படையாய்க் குறிக்கின்ற வெளிப்படைக் குறுக்குநோக்கீடு (directional cross reference) முறையிலேயே அமைகின்றன. சிறுபான்மை மீண்டும் பொருள் கூறுகின்ற மறைமுகக் குறுக்குநோக்கீட்டில் (Implici cross reference) அமைகின்றன. ஆனால் கி.ரா வின் ‘வட்டார வழக்கு அகராதி’ மறைமுகக்குறுக்கு நோக்கீட்டு முறையைப் பின்பற்றியுள்ளது.

மேற்கொள் தொடர்

ஒவ்வொரு சொல்லுக்கும் குறிப்பிட்ட பயன்பாட்டுச்சூழல் உண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டே பொருள் வரையறுக்கப்படுகிறது. சொற்கள் திரட்டப்பட்டபோதே முழுமையான பொருள்சூழலோடு கூடிய தொடர்களும் திரட்டப்பட்டிருக்கும். இத்தொடர்கள் மேற்கோளாக இடம்பெறுகின்றன.

அவிய – மரியாதைச் சொல். அவர்கள்
அவக்காச்சி – தாளமுடியாத ஆசை, அவள்மேலே அவனுக்கு அப்படி ஒரு அவக்காச்சி.
வெள்ளனை – அதிகாலை – கீழ்வானம் வெள்ளென்று (திருப்பாவை)

என்று வழக்குத்தொடர், இலக்கியத்தொடர் காட்டுதல் என்னும் இருவகைகளையும் கையாண்டுள்ளார்.

படவிளக்கம்:

சொற்களின் பொருண்மையை முழுமையாகச் சொற்களால் விளக்க இயலாது என்ற

நிலையிலும் குறிப்பிட்ட வட்டாரம் சார்ந்த பொருள்களின் பெயர்கள் முதலானவற்றைப் படவிளக்கம் செய்தலே மிக எளிமையானது.

ஈச்சாங்கத்தி, குடம் (ப.8) காடா விளக்கு (ப.78) கொடுக்கறுவா (ப.103) சுள்ளாணி (ப.132) திருகிணி (ப.57) நிலவாளச் சட்டி (ப.176) என்பனவற்றிற்குப் பொருள் கூறுவதுடன் படமும் வரையப்பட்டுள்ளது. பதிவுச்சொற்களின் அருகிலேயே படங்களைத் தரும்முறை பின்பற்றப்பட்டுள்ளது.

விளக்கக்குறிப்பு

சொற்பொருளைத் தெளிவாக விளக்கும் வகையில் சொல்லின் பொருளோடு சேர்த்துத் தரப்படுகின்ற கூடுதல் தகவலை விளக்கக்குறிப்பு எனலாம். இவ்வகையில் குறிப்பிட்ட வட்டாரம் சார்ந்த பழக்கங்கள் பொதுவழக்கான விளக்கம் தருதல், இவற்றைச் சுட்டலாம்.

கி.ரா வின் வட்டார வழக்கு அகராதியில், அக்கி எழுதுகிறது என்ற சொல்லிற்கு ‘நெருப்புக் கொப்பளங்கள் போலத் திடீரெனத் தோன்ற மந்திரிப்பவர் சாம்பிராணிப் புகைக்காட்டி காவிக் கட்டியைக் குளிர்ந்த நீரில் கரைத்து மெல்லிய இறகினால் அதன்மேல் சிங்கமுகம் போல வரைதல்’ என்ற விளக்கம் இடம்பெறுகிறது. (ப:1)



அரிசித்திரி – ஆரம்பம்; ஏட்டுப்பள்ளிக்கூடத்தில் அரிசித்திரி என்றுதான் பாடம் தொடங்குவார்கள் ஆனா ஆவன்னா மாதிரி (ப.15)

அருசம் - அபூர்வம்; ஒருதாய் தின்பண்டம் வாங்கிக்கொண்டு வருகிறாள். இதையறிந்த அவள் குழந்தைகளில் ஒன்று ‘யம்மா யம்மா’ என்று கைநீட்டுகிறது. அதுக்கான பங்கைக் கொடுக்கிறாள். இன்னும் வேண்டும் என்கிறது குழந்தை. ‘நீ மாத்திரம்தானா; மற்ற குழந்தைகளுக்கும் தரவேண்டாமா எனும் அர்த்தத்தில் இப்படிக் கேட்கிறாள் தாய். ‘நீ மாத்திரம்தான் அருசமா?’ (ப:16)

ஒட்டுத்திருணை – வீட்டிற்கு வெளியே சுவரோடு ஒட்டிய வெளிப்புறமுள்ள திண்ணை (ப:54)

இவ்வாறாக, கரிசல் வட்டாரம் சார்ந்த சொற்களுக்கு அப்பகுதியின் பழக்கங்களுக்கான விளக்கங்களையும், சில சொற்களுக்கான விளக்கங்களாகக் கதைப்போக்கில் உரைப்பதையும் இவ்அகராதியில் காணமுடிகிறது. இவை அச்சொல்லைக் கற்போர் மனத்தில் நன்கு பதியவைப்பற்கான உத்தியாக உள்ளது.

சான்று காட்டுதல்

சொல்லின் பொருளுக்குச் சான்றாக நாட்டுப்புறப்பாடல்கள், பழமொழிகள், தனிப்பட்ட சில சொற்கள் இவற்றைக் காட்டுகிறார்.

அன்னநடை – நாகரிகமாக நடப்பதாக நினைத்து நடக்கும் நடை. 'அன்னநடை நடக்கத் தன்நடையும் போச்சு' (ப:21)

காடி - கூழ்; காடி கஞ்சியானாலும் மூடிக்குடி (ப:78)

என்று பழமொழிகளும்

ஆச்சி நூக்கிறது ஐயரு பூணுலுக்கு எட்டாது. புருஷன் வருமானமில்லாத செலவாளி; பெண்சாதி சம்பாதிக்கும் சிறுவருமானம் அவனுக்கு எந்தமூலை (ப:22) என்றும்,

கா்நாடகம் - பத்தாம்பசலி, நாப்பதாமாண்டு
ஏனம் - பாத்திரம் ப:52
ஒருஆளம்பனை - 80 பனைமரங்கள் கொண்டது.
கரந்தை –விவசாயக் குத்தகை ஆண்டு; ஆனியிலிருந்து ஆனிவரை – ஆனிக்கரந்தை ப:71
உறுமிமேளம் - கவுண்டா்களின், கம்பளா்களின் நல்லது பொல்லதுகளில் வாசிக்கப்படும் தனிவாத்தியம் (ப:42)

என அவ்வட்டாரத்திற்கேயுரிய தனித்த சில சொற்களின் விளக்கமும் இடம்பெறுகிறது.

ஆலவட்டம் - கவன ஈா்ப்பு (ப:26) இச்சொல்லிற்கு விளக்கமாக – சான்றாக,



"வட்டப்பாறையில குட்டி வரகரிசிதீட்டயில
ஆா்கொடுத்த சாயச்சீல ஆலவட்டம் போடுதடி"

பாடலைப் பதிவுசெய்கிறாா். இத்தகைய நாட்டுப்புறப்பாடல் பதிவுகள் அகராதியில் பல இடங்களிலும் இடம்பெற்றுள்ளது.

நன்னூலில் இடம்பெறும் தூணி என்ற அளவுப்பெயா் கரிசல் வட்டாரத்தில் இன்றும் வழங்கப்படுகிறது. அதன் பொருள் 'மரக்கால்' என்ற அளவினைக் குறிக்கிறது என்பதையும், மூன்றாம் பாலினத்தவரைப் 'பொண்டுசட்டி' (ப:214) என்று குறிப்பதையும் இவ்அகராதி சுட்டுகிறது.

அகராதிகள், பொருள் விளக்குவன மட்டுமல்ல. ஒரு நாட்டின் - சமுதாயத்தின் சொல் வழக்காறுகள் மூலமாக அந்நாட்டு வரலாற்றை – மொழி வரலாற்றை – சொல்லின் பொருண்மை மாற்றங்களை – வழக்காறுகளை விளக்கும் அரிய பணியையும் செய்து வருவன.

அகராதிப் பணியைத் 'தீங்கற்ற அடிமைப்பணி' என்பா். எல்லாத் துன்பங்களும் இப்பணியில் உண்டென்பாா் ஜெ.ஜெ.ஸ்கேலிஜா். என்று அகராதியியல் வல்லுநரான பெ.மாதையன் குறிப்பிடுவாா். இருப்பினும் அவா், அகராதி எனும் பெரும்பணி பல்வகை அனுபவங்களையும் தரவல்லது என்பதையும் உரைக்கின்றாா்.

பொருளை அறியும் திறன், பொருளை வரையறைப்படுத்தி விளக்கும் திறன், இவற்றால் சிறந்த வட்டார வழக்கு அகராதியாகக் கரிசல் வட்டார வழக்கு அகராதி திகழ்கிறது. இவ்வரும்பெரும் பணியைச் செய்த கி.ராஜநாராயணன் அவர்கள் தமிழகராதியியலின் போற்றுதற்குரிய பெருமகனார்; வட்டார வழக்கு அகராதியைத் தொகுத் முதல்வர் மட்டுமல்ல முதன்மையாளரும் இவரே என்பதற்குத் தக்க சான்றாக இந்நூல் விளங்குகிறது என்பதில் அய்யமில்லை.

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கிராவின் ‘கதைசொல்லி’ இதழ்

முனைவர் எஸ் மீனாம்பிகை





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் எஸ் மீனாம்பிகை
கல்லூரி நூலகர்,
சுவாமி தயானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மஞ்சக்குடி.
Cell : 97159 75182
E-mail : s.meenambigaisdc@gmail.com

கிராவின் ‘‘கதைசொல்லி’’ இதழ்

முன்னுரை

கி.ரா. என்னும் கி.ராஜ்நாராயணன் தமது 40 வயதுக்குமேல் எழுதத் தொடங்கியவர். கதவு என்னும் சிறுகதை மூலம் தமிழ்ச்சிறுகதை உலகின் கதவை விசாலமாகத் திறந்து வைத்தவர். சிறுகதை, நாவல் கடிதங்கள், நாட்டுப்புறப்பாடல்கள் வரலாறு, வட்டாரச் சொல் அகராதி என்று தமிழின் பல்வேறு இலக்கியத் தளங்களிலும் தடம் பதித்தவர். மழைக்கு மட்டுமே பள்ளிகூடப் பக்கம் ஒதுங்கியவர். அதிகமாகக் கற்றது அனுபவப் பள்ளியில் தான். எந்தப் பட்டமும் பெறாத இவரைச் சிறப்புப் பேராசிரியராக நியமனம் செய்து பெருமை தேடிக்கொண்டது புதுவைப் பல்கலைக்கழகம்.



இவரது கதைகள் இந்தியாவின் இதயம் கிராமங்களிலும் தான் உள்ளது என்பதை உறுதி செய்கின்றன. விவசாயிகளோடு விவசாயிகளாக வாழ்ந்து அவர்களுக்கான போராட்டத்தில் இரண்டுமுறை சிறை சென்றவர். கரிசல் இலக்கியம் கண்ட முன்னோடியாக மதிக்கப்படுகிறார். கோபல்லபுரத்து மக்கள் நாவலுக்கு சாகித்திய அகாதமி இவருக்கு விருது வழங்கியது.

கதைச்சொல்லி

கதைகளின் தாய் நிலம் என்று கொண்டாடப்படும் நாடு நம் பாரதநாடு. கதைகள் தான் அடிப்படை தகவல் தொடர்பு சாதனமாக இங்கு இருந்தது வந்திருக்கிறது. கதைகள் தான் நம்மை உருவாக்கி வளர்த்தெடுகிறது. இன்று நாம் கூட்டுக் குடும்ப வாழ்வில் முறையிலிருந்து விலகிச் சென்றுவிட்டதால் வீட்டில் கதை சொல்ல யாரும் இல்லை. இன்றைய நவீன வாழ்வில் குழந்தைகள் கேட்கும் கதைகளும் பார்க்கும் கதைகளும் காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்கள் சார்ந்தவையாக உள்ளன.

நம் நாட்டில் இப்போது கதை சொல்லல் என்பது பரவலாக மக்களிடையே வந்து சேர்ந்திருக்கிறது. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பதைத் தாண்டி இன்று எண்ம தமிழ் பல எல்லைகளைக் கடப்பதால் கதைச் சொல்லி சாத்தியமாகி வருகிறது. நாள்தோறும் நல்ல கதைச்சொல்லிகள் பலர் உருவாகி வருகிறார்கள். கதை என்பது எளிய மனிதர்களின் கலை வடிவமாக இலக்கியமாக விளங்குகிறது.

கி.ரா.வின் நடை

கி.ரா.வின் நாவல் சிறுகதைகளில் கதை கூறுதல் என்பது இன்றியமையாத ஒரு கூறாக அமைகிறது கதைக்கூறும் விதத்தைப் பொறுத்து தான் அந்நூல் தனித்தன்மையுடன் அமைகின்றன. கி.ரா. படைப்பிலக்கிய நடை கரிசல் வட்டார வழக்கில் அமைந்த பேச்சு நடையாகும். இவற்றை கி.ரா. அவர்கள் நன்கு அறிந்து கொண்டு " கதைச்சொல்லி" என்ற இலக்கிய இதழை துவக்க விரும்பினர்.

கதைச்சொல்லி இதழ் துவக்கம்

1997இல் நண்பர்களுடன் இணைந்து "கதைச்சொல்லி" என்ற இலக்கியச் சிற்றிதழ் நடத்தினார். இது ஒரு காலாண்டு இதழ். கி.ரா. இதற்கு பதிப்பாசிரியராக பணியாற்றினார். வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன் இணை ஆசிரியர் மற்றும் பதிப்பாசிரியராக பொறுப்பு வகிக்கிறார். ஆலோசனை குழுவில் தி.க.சி., தோப்பில், முகம்மது மீரான், தீப.நடராஜர், க.பஞ்சாங்கம், கவிஞர் வெண்ணிலா, கோவை ரவீந்திரன் பாரததேவி, ஜனநேசல் ஆகியோர் இடம் பெற்றிருக்கின்றனர்.



அலுவலகம்

பத்திரிக்கை அலுவலகம் - பொதிகை - பொருநை - கரிசல், ஸ்ரீசைத்தன்யா அவின்யூ, 4-369 அண்ணாசாலை பாலவாக்கம், சென்னை - 600041 என்ற முகவரியில் செயல்படுகிறது.

தனி இதழ் ரூ.25உம், ஆண்டு சந்தா ரூ.100 உம் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. தனிப்பிரதிகள் உயர்மை பதிப்பகத்தில் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது கதைசொல்லி காலாண்டு இதழ் இலவசப் பதிப்பாக வெளிவருகிறது.

கதைச்சொல்லி இதழ் - ஜூன் ஆகஸ்ட் 2010

கதை சொல்லி இதழ், 2010 ஜூன் - ஆகஸ்ட் காலாண்டு இதழை ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் அமைப்பினை இக்கட்டுரையில் காணலாம்.

இவ்விதழின் பொருளடக்கமாக அதனை எழுதிய ஆசிரியருடன் 17 தலைப்புகள் உள்ளன. 1. கி.ரா. பக்கங்கள், 2. கே.எஸ்.ஆர் குறிப்புகள், 3. தீபாவளிச் சீட்டு மேலாண்மை பொன்னுசாமி, 4. வேனல்.கலாப்பிரியா, 5. தென்பத்தன் பெருமை - தோப்பில் முஹம்மது மீரான், 6. மாக்கடல் மனம். இளம்பிறை 7. கணக்காளி செல்லம்மாள் கழனியூரன், 8. மனுஷ்யபுத்திரன் கவிதைகள், 9. யாத்ரீகளின் வருமை சுமதி.இராம சுப்பிரமணியம், 10. மழை வரும் பாதை கிருஷி, 11. செத்தும் கொடுத்தான் - குர.ராதாகிருஷ்ணன், 12. சீனாவைப் பார்த்தேன், பேரா.இராம.இராமநாதன், 13. கரண்டு மரம் ஆலா, 14. கவிதையும் பத்திரிக்கையும் வி.நம்பி, 15. அப்படிப்போடு கி.ரா. திருமலையப்பன், 16. குப்பனுக்கு கல்யாணம், 17. கலைஞரின்

உலகத்த தமிழ் செம்மொழி மாநாடு, வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன் இனி இத்தலைப்புகளில் இடம்பெறும் செய்திகளைக் காணலாம்.

கி.ரா. பக்கங்கள் நட்பின் அடையாளம் என்னும் முதல் கட்டுரையில் தமது 45 ஆவது வயதில் பஞ்சு என்ற நண்பர் கிடைத்ததையும் அவரது செயல்பாடுகளையும் கூறுகிறார். பஞ்சுவும் கி.ராவும் இணைந்து புதுவை வானொலியில் சில நிகழ்ச்சிகள் செய்ததை பதிவு செய்துள்ளார். “கிடை” என்னும் தமது நாவலை நாடகமாக ஆக்கி ஒலிப்பரயதையும் குறிப்பிடுகிறார். கி.ரா. பக்கங்கள் 2இல் “பஞ்சுவடியிலிருந்து ராஜபவனத்திற்கு” என்னும் தலைப்பில் டி.கே.சியின் பேரன் தீப.நடராஜன் தமது இல்லத்திற்கு “பஞ்சவடி” என்று பெயர் வைத்ததையும் கி.ரா. தன் இல்லத்திற்கு “ராஜபவனம்” என்று பெயர் இட்ட நிகழ்வையும் கூறுகிறார்.

கே.எஸ்.ஆர் குறிப்புகள்

இத்தலைப்பில் இமயமலை எதிர்காலத்தில் அழிந்து விடும் என்ற விஞ்ஞானிகள் கருத்துகளை ஆய்வு செய்கிறது. 2.உழவன் வாழ்வில் வறுமை ஏன் என்ற தலைப்பில் ஐந்தாண்டுத் திட்டங்களில் விவசாயத்திற்கு ஒதுக்கீடு குறைந்து வருவதும் விவசாயிகள் ஆண்டுதோறும் தற்கொலை செய்துகொண்டு வருவது பற்றியும் விவசாயின் முதுகெலும்பு முறிந்துவிட்டது என்றும் விவசாயம் நலிந்து வரும் செயல்பாடுகளை குறிப்பிடுகிறார். அது அக்காலம் என்னும் தலைப்பில் பாரம்பரிய விவசாய முறைகள் மாறி வணிக ரீதியாக எல்லாம் ஆகிவிட்டதை ஆசிரியர் தமது ஆதங்கத்தை பதிவு செய்கிறார்.



திராவிடப் பல்கலைக்கழகம்

திராவிடப் பல்கலைக்கழகம் ஆந்திர மாநிலத்தில் குப்பம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. தமிழ் மொழியிலிருந்து பிறந்த தெலுங்கு, மலையாளம், கன்னடம் சிறக்க இந்த பல்கலைக்கழகம் தேவை. தமிழக அரசு இந்த பல்கலைக்கழகத்திற்கு தமது நிதியை வழங்குகிறது. இப்பல்கலைக்கழகம் நான்கு மொழிகளின் கூட்டு அமைப்போடு சிறப்பாக செயல்பட வேண்டும் என்று தமது ஆதங்கத்தை பதிவு செய்துள்ளார். சமண சமயத்தினர் மையமாக கும்பத்தில் (குடிப்பள்ளி) நான்கு மொழிகளும் ஒரு காலத்தில் புழக்கத்தில் இருந்த செய்தியையும் அறியமுடிகிறது.

தீபாவளிச் சீட்டு

கிராமத்தில் தீபாவளிக்காக மூன்று மாசத்துக்கு முந்தியே கூலி உழைப்பாளிகள் சீட்டு கட்டுவார்கள். இதற்கு "தீபாவளிச்சீட்டு என்று" பெயர். தீபாவளி சமயத்தில் இத்தொகையை எடுத்து தீபாவளியை கொண்டாடுவார்கள் என்றும் செய்தியை இங்கு மேலாண்மை பொன்னுச்சாமி பதிவு செய்கிறார்.

தென்பத்தின் பெருமை

கரிசல் மண்ணில் பச்சிலை கொண்டு வைத்தியம் பார்ப்பவரின் செயல்பாடுகளை ஒரு தொடர்கதையாக தோப்பில் முகமது மீரான் கூறுகிறார். பச்சிலை மருந்து பிடுங்கவும் மருந்துக்குப் பயன்படும் உயிர்ப் பிராணிகளைப் பிடிக்கவும் தேர்ச்சி பெற்ற ஆசாமிகள் அங்கு இருந்தனர். பச்சிலை மருந்து எங்கே எங்கே கிடைக்கும் என்பதையும் சிலபிராணிகள் எந்த பொந்தில் பதுங்கியிருக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். இவர்கள் நோயாளிகளிடத்தில் "என்ன செய்யுது" என்று கேட்க மாட்டார்கள். நாடியைப் பார்த்து நோயை கூறி மருந்து கொடுப்பார்கள். நோய் குணமாகிவிடும் என்ற செய்தியை இத்தொடர்கதை மூலம் பதிவு செய்கிறார்.

கணக்காளி செல்லம்மாள்

இதுவும் கழனியூரன் எழுதிய தொடர்கதை, இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. கிராமத்தில் பப்புத்தாத்தா என்பவர் தம்மிடம் மனத்தில் கணக்கில்லாத புதிர்கணக்குகள் கொண்டிருந்தார். தாத்தா அக்கிராமத்தில் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு ஒரு மரத்து நிழலில் புதிர்கணக்குகள் போடுவார். புதிர்கணக்கு (மணக்கணக்கு) சரியான விடையைச் சொல்லும் பிள்ளைகளுக்கு பப்புத்தாத்தா உடனே தன் வேட்டி முடிச்சுகளை அவிழ்த்து அதிலிருக்கும் காலணாவை பரிசாகக் கொடுப்பார். இவரிடம் கணக்கு கற்றுக்கொண்ட செல்லம்மாள் என்னும் தலித்பெண் அக்கிராமத்திற்கே கணக்கு சொல்லும் பெண் கணக்காளியாக வளர்ந்துவிட்டாள் என்பதை இக்கதை மூலம் தெரிவிக்கிறார்.



சீனாவைப் பார்தேன்

பேரா.இராம.இராமநாதன் சீனா சென்று 27 நாட்கள் தங்கி இந்தியநாட்டிற்கு திரும்பிய பயணநிகழ்ச்சியை சுவைபட கூறுகிறார்.

கலைஞரின் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு

இக்கட்டுரையை வழக்கறிஞரும் கதைச்சொல்லி இதழின் இணை ஆசிரியருமான கே.எஸ்.இராதாகிருஷ்ணன் எழுதியுள்ளார். கலைஞர் முதல்வராக இருந்த போது உலகத்தமிழ் செம்மொழி நாடு கோயம்புத்தூரில் நடந்தது. தமிழ் செம்மொழி என்று அறிவிக்கப்பட்ட பின் உலகத்தமிழர்கள் கூடும் உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டை கோவையில் முதல்வர் கலைஞர் சிறப்பாக நடத்தினார். மேலும் 1966இல் கோலாலம்பூரில் முதல் உலகத்தமிழ் மாநாடும் பேரறிஞர் அண்ணா ஆட்சியில் 1968இல் சென்னையில் உலகத்தமிழ் மாநாடும், 1981இல் எம்.ஜி.ஆர். ஆட்சியில் மதுரையில் உலகத்தமிழ் மாநாடும், 1995இல் ஜெயலலிதா ஆட்சியின் தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளையும் தொகுத்து அளித்துள்ளார். இக்கட்டுரை உலகத்தமிழ் மாநாடுகள் முதன்முதலில் எப்போது உருவானது என்பதையும் அதனை நடத்தியவர்கள் பற்றியும் கலந்து கொண்டவர்கள் பற்றியும் இக்கட்டுரை தொகுத்து அனைவருக்கும் தெரியும்படி அமைந்துள்ளது.

நாட்டுப்புற வழக்கில்கதைச்சொல்வதில் கி.ராஜநாராயணன் இன்றைய தமிழ் படைப்பாளர்களிடையே தனித்த இடத்தைப் பெறுகிறார். அதே போன்று மேலாண்மை பொன்னுசாமி, தோப்பில் முகம்மது மீரான் ஆகியோர் படைப்புகளும் கரிசல் பகுதி மக்களின் வாழ்க்கை முறைகளும், பண்பாடுகளும் சித்தரிக்கப்படுவதாக அமைந்துள்ளன.

கதைச்சொல்லி இதழ் (ஜுன் - ஆகஸ்ட் 2010) 17 தலைப்புகளில் சிறுகதைகள் மட்டுமே இடம்பெறவில்லை. மேலும் பயணக்கட்டுரை, கவிதை, இசை, நாட்டு மருத்துவம், உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டு செய்திகள், கவிதைகள் ஆகியவையும் இடம்பெற்றிருந்தது ஒரு சிறப்பு தன்மையே ஆகும்.

<u>துணைநூல்கள்</u>

1. கதைசொல்லி - காலாண்டிதழ், (ஜுன் - ஆகஸ்டு 2010) இதழ் 24. ஆசிரியர் கி.ராஜநாராயணன், பொதிகை - பொருநை - கரிசல், சென்னை. 600041.

2. கதை சொல்லி காலண்டிதழ், ஜனவரி 2021, இதழ் 36.

3. தினமணி, 19.5.2021

4. முருகேசன், ப.ஆ. 20நூற்றாண்டு தமிழ் இலக்கியங்களும், அறிஞர்களும் தொகுதி - 1, தமிழ்த்துறை, கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் 29, 2017.



****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ராவின் "கோமதியும்"
சினிமாவின் "கௌரியும்"

சண்முக விமல்குமார்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

சண்முக விமல் குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடப் பல்கலைக் கழகம்,
குப்பம் – ஆந்திரா: 517 426
90030 64241
aishavimall@gmail.com

கி.ரா.வின் ‘கோமதி’யும் சினிமாவின் ‘கௌரி’யும்

ஒரு நல்ல இலக்கியப் பிரதிக்கான அடையாளம் என்பது அது தன் சம காலத்தின் அனைத்து விதமான பிற்போக்குத் தனங்களையும் கைவிட்டுவிட்டு, ஒடுக்கப்பட்ட, விலக்கப்பட்ட மனிதர்களின், மனிதரல்லாதவைகளின் மீது கரிசனத்தை, ஏற்பினை பொது புத்திக்குள் குறைந்த அளவிலாவது கொண்டு வந்து சேர்ப்பதாக இருக்க வேண்டும் எனலாம்.



கற்பு குறித்த இன்றைய புரிதல்களை மறு நிர்ணயம் செய்யும் வகையில் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட ‘அக்னிப் பிரவேசம்’ என்கிற கதையினை இதற்குரிய சிறந்த உதாரணமாகச் சொல்ல முடியும். மழையின் நிமித்தம் காத்திருந்தப் பெண்ணை, தனது காரில் ஏற்றி அழைத்துச் செல்லும் ஆடவன், அவளோடு பாலியல் உறவும் வைத்துக் கொள்கிறான். நடந்ததை ஓர்மையுற்று வீடு திரும்பும் அவளை கவனிக்கும் நடந்தவற்றை அறிந்து கொண்ட பின்பு, அவளுடைய தலையில் தண்ணீரை ஊற்றி அவளுடைய அச்சத்தைப் போக்குகிறாள். இதுதான் ’அக்னிப் பிரவேசம்’ கதையின் சாரம்.

பெண்ணின் ‘கற்பு’ தொடர்பான பல்வேறு பிற்போக்கான தொன்மங்கள் நிலவி வந்த காலத்தில், அதிலும் ’ஆச்சாரமான’ பார்ப்பனக் குடும்பத்தில், பாலியல் தொந்தரவுக்கு ஆளான பெண்ணின் (கணவனை இழந்த - சிங்கிள் மதர்) தாய் வெறும் தண்ணீரை ஊற்றி அவளை அனைத்து விதமான குற்றம், அச்ச உணர்வுகளிலிருந்து மீட்பதாக ஜெயகாந்தன் எழுதியது அன்றைய தேதியில் எவ்வளவு பெரிய சலனத்தை உருவாக்கியது என்பதை நன்கு அறிவோம்.

அந்த வகையில், கரிசல் நாட்டு மக்களின் வாழ்வியலை தனது படைப்புகளுள் கொண்டுவந்து அவர்களின் மண் மீதான பிடிமானத்தையும், அம்மண்ணின் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட மனிதர்களின் வாழ்வியலையும், அவர்களின் மானுட மேன்மைகளையும் எடுத்துக் காட்டியவர் எழுத்தாளர் கி.ராஜநாராயணன்.


நவீனத்துவ அகப் போராட்டமும், நகர வாழ்வும், பிராமண சமூகப் பின்னணி கொண்ட பாத்திரங்களும் தமிழின் நவீன இலக்கியமாக இருந்த நிலையில், நாட்டார் கதையியலின் எடுத்துரைப்பையும், நாட்டு மக்களையும் எடுத்துக் கொண்டு, அதனை நவீனமாகவும் தந்தவர் கி.ரா. அதன் பொருட்டே அவருடைய பாத்திரங்கள் அன்றும் இன்றும் நம்மோடு இருக்கின்றன.

வெறும் கதை, நாவல் என்று மட்டுமில்லாமல் நாட்டார் கதைகள், பாலியல் கதைகளைத் தொகுத்தளிப்பது, வழக்குச் சொல் அகராதியைத் தொகுத்தும் பதிப்பித்தும் தருவது உள்ளிட்ட முன்னோடி செயல்பாடுகளிலும் அவர் ஈடுபட்டு வந்தார்.

குறிப்பாக, சமூகத்தால் ஒதுக்கப்பட்ட திருநங்கைகள், யாசகர்கள் உள்ளிட்டோரின் உணர்வுகளையும், மேன்மைகளையும் கதையாக உருவாக்கியவர்களுள் கி.ரா. எனும் பேராளுமை முக்கியமானவர்.

திருநங்கையினர் எனும் மாற்றுப் பாலினத்தவர்

ஜாதிய கட்டுமானம் மிகவும் இறுக்கமான தமிழ்ச் சமூகம் என்றில்லாமல், 'முற்போக்கானது என்று அறியப்படும்' மத மேலாதிக்கம் கொண்ட மேலை நாடுகளிலும் கூட ஆண் மூ பெண் என்கிற இருமை பால் எதிர்வு மட்டுமே பிரதானமாக இருந்தது. அவர்கள் அல்லாத மாற்று பாலினத்தவர்களை அங்கீகரிக்கும் போக்கு மிகவும் பிந்தியே அச்சமூகங்களிலும் ஏற்பட்டது.



இந்த ஏற்பு நிகழ, பல்வேறு செயல்பாடுகள் சிறிதும் பெரிதுமாக அச்சமூகங்களிலும், இந்தியாவிலும் நிகழ்ந்து வந்தன. சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் கூட, 'உடன் கட்டை ஏறுதல்' என்ற 'சதி' போன்ற பெண்கள் மீதான கொடுமையான அடக்குமுறைகள் நிலவி வந்த, அதற்கெதிரான ஆங்கிலேயே சட்டங்கள் உருவாக்கப்பட்ட காலத்திலேயே, பெண்களினும் ஒடுக்கப்பட்ட பாலினத்தவர்களான மாற்றுப் பாலினத்தவர்களுக்கு ஆதரவாக வழக்காடி இருக்கிறார். இது நினைத்துப் பார்க்கத் தக்கது.

இப்படியான அறிஞர்கள், செயல்பாட்டார்கள், இலக்கியவாதிகளாலேயே மாற்றுப் பாலினத்தவர்களுக்குரிய ஏற்பு ஓரளவாவது இச்சமூகத்தில் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில், தீபம் இதழில் 1964 -ல் வெளிவந்த கி.ரா.வின் 'கோமதி' கதையானது தமிழ்ப் புனைவு வரலாற்றில் மிக மிக முக்கியமானது. இக்கதையின் முக்கியத்துவமானது ஏற்கனவே கூறியதைப் போல, மாற்றுப் பாலினத்தவருக்கு - குறிப்பாக திருநங்கைகளுக்கு - உரிய ஏற்பும், உரிமையும் நிலவாத காலத்தில், மனித உணர்வு அடிப்படைகளுள் ஒன்றான 'காதல்' என்பது ஆண், பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல், திருநங்கைகளுக்கும் உரியது என்பதை கதையாக்கித் தருகிறது என்பதுதான்.

திருநங்கைகளை இன்றும் அருவருக்கத்தக்க உயிரிகளாக, அஃறிணைகளாக பலர் பாவிக்கும் நிலையில், அவர்களின் காதலை உணர்வோட்டத்துடன் கதை ஆக்கி, அவர்களைப் பொருட்படுத்திய பண்பு கி.ரா.வின் கதை உலகின் அடிப்படைகளுள் ஒன்று.

அத்தகைய இந்தக் கதையின், முக்கியத்துவத்தினை, சமீபத்தில் வெளிவந்த ‘மார்க் ஆண்டனி’ எனப்படும் திரைப்படத்தில் வரும் திருநங்கையான ‘கௌரி’ என்ற பாத்திர உருவாக்கத்துடன் ஒப்பிட்டு கி.ரா.வின் கதை உருவாக்கத்தினை எடுத்துக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

’கோமதி’ கதைச் சுருக்கம்

பெண் குழந்தையாக இருக்குமோ என்று கோமதி என்று பெயர் சூட்டப்பட்ட கோமதி செட்டியாருக்கு வயது 30. பெண்களோடு மட்டுமே பழகுபவளாக அறியப்படும் கோமதி, ஆண்களுடனான விளையாட்டு என்றால் அம்மா, அப்பா விளையாட்டு போன்றவைதான் (2020: 59)

பெண்ணின் உடல் மொழிகள் கொண்ட கோமதியின் செயல்களை அவ்வூர் பெண்கள் வித்தியாசமாகப் பார்ப்பதில்லை. கோமதி சமைப்பதில் வல்லவள் என்பதால், அவளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறாள் ‘குமாரி சுலோ’. அங்கு அவளுடைய அண்ணனான ’ரகு’வைக் காணும் நாளில் அவன் மீது காதல் வயப்படுகிறாள் கோமதி. சந்தேகத்திற்கு இடமில்லாமல் அக்காலச் சூழலில் அவளுடைய காதல் தோல்வியைத் தழுவுகிறது. இதுதான் ’கோமதி’ கதையின் சுருக்கம்.



மார்க் ஆண்டனி கதைச் சுருக்கம்

இக்கதை மார்க் என்ற நாயகன், அவனுடைய தந்தையான ஆண்டனி மற்றும் வளர்ப்புத் தந்தையான ஜாக்கி ஆகியோருடைய கதையாகும். அடிப்படையில், இரு தந்தையர்களும் கேங்க்ஸ்டர்ஸ், இவர்களுள் ஜேக்கி தன் உற்ற நண்பனான ஆண்டனியைக் கொன்றதோடு, அவனுடைய மனைவியையும் கொன்று விடுகிறான்; அப்பழியை ஆண்டனியின் மீது சுமத்திவிட்டு, அவனுடைய மகனான மார்க்-ஐ தன்னுடனேயே வைத்துக் கொள்கிறான்.

இவற்றிற்கிடையில், இறந்த காலத்திற்குப் பேசக்கூடிய ஒரு தொலைப்பேசியை (telephone) சிரஞ்சீவி என்ற விஞ்ஞானி 1975- ல் கண்டுபிடிக்கிறார்.

இந்தக் கருவி பின்னாட்களில் 1995 -ல் மார்க்கின் கைகளுக்கு தற்செயலாகக் கிடைக்கிறது. இந்தக் கருவியை வைத்து மார்க் எப்படி தன் தந்தைத் தாயைக் கொல்லவில்லை என்பதைத் தெரிந்து கொள்கிறான்; அந்தப் பேசியைப் பயன்படுத்தி ஆண்டனியை அவன் கொலையுற்றதிலிருந்து எப்படி மீட்கிறான் என்பதே மீதி கதை.

இக்கதை இக்கட்டுரைக்கு முக்கியமில்லை; மாறாக, கதையின் துணை கதாப்பாத்திரமான ‘கௌரி’யே முக்கியம் என்பதால், அவளைக் குறித்துக் காண்போம்.

சினிமாவின் கௌரி

மார்க் ஆண்டனி படத்தின் துணை கதாப்பாத்திரம் 'கௌரி' என்றழைக்கப்படும் திருநங்கையாகும்.

கௌரி ஜாக்கினுடைய மனைவியின் சகோதரன் ஆவான் (பிறப்பளவில்). இவள் ஜேக்கியுடனும், பின்னாட்களில் அவனுடைய மகனான மதன் பாண்டியனுடனும் வாழ்ந்து வருகிறாள்.

மதன் பாண்டியனின் கையாளாகவும், நகைச்சுவைக் கதாப்பாத்திரமாகவும் உருவாக்கப்பட்டிருக்கிறாள் கௌரி. எனினும், அந்த நகைச்சுவையானது திருநங்கைகளை மோசமாக சித்தரிப்பதன் வழியாகத் திரட்டித் தரப்படுகிறது; இது ஏற்கனவே வழக்கிலிருக்கும் ஆண், ஆண் குறி மைய நோக்கு நிலை பாலினச் சிந்தனைகளுக்குத் தீனி போடுவதாக உள்ளது.

கோமதி, கௌரி - ஒற்றுமைகள்



இரண்டு கதாப்பாத்திரங்களை ஒப்பு நோக்குவதற்கு அவர்கள் இருவரும் ஒரே பாலினத்தவர்களாக இருப்பது மட்டும் போதாது; அவ்விரு பாத்திரங்களையும் ஒப்பிடுவதற்கான வேறு சில காரணங்களையும் சொல்லி ஆக வேண்டும்.

அந்த வகையில், மார்க் ஆண்டனி படத்தில் கௌரியைப் போன்றே பல திருநங்கைகள் வருகின்றனர். அவர்களை விடுத்து கௌரி மட்டும் ஏன் கோமதியோடு ஒப்பிடத் தக்கவள் ஆகிறாள்??

1. மார்க் ஆண்டனி படத்தில் முன்னரே குறிப்பிட்டதைப் போல, திருநங்கையர் சமூகத்தினர் மிகவும் இழிவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். கையாள், காதலிக்க உரிமையற்றவள், காதலிக்கப்பட தகுதியற்றவள், தனக்கு உதவி செய்தவரை காலில் விழுவது போல் விழுந்து, கத்தி கொண்டு தாக்கக் கூடியவர்கள் என்கிற பண்புகளுடனேயே இந்தப் படத்தில் அவர்கள் சித்தரிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 'கௌரி' மட்டுமே பெயர் அடையாளம் கொண்ட கதை நெடுகிலும் வரக்கூடிய தனித்த கதாப்பாத்திரம்.

2. ஆணாகப் பிறப்பினும் தொடக்கத்திலிருந்தே பெண் பெயரிலேயே கோமதியும், கௌரியும் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

3. அவர்கள் தங்களைப் பெண்களாக உணர்ந்தாலும், ஜடை தவிர்த்த உடுப்பு போன்ற உருவ மாற்றத்தில் அவர்கள் இருவருமே முழு பெண்ணாக மாறுவதில்லை; அல்லது யாருமற்ற இருட்டில் மட்டும் உருமாறுகின்றனர் (கோமதி) (2020: 67).

4. தனக்கு நெருக்கமான பெண்களுக்கு உற்ற ஆண்களைக் காதலிக்கின்றனர். கோமதி, தன்னை வேலைக்கு அழைத்து வந்த சுலோவின் அண்ணனையும், கௌரி தன் தங்கையின் கணவனையும் காதலிக்கின்றனர்.

5. இரண்டு கதைகளிலுமே பிரிவின் அடையாளமாக 'பூ' ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

ஒப்பீடு

மேற்கண்ட ஒற்றுமைகளே இந்த இரண்டு பாத்திரங்களும் ஒப்பிடத் தக்கவை என்பதை உறுதிபடுத்தப் போதுமானவையாக உள்ளன. எனவே, அடுத்ததாக, இந்த இருவேறு பாத்திரங்களும் அதனதன் வார்ப்பில் ஒன்று மேம்பட்டதாகவும் மற்றுமொன்று கீழானதாகவும் எங்ஙனம் அமைகின்றன என்பதைக் காணலாம்.

1. கோமதி பெண் சாயல் கொண்டவளாக தன்னை அடையாளம் கண்டு கொள்ள ஆரம்பிக்கும் போதிருந்தே அவள் ஆண்களுடனான தன் புழங்கு வெளியைக் குறைத்துக் கொள்கிறாள். தனக்கு அணுக்கமான 'பெண்கள் சூழ் வெளி'யையே தான் தேர்ந்தெடுத்துக் கொள்கிறாள்.



ஆனால், ஜாக்கியினுடைய மனைவியின் உடன் பிறந்தவன் (வள்) என்று சொல்லப்படும் கௌரி ஆனவள், குறைந்தது தன் சகோதரியுடன் கூட பழக நேரும் காட்சிகள் அமைக்கப்பட வில்லை. (கௌரிக்குத் தொடர்புள்ள அந்த ஒரே பெண்ணும் காட்சிப் படுத்தப்பட்ட வேகத்திலேயே கொலை செய்யப்படுகிறாள்.) அவள் முழுக்க முழுக்க ஆண்களுடன் மட்டுமே வாழுமாறு உருவாக்கப்பட்டுள்ளாள்.

2. கோமதியின் செயல்களைப் பார்க்கும் யாருக்கும் முதலில் சிரிப்பே ஏற்படினும், (அப்போதைய கலாச்சார சூழல் அது) அவளுடைய சமையலைப் பார்த்து வாயடைத்துப் போயினர் என்று கதையில் சொல்லப்படுகிறது (2020: 61) .

கோமதியானவள், நன்றாக சமைக்கக் கூடியவள் என்றும், அவளால் யாருக்கும் கண்ணீர் வரும்படி ஒப்பாரி பாடல்கள் பாட முடியும் என்றும் கதையில் வருகிறது (2020: 59).

ஆனால், கௌரி இப்படியான தனித்திறன்கள் ஏதுமற்றவளாக தட்டையான நிலையில் மட்டுமல்லாமல் தாழ்வானவளாகவும் நடத்தப்படுகிறாள்.

3. கோமதி நேசிக்கும் ரகு அவளைக் கண்ணத்தில் அறைந்துவிடுகிறான்; ஆனால், அவள் மீது கரிசனப்படும் சுலோ அவளுக்காக ரகுயிடத்தில் கனிந்து பேசுகிறாள். பிறகு, ரகுவுமே தன் செயலுக்காக வருந்துகிறான்; அடுத்து அவனுடைய அந்த வருத்தமானது அவளை சமாதனம் செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சியிலும் வெளிப்படுகிறது (2020: 64)

ஆனால், கௌரி ஜாக்கி, மதன் பாண்டியனால் ஏசப்படும் போது அவளுக்காக யாரும் இரக்கப்படுவதில்லை. கௌரிக்கென ஆறுதலாக ஒரு கதாபாத்திரம் கூட அந்தப் படத்தில் இல்லை.

4. கோமதியை அடித்ததிற்காகப் பின்னர் வருத்தப்படும் ரகு அவளை சமாதானப்படுத்த செவ்வந்திப் பூக்களையும், கருவளையல்களையும் வாங்கித் தருகிறான் (2020: 64). இரவில் அவனற்ற தனிமையில் அவள், சேலை உடுத்தி முழு பெண்ணாக மாறி செவ்வந்தியையும், கருவளையல்களையும் அணிந்து கொள்கிறாள் (2020: 67).

மார்க் ஆண்டனி படத்தின் திரைக்கதையின் படி இடையில் ஒருமுறை ஜேக்கி இறந்துவிடுகிறான். அப்போது அவன் இறந்தது விட்டதால், பூ, பொட்டு இல்லாமல் தான் கழித்ததாகவும், மீண்டும் அவன் உயிரோடு இருப்பதை எண்ணி மகிழ்ந்து, அவற்றை மீண்டும் சூட விருப்பதாகவும் சொல்கிறாள்.

ஜாக்கிக்கும் கௌரிக்கும் இடையில் நடந்த அந்த உரையாடல்

"ஜாக்கி கண்ணா எப்படி இருக்குற?



கௌரி நீயா.. நீயுமா அங்க??(1:44:00)

நான் இன்னைல இருந்து பூவும் பொட்டும் வச்சுக்கிட்டு நல்லா ஜாலியா சந்தோஷமா இருக்கப் போறேன்.

பொட்டா.. ஏண்டா...

நீ போயிட்டேங்குற சோகத்துல.. பொட்டே இல்லாம வெதவ மாதிரி இருந்தேன். இனிமே உன்ன நம்பி நெத்தியிலே பொட்டு வச்சேன் மத்தியிலே.

என்னடா கொடும.

இனிமே தேவத மாதிரி ஜாலிய வாழப் போறேன் நானு...

அவனா நீ.. ∴போன அவன்ட்ட குடு"

இந்த உரையாடல், திருநங்கைகளை மட்டுமல்லாது, ஏனைய மாற்று பாலினத்தவர்களையும் கீழ்மைப்படுத்துவதாக உள்ளது.

இந்த வகையில், 1964 ல் கி.ரா. எழுதிய கதைக்கும், 1975, 1995 -ல் நடக்கும் கதையான மார்க் ஆண்டனி என்கிற சினிமா கதைக்கும் இடையே உள்ள திருநங்கை சித்தரிப்பு வேறுபாடு வெளிக்கொணரப்படுகிறது.

காலத்தால் பெரிதும் முந்தைய கி.ரா.வின் திருநங்கை குறித்த பிரதியானது மிகவும் முற்போக்கானதாகவும், காலத்தால் பிந்தைய, அதுவும் திருங்கையர் குறித்த விழிப்புணர்வு ஓரளவு

ஏற்பட்டுவிட்ட காலத்தில் வெளிவந்த மார்க் ஆண்டனி படத்தில் திருநங்கையர் குறித்த சித்தரிப்பு மிகவும் பிற்போக்கானதாகவும் உள்ளது. இதுவே, இந்த ஒப்பு நோக்கலின் வழி இவண் பெறப்பட்டது. அன்றி, இந்த ஒப்பு நோக்கலின் முடிவே, கி.ரா.வின் எழுத்துலகை மேம்பட்டதாக அடையாளப்படுத்த போதுமானதாக உள்ளது.

<u>பயன்பட்ட பிரதிகள்</u>:

01] ராஜநாராயணன், கி. (2020). கி. ராஜநாராயணன் கதைகள். தஞ்சாவூர்: அகரம்.

02] ஆதிக் ரவிச்சந்திரன். இயக்கம். (2023). மார்க் ஆண்டனி. தளம்: அமேசான் ப்ரைம்.

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

ஜடாயு

இரா ஷர்மிளா





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை


தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

இரா ஷர்மிளா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும்
ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 95.
sharmila.tamil@drmgrdu.ac.in

ஜடாயு

முன்னுரை

சங்ககாலம் தொடங்கி இன்றைய காலம் வரை நியாயமற்ற சமுதாயம் மக்கள் வாழ்வியலைச் சிறக்க வழி வகுக்காது என்று எண்ணியவர்கள் நம் தமிழ்குடிகள். அறத்தின் பயன் மட்டுமே மக்கள் வாழ்வை வளப்படுத்தும். அறமற்ற செயல் வாழ்வை பாழ்படுத்தும் என்பதை நம் தமிழ் சான்றோர்கள் நமது இலக்கியங்களின் வழியாக நமக்கு நினைவுப்படுத்திக் கொண்டுதான் உள்ளனர். அவ்வகையில் எழுந்ததோ இந்த ''ஜடாயு'' சிறுகதை என்று சிந்திக்க வைக்கிறது. நல்ல பொருத்தமான கதைத்தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது எனலாம். இச்சிறுகதையில் வன்கொடுமைகளின் வாசம் வீசப்பட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. அந்த வன்கொடுமைகளில் இருந்து பெண்களை மீட்கும் ஆண்களும் இதே சமுதாயத்தில்தான் உள்ளனர். ஆண் சமூகத்தில் ஜடாயுக்களும் வாழ்ந்து கொண்டுதான் உள்ளனர் என்பதை மறுக்கப் போவதுமில்லை என்று கி.ராவின் இந்த சிறுகதை எடுத்துக்காட்டுகிறது.




தாத்தைய நாயக்கர்

தாத்தைய நாயக்கர் ஒரு விவசாயி, சிரித்த முகத்துடன் சீதேவியாய் இருப்பவர். அறுபது வயது கிழவர். வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை மட்டுமே வெளியூர் சென்று தன்னுடைய வீட்டிற்குத் தேவையானப் பொருட்களைத் தானேதன் தலையில் சுமந்து வாங்கி வருவார். அன்றும் அப்படிதான் கோயில்பட்டிக்குச் சென்று பொருட்களை வாங்கி ஊருக்கு ஒதுக்குபுறம் உள்ள கதிரேசன் செட்டியார் வீட்டில் பொருட்களை வைத்துவிட்டு கண் அயர்ந்தார். ஒரு பெண்ணின் அபயக்குரல் கேட்டு கண் விழித்தார். யாரும் உதவாத அந்தப் பெண்ணிற்கு அவர் மட்டும் உதவ முன்வந்தார். அதுவும் வீணானது. புருசன் பெண்சாதி தகராறு என்று முடுக்கிவிடப்பட்டது. தாத்தையரும் அடங்கிப்போனார். படுக்க சென்றவருக்கு உறக்கம் வரவில்லை. மீண்டும் அந்த பெண்ணின் குரல் கேட்டது. குரல் வந்த திசை அறிந்து ஓடினார். அவர் நினைத்ததைப் போன்று அங்கு நடந்தேற ஆயத்தமானது. தன்னால் இயன்ற வரை அந்த பெண்ணைக் காக்க போரடினார். தாயே என்று அவர் அந்த பெண்ணை அழைத்தது அவர் உள்ளத்தில் அவளைக் காக்க நினைத்த அவரின்

மனப்போராட்டத்தைக் காட்டுகின்றது. இறுதியில் நான் இறந்தாலும் அவளைக் காக்க முடியவில்லையே என்ற வருத்தமே முதலில் முன்னெடுத்தது. பின்புதான் அவரின் மகளும் பேரனும் நினைவுக்கு வந்தனர் என்று கி.ரா அவர்கள் தாத்தையரின் சிறப்பைச் சிறுகதையில் இழையோட விட்டிருக்கிறார். சிறுகதையைப் படிப்போர் ஒரு கதாபாத்திரத்தின் மேன்மையைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் அது அச்சிறுகதை ஆசிரியரின் படைப்பில்தான் உள்ளது. இங்கு தாத்தையாரை யாவரும் மதிக்கக் காரணமும் ஆசிரியரின் படைப்பாளுமைதான் என்பதை உணரவேண்டும். தாத்தையரைப் போன்று இன்றும் பலர் சமுதாயத்தில் வலம் வந்து கொண்டுதான் உள்ளனர். அதனால்தான் இன்றும் சில இடங்களில் சில நேரங்களில் மட்டும் பெண்கள் சுதந்திர தேசத்தை உணருகின்றனர்.

பெண் எனும் வரலாறு




வால்மீகி காலம் முதல் கி.ராஜநாராயணனின் காலம் வரை மட்டுமல்லாது அதனைத் தொடர்ந்தும் பெண் வரலாறு என்பது சமுதாயத்தில் கட்டுண்டு கிடப்பதாகவே உள்ளன. எத்தனை பலம் அறிவிலும் உடலிலும் பெற்றாலும் ஆற்றல் பெற்றிருந்தாலும் பெண் அடிமையாய் வாழும் நிலை எங்கேயாவது ஒரு இடத்தில் நடந்து கொண்டுதான் உள்ளது. இந்த நிலையே ஓய்ந்திராத நிலையில் பெண்களுக்கு பல வன்கொடுமைகள் நிகழ ஆரம்பமானது எனலாம். இது சமுதாயத்தில் பெண்களின் வளர்ச்சியைப் பாதித்தது. பெண்ணின் அடிமை வாழ்க்கையைக் காட்டிலும் வன்கொடுமை என்பது பெண்களுக்கு எதிராக எல்லா இடங்களிலும் நடந்தேறின. பெண் மீண்டும் ஒடுக்கப்பட்டால். ராமாயணத்தில் சீதைக்கு எதிராக ராவணன் சீதையை வானூர்தியில் ஏற்ற தடுக்க வந்த ஜடாயு சிறகுகளை இழந்து இறந்தது என்பது இராமாயணம் கூறும் கதை. அதைப்போல இச்சிறுகதையில் அப்பாவி பெண்ணைக் காக்க நினைத்த தாத்தைய நாயக்கரும் தன் கைகளை இழந்து இறக்கிறார். என்ன ஒரு ஒற்றுமை அங்கு சீதை மீட்கப்படவில்லை அதற்கு மாறாக இலங்கையில் இராவணன் கோட்டையில் சிறைப்பெற்றாள். அவளை மீட்க எண்ணி இராமனும் போர் புரிந்தான் மீட்டான். இங்கு போலம்மாளையும் மீட்க யாரும் இல்லை. இவளோ மனசிறைப் பெற்றாள். போலம்மாள் சீதையோடு ஒப்பிடப்படவில்லை. ஆனால் தாத்தைய நாயக்கர் கி.ராவின் பேனா வழி ஜடாயு போல காட்டப்பட்டு இருக்கின்றார். ஆக பெண் வரலாறு என்பது இன்றும் சமுதாயத்தில் அடிமைப்பட்டச் சமூகமாகவே காட்டப்படுகின்றது. அறிவியலில் பெண்கள் தடம் பதித்தாலும் அவளின் வாழ்க்கைப் பன்மடங்காக சிறந்தாலும் பெண் என்பவள் சமூகத்தில் ஒடுக்கப்பட்டவளாகவே ஆளப்படுகின்றாள். காரணம் பெண்மை அவளுடன் இருப்பதாலோ, தெரியவில்லை.

இன்னும் எத்தனை காலங்களுக்குப் பெண்ணின் அவவரலாறை எழுதி முடிப்போம் என்பதும் புரியவில்லை. கரிசல் நிலத்தில் உட்கார்ந்து கி.ராவும் அதையே எழுதி முடிக்கின்றார்.

பெண் புத்தி பின் புத்தி

எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கும் திறனை அதிகம் பெற்றவர்கள் பெண்கள். பெண்கள் சில முடிவுகளை விரைந்து எடுப்பார்கள். அதனால் வெற்றியும் பெறுவார்கள். ஆனால் அவற்றில் சில முடிவுகள் சில நேரங்களில் தவறாய் முடிவதும் உண்டு. அம்முடிவுகளின் பயன் கால சூழ்நிலைக்கு ஏற்றார் போல பல இன்ப துன்பங்களைத் தரவல்லதாய் அமைகின்றது. பெண்ணியம் பேசும் சான்றோர்களும் இதை மறுப்பதில்லை. பெண்களின் புத்தி பின்புத்தி என்பதை பெண்களுக்கே உரிய குணமாகவும் கூறுகின்றனர். இது மறுக்க முடியாத உண்மையாகவும் உள்ளன. அதனால்தான் பழமொழியும் ''பெண் புத்தி பின் புத்தி'' என்று பெண்ணை வருணிக்கின்றது.



''கோவில்பட்டிக்கு வடக்கே நாலு கால் தொலைவுள்ள ஒரு ஊரில் போலம்மாளைக் கட்டிக் கொடுத்திருந்தது. அன்று மாலை அவளுக்கும் புருஷனுக்கும் சண்டை ஒருநாளும் அடிக்காதவன் அன்று அவளை பிடித்து நன்றாக மொத்தி விட்டான்''

என்று போலம்மாளை அறிமுகம் செய்யும் கி.ரா அவர்கள் போலம்மாளின் பின்புத்தியை முதலிலேயே சுட்டிக்காட்டி உள்ளார். புருஷனோடு கோபித்து நடந்தவளுக்கு துயரம் நால்வர் மூலமாக காத்துக் கொண்டிருக்கின்றது. போலம்மாளின் தலைமுடி முதல் நிர்வாணமாய் நிற்க வைத்தது வரை அவளின் முன்யோசனை அற்ற புத்தியாலேயே நடந்தேறியது.

''ஐயோ பாவி நான் எதற்காக இப்படி புறப்பட்டு வந்தேனோ இன்னும் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ? என்று பொருமினாள்'' என்று போலம்மாளின் மனதுயரை கி.ரா படம் பிடித்துக்காட்டுகிறார். இது ஒவ்வொரு பெண்ணும் துயர் பெரும் காலங்களில் மனதுக்குள் பொருமுவது போன்றே உள்ளன. முன் யோசனை அற்ற இந்த குணமே பெண்ணைப் பின்னுக்கு தள்ளுகின்றது. இது இச்சிறுகதையில் சரியாக எடுத்துக்காட்டப்படுகின்றது. ஒரு நாளும் அடிக்காதவன் அடித்தால் என்ன என்று படிப்பவரின் எண்ணத்தைத் தூண்டும் அளவில் போலம்மாளின் பின் புத்தி காட்டப்படுகின்றது.

பெண்களை ஒடுக்கும் ஆண் சமூகம்

எவ்வளவுதான் கத்தி கூச்சல் இட்டாலும் பெண்ணை நம்பும் ஆண் சமூகம் என்பது குறைவுதான். இதற்கு போலம்மாளும் விதிவிலக்கல்ல. நால்வர் சேர்ந்து போலம்மாள் தலை

முடியைப் பிடித்து இழுத்துச் சென்றாலும் நாதி அடங்க கூச்சலிட்டாலும் அவளை நம்புவோர் யாரும் இல்லை. தாத்தைய நாயக்கர் போலம்மாளுக்கு அடைக்கலம் தரம் எண்ணினாலும் சுருட்டை முடிக்காரனின் பேச்சு அவரையும் ஒடுக்கியது. புருஷன் பெண்சாதி தகராறு என்று கதை கட்டியது. அங்கு போலம்மாளை நம்புவதற்கு யாரும் இல்லை.

"காலகாலத்தில் உன் கையை காலை ஒடித்து முடமாக்கி போட்டிருந்தால் இந்த திரிசல் திரியமாட்டாய் என் குத்தத்துக்கு அவன் என்ன பண்ணுவான் சிறுக்கி மகளே"

என்று கி.ரா அவர்கள் காலம் காலமாய் ஆண்கள் பெண்களை ஒடுக்க பயன்படுத்தும் அதே ஆயுதத்தை இங்கு பேசுகின்றார். எத்தனை ஆண்டுகள் ஆனாலும் விஞ்ஞானத்திலும் மெய்ஞானத்திலும் பெண்கள் கோலொச்சி வாழ்ந்தாலும் பெண்களை ஒடுக்கி வாழ வைக்கும் அம்புகளாகவே இச்சொற்கள் பயன்படுகின்றன. இந்த ஒற்றைச் சொல்லும் பெண்களை வீழ வைத்து கொண்டுதான் உள்ளது.

இந்த உரையாடலுக்குப் பிறகு கேள்வி கேட்க முன்வந்த தாத்தைய நாயக்கரும் கூட வாயடைத்துப் போனார். அந்த சிறிய கிராமத்தில் இருட்டு சூழ்ந்திருந்த இரவு நேரத்தில் மக்கள் சொல்லில் வெளிச்சம் பெற்றது "புருஷன் பெண்சாதி தகராறு" என்ற ஒற்றை சொல் மட்டுமே. இது ஆண் சமூகத்திற்கே உரிய அடக்கு முறையை இங்கு வெளிச்சமிடுகின்றன. ஆண் சமூகம் என்றும் பெண்களை ஒடுக்கும் சமூகம் என்பது கி.ராவின் இந்த சிறுகதையில் எடுத்தாளப்பட்டதை நாம் உற்று நோக்க வேண்டியதும் அவசியமாகும்.



ஜடாயுவும் ஒரு ஆண் தான்:

பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்கொடுமையை நாம் இன்றைய காலங்களில் எதிர்த்து குரல் கொடுத்து வருகிறோம். ஆனால் வன்கொடுமை என்பது இன்றையகால வளர்ச்சியல்ல காலம் தோறும் நடந்தேறும் நிகழ்வாகவே உள்ளன. இதற்கு சான்று கி.ராவின் வாள் வீச்சு வரிகள் எனலாம்.

"ஒற்றைக்கண் பாலத்தின் அடியில் ஒரு தீனமான சோகக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது"


என்று போலம்மாளுக்கு நடந்த வன்கொடுமை போல இன்றும் பல பெண்களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் நடந்து கொண்டு தான் உள்ளன. பெண்களுக்கு எதிரான வன்கொடுமை என்பது ஆண் சமூகத்தால் ஏற்பட்டாலும் "சேற்றில் முளைத்த செந்தாமரையைப் போல" அதை எதிர்ப்பதற்கும் பேராற்றல் கொண்ட பல ஆண்கள் ஜடாயுவாய் தோன்றிக்கொண்டுதான் உள்ளனர். ஜடாயு சிறுகதையிலும் அப்படித்தான் தாத்தைய நாயக்கர் போலம்மாளைக் காப்பாற்ற எண்ணி தன் இரு கைகளையும் இழந்தார். முகத்தை

மண்ணில் புதைத்து அழுதார். தாயே உன்னை மீட்க முடியாமல் போய்விட்டதே என்று அழுது புலம்பியதும் வன்கொடுமை புரியும் ஆண்கள் சமூகத்தில் தாத்தையரும் ஆண்தான் என்று எடுத்துக்காட்டுகிறது. பெண்களை ஒடுக்கும் சமூகத்தில் கடவுள்களும் அவ்வப்போது வெளிவருவது உண்டு என்று தாத்தையர் வழியாக கி.ரா அவர்கள் காட்டுகின்றார். சீதையைக் காப்பாற்ற நினைத்ததும் ஜடாயு என்ற ஆண் தான் என்பதும் இங்கு நினைவு கூறத்தக்கதாகும்.


முடிவுரை

தாத்தைய நாயக்கரின் முடிவு சோகத்தில் முடிந்தாலும் போலம்மாளைக் காப்பாற்ற தவறிய சமூகமும் உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இச்சிறுகதையானது நமக்கு வரும் துன்பத்திற்கு நாம் தான் காரணம் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. கேட்பாரற்ற சமுதாயத்தில் எத்தனை போலம்மாள்கள் கசக்கி எறியப்பட்டாலும் ஜடாயுக்கள் பிறந்து கொண்டே இருப்பர் என்பதை நாமும் மறந்து விடக்கூடாது.

****







ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கரிசல் காட்டு கருதாசியில் மண் மணம்

ப விஜயலட்சுமி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

ப விஜயலட்சுமி
முதுகலை மாணவி,
தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடப் பல்கலைக்கழகம்,சீனிவாசவனம்
குப்பம் – 517 426 ஆந்திரப்பிரதேசம், இந்தியா

கரிசல் காட்டு கடுதாசியில் மண் மணம்

முன்னுரை

கி. ராஜநாராயணன் நவீன தமிழ் இலக்கியத்தின் முதன்மை படைப்பாளிகளுள் ஒருவர் ஆவார். இவரது இயற்பெயர் ராயங்குல ஸ்ரீகிருஷ்ண ராஜநாராயணப் பெருமாள் ராமானுஜ நாயக்கர். இவர் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டிக்கு அருகில் உள்ள இடைச்செவல் என்னும் கிராமத்தில் பிறந்தார். கரிசல் வட்டார அகராதியை உருவாக்கிய இவர் 'கதை சொல்லி' என்றும் இலக்கிய வட்டாரத்தில் அழைக்கப்படுகிறார். சாகித்ய அகாதெமி விருது, இலக்கிய சிந்தனை விருது, கன்னட தமிழ் தோட்ட விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ள இவர் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்றும் அழைக்கப்படுவதை அறியலாம்.



கி.ரா கல்வியைப் பற்றி சொல்லும் போது

> **"நான் மழைக்குத் தான் பள்ளிக்கூடம் ஒதுங்கினேன்**
> **ஒதுங்கியவன் பள்ளிக்கூடத்தை பார்க்காமல்**
> **மழையையே பார்த்துக் கொண்டிருந்து விட்டேன்"**

என்று கூறினார்.

1987 துவங்கி ஏறத்தாழ 50 வாரங்கள் ஜூனியர் விகடனில் வெளிவந்து பல்லாயிரக்கணக்கான வாசகர்களை ஈர்த்த கி.ரா வின் கரிசல்காட்டு கடுதாசி மண் மணம் கமழும் வகையில் பல கட்டுரைகள் அமைந்துள்ளன.

நாட்டுப்புற நம்பிக்கைகளை முன் வைக்கும் கட்டுரைகள்

கி.ரா வின் 'போலீஸ் தாத்தா' என்ற கட்டுரையில் போலீஸ் தாத்தா கண்டிப்பான அதிகாரியாகவும் வீட்டிற்கு வந்தால் அதற்கு நேர்மறையாகவும் மாறும் இயல்புடையவர். இவரும் இவரது மனைவியும் ஒற்றுமை இன்றி வாழ்ந்து வந்தவர்கள். இவர்களுக்கு குழந்தைகளும் கிடையாது. இக்கதையில் போலீஸ் தாத்தாவே கதை சொல்லியாக திகழ்ந்து அவரது பணி அனுபவத்தை பிறரிடம் கூறுவது போல் அமைந்திருக்கும் பாங்குடன் இக்கட்டுரை திகழ்கிறது. இதில் போலீஸ்கார குடும்பத்தை பற்றி கிராமத்தில் ஒரு நம்பிக்கை உண்டு அதன்படி அவர்களுக்கு குழந்தைகள் பிறந்தால் வீடு கொள்ளாமல் பிறக்கும் அல்லது பிள்ளைகள் பிறக்காமலேயே போய்விடும் என்ற கரிசல் மண்ணின் நம்பிக்கையை கி.ரா கட்டுரையில் பதிவு செய்கிறார்.

‘தமிள் படிச்ச அளகு’ என்ற கட்டுரையில் அழகு என்று சிறுவனை தமிழ் பண்டிதரிடம் சென்று தமிழ் படிக்க வெளியூருக்கு அவனது பெற்றோர் அனுப்பி வைக்கின்றனர். அவனும் பல நாட்களாக படித்து வருகிறான். படித்து முடித்து வீடு திரும்பும் வேளையில் தாய் தந்தையரை ‘ அன்னாய்’ ‘தாதாய்’ என்று மகிழ்ச்சியுடன் அழைக்கிறான் அவர்கள் திகைத்துப் போகின்றனர். தமிழைப் பிழையின்றி கற்க அனுப்பினால் முழு பிழையுடன் பேசும் இவனுக்கு பேய் பிடித்ததாக பெற்றோர் எண்ணுகின்றனர்.

ஒரு லாட சன்யாசியை கொள்ளைக்காரர்கள் வழிப்பறி செய்து கொன்று போட்டு விட்டார்கள். தொலைதூர வடநாட்டிலிருந்து வந்த அந்த லாட சன்யாசி பேயாக மாறி யாரையாவது பிடிப்பான். அந்த லாட சன்னியாசியின் பேய் பிடித்தால் பேசுவது இப்படித்தான் யாருக்கும் விளங்காது”. தங்கள் பிள்ளைக்கும் அதே பேய் தான் தனியாக நடந்து வந்தபோது பிடித்து விட்டது என்று வருத்தப்பட்டார்கள். பேய்களுக்கு எருக்கம் மிளாறு கொண்டு வந்து நாலு சாத்து சாத்தினால் ’போறேன் போறேன்’ என்று அலறிக் கொண்டு போய்விடும். ஆகையால் எருக்கம் மிளாறு கொண்டு வர சொன்னார்கள். இவ்வாறான பேய் பற்றி நம்பிக்கையை ஆசிரியர் இக்கட்டுரையில் வெளிப்படுத்துகிறார்.




’எமனிடமிருந்து காப்பாற்றிய எருமை’ என்னும் கட்டுரையில் கணவன் மனைவிக்குள் சண்டைகள் வருவது சகஜம். ஆனால் இக்கதையில் சண்டை வரும்போது கணவன் வீட்டை விட்டு அடிக்கடி போய்விடுகிறான். அவனை ஊர்க்காரர்கள், சொந்தக்காரர்கள், உறவினர்கள், பக்கத்து வீட்டுக்காரர் என அனைவரும் சமாதானம் செய்கின்றனர். இருப்பினும் திரும்பவும் வீட்டை விட்டு சென்று விடுவான். ஒரு நாள் அவன் வீட்டு எருமை மேய்ந்துவிட்டு வீட்டைப் பார்த்து அவனை தன் வாலால் கெட்டியாக பிடித்து இழுத்துக் கொண்டு வந்தது என்ற நாட்டுப்புறக் கதையை தன் கட்டுரையில் பதிவு செய்கிறார்.

’எள்ளுக்காய் பிளந்தது போல தீர்ப்பு’ என்ற கட்டுரையில் கிராமத்தில் சாதாரணமாக பேசிக் கொண்டிருக்கும் போது சண்டைகள் போடுவது மட்டுமல்லாமல் அடி பிடியில் கொண்டு வந்து விடுவதும் சகஜமான ஒன்றாகும். இதற்கு இரு வழிகள் உண்டு. ஒன்று சமயம் பார்த்து பழி வாங்குவது. மற்றொன்று ஊர் பெரியவரிடம் போய் சொல்லி பஞ்சாயத்து வைத்து அபராதம் கட்டுவது என்ற வட்டார வழக்கு முறைகளை இக்கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

’நம்பிக்கைகள் பரிகாரங்கள்’ என்ற கட்டுரையானது வாடிப்போன கறிவேப்பிலை செடியைக் கண்டு வீட்டுக்கு தூரமான பெண்களை கொண்டு நட சொல்லுங்கள் பட்டுப்போகாது என்ற நம்பிக்கையை முன்வைத்தே இக்கட்டுரை துவங்குகிறது. பச்ச மண்ணு என்று சொல்லப்படுகின்ற பச்சிளம் குழந்தைகளுக்கு வேத்துவாடை தாங்காது. அதேபோல் கருச்சிதைவான பேச்சுப் பெண்களின் வாடையையும் இக்குழந்தைகள் தாங்கிக் கொள்ளாது. அவ்வாறான வாடிய குழந்தைகளை

எடுத்துக்கொண்டு தாய்மார்கள் மருத்துவமனைக்கோ குழந்தை நிபுண மருத்துவரிடமோ கொண்டு செல்வதில்லை. கழுதையிடம் கொண்டு போய் குழந்தைகளைக் காண்பித்ததும் கழுதை முகர்ந்து பார்க்கும். இவ்வாறு இரண்டு நாள் காட்டினால் சரியாகும் என்ற நம்பிக்கை கிராமப்புறங்களில் உண்டு. இதேபோல் குழந்தைக்கு உறம் விழுந்தால் அக்குழந்தையின் தாய்மாமன் வேட்டியில் போட்டு இருபுறமும் ஆட்டினால் உறம் சரியாகும் என்ற நம்பிக்கையும் வட்டாரத்தில் வழங்கப்பெறும் நம்பிக்கைகளுள் ஒன்றாகும்.

'அந்த காலம்' என்ற கட்டுரையில் இந்த காலத்தில் தேநீர் பருகுவது அதிகமாக உள்ளதையும் ஒரு நாள் கூட தவறாமல் மக்கள் தேநீர் குடிப்பதையும் இரண்டு லிட்டர் என்ற அளவிலும் கூட இன்றைய மனிதர்கள் தேநீர் அருந்துகின்றார்கள் என்றும் இன்றைய காலகட்டத்தில் அவர்கள் வீட்டிற்கு விருந்தினர் வரும்போதும் தேநீரை முதலில் கொடுப்பதையும் வழக்கமாக்கிவிட்டார்கள் எனவும் கூறும் கி.ரா அக்காலத்தில் நீத்துபாகத்துக்குப் பல பெயர்கள் இருந்தன என்றும் அதனை நீச்சத்தண்ணி என்றும் சொல்லுவார்கள் என்றும் கூறுகிறார். சோற்றை வடித்து அதில் உப்பும் தண்ணீரும் சேர்த்தால் நீராகாரம்.



இந்த நீரை பானையில் சேர்த்து மூன்று நான்கு நாட்கள் வைத்திருந்தாலும் கூட கெட்டுப்போகாது. வெயிலுக்கு ஏற்ற அருமையான பானமாகவும் காட்டில் வேலை செய்து களைப்பாக வருகிறவர்களுக்கு உயிர் கொடுக்கும் பானமாகவும் இருக்கும். அரிசி வகைகளான குதிரைவாலி, வரகு, திணை, காடைக்கண்ணி போன்ற அரிசிகளில் செய்து குடிப்பது அந்த கால மக்களின் பழக்கவழக்கமாக இருந்தது என்பதனை இவரது கட்டுரை வழி அறியலாம்.

'குண்டர்களும் சாமிகளும்' என்ற கட்டுரையில் மொய்பயன் என்ற ஒருவன் வேலை செய்யாமல் முன்பெல்லாம் வெட்டியாகவே இருந்தான். இப்போது கிணறு தோண்டும் வேலைக்கு சென்றான். அது மிகவும் கடினமான வேலை ஆதலால் அசந்து தூங்கி விட்டான். அவ்வாறு தூங்கும் போது அவனது பாதம் கருப்பசாமியை நோக்கி இருந்தது. ஆதலால் அச்சாமி அவன் மீது கோபம் கொண்டதையும் பின்பு மீண்டும் தானாக வந்து அவனுக்கு அடிபணிவதையும் கூறும் இக்கதையில் கருப்பசாமி என்ற சிறு தெய்வம் பற்றிய குறிப்பும்

"ஆக்கங்கெட்ட பொம்பள சந்தைக்கு போனாளாம்
அங்கேயும் ஆம்பளைக்கு பஞ்சமாப் போச்சுதாம்".

என்று சொலவடையையும் கி.ரா பயன்படுத்தியுள்ளதை அறியலாம் .

முடிவுரை

கி.ராவின் படைப்புகள் இயல்பாகவே மண் மணம் கமழும் படைப்புகள் ஆகும். அவ்வகையில் இக்கரிசல்காட்டு கடுதாசியில் நாட்டுப்புற மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைகள், பழமொழிகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை தனக்கே உரித்தான யதார்த்த பாணியில் கரிசல் மொழி

நடையுடன் தனது ஒவ்வொரு படைப்பிலும் தான் சந்தித்த மக்களின் அன்றாட வாழ்வியல் அனுபவங்களை தான் சார்ந்த வட்டார மொழியுடன் இக்கால மக்கள் கரிசல் மண் மணத்தை அறிந்துக்கொள்ளும் வகையில் எழுத்தாளர் கி.ராஜநாராயணன் பதிவு செய்துள்ளதை அறியமுடிகிறது.

****







ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கோபல்ல கிராமம் ~ வாழ்வியல் மற்றும் பண்பாட்டுக்கூறுகள்

முனைவர் ந சரஸ்வதி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் ந சரஸ்வதி,
உதவிப் பேராசிரியர்,
தன்ராஜ் பெய்த் ஜெயின் கல்லூரி,
துரைப்பாக்கம். சென்னை – 600 097
மின்னஞ்சல்: dr.nsaraswathi@gmail.com
அலைபேசி எண்: 9994139791

‘‘கோபல்ல கிராமம்’’ – வாழ்வியல் மற்றும் பண்பாட்டுக்கூறுகள்

“கரிசல் இலக்கியத்தின் தந்தை“ என்றழைக்கப் படுபவர் கி.ரா. ஆவார். கி.ராஜநாராயணன் அவர்களின் முழுப்பெயர் ராயங்குல ஸ்ரீ கிருஷ்ண ராஜநாராயணப் பெருமாள் ராமானுஜ நாயக்கர். அவர், இடைச்செவல் என்னும் கிராமத்தில், எளிய விவசாயக் குடும்பத்தில், விவசாயியாக வாழ்ந்து, தன் படைப்புகளைப் படைத்தவர். மிகப்பெரிய இலக்கிய ஆளுமை உடையவராகவும், சிறந்த கதைசொல்லியாகவும் திகழ்ந்தவர். கி.ரா.-வின் படைப்புகளுள், தமிழின் மிகச்சிறந்த முதல் பத்து நாவல்களில், முதன்மையான நாவலான கோபல்ல கிராமம் என்னும் நாவலில், கரிசல் நில மக்களின் பண்பாட்டுக் கூறுகளை, வாழ்வியலை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.



வெற்றிலை போடும் பழக்கம்

இன்றைக்கும், கிராமப்புறங்களில் ஆண்களும், பெண்களும் வெற்றிலை போடுவதை வழக்கமாக வைத்துள்ளதைக் காணலாம். ஆனால், இந்நாவலில் ‘வெற்றிலை குதப்புகிறவர்களின் வட்டம் கோவிந்தப்ப நாயக்கரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டது. அந்தக் காலத்திய வளமுறை, கல்யாணம் ஆன பிறகுதான் வெற்றிலை போடவேண்டும் என்பது. ஆதலால் இளவட்டங்கள் சற்றே ஒதுங்கி இருந்து இவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்“ என்று கூறுவதன் மூலம், திருமணத்திற்குப் பின்னர் தான் வெற்றிலை போடவேண்டும் என்ற வழக்கத்தை கரிசல் நில மக்கள் பின்பற்றி இருந்ததை அறிய வைக்கிறார்.

நியாயம் பேசுதல்

ரத்தின வியாபாரிகள் தங்களிடம் ஒரு மாணிக்கமாலை விலைக்கு இருப்பதாகக் கூறிய போது, அதை வாங்கிப் பார்த்த சென்னாவின் தகப்பனார், இது மனிதர்கள் அணியக் கூடியது இல்லை; கோயிலுக்கு உரியது என்று சொல்லிவிட்டு இதை வேண்டுமானால் நாம் வாங்கி திருப்பதியில் உள்ள அலர்மேலு மங்கைக்குச் சாத்தலாம் என்றார், பாதி உண்மையாகவும் பாதி வேடிக்கையாகவும். ஆனால் விலை படியவில்லை. சென்னாவின் பாட்டிக்கு "இதை நாம் வாங்கத்தான் முடியலை; எப்படி இருக்கிறது என்று சென்னாவின் கழுத்தில் போட்டுப் பார்க்கலாமே" என்று தன் ஆசையை வெளியிட சென்னாவின் தகப்பனார், “அதெல்லாம் கூடாது; வாங்குகிறதாக இருந்தால் மட்டுமே போட்டுப் பார்க்கணும்; வெறுமனே அதெல்லாம் கூடாது; அது முறையில்லை”

என்று கூறுவதன் மூலம் நியாயம் தெரிந்த மனிதர்கள் கரிசல் நிலத்தில் வாழ்ந்ததை அறிய வைக்கிறார்.

சுமைதாங்கிக் கல்

சொக்கலிங்க ஆசாரியின் மனைவி அணிந்திருந்த பாம்படத்திற்கு ஆசைப்பட்ட திருடன், அவளைக் கொன்று விட, "கர்ப்பிணிகளை அடக்கம் செய்வதற்கு முன்னால், வயிற்றில் குழந்தையோடு புதைக்க மாட்டார்கள். வயிற்றைக் கீறி குழந்தையை எடுத்து பக்கத்தில் வைத்துத்தான் புதைப்பார்கள்… 'அப்படியே புதைத்தால் சுமைதாங்கிக் கல் வைக்கணுமே' என்று கூடியிருந்தவர்களில் ஒரு குரல் கேட்டது..." என்பதன் மூலம், கர்ப்பிணிகளைப் புதைக்கும் கரிசல் நில வழக்கத்தை அறிய வைக்கிறார். மனைவியை இழந்த ஆசாரியாரை, "கூட்டத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டு போய் ஒரு போகணி குளிர்ந்த நீத்துப்பாகம் கொடுத்து குடிக்கச் செய்து முகம் கை கால் எல்லாம் கழுவச்சொல்லித் தெளிவாக்கி, அவரைக் கொஞ்சம் உட்காரச் செய்து, வேண்டிய சமாதானங்கள் சொல்லி அழைத்து வந்தார். கிராமத்தில் இப்படி ஒரு வழக்கம் உண்டு, இறந்து போனவரின் நெருங்கிய சொந்தக்காரரை கொஞ்சதூரம் நடத்திக் கொண்டு போய் நீத்துப்பாகம் குடிக்கச்சொல்லி திரும்பக் கூட்டிக்கொண்டு வருவது என்பது…" என்று கூறுவதன் மூலம், வெளியூர்க்காரனாக இருந்தாலும், சொந்தக்காரன் போல அவனை நடத்திய ஊர் வழக்கத்தையும், அன்பையும் அறியவைக்கிறார்.



முகச்சவரம்

"கல்யாணம் ஆகாதவர்கள் அந்தக் காலத்தில், திருமணத்தன்று தான் முகச்சவரம் செய்துகொள்ளும் வழக்கம். அதுவரையும் முகத்தில் தாடி தான்!..." என்று கூறுவதன் மூலம், கரிசல் நில மக்கள் முகச்சவரம் செய்யும் பழக்கத்தை அறிய வைக்கிறார். மனைவி கர்ப்பமாக இருக்கும் போது, முகச்சவரம் செய்து கொள்ளும் வழக்கம் இல்லை என்பதை, சின்ன எங்கட்ராயலு மூலம் உணர்த்துகிறார்.

நம்பிக்கை

சென்னாதேவியின் உயிர் போகப்போகிறது என்பதை அறிந்து, "சென்னா, என் கண்ணே, என்னை விட்டுட்டுப் போறாயா' என்று சென்னாவின் தாய் அழுதாள். பாட்டி சொன்னாள், 'மரணம் சம்பவித்துக் கொண்டிருக்கும் போது யாரும் அழக்கூடாது…. ஆத்மா பிரிந்து பயணப்படும் போது நாம் அழுதால் நம்முடைய கண்ணீர் போல் அது சென்று கொண்டிருக்கும் வழியில் குறுக்கே வெள்ளம் போல் பரவிப் பெருகி அதனுடைய பயணம் தடைப்பட்டுப் போகும். ஆத்மா பிரிந்த பிறகு அழலாம்; பிரிந்து

கொண்டிருக்கும் போது அழவே கூடாது'..." என்று கூறுவதன் மூலம், உயிர் பிரியும் நேரத்தில் அழக்கூடாது என்கின்ற கரிசல் நில வழக்கத்தை அறியவைக்கிறார்.

கேலி செய்தல்

கோட்டையார் வீட்டில் சேலைகள் விற்க வந்த வியாபாரிகளிடம், சுந்தரப்ப நாயக்கர், "இந்த சேலை சாயம் போகுமா?"... என்று அக்கையாவிடம் கேட்க, "குளத்துத் தண்ணியில அலசுனா சாயம் போகாது... ஆத்துத் தண்ணியில அலசுனா சாயம் போயிடும்...! ஏன்னா குளத்துத் தண்ணிய சுத் ... தி நாலுபக்கமும் கரை போட்டிருக்கு; சாயம் போகாது!" என்று அக்கையா கூற, அனைவரும் ரொம்ப நேரம் அதை அனுபவித்து சிரித்ததாகப் படைத்துள்ளார்.

விருந்தோம்பல்

"அந்தக் காலத்தில் ஊர்விட்டு ஊர்போக நடந்தே தான் போக வேண்டும் என்ற காரணத்தினாலோ சொந்தக்காரர்களின் ஊர்கள் தொலைவில் இருக்கிறது என்ற காரணத்தினாலோ, அல்லது பழக்க தோஷமோ விருந்தாட வரும் விருந்தாளிகள் ஒரு வீட்டுக்கு வந்தால் குறைந்தது ஒரு மாசமாவது தங்கிவிட்டுதான் போவார்கள். வீட்டுக்காரர்களும் அதுக்கு குறைந்து அவர்களை விடவும் மாட்டார்கள். கோட்டையார் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளோ இரண்டு மூன்று மாசம் தங்கித்தான் போகிறது வழக்கம்..." என்று கூறுவதன் மூலம் விருந்தோம்பலை அறிய வைக்கிறார்.



கோவிந்தப்ப நாயக்கர், "துலுக்க ராஜாவிடமிருந்து எப்படி தப்பித்து வந்தீர்கள்? என்று பூட்டியிடம் கேட்டபோது, கோவய்யா அறுபது எழுபது பேருக்கும் மாற்று உடைகள் கொடுத்தார். குளிப்பதுக்கு சூடான வெந்நீர், வயிறு நிறைய ருஜியான அன்னம். காலியாக இருந்த அவருடைய ஒரு தானியக் களஞ்சியத்தில் நாங்கள் பலநாள் நிம்மதியாகத் தூங்கினோம் எத்தனை நாள்தான் ஒருத்தருடைய விருந்தாளியாகத் தங்கி இருக்க முடியும் நாங்கள். எங்கேயாவது கண் காணாத இடத்துக்குச் சென்றுவிடத் தீர்மானித்த போது, அந்தக் கோவய்யா எங்களுக்குப் பிரியாவிடை கொடுத்தார். எங்களை தற்காத்துக் கொள்ள ஆயுதங்களும், வழியில் எங்களுக்குச் சமைத்துண்ணப் பாத்திரங்களும், நாங்கள் சுமக்கிற மட்டும் நவதானியங்களும், அதிகப்படியான மாற்று ஆடைகளும் கம்பளிப் போர்வைகளும் கொடுத்து உதவினார் அந்தப் பிரபு..." என்று பூட்டி- மங்கத்தாயார் கூறுவதன் மூலமும் விருந்தோம்பலை அறிய வைக்கிறார்.

சொலவடை

கோட்டையார் வீட்டுப் பெண்கள் எங்கச்சியிடம் சமையல் செய்வது பற்றி விசாரித்துக் கொண்டே இருப்பார்கள். "செய்கிறவர்களுக்குச் சொல்லத் தெரியாது; சொல்கிறவர்களுக்குச் செய்யத் தெரியாது" என்று ஒரு சொலவம் உள்ளதை அறிய வைக்கிறார்.

நாடி வைத்தியம்

"வைத்தியர் மஞ்சையாவிடம் கைப்பிடித்துப் பார்க்கச் சொல்லி நீட்டுவதே ஒரு சுகானுபவம். கையைப் பற்றியதுமே நாடியைப் பிடித்துப் பார்த்து விடமாட்டார். கையைப் பிடித்து ஒவ்வொரு விரலையும் மென்மையாக இழுத்து சொடக்கு விழ வைப்பார். அப்புறம் எல்லா விரல்களையுமே ஒருசேரப்பற்றி பதமாக ரெண்டு மூணு தரம் நீட்டி மடக்கி நீட்டி... இப்படியெல்லாம் செய்துதான் பிறகு நாடியைப் பிடித்துப் பார்ப்பார். இந்தக் கைச் சுகத்துக்காகவே பல ஆண்களும் பெண்களுமே அவரிடம் நீட்டுவார்கள் கையை! ஆண்களுக்கு வலதுகை; பெண்களுக்கு இடதுகை; இது முதலில் தொடங்கும் போது. ஆனால் ஒருவரின் இரண்டு கைகளில் உள்ள நாடிகளையும் பார்த்த பிறகு தான் தீர்மானத்துக்கு வருவார். பார்ப்பவரின் கையில் இருந்து தனது கையை எடுத்தவுடன் தவறாமல் மூன்று தரம் ஆள்காட்டி விரலால் தரையைச் சுண்டித் தட்டுவார். பிறகு ஒரு பாட்டு. குரல் கேட்க இனிமையாக இருக்கும். எல்லாம் வாத பித்த சிலேட்டும கூடுதல் குறைச்சல் பற்றி விவரிக்கும். பரிகாரமும் பாட்டாகவே வரும்... மற்ற வைத்தியர்கள் மாதிரி இவர் நெடுநாள் உப்பில்லாப் பத்தியம் வைத்து நோயாளிகளை வதைக்க மாட்டார்..." என்பதன் மூலம், நாடி வைத்தியம் பற்றி அறிய வைக்கிறார்.



பெயர்கள் - பெயர்க் காரணம்

மண்ணு திண்ணி நாயக்கர், நல்ல மனசு திரவத்தி நாயக்கர், பெத்த கொந்த்து கோட்டையா, பொடிக்கார கெங்கா நாயக்கர், காரவீட்டு லெச்சுமன நாயக்கர், புலி குத்தி சுப்பன்னா, படுபாவி செங்கன்னா, பச்சை வெண்ணெய் நரசையா, பயிருழவு பங்காரு நாயக்கர், எளவு பெட்டி ராமைய்யா, ஜலரங்கன், பொறை பங்காரு நாயக்கர்...

நிலங்களின் தராதரத்தையும், உரத்தன்மையையும் அறிவதில் வல்லவர் என்பதால் மண்ணு திண்ணி நாயக்கர் என்றும், "சின்னத்தம்பியுடன் மல்லுக்கட்டிய திரவத்தி நாயக்கர் தனது தோல்வியைப் பெருந்தன்மையோடு ஒப்புக்கொண்டு தன்னை விட்டு விடும்படி சின்னத்தம்பியைக் கேட்டுக்கொண்டார்.

திரவத்தி எழுந்ததும் அவருடைய முதுகில், உடம்பில் பட்டிருக்கும் மண்ணையெல்லாம் சின்னத்தம்பி தனது கைகளால் துடைத்து விட்டான்... அடேய் சின்னத்தம்பி, சரியான மனசுடா உனக்கு; நல்ல மனசுக்காரன்டா நீ..." அதிலிருந்து கிராமத்தில் எல்லோரும் திரவத்தியை நல்ல மனசுக்காரன் என்றும் நல்ல மனசு திரவத்தி நாயக்கர் என்றும் கூப்பிட்டார்கள்.

உரத்த குரலில் சத்தம் போட்டே பேசுவதால் பெத்த கொந்த்து கோட்டையா என்று கூப்பிட்டார்கள்.

நல்ல தரமான புகையிலை வாங்கி, பொடி தயாரிப்பதால், பொடிக்கார கெங்கா நாயக்கர் என்று கூப்பிட்டார்கள்.

முதன்முதலில் லெச்சுமண நாயக்கரின் முன்னோர்கள் காரைவீடு கட்டியதால், அதிலிருந்து இவர்களுக்கு காரை வீட்டு இன்னார் என்ற பெயர் நிலைத்து விட்டது.

கல்யாணத்தின் போது, கல்யாண வீட்டிற்குள் வந்த புலியைக் கையில் கங்கணத்தோடு குத்திக் கொன்றதால், கங்கணால் சுப்பன்னா என்றும் புலி குத்தி சுப்பன்னா என்றும் கூப்பிட்டார்கள்.

செங்கன்னாவின் குடும்பத்தில் ஒரு பாகப்பிரிவினை ஏற்பட்ட போது, காய்ந்துபோன, உபயோகமில்லாத ஒரு சுண்ணாம்புக் கலயத்தைத் தன் தாயாதிக்குக் கொடுக்க மனசு இல்லாது, அந்த மண் கலயத்தை உடைத்துப் பகிர்ந்து கொடுத்தாராம். அதிலிருந்து அவரைப் படுபாவி செங்கன்னா என்று கூப்பிட்டார்கள்.

தலைச்சவரம் செய்து முடித்த இடத்தில் பசு வெண்ணெயைத் தடவி, பின்னர் வெந்நீரில் குளித்ததால் பச்சை வெண்ணெய் நரசையா என்று கூப்பிட்டார்கள்.

ராமையா, தனக்குப் பிடித்தமான சமையலை மனைவி செய்திருந்தால், திருமண் போட்டு வைக்கும் திருநாமப் பெட்டியை, "சின்ன குட்டீ அந்த திருநாமப்பெட்டியை எடுத்துக் கொண்டு வா' என்று உற்சாகத்துடனும், சமையல் சரியில்லை என்றால், எளவு பெட்டியை எடுத்துக்கிட்டு வந்து தொலை" என்று கத்துவதால், எளவு பெட்டி ராமையயா என்று கூப்பிட்டார்கள்.

ஜலரங்கனின் தாய், பிரசவ வேதனை தாங்க முடியாமல் கம்மாய்த் தண்ணீரில் குதித்துத் தற்கொலை செய்யத் துணிந்தபோது, பிரசவம் ஆகிவிட, குழந்தையைப் பார்த்தவளுக்கு உயிர் வாழவேண்டும் என்ற ஆசையில் காப்பாற்றச் சொல்லி கூப்பாடு போட, அங்குள்ளோர் அவளைக் காப்பாற்ற, அவன் தண்ணீரில் பிறந்ததால் அவனுக்கு ஜலரங்கன் என்றும் கூப்பிட்டார்கள்.



இவ்வாறு, பெயர்களையும், பெயருக்கான காரணங்களையும் நகைச்சுவை உணர்வுடன் அறிய வைக்கிறார்.


உபாயம்

"ஈரக் கசிவுள்ள கருப்பட்டியைப் பிட்டு உடம்பில் - கால் கைகளில் - அங்கங்கே ஒட்டவைத்து, பழைய துணிகளைக் கிழித்து காயங்கள், புண்களுக்குக் கட்டுகள் போடுவது மாதிரி கட்டிக் கொள்வார்கள். அந்த இனிப்பு வாசனைக்குக் கணக்கில்லாமல் ஈக்கள் வந்து அந்தக் கட்டுகளின் மேல் மொய்க்கும். இப்படிக் கட்டுகள் போட்ட, ஈக்கள் மொய்க்கும் ஆட்களை வெள்ளைக்காரர்கள் வேண்டாம் என்று சொல்லிவிடுவார்கள்!..." என்பதன் மூலம், வெள்ளையரிடம் தலைச்சுமை தூக்கும் வேலையிலிருந்து தப்பிக்க, கரிசல்நில மக்கள் கடைபிடித்த உபாயத்தை அறியலாம்.

"ஆனால், எல்லாருமே இப்படிக் கட்டுகள் போட்டுக் கொண்டு போகமுடியுமா? சந்தேகம் வந்துவிடுமே. அக்கையா ஒரு தந்திரம் செய்தார். ஊருக்குள் நுழையும் இடங்களில் எல்லாம் வேப்பிலை தோரணம்

கட்டச்செய்தார். வீடு தவறாமல் வாசலில் வேப்பம் குழையை சொருகச் சொன்னார். வேப்பங்குழைகள் சொருகிய நிறைகுடங்களைத் தெருவின் மத்தியில் அனேகமாக ஒவ்வொரு வீட்டின் முன்னாலும் வைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார். வெள்ளைக்காரர்களுக்கு அம்மை நோய் என்றால் போதும்; திரும்பிக் கூட பார்க்காமல் ஓடிவிடுவார்கள். அம்மை நோய் கண்ட ஊர்களில் அதை வேற்று ஊர்க்காரர்களுக்கு தெரிவிக்க இப்படி வேப்பிலை தோரணங்கள் கட்டுவதும் நோய் கண்ட வீடுகளின் நுழைவாசலில் வேப்பங்குழை சொருகுவதும் இங்கே வழக்கம் என்பதை வெள்ளைக்காரர்கள் எப்படியோ தெரிந்து வைத்திருந்தார்கள்..." என்பதன் மூலம், அக்கையாவின் தந்திரத்தையும், அம்மை நோய்க்கு வெள்ளையர்கள் பயந்ததையும் அறிய வைக்கிறார்.

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கொத்தைப் பருத்தி சிறுகதையில் இன்றைய வாழ்வியல்

முனைவர் பா அனுராதா





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் பா அனுராதா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்
9500994086
anurathasiva80@gmail.com

கொத்தைப் பருத்தி சிறுகதையில் இன்றைய வாழ்வியல்

முன்னுரை

கி. ராஜநாராயணன் அவர்கள் 16.09.23 அன்று பிறந்தவர். இவர் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுபவர். இடைசெவல் கிராமத்தை சேர்ந்த இவரது அகராதிகள், சிறுகதைகள், குறுநாவல், நாவல், கட்டுரைகள் எனப் பலப் பரிமாணங்களில் இவரது படைப்புகள் சிறந்து விளங்கியது. இதுமட்டுமா பல்வேறு விருதிற்கு சொந்தக்காரர் ஆவார். இவரது கொத்தைப் பருத்தி என்ற சிறுகதையில் வட்டார வழக்கில் அவர்களது பேச்சு திறன்களைக் கொண்டு வாழ்வியலை விளக்கியதனையும், கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், வாழ்க்கைப்பாடுகளையும் எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது..



கரிசல் வட்டார இலக்கியப்போக்கு

கரிசல் வட்டார இலக்கியங்கள் மக்களின் மண்ணையும் மன உணர்வையும் வெளிப்படுத்தும் போக்குகள் அதிகம் காணப்பட்டன. மண்ணுக்கும் மனிதர்களின் மொழிக்கும் உள்ள உறவை கரிசல் வட்டார இலக்கியங்கள் மிகுதியாக வெளிப்படித்தின. வானம் பார்த்த பூமி, மானாவாரி காடு என்று இயற்கை கட்டமைத்த வாழ்வியல் நில அமைப்பைக் கொண்டவை கரிசல் நிலம். மானாவரி மனிதர்கள் சுயம்பாக வாழ்க்கையைக் கற்று வாழ்வியல் அடிப்படையை உணர்ந்து கொண்டவர்கள். இவர்களின் அக வாழ்வியல் மனப்போராட்டம் சார்ந்தது ஏனெனில் இந்நிலம் இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட நிலம் என்று பா. செயப்பிகாசம் (2019) கரிசல் வெள்ளாமை என்ற கட்டுரையில் குறிப்பிடுகிறார்.கரிசல் வெள்ளாமை என்பது மிளகாய், பருத்தி,கரும்பு என்பது மட்டுமல்ல மொழியும் வெள்ளாமைதான். கரிசல் வெள்ளாமையில் விளைந்த மொழி இக்கால தமிழ் இலக்கணக் கூறுகளைக் கட்டமைப்பதில் முக்கியத்துவம் பெறுகின்றன. மூன்று மெய்மயக்கங்கள், மொழி முதல் எழுத்துக்களின் உயிர் எழுத்து, மெய்யெழுத்து மாற்றங்கள் என்ற இலக்கணக்கூறுகள் மரபிலக்கணக்கூறுகளில் இருந்து மாற்றம் அடைந்துள்ளன.

கரிசல் மண்

கரிசல் மண் என்பது அந்த நிலம் சார்ந்த மண்ணின் பெயர். கரிசல் மண், செம்மண், களிமண், வண்டல் மண் இப்படி வகைப்படுத்தலாம். அந்த எழுத்தாளர் தன் மண் மீது உள்ள

காதலால் தன் படைப்புகளுக்கு அவ்வாறு பெயரிட்டுள்ளார். கி.ராஜநாராயணன் அவர்கள் எழுத்தை வாசியுங்கள். அந்த மண்ணின் சுவையை அறியமுடியும். அந்த வரிசையில் தான் கொத்தைப் பருத்தி என்ற சிறுகதையில் வட்டார வழக்கினை உணரும் வகையில் இப்பகுதி அமைந்துள்ளது.

கரிசல் நிலம்

கரிசல் நிலம் அல்லது கரிசல் வட்டாரம் என்பது அதுரைக்குத் தெற்கிலுள்ள திருமங்கலம் முதல் திருநெல்வேலிக்கு வடக்கிலுள்ள கங்கை கொண்டான் வரையிலும் உள்ள பகுதிகளைக் குறிப்பதாகும். இது தமிழ்நாட்டில் உள்ள விருதுநகர் மாவட்டம் சங்கரன்கோவில், புளியங்குடி, விளாத்திகுளம், ஒட்டப்பிடாரம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நிலமாகும். இங்கே கருப்பு நிறத்துடன் நீரின் இரப்பதத்தையும் தக்க வைத்துக் கொள்ளும் கரிசல் மண் பகுதியாகும். கரிசல் நிலத்தைப் புன்செய் நிலம் என்றும் அழைப்பர்.

தமிழ் இலக்கியத்தின் பாரம்பரியமாக கரிசல் இலக்கியம் மட்டுமே உள்ளது என சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் தோப்பில் முகமது மீரான் தெரிவித்தார். கரிசல் இலக்கியம் என்பது உழைப்புடன் தொடர்புடையது. கல்வியறிவு இல்லாத, நூலகமே இல்லாத, படித்தவர்களே இல்லாத குக்கிராமங்களில் பிறந்து வளர்ந்தவர்களால் படைக்கப்பட்டது கரிசல் இலக்கியம். இந்த இலக்கியத்தில் உள்ள சொற்கள் பலருக்ம் தெரிந்திராது. இந்த சொற்களுக்கு தமிழ் அகராதியிலும் விளக்கம் கிடையாது. அதற்காக அவையனைத்தும் தமிழ் சொற்கள் அல்ல என்பதை ஏற்க முடியாது. வட்டார மொழியில் படைக்கப்பட்டிருப்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். கரிசல் இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்கள்தான் உண்மையான சுத்தமான தமிழ் சொற்கள். பல நூற்றாண்டு சிறப்பு மிக்க தமிழ் இலக்கியத்தின் பாரம்பரியமாக கரிசல் இலக்கியத்தை காணலாம். மீனவர்கள், தாழ்த்தப்பட்டோர், தலித் சமூகத்தினரிடையே கையாளப்பட்ட சொற்கள், இந்த இலக்கியத்தில் அதிகளவில் காணப்படுகின்றன. செயற்கைத் தமிழாக இல்லாமல் மண்ணோடும், மண் வாசைன சார்ந்தும், உழைப்புடன் சேர்ந்தும் சாதாரண மக்களால் படைக்கப்பட்டதே கரிசல் இலக்கியமாகும்.



கோனோரி செங்கன்னாவின் குடும்பத்தைப் பற்றி விசாரிக்கவா வேண்டும், பெயரைச் சொன்னாலே சுத்துப்பட்டிகளில் அடடேயப்பா அவுகளுக்கென்ன என்று சொல்லும் வாய்கள். பெயருக்கு இப்பவும் குறைச்சல் இல்லைதான். பெயர் இருந்து நாக்கு வழிக்கவா முடியும். ஒரு பயலும் பொண்ணு தரமாட்டேங்கானே என் பேரனுக்கு என்று நினைத்துத் தவுதாயப் பட்டார் கோனேரி. இருநூறு ஏக்கர் கரிசல், அதுவும் நெய்க்கரிசல் நிலம். நினைச்சுப் பார்க்க முடியுமா யாராலும்.அந்த வட்டாரத்திலேயே முதன்முதலில் காசுமாலை செய்த குடும்பம் அது ஒண்ணுதான். இன்னைக்குத் தேதி வரைக்கும் வேற சுத்துப்பட்டிகளில் காசுமாலை செய்த குடும்பம் ஒண்ணு இருக்குன்னு யாராவது விரலை மடக்கமுடியுமா?

புஞ்சையிலிருந்து எல்லார்க்கும் பருத்திப் பொட்டணங்கள் தலைச் சுமையாகத்தான் வரும். கோனேரி வீட்டுக்குப் பருத்தி தினோமும் வண்டி கொண்டுபோய்த்தான் பாரம் வைத்துக்கொண்டு வரவேணும். இப்பேர்க்கெத்த குடும்பத்துக்கு "சீமையிலாம்புட்ட நாயக்கன்" வந்தான் பொண்ணு பாக்க. கோனேரிக்கு ஏழு பொம்பளைப் புள்ளைகள்: ஆறு ஆம்பளைப் பயல்கள்.

"சீமையிலாம்புட்ட நாயக்கன்" என்று கோனேரியால் எக்கண்ட மாய்ச் சொல்லப்பட்ட அந்த நாயக்கருக்கு அம்பது அம்பத்தஞ்சி வயசுக்கிட்ட இருக்கும். ஆள் 'ராஜ மோடியாய்' இருந்தார். வந்து இறங்கியவருக்கு உபசாரம் பலமாக இருந்தது.

ஜில்லாக் கலெக்டரின் அப்பாவுக்குப் பின்ன உபசாரம் குறைச்சலாவா இருக்கும். வந்தவர் கோனேரியின் வீட்டில் "கை நனைக்கவில்லை" வந்தவர்களுக்கு முதலில் கொடுக்கிறமாதிரி கருப்பட்டியும் மோரும் பிறகு வெத்தலைப்பாக்கும், கருப்பட்டிப் போயிலையும், இப்படித்தான் இருந்தது.

வந்தட்டி நாயக்கர் 'கை நனைக்க' மறுத்ததும் செய்தி வீட்டினுள்ளே பரவியது. 'வந்தட்டி' நாயக்கரை வீட்டுப் பெண்டுகள் வந்து ஜன்னல் வழியாகவும் கதவு இடுக்கு வழியாகவும் கவனித்தார்கள் - அவருடைய வீட்டுப் பெயரையும் கோத்திரத்தின் பெயரையும் அறிந்துகொள்ள ஆவலாக இருந்தது அவர்களுக்கு.



அவருடைய நிறத்தையும் ஜாடையையும் உருவத்தையும் வைத்து அவருடைய பையன் எப்படி இருப்பான் என்று கற்பனை செய்து பார்த்தார்கள். முதல் பார்வையிலேயே அவருடைய நல்ல சிகப்பு நிறம் அவர்களுக்குப் பிடித்திருந்தது. தங்கப் பிரேம் போட் மூக்கு கண்ணாடியும் பளிங்குப்போல் மினுங்கும் அழகான வழுக்கையும் கூடப் புதுசாக இருந்தாலும் பிடித்துதான் இருந்தது. என்ன பிடித்திருந்து என்ன செய்ய? கோனேரி ஒரே போடாகப்போட்டுவிட்டார். வந்தவர் பாவம் விக்கியவரில்லை, விரைத்தவர் இல்லை முகம் இம்புட்டு போலாகிவிட்டது.

கல்த்திண்ணையின் திண்டின்மேல் அந்தஸ்தாக சாய்ந்து கொண்டிருந்த அவர் முதலில் தமது வீட்டுப் பெயரையும், பிறகு கோத்திரத்தின் பெயரையும் சொன்னார். சரி, சம்மந்தக்காரர்தான் முறைக்கு என்று நினைத்ததுமல்லாமல் சந்தோஷமாக சொல்லவும் செய்தார் கோனேரி. அப்புறம் தனது ஒரே பையன் சீமையில் போய் படித்துவிட்டு வந்து இப்போ டிப்டி கலெக்டராக இருப்பதும் சீக்கிரமே ஜில்லாக் கலெக்டராக போவதைப் பற்றியும் பிரஸ்தாபித்தார். ஆகா கலெக்டர் என்றால் சாமானியமா? ஒரு ஜில்லாவுக்கே சக்கரவர்த்தி மாதிரியில்லா, கொடுத்து வைக்கனுமே. இந்த வீட்டுக்கு மகுந்து போனார் கோனேரி.

சம்பாஷனை தொயரத் தொயர உடனுக்குடன் தகவல் வீட்டுக்குள்ளே போய் கொண்டே இருந்தது. அந்த வீட்டின் கதவு இடுக்கு, ஜன்னல்கள் முதலியவைகளுக்கெல்லாம் காதுகள் உண்டு. நடுத்தெருவில் மணல் மீது ஒரே ஊசி தவறி விழுந்தாலும் அந்த வீட்டின் காதுகளுக்கு கேட்டிடும் போது வீட்டின் தலைவாசலில் வைத்து பேசும்பேச்சு கேட்கமால் போகுமா? கோனேரியும் விஷயத்தை தெளிவாக ஒன்றுக்கு இரண்டு தரம் நன்றாகத்தான்

கேட்டுத் தெரிந்துக் கொண்டார். அந்தக் குடும்பத்தில் இதுவரை நடந்த சம்பந்தங்கயெல்லாம் செயலான ஏல்க்கையான சம்சாரிகள் வீடுகளில் தானே தவிர இப்படி வேலைக்காரர்களோடு அல்ல. வேலைக்காரர் உத்தியோகஸ்தர் யோசனையில் கோயேரி மௌனம் ஆனார். குறியில்லாமல் கொஞ்சநேரம் தரையை வெறித்தார்.

இப்போது வீட்டினுள் அவருடைய மூத்த பாரியாளிடமிருந்தும் அழைப்பு வந்தது. இங்க கொஞ்சம் வந்துட்டு போங்க. எழுந்து உள்ளே போனார்.

கல்த்திண்ணைமேல் பவானி பட்டு ஜமுக்காளத்தில் உட்கார்ந்து திண்டின்மேல் சாய்ந்து சம்மணம் போட்டு உட்கார்த்திருந்த வந்தட்டி நாயக்கர் சம்மணத்தை மாற்றி ரட்ணக்கால் போட்டு லேசாக அந்த பாதத்தை ஒய்யாரமாக ஆட்டிக் கொண்டே தமக்கு முன்னாலும் பக்கங்களிலும் மேலேயும் கவனித்துப் பார்த்தார். காட்டில் உழும் சாதாரணக் கால்நடைகளுக்கா இப்படி ஒரு கல்த்தொழு என்று வியந்தார். இந்தத் தொழுவை மட்டும் கட்டி முடிக்க இப்போ குறைஞ்சது ஒரு முப்பதாயிரம் ரூபாவாவது வேண்டியிருக்குமே என்று நினைந்தார் இந்தக் கட்டிடம் மட்டும் டவுன்லே இருந்தா இதன் பெறுமானம் ரெண்டரை லட்ச ரூபா என்று கணக்குப் போட்டார்.



தொழுவத்தில் கட்டியிருக்கிற உழவு மாடுகளை எண்ணினார். ஏழு ஜோடி அவ்வளவும் ஜாதி உயர்ந்த காங்கேயம் காளைகள். அடுத்த பக்கம் பசு மாட்டுத் தொழு, அதுக்கடுத்த பக்கம் எருமை மாடுகளின் தொழு, நாலைந்து தென்னை மரங்கள். திலாப்போட்ட கிணறு. திண்ணையை ஒட்டி திருமால் நாயக்கர் மகால் தூண்கள் மாதிரி வரிசையாகத் தானியப் பட்டறைகள். பார்க்கப் பார்க்க அதிசயம் , மலைப்புத் தோன்றவே ரட்ணக்காலை நீக்கிச் சாவதானமாகச் சம்மணம் போட்டு உட்கார்ந்து கொண்டார்.

வீட்டினுள்ளே போன கோனேரி வந்தார். நல்ல உயரம் ஓங்கு தாங்கான ஆள். கருப்பு நிறம், முக்கால் கைச் சட்டை, முழங்கால்வரை. தோளில் ஏதாப்பு, கனமான மீசை உதடுகளை மறைத்திருப்பதால் புன்சிரிப்பைக் கண்கள் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

வந்து பக்கத்தில் உட்கார்ந்தார். பாக்குகளைக் கையில் எடுத்துச் சரிபார்த்து வாய்க்குள் போட்டுக் கொண்டு மௌனமாக வெற்றிலைமேல் சுண்ணாம்பைத் தடவினார். வந்தவருக்காகத்தான் தாம்பாளத்தில் வெற்றிலை பரப்பப்பட்டிருந்தது. அவரோ வெற்றிலை போடுவதில்லை என்று சொல்லிச் சிரித்தபோது, மங்கலமில்லாமல் பற்கள் வெள்ளையாகத் தெரிந்தது. பாக்குகளின் அதிதுவர்ப்பைச் சரிசெய்து கொள்ளத் தொண்டையை லேசாகச் செறுமிச் சரி செய்துகொண்டே , “நமக்கு நிலம் எத்தனை குருக்கம் இருக்கும்? என்று கேட்டார் கோனேரி.

நிலமே கிடையாது என்று உள்ளதைச் சொன்னார். வெற்றிலையின் முதுகில் சுண்ணாம்பைத் தடவிக் கொண்டிருந்த விரல் சட்டென்று நின்றது. என்ன என்று இன்னொரு தரம் சொல்லி அதை என்று கேட்பது போலிருந்தது அது.

முந்தி இவருக்கும் இவருக்கு கிராமத்தில் நிலமும் இருந்தது. ரெங்கவிலாசம் போல வீடும் இருந்தது. தமது ஒரே பையனைப் படிக்க படிக்க வைக்க என்று எல்லாத்தையுமே

விற்றுவிட்டார். இறந்துபோன தமது மனைவியின் நகைகள் தமது தாயின் பூர்விக நகைகள் எல்லாத்தையுமே விற்றுத்தான் இந்தப் படிப்பையும் பதவியையும் அடைய வேண்டியிருந்தது. பதவி வந்துவிட்டால் திரும்பவும் ல்லாத்தையும் சம்பாதித்துக் கொள்ளலாம் என்பதுதான் முக்கியமாகப் பட்டது அப்போ. தமது சின்ன வயசில் தம்முடைய ஊரிலும இப்படியாப்பட்ட ஒரு பண்ணை வீடு உண்டு. அந்த வீட்டைப்போய் பார்க்கும் போதெல்லாம் ஏளப்பா என்று மலைப்புத் தோன்றும் அங்கே ஒவ்வொரு விஷயமும்.

அந்த வீட்டின் தானியப் பட்டறைகளுக்கு விரிசல் விழாமல் இருக்க வண்டிப் பட்டைகளை பொல்ட்டாக மாட்டி "வாங்கு" பிடித்திருப்பதை பார்த்து அதிசயப்பட்டவர் இவர். தமது பையன் படித்த பெரிய உத்தியோகத்திற்கு வந்தப் பிறகு இப்படியாப்பட்ட வீட்டில் பெண் எடுக்கவேண்டும் என்று தீர்மானித்தார். இப்போது என்னத்தான் இவர் மகன் கலெக்டர் உத்தியோகம் பார்த்தாலும் அந்த ஊர் பண்ணை வீட்டில் பொண்ணுக் கொடுக்கமாட்டார்கள். ஓதை மூக்கு நல்லா நாயக்கர் பேரனைத் தெரியாதாக்கும் பூ என்று சொல்லி விடுவார்கள். அதனால் அதேபோல ஒரு வீட்டில் தம்முடைய மகனுக்கு பெண் எடுத்து காட்டனும் என்கிறதாகத்தில் வந்தவர் இவர். இங்கே நிலம் ஒரு ஏக்கர் கூட கிடையாது என்று



தெரிந்ததுடன் பையன் கலெக்டராக இருந்தால் என்ன கவர்னராக இருந்தால்தான் என்ன கிடையாது பொண்ணு என்று கராலாக சொல்லிவிட்டார்கள். என்னையா பையன் ஜில்லா கலெக்டராகப் போறான் பொண்ணு கிடையாதுனு சொல்லிங்களே என்று மரைத்துப் போய் கேட்டார் வந்தவர். கலெக்டராக அது அவன்மட்டுக்கும். நாளைக்கு பையனுக்கு ஏதாவது ஒண்ணு ஆகிவிட்டால் என் பொண்ணு இல்ல தெருவில் நிற்பாள். பையனுக்கு நாலு ஏக்கர் நிலம் இருந்தால் அவள் எதிலே கிண்டிகிலறித்தான் பாட்டையாவது கழிச்சிடுவா. ஒன்னும் இல்லாதவனுக்கு உத்தியோகத்தை நம்பி யாரு பொண்ணு கொடுப்பார் என்று ஓங்கி கேட்டார் கோனேரி. அப்போ அது சரிதான் என்று பட்டது. அவருக்கு மாத்திரம் இல்லை எல்லோருக்குமே கரிசல் காட்டில் இந்தச் செய்தி ஓர் அபூர்வ விஷயமாக வியந்து வியந்து பேசப்பட்டது எங்கே கண்டாலும். கவிராயர்கள் வந்து பாடுவார்கள், மேழி பிடிக்கும் கை, வேல் வேந்தர் நோக்கும் கை என்று. சம்சாரிராஜா, சன்னியாசி நாய், என்றெல்லாம் பேசி சந்தோஷிந்த காலமது.

இப்போ நிலைமை என்ன? இப்போ அதே கோனேரி செங்கன்னாவின் பேரனுக்கே பொண்ணு கொடுக்கமுடியாது என்று செவிட்டில் அறைந்தது மாதிரி சொல்லிவிட்டான்கள். பொண்ணு கேட்கபோனது யாருமில்லை. அதே அசல் கோனேரியேதான்.

வந்தட்டி நாயக்கர் வந்து பொண்ணுகேக்கும் போது கோனேரிக்குநல்லா இருந்தா அப்போ அம்பது வயசு இருக்கும். இப்போ எம்பதுக்குக்கிட்டெ. இப்போ பதில் சொன்னவர் உத்தியோகம் பார்ப்பவரில்லை, நல்ல அயனான சம்சாரி. அவர் வாயிலிருந்து வந்தப் பதில் இது. அடிபாவி பயலுகளா சம்சாரிக்கு சம்சாரி சொல்ற சொல்லாடா இது. டொக் டொக் என்று கம்பை ஊன்றிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டுவிட்டார் கோனேரி. செங்கன்னாவின் குடும்பம் முந்தி கூட்டுக் குடும்பமாகத்தான் இருந்தது. அப்புறம் அவர் வீட்டிற்கு வந்த மகாலெட்சுமிகள் ஒருத்தருக்கு ஒருத்தர் பேச்சண்டைபோட்டு கூட்டுக் குடும்பத்தை உடைத்தார்கள்.

பாத்தா ரொம்ப பகுந்தா கொஞ்சம் அதேமோடா மோடி அந்தஸ்தில் இருந்து கோனேரியின் குடும்பம் இறங்கி விட்டது. இப்போ அந்தப் பெரிய வீட்டுக்குள் சிறிய ஆறு குடும்பங்கள் வசிக்கின்றனர். குறுக்கே மறுக்கே சுவர்களை எழுப்பி இடமில்லாத இடத்தில் உண்டாக்கிய சமையல் பிரைகளினால் புகைப்பிடித்து போய்விட்டது அந்த வீடு.

கூட்டுக்குடும்பங்கள் உடைந்ததோடு பழைய எண்ணங்களும் உடைந்துக்கொண்டே வருகின்றன. முக்கியமாக பெண்டுகளிடத்தில் வெயிலில் போய் சாகவேண்டிய அவசியம் இல்லை என்று தீர்மானித்து விட்டார்கள் அவர்கள். பிறந்த வீட்டில் இருந்து தளதள என்று பசலிக் கொடியாய் வந்தவர்கள் தாங்கமுடியாத உழைப்பால் காங்சு கருவாடாய் போவதில்லை. இனிமேல் என்று தீர்மானித்து விட்டார்கள். சிகப்பு நிறமெல்லாம் மங்கி சூரிய சூட்டினால் கரிக்கட்டையாகப் போகவேண்டும் என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். சம்சாரியை கட்டிக் கொண்டதனால் விவசாயக் கூலி பெண்களுக்கு இருக்கும் ஓய்வுக் கூட தங்களுக்கு இல்லை என்று கண்டுக் கொணுடார்கள் அவர்கள்.

கோனேரிக்கு பெண்களைப் பெற்ற தகப்பன்கள் சொன்ன பதில் சம்சாரிகளுக்கு இனிமேல் நம்ப பொட்டைப்பிள்ளைகள் வாக்கப்படாது வந்து கேட்காதிங்க. காதுட்டு சம்பளம் ஆனாளும் கவர்மெண்ட் சம்பளம் இருக்கனும். மாசம் இருநூறு சம்பாதிக்கீற வாட்ச்மேனாக இருந்தாலும் சரி அவனுங்களை கட்டத்தயார். காப்படி அரிசி பொங்க தின்னுட்டு லாத்தலா ஒரு சினிமாவோ நாடகமோ போக நல்லா படுத்து எழுந்திருக்க ஒரு பிள்ளையோ இரண்டோ பெத்துகிட்டு குடும்பக்கட்டுப்பாடு செய்துக்கிட இப்படி ஆகிட்டது பொளப்பு. தலைக்கீழாய் நின்று பார்த்தார் கோனேரி. பல இடங்களிலும் போய் மூத்தப் பேரனுக்கு முப்பத்தொரு வயசாச்சு. அடுத்த வருசம் ரட்டை வயசு வந்துரும் அதுகுள்ளாக முடிச்சிறணுமே கல்யாணத்தை என்று தவுதாயப்பட்டு அலைகிறார். எங்கேயும் பொண்ணு கொடுப்பாரில்லை, எவளும் கட்டத் தயாரில்லை. அவருடைய பேரன் செங்கன்னாவுக்கு பத்து ஏக்கர் கரிசல் இருக்கு செல் கிடையாது. நகை ஒண்ணுமே வேண்டாம் பொண்ணுக்கு ஏல்க்கையாய் உண்டான நல்லது பொல்லது செய்தால் போதும் என்றெல்லாம் சொல்லிப் பார்த்தாச்சே.



கோனேரி மனம் உடைஞ்சு போனார். என்னடா எளவாப் போச்சி, எளவுலேயும் பேரெளவா இருக்கே. கடைசியிலே சம்சாரி கொத்தைப் பருத்தியிலும் கேவலமாப் போயிட்டானே- செ. சிரிப்புத்தான் வந்தது, கோணல் சிரிப்பு. அந்தக் காலத்துலே ஜில்லாக்கலெக்டருக்கே பொண்ணு கிடையாதுரா பொண்ணு சொன்ன பாவம் வந்து இப்போப் பிடிச்சிருக்கு என்று சொல்லிச் சிரித்துக் கொண்டார்

முடிவுரை


இன்றையக் காலக்கட்டத்தில் இருக்கும் நிலையினையே கி.ரா அவர்கள் தன்னுடைய கொத்தைப் பருத்தி என்ற சிறுகதையில் கூறியுள்ளார். ஒரு மனிதன் வாழும் காலத்தில் வசதியோடும், பேரும் புகழோடும் வாழ்ந்தாலும் அவனது இறுதிக் காலத்தில் நலமுடன் வாழவில்லை என்றால் யாவரும் மதிப்பது இல்லை. வாழ்ந்தவன் கெட்டாள் நாய்க்கூட மதிக்காது என்பது உண்மையே. கோனேரி எவ்வளவு தான் வாழ்ந்தாலும் அவரது பேரனுக்கு பொண்ணு கிடைக்காமல் கஷ்டப்படும் நிலையினை இச்சிறுகதையின் வழி சமுதாய

நிகழ்வினை சிறப்பாக சித்தரித்துள்ளார். கி.ராஜநாராயணன் ஒரு சிறந்த எழுத்தாளர். அவருடைய கரிசல் பிரதேச மக்களின் வாழ்க்கையை தனது எழுத்துக்களில் அவர் கொண்டு வந்துள்ளதனை அறிய முடிகிறது.

துணைநின்ற நூல்

1. கி. ராஜநாராயணன் - சிறுகதை தொகுப்பு
அன்னம் - அகரம் பதிப்பகம்
சென்னை.

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ராஜநாராயணனின் கன்னிமை சிறுகதை வெளிப்படுத்தும் பெண்ணின் மனமாற்றம்

முனைவர் சு சத்தியா





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் சு சத்தியா
உதவிப் பேராசியர்
தமிழ்த்துறை
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்
sathiya2015j@gmail.com
9080915938

கி.ராஜநாராயணனின் கன்னிமை சிறுகதை வெளிப்படுத்தும் பெண்ணின் மனமாற்றம்

கரிசல்காட்டு இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் கி.ராஜநாராயணன் தனது ஆற்றல்சார் படைப்புகளால் சமூக அவலங்களை எடுத்துரைத்து சமூகத்தில் தனித்ததொரு இடத்தினைப் பெற்றிருப்பவர்.இவர் எண்ணற்ற சிறுகதைகளைப் படைத்திருந்தாலும் இவரது கன்னிமை எனும் சிறுகதை ஒரு பெண் திருமணத்திற்கு முன்பு இருந்த நிலையும் திருமணத்திற்குப் பின்பு அடைகின்ற மாற்றங்களையும் புலப்படுத்தும் வகையில் இக்கதை அமைகிறது. இதனின் தனித்துவத்தை சமூக உளவியல் நோக்கோடு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.



கன்னிமையின் கதையமைப்பு

ராஜா வீட்டில் அண்ணன் தம்பிகள் எட்டுப்பேர். பெண் குழந்தை இல்லை. அதனால் தன் ஒன்றுவிட்ட சகோதரி வீட்டில் பிறந்த நாச்சியாரை எடுத்து வந்து தங்கள் வீட்டில் வளர்த்தனர். சிறுவயதிலிருந்தே அறிவிலும் அழகிலும் அவளுக்கு நிகர் எவரும் இல்லை என்ற அளவில் வாழ்ந்தாள். தன் வீட்டில் வேலைப் பார்க்கும் வேலைக்காரர்களுக்கு கஞ்சி கொடுப்பதைக் கூட தன் கையினால் கொடுத்தால் தான் அவளுக்குத் திருப்தி. தானும் தன் வீட்டில் உள்ளவர்களும் எப்படி உண்பார்களோ அவ்வாறே நிறைய மோர் விட்டுக் கம்பஞ் சோற்றைப் பிசைந்து கரைத்து மோர் மிளகாய் வத்தலுடன் வெங்கலச் செம்பில் கஞ்சி ஊற்றுவாள். இம்மண்ணில் மனிதர்களாகப் பிறந்த அனைத்து உயிர்களும் சமம் என்பதை நாச்சியார் வழி உணர்த்தப்படுகிறது.

அழகின் உவமையவள்

அழகின் விளக்கின் ஒளிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. கறிக்கு உப்பைப் போல அழகுக்கு அதி ருசி கூட்டுவதாக இருக்கின்றது என்கிறார் ராஜா.

இயற்கையோடு இயைந்த உணவை அமுதமாக தருபவள்

நாச்சியார் வீட்டில் உள்ளவர்களுக்கு இரவு நேரத்தில் வெதுவெப்பமாகக் குதிரைவாலிச் சோறு போட்டு தாராளமாகப் பருப்புக் கறி விட்டு நல்லெண்ணையும் அதனுடன் சேர்த்து ஊற்றுவாள். இதற்குப் புளி ஊற்றி அவித்த சீனி அவரைக்காய் வெஞ்சினமாகக் கொடுப்பாள். இரண்டாம்தரம் சோற்றுக்கு கும்பா நிறைய இரசம் வைப்பாள். இரசத்தில் ஊறிய உருண்டை உருண்டையான குதிரைவாலிப் பருக்கைகளை உண்பவர்கள் கை நிறைய எடுத்து பிழிந்து உண்பார்கள். இக்காட்சி அனைத்தும் நம் கண்முன் நேரில் காண்பதுபோல் நிறுத்துகிறது.

மார்கழி மாதத்தை மகிழ்ச்சிப் பெருக்காக்கியவள்

மார்கழி மாதம் என்றால் நாச்சியார் வீட்டுக்குள்ளும் தெருவாசல் முற்றத்திலும் வகைவகையானக் கோலங்கள் போட்டு அழகுப்படுத்துவாள். மார்கழி மாதத்தின் சிறப்பினை அனைவரும் அறியும்படி செய்வாள்.

கடவுள் பக்தி



நாச்சியார் அம்மா தொட்டெரம்மா கோயிலின் இலந்தைமுள் கோட்டையின்மேல் ஒரு கூறு பருத்தியை எடுத்து இரு கைகளிலும் ஏந்தி பயபக்தியோடு போட்டாள். இதனைப் பார்த்த பள்ளுப் பெண்கள் குலவியிட்டார்கள். இது நம் முன்னோர்களின் நாட்டுப்புற மரபினையும் கடவுள் நம்பிக்கையையும் காட்டுகிறது.

அன்பின் அன்னையவள்

நாச்சியாரம்மாவின் தோட்டத்தில் மூன்று கொலைகளை செய்த சுந்தரதேவனுடைய மகன் பருத்திச் சுளையை எவருக்கும் தெரியாமல் எடுத்துவிட்டான்.அதனால் அவனை ஊனுக்கம்பால் அடித்து நொறுக்கினார் நாச்சியாரின் அப்பா. அதனால் ஆத்திரம் அடைந்த சுந்தரதேவன் நாச்சியார் வீட்டிற்குச் செல்ல புறப்பட்டான். அந்நேரத்தில் தாமே நாச்சியார் சுந்தரதேவன் வீட்டிற்குள் நுழைந்தாள். சிறுவனின் தாய் கதறியது உள்ளத்தை உலுக்குவதாக இருந்தது. அவர் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிந்தது.பின்பு தன் முந்தானையால் கண்ணீரை ஒத்திக் கொண்டு அச்சிறுவனின் இரத்தம் உறைந்த முகத்தை துடைத்து அவனின் மயக்கத்தை தெளிவித்தாள் வீட்டிலிருந்த புளித்த மோரை சிறிது கொடுத்துத் தெம்பு உண்டாக்கினாள். பின்பு மஞ்சணத்தி இலைகளைப் பறித்து வதக்கி தன் கையால் ஒத்தடம் கொடுத்தாள். அதன்பின் சுவரொட்டி இலைகளை வாட்டிப் பக்குவப்படுத்தி காயங்களுக்குக் கட்டினாள். இவ்வளவும் செய்த நாச்சியார் தன் வீட்டுக்கு வந்து பத்துப் பக்கா நெல் அரிசியும் இரண்டு கோழிகளையும் கொடுத்தனுப்பினாள். இரக்கத்தின் தாயாகவே அன்பின்

அன்னையாகவே உருவெடுத்தவள். இப்படி இருந்த நாச்சியார் வாழ்வில் ஒரு திருப்புமுனை. நாச்சியாரின் திருமணம் அவளின் இயல்பையே மாற்றியது.

நாச்சியார் திருமணம்

நாச்சியார் தமக்குத் திருமணம் என்றதும் மூன்று நாட்கள் உட்கார்ந்து அழுதாள். கல்யாணம் முடிந்து நாலாம் நாள் அவள் மறுவீடு சென்றாள். சுமங்கலிகள் ஆரத்தி எடுத்தார்கள்.அப்பொழுது எங்கள் தாயே லட்சுமி தேவியே போய் வருவாய் என்று பாடல் பாடி அவளை வழியனுப்பினர். அவளின் கணவன் ரங்கய்யாவின் வீடு அவர்களின் வீட்டில் இருந்து ஐந்து வீடுகள் தள்ளி இருந்தன.

நாச்சியார் குடும்பம்

நாச்சியார் ரங்கையாவுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. நாச்சியார் முன்பைவிட ஓய்வில்லாமல் அதிகமாக உழைக்கிறாள். தன் குழந்தைக்குப் பால் ஊட்டிவிட்டு மாராப்பைச் சரி செய்து கொள்ளாமல் தூளியில் இட்டு ஆட்டுகிறாள். திருமணத்திற்கு முன் அழகாக தன்னைப் பார்த்துக் கொண்டவள் இப்பொழுது தன்னைக் கவனித்துக் கொள்வதில்லை.



மனம் மாறிய நாச்சியார்

வேலை செய்பவர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் பார்த்து பார்த்து உணவு இட்ட நாச்சியார் இப்பொழுது ஏகாலிக்கும் குடிமக்களுக்கும் சோறு போட எழுந்திருக்கும் போது முகம் சுளிக்கிறாள். குழந்தைக்குப் பாலூட்டும் போது அல்லது தான் சாப்பிட உட்காரும்போது பார்த்துதான் அவர்கள் சோறு வாங்க வருகிறார்கள் என்று புகார் கூறி பிச்சைக்காரர்களுக்கு வாய்தா போடுபவளாக மாறிவிட்டாள்.

மனைவியின் முந்தைய அன்பினை நினைத்த ரங்கையா

ரங்கையாவுக்கு உடல் சிரியில்லை. நாச்சியார் அதை கவனிக்காமல் கணக்கில் ஐந்து ரூபாய் குறைகிறது என்று கணவனிடம் கணக்கு கேட்டாள். அவளது இந்த நிலையை எண்ணி அவள் கணவன் வருந்தினான். ஆரம்பத்தில் அவள் நல்ல எண்ணமும் உள்ளமும் அறிந்தே மணம் முடித்த ரங்கையா இன்று அனைத்துக் குணங்களும் தன் மனைவியிடம் மாறி விட்டதை எண்ணி மனம் வருந்தினார். திருமணத்திற்கு முன்பு இருந்த அவளது இனிய மனதையே விரும்பினார். அன்பை விதைத்தவள் இன்று பணத்தை நேசிக்கும் கன்னிமையாகி விட்டாள்.

இக்கதையில் வெளிப்படும் உளவியல்

மனம் தான் மனிதனின் வலிமையான ஆயுதம். அதில் அன்பையும் பண்பையும் விதைத்தவள் நாச்சியார். ஆனால் திருமணத்திற்குப் பிறகு அனைத்தும் இழந்து பணமே என்று நின்றாள் நாச்சியார். நாச்சியாரின் மனம் மாற்றத்திற்கு என்ன காரணம். அவள் திருமணம் என்றவுடன் மூன்று நாள் அழுதாள் என்று இக்கதை வெளிப்படுத்துவது சிறகை விரித்து சுதந்திரமாக வாழ்ந்த பறவையைக் கூண்டுக்குள் அடைத்து விட்டனர். ஆம் அவள் திருமணத்திற்கு முன் இயல்பாக வாழ்ந்த வாழ்க்கையைத் தொலைத்தாள். குடும்ப பொறுப்பு பணி சுமை போன்ற காரணமும் மனமாற்றத்திற்கு ஒரு காரணம்.அவரவர்கள் பெரும் செல்வம் அவரவர் அமைத்துக்கொள்கின்ற விதத்தை வைத்தே என்று சொல்லலாம். கன்னிமை பருவத்தில் வாழ்ந்த வாழ்வும் கன்னிமை கழிந்த வாழ்வுக்கும் உள்ள வேறுபாட்டினை பெண்கள் உணரும் வழியில் உணர்ந்தால் அவர்கள் வாழ்வு இனிக்கும். என்பதை இக்கதை வெளிப்படுத்துகிறது.
திருமணத்திற்கு முன்பு அனைவரிடமும் அன்பாக இருந்த பெண் திருமணத்திற்கு பின்பு அடைகின்ற மாற்றத்தை இக்கதை புலப்படுத்துகிறது.

துணை நூல்

கி . ராஜநாராயணன் கதைகள்
அன்னம் - அகரம் வெளியீட்டகம்
2016



****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ராஜநாராயணன் சிறுகதையும் வாழ்வியலும்

முனைவர் க முத்தழகி






தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் க முத்தழகி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி
தஞ்சாவூர்.
கைப்பேசி எண்:9894819327
muthazhahig@gmail.com

கி.ராஜநாராயணன் : சிறுகதையும் வாழ்வியலும்

தூத்துக்குடி மாவட்டத்தின் இடைசெவல் கிராமத்தில் பிறந்த கு.அழகிரிசாமியும் கி.ராஜநாராயணனனும் தமிழின் இரண்டு முக்கிய படைப்பாளிகள். இருவரும் பால்யகாலம் முதல் நண்பர்கள். ஒன்றாக வளர்ந்தவர்கள். இருவருமே எழுத்தாளர்களாகி சாகித்ய அகாதமி பெற்றிருக்கிறார்கள். முறையான பேருந்து வசதி கூட இல்லாத கிராமம். கு. அழகரிசாமி இடைசெவல் மனிதர்களைத் தன் எழுத்தில் பதிவு நுட்பமாகச் செய்திருக்கிறார். ஆனால் அவர்கள் மொழியில் பதிவு செய்யவில்லை. கிராவின் முக்கிய பங்களிப்பு மக்கள் தமிழில் கதைகளை எழுதியதே. அது பேச்சிற்கும் எழுத்திற்குமான கரிசல் எழுத்தின் பீஷ்மராக கி.ராவைச் சொல்ல வேண்டும். சொந்த மண்ணையும் மக்களையும் அவர்களின் வேர்மூலங்களையும் பதிவு செய்த கிராவின் எழுத்து தமிழ் நவீன இலக்கியத்தில் புதிய வாசலைத் திறந்துவிட்டது.



கரிசல் மண்ணையும், அதன் மனிதர்களையும் பற்றி எழுதிய கி.ரா , கதைகள், நாவல், குறுநாவல், கட்டுரை என விரிவான தளத்தில் இயங்கினார். கரிசல் வட்டாரத்தில் சிறப்பாக வழங்கும் தமிழ்ச் சொற்களுக்கான கரிசல் வட்டார வழக்கு அகராதியை உருவாக்கினார். நாட்டுப்புற இலக்கியங்களைத் தேடி, ஆராய்ந்து ஒரு தொகுப்பாக வெளியிட்டார். அவாது படைபாற்றலை ஆராய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

படைப்பாற்றல் திறன்

தாமரை, சாந்தி, தீபம் என்று இலக்கிய இதழ்களில் எழுதிக் கொண்டிருந்த கிரா விகடனில் எழுதியதன் வழியே பரவலான பொது வாசகர்களைச் சென்று சேர்ந்தார். அது அவருக்கெனத் தனித்த வாசக பரப்பை உருவாக்கியது ஆப்பிரிக்க இலக்கியம் இன்று என்ன காரணங்களுக்காக உலக அரங்கில் பேசப்படுகின்றதோ அதை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னதாகவே கரிசல் எழுத்தின் வழி தமிழில் துவக்கி வைத்தவர் கிரா.இடைவெளியை வெகுவாகக் குறைத்தது. நம் எதிரில் ஒருவர் அமர்ந்து கதை சொல்வது போன்ற உணர்வினை உணர்த்தும். வட்டார வழக்கு என்று இதை நான் சொல்லமாட்டேன். மாறாக இது ஒரு மரபு. இரண்டாயிர வருட தமிழ் இலக்கியத்தில் நிலம் சார்ந்து உருவாக்கப்பட்ட இலக்கிய மரபின் தொடர்ச்சியிது. தமிழின் நீண்ட கதை சொல்லும் மரபில் இது கரிசல் மரபு என்று அடையாளப்படுத்துகிறது.

மண்ணையும் மனிதர்களையும் எழுதுவது அத்தனை எளிதல்ல கதைகளில் சம்பவங்கள் மட்டுமின்றி பறவைகள், மிருகங்கள், மனித நம்பிக்கைகள், சடங்குகள், வெயில், மழை, காற்று, மண் என்று நுட்பமாக விரிந்து கொண்டே போனதோடு தனித்துவமான கிராமத்துச் சொற்கள், அசலான கேலி, பாலியல் சார்ந்த பதிவுகள் என்று கதையுலகம் வளர்ந்து கொண்டே போகின்றது. அவர் அலங்காரமாகக் கதை சொல்வதில்லை. ஆனால் உயிரோட்டமாகக் கதை சொல்கிறார். அவரது கதைகளில் மண்வாசனணயும் சேர்ந்து வரும். எளிய கிராமத்து மனிதர்களின் அன்றாட வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டும் வல்லமையுடைது என்பதை ஒரு வாய்மொழிக் கதை, கன்னிமை என்னும் கி.ரா வின் சிறுகதையின் மூலமாக ஆராய்ந்து அறிந்திடலாம்.

ஒரு வாய்மொழிக் கதை

விஞ்ஞானத்தின் வருகை கிராமத்து வாழ்க்கையை எப்படிப் புரட்டிப் போட்டது என்பதைப் பற்றிய பதிவுகள் தமிழில் அதிகம் இல்லை. கிரா அதைக் கவனமாகத் தனதுப் படைப்பில் பதிவு செய்திருக்கிறார். ஒரு வாய்மொழிக் கதை என்பதில் விவசாயிகளின் வருமையும், அதிலிருந்து விடுப்படுவதற்கு யதார்த்தவாதிகளாக அவர்கள் செயல்படுவதுக் குறித்து வெளிப்படுத்தும் விதமாக இக்கதைக் கரு அமைந்துள்ளது. இக்கதையில் கூறப்பட்டுள்ள யதாற்தத்தை பற்றி ஆராய்ந்து அறிவோம்.



ஓரெடுப்பு உழுதுட்டு வந்த சம்சாரிகெமத்யான வேளையிலெ, அலுப்புத்தீரக் கொஞ்சம் கரை மரத்து நிழல்லெ துண்டை விரிச்சி தலை சாச்சிக் கிடக்கிறப்பொ பல்ராம் நாய்க்கரு வருவாரு. அரையை மறைக்க வெறும் அரணாக் கயத்திலெ சொருகப்பட்ட கையகலக் கோமணத்துணி. அந்த அரணாக்கயித்துலெ இடது பக்கம் சேலம் பொடிப் பட்டையும், முள்வாங்கியும் வேட்டியை அவுத்து தலையிலெ கட்டிய லேஞ்சி. அதிலே மிச்சமாகத் தொங்குற கங்குல் முதுகுத் தண்டை மறைக்க விடப்பட்ட ஒரு முழத் தொங்கல்லேஞ்சி கட்னமானைக்கே அந்தத் தொங்கலை மேல் முதுகுக்கு விரிச்சி, மரத் தடியிலெ தலெயசாச்சி காலைத் தூக்கி மரத்து மேலே போட்டுக்கிடுவாரு ஒரு யோகாசனம் மாதிரி. பேச்சுக்கு மத்தியிலெ அண்ணைக்குப் பிள்ளையாரப்பன் தான் தொடங்கினான். ஒருத்தன் கிட்டெகைமாத்து வாங்காமெ பொழுதே ஓட்ட முடியலையே. வரதப்பன் சொன்னான்.அதெப்படிவே முடியும். ஆனாப்பட்ட சல்க்காரே அடுத்த நாட்டுக்காரன்ட்டெ கை நீட்றப்பொ நாம எம்மாத்ரம் ? வாங்குறது பெரிசில்லப்பா் திரும்பக் கொடுக்க முடியலையே. திரும்பக் கேக்காத ஆளாப் பாத்து வாங்கணும். அப்பேர்க்கொத்த ஆளு எங்கெனெ இருக்கு, சொல்லு அவங்கிட்ட போயி வாங்குவம். இருப்பான் எங்கெனயாவது இருப்பான் நமக்குத் தட்டுப் படணும்.

அப்படியும் ஒருத்தன் பூமியிலெ இருக்கவா செய்தான் ? ஏய், அப்படி ஒருத்தனென்னப்பா, அதுக்கு மேலேயும் ஒருத்தன் இருந்திருக்காம்பா.

குரல் வந்த திக்கு, பல்ராம் நாயக்கர் தான் அருணாக்கயித்திலெ சொருகியிருந்த பொடிப்பட்டையை உருவி எடுத்துக்கொண்டே சொன்னார். இப்படித்தான் ஒங்க மாதிரி ரெண்டு பேரு ரோசனை செஞ்சாங்களாம். அப்பொ, அவுகளுக்கு ஒரு தகவல் கிடைச்சதாம். நம்ம நாட்டுக்குப் பக்கத்து நாட்லெ ஒருத்தர் வேண்டியமட்டுக்கும் கேக்கிறவர்களுக்கெல்லாம் கடன் கொடுத்தாராம். கடனை வாங்கினவுக திருப்பித் தர வேண்டாம். அவங்க வாரிசுக திருப்பித் தந்தா போதும். பிள்ளையாரப்பனும் வரதப்பனும் சந்தோஷத்தால் சிரித்தார்கள்.

அது நல்ல விசயந்தான். அலப்பரை இல்லை. ஆனா, நம்ம வாரிசுகளெ எவன் சம்பாரிக்கிறது அவன் எப்பப் பணக்காரனாகி அவரோட பாக்கியெத் தீக்கிறது? அட் எப்பச் சம்பாரிச்சு பணக்காரனாகிறானோ அப்பத் தீத்தாப் போதுங்கிறது தான் கண்டிஷன்ண்ணேன்.
ஆங் சரி, சரி சொல்லுங்க. ஆச்சர் ஒடனே இவங்க ரெண்டு பேரும் கட்டுச் சோத்தைக் கட்டிக்கிட்டு அந்த நாட்டுக்குப் போனாங்க.



போனர் அங்கெ போயி விசாரிக்கறப்போ இன்னொரு தாக்கல் கெடச்சது. அங்கொருத்தன் சொன்னான். இதென்ன பெரிய காரியம்ண்ணுட்டு இவங்கிட்டெ கடன் வாங்க வந்துட்டாகெ. இந்த நாட்டுக்குப் பக்கத்து நாட்டிலெ ஒருத்தரு கடங்கொடுக்காரு. அவருக்கு கடன் வாங்கினவனும் கொடுக்க வேண்டாம். வாரீசுகளும் கொடுக்க வேண்டாம். அடுத்த ஜென்மம் எடுத்தா அப்பொ வந்து கொடுத்தாப் போதும். அடடே.. இது ரொம்ப அருமையா இருக்கே!

சரி நாம அங்கே போவோம். இவங்க கிட்டெ வாங்கிட்டு நாம கண்ணை மூடாட்டா நம்ம வாரீசுக நம்மை ஏசிக்கிட்டே இருக்கும்ண்ணு சொல்லிட்டு அந்த நாட்டுக்குப் புறப்பட்டுப் போனாங்க காட்டு வழி. பேசிக்கிட்டே நடந்து போய்க் கிட்டு இருக்காங்க. அதிலெ ஒருத்தன் சொன்னான். அடுத்த ஜென்மத்திலெ நாம என்ன பிறப்புப் பிறக்கப் போறோமோ. மனுசனாப் பிறந்தாத் தானே, அவரு கடனை நாம அடைக்கணும். அது தானே என்று ஆதரித்தான் மற்றவனும்.

இந்த மாதிரி இவங்க பேச்சைக் கேட்ட யாரோ, விழுந்து விழுந்து சிரிக்கிற மாதிரி ஒரு சத்தம் கேட்டுது. கெக் கெக் கெக் கெ..ஓ கெக் கெக் கெக் கெக் கெக்கெ இவங்க எல்லாப் பக்கமும் திரும்பிப் பாத்தாங்க. யாரையுமே காங்கலை. அந்தரத்திலெ இருந்து சிரிப்புச் சத்தம் மாத்திரம் கேட்டுப் பதறிப் போனாங்க. இவங்க பதறுனதையும் திகைக்கிறதெயும் கண்ட அந்த அசரீரி மேலும் சிரிச்சி உருண்டது.

இவங்களோட திகைப்பும் பதட்டமும் நீங்குறதுக்கு முன்னாலெயே அந்தக் குரல் இவங்களைப் பாத்து ஏ அப்பா கடங்காரங்களா் என்னை உங்களுக்குத் தெரியலையா ? இந்தா பாருங்க் நாந்தான் பேசுதேன்.

சோளக்காட்டுக் காவலுக்கு அங்கே போட்டிருந்த பரண் உச்சியிலெ ஒரு மாட்டுக் கொம்பு, பூண் பிடிச்ச மாதிரி ஒரு கம்பு நுனியிலெ நட்டமா சொருகி வச்சிருந்தது. அது தான் அப்படிச் சிரிச்சதும் பேசினதும்.

போன ஜென்மத்திலெ நான், இப்பொ நீங்க கடன் வாங்கப் போரீகளே அவரு கிட்டத் தான் நானும் கடன் வாங்கியிருந்தேன். கடனை வாங்கி வாங்கி ரொம்பப் போடுஸா செலவழிச்சேன். ஆயுசு முடிஞ்சு செத்துப் போன பிறகும் அவுகளுக்கு என் தோலை உரிச்சுக் கொடுத்து கமலைக்குக் கூனைவாலாய் தண்ணி இரைக்க உதவுனேன். கூனைவாலாகிக் கிழிஞ்ச பிறகும் அவுக வீட்டு ஆள்களுக்கு காலுக்குச் செருப்பாகி உழைச்சேன். அப்பவும் என் பாடு தீரலை. இப்போ, அவரோட தோட்டத்துக்குக் காவல் காத்துக்கிட்டிருக்கேன்.



இப்படிச் சொல்லிட்டு மாட்டுக் கொம்புச் சிரிக்க ஆரம்பிச்சது. சிரிப்புச் சத்தம் கேட்டாலும் கவனிச்சுக் கேட்டா அது அழுகைச் சத்தம் போல இருந்தது. ஒண்ணும் ஓடலை இவங்களுக்குத் அப்படியே மெய்மறந்து நின்னுட்டாங்க. அப்புறம் அவங்க கடன் வாங்கப் போனாங்களா் வந்த வழியைப் பாத்துத் திரும்பிட்டாங்களா தெரியலை.

ஒரு வாயமொழிக் கதையில் விவசாயிகளின் வாழ்க்கை வரலாற்றை அழகாக சித்தரித்துள்ளாா். விவசாயிகள் வாழ்வாதரமும், அதானால் ஏற்படக் கூடிய வேதனைகளையும், அவா்கள் வேதனைகளில் இருந்து எவ்வாறு விடுப்படமுடியும் என்பதற்கான வழியினைத் தேடிச்செல்லுதும் அதன் உண்மைநிலையினை உணா்ந்து அவா்களின் செயல் மேலும் தொடர்ந்ததா என்பது கேள்விக் குறியாக கதையை முடித்திருப்பது யதாா்த்தத்தை உணா்த்துக்கின்றது.

கன்னிமை

கன்னிமை என்னும் சிறுகதையில் விருந்தோம்பல் பண்பும், ஒரு பெண்ணின் திருமண வாழ்கை எப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்துகிறது என்பதை கருவாகக் கொண்டு இக்கதை அமைந்துள்ளது. சொன்னால் நம்பமுடியாதுதான்! நாச்சியாரம்மாவும் இப்படி மாறுவாள் என்று நினைக்கவேயில்லை. இதில் அவள் எனக்கு ஒன்றுவிட்ட சகோதரி. நாங்கள் எட்டுப்பேர் அண்ணன் தம்பிகள். பெண்ணடியில்லை என்று என் தாய் அவளைத் தத்து எடுத்துத் தன் மகளாக்கிக் கொண்டாள்.

அம்மாவைவிட எங்களுக்குத்தான் சந்தோஷம் ரொம்ப. இப்படி ஒரு அருமைச் சகோதரி யாருக்குக் கிடைப்பாள்? அழகிலும் சரி, புத்திசாலித்தனத்திலும் சரி அவளுக்கு நிகர் அவளேதான். அவள் எங்கள் வீட்டில் கன்னிகாத்த அந்த நாட்கள் எங்கள் குடும்பத்துக்கே பொன் நாட்கள்.

வேலைக்காரர்களுக்குக்கூட அவளுடைய கையினால் கஞ்சி ஊற்றினால்தான் திருப்தி. நிறைய்ய மோர்விட்டுக் கம்மஞ்சோற்றைப் பிசைந்து கரைத்து மோர் மிளகு வத்தலைப் பக்குவமாக எண்ணெயில் வறுத்துக் கொண்டுவந்து விடுவாள். சருவச் சட்டியிலிருந்து வெங்கலச் செம்பில் கடகடவென்று ஊற்ற, அந்த மிளகு வத்தலை எடுத்து வாயில் போட்டு நொறு நொறுவென்று மென்றுகொண்டே, அண்ணாந்து கஞ்சியை விட்டுக்கொண்டு அவர்கள் ஆனந்தமாய்க் குடிக்கும்போது பார்த்தால், நமக்கு அவ்வாறு உண்ணவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தும்.

ஒரு நாளைக்கு உரித்த பச்சை வெங்காயம் கொண்டுவந்து, கடித்துக்கொள்ள கொடுப்பாள். ஒரு நாளைக்குப் பச்சை மிளகாயும், உப்பும். பச்சை மிளகாயின் காம்பைப் பறித்துவிட்டு அந்த இடத்தில் சிறிது கம்மங்கஞ்சியைத் தொட்டு அதை உப்பில் தோய்ப்பார்கள். உப்பு அதில் தாராளமாய் ஒட்டிக்கொள்ளும். அப்படியே வாயில் போட்டுக்கொண்டு கசமுச என்று மெல்லுவார்கள். இரவில் அவர்களுக்கு வெதுவெதுப்பாகக் குதிரைவாலிச் சோறுபோட்டுத் தாராளமாகப் பருப்புக்கறி விட்டு நல்லெண்ணெயும் ஊற்றுவாள். இதுக்குப் புளி ஊற்றி அவித்த சீனியவரைக்காய் வெஞ்சனமாகக் கொண்டுவந்து வைப்பாள். இரண்டாந்தரம் சோற்றுக்குக் கும்பா நிறைய ரஸம். ரஸத்தில் ஊறிய உருண்டை உருண்டையான குதிரைவாலிப் பருக்கைகளை அவர்கள் கை நிறைய எடுத்துப் பிழிந்து உண்பார்கள்.




வேலைக்காரர்களுக்கு மட்டுமில்லை, பிச்சைக்காரர்களுக்குக்கூட நாச்சியாரம்மா என்றால் குலதெய்வம் தான். அவளுக்கு என்னவோ அப்படி அடுத்தவர்களுக்குப் படைத்துப் படைத்து அவர்கள் உண்டு பசி ஆறுவதைப் பார்த்துக்கொண்டிருப்பதில் ஒரு தேவ திருப்தி.

அவள் வாழ்க்கைப்பட்டு, புருஷன் வீட்டுக்குப் போனபிறகு எங்கள் நாக்குகள் எல்லாம் இப்போது சப்பிட்டுப் போய்விட்டது. உயர்ந்த ஜாதி நெத்திலியைத் தலைகளைக் கிள்ளி நீக்கிவிட்டுக் காரம் இட்டு வறுத்துக் கொடுப்பாள். இப்போது யாருமில்லை எங்களுக்கு. அந்தப் பொன்முறுவல் பக்குவம் யாருக்கும் கைவராது. பருப்புச்சோற்றுக்கு உப்புக்கண்டம் வறுத்துக் கொடுப்பாள். ரஸ சாதத்துக்கு முட்டை அவித்துக் காரமிட்டுக் கொடுப்பாள். திரண்ட கட்டி வெண்ணெயை எடுத்துத் தின்னக் கொடுப்பாள், அம்மாவுக்குத் தெரியாமல். அவள் அப்பொழுது எங்கள் வீட்டிலிருந்தது வீடு நிறைந்திருந்தது. தீபம்போல் வீடு நிறைஒளி விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தாள்.

நாச்சியாரம்மா, பருத்தியைக் கருவமரத்து நிழலில் கூறுவைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள். மடிப் பருத்தி, பிள்ளைப் பருத்தி, போடு பருத்தி என்று பகிர்ந்து போட, பள்ளுப் பெண்கள் சந்தோஷமாக நாச்சியாரம்மாவை வாழ்த்திக்கொண்டே வாங்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் எங்கள் வீட்டில் வேறு யார் வந்து கூறுவைத்துக் கொடுத்தாலும் ஒப்பமாட்டார்கள். நாச்சியாரம்மாதான் வேணும் அவர்களுக்கு.

தொட்டெரம்மா கோயிலின் இலந்தைமுள் கோட்டையின்மேல் நாச்சியாரம்மா ஒரு கூறு பருத்தியை எடுத்து இரு கைகளிலும் ஏந்திப் பயபக்தியோடு அந்த முள்கோட்டையின் மீது போட்டாள். பின்னால் வந்துக்கொண்டிருந்த பள்ளுப்பெண்கள் குலவையிட்டார்கள். ரங்கையா கயிற்றை நெகிழ்ந்து விட்டதும் புல்லையும் மயிலையும் வால்களை விடைத்துக்கொண்டு பாய்ந்து புறப்பட்டது.

எங்கள் ஊரில், சுந்தரத்தேவன் என்று ஒரு பெரிய போக்கிரி இருந்தான். ஏழுதடவை ஜெயிலுக்குப் போனவன். மூன்று கொலைகள் செய்தவன். அதில் ஒன்று இரட்டைக் கொலை. அவனுடைய மகனை, எங்கள் தகப்பனார் எங்கள் புஞ்சையில் வாங்கித்திங்க பருத்திச்சுளை எடுத்தான் என்றதுக்கு ஊனுக்கம்பால் அடி நொறுக்கி எடுத்து விட்டார். பையனைக் கட்டிலில் வைத்து எடுத்துக்கொண்டு வந்து அவனுடைய வீட்டில் கிடத்தியிருக்கிறார்கள். சுந்தரத்தேவன் வெட்டரிவாளை எடுத்துக்கொண்டு வந்து எங்கள் வீட்டை நோக்கிப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறான். விஷயம் இதுதான். ரங்கையா போய் எவ்வளவு சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை அவன். நாச்சியாரம்மா சுந்தரத்தேவன் வீட்டை நோக்கிப் போனாள்.



அங்கு அவள் போனபோது ஒரே கூட்டம். அழுகைச் சத்தம். நாச்சியாரம்மா நுழைந்ததும் பரபரப்பு உண்டானது. பெண்கள் பணிவாக வழிவிட்டு விலகி நின்றனர். அடிப்பட்ட சிறுவ்னை அந்தக் கட்டிலிலேயே கிடந்த்தியிருந்தது. சிறுவனின் தாய் கதறியது உள்ளத்தை உலுக்குவதாக இருந்தது. நாச்சியாரம்மா சிலையானாள். அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிந்தது. அவள் சுந்தரத்தேவனை ஏறிட்டுப் பார்த்தாள். பின்பு கட்டிலின் சட்டத்தில் உட்கார்ந்தாள். தன் முந்தானையாள் கண்ணீரை ஒத்திக்கொண்டு அச்சிறுவனின் இரத்தம் உறைந்த முகத்தைத் துடைத்தாள். சுந்தரத்தேவன் கட்டிலின் பக்கத்தில் நெருங்கி அரிவாளைத் தரையில் ஊன்றி ஒற்றைக் கால் மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு இடது முழங்கையைக் கட்டிலின் சட்டத்தில் ஊன்றி முகத்தில் ஐந்து விரல்களால் விரித்து மூடிக்கொண்டு ஒரு குழந்தைபோல் குமுறி அழுதான்.

நாச்சியாரம்மா சிறுவனை மூர்ச்சை தெளிவித்தாள். வீட்டிலிருந்த புளித்த மோரை வருத்திச் சிறிது கொடுத்துத் தெம்பு உண்டாக்கினாள். மஞ்சணத்தி இலைகளைப் பறித்துக்கொண்டு வரச் சொன்னாள். அதை வதக்கித் தன் கையாலேயே ஒத்தடம் கொடுத்தாள். சுவரொட்டி இலைகளை

வாட்டிப் பக்குவப்படுத்திக் காயங்களைக் கட்டினாள். பின்பு வீட்டுக்கு வந்து, பத்துப் பக்கா நெல் அரிசியும், இரண்டு கோழிகளையும் கொடுத்தனுப்பினாள். நாங்கள் ஊமைகளைப்போல் ஒன்றுமே பேசாமல் அவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே இருந்தோம்.

எல்லாப் பெண்களையும்போல் நாச்சியாரம்மாவுக்கும் ஒருநாள் கல்யாணம் நிச்சயமானது. வழக்கம்போல் மூன்றுநாள் கல்யாணம். அந்த மூன்று நாளும் அவள் பொண்ணுக்கு இருந்த அழகைச் சொல்லிமுடியாது. கல்யாணம் முடிந்த நாலாம்நாள் அவள் எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து மறுவீடு போகிறாள். சுமங்கலிகள் அவளுக்கு ஆரத்தி எடுத்தார்கள். ஆரத்தி சுற்றிக்கொண்டே அவர்கள் பாடினார்கள். அந்தப் பாடலின் ஒவ்வொரு கடேசி அடியும் கீழ்க்கண்டவாறு முடியும்-

மாயம்ம லக்ஷ்மியம்ம போயிராவே
(எங்கள் தாயே லக்ஷ்மி தேவியே போய் வருவாய்)



அந்தக் காட்சி இன்னும் என் மனசில் பசுமையாக இருக்கிறது. அவளை நாங்கள் உள்ளூரில்தான் கட்டிக்கொடுத்திருக்கிறோம். ஐந்து வீடுகள் தள்ளித்தான் அவளுடைய புக்ககம். அவளுக்கு நாங்கள் விடை கொடுத்து அனுப்புவது என்பதில் அர்த்தமில்லைதான். ஆனால் ஏதோ ஒன்றுக்கு நிச்சயமாக விடை கொடுத்தனுப்பி இருக்கிறோம்.அந்த ஒன்று இப்பொழுது எங்கள் நாச்சியாரம்மாவிடம் இல்லை. அது அவளிடமிருந்துபோயே போய்விட்டது.

ஆம் அது ரொம்ப உண்மை. ராஜா அடிக்கடி சொல்லுவான். இப்பொழுதுதான் தெரிகிறது எனக்கு. நான் நாச்சியாரம்மாவைக் கல்யாணம் செய்து அடைந்து கொண்டேன். ஆனால் அவளிடமிருந்து எதையோ பிரித்துவிட்டேன். அவள் இப்பொழுது ரெட்டிப்புக் கலகலப்பாக உண்மையாகவே இருக்கிறாள். என் குடும்பத்தைப் பிரகாசிக்கச் செய்கிறாள். எங்கள் கல்யாணத்துக்கு முன்பு எனக்கு இருந்த நாச்சியாரம்மாள் இப்பொழுது இருக்கும் என் நாச்சியாரம்மாள் நான் அந்த அவளைத்தான் மிகவும் நேசிக்கிறேன்.

இப்பொழுது மூணு குழந்தைகள் எங்களுக்கு, தொடர்ந்த பிரசவம். இது அவளைப் பாதித்திருப்பது உண்மைதான். குழந்தைகளையும், குடும்பத்தையுமே சதா கவனிக்கும் சுயநலமி ஆகிவிட்டாள். எங்கோ ஓர் இடத்தில் கோளாறாகிவிட்டது. சந்தேகமே இல்லை. ஓய்வு ஒழிச்சலில்லாமல் முன்னைவிடப் பலமடங்கு அவள் இப்பொழுது உழைக்கிறாள். உழைத்து ஓடாய்த் தேய்ந்து வருகிறாள் என்னவள். ஒருநாளில் அவள் தூங்குகிற நேரம் மிகவும் அற்பம். என்ன பொறுமை, என்ன பொறுமை!


குழந்தைக்கு முலையூட்டிவிட்டு விலகிய மாராப்பைக்கூடச் சரி செய்து கொள்ளாமல் தூளியில் இட்டு ஆட்டும் இந்த இவளா அவள்? ஏகாலிக்கும், குடிமகளுக்கும் சோறுபோட எழுந்திருக்கும்போது முகம் சுளிக்கிறாள். குழந்தைக்குப் பாலூட்டும்போதோ, அல்லது தான் சாப்பிட உட்காரும்போதோ

பார்த்துத்தான் அவர்கள் சோறு வாங்கிப் போக வருகிறார்கள் தினமும் என்று புகார் செய்கிறாள். பிச்சைக்காரர்களுக்கு வாய்தாப் போடுகிறாள். வேலைக்காரகளின்மேல் எரிந்து விழுகிறாள். அப்பப்பா என்ன தீனி தின்கின்றான்கள் ஒவ்வொருத்தரும் என்று வாய்விட்டே சொல்ல ஆரம்பித்துவிட்டாள். குடுகுடுப்பைக்காரன் இப்பொழுதெல்லாம் அட்டகாசமாக வந்து எங்கள் தலைவாசலில் வெகுநேரம் புகழ்வதில்லை. பெருமாள் மாட்டுக்காரன் தன் மாட்டுக்கு கம்மஞ்சோற்றையும் பருத்திக்கொட்டையையும் தவிட்டையும் கலந்து வைக்கும் அந்த நாச்சியார் எங்கே போனாள் என்று தேடிக்கொண்டிருக்கிறான்.

திருமணத்துக்குப் முன் நாச்சியாரம்மா விருந்தோம்பல் பண்பில் சிறந்தவளாகவும், வேலையாடகளிடம் அன்புடன் அறவனைத்தமையையும், திருமணத்திற்குப் பின் தனது குடும்பப் பொருப்பினால் ஏற்ப்படக் கூடிய மன மாற்றத்தினையும் கன்னிமைச் சிறுக்கதையின் மூலமாக பெண்களின் வாழ்க்கையை உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார்.

துணைநூல் பட்டியல்:

1. இணையப் பதிவுகள்.



****






கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக


கரிசல் களம்

ISBN 978-81-968802-1-7

கி.ராவின் சிறுகதைகளில் மழலை உலகம்

முனைவர் ம தனப்பிரியா






தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் ம தனப்பிரியா,
உதவிப்பேராசிரியர்,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி,
பேரூர், கோவை – 641010
Email: tamilpriyacbe@gmail.com
Cellphone: 9786715537

கி.ரா வின் சிறுகதைகளில் மழலை உள்ளம்

அன்றாட வாழ்வில் காணும் காட்சிகளை மனதில் பதிவு செய்து அதற்குக் கலை வடிவம் கொடுத்து அழியாமல் காப்பவன் படைப்பாளியாகிறான். தன்னுடைய அனுபவங்களையும், புற உலகோடு படைப்பாளி கொண்ட தொடர்பு, கற்பனை உலகில் உள்ள ஈடுபாடு ஆகியவற்றினைத் தன் படைப்பின் கதாப்பாத்திரங்கள் வழி படைப்பாளன் வெளிப்படுத்த முனைகிறான். அவ்வகையில் மேற்காண் அனைத்துத் தன்மைகளும் இடம்பெற்ற படைப்பிலக்கியமாக எழுத்தாளர் கி.ரா அவர்களின் படைப்புகளைக் காண முடிகின்றது. பள்ளிக் கூடம் சென்று கல்வி கற்காதவர் பல்கலைக்கழகத்தில் கௌரவ விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். கதாப்பத்திரங்கள் வழி மனித மனங்களைப் பிறருக்குக் கடத்தியவர்.



கி.ரா சிறுகதைகளின் கருப்பொருள்

கி.ரா அவர்கள் தான் வாழ்ந்த கரிசல் மண் பரப்பினை, அன்றாட வாழ்வில் மனித மனங்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பரிமாணங்களை, மனித உளவியல் சார்ந்த சிக்கல்களை சிறுகதைப் படைப்பில் பதிவு செய்துள்ளார். குடும்பத்தில் ஒரு நபர், மின்னல், மாயமான், எழுத மறந்த கதை, கோமதி, சிநேகம், நெருப்பு, மனிதம், ஜடாயு, பேதை, புறப்பாடு, ஜீவன், சந்தோசம், விளைவு, தான், எங்கும் ஓர் நிறை, பூவை, புவனம், அசல், கிளி, குருபூசை, நிலைநிறுத்து முதலான சிறுகதைகளில் மனித மனங்களின் நுட்பங்களையும், மனிதம் குறித்தும் பதிவு செய்கிறார்.


கனவு காணுதல் குறித்ததாகக் கனா, வந்தது, பேதை போன்ற கதைகளும்; கரிசல் மண் மீதான மனித மனம் குறித்து புறப்பாடு, மகாலட்சுமி, கரிசல்காட்டு சம்சாரி கதைகளும்; கணவன், மனைவி இல்வாழ்வின் பிரதிபலிப்பாக சாவு, பலாப்பழம், கண்ணிமை, ஒரு காதல் கதை, ஓர் இவள், கறிவேப்பிலைகள், கனிவு, வேலை-வேலையே வாழ்க்கை, மகாலட்சுமி, கீரியும்-பாம்பும், இல்லாள் முதலான கதைக்களங்களும் அமைந்துள்ளன. அவரது சிறுகதைப் படைப்புகளில் மழலை உள்ளம் குறித்து ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

மழலை உள்ளம்

குழந்தைகள் புறஉலகில் தான் காணும் அனைத்துப் பொருட்களைப் பற்றியும் அறிந்து கொள்ள பேரவா கொண்டவர்கள். இயற்கையை சலனமற்று ஏற்றுக் கொள்ளும் பக்குவம் பெற்றவர்கள். இயற்கை வேளாண்மை குறித்து மசானபு ஃபுகோகா அவர்களின் ஒற்றை வைக்கோல் புரட்சி புத்தகத்தில் இயற்கையைப் புரிந்து கொள்வது மனித அறிவிற்கு

அப்பாற்பட்டது என்கிறார். "மலைமீதுள்ள மரங்களை அனைவரும் பார்க்கலாம். அதன் பச்சை நிற இலைகளைக் காணலாம். பச்சை என்பது என்ன என்பதைத் தான் அறிந்துள்ளதாக நினைக்கலாம். காலை, மாலை போன்றவற்றை தெரிந்து வைத்திருப்பதால் இயற்கையை உணர்ந்து கொண்டதாக அறியலாம். ஆனால் இயற்கையைப் புரிந்து கொள்ள இயலாது. ஏனென்றால் இயற்கை என்று தான் நினைப்பவை எல்லாம் அவரவர் மனதின் கருத்து மட்டுமே. உண்மையில் இயற்கையை தரிசிப்பவர்கள் பச்சிளங் குழந்தைகளே. அவர்கள் எதையும் யோசிக்காமல், நேரடியாகவும், தெளிவாகவும் உள்ளதை உள்ளபடி பரர்க்கின்றனர்" என்கிறார்.

வளர்ந்த மனிதர்களைப் போல மனதில் தோன்றுவதை மூளைக்குக் கொண்டு சென்று இதைக் கேட்கலாமா? கேட்டால் என்ன நினைப்பார்கள்? என்று சிந்திக்காமல் மனதில் பட்டதைச் சொற்களாக உதட்டில் கடத்தும் வல்லமை பொருந்தியவர்கள் குழந்தைகள். வளர வளர உண்மையில் மனிதர்கள் இது போன்று பல வல்லமைகளை இழக்கிறார்கள் என்றே கூறவேண்டும். தொடர் வினாக்கள் வழி தன் ஐயங்களை தீர்த்துக் கொள்ள நினைக்கும் மழலையாக "கிலி" கதையில் வரும் குழந்தை.



கதையானது குற்றாலத்தைப் பார்க்காத தன் குழந்தையோடும், குடும்பத்தோடும், படிக்கும் வாசகர்களில் குற்றாலம் பர்க்காதவரும் அருவியின் குளுமையையும் தென்றலின் இதத்தினையும் உணரச்செய்யும் படியாக அழைத்துச் செல்பவரின் உரையாடலாக அமைந்தது. யப்பா, இந்த இந்த மலையில புலி இருக்குமா? என்பதாகக் குழந்தை பயணத்தின் முதல் கேள்வியைத் தொடங்கியது. மன மாற்றத்திற்காக திட்டமிடப்பட்ட பயணத்தில் பதில் ஒவ்வொன்றும் குழந்தை ஏற்றுக் கொள்ளும் படியாகவும், அருகிருப்போர்க்கு அச்சம் தராத வகையிலும் அமைக்கப்பட்டிருக்கும். தொடர் கேள்விகளோடே பயண இறுதியில் நண்பர் வீட்டுக்குள் சென்றதும் குழந்தை அங்கு இருந்த ரெட்டை குழல் துப்பாக்கியைப் பார்த்துவிட்டான். அடுத்து நண்பர் வேட்டையாடி, கெட்டுப்போகாமல் இருக்கப் பாடம் போட்டு, பஞ்சு அடைத்து நிஜப்புலி மாதிரியே வைத்திருந்த புலி உருவத்தைக் கண்டு மயங்கி விழுந்த குழந்தையின் சித்திக்கு மருத்துவ சிகிச்சை. மயக்கம் தெளிந்து எழும்போது, நடந்த எது பற்றியும் நினைவு படுத்தும்படி பேசக் கூடாது என்ற மருத்துவரின் அறிவுரை இருக்க அனைவருக்கும் குழந்தை குறித்தே யோசனையாக இருந்தது. நண்பர் அந்த பொறுப்பினை ஏற்றுக்கொள்ள பல்வேறு விளையாட்டு சாமான்களுக்கு மத்தியிலும் அவன் புலி வேட்டையாடியது பற்றியே கேட்டு அவரைக் கேள்விகளால் திணறடித்துக் கொண்டிருந்தான். புலி குறித்து அவனது சித்தி காதில் விழக் கூடாது என்று நினைத்திருந்த போது திடீரென்று பூனை தான் வளர்ந்து புலியாகுதா? என்ற அவனது வினாவிற்கு அவனது சித்தியும் சிரித்துவிட்டாள். கொஞ்சம் கொஞ்சமாகப் புலி மேலிருந்த பயம் மறைந்து எதார்த்த சூழலுக்குள் வருவதைப் புரிந்து கொள்ள முடிந்தது. குற்றாலத்தைப் பிரியும் போது புலியுடன் அன்பு மிகுந்திருந்ததை உணர முடிந்தது.


காரில் கிளம்பி உட்கார்ந்து கொண்டு பையன் கேட்டான், மாமா இந்த புலியைப் பார்க்க வேற புலி எப்போவாவது மலையிலிருந்து இறங்கி வந்திருக்கா?.... என்று. செங்கொன்றைப் பூக்கள்

சிரித்து எங்களை வரவேற்றது. இப்போது தேக்கு மரப்பூக்கள் எங்களுக்கு சென்ட் ஆப் சொல்லி விடை அளித்தன என்பதாகக் கதை முடிவடையும்.

குழந்தையின் கள்ளம் கபடமற்ற எண்ணம், எதையும் யோசிக்காமல், நேரடியாகவும், தெளிவாகவும் உள்ளதை உள்ளபடி பார்க்கின்ற மனமே, மனிதனின் மனதிற்கு ஆரோக்கியத்தினை, பயம் விலக்கிய பேராற்றலை இயல்பாகவே வழங்கும் என்பதாகக் “கிலி” கதை அமைந்திருக்கும்.

மழலையின் மகத்துவம்

மழை மேகமற்ற வறண்ட நிலப்பரப்பில் வறுமையின் கோர தாண்டவத்தால் பாதிக்கப்பட்டு மனமும் வறட்சியடைந்த மக்களிடம் திருட நினைத்தவனுக்குத் தண்டனை வழங்கிக் கட்டி வைத்திருக்க, கொட்டித் தீர்த்த மழையால் மக்கள் மனமும் ஈரமடைந்து அவனை விடுவித்ததாக “சத்ரு” என்ற ஒரு சிறுகதை அமைந்திருக்கும். கதைக் கருவானது புற சூழலில் நிலவும் தட்ப வெப்ப நிலை மனித மனதில் பாதிப்பினை உருவாக்கும் என்பதாக அமையும். பாலை நிலத்தின் தன்மை குறித்து அமைந்துள்ள சங்கப்பாடல்கள் பலவற்றிலும் இக்காட்சியைக் காணலாம். இயற்கையின் தட்பவெட்ப நிலையையும் தாண்டி மனித மனங்களில் மாற்றத்தினை உருவாக்கும் ஆற்றல் மழலைப் பிஞ்சுகளுக்கு இருப்பதாக அமைந்தது கி.ராவின் “மின்னல்” சிறுகதை.



பஸ்டாண்டின் மர நிழலிலோ, பேருந்து நிறுத்துவதற்கான கொட்டகையிலோ நிறுத்தாமல் பஸ்சில் அமர்ந்திருக்கும் நாற்பத்திரண்டு ஆண்களும், மூன்று பெண்களும் வெப்பம் தாளாமல் கண்டக்டர், டிரைவர் வருகைக்காகக் காத்திருந்தனர். வெக்கை மனித மனங்களை சோர்வடையச் செய்திருந்தது. மனச் சோர்வினைக் கோபமாக, வெறுப்பாக அருகிருப்போரிடம் வெளிப்படுத்துதல் மனித இயல்பு. அதன்படியே ஒருவருக்கொருவர் மனப்புழுக்கத்தினை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். இலைகள் கூட அசையாத மரத்தடி நிழலில் கண்டக்டரும், டிரைவரும் ஏதோ விவகாரத்தில் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருக்க, சில பிரயாணிகள் அவர்களுக்கு சாபமிட்டனர். சிலர் முணுமுணுத்தனர், கொட்டாவிவிட்டனர். தங்களை நொந்து கொண்டனர். ஒரு வழியாக வந்து சேர்ந்த கண்டக்டரை கடவுளைப் பார்ப்பது போல் பார்த்தனர் சிலர். சிலர் கொலைப்பார்வை பார்த்தனர். புற உலகின் வெப்பம் அவர்களின் அக மனதில் பிரதிபலித்தது. பேருந்து புறப்பட்டது. ஆலம்பட்டி இறக்கத்தில் பஸ், அமர்ந்திருந்த அனைவரையும் அசைத்து நின்றது. பெண் ஒருவர் இறங்க மென்மையான குளிர்ந்த காற்று பயணிகளைத் தழுவிச் சென்றது. இறுக்கமான சூழலைக் கலகலவென்ற சிரிப்பொலி நிறைத்தது. மரிக்கொழுந்தின் வாடை பரவியது. கிராமப் பெண் ஒருத்தி இடுப்பில் கைக்குழந்தையுடன் பேருந்திற்குள் வந்தார். குழந்தையைக் கண்ட போலிஸ்காரர் முகத்தில் கோணல் மறைந்து குதூகலம் படர்ந்தது. சுருட்டை முடியும், மழுமழுவென்ற பால் கன்னங்களும், கருவண்டு கண்கள், சிரித்த செந்தாமரை முகம் கொண்ட குழந்தை தன் கழுத்தைத் திருப்பிப் பார்த்து ஆனந்தமாகக் கைதட்டிச் சிரித்தது. பேருந்தில் மூதேவி விலகி லட்சுமிகரம் வழிய ஆரம்பித்துவிட்டது போன்று அனைவர்

முகத்திலும் உற்சாகம். சொர்கத்தையே கையில் ஏந்தி நின்ற அந்தப் பெண்மணியை அனைவரும் சிரம் தாழ்த்தி வணக்கியது போன்று இருந்தது.

ஒருவருக்கொருவர் பேசாமல் இறுகிய நிலை தளர்ந்து ஒரு பெண் குழந்தையை வா ராசா என்றாள். குழந்தை சிரித்த படியே தலையை ஆட்டி ஆட்சேபம் தெரிவித்தது. கண்டக்டர் டிக்கெட்டை கிழித்து குழந்தையிடம் கொடுத்தார். அதை வாங்கி ஜன்னல் வழியே காற்றோடுவிட்ட குழந்தையிடம் விளையாட்டு காட்டி மகிழ்ந்தார். போலிஸ்காரர் - போக்கிரிப்பயலே என்று கொஞ்சினார். டாக்டருக்கு பழைய அழகு முகத்தில் குடி புகுந்தது. பெண்கள் முகமலர்ச்சியோடு குழந்தையின் தாயுடன் பேசிக்கொண்டு வந்தனர். நாலாவது மைலில் பஸ் நின்றது. பெண்ணும், குழந்தையும் இறங்கினார்கள். பெண்கள் குழந்தையின் கன்னத்தைத் தடவித் தங்கள் கையை முத்தமிட்டனர். போயிட்டு வாடா கண்ணு - என்றனர். எல்லோரும் மானசீகமாக அவர்களுக்குப் பிரியாவிடை கொடுத்து அனுப்பினார்கள். பஸ் மெதுவாக, சகிக்க முடியாத பெருத்த இரைச்சலோடு நகர்ந்தது என்கிறார் ஆசிரியர். ஆம், மீண்டும் தடித்த ஆசாமி கொட்டாவி விட்டார். சிலர் மீண்டும் தூங்க ஆரம்பித்தனர். டாக்டர் முகத்தில் மீண்டும் அருவருப்பு ஒட்டிக் கொண்டது. புழுக்கத்தின் வெளிப்பாடு அருகிருப்போர் மீது வெறுப்பாக மாறியது. கண்டக்டர் கை நீட்டி ஏதோ கோபமாகப் பேசினார் என்பதாகக் கதை நிறைவடைகிறது.



இயற்கையின் தட்பவெட்ப நிலையையும் மறந்து வாழ்வில் வெறுமையடைந்த மனித மனங்களில் மாற்றத்தை உருவாக்கும் ஆற்றல் மழலைப் பிஞ்சுகளுக்கு இருப்பதாக அமைந்தது மின்னல் சிறுகதை.

அன்பை மட்டுமே குழந்தை மனம்

குழந்தைப் பருவம் என்பது பெற்றோரின் கண்டிப்பையும் தண்டைனையையும் மனதில் வைத்துக் கொள்ளாத அன்பால் மட்டுமே நிறைந்த பருவம். ஒரு சிறிய தவறு கதையில் ராகவலு என்ற ஆறு வயதான குழந்தை. தாய் ஜானகி பள்ளி பற்றிக் கூறியவை அனைத்தையும் உண்மை என நம்பி சிலேட்டு, பென்சிலோடு தான் வாழ்ந்த இயற்கை சூழலில் இருந்து கட்டிடச் சுவர்களுக்குள் சென்றான். அமர்ந்திருந்த சிறிது நேரத்திற்குள் வகுப்பறைக்குப் பக்கத்தில் மலர்ந்திருந்த பூக்கள் அவனை அழைக்க அதன் அருகில் சென்று ஆசையாக ஒரு பூவைப் பறித்தவனுக்குப் பின்னால் இருந்து வந்த குரல் அவனது அம்மா கூறிய ஆசிரியர் அல்ல. பிரம்பால் ஓங்கி எதோ சொன்ன வாத்தியாரின் ஓசை அவன் காதில் விழவில்லை. பயத்தில் அம்மா என்று அலறி பூச்செடியினைக் கட்டிக் கொண்டான். உடம்பு அனலாகக் கொதிக்க வீடு திரும்பியவன் வாத்தியாரின் பிரம்புக்கு பயந்து மீண்டும் பள்ளிக்குச் செல்ல விரும்பவில்லை. பள்ளிக்கு செல்வதற்காக தன் மகனை பயமுறுத்த ஜானகி அடிக்க ஆரம்பித்தாள். பள்ளி செல்ல அன்னை காட்டும் கடுமையினைக் கண்டு மனம் வாடினான். எனவே, நல்ல பிள்ளையாகக் காலையில் கிளம்பி பள்ளிக்கூடம் போகாமல் ஊரில் யாருக்கும் தெரியாமல் மறைந்து வாழப் பழகினான் ராகவலு. அன்னை பள்ளிக்கு செல்ல வேண்டும் என்பதற்காக மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்கிறாள் என்பதைப் புரிந்தவன் தனக்கு அம்மாவுடனான செல்லம் குறைந்ததாக

நினைத்து வருந்துகிறான். இதயத்தில் தாங்க முடியாத வேதனையை சுமந்து கொண்டு அந்தக் குழந்தை பகல் முழுதும் கிராமத்து தெருக்களை சுத்தி வருகின்றது. அப்போது இயற்கையுடனான பல காட்சிகளைக் காண்கின்றான். பள்ளிக் கூடம் செல்லாத செய்தி அறிந்து தாய் பருத்திமாரால் அவனை அலுத்துப் போகும் வரை அடித்து முடிக்கிறாள். உடலில் வழியும் இரத்தத்தினை துடைத்துக் கொண்டு என்ன பள்ளிக் கூடம் போக சொல்லாதம்மா என்று புலம்பிக் கொண்டே தாயை நோக்கித் தன் கையை உயர்த்துகிறான். ஜானகியின் கையில் இருந்த பருத்திமார் நழுவி கீழே விழுகிறது. அவளுடைய கண்களிலும் கண்ணீர் வழிகிறது. தாய் இருக்கும் இடத்திற்கு விரிந்த கைகளை நீட்டிக் கொண்டு பாதி மயக்கத்திலும் ஏக்கத்தோடு அம்மா, அம்மா என்று அழைத்துக் கொண்டு நடந்து முன்நோக்கி வந்தான் என்பதாகக் கதை முடிகிறது.

தொலைத்ததும், தொலைந்ததும்

சிறு வயதில் நம்மை சீர் செய்ய நினைத்து கண்டித்த பெற்றோரைக் கை நீட்டி அன்பை மட்டுமே பகிர்ந்து கொள்ள ஏங்கிய குழந்தை மனம், வளர வளர மாற்றம் கொள்கிறது. தொலை நோக்குப் பார்வையோடு அவர்கள் செய்ய நினைப்பதைக் கட்டுப்பாடாக நினைத்து வெறுப்பினை மனதில் விதைத்துக் கொண்டு அவர்களிடமிருந்து ஒரு விலகுதல் தன்மையை ஏற்படுத்திக் கொண்டு தலைமுறை இடைவெளி என்று பெயர் சூட்டிக் கொள்கிறோம். வளர்ந்து பக்குவமாகிவிட்டோம் என்பதாக எண்ணிப் பண்பை இழந்து நிற்கிறோம். காலவோட்டத்தில் அவர்களை இழந்த பின்னரோ அல்லது தன்னுடைய குழந்தைகளை வளர்க்கும் பொழுதோ மீண்டும் தன் மழலைப் பருவத்தினையும், தன்னை வளர்க்கப் பெற்றோர் கடந்து வந்த பாதையையும் நினைத்துக் கண் கலங்குவோர் பலர். எங்கு தொலைந்தோம். எதைத் தொலைத்தோம் என்ற வினாவிற்கு விடை அறியும் முன்னர் அடுத்த தலைமுறை இதே வினாவோடு பதில் தேடி நிற்கின்றது. மனதில் அன்பை மட்டுமே சுமந்து வாழும் கள்ளம் கபடமற்ற பருவம் மழலைப் பருவம் என்பதை உணர்துவது "ஒரு சிறிய தவறு" என்ற சிறுகதை.



கட்டுப்பாட்டினை விரும்பாத குழந்தையின் கருணை உள்ளம்

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த குழந்தை ராமசாமியைப் பற்றியது " ஜெயில்" சிறுகதை. தாயார் தூக்குச் சட்டியில் கொடுத்த மதிய உணவையும், மதியத்துக்கு வாங்கித்திங்கக் கொடுத்த பருத்தியையும் எடுத்துக் கொண்டு, எண்ணெய் தேய்த்துத் தலை சீவிக்கொண்டு, வழியில் விளையாடிக் கொண்டிருக்காதே, பிள்ளைகளோடு சண்டை போடாதே, நல்லா படிச்சு கெட்டிக்காரன் ஆகணும் என்று கூறிய தாய்க்கு, சரிம்மா... சரி.. சரி.. என்று சொல்லிக் கொண்டே பக்கத்து ஊர் பள்ளிக்குக் கிளம்பினான் ராமசாமி.

வரும் வழியில் பந்து மாதிரியான அருமையான வேப்பமரம். அதன் அருகில் ஓடை. அதில் பல வண்ண மணல், கற்கள். பையையும், துக்குவாளியையும் மரத்தின் உச்சியில் உள்ள கிளையில் மாட்டிவிட்டுக் கீழே இறங்கி ஓடையில் தனிமையில் நீண்ட நேரம் விளையாடுவான். பின்னர் மரத்தில் ஏறி மூன்று கிளைகள் சேரும் இடத்தில் சாய்ந்து கொண்டு மணிக்கணக்காக கீழே

விழாமல் தூங்குவான். முழிப்பு வந்ததும் வானத்தையே பார்த்துக் கொண்டிருப்பான். வானம் அவனுக்குப் பல படங்களை வரைந்து காட்டி வகுப்பெடுக்கும். அதிலேயே லயித்துப் போய் மீண்டும் குட்டித் தூக்கம் போடுவான். எழுந்ததும் தாகம், பசி தீர்க்கக் கீழிறங்குவான். ஊருக்குள் வந்து பக்கோடா வாங்கி மடியில் கட்டிக் கொண்டு, கிணற்றடியில் தண்ணீர் குடித்து விட்டு மெதுவாக பக்கோடாவைத் தின்று கொண்டே ஒரு சாளையின் அருகில் அமர்ந்தான்.

குழந்தையின் சிரிப்பொலி கேட்டது. சாளையின் மேல் உள்ள சிறிய சதுர ஜன்னல் வழியாகப் பார்த்தான். கூரை முகட்டில் இருந்து ஒரு தூளி தொங்கிக் கொண்டு இருந்தது. மூன்று வயது ஆண் குழந்தை வாசல் கதவின் இடுக்கு வழியாக வெளியே மேய்ந்து கொண்டிருந்த கோழிக்குஞ்சுகளைப் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தது. அண்ணன் வந்திருக்கேன் என்று கூறிக் கொண்டே பக்கோடாவைப் போட்டான். பக்கோடாவை எடுத்துக் கொண்டு விளையாடி அவர்களுக்குள் சிநேகம் அதிகமானது. தினமும் குழந்தையைப் பார்க்கச் சென்றான். வெளியே இருந்தவாறே கதை கூறுவான். குழந்தை தூங்கியதும் வேப்ப மரத்திற்குக் கிளம்புவான். ஒரு நாள் வேப்பமரத்தில் இலை பறிக்க வந்த ஆட்டுக்காரன் ராமசாமி பள்ளிக்கு செல்லாததைப் பெற்றோரிடம் சொல்லிவிட்டான்.



ராமசாமியைப் பாளையங்கோட்டை கான்வென்டில் விடுதியில் சேர்த்தார்கள். கவலை என்பதை இதுவரை உணர்ந்திடாத ராமசாமிக்குப் பெருங்கவலை சூழ்ந்து கொண்டது. பள்ளிக் கூடத்தின் கோட்டைச் சுவர்களைச் சுற்றி வந்தான். தான் பிறந்த கரிசல் மண்ணை நினைத்து ஏங்க ஆரம்பித்தான். அதிகாலையில் செல்லும் ஆற்றங்கரை மட்டுமே மனஅமைதி கொடுத்தது. எப்படியாவது தப்பி ஓடிவிட முடிவு செய்தான். பள்ளிக்கூடக் கட்டிடத்தினைத் தீர்மானமாக வெறுத்தான். தன் ஊரின் மீதுள்ள தாகம் மனசைப் பிடுங்கியது. இரவு உணவு முடித்துவிட்டு மரக்கிளையில் ஏறிக் கோட்டை சுவருக்கு வெளியே எட்டிக் குதித்தான். உதவிய மரக்கிளைக்குக் கண்களால் நன்றி கூறினான்.


இரவினைக் கழித்துவிட்டு அதிகாலையில் கோவில்பட்டி செல்லும் முதல் பஸ் ஏறி ஊருக்கு வந்து சேர்ந்தான். கோபாவேசமான தனது தந்தையின் முகம் நினைவுக்கு வந்தது. நேராக சாளை வீட்டுக் குழந்தையைப் பார்க்கச் சென்றான். செல்லும் போதே கல் ஒன்றைத் தேடி எடுத்துச் சென்றான். வீட்டை அடைந்ததும் முதல் வேலையாக வீட்டின் பூட்டை உடைத்துக் குழந்தைக்கு விடுதலை கொடுத்தான். குழந்தையைப் பாய்ந்து எடுத்து ஆரத்தழுவினான். முத்தமிட்டான். இந்தா சாப்பிடு என்று வாங்கி வந்த மிட்டாய்களைக் கொடுத்தான். நீ இத்தனை நாள் என்ன விட்டு எங்க போயிருந்த என்று கேட்டது குழந்தை. அந்தக் கேள்வியின் பரிசுத்தமான அன்பை இராமசாமியால் தாங்கிகொள்ள முடியவில்லை. கண்களில் நீர் முட்டிவிட்டது. நான் இனி எங்கயும் உன்ன விட்டுட்டு போக மாட்டேன். உன் பக்கத்துலையே இருப்பேன் என்றான். சத்தியமாவா? என்ற குழந்தையிடம், சாமி சத்தியம் என்று கையடித்துக் கொடுத்தான். குழந்தை நம்பிக் கொண்டது. வெகு நேரம் இருவரும் விளையாடினார்கள். திடீரென்று குழந்தை அதோ அம்மா வந்திட்டாளே, என்றது. ராமசாமியின் முகத்தில் அருள் இல்லை. உடைத்து எறியப்பட்ட பூட்டைப் பார்த்தான். குழந்தையைப் பார்த்தான். எழுந்து ஓட்டம்

பிடித்தான். எங்கே ஓடுகிறோம் என்று தெரியாமல், கால் போன போக்கில் திரும்பிப் பார்க்காமல் ஓடினான் என்பதாக இயற்கையோடு இணைந்து வாழப் பழகிய மென்மையான மனம் கொண்ட ஒரு குழந்தையின் அன்பின் பற்றியது "ஜெயில்" சிறுகதை.

கதாப்பாத்திரங்களின் பெயர்கள்

கி.ரா அவர்களின் 80க்கும் மேற்பட்ட சிறுகதைகளில் 18 கதைகளில் 'ர'கரத்தில் பெயர் தொடங்குவதைக் கீழ்காண் பட்டியலின்படி அறிய முடிகின்றது.

வ.எண்	சிறுகதைத் தலைப்பு	கதாப்பாத்திரங்களின் பெயர்
01	குடும்பத்தில் ஒரு நபர்	ரம்பாக்கா - அயிரக்காவின் மகள்
02	ஜெயில்	ராமசாமி
03	சாவு	ராமானுஜ நாயக்கர்
04	கோமதி	ரகு
05	கரண்டு	ராமசாமி நாயக்கர்
06	தோழன் ரெங்கசாமி	ரெங்கசாமி
07	சிநேகம்	ராமி, ராஜா
08	நெருப்பு	ராகவையா
09	மனிதம்	ராமய்யங்கார்
10	கன்னிமை	ரங்கையா
11	ஒரு காதல் கதை	ராகவன், ராஜா
12	ஒரு சிறிய தவறு	ராகவலு
13	வேட்டி	ராமராஜ், ராகவலு
14	அசல்	ரமா
15	வலி வலி	ராதை
16	அரும்பு	ரெங்கசாமி, ரோசம்மா
17	அன்பே மனிதமாய் ரகுநாதன்	ரகுநாதன்
18	பொய் என்பதும் உண்மைதான்	ராமய்யா, ரத்தினம்



மேற்காண் பட்டியலின்படி மழலைக் கதாப்பாத்திரங்களின் பெயர்கள் 'ர'கரத்தில் தொடங்கியுள்ளதை அறிய முடிகின்றது.

குழந்தைகளின் உளவியல் அறிதல்

குழந்தைகளுக்குக் கதை சொல்வது குறைந்து அதிக நேரம் தொடுதிரையில் காலத்தைச் செலவிடும் சூழல் உருவாகியுள்ளது. ஆனால், குழந்தைகள் மனதில் செழுமையான பதிவுகளை வழங்கி அவர்களை மனவளம் மிக்கவர்களாக, இயற்கையையும், தன்னோடு வாழும் பிற மனிதர்களையும் நேசிக்கக் கற்றுக் கொடுத்து, சிறந்த ஆளுமைகளாக உருவாக்க வேண்டும்.

கி.ரா வின் பிஞ்சுகள்3, தி.ஜானகிராமனின் சிலிர்ப்பு மற்றும் சீன எழுத்தாளர் லியு-ஷின்-யு அவர்கள் எழுதி இருபதிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு, குறும்படமாகவும் எடுக்கப்பட்ட கருப்புச்சுவர்கள், போன்ற கதைகளில் வரும் குழந்தை இலக்கியக் கதாப்பாத்திரங்களை குழந்தைகளுக்கு அறிமுகம் செய்தல் வேண்டும்.

கி.ரா அவர்களின் கதவு, நாற்காலி போன்ற இன்ன பிற கதைகளும் உயிரற்ற பொருட்கள் மீதான குழந்தைகளின் பாசம் பற்றியது. இவை குழந்தைகளின் உளவியலை உலகிற்குக் கூறுவன. சிறந்த பண்பினை, வாழ்வினை எதிர்கொள்ளும் ஆற்றலை, மனித மனங்களைப் புரிந்து கொள்ளும் தன்மையினை உருவாக்குபவை. இலக்கியங்களை வாசிக்கவும், அதனை அடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டிய மிகப்பெரிய பொறுப்பும் நமக்கு உள்ளது.

<u>துணை நூற்பட்டியல்</u>

1. மசானபு ஃபுகோகா, ஒற்றை வைக்கோல் புரட்சி, எதிர் வெளியீடு, பூவுலகின் நண்பர்கள் பதிப்பு, பொள்ளாச்சி, ஜூன் 1991
2. கி. ராஜநாராயணன் கதைகள், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர், ஜூலை 2011.
3. பிஞ்சுகள், கி. ராஜநாராயணன், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர், நவம்பர் 2010.
4. சிலிர்ப்பு, தி. ஜானகிராமன், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், ஜனவரி 2006.
5. கருப்புச்சுவர்கள், சீன எழுத்தாளர் - லியு ஷின் யு (டீடயஉம றுயடடள - டுரை ஓைெ றுர), தமிழாக்கம்- தி.இரா.மீனா.

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் மனிதநேயம்

மு செந்தில்குமார்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

மு செந்தில்குமார்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி,
அரும்பாக்கம் சென்னை.
Cellphone: 9787048927

கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் மனிதநேயம்

முன்னுரை



மனிதர்கள் பரிணாம வளர்ச்சியில் விலங்கு நிலையிலிருந்து மேம்பட்டு மனிதத் தன்மை அடைந்தனர் என்பதாக அறிவியலார் ஒப்புகின்றனர். கூட்டமாக வாழ்ந்த மனிதர்களுக்கள் ஓர் ஒருங்கிணைவு ஏற்பட்டு குறிப்பிட்ட இனக்குழுக்களாக மாற்றம் பெற்றனர். மனிதர்களுக்குள் பல்வேறு உணர்ச்சிகள் பண்பாட்டுவயப்பட்டு உருமாறின. மனித மனமானது பிறருடன் கூடி வாழும் தேவைக்கு ஆட்பட்டிருப்பதால் சமூகத் தன்னிலையாக பல்வேறு செயல்பாடுகளுடன் பிறரைச் சார்ந்து வாழ்கின்றனர். இவ்வாறு வாழும்மனிதர்கள் அன்பு, கனிவு, இரக்கம், பரிவு, பற்று, பாசம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துவது இன்றியமையாததாகிறது. தமிழ்ச் சமூகத்தில் ஈராயிரம் அல்லது மூவாயிரம் ஆண்டுகளாக மனிதத் தன்னிலைகள் ஒவ்வொரு நிலையிலும் பண்பட்டு வந்திருக்கின்றனர். பண்பாடானது மனிதர்களை பண்படுத்துகிறது. அற நடத்தைகளுக்கு உரியவர்களாக மாற்றுகிறது. அதனால்தான் விலங்கு நிலையிலிருந்த மனிதர்களின் வாழ்வியல் பல்வேறு தளங்களில் மேம்பட்டு நிலைத்திருக்கிறது. மனிதர்கள் தமக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் பல்வேறு உறவுப் பிணைப்புகள் சமூகமாக, இனக்குழுக்களாக வாழ்வதற்கு வழி செய்கின்றன. மனித உணர்ச்சிகளில் பிறர் நலம் பேணும் தன்மை மனிதநேயப் பண்பாக வடிவமைகிறது. பிறருக்கு ஏற்படும் துன்பம் கண்டு பதைப்புறுதல், பிறர் துன்பத்தில் இருக்கும்போது அவரை அதிலிருந்து மீட்க முனைதல் ஆகியன மனிதநேயப் பண்புகளாகக் கருதப்படுகின்றன. இம்மனிதநேயப் பண்புகள் மனிதர்களை மேலும் மாகானுபவர்களாக மாற்றுகின்றன. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று கூறிய வள்ளலார் ஊனுயிர்கள் யாவற்றையும் காத்து அவற்றைப் பேண வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவராக சித்தர் மரபினராகக் கருதப்படுகிறார். அது போல பிறர் உயிர்க்கத் தீங்கு விளைவிக்காதிருக்கும் மனிதர்களை உயர்ந்தோராகக் கருதும் படைப்பிலக்கியமாக திருக்குறள் காணப்படுகிறது. பிற உயிர்களைக் கொல்லாதவனை உயிர்கள் எல்லாம் தொழும் என்று கூறுவதைக் காணமுடிகிறது. தமிழ் இலக்கியத்தில் மனிதநேயப் பண்புகள் மலிந்து காணப்படுகின்றன. முல்லையின் படர இயலாத தன்மையைக் கண்டு மனமுருகி பாரி வள்ளல் தேரை முல்லைக் கொடி படருதற்குக் கொடுத்தான் எனக் கூறப்படுகிறது. இது போன்று ஒவ்வொரு கொடை வள்ளலின் புகழிலும் உயர் நேசம் கொண்டிருந்த தன்மை வெளிப்படுகிறது. இன்றைய இலக்கியங்களிலும் இத்தகையத்

தன்மைகளைக் கொண்ட பாத்திரங்கள் வெளிப்படுகின்றன. கரிசல் இலக்கியத்தின் முன்னோடியான கி.ராஜநாராயணனின் சிறுகதைகளில் மனிதநேயப் பண்புகள் மிளிர்வதை இக்கட்டுரை வழி உணரலாம்.

மனித நேயம்

மனிதர்க்கு மனிதர் இரங்குதல் அல்லது மனிதரை உயர்வு தாழ்வின்றி நடத்துதல் பிறர்க்குத் துன்பம் ஏற்படும் போது அத்துன்பத்தை நீக்குதற்கு உதவுதல் என்பன மனித நேயத்தின் விளக்கம் எனக் கொள்ளலாம். புறநானூற்றில் கூறப்படும் அடுதலும் தொடுதலும் கால வகையினான என்பது போல் இல்லாமல் உண்டு கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்று போற்றும் வகையில் மனித நடத்தை அமைதல் வேண்டும். எங்கோ நடைபெறும் போரின் பொருட்டு மனம் பதைக்கின்றோம். அதற்குக் காரணம் பண்பாட்டு நிலையில் மனிதர்கள் முதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். பிறர் துன்பபடும்போது அதற்காக மனம் வருந்தும் நிலையை பெற்றிருக்கிறார்கள் என்று பொருளாகிறது. “மனிதநேயம் என்பது மனத்தின் தன்மையைக் குறிப்பதாகும். அது மனிதனுக்கும் அவனுடைய நடவடிக்கைகள், செயல்திறன், பேரார்வம், நலன்கள் ஆகியவற்றுக்கும் முதன்மையான முக்கியத்துவம் அளிப்பதாகும்” (பிரிட்டானிகா தகவல் களஞ்சியம், ஏழட. ி.553) என்று குறிப்பிடுவதிலிருந்து மனித மனம் சார்ந்த ஒன்றாகவே மனிதநேயம் விளங்குகிறது. ஹியூமனிசம் (ஈரஅயளைஅ) என்ற ஆங்கிலச் சொல் மானிடக் கோட்பாடு என்று கூறப்படுகிறது. “மானிடக் கோட்பாடு என்பது மனிதனை மெய்யான மனிதத் தரம் உள்ளவனாக ஆக்குவதிலும், இயற்கையிலும், வரலாற்றிலும் நிறைந்துள்ள அனைத்துக் கூறுகளிலும் பங்கு கொண்டு மனிதன் தன் அசல் மகத்துவத்தை எய்துவதிலும் அமைந்துள்ளது” (அ.சிதம்பரநாதன் செட்டியார், ஆங்கிலம் தமிழ் அகராதி, ப.504) மனித நேயம் என்பது மேலைத் தேய மானுடக் கோட்பாடாக உருவாகி வளர்ச்சி பெற்றது என்று சிற்பி பாலசுப்பிரமணியம் குறிப்பிடுகிறார். “மேலை நாட்டு மானுடக் கோட்பாடு கிரேக்கச் சிந்தனை மரபில் பிறந்தது என்றும் மனிதனே அனைத்துக்கும் அளவுகோல் எனவும் மனித ஆளுமையோடு இணைத்துத்தான் உண்மையில் விளக்கப்பட வேண்டும் எனக் கிரேக்க மெய்யியலாளர்கள் கூறியுள்ளனர்” (சிற்பி பாலசுப்பிரமணியன், கம்பனில் மானுடம், ப.44) இது போல் மார்க்சிய சிந்தனை மரபில் மானுடம் என்பது குறித்து கார்த்திக்கேசு சிவத்தம்பி, “மனித வெற்றிகளைக் காரண காரியங்களோடு வரலாற்று அடிப்படையில் காண்பதும் விளக்குவதும் மார்க்சியத்தின் நெறிமுறை மானுடம் குறித்த அதன் பார்வை இவ்வாறு அமைகிறது. மனிதனுக்குரிய சிந்தனை மரபில் மானுடம் என்பது மனிதனுக்குரிய கௌரவத்தை, தன் வாழ்க்கைச் சூழலைத் தானே மாற்றியமைக்கும் திறனுடைய அவனுடைய ஆற்றலை அவனுக்கு வழங்கவும் வளர்க்கவும் வேண்டிய அற, நன்னெறிப் பெறுமானங்களைப் பற்றி அறிதலும் அவற்றின் தொழிற்பாட்டை வியந்து கூறுதலும் ஆகும்” (கார்த்திக்கேசு சிவத்தம்பி, மானுடக் கோட்பாடு, ப.43) என்கிறார். எனவே மனிதநேயம் என்பது



மானுடப் பண்புகளை மேம்படுத்தும் ஒரு செயலாகக் கொள்ளலாம். பிறர் துன்பத்தை களைதலுக்குத் தன்னை ஒப்புக் கொடுக்கும் நன்னெறி நடத்தை எனக் கொள்ளலாம்.

இந்தியத் தத்துவ மரபில் மானுடத்தைப் போற்றியனவாக சமணம், பௌத்தம் போன்ற சமயங்கள் காணப்படுகின்றன. தமிழில் அறநூல்கள் மானுட நடத்தைகளைப் பற்றிய அறிதல்களைத் தருகின்றன. ஒவ்வொரு மனிதரும் நடந்து கொள்ளும் முறையில் பிறர்க்கு யாதொரு துன்பமும் இழைத்து விடக் கூடாது என்பதையே கூறுகின்றன. " எல்லோரும் நட்பு பாராட்டி வாழ எல்லோருக்கும் எல்லாம் என்ற அன்புடன் நாம் கூடிய வகையில் உறவுப் பாலம் அமைக்க வேண்டும்" (து.மூர்த்தி, மனிதநேயம், ப.50) என்று மனிதநேயம் பற்றிய நூலில் குறிப்பிடுகிறார் து.மூர்த்தி. ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டுதல் வேண்டும் என்பதே மனிதநேயத்தின் அடிப்படையாக அமைகிறது.

கி.ராவின் மனிதநேய மாண்பு




கரிசல் இலக்கியத்தின் முன்னோடியாகக் கருதப்படும் கி.ரா தன் வாழ்நாள் முழுவதும் எழுதியும் பேசியும் வந்தார். கரிசல் இலக்கியத்தின் அடிப்படைகளைத் தன் இலக்கியங்களில் வெளிப்படுத்தினார். தன் புதினங்கள் வழி கரிசல் நிலத்து மக்களின் வாழ்வியலை உணர்த்தினார். அவருடைய சிறுகதைகள் மனித மாண்புகளை மேம்படச் செய்யும் வகையிலானவை. ஆண், பெண், சிறுவர், முதியவர், இறப்பைத் தழுவும் நிலையில் உள்ளோர், சிக்கலில் அகப்பட்டோர், திருநங்கை ஆகிய பன்மைத் தன்மையிலான மனிதர்களைத் தம் சிறுகதைகளில் பேசு பொருளாக்கி அவர்களை உன்னத நிலைக்கு உயர்த்தினார். அவருடைய சிறுகதைகளில் மனிதநேயத்தை மாண்புறச் செய்யும் வகையிலான சில காட்சிகளை இக்கட்டுரையில் காணலாம்.

ஜெயில் சிறுகதை

கி.ரா குழந்தைப் பருவத்து சிறார்களின் விடுதலை உணர்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் இச்சிறுகதையை எழுதியுள்ளார். பள்ளி என்பது குழந்தைகள் விரும்பாத ஒரு ஜெயில் போன்ற தன்மையைக் கொண்டது என்பதாக இக்கதையில் கூறுகிறார். தான் படிக்கும் பள்ளிக்குச் செல்லாமல் ஊர் சுற்றி விட்டு அல்லது இரண்டு ஊர்க்கும் எல்லையில் உள்ள வேப்ப மரத்தில் பொழுதை போக்கி விட்டு மாலையில் பள்ளி விட்டுச் செல்லும் சிறுவர்களோடு தானும் பள்ளிக்குச் சென்ற தோரணையில் செல்லும் ராமசாமியின் சிந்தனையில் பள்ளிகள் என்பவை சிறைச்சாலையைப் போன்ற தன்மை கொண்டவை என்பதாக இருக்கிறது. பள்ளிக் கூடத்தில் படிப்பது என்றாலே அவனுக்கு வேப்பங்காயாய் கசந்தது. பொழுதை உச்சிப் பொழுது வரை கழித்து விட்டு பசித்தால் சாப்பிடுவான். கடைக்குச் சென்று பக்கோடா வாங்கித்தின்று கொண்டிருக்கும் போது ஒரு குழந்தையின் சிரிப்பை கேட்டான். பக்கத்தில் உள்ள வீட்டின் ஜன்னல் வழியே உள்ளே பார்த்தான் ஒரு குழந்தை மூன்று வயது. அக்குழந்தையை அறைக்குள்

வைத்துப் பூட்டி விட்டுச் சென்றிருந்தார்கள் அதனுடைய பெற்றோர் அந்தக் குழந்தை சிரித்து ஆர்ப்பரிப்பதைப் பார்த்து அதனோடு கதவிடுக்கின் வழியே அந்தக் குழந்தை கோழிக் குஞ்சுகள் மேய்வதைப் பார்த்து சிரித்தது. அதனை பயமுறுத்திப் பார்க்க நினைத்த ராமசாமி கதவிடுக்கின் வழியே திடீரென்று தோன்றி கத்தினான். குழந்தை அச்சத்தில் வீறிட்டது. பின்பு அந்தக் குழந்தையை சமாதானப்படுத்தும் வகையில் பாப்பா பாரு அண்ணன் வந்திருக்கேன் என்று கூறி நட்பை வளர்த்தான். தினந்தோறும் அந்தக் குழந்தையோடு கதவிடுக்கின் வழியே பேசினான். “ அவர்களுடைய சிநேகம் ஆரம்பமாகியது. தினம் தவறாமல் ஒரு பாய்ச்சல் இங்கே வந்து விளையாடி விட்டுப் போனால்தான் ராமசாமிக்குத் தூக்கம் வரும். நல்லா நெருங்கிப் பழகினதுக்கப்புறம் அந்தக் குழந்தையிடம் ஒம் பேரென்ன என்று கேட்டான். எம் பேடா எம்பேடு துப்புடாச் என்றது. கொஞ்ச நேரம் வரை ராமசாமி சிரித்தான். ஓஹோ சுப்புராஜா சரி சரி என்று சொல்லிக் கொண்டே மீண்டும் சிரித்தான்” (கி.ரா.கதைகள், ப.37) என்று அவர்களுடைய நட்பு தொடர்ந்து கொண்டிருந்தது. அந்தக் குழந்தை கதவிடுக்கின் வழியே அவனுடன் நட்பு பாராட்டியது. ராமசாமிக்கு அந்தக் குழந்தையின் நிலைமை சிறைச்சாலைக்குள் இருப்பது போன்று பட்டது.



ராமசாமியின் கள்ளத் தனம் தெரிந்த அவனுடைய பெற்றோர் அவனை நகரத்தில் உள்ள பள்ளியில் சேர்த்தனர். பள்ளியை விட்டு வெளியே வரமுடியாதபடி விடுதியில் அவனை சேர்த்து விட்டனர். இதனால் அவன் மிகவும் வருந்தினான். அந்தப் பள்ளிக் கூடம் நான்கு பக்கமும் சுவர்களால் ஆனது. அது ஒரு சிறைச்சாலையேதான் என்று அவனுக்குப்பட்டது. அந்தப் பள்ளியிலிருந்து எப்படியாவது வெளியேறி விட வேண்டும் என்று எண்ணியவன் சுவரோரம் இருந்த மரத்தில் ஏறி கிளை வழியே வெளியே குதித்து விட்டான். “ இரவு சாப்பாட்டு மணி அடித்தது. எல்லாப் பையன்களும் புறப்பட்டுப் போய் விட்டார்கள். தப்பித்துப் போக இதுதான் சரியான நேரம். மணிப்பர்சை மட்டும் எடுத்துக் கால்சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான். பூனைபோல் அடிமேல் அடி வைத்துப் பதுங்கிச் சென்றான். ஒரு மரத்தின் மீது ஏறி வெளியே கை நீட்டிக் கொண்டிருந்த அதன் கிளை வழியாக வந்து கோட்டைச் சுவருக்கு வெளியே குதித்தான். நல்ல வேளை முழங்காலில் ஒரு சிறாய்ப்பு. அவ்வளவுதான். துடைத்து விட்டுக் கொண்டான். தான் தப்பிக்கக் கை கொடுத்து உதவிய அந்த மரத்துக்கு தன் கண்களால் நன்றி சொல்லி விட்டு வேகமாக நடந்தான்” (கி.ரா.கதைகள், ப.39) என்று அவன் பள்ளி விடுதியிலிருந்து தப்பித்து வருகின்றமை கூறப்படுகிறது. மனிதநேயமற்ற செயலாக பள்ளிகளைப் பார்க்கும் மனப்பான்மை இதில் காணப்படுகிறது. அடைத்து வைத்து துன்புறுத்தும் செயலாக இதனைக் கருதுகின்ற மனப்பான்மையும் வெளிப்படுகிறது. தன் ஊரான கோவில்பட்டிக்கு வந்த ராமசாமி முதல் வேலையாக குழந்தை இருக்கும் வீட்டை நோக்கிப் போனான். போகும் போதே கையில் கல் ஒன்றை எடுத்துக் கொண்டான். “ போனதும் முதல் ஜோலியாக அந்த நாறப் பூட்டை இடது கையினால் உடைத்து சுப்புராஜை விடுதலை செய்தான்” (கி.ரா.கதைகள், ப.40) என்று சுப்புராஜ்

என்கிற அந்தச் சிறு குழந்தை அகப்பட்டுக் கொண்டிருந்த வீட்டின் அறையானது அக்குழந்தை மீதான வன்முறையைக் காட்டுகிறது. அதிலிருந்து அக்குழந்தையை விடுவிக்கும் செயலானது அதன் மீதான பரிவாக வெளிப்படுகிறது. மனித மனங்கள் வன்மத்தையும், குரோதத்தையும் குழைத்துப் பூசி வைத்திருப்பதையே பூட்டுக்கள் வழி உணர்ந்து கொள்ள முடிகிறது. அதிலிருந்து விடுபடுதலே உண்மையான விடுதலை என்பதாக இக்கட்டுரையில் வெளிப்படுத்துகிறார்.

ஜடாயு சிறுகதை

கி.ரா.வின் கதைகளில் ஒன்றான ஜடாயு என்பது ராமாயணத்தில் சீதையைக் கடத்திச் செல்லும் இராவணனிடமிருந்து சீதையைக் காப்பாற்ற தன் உயிரை ஈயும் ஜடாயுவைப் போன்ற மனம் கொண்ட தாத்தைய நாயக்கர் பற்றியதாகும். இரவில் ஒரு பெண்ணின் அபலைக் குரல் கேட்டு விழித்து வெளிச் செல்லும் தாத்தைய நாயக்கர் நான்கு பேர் ஒரு பெண்ணை பலாத்காரம் செய்ய முயற்சிப்பதைக் கண்டு அவர்களை நிறுத்தி விசாரிக்கிறார். நால்வரில் ஒருவன அந்தப் பெண்ணைத் தன் மனைவி என்றும் வீட்டில் கோபித்துக் கொண்டு வந்து விட்டாள் என்றும் கூறி வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்ல முயற்சிக்கி◌்ன்றனர். அந்தப் பெண் தாத்தைய நாயக்கரிடம் தன்னைக் காப்பாற்றும்படி கெஞ்சுகிறாள். ஊரார் சேர்ந்து கணவனுடன் செல்லுமாறு அந்தப் பெண்ணிற்கு அறிவுரை கூறி அனுப்புகின்றனர். தாத்தைய நாயக்கர் மீண்டும் அந்தப் பெண்ணின் அபலைக் குரல் கேட்டு எழுந்து செல்கிறார். நால்வரும் அந்தப் பெண்ணை பலாத்காரம் செய்கின்றனர். தாத்தைய நாயக்கர் கல்லை எடுத்து அவர்கள் மீது எறிந்து தாக்குகிறார். நால்வருடன் சண்டையிடுகிறார். நால்வரில் ஒருவன் அரிவாள் வைத்திருந்து அவரது கையை வெட்டி விடுகிறான். இரண்டு கையும் வெட்டுப்பட்ட நிலையில் யாதும் செய்ய முடியாத நிலையில் அந்தப் பெண்ணிடம் காப்பாற்ற முடியாமைக்காக மன்னிப்புக் கேட்டபடியே இறந்து போகிறார். இக்கதையில் தாத்தைய நாயக்கரின் மனிதாயச் செயல் அளப்பரியதாக வெளிப்படுகிறது.



கி.ரா.வின் இவ்விரண்டு சிறுகதைகளிலும் மனிதநேயம் துளிர்ப்பதைக் காணமுடிகிறது. சிறுவனின் செயலாக இருந்தாலும் ராமசாமி அடைத்து வைத்த சிறுவனை விடுதலை செய்வதில் மனிதநேயம் துளிர்க்கிறது. அது போல கயவர்களிடம் சிக்கிக் கொண்ட பெண்ணைக் காப்பாற்றும் தாத்தைய நாயக்கரின் செயலிலும் மனிதநேயம் வெளிப்படுகிறது.

முடிவுரை

மனிதர்கள் பிறர் துன்பம் கண்டு மனம் இழக வேண்டும். இதை◌்ததான் வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று வள்ளலார் பாடிய பாடலில் வெளிப்படுவதாகும். பிறர் துயர் துடைக்கும் செயல்தான் மனிதனை மனிதனாக உணரச் செய்யும் ஒன்றாக இருக்கிறது. கி.ராவின் சிறுகதைகள் பலவற்றில் மனிதாயப் பண்புகள் வெளிப்படும் நிலையினைக் காணமுடிகிறது. இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்ட இரு சிறுகதைகளும் மனிதப் பண்பு

வெளிப்படும் வகையில் அமைந்தனவாகும். தன் உயிர் கொடுத்தேனும் பிற உயிரைக் காப்பாற்றும் செயல் அளப்பரியதாக வெளிப்படுகிறது.

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

நாற்காலி - ஒரு பார்வை

திருமதி சு ஈஸ்வரி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

திருமதி சு ஈஸ்வரி,
(பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்)
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை – 600 095.
Phone Number : 9840849793
E-Mail : eswarimercy@gmail.com

நாற்காலி – ஒரு பார்வை

முன்னுரை

சிறுகதை உலகில் தனக்கென்று தனி இடத்தைப் பதித்தவர் கி.ரா. அவர்கள். அவருடைக் கதையில் கரிசல் வட்டார சொற்களும் நகைச்சுவை உணர்வோடுக் கூடிய சமூகக் கருத்துகளும் எடுத்தாளப்படுகின்றது. "நாற்காலி" என்ற கதைத் தலைப்பிற்கு ஏற்றாற்போல ஒருவரின் வாழ்வில் நான்கு கால்களையுடைய நாற்காலி என்பது எவ்வளவு முக்கியம் என்பதை இக்கதையின் மூலம் உணர முடிகிறது. ஒரு நாற்காலி செய்வதற்கு எந்த மரத்தில் செய்யலாம் தேக்கு மரத்தில் செய்யலாமா? பாக்கு மரத்தில் செய்யலாமா? என்று குழம்பி கடைசியாக வேப்ப மரத்தில் செய்யலாம் என்று முடிவு செய்து நாற்காலியை செய்து முடிக்கின்றனர்.



கி.ரா அறிமுகம் :

கி. ரா. என்று சுருக்கமாக அழைக்கப்படும் கி. ராஜநாராயணன் 1972 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் கரிசல் இலக்கியத்தில் தந்தை என்ற சிறப்பிற்குரியவர். கோவில்பட்டி அருகில் இடைசெவல் கிராமத்தை சேர்ந்தவர். 1958இல் சரஸ்வதி இதழில் வெளியான "மாயமான்" சிறுகதை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இவரின் முதல் கதை "சொந்த சீப்பு". இவரின் கதையுலகம் கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், வாழ்க்கைப்பாடுகளையும் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடியாக விவரிக்கப்பட்டவை. கரிசல் வட்டார அகராதி என்று மக்கள் தமிழுக்கு அகராதி உருவாக்கிய முன்னோடி இவரே. இவரின் **"கோபல்லபுரத்து மக்கள்"** 1991-ஆம் ஆண்டு சாகித்திய அகாடமி விருது பெற்றது. மேலும் இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசின் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2016-ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியச் சாதனை விருது உள்ளிட்ட தமிழின் முக்கிய இலக்கிய விருதுகளை பெற்றவர்.

கதைத் தொடக்கம்

நாற்காலி இல்லாததும் ஒரு வீடா? என்று வீட்டில் திடீரென்று எல்லோருக்கும் தோன்றியது. உடனே அதைப் பற்றி அனைவரும் விவாதிக்கத் தொடங்கினார்கள். அந்த சமயம் திடீரென்று குடும்பத்தில் நாற்காலியை பற்றி தானே விவாதம் தொடங்கியது. அதற்கு முன் தினம்

தான் இக்கதையின் நாயகன் வீட்டில் ஒரு விருந்தினர் வந்தார். அவர் உட்காருவதற்கு முக்காலி போடப்பட்டது. அந்த முக்காலியில் திடீரென்று தடுக்கி விழுந்ததை பார்த்து குழந்தைகள் சட்டென்று சிரித்தது. அந்த முக்காலியால் அடிக்கடி அந்த வீட்டின் குழந்தைகள் கீழே விழுவது நடக்கும். அந்த விருந்தினர் வந்து சென்றதும் திடீரென்று பார்த்தால் முக்காலியைக் காணோம். அப்பொழுது முக்காலியை காணவில்லையே ”அதை அவர் கையோடு கொண்டு போயிருப்பாரோ” என்று குழந்தைகளுக்குத் தோன்றியது.

நாற்காலி வாங்குதல்

வீட்டில் அனைவரும் நாற்காலி வாங்க முடிவு செய்தனர். அப்பொழுது நாற்காலி வாங்குவதற்கோ, அதை செய்து தருவதற்கோ அங்கு ஒரு தட்சன் கூட இல்லை. பெத்தண்ணா மட்டும் நகரத்தில் போய் விற்கும் நாற்காலி வாங்கிக் கொண்டு வந்துவிடலாம் என யோசனை கூறினார். பக்கத்து தெருவில் கெட்டிக்கார ஒரு தச்சன் இருக்கான் அவன் கிட்ட போய் நாற்காலி வாங்கலாம். ஏனென்றால் கவர்னர் வந்து அவன் செய்த நாற்காலியில் தான் மெச்சி இருக்கார் என்று அத்தை சொன்னார். அத்தை சொன்னதும் அவனுடைய அம்மாவின் முகத்தில் ”ஆமா! இவ ரொம்ப கண்டா” என்று முணுமுணுத்தாள். அவனின் அப்பா மட்டும் வேலையாட்களை தற்சமயம் அனுப்பிவிட்டு வந்து உட்கார்ந்து நாற்காலியை பற்றி யோசித்து கொண்டிருந்தார். கதாநாயகனின் மாமா தானும் ஒரு நாற்காலி வாங்க வேண்டும் சேர்த்தே வாங்கி விடலாம் என யோசனைச் சொன்னார். இது அனைவருக்கும் சரியான யோசனையாகப்பட்டது.

நாற்காலியை எந்த மரத்தில் செய்யலாம்?



நாற்காலியை தேக்கு மரத்தில் செய்யலாம். தேக்கு மரத்தை செய்தால் தான் தூக்க லேசாகவும், அதே சமயத்தில் உறுதியாகவும் இருக்கும் என்று பாட்டி ஆலோசனைக் கூறினாள். வேப்ப மரத்தில் செய்யலாம். அதில் உட்கார்ந்தால் குளிர்ச்சியாக இருக்கும். மூல நோய் எட்டாது என்று மாமா கூறினார். “பூவரசங்கட்டையில் செய்தால் ரொம்ப நன்றாக இருக்கும். அது கண் இறுக்கமுள்ளமரம் நுணுக்கமாகவும் பளபளப்பாகவும் இருக்கும் உறுதியும் கூட” என்றார் இக்கதையின் நாயகனின் அப்பா. நாற்காலியில் வெளிர் நிறத்தில் செய்தால் கொஞ்ச நாள் கழித்து அழுக்கு பட்டு பார்க்கவே நன்றாக இருக்காது. அதனால் செங்கரும்பு நிறத்திலோ அல்லது எள்ளுப் பிண்ணாக்கு மாதிரியான கருப்பு நிறத்திலோ செய்தால் நன்றாக இருக்கும் என்று அக்கா கூறினாள். ஒருவழியாகக் கடையில் பளிச்சென்று கண்களுக்கு முன்னால் கண்ணாடி போல மின்னும் பளபளப்பு கருப்பு நிறத்தில் ஒரு நாற்காலி தென்பட்டது. மாமா கோயிலுக்கு இரண்டு நாற்காலிகள் செய்யப்பட்டது.

நாற்காலிக்கு உவமை

இரண்டு நாற்காலிகளும் "ராமர், லட்சுமணர்" மாதிரி ஒற்றுமையாக இருந்தன. இக்கதை நாயகனுக்கும் எந்த நாற்காலியை தான் எடுத்துக் கொண்டு, எதை தன் மாமாவுக்கு கொடுப்பது என்று குழப்பமாக இருந்தது. ஒருவழியாக ஒரு நாற்காலி மாமாவிடம் கொடுக்கப்பட்டது. இருந்தாலும் மாமாவிடம் கொடுத்த நாற்காலி தான் நன்றாக இருந்த மாதிரி அவனுக்கும் பெத்தண்ணாவுக்கும் தென்பட்டது. நாற்காலியில் வாங்கி வந்தவுடன் வீட்டில் இருந்த ஒவ்வொருவருமாக உட்கார்ந்து பார்த்து அதை கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். பெத்தண்ணா நாற்காலியில் உட்கார்ந்து "ஆஹா" என்று மெய் மறந்து போனார். உடனே தம்பியும் தங்கையும் சண்டையிட்டுக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்துக் கொண்டனர்.

நாற்காலி பற்றி ஊரார் செயல்

இவர்கள் நாற்காலி வாங்கிய செய்தி ஊருக்குள் தீ மாதிரி பரவி விட்டது. ஊரில் உள்ள குழந்தைகளும் பெரியோர்களும் பெரிய பெரிய கூட்டங்களாக வந்து நாற்காலியை பார்த்துவிட்டு போனார்கள். சிலர் தடவி பார்த்தார்கள். ஒரு கிழவன் வந்து நாற்காலியை தூக்கிப் பார்த்தார். "நல்ல கனம்" உறுதியாகச் செய்திருக்கிறார்கள் என்று தச்சனை பாராட்டிச் சென்றார்.



இறப்பு வீட்டில் நாற்காலி

ஒரு நாள் இரவில் வீட்டில் எல்லோரும் உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது திடீரென்று யாரோ ஒருத்தர் கதவை தட்டுவது போல் சத்தம் கேட்டது. கதவை திறந்து பார்த்தால் ஊருக்குள் யாரோ ஒரு முக்கிய பிரமுகர் இறந்து விட்டதாகவும் அதற்கு நாற்காலி வேண்டும் என்றும் கேட்டு எடுத்துக் கொண்டு போனார்கள். இறந்து போனா பிரமுகர் அக்குடும்பத்தினருக்கு தெரிந்தவர்களாக இருந்திருந்தால் அதை கொடுத்து அனுப்பினர். உடனே இறந்தவர் வீட்டில் அவரை அந்த நாற்காலியில் உட்கார வைத்தனர். இதைக்கண்ட இக்கதையின் நாயகனின் குடும்பம் ஆச்சரியப்பட்டது இதற்கு முன்பாக ஊரில் யாராவது இறந்தால் உரலை படுக்க வைத்து அது உருண்டு போகாமல் இருக்க ஒரு கோணி சாக்கில் வரகு வைக்கோலைத் திணித்து வைப்பார்கள். ஆனால் இப்பொழுது நாற்காலி வந்தவுடன் நாற்காலியில் இறந்தவரை அமர வைப்பதை எங்கே போய் கற்றுக் கொண்டார்கள் என குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

நாற்காலியில் சீரமைப்பது

அந்த வீட்டில் விசேஷம் முடிந்தவுடன் நாற்காலி இக்கதையின் நாயகனின் வீட்டிற்கு கொண்டுவரப்பட்டது. கொண்டு வந்தவுடன் குழந்தைகள் அதில் உட்கார மிகவும் பயந்தனர். அதனால் அவர்களின் அம்மா வேலைக்காரனை கூப்பிட்டு கிணற்றில் கொண்டு போய் வைக்கோலை வைத்து நன்கு தேய்த்து பெரியவாளிக்கு பதினைந்து வாளி தண்ணீரை விட்டு கழுவி திரும்பவும் கொண்டு வந்து வைக்க சொன்னார்கள். ஆனாலும் பல நாள் ஆகியும் அதில் உட்கார யாருக்கும் தைரியம் வரவில்லை. அதை எப்படி திரும்பவும் பழக்கப்படுத்துவது என்பது குடும்பத்தில் ஒரே குழப்பம் ஏற்பட்டது.

நாற்காலியில் மீண்டும் உட்காரும்படி செய்தல்

நல்ல வேலையாக ஒரு நாள் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார். வந்தவருக்கு நாற்காலி போட சொல்ல, அவர் பரவாயில்ல நான் சும்மா இப்படி உட்கார்ந்துக்கிறேன் என்று ஜமக்காலத்தைப் பார்த்து பேசினார். அதைப் பார்த்தவுடன் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் ஒரே பயம் ஏற்பட்டது. எங்கே அவர் உட்காராமல் போய்விடுவாரோ என்று. அவரை ஒருவழியாக நாற்காலியில் உட்கார வைத்தனர். அவர் உட்கார்ந்தவுடன் எல்லோரும் அதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர். மீண்டும் ஒரு நாள் ஒரு உள்ளூர் கிழவர் ஒருவர் தற்செயலாக அந்த இக்கதையின் நாயகனின் வீட்டிற்கு சென்று அந்த நாற்காலியில் உட்கார்ந்தார். அதற்கு அவனின் பெத்தண்ணா (இப்பொழுதே அவர் அந்த நாற்காலியில் உட்கார்ந்து பார்த்துக் கொள்கிறார்!) என்று பின்னால் நடக்கப் போவதை குறித்து நகைச்சுவை உணர்வோடு வெளிப்படுத்தினார்.



நாற்காலியை குழந்தைகளுக்கு மீண்டும் பழக்கப்படுத்துதல்

இக்கதையின் நாயகனின் தங்கையும் தம்பியும் முதலில் நீ உட்காரு, இல்லை இல்லை நீ உட்காரு என்று ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டனர். இதற்கிடையில் அங்கே இருக்கும் பக்கத்து வீட்டு சுகந்தி என்ற ஒரு பெண் தன் ஒரு வயதான தம்பிப் பாப்பாவை அந்த நாற்காலியில் உட்கார வைத்தாள். இதை பார்த்தவுடன் அச்சிறுவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பயமும் தீர்ந்தது. அதிலிருந்து குழந்தைகள் பயமில்லாமல் நாற்காலியில் உட்கார ஆரம்பித்தார்கள்.

நாற்காலியின் துயரநிலை

திரும்பவும் ஒரு நாள் இரவு யாரோ ஒருத்தர் இறந்து விட்டதாக கூறி அந் நாற்காலியை மறுபடியும் தூக்கி சென்றனர். இப்படி அடிக்கடி நடந்து கொண்டு இருக்க குடும்பத்தில் உள்ள அனைவரும் மிகவும் வருத்தப்பட்டனர். அதுமட்டுமில்லாமல் இரவில்

தூக்கத்தை கலைத்து அனைவரையும் எழுப்பி இந்த மாதிரி நாற்காலி வாங்கும் சம்பவம் அடிக்கடி நடைபெற்றது. இறந்தவருக்காகவே வாக்கப்பட்ட நாற்காலியாகவே அந்த நாற்காலி மாறியது. இதற்கிடையில் "நல்ல நாற்காலி செய்தோம்டா நாம் செத்துப்போன ஊரான்கள் உட்காருவதற்காக, சை" என்று அளுத்துக் கொண்டார் அண்ணன். "நாற்காலி செய்து கொடுத்த நேரப்பலன் தான்" என்று அவர்களின் அத்தை புலம்பினாள். இதற்கிடையில் இக்கதையின் நாயகனின் பெத்தண்ணா ஒரு யோசனை சொன்னார்.

மாமன் வீட்டு நாற்காலி

இக்கதையின் நாயகனின் அம்மா ஒரு நாள் மாமனின் வீட்டுக்கு ஒரு வேலையாக அனுப்பி வைத்தார். அப்போது மாமனை இவனைப் பார்த்தவுடன் உட்காருங்கள் மாப்பிள்ளை என அழைத்து உபசரித்தார். உடனே இக்கதையின் நாயகன் அந்த வீட்டில் உள்ள நாற்காலியை பார்த்தார். நாற்காலி புதுசாக பளபளப்பாக இருந்தது. அவரை தவிர அந்த நாற்காலியை யாரும் உபயோகிக்க மாட்டார்கள் காலையில் எழுந்ததும் தினமும் முதல் காரியமாக அதைத் துடைத்து, அதை இன்னொரு இடத்திற்கு தானே மெதுவாக எடுத்துக் கொண்டு போய் சத்தமில்லாமல் வைப்பார். அந்த மாமனார் இவரை கண்டதும் வாங்க மாப்பிளை என்று அழைக்க, இக்கதையின் நாயகன் அந்த நாற்காலியை உற்று நோக்கிக் கொண்டே இருந்தார். உடனே கதாநாயகனின் அம்மா சொல்லி அனுப்பியத் தகவலை மட்டும் சொல்லிவிட்டு வீடு திரும்பி விட்டான்.



மீண்டும் பழைய இடத்திற்கு சென்ற நாற்காலி

மீண்டும் ஒரு நாள் இரவு கதவு தட்டு சத்தம் கேட்டது. அப்பொழுது எல்லோரும் உறக்கத்தில் இருக்க பெத்தண்ணாவும் இக்கதையின் நாயகனும் மட்டும் எழுந்து போய் பார்த்துவிட்டு என்ன வேண்டும் என்று கேட்டனர். அதுவும் அவர்களை தனியாக அழைத்து சென்று "நாற்காலி தானே வேண்டும்" அது எங்கள் மாமனார் வீட்டில் இருக்கிறது போய் கேளுங்கள் தருவார் என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்த இக்கதையின் நாயகனும், பெத்தண்ணாவும் சத்தம் இல்லாமல் சிரித்துக் கொண்டே படுத்தார்கள். அதைப் பார்த்து தூக்கத்திலிருந்த அவருடைய அப்பா யார் வந்தது என்று கேட்க "வேலையென்ன..... பிணையலுக்கு மாடுகள் வேணுமாம்" என்றான் பெத்தண்ணா. உறக்கத்தில் மீண்டும் போர்வையை போர்த்திக்கொண்டு அப்பா தூங்கிவிட்டார்.

மாமன் வீட்டில் நிகழ்ந்தவை

ரொம்ப நாள் கழித்து மாமன் வீட்டுக்கு இக்கதையின் நாயகன் சென்ற பொழுது மாமன் தரையில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். வழக்கமான சிரிப்புடன் பேச்சிலும் அவரை வரவேறபைப் பார்த்தவுடன் “என்ன இப்படி கீழே உட்கார்ந்து இருக்கிறது நாற்காலி எங்கே?” என்று கேட்டவுடன் வெற்றிலைக்கு சுண்ணாம்பு தடவிக் கொண்டே ஆழ்ந்த புன்னகை செய்தார் மாமன். பின் அமைதியாக “அந்தக் காரியத்துக்கே அந்த நாற்காலியை வைத்துக் கொள்ளும்படி நான் கொடுத்துவிட்டேன் அதுக்கும் ஒன்று வேண்டியதுதானே?” என்று பதில் கூறினார்.

இதைக் கேட்டவுடன் இக்கதையின் நாயகனுக்கு கை கால் புரியாமல் திணறி நின்றான். இதை உடனடியாக தன்னுடைய பெத்தண்ணாவுக்கு தெரிவிக்க வேண்டும் என்று வேகமாக சென்றான். ஆனால் போகப் போக அவனுடைய வேகம் சற்றுக் குறைய ஆரம்பித்து விட்டது. ஏனென்றால், அந்த நாற்காலி மாமனார் வீட்டிலிருந்து போனதற்கு பெத்தண்ணவும், இந்த இக்கதையின் நாயகனும் ஒரு காரணமாக இருந்ததால் அவனால் எதுவும் சொல்ல முடியாமலும், வேகமாகச் செல்ல முடியாமலும் திணறினான்.



முடிவாக

நாற்காலியை வாங்கி அதை முழுமையாக உபயோகப்படுத்த முடியாமல் தவிக்கும் ஒரு சாதாரண நடுத்தரக் குடும்பத்தின் மனக்குமுறல்களை இக்கதையில் காணலாம். அந்த நாற்காலியானது இறந்தவர்களின் வீட்டில் படும்பாடும், மீண்டும் உரிமையாளரின் வீட்டிற்கு வந்தும், மீண்டும் இறந்தவர்களின் வீட்டிற்கு செல்லும் நாற்காலி ஒருவழியாகிவிடுகிறது. இந்த நாற்காலிக்கு தான் எத்தனை மவுசு என்று நினைக்கும்படியாக இச்சிறுகதை உள்ளது. இறுதியில் நாற்காலியை அக்குடும்பத்தினர் அனுபவிப்பதற்காக கதாநாயகனும், அவனின் பெத்தண்ணாவும் மாமானாரின் வீட்டிலுள்ள நாற்காலியை இறந்தவரின் வீட்டார் எடுத்துச் செல்லும்படி தந்திரத்தை பயன்படுத்துகின்றனர். இதனால் இறுதியில் இக்கதையின் நாயகன் மிகவும் வருந்துவதாக இக்கதை முடிவடைகிறது. நம்முடைய விருப்பத்திற்காக அடுத்தவரை கை நீட்டிக் காட்டிக்கொடுத்தால் நமக்கு இறுதியில் குற்ற உணர்ச்சி மட்டுமே மிஞ்சும் என்பதை இக்கதையின் மூலம் நாம் நன்கு உணரலாம்.

****

ISBN 978-81-968802-1-7




கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக


கரிசல் களம்

"சர்க்கார் திட்டமும் விவசாயி குடும்பமும்'

(*மாயமான்*)

திருமதி மு புவனேஸ்வரி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

திருமதி மு புவனேஸ்வரி
(பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்)
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், அடையாளம்பட்டு,
சென்னை – 600 095.
Phone Number : 90948 66220
E-Mail : buvaneswarisaravanansaravanan@gmail.com

“சர்க்கார் திட்டமும் விவசாயி குடும்பமும்”

(மாயமான்)

முன்னுரை

கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுபவர் கி. ராஜநாராயணன் இவர் இயல்பில் ஒரு விவசாயி, சிறந்த பேராசிரியராக பணியாற்றிய பெருமைக்குரியவர், நல்ல இசைஞானம் கொண்டவர்,சாகித்ய அகடாமி விருது, இலக்கிய சிந்தனை விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்ட சிறப்பு விருதுகளும் பெற்றுள்ளார்.தன் சிறுகதைகளின் மூலம் விவசாய மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த சர்க்கார் திட்டத்தின் அனுபவங்களையும் அவற்றால் ஏற்பட்ட நன்மைகளையும் தீமைகளையும் உணர்ச்சித் ததும்ப எடுத்து இயம்புகின்றார்.



சுதந்திர தினம்

அப்பாவு செட்டியார் கடை வைத்துள்ளார் எப்பொழுதும் சைக்கிளில் செல்பவர் இவரிடம் உள்ள தின பத்திரிக்கை எடுத்து இளைஞர்கள் படிக்கும் வழக்கம் கொண்டிருந்தனர். அப்போது இன்று கோவில்பட்டியில் ஒரே கூட்டமாக இருந்தது என்ன விசேஷமா என்றனர்.செட்டியார் சுதந்திரதினம் என்று வினாவினார். இங்கு சுதந்திரம் பெற்றாலும் அரசாங்கம் செய்யும் சில சலுகைகளை (இலவசம்) எதிர்பார்த்து அடிமைகளாகவும் வாழ்கின்றனர் சிலர்.

இளைஞன்

தினப்பத்திரிக்கை பார்த்துக் கொண்டிருந்த இளைஞன் செய்திகளை வாசித்துக் கொண்டு இருக்கும் போதே சத்தமாக வாசித்தான்.

புஞ்சை நிலமக்களும், சர்க்கார் திட்டமும்

மழையில்லை என்று கவலைப்பட வேண்டாம் புஞ்சை பகுதியில் உள்ள மக்களுக்கு சர்க்கார் கிணறு தோண்டியும் நானூறுருபாய் தருகிறதாம் இவை அனைவரின் மனதில் ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் தந்தன இருந்தாலும் மற்றவர்கள் நம்ப தயங்கினர். இதில் ஆச்சரியம் செட்டியார் மட்டுமே நம்பினார். ”மானாங்காணியா” இப்படியெல்லாம் பேப்பரில்

போடலாமா என புலம்பினார்கள் இதனைப் பார்த்தும் கேட்டும் கொண்டிருந்த செட்டியார் ராமசாமி யிடம் இருந்து பேப்பரை வாங்கி அச்செய்தியை மறுபடியும் வாசித்தார் மகிழ்ந்தார்.

அந்திப்பொழுது

அனைவரும் அவரவர் வீட்டிற்கு சென்றனர். செட்டியாரும் வீட்டிற்கு வந்தார். தன் தாய் தந்தைக்கு குளிக்கும் போது முதுகு தேய்க்கும் பணியை செய்து கொண்டே நீயும் குளிப்பா என்று கூறினர் அதற்கு அவரிடம் எந்த பதிலும் இல்லை ஏன்னென்றால் தன் புஞ்சை நிலத்தை எண்ணி கொண்டிருந்தார், செழிப்பான மந்தை நிலம் நாலரை ஏக்கர் கடையிலிருந்து வருமானம் வைத்து தான் குடும்பம் நடத்தினார் இப்போது சர்க்கார் அறிவித்த திட்டத்தால் தன் நிலையில் இருந்து உயர விரும்புகின்றார் தன் மனம் அதையே எண்ணிக் கொண்டிருக்கின்றன.

தோட்டம்

தன் தந்தையிடம் நம் தோட்டத்தில் கிணறு வெட்டலாமா!என வினாவினார் அதற்கு தந்தை வேண்டாம்! நம் முன்னோர்கள் அதனால் தான் அதை ஒன்றும் செய்யாமல் வைத்துள்ளனர். தோட்ட வேலைக்கு நானூறு ரூபாய் போதாது என்றார் இது என்னப்பா நீங்கள் சொல்வது நம் தேசத்தில் எத்தனை கிணறுகள் வெட்ட வேண்டியது இருக்கும். அவ்வளவுக்கும் அரசாங்கமே அவ்வளவு தொகையும் தர முடியுமா! அவர்கள் தரும் இனமான தொகையும் அதனோடு கடனாக வாங்கும் தொகையும் கொண்டு தான் வேலையை தொடங்க வேண்டும் என்றான்.



முன் அனுபவம்

கடன் வாங்குவது என்பது சாதாரண செயல் அல்ல எனக்கு இத்தனை வயதாகிறது. யாரிடமும் கடன் என்று கையைக் கட்டி நின்றதில்லை பகவான் அருளால் நமக்கு அப்படியெல்லாம் வராது என்றார் செட்டியாரின் தந்தை.

தாலுகா ஆபிஸ்

சர்க்கார் ரூபாய் வாங்க தாலுகா ஆபீசுக்கு செட்டியார் நடையாய் நடந்தார். முதலில் கிராம அதிகாரிகளைச் சரி செய்தார். ஒரு ஐம்பதுரூபாய் வரை செலவாகிவிட்டது.பிறகு உண்மை பளிச்சென ஒருவர் மூலம் தெரிய வந்ததும் அதன் வழி சென்றார். பணமும் செட்டியாரை தேடி வந்தது. ஆனால் நானூறுரூபாய் பதிலாக முந்நூறு தான் கிடைத்தன. கிணறு தோன்றியதில் முந்நூறுரூபாய் போன இடம் தெரியவில்லை. மேலும் செலவுக்கு கடன் வாங்க முடிவு செய்தார்.

முதலாளி அய்யவார் நாயக்கர் தோற்றம் :

வெள்ளை வேட்டி கட்டினால் எண்ணெய்ச் சிக்கு ஆகும். அதனால் பழைய கண்டாங்கிச் சேலையை வேஷ்டியை போலவே உடுத்திக் கொண்டான். நெற்றியில் நாமம் இட்டுக் கொண்டான். சேலையின் மறுகோடியை தன் தலையில் கட்டிக் கொண்டான் இவ்வளவு கஞ்சப்பயனிடம் கடன் வாங்க வருகிறார் செட்டியார். நாயக்கர் நாமம் குலைத்துக் கொண்டே வாருங்கள் மருமகனே என்று அழைத்தார் செட்டியார் நடந்த நிகழ்வினை அனைத்தையும் கூறி கடனாக பணம் வேண்டும் என கூறினார் உனக்கு இல்லாத பணமா வாங்கிக் கொள் என்றார் செட்டியாருக்கு தன் நாலரை ஏக்கர் நிலம் முழுவதுமாக கிடைத்தது போல மகிழ்ச்சி.

கடனும் வட்டியும்

கடனாக கேட்ட ஐந்நூறு ரூபாய்க்கு வட்டியும் ஒன்னுக்கு ஒன்னேகால் போட்டு இருக்கிறார்.இதை கண்ட செட்டியாருக்கு ஸ்டாம்பின் மீது கையெழுத்து வாங்கியும் அதே ரூபாய் நோட்டை இரண்டு மூன்று முறை எண்ணியும் தந்ததை எண்ணி வருந்தினாலும் கடன் வாங்கியது வீண் போகவில்லை என்றும் எண்ணினார்.



செட்டியார் சந்தோசம்

கிணற்றின் மேல் அமர்ந்து யோசித்து கொண்டிருந்தார் கடையை சரியாக கவனித்து பலநாள்கள் ஆகிவிட்டது. நேரடியான கவனம் இல்லாததால் வியாபாரம் மந்தமாகிவிட்டது.விற்பனையும் குறைந்துவிட்டதே என எண்ணிக்கொண்டு இருக்கும்போது கிணற்றில் தண்ணீர் வந்தன செட்டியார் வேகமாக கிணற்றுக்குள் இறங்கினார் தண்ணீர் எடுத்து குடித்தார். சந்தோசத்துக்கு அளவே இல்லை ஆனால் தண்ணீர் நல்லதாக இருந்ததே தவிர அரை ஏக்கர் மகசூல் வைக்க காணாது கிணற்றில் கூலி வேலை செய்பவர்கள் தோன்றியது தோண்டி விட்டீர்கள் இன்னும் கொஞ்சம் தோண்டினால் நல்லது யானையை வாங்கிவிட்டு தொறட்டிக்கு யோசிப்பார்களா என தன் முதலாளியிடம் கூறினார்கள் ஆனால் அவர் மனதில் மாட்டின் புண் வேதனை காக்கைக்கு தெரியுமா என்று நினைத்தார்.

தன்மகன் சிவக்கொழுந்து

தன் மகனை அனுப்பி தண்ணீர் குடம் கொண்டுவரச் சொல்லி தன் தந்தை மனைவி அம்மா என ருசிக்க கொடுத்தார் அனைவரும் அருமையாக உள்ளது என்றனர். நல்லசிவம் செட்டியாருக்கு மட்டுமே தண்ணீர் ருசிக்கவில்லை. ஆனால் ஊர் மக்களுக்கு நல்ல தண்ணீர் விஷயம் தெரிந்து பெண்கள் தண்ணீர் எடுக்க வந்தனர். ஆண்கள் செட்டியாருக்கு அடித்த யோகம் என்று கூறினார்கள் இதை அறிந்த செட்டியார் பொங்கி பூரித்தார்.

அடமானம்

கிணற்றில் தண்ணீர் வந்தவுடன் இரண்டு பிரச்சனைகள் செட்டியாருக்கு. ஜோடி காளைகளை வாங்க வேண்டும் அதற்கு மாமாவிடம் கடன் பெற வேண்டும் என தந்தையிடம் கூற உன் விருப்பம் என்று கூறிவிட்டார் நாயக்கர் அந்நிலத்தை அடமானத்திற்கு ரூபாய் தருவேன் என கூற முதலில் ஒப்புக்கொள்ளவில்லை.பிறகு விற்கவா போகிறோம் அடமானம் தானே என பத்திரத்தில் தன் குடும்பத்தில் உள்ளவர்களிடமும் தந்தையிடம் கையெழுத்து வாங்கினார் நல்ல சிவம் செட்டியார் கைகள் நடுங்க கையெழுத்து போட்டார். தனக்காகவும் மைனருக்காகவும் என்று எழுதி கையெழுத்து போட்டார் ரூபாய் ஆயிரம் பெற்றுக் கொண்டார் பத்திரத்தில் ரூபாய் இரண்டாயிரத்துக்கு அடமானம் என்று எழுதி இருந்தார் இது அவரின் பழக்கம் தானே. நாய் வாலை நிமித்தவா முடியும்.

கழுகுமலை சந்தை

அறுபது ரூபாய்க்கு இரண்டு செவலைக் காளைகள் பிடித்தார். கமலைக்கு வேண்டிய சாமான்கள், கூனை, வடம், வால்,கயிறு, மண்வெட்டி ஐம்பது ரூபாய் கூனை வாலுக்கு கோணிப் பாய் கடைசியாக நாற்பது ரூபாய் தோல் மற்றும் கிணற்றை ஆழப்படுத்துதல் அனைத்திற்கு ஆயிரம் ரூபாய் சரியாகிவிட்டன. இதற்கு வேலைக்காரன் நியமணம் செய்து கூலி சாப்பாடு போக மாதம் பத்து ரூபாய் சம்பளம் என வாங்கி பணங்களை இவ்வாறு செலவு செய்தால் செட்டியார்.



தோட்டத்தில் மிளகு செடி

கிராக்கி மிளகு வத்தல் முந்நூறு ரூபாய் விற்றது. தோட்டத்துக்கு வேண்டிய உரங்களை பக்கத்து ஊர்களில் வாங்கினார். மிளகு நாற்று முப்பது ரூபாய் இப்படியாக புஞ்சை நிலத்தை தோட்டமாக மாற்ற வெகு விரைவாக நடந்தது வேலைகள்.

சர்க்கார் செய்திகள்

இனமாக நானூறுரூபாய் வாங்கியவர்கள் மிளகு,பருத்தி போன்ற பணப்பயிர்கள் சாகுபடி செய்யக்கூடாது. உணவுப் பொருள் சாகுபடி செய்ய வேண்டும் என அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக செய்திகளை வெளியிட்டனர். “ஆஹா மோசம் போச்சே” என செட்டியார் தகப்பனார் படுக்கை படிக்கையானார் இப்ப செட்டியார் அடுத்து என்ன செய்யலாம் என கேப்பை யோசித்தார் கன்னங்கரேர் என இருந்தது. மண் கலயத்தில் மீது சுண்ணாம்பு அடித்து கறுப்பு புள்ளிகள் குத்தி தோட்டத்தில் நடு மையத்தில் வைத்தனர்.

மாயமானது

பயிர் பொதிவுக்கு வந்த சமயத்தில் தண்ணீர் இல்லை. மழை பெய்வதாகக் காணோம்.

ஊரின் உள்ள தோட்டப்பயிர்களும் மானவாரி புஞ்சைப்பயிர்களும் வாடின கருகின. எல்லாம் மாயமானது.

விவசாயிகள்

ஊரில் உள்ள விவசாயிகள் அனைவரும் வருந்தினர். கஷ்டப்பட்டனர், தாளை அறுவடை செய்தனர். இதனால் கால்நடைக்கு தீவினம் கிடைத்தது கிணற்றிலும் குடி தண்ணீர் இல்லை. மனிதர்களுக்கு என்ன செய்வது என வயது முதிர்ந்த கிழவர்கள் பஞ்சத்தைப் பற்றி பேச ஆரம்பித்தார்கள் இதில் வசதியானவர்கள் மொச்சைக்கொட்டை வாங்கி சாப்பிட்டார்கள், வசதி குறைவானவர்கள் காடுகளில் முளைத்துள்ள சாணைக்கிழங்குகளை தோண்டி எடுத்து வேகவைத்து தின்றார்கள். செட்டியார் கடையை இழுத்து மூடிவிட்டார் வீட்டுப் பெண்கள் நகை அடகு வைத்து ரேஷன் நெல் வாங்கி குத்தி சமைத்து சாப்பிட்டார்கள்.

மனக்கசவு



செட்டியார் வீட்டில் கணவன் மனைவிக்கிடையே சண்டை. இதை பார்த்த தந்தை தனக்கு சாவு வராதா? என எண்ணினார். ஆனால் அதற்கு மாறாக வடிவம்மாள் இறந்தாள் தன் அம்மா இறந்ததை எண்ணி புலம்பினார். தோட்டத்தில் அம்மாவை அடக்கம் செய்தார். இறப்புக்கு வந்த மாமா வாங்கிய ரூபாயில் கொஞ்சம் கொடுத்தால் நல்லா இருக்கும் என்றார். நான் வட்டித்தாரேன் என்றான் செட்டியார் தன் குழந்தையின் கைலாச நகைகளை விற்று கட்டினார்.

பஞ்சம் பிழைக்க

ஊரில் உள்ள விவசாயிகள் ஆந்திரா, தஞ்சாவூர் என்று பஞ்சம் பிழைக்க சென்று விட்டார்கள்.

செட்டியாரும்

கிராமத்தை விட்டு புறப்பட்டார் தன் ஊரை விட்டு தான் விளையாடிய மண்ணை விட்டும் நாயக்கருக்கு வீட்டையும் நிலத்தையும் தாரை வார்த்து விட்டார் அப்போது பஞ்சம் பிழைக்க செல்வதற்கு நூறுரூபாய் கொடுத்தார் நாயக்கர் தயாள குணம் உள்ளவர்.


கண்ணீர் தழும்பின, கல்லாகி நின்றார்

செட்டியார் தோட்டம் வழியாக சென்றபோது தன் தாயை அடக்கம் செய்த நினைவு வந்தது அப்படியே தரையில் மரம் போல் சாய்ந்தார் புரண்டார் பெண்களும் குழந்தைகளும் அழுதனர், நல்ல சிவம் செட்டியார் சமைந்த கல்லாக நின்றார். பிறகு அனைவரும் ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தார்கள்.

மதுரை

பசுமலை தாண்டி மதுரை நெருங்கிவிட்டது. தூரத்தில் வரும்போது கிழவர் கோபுரங்களைக் கண்டு கொண்டார். தலைக்கு மேல் இரண்டு கைகளையும் வைத்துக் கண்களை மூடிக்கொண்டார். செட்டியாரின் குடும்பத்தை தவிர அந்தப்பெட்டியில் இருந்தவர்கள் எல்லோரும் மதுரையில் இறங்கி விட்டார்கள்.

கோணல் புன்னகை



தன் குழந்தைகளுக்கு பிளாட்பாரத்தில் பலகாரம் வாங்கி கொடுத்துவிட்டு பத்திரிக்கை ஒன்று வாங்கினார். செட்டியாருக்குப் படிக்கும் பழக்கம் கிடையாது. ஆனால் பழக்கம் என்பது அவரை விட்டு போய்விடவில்லை. சோழவந்தான் ஸ்டேஷனில் நாலைந்து பேர்கள் ஏறி செட்டியாரின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார்கள் ரயில் புறப்பட்டது. வந்தவர்களில் ஒருவர் செட்டியாரின் பக்கத்தில் இருந்த பத்திரிகையை எடுத்து படித்து கொண்டிருந்தார் திடீரென்று தன் சகாக்களை நோக்கி ஒரு செய்தியை பலமாக வாசித்தார். எல்லாருமே அதைக் கேட்டார்கள் கிணறு வெட்ட சர்க்காரால் இனமாக ரூபாய் வழங்கப்படும் திட்டத்தை விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து நீடித்திருக்கிறார்கள் இந்த வருஷம் கிணறு ஒன்றுக்கு ஐந்நூறுரூபாய் இனமாக கிடைக்கும் முதலில் நானூறு ரூபாய் என்று கூறியிருந்தார்கள் அதில் அனுபவம் பெற்றவர் தான் செட்டியார். இப்பொழுது இவர் வாசிக்கும் செய்தியை கேட்டு பொதுவான இடம் என்பதால் கொஞ்சம் பொறுமையாக இருந்தார். அவர் மேலும் வாசித்தார் விவசாயிகள் இத்திட்டத்தை பயன்படுத்தி உணவு உற்பத்தியை பெருக்கி தேச சுபிட்சத்துக்கு பாடுபடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்ற செய்தியை கேட்டு அங்குள்ள மற்றவர்கள் சந்தோஷப்பட்டார்கள் ஆனால் செட்டியாருக்கோ ரோமங்கள் குத்திட்டு நின்றன, கண்கள் கோவை பழம் போல் சிவந்து கண்களில் இருந்து கண்ணீர் வராத குறைவாக வேகமாக பாய்ந்து அந்த பத்திரிக்கையை வேகமாக பிடுங்கி சுக்கு சுக்காக கிழித்தார். எல்லோரும் திகைத்தார்கள் என்ன காரணம் என்று ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை ஆனால் அவரின் தந்தை நல்லசிவம் செட்டியார் மாத்திரம் ஒரு கோணல் புன்னகையை செய்தார் தன் மகன் தன் வாழ்க்கை சூழலை கற்றுக் கொண்டான் என்று புரிந்து கொண்டார்.

முடிவுரை

1958இல் சரஸ்வதி இதழில் வெளியான “மாயமான்“ என்ற இச்சிறுகதை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. மாயமான் என்ற தலைப்பில் ஆசிரியர் கூற வருவன தந்தை சொல் மந்திரம் என்ற மந்திரத்தை மதிக்காமல் சென்றாலும் வாழ்வில் முன்னேற முடியாது என்றும் இனமாக எந்த ஒரு பொருள் கிடைத்தாலும் அவற்றின் பின் விளைவுகளையும் முன் யோசித்து செயல்படுதல் வேண்டும் என்ற முன் அனுபவமிக்க தன் தந்தை சொல்லை

கேட்டிருந்தால் இவ்வளவு சிரமம் ஏற்பட்டிருக்காது செட்டியாருக்கு.ஆனால் ஊரில் மழை பொய்ப்பும் மற்றும் மக்களின் துன்பமும் கண்டு வருந்தி அரசாங்கம் செய்யக்கூடிய இனமாக வழங்கப்பட இருந்த புஞ்சை நிலத்தை அவர்கள் காப்பாற்றிய விதத்தையும் மிக அழகாக எடுத்துக் கூறுகிறார் இதில் அரசாங்கம் என்பது தன் அதிகார செய்தியை இனமாக பணம் கொடுக்கும் போதே தன்னுடைய கோரிக்கையை கூறியிருந்தால் செட்டியார் மிளகு செடி வைத்து நஷ்டம் அடைந்திருக்க மாட்டார் அரசாங்கம் எச்செய்தியை கூறுவதாக இருந்தாலும் மக்களிடம் அந்தந்த காலத்திற்கு ஏற்றவாறு கூறினால் இவ்வாறு செட்டியார் குடும்பமும் ஊரில் உள்ள விவசாயிகள் குடும்பமும் சீரழிய மாட்டார்கள். எனவே விவசாயி மாயமானார்கள் அரசாங்கம் சொன்ன கிணற்றுத் திட்டமும் மாயமானது இவை மாயமான் கதையின் முக்கிய அங்கங்களாக அறியப்படுகிறோம்.

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

சமுதாயப் பார்வையில் கி.ராவின் நாற்காலி

மதிப்புறு முனைவர் வெ பாலாஜி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை


தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

மதிப்புறு முனைவர் **வெ பாலாஜி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 600 095.
Email: balaji11051975@gmail.com
Cellphone: 9840540536
E-Mail : balaji11051975@gmail.com

சமுதாயப் பார்வையில் கி.ரா.வின் நாற்காலி

முன்னுரை

கரிசல் காட்டின் அறிவொளியே!
கன்னித்தமிழின் ஞானஒளியே!
காரிருளின் நிலவொளியே!
கார்கால கவிமுகிலே!
புதுவையின் புரட்சியே!
புதுமையின் எழுச்சியே!
பன்முகப் படைப்பாளியே!
பாரதத்தின் பாட்டாளியே! உங்களைப் போற்றி வணங்குகிறேன்.



கரிசல் இலக்கியத்தின் தந்தை! கோவில்பட்டியின் சிந்தை! இடைசெவல் கிராமத்தின் கங்கை! ராயங்குல ஸ்ரீகிருஷ்ண ராஜநாராயணப் பெருமாள் ராமானுஜ நாயக்கர் என்பது இவரின் இயற்பெயராகும். கி. ரா. என்பது புனைபெயர். செப்டம்பர் 16, 1922இல் பிறந்தார். முத்திரை பதித்தார்! இயல்பில் இவர் ஒரு விவசாயி! இதயங்களைத் திறந்த சாவி இவர். மக்களின் வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் காட்சிப்படுத்தி செதுக்கிய சிற்பியவர். கதைகளில் வாழ்பவர். நாற்காலி எனும் படைப்பினை உயிரோட்டமான காவியமாகத் தந்திருப்பவர். இதயங்களை அன்பினால் வென்றவர். நாற்காலியைப் பன்முகப் பார்வையில் நான் வர்ணிக்கிறேன்.

நாற்காலி உருவான விதம்

நாற்காலிக்கு ஆசைப்பட்டால் மட்டும் போதாது. கடுமையாக உழைக்க வேண்டும். அதே நேரத்தில் எல்லாவற்றையும் அனுசரித்துச் செல்ல வேண்டும். நாற்காலிக்குச் சண்டை போட்டு ஆட்சியையே இழந்திருக்கிறார்கள். நாற்காலிமேல் ஆசைபடாதே! ஆசைப்பட்டால் நீ காலியாகிவிடுவாய் என்பதே உண்மை.

ஆனால்? இங்கே நாற்காலிதான் கதாநாயகன். 1950களில் எல்லாம் நாற்காலி இருந்தாலே எல்லோரும் வேடிக்கை பார்ப்பார்கள். குக்கிராமங்கள் என்றால் சொல்லவே வேண்டாம். அதிசயமாகப் பார்ப்பார்கள். எல்லோர் கண்களுக்கும் நாற்காலி மகிழ்ச்சியைக் கூட்டும். விருந்தாக அமையும். ஆசையாகத் தொட்டுப் பார்ப்பார்கள். அதோடு வாழவும் செய்வார்கள். சில வீடுகளில் முக்காலிகள் இருக்கும். உறவுகள் எவரேனும் வந்தால் பாய் அல்லது ஜமுக்காளம் விரித்துப்

போடுவார்கள். இல்லையென்றால் முக்காலிதான் எடுத்து வந்து போடுவார்கள். இங்கே ஒரு வீட்டில் பேண்ட் சட்டை போட்டுவந்த ஒருவரை முக்காலியில் உட்காரவைத்து அழகு பார்க்கிறார்கள். வயதான பாட்டிகள் பெரும்பாலும் முக்காலியைப் பயன்படுத்துவார்கள். சமைப்பதற்கும் தயிர் கடைவதற்கும் துணி துவைப்பதற்கும் தேவைப்படும்.

நகைச்சுவை துணுக்குகள்

ஒல்லியான தேகம் கொண்டவர் அமரலாம். பெரிய உடம்பு கொண்டவர்கள் அமரும்போது திடீரென்று சாய்ந்துகொள்ளும். வீட்டிற்கு விருந்தாளியாய் வந்தவர் அமர, உருண்டுபோய் கீழே விழுந்தார். இது எப்படி இருந்தது என்றால் கோவிலை அங்கப் பிரவேசம் செய்ததுபோல இருந்தது. வீட்டிலுள்ள அனைவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது. சிரிப்பை அடக்கப் பார்க்கிறார்கள். அவர்களால் முடியவில்லை.

அவ்வப்போது வீட்டிலுள்ள ஒரு குழந்தை அவர் எப்படி விழுந்தாரோ அதுபோன்று விழுந்து காண்பிப்பாள். எல்லோருக்கும் சிரிப்பு வரும். சிலர் சிரிப்பை அடக்கிக் கொண்டார்கள். எப்படியாவது ஒரு நாற்காலி வாங்கிட வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது. இல்லை இல்லை தச்சனை வைத்து நாற்காலி செய்துவிடலாம் இப்படியும் பேச்சு வீட்டில் எழுந்தது. நாலாபக்கமும் தச்சனைப் பற்றி விசாரிக்கிறார்கள். தச்சனையும் பார்க்கிறார்கள். நாற்காலி செய்யச் சொல்கிறார்கள். நாற்காலியை எப்படியெல்லாம் செய்யலாம் என்று ஆலோசிக்கிறார்கள்.



உறவினர்கள் வருகை

சிலபேரை நாம் பார்த்திருப்போம். வீட்டிற்கு வந்தால் எங்கே நிற்கலாம், அமரலாம் என்று பார்த்து பார்த்து முடிவு செய்வார்கள். சுவரோரம் உட்காருவார்கள். இல்லையென்றால் திண்ணையிலே உட்காருவார்கள். தூணில் சாய்ந்தவாறும் அமருவார்கள். அப்பொழுதெல்லாம் பலபேர் குடுமி வைத்திருப்பார்கள். தலையை விரிப்பார்கள். மறுபடியும் சேர்த்துக் கட்டிக் கொள்வார்கள். அப்படித்தான் அந்த வீட்டிற்கு விருந்தாளியாக வந்தவர் செய்தார். பிள்ளைகள் எல்லாம் சிரித்தார்கள். உடனே, அவர் கோபப்படாமல், நீங்கள் என்னைக் கேலி செய்யாமல் யார் கேலி செய்வார்கள் என்றார். ஊரிலே ஒரு பழக்கம் உண்டு. என்னவெனில் டே... கழுதைகளா! உங்களுக்கு வேறு வேலை இல்லையா! என்று கடைசியாக அதட்டிப் பேசுவார்கள்.

வீட்டுக்கு வந்த விருந்தினருக்கு மோர் கொடுக்க அம்மா உள்ளே செல்ல, அப்பாவும் அம்மா பின்னாடியே சமையலறைக்குச் செல்வதும், அம்மா பின்னாடி மறைந்து வருவதும் நகைச்சுவையாக இருக்கும். தன் கூடப் பிறந்த அண்ணனை நல்ல முறையில் கவனிப்பதும்தான் காரணமாம். கிராமங்களில் மோர் சுவையாக இருக்கும். காரணம் பசுமாட்டின் பால். தண்ணீர் ஊற்றாமல் மோர் ஆக்குகின்றபோது திவ்வியமாக இருக்கும். இதற்காகவே அம்மாவுடைய

அண்ணன் வருவாராம். ஏனெனில் தன் தங்கைக்காக அவரே சென்று ***‘காராம் பசுவை’*** வாங்கி வந்தாராம்.

நாற்காலி செய்வது பற்றி ஆலோசனை

நாற்காலி எந்த மரத்தில் செய்யலாம் என்ற விவாதம் ஏற்பட்டது. ஆளாளுக்கு ஒரு கருத்து சொல்கிறார்கள். வேப்பமரம் என்றார்கள், பிறகு பூவரசமரம் என்று முடிவானது. இரண்டு நாற்காலிகள் செய்யச் சொன்னார்கள். ஒன்று இவர்களுக்கு. மற்றொன்று மாமாவிற்கு. இரண்டு நாற்காலியும் வந்து இறங்கியது. எதை எடுத்துக் கொள்வது என்று மனம் தடுமாறுகிறது. ஏனெனில் இரண்டும் ஒரே மாதிரியாக உள்ளது. அதாவது இராமன், இலட்சுமணன் போல இருந்ததாம். கி. ரா. அவர்கள் நுணுக்கமாக இக்கதையினைச் செதுக்கியிருக்கிறார் என்றே சொல்லவேண்டும்.

வீட்டு அறையில் நாற்காலி



வீட்டினை நாற்காலி அழகுபடுத்தியது. ஊரிலுள்ள அனைவரும் வியப்பாகப் பார்த்தனர். சிலர் தொட்டுப் பார்த்தனர். அமர்ந்து பார்த்தனர். ஆகா... ஓகோ... என்று மக்கள் புகழ்ந்து பேசினர். நாற்காலியில் உட்காருவதற்கு வீட்டிலுள்ள குழந்தைகள் நான்தான் நான்தான் என்று போட்டி போட்டுக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தனர். இது எப்படி என்றால், நாற்காலி போடப்பட்டிருக்கும் இடத்தில் இசை அல்லது பாடல்கள் போடுவார்கள். திடீரென்று பாடலை நிறுத்துவார்கள். அந்நேரம் குழந்தைகள் ஓடிவந்து நாற்காலியில் உட்காருவார்கள். வீட்டிற்கு நாற்காலி வந்த தகவல் காட்டுத்தீ போன்று ஊரே பரவிவிட்டது. கூட்டம் கூட்டமாக வந்து நாற்காலியைப் பார்த்துவிட்டுச் சென்றார்கள். தச்சனை வெகுவாகப் பாராட்டினார்கள் கிராம மக்கள்.

இறப்பு பற்றிய கருத்து

மனிதர்களுக்கு வாழ்க்கை என்றால் வேடிக்கை. அதே நேரத்தில் இறப்பு என்று வருகின்றபோது ஒருவிதமான பயம் ஏற்படும். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு வழக்கம் உண்டு. இறந்தவர்களின் உடலைத் தரையில் படுக்கவைப்பதும், பெஞ்சில் வைப்பதும் ஒருவிதம் என்றால் நாற்காலியில் உட்கார்ந்திருப்பது போலவும் வைப்பார்கள். வீட்டிற்குப் புதியதாக நெடுநாட்கள் ஆசைப்பட்டு வாங்கிவந்த நாற்காலியைக் கேட்டு வருகிறார்கள். நடுநேர சாமத்திலும்கூட. இல்லை என்றும் சொல்லமுடியாது. ஏனெனில் இவர்கள் வீட்டில்தான் நாற்காலி உள்ளது என்பது அனைவருக்குமே தெரியுமே எப்படி இல்லையென்று சொல்லமுடியும்? அன்றிலிருந்து நாற்காலிக்கு வினை ஆரம்பித்துவிட்டது.

நாற்காலிமேல் வெறுப்பு

நாற்காலியை வாங்கிச்சென்று இறந்துபோனவரை அதிலே உட்கார வைத்தார்கள். எல்லாம் முடிந்தவுடன் நாற்காலியைக் கொண்டு வந்து கொடுப்பார்கள். குழந்தைகள் அதிலே உட்காரப் பயந்தன. புணியாளைவிட்டு நன்றாகக் கழுவிக்கொண்டு வந்தார்கள். அப்பொழுதும் பயம் தெளியவில்லை. விருந்தினர் வந்தால்கூட உட்காரத் தயக்கம் காட்டினார்கள். எந்த அளவிற்கு நாற்காலியில் உட்கார ஆசைப்பட்டார்களோ, அந்த அளவிற்கு வெறுக்கவும் செய்தார்கள். வயதானவர் ஒருவர் வந்து அமர்ந்தார். பின்பு குழந்தையை உட்கார வைத்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாகப் பயம்போனது. தெளிவு பிறந்தது.

நல்ல மனசு

ஊரில் உள்ளோர் அனைவரும் வருவார்கள், நாற்காலியை எடுத்துச் செல்வார்கள். அது வழக்கமாகிவிட்டது. நாற்காலியைச் செய்யக் கொடுத்த நேரம் என்று வீட்டில் உள்ளோர் அலுத்துக்கொண்டனர். ராத்திரி நேரம் டக் டக்கென்று கதவைத் தட்டினார்கள். கதவு திறக்கப்பட்டது. இல்லை என்று சொல்லாமல் என் மாமா வீட்டில் ஒன்று உள்ளது. அதைப்போய் கேளுங்கள். இல்லையென்றால் நான் தருகிறேன் என்று சொல்லி அனுப்பி வைத்தனர். ரொம்பநாள் கழித்து மாமனார் வீட்டிற்குச் சென்றேன். வெற்றிலை போட்டுக்கொண்டு அமர்ந்திருந்தார். நலமா? என்றேன். புன்னகைத்தார். நாற்காலி எங்கே என்று கேட்டேன். நாற்காலியை எடுத்துச் சென்றவரிடமே, நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிக் கொடுத்துவிட்டேன் என்றார்.




கி. ரா.வின் சமுதாயப் பார்வை

கரிசல் காட்டு மண்ணிலே தடம் பதித்தவர். மக்களின் வாழ்க்கை முறைகளை உயிரோட்டமுடன் வைத்திருந்தவர். ஒவ்வொரு கதாப்பாத்திரமும் இன்றும் வாழ்கிறது. அவருடைய படைப்புகளில் நாற்காலி கதையை நடமாட விட்டிருப்பார். மனிதன் ஆசைப்படுவது இயல்பு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசை இருக்கும். கிராமத்தின் மீதும் மக்கள் மீதும் அவருக்குத் தீராதக் காதல் உண்டு. அவர் படைத்த கதாப்பாத்திரங்கள் சமுதாயச் சிந்தனையை எடுத்துரைப்பவை. கிராமம் என்றால் பலதரப்பட்ட மக்கள் இருப்பார்கள். அவர்களின் எண்ணங்களை நகைச்சுவை உணர்வோடும் உதவி செய்கின்ற மனப்பான்மையோடும் எந்த நேரத்தில் வந்து கேட்டாலும் மறுப்பு ஏதும் சொல்லாமல் கேட்ட பொருளைத் தருவதும், மனம் நோகாமல் பேசுவதும், இல்லம் தேடி வரும் விருந்தினரை அன்போடு வரவேற்று உபசரிப்பதும், நாற்காலி என்னும் இக்கதையில் காணலாம். சமுதாயமும், சமுதாய மக்கள் ஏற்றம் காணவும், விட்டுக்கொடுத்து செல்வதும்தான் சிறந்த வாழ்க்கையென்று தன் எள்ளல், துள்ளல் நடையோடு கி. ரா. அவர்கள் கோடிட்டுக் காட்டுவதைக் காணலாம். மனிதர்களின் வாழ்வியல் சூழலைச் சிறப்பாகவும் அழகாகவும் வடிவமைத்திருக்கிறார்.

முடிவுரை

நாற்காலிக்கு ஆசைப்பட்டு, நாற்காலியும் செய்து அதில் உட்காரவும் முடியாமல் தவிப்பது வினோதமாக உள்ளது. கி. ரா. அவர்கள் சிறுகதையை செதுக்கியிருக்கிறார் என்றே சொல்லலாம். கிராம மக்களின் சூழல்களைப் படம்பிடித்துக் காட்டுவதோடு அவர்களின் உள்ளுணர்வினையும் காட்சிப்படுத்திய விதம் அருமை. படித்த வாசகன் நிச்சயம் நாற்காலியை விரும்பியிருப்பான். அவர்கள் ஊரிலும் இதுபோன்று நடந்திருக்கும் என்பதை அவனால் மறுக்கமுடியாது. இது கதையல்ல! சரித்திரம்!

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

"கி.ரா. சிறுகதைகள் காட்டும் கரிசல் மக்களின் வாழ்வியல்'

சு பாரதி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

சு பாரதி
பதிவு எண் 2023PHDPTTM06
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்) ,
தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடாப் பல்கலைக்கழகம், சீனிவாச வனம்
குப்பம் – 517 426 ஆந்திரப்பிரதேசம், இந்தியா.

"கி.ரா. சிறுகதைகள் காட்டும் கரிசல் மக்களின் வாழ்வியல்"

முன்னுரை

மனிதனைப் பற்றிய அறிவியலான மானிடவியல் மனிதனை உயிரியல் நிலையிலும், சமுதாய நிலையிலும், பண்பாட்டு நிலையிலும், வரலாற்று நிலையிலும் ஆராய்கிறது. கி. ராஜநாராயணன் சிறுகதைகள் கரிசல் நிலத்து மக்களின் வாழ்வியலைப் பண்பாட்டுச் சூழலை மண்சார்ந்த மரபுகளை நாட்டுப்புற வழக்காற்றுக் கூறுகளைப் புலப்படுத்துவனவாக உள்ளன. அவர் படைப்புகளில்; மண்வாசனை வீசுகிறது. எழுத்துமுறை என்பது ஒரு பேச்சுமரபின் நிலைமாற்றத் தடயமாகப் படிவமாக மாறியிருந்தது. அந்தப் பேச்சு மரபின் வாயிலாக, ஒருங்கிணைக்கப்படாத சிதறிய, மறைந்த, மங்கிய, மறக்கப்பட்ட புலப்படாத சொல்லாடல்கள் எல்லாம் புறப்பட்டு அழகியலை எட்டுகின்றன. கி.ராவின; சிறுகதைகளை மானிடவியல் நோக்கில் ஆராய்ந்து அவை வெளிப்படுத்தும் மனிதம் பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்தலாம்.




கி.ரா எனும் இரண்டெழுத்து மந்திரம்

கி.ரா. ஒரு எளிமையான கதைச்சொல்லி. இவருடைய எழுத்துகளில்,வருணணைகளில் மாடமாளிகைகள் இருக்காது. இளவரசிகளின் பாதாதி கேச வருணணைகள் இருக்காது.ஏழை எளிய மக்களின், நடுத்தர வர்கத்தினரின் உழைப்பும், குடிசைகளின் வாழ்வும், கூழ்குடித்து ஏர்பூட்டி உழும் மக்களின் வாழ்வியல் எனும் நிழல் ஓவியங்கள் நம் மனக்கண்ணில் படரவிடுவதில் அசாத்திய திறமைமிக்க எழுத்தாளர். பல்கலைக்கழகத்தில் படிக்காவிடினும், புதுவை பல்கலைக் கழகத்தின் சிறப்பு பேராசிரியராகப் பணியாற்றியவர். எதார்த்த எழுத்தாளர் கு.அழகிரிசாமியின் பால்ய காலம் முதலான நண்பர்.கரிசல் கதைகளின் தந்தையான கி.ரா. நாட்டுப்புறவியலில் சிறந்து விளங்குபவர்.கம்யூனிஸ சிந்தாந்தி. இரு முறை போராட்டங்களில் பங்கேற்றுச் சிறைச் சென்றவர். இவரது 'கிடை' குறுநாவல் 'ஒருத்தி' எனும் திரைப்படமாக எடுக்கப்பட்டு சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. நாட்டுபுறக் கதைக் களஞ்சியம் உருவாக்கியவர். சிறுகதை, நாவல், நாட்டுபுறவியல் என தமிழின் பல்வேறு பரிமாணங்களில் மிளிர்ந்தவர். தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற விருது, இலக்கியச் சிந்தனை விருது, சிறந்த எழுத்தாளர் போன்ற விருதுகளைப் பெற்றவர். அனைத்திற்கும் முத்தாய்ப்பாய் '***கோபல்லபுரத்து***

மக்கள் எனும் நாவலுக்காக 1991 இல் சாகித்ய அகாதெமி விருதுப்பெற்றவர். அவரது கதைகளில் மிளிரும் கரிசல் மக்களின் வாழ்வியலை ஆய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

கதவு காட்டும் ஏழ்மை

'வித்தக கலைஞன் தொட்டுவிட்டால் விறகு கட்டைக்கூட வீணையாகலாம்' எனும் பழமொழிக்கு ஏற்ப கதவு எனும் ஜடப்பொருள் இக்கதையில் கி.ராவின் படைப்பாளுமையால் புராதனச் சின்னமாகிறது.கதை முழுவதும் லட்சுமி, சீனிவாசன் எனும் இருசிறுவர்களின் வழி ஏழ்மை வாழ்வு சித்திரிக்கப்படுகிறது. கதவு அவர்கள் பயணம் செய்யும் பேருந்தாகிறது. அதன் சுழற்சி சுற்றளவில் திருநெல்வேலியும் சுற்று வட்டாரங்களின் தூரங்களும் அடங்கி விடுகின்றன. வாழ்ந்து கெட்ட குடும்பத்தின் பணக்கார பழமையை விடாது காத்துக் கொண்டிருப்பது அது ஒன்றுதான். அதன் மீது சிறுவர்கள் விளையாடி மகிழ்கிறார்கள், அதை தன் தோழனாக பாவிக்கிறார்கள். அவர்களுடைய அப்பா மணிமுத்தாறில் கூலிவேலை செய்கிறாா.; அம்மா காட்டு வேலைக்கு சென்று விடுகிறாள்.



ஒரு தீப்பெட்டியில் இருந்த நாய் படத்தைக் கம்மஞ்சோறு கொண்டு ஒட்டுகிறாள்.அதைப் பார்த்து கைத்தட்டி ஆரவாரிக்கிறார்கள். ஊர் தலையாரி வருகிறார். உங்க ஐயா எங்கே? என கேட்கிறான். குழந்தைகள் ஊருக்குப் போய் இருப்பதை கூற, வந்தா தீர்வை (வரி) கட்டச் சொல்லிவிட்டு போகிறார். மறுநாளும் வந்து கேட்கும் போது அம்மா ஐயா அவரு ஊரிலே இல்லை. மணிமுத்தாறு போயி அஞ்சு மாசமாச்சி ஒரு தகவலையும் காணோம். மூணு வருசமா மழை தண்ணி இல்லையே நாங்க என்னாத்தை வச்சி உங்களுக்கு தீர்வை பாக்கியை கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய் கூலி வேலை செய்து இந்த கொளந்தைகளைப் காப்பாத்ரதே பெரிய காரியம். உங்களுக்குத் தெரியாதா? என்றாள்.

தீர்வை கட்டாததால் தலையாரி ஆட்களைக் கொண்டு கதவைத் தூக்கிச் செல்கிறார். கதவு இல்லாததால் கைக்குழந்தையை தேள் கடித்து விடுகிறது. அதனால் குழந்தை இறந்துவிடுகிறது. இரவில் கடுங்குளிரில் நடுங்குகிறார்கள.; காய்ச்சி வைத்திருந்த கஞ்சியை கதவு இல்லாததால் நாய் குடித்துவிடுகிறது.அவர்கள் பட்டினி கிடக்கிறார்கள். தூக்கிச் செல்லப்பட்ட கதவு பள்ளிக்கு அருகில் உள்ள சாவடியில் உள்ளதைக் கண்டு பூரிக்கிறார்கள்.கண்ணீர் வடிக்கின்றனர். அதை பலமாக பற்றிக்கொண்டிருந்தனர் என முடிக்கிறார் கி.ரா. கதை முழுதும் ஏழ்மை வாழ்வியல் சித்திரம் போல் தீட்டப்பட்டுள்ளது.

வாழ்ந்து நொடிந்து போன குடும்பம், குடும்பத்திற்காக மனைவி மக்களை விட்டுப்பிரிந்து வெளியூருக்குச் சென்று கூலி வேலை செய்யவேண்டிய நிலை, தீர்வைக் கட்டமுடியாததால் தன் பணக்கார வாழ்வின் எச்சமாய் இருந்த கதவையும் இழக்க வேண்டிய நிலை, தன் பச்சிளம்

குழந்தையை தேள் கடிக்கும், காய்ச்சலுக்கும் பறிகொடுக்க வேண்டிய நிலை ஆகியவை வறுமை வாழ்வியலின் எழுத்தோவியமாய் இக்கதையில் விரிகின்றன.

நைந்துப்போன வேட்டி

ஊருக்கெல்லாம் தன் உழைப்பினால் சோறுபோடும் விவசாயி பட்டினியாகப் படுக்கிறான்.நெசவு நெய்து ஆடைக் கொடுப்பவன் கந்தல் உடுக்கிறான்.இறைவனின் படைப்பினில் இந்த உலகம் விந்தையானதுதான். தூங்காநாயக்கருக்கு இருப்பது ஒரே ஒரு வேட்டிதான். காரணம் வறுமை. அதையே அவர் துவைத்துத் துவைத்து உடுத்த வேண்டி உள்ளது. காற்றாட வெளியில் போக நினைத்தவருக்கு சனியன் புளியம்பழம் உருவில் தொற்றிக்கொள்கிறது. அதைக் குனிந்து எடுக்க முயலும்போது வேட்டி ரெண்டாக ஒருசாண் நீளத்திற்கு தைக்க முடியாதவாறு பிய்ந்துபோய்விடுகிறது.



1942 ஆகஸ்டு புரட்சியின்போது மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.அரசு காவலர்கள் மூலம் அடக்குமுறை செய்தது. போராடுபவர்களைக் கொடுமைப்படுத்தியது. அந்த நேரத்தில் ஒரு அரசியல்வாதி தூங்காநாயக்கரின் வீட்டில் ஒளிந்து கொள்ள போலீஸ் வந்து தூங்காநாயக்கரை அடித்து ‘நச்சி’ எடுத்துவிடுகின்றனர். பின்பு விட்டுவிடுகிறார்கள். ‘ஆகஸ்டு வீரா’; எனும் பட்டத்தை நூலிழையில் தவறவிட்டதால் சுதந்திர போராட்ட தியாகிகளுக்குக் கிடைக்கும் பென்ஷனும் கிடைக்காமல் போய்விடுகிறது. கிராமத்தில் ஒவ்வொரு பணக்காரர்களுக்கும் இருக்கும் வேட்டிகளையும், குழாய்களையும் நினைத்து தன்னுடைய வறுமை நிலைமைக்கு நொந்துகொள்கிறார். சுதந்திர தின வெள்ளி விழாவைக் கொண்டாடுவதற்கு நிதி வசூலிக்க தியாகிகள் வருகிறார்கள். தான் இருக்கும் நிலையில் தூங்காநாயக்கருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

நைந்து கிழிந்துப்போவது வேட்டி மட்டுமல்ல.சுதந்திரம் பெற்று இருபத்தைந்தாண்டுகள் ஆகியும் போக்குவரத்திலும், வாழ்க்கை வசதிகளிலும் முன்னேறி இருந்தாலும் ஏழைகளின் வாழ்வு மட்டும் நைந்துபோன கந்தையாகவே உள்ள நிலையை இக்கதை சுட்டிக்காட்டி நிற்கிறது.

மதிப்பற்றுப்போன சம்சாரி வாழ்வு

ஒவ்வொரு காலத்திலும் ஒரு சிலருக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கிறது.முன்பெல்லாம் நல்லவர்களும் சான்றோர்களும் அனைவராலும் மதிக்கப்பட்டனர்.அரசியல் போன்ற பொதுச்செயல்களிலும் ஈடுபட்டனர். ஆனால் தற்காலத்தில் குணமில்லாத பணமுடையோரையே பலரும் மதிக்கின்றனர். கொண்டாடுகின்றனர். பணம் பந்தியிலும் குணம் குப்பையிலும் கிடக்கிறது.

“கொத்தைப்பருத்தி” கதையில் கோனேரி செங்கன்னாவின் குடும்பம் மிகப்பெரிய பணக்கார

சம்சாரிக்குடும்பம். 200 ஏக்கர் நெய்க்கரிசல் பூமிக்குச் சொந்தக்காரர். வட்டாரத்திலேயே முதன்முதலில் காசுமாலை செய்த குடும்பம். பருத்தியை தினமும் வண்டி கொண்டுபோய் எடுத்துவரும் குடும்பம். மாவட்ட கலெக்டராக இருக்கும் தனது மகனுக்குப் பெண்கேட்டு வந்த வந்தட்டி நாயக்கருக்கு பெண்கொடுக்க மறுத்த பெருமையுடைய குடும்பம்.

“கலெக்டரா இருந்தால் அது அவன்மட்டுக்கும். நாளைப்பயனுக்கு ஏதாவது ஒண்ணு ஆகிவிட்டால் என் பொண்ணுல்ல தெருவில நிப்பா?. பையனுக்கு நாலேக்கர் நிலமிருந்தா அவள் அதிலே கிண்டி கிளறித் தன்பாட்டையாவது கழிச்சிடுவா. ஒண்ணுமில்லாதவனுக்கு உத்தியோகத்தை நம்பி யாரு கொடுப்பா பொண்ணு?” என்று ஓங்கி கேட்டவர்.

ஆனால் இப்போது தனது பேரனுக்கு பெண் கேட்டு செல்லுமிடத்தில் “காத்துட்டு சம்பளமானாலும் கவர்மெண்டு சம்பளம் இருக்கணும். மாசம் இருநூறு சம்பாதிக்கிற வாச்மேனாக இருந்தாலும் சரி அவனுங்களைக் கட்டத் தயார். சம்சாரிகளுக்கு இனிமேல் நம்ம பொட்டைப்பிள்ளைகள் வாக்கப்படாது வந்து கேக்காதீங்க” என்று கறாராகச்சொல்லிவிட்டனர்.



கோனேரியின் குடும்பம் பெரிய குடும்பம். ஏழு பெண்கள், ஆறு ஆண் குழந்தைகள். இன்று பிரிந்து பிரிந்து சிறுத்துவிட்டது. கோனேரி பேரனுக்கு பெண்பார்த்து சலித்துவிட்டது. சம்சாரியின் வாழ்க்கைக்கு மதிப்பில்லாமல் போய்விட்டதை எண்ணி மனம் உடைந்துப்போகிறார்.

கரிசல் பூமியும் பெரிய வீடுமாய் இருந்த சம்சாரி கோனேரி, அன்று கலெக்டருக்கே பெண்கொடுக்க மறுத்த நிலைமாறி சம்சாரிக்கு பெண்ணைக் கொடுத்து பெண்கள் வேலை செய்து இடுப்பெடிந்து சாகவா என படிப்பும் அரசு வேலையுமே பெரிதாய் மதிக்கப்படுகிற காலம் நடப்பதை உணர்கிறார். கால மாற்றத்தில் மதிப்பின் வரையறைகளும் மாறிவருவதை இக்கதையில் காட்டுகிறார். சமுதாய வாழ்வியல் மாற்றத்தை தெள்ளிதின் விளக்கும் கதையாக ‘கொத்தைப்பருத்தி’ விளங்குகிறது

முடிவுரை

படைப்பில் சமுதாயத்தில் நிலவும் சம்பவங்களை தன் அனுபவமாக எழுதுதல் உண்டு.ஒவ்வொரு பாத்திரங்களையும் அணுஅணுவாய் உள்வாங்கிக்கொண்டு விவரிக்கும் கி.ரா வின் தனித்திறன் பாராட்டுதற்குரியது. கரிசல் மக்களின் வாழ்வியல் கூறுகளை இவரது கதைகள் தெள்ளிதின் விளக்குகிறது என்பது புலனாகிறது.

<u>**பார்வை நூல்**</u>

1. கி.ரா வின் கதவு சிறுகதை
2. கி.ரா வின் வேட்டி சிறுகதை
3. கி.ரா வின் கொத்தைப்பருத்தி சிறுகதை

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கதவு சிறுகதை ஓர் பார்வை

மா அமுதா





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்


மா அமுதா
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயல், சென்னை – 600095.
amutha.tamil@drmgrdu.ac.in
Cell: 8124412336

கதவு சிறுகதை ஓர் பார்வை

கி.ராஜநாராயணன் (16.09.1922 - 17.05.2021)

கி.ராஜநாராயணன் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகில் உள்ள இடைசெவல் என்னும் கிராமத்தில் ஸ்ரீ கிருஷ்ண ராமானுஜம், லட்சுமி அம்மாள் தம்பதிக்கு ஐந்தாவது மகனாக பிறந்தார்.

"நான் மழைக்குத்தான்
பள்ளிக்கூடம் ஒதுங்கியவன்
பள்ளிக்கூடத்தை பார்க்காமல்
மழையையே பார்த்துக் கொண்டு
இருந்து விட்டேன்"



என்று தன்னைப் பற்றி கூறிக் கொள்ளும் கி.ரா. ஏழாம் வகுப்புக்கு மேல் படித்ததில்லை. 1989 வரை விவசாயம் செய்தார். அதன்பின் புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் சிறப்பு பேராசிரியராகப் பணியாற்றியவர். **இவரின் சிறப்பை உணர்ந்த புதுவை மத்திய பல்கலைக்கழகம் இவரை பேராசிரியராக்கியது. பள்ளிப் படிப்பை பாதியிலேயே முடித்த கி.ரா. இன்று பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டமாக படித்து முடிக்கப்பட வேண்டியவராக இருக்கின்றார்.** கரிசல் நிலத்தைத் தன் இலக்கியத்தில் எழுதியவர். நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், அனுபவக் கட்டுரைகள் எழுதியவர், கரிசல் வட்டார அகராதி என்ற வட்டார அகராதியை உருவாக்கியவர். கதைசொல்லி என இலக்கிய வட்டாரத்தில் அழைக்கப்படுபவர். அவர் எழுதிய கதவு என்னும் சிறுகதை, சிறுகதை உலகின் வாசலைத் திறந்து வைத்தது எனலாம். அக்கதையைப் பார்ப்போம்.

சிறுகதையின் இலக்கணம்

சிறுகதை தொடக்கம் முதல் இறுதி வரை ஒரு விறுவிறுப்புத் தன்மையோடு அமைய வேண்டும். குதிரைப் பந்தயம் போலத் தொடக்கமும் சுவைமிக்க நடையும் கதைப் போக்கும் வாசகர்களைக் கட்டி இழுக்க வேண்டும். கதையின் முடிவு சிந்திக்கத்தூண்டும் நிலையில் அமைய வேண்டும். இவை எல்லாம் இல்லாவிட்டால் வாசகர்கள் அக்கதையை ஒதுக்கி விடுவர். கி.ராஜநாராயணின் **கதவு** என்னும் சிறுகதை மேற்கூறிய **சிறுகதை இலக்கணத்தோடு** பயின்று வந்துள்ளது சிறப்பிற்குரியது.

கதைத் தொடக்கம்

கதவு ஆட்டம் ஆரம்பமாகியது. பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள்.

எல்லோரும் “டிக்கட்டு வாங்கிக்கிடுங்க” என்றான் சீனிவாசன்.

எந்த ஊருக்கு டிக்கட் வேணும்,

ஒருவன் “திருநெல்வேலிக்கு” என்று சொன்னான்.

“திருநெவேலிக்கு, திருநெவேலிக்கு” என்று கூப்பாடு போட்டுச் சொன்னார்கள். எல்லோரும்.

லட்சுமி ஒரு துணியால் கதவைத் துடைத்துக் கொண்டிருந்தாள். அனைவரும் கதவில் பிடித்துத் தொத்திக் கொண்டார்கள். சிலர் கதவை முன்னும் பின்னும் ஆட்டினார்கள். தன் மீது ஏறி நிற்கும் அக்குழந்தைகளை அந்த பாரமான பெரிய கதவு பொங்கிப் பூரித்துப் போய் இருக்கும் அக்குழந்தைகளை, வேகமாக ஆடி மகிழ்வித்தது. **“திருநெவேலி வந்தாச்சி”** என்றான் சீனிவாசன், எல்லோரும இறங்கினார்கள். கதவைத் தள்ளியவர்கள் டிக்கட் வாங்கிக் கொண்டார்கள். ஏறினவர்கள் தள்ளினார்கள். மீண்டும் கதவாட்டம் தொடங்கியது.

இப்படி **தொடக்கமே சுவையான உரையாடலாக இருப்பது கதையை மென்மேலும் வாசகர்களைப் படிக்கதூண்டுகிறது. மேலும் வாசகர்களின் கவனத்தைக் காந்தம் போல் ஈர்த்து செல்கிறது.**



வறுமைச் சூழல்

அது பழைய காலத்துக் காரை வீடு. பெரிய ஒரே கதவாகப் போட்டிருந்தது. அதில் வசித்து வந்தவர்கள் முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய்விட்டார்கள். அந்த வீட்டிலுள்ள பெண் குழந்தைகளில் மூத்ததற்கு எட்டு வயது இருக்கும். இன்னொன்று கைக்குழந்தை. அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய்விடுவாள். அப்பா மணி முத்தாறில் கூலி வேலை செய்யப் போய்விட்டார். லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மா காட்டிலிருந்து வரும் வரை வைத்துக் கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

படத்தைக் கதவில் ஒட்டி மகிழ்தல்

ஒரு நாள் தெருவில் ஒரு தீப்பெட்டிப் படம் ஒன்றை லட்சுமி கண்டெடுத்தாள். படத்தில் ஒரு நாய் இருந்தது. படத்தை வைத்துக்கொண்டு வீட்டை நோக்கி வேகமாக நொண்டி அடித்துக் கொண்டே போனாள், சந்தோஷம் தாங்கமுடியாமல்.

சீனிவாசனிடம் டேய் நா என்ன கொண்டு வந்திருக்கேன் சொல்லு பார்போம்? என்றாள். லட்சுமி தூரத்தில் இருந்தவாறே படத்தைக் காண்பித்தாள்.

“ஒரே தடவை **பாத்துட்டுக் கொடுத்துர்றேன்”**

“சரி”

“கிழிக்கப்படாது”

“சரி சரி”

சீனிவாசன் படத்தை வாங்கிப் பார்த்தான்.

“டேய் உள்ளே போய்க் கொஞ்சம் **கம்மஞ்சோறு** கொண்டா. இந்தப் படத்தை கதவிலே ஒட்டணும்” என்றாள். இரண்டுபேரும் கம்மஞ்சோறு கொண்டு படத்தைக் கதவில் ஒட்டி மகிழ்ந்து கைத்தட்டி சிரித்தார்கள். இதைக் கேட்டுப் பக்கத்துவீட்டுக் குழந்தைகளும் ஓடி வந்தனர், மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது.

குழந்தைகள் இப்படி விளையாடிக் கொண்டிருக்கும் போது கிராமத்துத் தலையாரி அங்கே வந்தான்.

“லட்சுமி உங்க ஐயா எங்கே?”

“ஊருக்குப் போயிருக்காக”

“உங்க அம்மா?”

“காட்டுக்குப் போயிருக்காக”



“வந்தா, தீர்வையைக் கொண்டு வந்து போடச்சொல்லு, தலையாரித் தேவரு வந்து தேடீட்டுப் போனாருன்னு சொல்லு” என்று கூறிச் சென்றான். மறுநாள் தலையாரி, லட்சுமியின் அம்மா இருக்கும்போதே வந்து தீர்வைப் பாக்கியைக் கேட்டான்.

ரங்கம்மா தன் நிலையைக் கூறல்

‘ஐயா, அவரு ஊரிலே இல்லை, மணிமுத்தாறு போயி அஞ்சி மாசமாச்சி, ஒரு தகவலையும் காணோம். மூணு வருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்த வச்சு உங்களுக்குத் தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய் கூலிவேலை செய்து இந்தக் கொளந்தைகளைக் காப்பாத்ரதே பெரிய காரியம்: உங்களுக்குத் தெரியாதா? என்றாள். இந்த மாதிரியான வசனங்களை பலர் சொல்லிக் கேட்டவன் அவன்.

தலையாரின் இரக்கமற்ற செயல்

ஒரு நாள் காலை தலையாரி நான்குபேருடன் வந்து வீட்டின் கதவை கழற்றினான். தலையில் நான்குபேரும் கதவைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அங்கிருந்த குழந்தைகள் இதை ஒரு ஊர்வலமாக நினைத்துக்கொண்டு ஒருவன் பிப்பீ…பீ…பீ என்று வாசிப்பன் போல் கைகளை நீட்டிக் கொண்டான். பின்பு திடும் திடும் தகிக்குண தகிக்குண என்று தவுல் வாசிப்பவனைப்போல் முழங்கினான். சீனிவாசனும் இதில் பங்கெடுத்துக் கொண்டான்.இப்படி உற்சாகமாக குழந்தைகள் கதவைத் தூக்கிக் கொண்டு சென்றவாகளின் பின்னே ஊர்வலம் புறப்பட்டார்கள்.அவர்கள் வீட்டிற்குத் திரும்பிவரும்போது லட்சுமி வாசல் படியில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள்.உடனே எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்கள்.லட்சுமியும் சீனிவாசனும் ஒருவருக்கொருவர் வெகுநேரம் பேசவில்லை.

குழந்தையின் இறப்பு

கைக்குழந்தையின அழும் குரல் கேட்கவே இருவரும் உள்ளே சென்று பார்த்தனர். சீனிவாசன் குழந்தையைத் தொட்டதும் கையைப் பின்னுக்கு இழுத்தான்.பாப்பாவைத் தொட்டுப்பாரு அக்கா உடம்பு சுடுது என்றான்.லட்சுமி தொட்டுப் பார்த்தாள் அனலாகத் தகித்தது. சாயந்திரம் விறகு சுள்ளிகளுடன் வந்த அம்மாவின் கையில் தேள் கொட்டி இருந்ததால் வலி முகத்தில் தோன்ற குழந்தையை வாங்கினாள். உடம்பு சுடுகிறதே? என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள். இதற்குள் குழந்தைகள் தலையாரி கதவைக் கழற்றிக் கொண்டு போன சேதியைக் கூறினார்கள். கேட்டதும் ரங்கம்மாவுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. குழந்தைகளுக்கு முன் அழக்கூடாது என்று அடக்கினாலும் முடியவில்லை. என்னை பெத்த தாயே என்று அலறிவிட்டாள். மணிமுத்தாறிலிருந்து ஒரு தகவலும் இல்லை. கார்த்திகை மாசத்து வாடை விஷக் காற்றைப்போல் வீட்டினுள் அலை மோதிக்கொண்டு கைக்குழந்தையின் உயிரை எடுத்துச் சென்றது. ரங்கம்மா மற்ற இருகுழந்தைகளுக்காக உயிர் தரித்திருந்தாள். சீனிவாசன் இப்பொழுது பள்ளிக்கூடம் போகிறான். லட்சுமி இயற்கை உபாதை கழிக்க வெளியில் சென்றிருந்தாள். திரும்பி வருவதற்குள் வீட்டிலிருந்த கஞ்சியை நாய் வந்து குடித்து விட்டுச் சென்றது.அம்மா காட்டிலிருந்து பசியோடு வருவாளே என்று நினைத்து அவள் உருகினாள்.



கதவைக் கண்ட மகிழ்ச்சி

ஒரு நாள் சீனிவாசன் முகத்தில் ஆவல் துடிக்க ஓடி வந்து அக்கா பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலே இருக்கிற சாவடியில நம்ம கதவு இருக்கக்கா! நான் பாத்தேன் என்றான். இருவரும் சாவடி நோக்கி ஓடினார்கள்.அதே கதவு சாத்தப்பட்டு இருந்தது. அதில் பற்றி இருந்த கரையான் மண்ணை லட்சுமி தன் பாவாடையால் தட்டித் துடைத்தாள். கதவோடு தன் முகத்தை ஒட்டவைத்துக் கொண்டாள். அழவேண்டும் போல் இருந்தது அவளுக்கு. சீனிவாசனைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். முத்தமிட்டாள். சிரித்தாள். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. சீனிவாசனும் லட்சுமியைப் பார்த்துச் சிரித்தான். அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றி இருந்தன.

வட்டார வழக்கு


எழுத்து வழக்கினை விடவும் பேச்சு வழக்கு வாசகர்களைக் கதையுடன் ஒன்றிடச் செய்யும்.அந்த வகையில் இக்கதை முழுவதும் பேச்சு வழக்காக அமைத்திருக்கும் கி.ரா.அவர்கள் வாசகர்களைக் கதையின்வசம் ஆக்கியுள்ளார் என்பது புலனாகிறது. **திருநெவேலி, வந்தாச்சு, சொல்லேன், பாத்துக்கிட்டு கொடுத்துர்றேன், கம்மஞ்சோறு கொண்டார், சாயந்திரம், மூணு வருஷம், கொளந்தைக** போன்ற வட்டார வழக்குச் சொற்கள் கதை முழுவதும் இடம்பெறுகின்றன. இச்சொற்கள் வட்டார வாசனையை நுகர நமக்கு வாய்ப்பளிக்கின்றன.

பாத்திரப்படைப்பு

இக்கதையில் லட்சுமி, சீனிவாசன், பக்கத்து வீட்டுக் குழந்தைகள், கைக்குழந்தை, தலையாரி, ரங்கம்மா, ரங்கம்மாவின் கணவன் என்று பல பாத்திரங்களை ஆசிரியர் படைத்துள்ளார். இதில் **சீனிவாசனும் லட்சுமியும் முதன்மைப் பாத்திரங்களாக கதை முழுதும் பயணிக்கின்றனர். அவர்கள் பயணிக்கும் வாகனமாக கதவு என்னும் பாத்திரமே கட்டாய பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளது**

கதைக்கரு

சிறுகதைகள் ஏதேனும் ஒரு மையகருத்தைக் கொண்டிருப்பது சிறப்பிற்குரியது. அந்த வகையில் கதவு என்னும் சிறுகதை வறுமையில் வாடக்கூடிய ஒரு ஏழைகளின் பாதுகாப்பற்ற நிலையை உணர்த்துகிறது. கருப்பு பணம் வைத்திருப்பவர்களும் பணம் இருந்தும் வரிகட்டாமல் வரி ஏய்ப்பு செய்பவர்களும் நிம்மதியாக வாழ்கிறார்கள். **இல்லாத காரணத்தால் ஏழைகளுக்கு நிகழும் அவலத்தைக் இக்கதையின் கருவாக கொள்ளலாம்**.



நிறைவாக

கஞ்சிக்கே வழியில்லாத மக்களிடம் தீர்வை செலுத்தும்படி தொந்தரவு செய்து வீட்டின் பாதுகாப்பு அரணாக விளங்கும் கதவைத் தூக்கிச் செல்லும் ஒரு கூட்டத்தையும் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால் அக்குடும்பத்தில் உள்ள கைக்குழந்தையின் உயிர் பரிபோகிறது. சமூகத்தில் நிலவிய இந்நிலை கொஞ்சமாவது மாற வேண்டும் என்பதற்காகத்தான் கி.ரா.அவர்கள் சமூகப்பார்வையோடு இக்கதையைப் படைத்துள்ளார். கதவைப் பாாத்தவுடன் சீனிவாசனும் லட்சுமியும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தார்கள். ஆனால் இக்கதையைப் படிக்கும் வாசகர்களின் கண்கள் மதகு உடைத்துக்கொண்டு வரும் கண்ணீர் வெள்ளத்தால் நிரம்பும் என்பதை உணர முடிகிறது.

****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி இராஜநாராயணின் படைப்புகளில் பன்முகப்பார்வை

முனைவர் து ஹேமலதா





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை


தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் த ஹேமலதா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறைத் தலைவர்
இதயா மகளிர் கல்லூரி
கும்பகோணம் – 612 001
lathaguru1976@gmail.com
Cellphone:9486310949

கி இராஜநாராயணின் படைப்புகளில் பன்முகப்பார்வை

தற்கால இலக்கிய வகைகள் தனக்கென்று தனித்துவம் கொண்டு விளங்குவது 19 ஆம் நூற்றாண்டு ஆண்டு இலக்கியங்கள். எண்ணற்ற படைப்பாசிரியரின் படைப்புகள் காலத்தைக் கடந்து வென்று நிற்கின்றன. அந்த வகையில் கி இராஜநாராயணனின் படைப்புலகம், புதினங்கள், சிறுகதைகள், ஆகிய அவரது படைப்புகள் இன்றும் அவர் பெருமை பேசும் படைப்புகளாக உள்ளன. அவரது படைப்புகளில் உலகத்தின் அனைத்து ஆசைகள், ஏக்கங்கள் முதலான உணர்வுகளை எளிமையாக வெளிப்படுத்தியவர்.

சிறுகதை வளர்ச்சி



தமிழில் சிறுகதை அமைப்பு வ.வே.சு ஐயரால் புதுவடிவம் பெற்றது.ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான் என்று தொடங்கி தொடராகவும் விரித்துரையாகவும் எழுதி வந்த வழக்கிலிருந்து விலகிக் கதையின் நடுப்பகுதியிலிருந்து ஒரு நிகழ்ச்சியை எடுத்துக் கதையின் தொடக்கத்தில் அமைந்து கதை மாந்தரை எதிர்பாராத நிலையில் அறிமுகப்படுத்தும் உத்தியைத் தொடங்கி வைத்தவர் வவேசு ஐயர்

"சிறுகதை என்பது அது எவ்வாறிக்கவேண்டும் என்று எழுத்தாளன் உறுதிசெய்யும் எந்தவொரு படைப்பாகவும் இருக்கலாம்"

என்னும் அறிஞர் கூற்றும் "சிறுகதை என்பது எளிமையான அல்லது எளிமையாக விளங்க வேண்டிய ஒரு படைப்பாகும். சிறுகதை என்னும் பெயர் கதையின் எல்லைக்கருதி அமைந்தது ஆகும்" தொடக்கம் வளர்ச்சி சிக்கல் உச்சக்கட்டம் முடிவு என்றும் ஐந்து கூறுகளை சிறுகதை கொண்டிருக்கும் மிகுதியும் இரண்டு மணிநேரத்திற்கு மேல் கதை நீளக்கூடாது குதிரைப்பந்தையத்தின் தொடக்கம் முடிவுபோல் கூர்மை கொண்டிருக்க வேண்டும்"2

கதைச்சொல்லும் வல்லமை

கி இராஜநாரயாணன் ஒரு கதைசொல்லியாக உருவெடுத்தற்கு அவரது மனைவி கணவதி அம்மாளின் பங்களிப்பு தான் என்று சொல்லவேண்டும். ஒருவர் கதை சொன்னால் அதை ஆர்வத்தோடு கேட்பதன் மூலம் அவரிடமிருந்து பெரும்பாலான கதைகளை பெறமுடியும். கதைகளை சொல்வது மட்டுமின்றி கதைகள் பற்றிய தனது கருத்தை பலவாறாக கதைகளிலும் கட்டுரைகளிலும் வெளிப்படுத்தியுள்ளார். தீராத கதைசொல்லியாக வாழ்ந்த

கி.ரா.வின் கதைகளில் எல்லாம் சொல்வளமும் பழமொழியும் நிறைந்திருப்பது போல தனது கதை பற்றி கி.ரா.வின் கருத்தையும் அவரது கதைகள் கூறியுள்ளார். ஒரே மாதிரியான கருத்தை மூன்று இடங்களில் வெவ்வேறு கோணத்தில் வேறுபட்ட வார்த்தைகளால் கூறியிருப்பார். கதைக்குள் கதை சொல்லும் பாணி வாசகர்களை கதையோடு இணைத்தால் மட்டும் அது எழுதப்பட்டதன் பயனை அடையமுடியும்.

நாட்டுப்புறவியலில் கி.ரா.வின் தாக்கம்

இவர் எழுதிய கதைகள் எல்லாம் அவர் வாய்மொழியாக கேட்டதுடான புனைவு. முதன் முதலில் நாட்டுப்புற கதைகளைத் தொகுக்கும் முயற்சியில் இறங்கிய கி.ராவின் தனிப்பட்ட கதைகளில் பெண்ணின் புலம்பலையும், பாடல்கள் நகைச்சுவையையும் சடங்குகளையும் கிராமங்களில் நிலவிய பேய் மற்றும் நாட்டார் தெய்வங்களின் கதைகளையும் மட்டும் சொல்லாமல் கிராமத்து மக்களின் வலியையும் உணர்வுகளையும் தாது வருடப் பஞ்சத்தின் போது நடந்த கொடூரமான சூழலையும் ஆங்கிலய எதிர்ப்பையும் சொல்லும் விதம் கதைகளில் இடம் பெற்றதால்தான் நாட்டுப்புறவியலின் தாக்கம் வரலாற்றோடு கி.ராவின் கதைகளை தொடர்புபடுத்துகிறது.



சூழலியல் நோக்கில் கி.ரா.வின் கதைகள்

ஒரு மனிதன் படைப்பாளியாக மாறுவதற்கு தனது சூழலை முதலில் உற்று நோக்குவது அவசியமான ஒன்றென நான் கருதுகிறேன். அந்த வகையில் கி.ரா தனது சூழலை நன்கு உற்றுநோக்கி கரிசல் வட்டார பகுதிகளில் வாழ்ந்த மக்களைப்பற்றி மட்டும் கதைகள் சொல்லாமல் அங்கு வாழ்ந்த மரங்கள், பழங்கள்,ஊரும் பிராணிகள், பறவைகள், விலங்குகள் முதலானவற்றையும் கதைகளில் சொல்லியுள்ளார். பனைமரம் என்பது தமிழகத்தின் பண்பாட்டுச் சின்னமாக இன்றளவும் திகழ்கிறது. பனையின் பயன்களை சில தற்கால படைப்புகள் தாங்கி நின்றாலும் கி.ராவின் புதினங்களும் சிறுகதைகளும் பனையைப் பற்றி பல தகவல்களை நமக்கு பகிர்கின்றன .கோபல்ல கிராமத்தில் வரும் நாயக்கர் விடலைப் பனையில் பல பொருள்களை செய்து அசத்துகிறார். குறிப்பாக ***கிடை*** குறுநாவல் ஆடுகளின் தன்மைகளை பலவாறாக பிரித்துத் தருகிறது. விவிலியத்தில் யாக்கோபு விரும்பிய வண்ணத்தில் குட்டிப் போட பல உத்திகளை பயன்படுத்தியதை வாசித்துள்ளேன். அதற்கு பின் அப்படிப்பட்ட ஆடுகள் ஒவ்வொன்றிற்குமான பெயர்கள் என்ன என்பதைச் சொல்வதாக உள்ளது. மலம் கழிப்பது குறித்த கிராமத்து மக்களின் புரிதல் கண்ணாடியாக சுற்றுப்புறம் சுகாதாரம் சிறுகதைளிலும் கோபல்ல கிராமம் புதினத்திலும் வெளிப்படுகிறது. இதுவும் சூழலியல் பார்வையில் அவை வேண்டிய ஒரு முக்கியமான கருதுகோள் ஆகும்.

அணிகலன்களும் ஒப்பனையும்

பாம்படம் தொறட்டி முதலான அணிகலன்கள் தமிழகம் முழுவதும் பல பகுதிகளில் இடம்பெற்றாலும் அவற்றை முதன்மைப்படுத்தி கதைகளில் கொண்டு வந்தவர் கி.ரா.

காதுவளத்தையும் பாம்படம் அணிந்திருப்பதையும் நான் சிறுவயதில் அதிகமாக பாரத்துள்ளேன். இப்போதும் அங்காங்கே ஓரிருவர் மட்டுமே பாம்படத்தைத் தொங்கப்போட்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. கம்மவார் என்ற சொல்லே அவர்கள் அணிந்திருந்த கம்மலில் இருந்து வந்ததாக கி.ரா குறிப்பிட்டுள்ளார். காதல் தோல்வியில் தாடி வளப்பது என்பது அன்று திருமணம் ஆகாதவர்கள் எல்லாம் சவரம் செய்யாமல் இருந்ததன் தொடர்ச்சி ஆகும்.

உணவு

கரிசல் வட்டார உணவுகளில் கருபட்டி முக்கியத்துவம் பெற்றத்தையும் கூழ் கஞ்சி முதலானவை முக்கிய இடம் வகித்தையும் கி.ரா.வின் கதைகளில் பார்க்க முடிகிறது. இவள் குறுநாவலில் உண்டு கெட்ட சாதி என்கிற பழமொழியும் பலவகை இனிப்புகளை உண்ணும் குடும்பத்தையும் இனிப்பு கசப்பு என உணவின் சுவை உணர்வில் ஏற்படுத்தும் மாற்றமும் பதிவாகி உள்ளது. பஞ்ச காலங்களில் கிழங்குகளை அகன்றெடுத்து உண்பதை நிலைநிறுத்தல் சிறுகதையில் கி.ரா சொல்லியிருக்கிறார்.

வெற்றிலை போடுவது மூக்குப்பொடி போடுவது முதலானவற்றை ரசனையோடு கோபல்லகிராமம் புதினத்திலும் ஒருவாய் மொழிக்கதை கதையிலும் கி.ரா வெளிப்படுத்தி இருக்கிறார்.



சாதிய பாகுபாடும் சுரண்டலுக்கெதிரான குரலும்

கி.ரா தனது கதைகளில் தனது சாதியை மட்டுமே முதன்மை படுத்திய சாதிய எழுத்தாளர்; தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வை கி.ரா பேசவில்லை என்றும் அவர்மீது விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. ஆனால் இதுவரை புதினங்கள் பேசத்தவறிய கம்மாளர்களை கோபல்லகிராமம் புதினத்திலும் நாற்காலி சிறுகதையிலும் கி.ரா பேசியுள்ளார். கம்மாளப் பெண்ணை முக்கிய கதாபாத்திரமாகக் கொண்டதாக கோபல்ல கிராமம் உள்ளது. அதே போல் பொன்வேலை செய்யும் ஆசாரிகள் மரவேலை செய்யும் ஆசாரிகள் கி.ரா வின் கதைகளில வந்து போகின்றனர். பாம்படம், கலம்பை, கழுமரம், நாற்காலி என ஆசாரியர்களைப் பேசிய கி.ரா கோபல்ல கிராமத்தில் நாயக்கர் வர்ணம் என்ன என்று பூணூலைப் பார்த்து கேட்டதில் சாதியம் முக்கியத்துவம் பெற்றிருந்ததை உறுதிப்படுத்துறார்.

கரிசல் காட்டு சம்சாரி சிறுகதையில் வரக்கூடிய நாயக்கர் தொடக்கூடிய சாதியாக இருந்தால் தொட்டு பேசுவார் என்கிற வாக்கியம் இடம்பெற்றுள்ளது. கோபல்லகிராமம் புதினத்தில் பஞ்சாயத்தில் இருக்கும் ஒரு நாயக்கர் சிறந்த வைத்தியர் எனச் சொல்லும் போது தீண்டத்தக்கதாக சாதிக்க வைத்தியம் பார்க்க நாடிப் பிடிக்கும்போது ஒரு பட்டுத்துணியைக் கையில் போட்டு தொடாமல் நாடிப்பார்ப்பதாக எழுதப்பட்டிருக்கும். இந்த இரண்டும் தீண்டாமை வலுப்பெற்று நின்றதை சொல்லும் சான்றுகளே ஆகும்.

பஞ்சாயத்து முறைகள்


கிராமங்களில் பஞ்சாயத்து நடைபெறும் தகல்களும் கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள், கிடை முதலான படைப்புகளில் வெளிப்படுகின்றன. கோபல்லபுரத்து மக்கள் புதினத்தில் பகடை மக்களின் பஞ்சாயத்து முறைகளைப் பேசும் போது வாதி பிரதிவாதி இருவரும் கள்ளை பஞ்சாயத்தினருக்கு ஓரவஞ்சனை இல்லாமல் முழுப்போதை அடைய கொடுத்து பஞ்சாயத்தை விசாரிப்பதும் அவ்வாறு போதையில் இருக்கும் போது வண்மையை மட்டுமே பேசுவதாகவும் கி.ரா குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

கி.ரா வின் படைப்புகளை ஏனைய எழுத்தாளர்ளின் படைப்புகளோடும், கதை அமைப்பையும் கதாபாத்திரங்களையும் ஒப்பிடுவதோடு, திரைப்படங்களோடும் கி. ரா வின் படைப்புகளை ஒப்பீட்டு அதை இந்தப் பகுதியில் அறியமுடிகின்றது. கி.ராவின் படைப்புகளை படித்தால் மட்டுமே அவருடைய உணர்வுகளை அறியமுடியும்

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ரா. கையாண்ட படைப்புலக உத்திகள்

முனைவர் திருமதி இரா கவிதா





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் திருமதி இரா கவிதா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
அடையாளம்பட்டு, வளாகம் II
சென்னை – 600 095

கி.ரா. கையாண்ட படைப்புலக உத்திகள்

முன்னுரை

கி.ரா (1922 - 2021) என்று அன்புடன் அழைக்கப்பட்ட, மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்த கி.ராஜநாராயணன் கரிசல்காடு தந்த முதுபெரும் தமிழ் எழுத்தாளர். கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள் என்ற முக்கியமான நாவல்களைத் தந்தவர். நாட்டுப்புறக் கதைகளஞ்சியம் என்ற கதைகளை 944 பக்க நூலாக எமக்கு அளித்தவர். கிராமத்தில் புழங்கும் பாலியல் கதைகளை துணிந்து தன் ஆக்கங்களில் படைத்தவர். வட்டார வழக்கில் தன் கதைகளை சொல்லியவர். 1991-ல் சாகித்திய விருது பெற்றவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தினராக இருந்தவர். 1947 – 1951ல் விவசாயிகள் கலகத்தை ஆதரித்ததற்காகவும் அதில் பங்கு ஆற்றியதற்காகவும் இரண்டு முறை சிறை சென்றவர். அவருடைய **'கிடை'** சிறுகதை **'ஒருத்தி'** என்ற பெயரில் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது. கி.ரா.வின் படைப்புகள் எண்ணிலடங்காதவை. அவர் சிறுகதை மற்றும் நாவல்களில் கையாண்ட உத்திகளை பற்றி இக்கட்டுரையில் காணலாம்.



கி.ரா. வின் தனித்தன்மை

கி.ரா. விவசாயிகளின் போராட்டத்தில் கலந்து கொண்டு, விவசாயிகளின் நிலையை நன்கு உணர்ந்து கிராம மக்களின் வாழ்க்கையை பொருளாகக் கொண்டு நாவல்களைப் படைத்துள்ளார். மேலும் பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் வாழ்க்கையை குறியீடாக்கி மனிதர்களின் மனநிலையை விளக்கியுள்ளார். சங்க இலக்கியம் இயற்கையோடு இயைந்த மக்கள் வாழ்க்கையைச் சித்தரிப்பதைப் போல, உரைநடை இலக்கியத்தில் இயற்கையோடு இரண்டறக் கலந்த கிராம மக்களின் வாழ்க்கையை ஆழ்ந்து நோக்குவதே இவரின் சிறப்பாகும்.

வாழ்வியல் முறைகள்

விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் மக்களின் வாழ்வியல் முறை எப்படி இருந்தது என்பதை கி.ரா. அவர்களின் **'கோபல்லபுரத்து மக்கள்'** நாவல் மூலம் அறிந்து கொள்ளலாம். இல்லத்தில் அவர்கள் கடைப்பிடித்த பழக்கவழக்கங்களையும், சமுதாயத்தில் நிலவிய கல்வி முறைகளையும் ஒரு சில உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தலாம்.

அக்காலச் சமுதாயத்தில் காணப்பட்ட பழக்கவழக்கங்கள் நாவலில் இடம் பெற்றுள்ளன. தானம் பல வகைப்படும் அவற்றில் நெருப்பு தானமும் ஒன்று. நெருப்பைப் பாதுகாத்து வைத்து இல்லாதவர்கள் வந்து கேட்கும் போது சிறிது கொடுப்பது ரேணம்மாவின் வேலையாக இருந்தது.

வைகறையில் துயிலெழுவதையே பெருமையாகக் கருதினர். பொழுது விடிந்து எழுந்தால் அவமானாக கருதினார்கள் அக்கால மக்கள்.

கி.ரா. வெளிப்படுத்தும் சமுதாயச் சிந்தனை

கி.ரா. விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் இருந்த இந்தியாவின் நிலையையும் விடுதலைப் போராட்டத்தின் போது இந்திய நாட்டின் நிலையையும் அப்பொழுது நிலவிய சமுதாயப் பிரச்சனைகளையும் பல கதாபாத்திரங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். கழுகு மலை ஐயர், "நாடு அந்நியனிடம் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. மக்களின் பசியும், ஏழ்மையும் ஒழிய வேண்டும் என்றால் மிக விரைவில் நாடு சுதந்திரம் அடைந்து ஆக வேண்டும்" என்று சுட்டிக் காட்டுகிறார். இதனால் "கரிசல் காட்டில் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் கோபல்லபுரத்து மக்களின் மனதில் இந்திய நாட்டின் சுதந்திரப் போராட்டக் கனல் ஒன்று தெறித்து வந்து விழுந்து மெல்ல கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது' என்று விடுதலைக்குப் முற்பட்ட பிற்பட்ட மக்களின் நிலையைச் சித்தரித்துள்ளார் கி.ரா.

கி.ரா வின் புதின உத்தி

கி.ரா.வின் நாவலில் கையாளும் எழுத்து நடை, வர்ணனை, சொல்லாட்சி, பழமொழி, உவமை, நாட்டுப்புறப் பாடல் ஆகியவற்றில் ஒரு சில உதாரணங்களை இங்கு காணலாம். கரிசல் காட்டு மக்களின வாழ்க்கை முறை, பேச்சு வழக்கு எல்லாம் இவருடைய கதை நடப்பில் எளிமையையும் அழகையும் கூட்டுகின்றன. மேலும் இவர் நடையில் இடையிடையே நகைச்சுவை இழையோடுகிறது.

வர்ணனை

"கொடியில் காயப் போட்டியிருந்த சேலையை எடுப்பது போல மஞ்சள் வெயிலை உருவி எடுத்துக் கொண்டு மேகலைக்குள் இறங்கினாள் சூரியதேவி" என அழகான புதிய வர்ணனையோடு "கோபல்லபுரத்து மக்கள்" என்ற நாவல் தொடங்குகிறது.

ஊருக்கு இரயில் வந்த முதல் நாள் அன்று ஊரே திரண்டு போய்ப் பார்த்தது.

> **"ஜிகு ஜிகு ஜிகு ண்ணு ஓசையு ஒலியு**
> **மொலியுமோ நெருப்பும் பொகையும்**
> **கத்துக்கிட்டு பொசல்க்காத்து எறைஞ்சி**
> **வார மாதரி வருது! பாத்துக் கிட்டிருந்த வங்களுக்**
> **கெல்லாம் என்ன செய்யிறதுண்ணுட்டுத்**
> **அப்படியே....... நெடுஞ்சாங்கெடயா! விழுந்து**
> **கும்பிட்டதைப் பார்க்கணு மெ கூட்டமெல்லாம்"**

என்று இரயில் வண்டியை முதலில் பார்த்த மனிதர் நிலை வருணிக்கப்பட்டுள்ளது. ஆற்றில் புது வெள்ளம் வரும் போது விழுந்து வணங்குவது தமிழ் மரபு. அந்த மரபுப் படி இரயிலையும் வணங்கினார்கள் போலும்.

சொல்லாட்சி

தேயிலைச் சுவைத்து,அனுபித்ததைப் பற்றிப் பின்வரும் சொல்லாட்சி விளக்குகிறது.

“தூக்கம் வராம இருக்க இப்ப என்னவோ ஒரு இலை வந்திருக்காமே? என்று கேட்டாள் சொள்ளமுத்து.

“ஆமடப்ப, அதக்கேக்கிய. அது ஒரு கதை!

ஒரு நா ரவப் பொழுதில் ராச்சாப்பாடு முடிச்சி படுக்கப் போறதுக்கு முன்னாடி அந்தப்படி கருப்பட்டி தேயிலையப் போட்டுக் கொதிக்க விட்டு நல்ல பாலை ஊற்றிக் குடிச்சிப் பார்த்தாங்களாம். குடிக்கிறதுக்கு அம்புட்டு ருசியா இருக்காம். ஆளுக்கு ரண்டு, மூணு போகணிண்ணு குடிச்சிட்டு கொஞ்ச நேரம் பேசிட்டுப் படுத்தங்களாம். தூக்கம் வரலையாம். பிறகு தூக்கம் வராம விடிய விடிய முழிச்சி இருந்து பொழுது விடிஞ்சிடுச்சி. அன்னைக்கு பெட்டியில் வச்சி மூடுனது தான்னுட்டுச் சொல்லி கொஞ்சம் நீங்களும் சாப்பிட்டுப் பாக்கிகளா மாப்ளென்ன கேட்டுச் சிரிச்சாரு சம்மந்தகாரரு! இவ்வாறு வட்டார வழக்கு இந்நாவலில் பல இடங்களில் கி.ரா. வின் சொல்லாட்சியைக் காணலாம்.

நாட்டுப்புறப்பாடல்

மக்களின பேச்சு வழக்கில் காணப்படும் நாட்டுப்புறப் பாடல்களும் இந்நாவலில் இடம் பெற்றுள்ளன. நெல்லுச் சோறு என்பது இந்த மக்களின் கனவாக இருந்தது. சாமிக்கண்ணு இதைக்கண்டு, நினைத்து நினைத்து அதிசயப்பட்டார். ஏனெனில் நெல்லுச்சோறு சாப்பிடுவதற்கு ஒரே நபர் கலியாண வீட்டுப் பந்தியில் மாறி மாறி திரும்பவும் உட்கார்ந்து சாப்பிட்டதை இங்கே தான் பார்த்தேன் என்ற சொல்லுவார்.

நெல்லுச் சோற்றைப் பற்றி மக்கள் பாடுகிற நாடோடிப் பாடல்களைக் கேட்டு யோசித்தார்.

> **“நித்தம் நித்தம் நெல்லுச் சோறு நெய் மணக்கும்**
> **கத்தரிக்காய்…..”**

இப்பாடல் நெல்லுச் சோற்றைப் பற்றியும், சுவையான கத்தரிக்காய் குழம்பைப் பற்றியும் கூறுகிறது.

பழமொழிகள்

வாய்மொழி இலக்கியமாக இருந்த பழமொழி நாட்டுப்புற இலக்கியம் என்ற பெருமை பெற்றது. மக்களின் அன்றாட வாழ்க்கையில் பழமொழி இரண்டறக் கலந்துள்ளது. மாடுகள் பழகிய இடத்தில் தான் புல் மேய விரும்பும். புதிய இடத்தை விரும்புவதில்லை என்பதை,

மாடு மேய்ந்த இடம்
மழை பேய்ந்த இடம்

என்ற பழமொழி விளக்குகிறது.

‘உருக்குத்தி (அம்மை ஊசி) குத்துனயோ
உருக் குலைஞ்சி போனயோ’

அம்மை குத்தின குழந்தையின் அழகு உருக்குலைந்து போகும் என்ற அர்த்தத்தில் இந்தப் பழமொழி மக்களின் அறியாமையைக் காட்டுகிறது என பல பழமொழிகளை கி.ரா. ஆங்காங்கே எடுத்தாண்டுள்ளார்.

உவமைகள்

கி.ரா. கையாண்ட உவமைகளில் ஒன்று. தேசம் பரிபூரண சுதந்திரம் அடைந்தவுடன், இந்த ஒட்டுண்ணி வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு ஒரு முடிவு காலம் வந்து விடும் என்றார் அம்மைய்யா. இல்லை, நீ சொல்றது தவறு. தேசம் சுதந்திரம் அடைவது என்பது நாம் சட்டிக்குப் பயந்து நெருப்பில் விழுந்த கதையாத்தானிருக்கும் என்றான் சாமி நாயக்கர்.

பின்வரும் உவமை உடல் நிலைப் பற்றி விளக்குகிறகு எந்த உடம்பும் ஆரோக்யமாக இருந்தால் பசிக்கிறதும் தூங்குகிறதும் முழிப்புத் தட்டுகிறதும், சொல்லி வச்சது போல ஒரு ஒழுங்காகச் சுழலுகிற சக்கரம் மாதிரி நேரம் தவறமால் நடக்கும்’’. உடல் நலமாக இருந்தால் பசிக்கிறதும், தூங்கிறதும் சரியான நேரத்தில் நடக்கும் என்பதை இவ்வுவமை சுட்டுகிறது. இதே போல் பல உவமைகள் ‘கோபல்ல புரத்து மக்கள்’ என நாவலில் இடம் பெற்றுள்ளன.

முடிவுரை:

கி.ராஜநாராயணன் தன்னுடைய சுற்றுப்புற மக்களின் வாழ்க்கை நிலைகளை அதற்குரிய சூழலில் இயல்பாகவும், கலைத் தன்மையுடனும் பதிவு செய்து ஒரு சிறப்பான பங்களிப்பைத் தமிழ் நாவல் இலக்கியத்திற்கு வழங்கியிருக்கிறார். இயற்கையோடு இரண்டறக் கலந்த கிராம மக்களின் வாழ்க்கையைக் கூறி பல்வேறு உத்திகளை தன்னுடைய சிறுகதைகள் மற்றும் புதினங்களில் கையாள்வது இவரின் தனிச் சிறப்பாகும்.

முதன்மை தரவு நூல்கள்

1. ராஜநாராயணன். கி. 1991 (1976), கோபல்ல கிராமம், அன்னம்: வெளியீடு.
2. ராஜநாராயணன். கி. 1993 (1990), கோபல்லபுரத்து மக்கள், சிவகங்கை: செல்மா வெளியீடு

****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ராஜநாராயணன் படைப்புகளில் காணலாகும் கரிசல் வரலாற்றுச் செய்திகள்

முனைவர் சு சதீஸ்குமார்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் சு சதீஸ்குமார்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 600 095

கி ராஜநாராயணன் படைப்புகளில் காணலாகும் கரிசல் வரலாற்றுச் செய்திகள்

முன்னுரை

தமிழிலக்கிய வரலாற்றில் கி. ராஜநாராயணன் அவர்கள் "கரிசல் இலக்கியத்தின் தந்தை" என அழைக்கப்படுபவர். கரிசல் நில மக்களின் வாழ்வியலை, அப்பகுதி வாழ் மக்களின் வட்டார வழக்குச் சொற்கள் கொண்டே வெளிப்படுத்துவதாக இவரது படைப்புகள் உள்ளன.

நவாபுகளும் கம்பெனிக்குமாக அரசியல் அதிகாரம் கைமாறிக் கொண்டிருந்த காலத்தில் கி. ராஜநாராயணன் அவர்கள், சிறு வயதாக இருந்தபொழுது நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியைக் கற்பனையிலும் நாட்டார் மரபுக்கதைகளிலும் சேர்த்து கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள் என்னும் புதின நூல்களைப் படைத்துள்ளார். அப்புதினங்களில் வெளிப்படும் வரலாற்றுச் செய்திகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.



நீதி

நீதி என்பது சகலருக்கும் சமமானதாக இருக்க வேண்டும். அப்படி நீதி வழங்கும் சான்றோர்கள் துலாக்கோல் போல் நடுநிலையுடன் இருக்க வேண்டும். இதனை,

> **"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
> **கோடாமை சான்றோர்க்கு அணி"**

என்கிறது திருக்குறள்.

கிராமப்புறங்களில் வாழும் மக்கள் தங்களுக்கு எழும் பிரச்சனை களைப் பெரும்பாலும் தங்கள் கிராமங்களில் வாழும் நடுநிலையுடன் இருக்கும் பெரியோர்களிடம் சொல்லித் தீர்த்துக் கொள்கிறார்கள். தற்காலத்தில் உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என்று வேறுபாடுகள் இருப்பதைப்போல் பண்டைய காலங்களிலும் குடும்பம்சார் பிரச்சனை களை விசாரிப்பதற்கு ஓர் இடமும், பொதுவான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஓர் இடமும் இருந்தன என்பதைக் கி.ரா, கிராமத்தில் உருவாகும் வழக்குகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

(1) ஊர்ப்பொது கூடித்தீர்க்கும் வழக்குகள்.
(2) தனிநபர் செல்வாக்கின் கீழ் விசாரணைக்கு வரும் வழக்குகள்.

தரகு, மகிமை, காவல், அழிம்பு, நில ஆக்கிரமிப்பு, ஜாதீயத் தகராறு, பொலிக்கல்லை நகட்டுதல், தீவைப்பு, தொள்ளாளித் தலைக்கட்டுத் தகராறு இன்னும் இந்த மாதிரியான பொது விவகாரங்களெல்லாம் ஊர்ப் பொதுச்சபை கூடித்தான் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும்.

"குடும்பங்களுக்குள் ஏற்படும் உள்தகராறுகளான தாயாதிச் சண்டை, கணவன் - மனைவி தகராறு. வயசாளிகளுக்கான அன்னவஸ்திரம், பாகப்பிரிவினை, சீதனத்தகராறு இந்த மாதிரியான விவகாரங்கள்தான் தனிநபர் செல்வாக்குள்ளவர்களிடம் வரும். இவைகளில் சிக்கல் மிகுந்த வழக்குகள் சில சமயம் வந்துவிட்டால் நாள் கணக்கு, மாசக்கணக்கு என்றாகிவிடும் தீர்த்துவைக்க. ஏனெனில், காலமே இவைகளுக்கான அருமருந்து. ஒரு நீதிபதியால் தீர்த்து வைக்கமுடியாத விவகாரத்தை காலம் சரியாக்கிவிடுவதும் உண்டு" (கோபல்ல கிராமம் ப,18) என்று குறிப்பிடுவது கொண்டு அறியலாம்.

இதன்வழி பொதுப் பிரச்சனைகளுக்குப் பொது மக்களால் உடனே தீர்வு காணப்பட்டது என்பதையும், குடும்பப் பிரச்சனைகளுக்கு பெரும்பாலும் காலம் தாழ்த்தியே தீர்வுகள் எடுக்கப்பட்டன என்பதையும் அறியமுடிகிறது. அதையும் காலமே வழங்கும் என்பது கி.ரா வின் கருத்து.



பிற மாநிலத்தில் இருந்து தமிழகத்தில் குடியேறியவர்கள்

பண்டைய காலம் முதல் மக்களின் வாழ்க்கை நாடோடி வாழ்க்கையாகவே இருந்துள்ளது. அதில் ஆந்திராவில் இருந்து கம்மவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தவர்கள் என்று ஒரு வரலாற்றுச் செய்தி உண்டு. ஆனால், கி.ராஜநாராயணன் அவர்கள் கோபல்ல கிராமம் என்னும் நாவலில் அவர்கள் மட்டுமில்லை பிற ஜாதிக்காரர்களும் ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து வந்துள்ளனர் என்பதை,

"ஆந்திர தேசத்திலிருந்து கம்மவர் மட்டும் இங்கு வரவில்லை ரெட்டியார், கம்பளத்தார், செட்டியார், பிராமணர், பொற்கொல்லர், சக்கிலியர் இப்படி எத்தனையோ " (கோபல்ல கிராமம் ப. 40) என்கிறார்.

மக்கள் தங்கள் வாழ்வியலை நிலைநிறுத்துவதற்காகவும் பொருளாதாரத் தேவைகளுக்காகவும் ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குச் சென்றுள்ளனர் என்பது வெளிப்படுகிறது. இன்றும் மேற்கண்ட சாதியினர் கரிசல் பகுதியில் வசிக்கிறார்கள். அவர்கள் தெலுங்கு பேசுகிறார்கள். மேலும், தற்காலத்தில் தமிழகம் முழுவதும் கம்மவர் இன மக்கள் இருந்தாலும் அவர்களின் உறவினர்கள் கரிசல் பகுதியில் வசிக்கிறார்கள். இதன்மூலம் கரிசல் பகுதியிலிருந்தே இவர்கள் தமிழகம் முழுவதும் பரவியிருக்கிறார்கள் என்று தெளியலாம்.

பண்டமாற்றுமுறை

பண்டமாற்றுமுறை பண்டைய காலத்திலிருந்து வழக்கத்தில் இருந்த ஒன்றாகும். நெல்லுக்கு உப்பும், உப்புக்கு நெல்லும் என பண்டமாற்று முறை செய்ததை சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பண்டமாற்று முறையை கி.ராஜநாராயணன் அவர்கள் கோபால கிராமத்தில் வாழ்ந்த மக்கள் பருத்தி பெற்றுக்கொண்டு அதற்கு மாற்றாக பருத்தி விதையைக் கொடுத்தனர் என்பதை,

"கோபல்ல கிராமத்தில் அநேகமாக வீடு தவறாமல் இந்தக் கைமனையும் நூல் நூற்க சிறகுராட்டும் உண்டு. பெரியசம்சாரிகளின் காடுகளில் விளையும் அதிகமான பருத்தியை அவர்கள் தாங்களாகவே தங்கள் கைமனைகளில் கொட்டை நீக்க முடிவதில்லை. அந்தக் காரியத்தை பங்காரு நாயக்கர் செய்து தருகிறார். உழவு காளைகளுக்கும் பால் பசுக்களுக்கும் மற்ற சினை கால்நடைகளுக்கும் தாராளமாகப் பருத்திவிதை வைத்த காலம் அது. ஒரு பொதி பருத்தியைப் பெற்றுக்கொண்டு ஈடாக மூன்று பொதி பருத்தி விதையைக் கொடுப்பார் அவர்." (கோபல்ல கிராமம் ப. 117) என்று பதிவு செய்துள்ளமையால் அறியப்படுகிறது. கிராமப்புறத்தில் வாழும் மக்கள் பெரும்பாலும் தங்கள் வாழ்வாதாரத்திற்காகப் பசுமாடுகளைப் பயன்படுத்தினர் என்பதையும் ஊடே உணரமுடிகிறது.



நாடோடிப் பாடல்கள்

கி.ரா அவர்கள் கரிசல் பகுதி மக்களின் வாழ்வியலைப் படம்பிடிக்கும் போது அங்கு வழங்கும் நாடோடிப்பாடல்களையும் படம்பிடித்துக் காட்டியுள்ளார். அதை, ”கிராமத்து ஜனங்கள் வெள்ளைக்காரன்கள் மீது பல நாடோடி ஏசல் பாடல்கள் இயற்றிப் பாடினார்கள்.

ஐசக்கை ஐ
அரைப்படி நெய்
வெள்ளைக்காரன் தொப்பியிலே
விளக்குப் பொருத்தி வை
வாராண்டா வாராண்டா
வெள்ளைக்காரன்
வரட்டும் தாயோளி
தொப்பிக்காரன்” (கோபல்ல கிராமம் ப. 161)


என்ற பாடலின் மூலம் அறியலாம். அப்படிப் பதிவு செய்யும்போது மக்கள் பேசிய மொழியை அப்படியே பதிவு செய்யும் நேர்மையும் வெளிப்படைத் தன்மையும் கி. ரா அவர்களின் வழி வெளிப்படுகிறது.

ராணி மங்கம்மாள் சாலை வரலாறு

கி.ரா அவர்கள் ஒரு சாலை உருவான வரலாற்றைப் பின்வருமாறு விளக்குகிறார். அதில் அவரின் சூழலைக் காட்சிப்படுத்தும் திறன் வெளிப்படுகிறது.

"மங்கம்மா சாலை எப்படி வந்தது என்பதற்கு ஜனங்கள் ஒரு கதை சொல்லுவார்கள். ஒருநாள், ஆலோசனை மண்டபத்தில் முக்கியமானவர்களோடு ராணி மங்கம்மா ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தாளாம். அவளுக்கு எதிரே தாம்பூலப் பெட்டி இருந்தது. வழக்கமாக வெற்றிலை மடித்துக்கொடுக்கும் பணியாள் பக்கத்தில் இல்லை. முக்கியமான அரசாங்க ஆலோசனைகளின்போது பணியாட்கள் அருகாமையில் இருப்பது வழக்கம் இல்லை. ராணியின் கையில், வலதுகைப் பெருவிரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடதுகை பெருவிரலுக்கும் அதன் ஆள் காட்டிவிரலுக்கும் ஆக நாலு விரல்களுக்கும் ஊடே ஒரு பாக்கு. யோசனையில் உருண்டுகொண்டே இருந்தது. ராணி, அவர்கள் ஒவ்வொருவர் சொல்லுவதையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள். இடது கையினால் பாக்கை வாய்க்குள் போட்டதும் அங்கே கூடியிருந்தவர்களைப் போலவே ராணியும் திடுக்கிட்டாள். பாக்கை இடது கையினால் போட்டுக்கொண்டதுக்குப் பரிகாரமாகத்தான் ராணி மங்கம்மாள் இந்தச் சாலையைப் போட்டாளாம" (கோபல்ல கிராமம் ப. 174,175) என்ற பதிவிலிருந்து சாலை தோன்றிய வரலாறு மற்றும் அக்கால நம்பிக்கை ஆகியன வெளிப்படுகின்றன.

கல்வி



பண்டைய காலம் முதல் நம்முடைய முன்னோர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று அதிவீரராம பாண்டியன் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பியுள்ளார். கல்வியின் முக்கியத்துவத்தை கி.ரா. அவர்கள், "மனனம் செய்ய வேண்டியதும் அப்படிச் செய்த பாடங்களை ஒப்புவிக்க வேண்டியதும் அதிகாலையில் நடைபெறும். அப்புறம் ஒரு விடுப்பு (இடைவேளை) உண்டு. பிறகு எழுத்துவேலை, எழுத்துப் பயிற்சி இவை நடைபெறும். எழுத்துப் பயிற்சி முதலில் மணலில்தான், பிறகுதான் எழுத்தாணி பிடித்து ஓலை ஏட்டில் எழுதப் பழகுகிறது." (கோபல்லபுரத்து மக்கள் ப.17) என்று சொல்வதன் மூலம் கரிசல் பகுதியில் கல்விக்கு இருந்த இடம் வெளிப்படுகிறது.

பாரம்பரிய உணவு

மனித வாழ்வின் இன்றியமையாத தேவைகளாகிய உணவு, உடை மற்றும் இருப்பிடம் ஆகியவற்றுள் உணவு பெறும் இடத்தை கி. ராஜ நாராயணன் எடுத்துக்காட்டியிருக்கிறார். அதிலும் குறிப்பாக, பாரம்பரிய உணவைப்பற்றி பின்வருமாறு விளக்குகிறார்.

"கம்மஞ்சோத்தையே தின்று தின்று 'சவக்களித்துப் போன வாய். நெல்லுச் சோத்தைக் கொண்டா கொண்டா என்று வாங்கி வாங்கிச் சாப்பிடும். கரிசக் காட்டுக்காரங்களுக்கு நெல்லுப் பருக்கையைக் கண்டா குலதெய்வத்தைக் கண்டது மாதரி!' என்று தீரவாசத்துக் காரர்கள் இவர்களைக் கேலி செய்தார்கள் " (கோபல்லபுரத்து மக்கள் ப. 65) என்கிறார். இதன் மூலம்


மக்களின் உணவு நிலைமை மற்றும் பாரம்பரிய உணவு இடம் பெற்றிருந்த தன்மை ஆகியன புலனாகின்றன.

சுதந்திரமின்மை

இந்தியநாடு பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் அடிமைப்பட்டுக் கிடந்த தன்மையைக் கி. ராஜநாராயணன், 'கூட்டம் ஆரம்பிக்க முன்னால் அவர்களில் சிலர் உணர்ச்சி ததும்பப் பாடல்கள் பாடினார்கள். அதைப் போலப் பாடல்கள் கிராமத்துக்குப் புதுசு. ஆவலோடு அவைகளைக் காது கொடுத்துக் கேட்டார்கள். தாளக்கட்டோடும் ராக அடக்கத்தோடும் ஒருத்தர் இப்படிப் பாடினார்':

**'ஆட்டுத் தோலுக்கிடங்கொடுத்த
தாலே வந்த மோசம் - அத
னாலே வந்த மோசம்.'**

எப்படி வெள்ளைக்காரன் நம்ம நாட்டுக்கு முதல்முதலிய ஆட்டுத்தோல் வாங்க என்று இங்கே ஒரு வியாபாரியாக வந்து நம்மை ஏமாற்றி, நம்மவர்களைப் பிரித்து நமக்குள் சண்டை மூட்டி விட்டு வஞ்சகமாக நம்மை அடிமைப்படுத்தி ஆண்டுகொண்டிருக்கிறான் என்று அழகாக விவரித்தது பாடல்." (கோபல்லபுரத்து மக்கள்,ப. 173) என்று கூறுவதில் இருந்தும் "பிரிட்டிஷ் அரசு மூவர்ணக் கொடியைத் தடைசெய்திருந்தது. அதனால் எல்லா இடங்களிலும் இப்படி ராவோடு ராவாக "கொடி ஏத்தங்கள்" வந்தன.



இதே கொடியைப் பிடித்துக்கொண்டு பகிரங்கமாக ரோட்டில் நடந்து கைதியானவர்களும் உண்டு. அப்படிக் கொடியைக் கையில் பிடித்துக் கொண்டு போகும்போது, "போடு கீழே" என்று சொல்லி போலீஸார் 'லத்தி'யால் அறைவதும் உண்டு, உடம்பில் அடிமேல் அடி தொடர்ந்து விழும்போது, வலி பொறுக்க முடியாமல், தன்னையறியாமல் அய்யோ அம்மா என்று அலறுவதற்குப் பதில் 'வந்தே மாதரம் வந்தே மாதரம்' என்று மாறிமாறிச் சொல்லுவார்கள்.(கோபல்லபுரத்து மக்கள் ப.177) என்று கூறுவதிலிருந்தும் அறியமுடிகிறது.

சுதந்திர தினக் கொண்டாட்டம்

"சலங்கைக் கொத்துக்களைக் காலில் கட்டிக்கொண்ட சிறுவர்கள் கையில் செங்கொடி பிடித்துக்கொண்டு மேளத்தின் தாளக் கட்டுக்கு ஏற்ப ஒழுங்காக ஒன்றுபோல் காலடிகளை எடுத்து வைத்து கைக்கொடிகளை வீசிக் கூட்டுக் குரலில்ப் பாடி ஆடினார்கள்.

**'சங்கத்திலெல்லோரும் சேருங்க விவசாய
சமுதாயம் ஓங்க வேணுங்க.'**

மக்கள் கவிஞன் திருமூர்த்தியின் பாடல்களை அவர்கள் தொடர்ந்து ஆடிப்பாடினார்கள். மணி பன்னிரெண்டு. கிராம தேவதை களின் கோவில்களிலுள்ள மணிகளெல்லாம் கணகணவென்று ஒலித்தன. மூவர்ணக்கொடியைப் பலத்த ஆரவாரங்களுடனும் சொல்லமுடியாத ஆனந்தத்தோடும் ஏற்றினார்கள் கர கோஷங்களோடு கோஷங்களும் ஒலித்தன. பெண்டுகள் குலவை இட்டார்கள்." (கோபல்லபுரத்து மக்கள் ப. 267) என்று பதிவு செய்வதிலிருந்து தேசபக்தியுடன் சேர்ந்து தெய்வ பக்தியும் இணைந்து கொண்டு படம்பிடித்துக் காட்டியுள்ளார் கி.ராஜநாராயணன் அவர்கள்.

நிறைவாக

இவ்வாறு கரிசல் மக்களுடைய வாழ்வியலை வட்டார வழக்குச் சொற்கள், அவர்கள் பாடும் பாடல்கள் அவர்களிடத்தில் இருக்கும் நம்பிக்கைகள், தேசப்பற்று மற்றும் தெய்வப்பற்று ஆகியவற்றையும் இன்னும் பற்பல கரிசல் வாழ்வியலை அறியமுடிகிறது.

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ரா எழுத்துக்களில் கரிசல் மண் மணம்

எ நா ஜோதி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

எ நா ஜோதி
பதிவு எண்: 2022PHDPTTM04,
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) ,
தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடப் பல்கலைக்கழகம்,சீனிவாசவனம்
குப்பம் – 517 426 ஆந்திரப்பிரதேசம், இந்தியா.

கி ரா எழுத்துக்களில் கரிசல் மண் மணம்

கரிசல் மண்ணின் தந்தை என்று மக்கள் மத்தியில் பெயர் பெற்ற கி. ராஜநாராயணன் கோவில்பட்டியின் அருகில் உள்ள இடைசெவல் என்ற கிராமத்தில் பிறந்தார். கி.ரா என்கிற கி.ராஜநாராயணனின் முழுப்பெயர் ராயங்குல ஸ்ரீ கிருஷ்ண ராஜ நாராயணப் பெருமாள் ராமானுஜ நாயக்கர். இவரது பெற்றோர்களான ஸ்ரீகிருஷ்ண ராமானுஜம், லட்சுமி அம்மாள் தம்பதியினருக்கு ஐந்தாவது மகனாக பிறந்தார். சிறுவயதிலேயே தந்தையிடம் கேட்ட கதைகளும் கரிசல் பூமியும் அதன் மக்களும் இவரை படைப்பாளனாக உருவாக்கியது. இவருடைய எழுத்து நடையானது கிராமிய மணத்துடன் சொலவடைகளோடு அமைந்திருப்பதை இவரது படைப்புக்கள் வழியாக காணலாம்.



கரிசல் இலக்கியப் படைப்புகள் பிரபலமானது உள்ளூர் மக்களின் பேச்சு மொழியைப் பயன்படுத்தியதால் மட்டுமல்ல, அம்மக்களின் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் பிரதிபலிப்பதனால் தான் மட்டுமேயாகும்.

கரிசல் இலக்கியம் நாட்டார் மக்களின் பண்பாட்டுக் கூறுகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் அம்மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களையும் எவ்விதப் புனைவுமின்றி வெளிப்படுத்துகிறது.

கரிசல் மொழிநடையில் தனது படைப்புக்களை படைத்த கி.ரா கரிசல் இலக்கியத்தின் தந்தை என்ற சிறப்பையும் பெற்றவர்.

கி.ராஜநாராயணன் சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் ஒரு தேர்ந்த கதை சொல்லி. 'நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன். பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல் மழையைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன்' என்று தன்னைப் பற்றிக் கூறிக்கொள்ளும் கி.ரா. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் வருகை பேராசிரியராக பணியாற்றிய பெருமைக்குரியவர்.

நல்ல இசை ஞானம் கொண்டவர். கவியரசு நா.காமராசன் அவர்கள் நடத்திய இலக்கிய பத்திரிகையான "சோதனை"யின் ஆலோசகராக இருந்துள்ளார்.

கி.ரா. கதை கூறும் நாட்டார் மரபை மீட்டெடுத்தவர். 'பேசுவது போலவே எழுதுதல்' என்பதை தன் எழுத்தின் பண்பாகப் கொண்டிருந்தார். அவர் இலக்கியம் படைத்தார் என்பதைக் விடவும் மக்களின் பண்பாட்டை தன் எழுத்துகளின் வழி பதித்தார். அவரின் ஒவ்வொரு கதைக்குள்ளும் மக்களின் வாழ்வும் பண்பாடும் இரண்டறக் கலந்திருப்பதை அறியலாம். கரிசல் மக்கள் பின்பற்றும் பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள், பழமொழிகள் போன்றவை அவரது கதைகளுக்குள் கரிசல் மண் மணத்துடன் ஒன்றி இருப்பதை காணலாம். கதைக் கூறல் முறைகளில் நாட்டார் வாய்மொழி மரபுகளின் பின்பற்றும் போக்கானது இவரது படைப்புகளில் அமைகின்றது.



இவரது கொத்தை பருத்தி கதையில் ஒவ்வொரு காலத்திலும் ஒரு சிலருக்கு மதிப்பும் மரியாதையும் கிடைப்பதையும் முன்பெல்லாம் நல்லவர்களும் பெரியோர்களும் அனைவராலும் மதிக்கப்பட்டதையும் அவர்கள் அரசியல் போன்ற பொது செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட பாங்கும் இக்கதையில் அமைகின்றது. இக்கால கட்டத்தில் குணம் இல்லாத பொருள் செல்வம் உடையோரையே மதிக்கின்றனர். கொத்தை பருத்தி கதையில் கோனேரி செங்கன்னாவின் குடும்பம் மிகப்பெரிய பணக்கார சம்சாரி குடும்பம். இருநூறு ஏக்கர் நெய் கரிசல் பூமிக்கு இவர் சொந்தக்காரர். அப்பகுதியிலேயே முதன் முதலில் காசு மாலை செய்த குடும்பம். பருத்தியை வண்டி கொண்டு போய் எடுத்து வரும் அளவிற்கு செல்வம் மிகுந்த குடும்பம். மாவட்ட கலெக்டராக இருக்கும் தனது மகனுக்கு பெண் கேட்டு வந்த நாயக்கருக்கு பெண் கொடுக்க மறுத்த பெருமை உடைய குடும்பம் 'கலெக்டரா இருந்தால் மட்டும் என்ன செய்ய முடியும் நாளை பையனுக்கு ஒன்னு ஆகிவிட்டால் என் பொன்னுள்ள தெருவுல நிப்பா' பையனுக்கு நாலு ஏக்கர் நிலம் இருந்தா அவள் அதிலே கிண்டி கிளறி தன்பாட்டையாவது கழிச்சுடுவா. ஒன்னும் இல்லாதவனுக்கு உத்தியோகத்தை நம்பி யார் பொண்ணு கொடுப்பா? என்று கேட்டவர். ஆனால் இப்போது தனது பேரனக்கு பெண் கேட்டு செல்லும் இடத்தில் கால் தட்டு சம்பளம் ஆனாலும் கவர்மெண்ட் சம்பளம் இருக்கணும். மாசம் இருநூறு சம்பாதிக்கிற வாச்மேனாக இருந்தாலும் சரி அவர்களை கட்ட தயார்.

சம்சாரிகளுக்கு இனிமேல் நம்ம பெண் பிள்ளைகள் வாக்கப்படாது வந்து கேட்காதீங்க என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டனர். கரிசல் பூமியும் பெரிய வீடுமாய் இருந்த சம்சாரி கோனேரி. அன்று கலெக்டருக்கே பெண் கொடுக்க மறுத்த நிலை மாறி சம்சாரிக்கு பெண்ணை கொடுத்து பெண்கள் வேலை செய்து இடுப்புடைந்து சாகவா என படிப்பும் அரசு வேலையுமே பெரிதாய் மதிக்கப்படுகின்ற காலம் நடப்பதை உணர்கிறார். கால மாற்றத்தில் மதிப்பின் வரையறைகளும்

மாறி வருவதை இக்கதை பதிவு செய்துள்ளதை அறியலாம். சமுதாய வாழ்வு மாற்றத்தை தழுவியதாக இருப்பதைகொத்தைப் பருத்தி என்னும் கதை விளக்குகிறது.

கி.ராஜநாராயணன் தன்னுடைய கரிசல் மக்களின் வாழ்க்கை நிலைகளை மண்மணத்துடன் இயல்பாகவும்,கலைத் தன்மையுடனும் பதிவு செய்து ஒரு சிறப்பான பங்களிப்பைத் தமிழ் கூறும் நல்லுகிற்குவழங்கியிருக்கிறார். இயற்கையோடு இரண்டறக் கலந்த மக்களின் வாழ்க்கையை தன் அனுபவத்துடன் கூடிய பட்டறிவால் பதிவு செய்துள்ளதை அறியலாம்.

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி ராஜநாராயணன் சிறுகதைகளில் சமுதாய சிக்கல்

முனைவர் ப தனஞ்செயன்






தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் ப தனஞ்செயன்
இணைப் பேராசிரியர்,
தமிழ்த் துறை,
சர் தியாகராய கல்லூரி, சென்னை – 600 021.

கி ராஜநாராயணன் சிறுகதைகளில் சமுதாய சிக்கல்

கி. ராஜநாராயணன் நவீன தமிழ் இலக்கியத்தின் முதன்மை படைப்பாளிகளுள் ஒருவர் ஆவார். இவரது இயற்பெயர் ராயங்குல ஸ்ரீகிருஷ்ண ராஜநாராயணப் பெருமாள் ராமானுஜ நாயக்கர். இவர் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டிக்கு அருகில் உள்ள இடைச்செவல் என்னும் கிராமத்தில் பிறந்தார். கரிசல் வட்டார அகராதியை உருவாக்கிய இவர் 'கதை சொல்லி' என்றும் இலக்கிய வட்டாரத்தில் அழைக்கப்படுகிறார். சாகித்ய அகாதெமி விருது, இலக்கிய சிந்தனை விருது, கன்னட தமிழ் தோட்ட விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ள இவர் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்றும் அழைக்கப்படுவதை அறியலாம்.



கி.ராஜநாராயணன் சிறுகதைகளில் சமுதாய சிக்கல் மனிதம் மட்டுமே மதிப்புகளால் ஆனது. மதிப்பதும் மதிப்புக்கு உட்படுத்துவதும் மனிதத்தின் மாண்புகள். மக்கள் , தேவர்,நரகர்களில் மக்கள் மட்டுமே மதிப்பிற்குரியோர். மக்கள் மாக்கள் ஆகாமல் தடுப்பது இதுதான். இலக்கிய உலகில் மனித மாண்புகளையும் உயர்த்த வேண்டும் , வளப்படுத்த வேண்டும் , வளர்த்தெடுக்க வேண்டும் என்னும் கருத்துடையவர் கரிசல் மண்ணின் மைந்தர் படைப்பாளர் கி.ராஜநாராயணன். தமது எண்ணத்தை எழுத்து வடிவில் சித்திரம் தீட்டி உலகுக்கு வெளிச்சமாக்கினார். ஒரு கதை அவருடைய எண்ணத்தில் புதிதாகத் தோன்றுகின்றது என்றால் அதற்கு ஓர் இன்றியமையாத காரணம் இருக்கின்றது என்பது பொருள். அதன்படி சமுதாயம் நெறிமுறைகளில் இருந்தும் பழக்கவழக்கங்களில் இருந்தும் பிறழ்கின்ற பொழுது புது இலக்கியம் பிறக்கின்றது என்பது பொருள். இந்தக் கருத்தின் வெளிப்பாடகத்தான் பல படைப்புகளுக்கு கி.ராஜநாராயணன் வித்திட்டார். அதன்படி அவரது சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள சமுதாய சிக்கல்கள் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக அறிவோம். மக்கள்தொகை அதிகமுள்ள இந்த சமூகத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவிதமான மனிதர்களைச் சந்திக்கின்றோம். அதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகைப்பட்டவர்கள். அட இப்படியும் மனிதர்களா என்று வியக்கும் அளவுக்கும் , வெறுக்கும் அளவுக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள். மனிதம் இல்லாத இவர்களெல்லாம் மனிதர்களா என்று மனது வருந்தும் மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இதுபோன்றவர்களைப் பார்க்கும்போதுதான் எங்கே தொலைந்தது மனிதம் ? மனிதம் வாழ்வது எப்போது ? மனிதம் மரத்துப் போய்விட்டதா ? என பல கேள்விகள் எழும்.

மனிதமற்ற மனிதர்களைப் பார்த்து, அவர்களது மனிதமற்றச் செயல்களை கி.ரா வெளிப்படுத்துவது சமுதாயத்தில் நிலவும் பட்டுப்போன மனிதத்திற்குச் சான்றாகவே அமைகின்றது.

வாழ்க்கைப் பயணத்தில் கடந்துச் செல்லும் பல பிரட்சனைகளைப்போல் கதவைப் பிடித்துக் கொண்டு வேகமாக அக்குழந்தைகள் முன்னுக்குப் பின்னுக்கு ஆட்டிக்கொண்டே பயணம் செய்தனர். இனிதாக பயணத்த அந்த குழந்தைகளின் பயணம் அவர்கள் சென்று சேரவேண்டிய இடத்திற்கு சேரவே இல்லை. வறுமையின் பிடியில் சிக்குண்ட கடன்பட்ட குடும்பங்கள் அவற்றை தீர்க்கமுடியாத தள்ளாடும் நிலமையை ” மறுநாள் தலையாரி, லட்சுமியின் அம்மா இருக்கும்போதே வந்து தீர்வைப் பாக்கியைக் கேட்டான். ஐயா அவர் ஊரிலே இல்லை. மூணு வருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்தை வச்சி உங்களுக்குத் தீர்வை பாக்கியைக் கொடுப்போம்” என்ற வரிகளின் வழி வறுமையின் பிடியில் சிக்குண்டு தவிக்கும் நிலைக் காணப்படுகின்றது. சீரான குடும்பங்களும் சிதறிய நிலையில் கணவன் ஒருபக்கம், மனைவி குழந்தைகள் ஒருபக்கம் என வாழும் நிலையில் தமக்கான உடைமைகளையும் இருப்படங்களையும் தக்க வைத்துக்கொள்ள முடியாத நிலை சமுதாயத்தில் பெரிய சிக்கலாகவே அமைகின்றது. தீர்வே கண்டறிய முடியாத வறுமையில் சிக்கித் தவிக்கும் மக்களின் நிலையை காட்டும்படியாக ”தலையாரி, நான்குபேர் சகிதம் வீட்டை நோக்கி வந்தான். வந்தவர்கள் அந்தக் கதவைத் தூக்கிக் கழற்ற முயன்றார்கள் ; முடியவில்லை. தலையாரியும் சேர்ந்து பிடித்து ஒருமாதிரி கழற்றி, நான்குபேரும் கதவைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு புறப்பட்டார்கள்” இந்த வரிகள் வெளிப்படுகின்றன. சூடான புழுதியில் சிக்குண்ட புழு வெளியேற முடியாமல் தவிக்கும் நிலை இங்குத் தெளிவாக காணமுடிகின்றது. மேலும், மனிதன் பிற மனிதனின் துன்பமோ இயலாமையோ என நோக்காது சுயநலத்தோடு வாழ்கின்றான் என்றும், தனக்கு வரவேண்டியதில்தான் அவன் குறியாக உள்ளான் என்றும் இதன் வழிப் பலப்படுகின்றது.



வறுமை வித்தாகி விருட்சமாகும் போது அது கொடூரத்தாண்டவமாடி முற்றிலும் சீரழித்துவிடும் என்பதை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தும் கி.ரா அதன்படி கதவு இல்லாததால் வீடு இருந்தும் பிரயோஜனமில்லாமல் இருந்தது. கார்த்திகை மாசத்து வாடை விஷக் காற்றை போல் வீட்டினுள் வந்து அலை மோதிக் கொண்டு இருந்தது. கைக்குழந்தையின் ஆரோக்கியம் கெட்டுக் கொண்டே வந்தது. ஒரு நாள் இரவு வாடை தாங்காமல் அது அந்த வீட்டை விட்டு அவர்களையும் விட்டு பிரிந்து சென்று விட்டது. ரங்கம்மாளின் துயரத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. லட்சுமிக்காகவும் சீனிவாசனுக்காகவுமே அவள் உயிர் தரித்திருந்தாள். பெற்றோர்கள் யாருக்காக வாழவேண்டும் என்றுத் துணிகின்றார்களோ அவர்களையே இழக்கும் வண்ணம் கதவின்றி வாடை காற்றில் குழந்தையை இழக்கும் ரங்கம்மாவின் துயரம் இதன் வழி வெளிப்படுகின்றது.

வாழ்க்கை இனிதாக வாழ வேண்டும், அதற்காக கடினப்பட்டு உழைக்க வேண்டும் என்று நினைத்தாலும், சில சூழல்களும் சில மனிதர்களும் பின்னுக்குத் தள்ளிப்படுவதை கி.ரா அவர்கள் வெளிச்சம்போட்டு காட்டுகின்றார். புஞ்சை பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு சர்க்கார் கிணறு

தோண்ட ஒரு கிணற்றுக்கு நானூறு ரூபாய் இனமாக கொடுக்கிறார்கள் என்பதை அறிந்த அப்பாவு செட்டியார், தம்முடைய நிலத்தில் ஒரு கிணறு வெட்டி அதை நல்ல ஒரு தோட்டமாக ஆக்கிவிட்டால் நிறைய வருமானமும் கிடைக்கும் என்று நினைக்கின்றார். சர்க்கார் வழிக் கிடைக்கும் பணம் போதாமைக்கு அய்யாவார் நாயக்கரிடம் கடன்பெற்று கிணறு தோண்ட பூதம் கிளம்பிய கதையாய் பேசாமல் நிலத்தையும் கிணற்றையும் அடமானமாக செய்து கொடுத்து ரூபாயை வாங்கிக் கொண்டு போ. சம்மதம் இல்லை என்றால் வேறு எங்காவது ரூபாய் கிடைத்தால் மகாராஜனாக வாங்கிக்கொள். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. நான் கொடுத்த ஐநூறு ரூபாயை கொடுத்து விடு” என்ற நாயக்கரின் மனதாபிமானமற்ற சொற்கள் செட்டியாரை நிலைகுலைக்க செய்கின்றன. வேளாண்மையை நம்பி அதன் வழி வாழ்ந்து வளம்பெறலாம் என்றாலும் மனிதரால் வாழமுடியாத நிலையும் வேற்றுவழி தேடமுடியத கவலையும் இதன் வழி படைப்பாசிரியர் வெளிப்படுத்துகின்றார். மனித வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகளையும் காணாதமுடியாத மக்களின் இழிநிலைகளைப் பற்றி கி.ரா மிக நேர்த்தியாக ஆக்கம் செய்துள்ளார்.



பட்டுப்போன உலர்ந்த பழங்களைப் போன்று தளராந்துவாடும் வாரிசுகளற்ற பப்பு தாத்தா தம்பதியரின் வறுமைச் சூழலை சித்திரிக்கும் வகையில் பப்பு தாத்தா பிறந்ததிலிருந்து நாலு வயசு வரை பிறந்த மேனியாகத் திரிந்தார். ஐந்து வயசிலிருந்து எட்டு வயசு வரை கோமணத்தை மட்டும் வைத்துக் கொண்டு கம்மம் பிஞ்சசைகளுக்கு காவல் காத்தார். ஒன்பது வயசிலிருந்து பன்னிரெண்டு வயசு வரை ஒரு துண்டை மட்டும் கட்டிக்கொண்டு மாடு மேய்த்தார். பதிமூணு வயசு வரை இரட்டை கலப்பை பிடிக்கிறது முதலிய வேலைகளைச் செய்தார். பதினாறாம் வயதிலிருந்து அவர் தனி கலப்பை பிடித்து உழ ஆரம்பித்தார் என விளிம்புநிலை மக்களின் அரைகுறை தேவைகளோடே அவர்களுடைய வாழ்க்கை முடிந்து போகின்றது என்பதை இதன்வழி வெளிப்படுத்துகின்றார்.

இங்ஙனமாக படைப்பாசிரியர் கி.ராஜநாராயணன் அவர்கள் தாம் வாழ்ந்த காலத்தே கண்ட அடிமட்ட சமுதாயத்தின் சிக்கல்களை நேர்த்தியாக காட்டுகின்றார். ஒரு நாடு ஒரு சமுதாயம் முன்னேற வேண்டும் என்றால் , அந்தச் சமுதாயத்தின் ஆணிவேர்களாக இருக்கக்கூடிய கிராமிய மக்களின் வாழ்வாதாரம் செழுமையாக அமையவேண்டும். அந்த செழுமையின் தேடலே கி.ராவின் தேடலாக அமைகின்றது.

<u>சான்றுகள்</u>:

1.தினமணி நாளிதழ், 29.12.2023
2. மாயமான், கதவு, ப.24
3. மேலது. கதவு,ப.25
4. மேலது, கதவு,ப.26.
5.மாயமான், ப.35
6.கறிவேப்பிலைகள், ப.112

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

மாயமான் சிறுகதையின் கதைக்கரு

முனைவர் ச சாந்திமதி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் ச சாந்திமதி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, இதயா மகளிர் கல்லூரி,
கும்பகோணம்
ssanthymathi@gmail.com
9865862535

மாயமான் சிறுகதையின் கதைக்கரு

மாயமான் என்பது வாழ்க்கையின் எதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ளாமல் இருப்பது தான் மாயமான். கற்பனையின் மீது மிதமிஞ்சியதுதான் மாயமான். அப்பாவு செட்டியார் எதார்த்தமான மனிதர் அப்பாவு செட்டியாரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் அந்த கிராமத்தின் இளைஞர்கள் ஏனென்றால் அவர் தினந்தோறும் தின பத்திரிக்கையை கொண்டு வந்து கொடுப்பார். இளைஞர்கள் அதை உரிமையோடு அவரிடம் வாங்கி படிப்பார்கள். செட்டியாரின் மனைவி உலகம்மாள் தண்ணீரும் செம்புமாய் நின்று கொண்டிருந்தார். செட்டியாரின் மகன் சிவக்கொழுந்து தந்தை வாங்கி வந்த சாமான்களை இறக்கி கடைக்குள் கொண்டு போனான். இந்த காரியத்திற்கு அவனுடைய தாயாரும் உதவி செய்தாள். ஆமாம் கைலாசத்தை எங்கே காணோம் என்று மகனை கேட்டார் செட்டியார். எங்க மகனை காணோம் என்று கேட்டார் அதற்கு அவன் 7 ரூபாய் போட்டு தள்ளிட்டான் என்று சொன்னாள் பாக்கெட்டில் இருக்கும் கச்சாத்துக்களை எடுத்து வைக்க ஆரம்பித்தார். செட்டியாரின் தாயார் வடிவம்மாள் இரண்டு டம்ளர்களில் காப்பியை கொண்டு வந்து வைத்தார்.



எதார்த்தம்

இன்றைக்கு என்ன அங்கே ஒரே கூட்டம் ஜே ஜேனு ஒரே கூட்டம் அப்படி என்ன விசேஷம் என்று கேட்டார். நாசமா போச்சு இன்றைக்கு சுதந்திர தினம். செட்டியார் இதற்குள் பேப்பரை பார்த்துக் கொண்டிருந்த ஒரு இளைஞர் தொண்டையை கனைத்துவிட்டு பலமாக சத்தம் போட்டு ஒரு செய்தியை வாசிக்க ஆரம்பித்தார். எல்லோருக்கும் தங்கள் பேச்சுக்களை நிறுத்திவிட்டு கவனமாக கேட்க ஆரம்பித்தார்கள். மழை இல்லையே என்று இனி விவசாயிகள் கவலைப்பட வேண்டாம். புஞ்சை பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு சர்க்கார் கிணறு தோண்ட ஒரு கிணற்றுக்கு நான் ஒரு ரூபாய் இனாமாக கொடுக்கிறார்கள். புஞ்சை நிலங்களை வளமான தோட்டங்கள் ஆக்கி உற்பத்தியை பெருக்கி விவசாயிகள் லாபமடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்பதுதான் செய்தியின் சாரம். இந்த இந்த செய்தி அங்கிருந்தவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது இனம் புரியாத சந்தோஷம் உண்டானது ஆனால் அவர்களுக்கு நம்ம சிரமமாக இருந்தது செட்டியாரை தவிர ஒருவரும் நம்பவில்லை. இது என்னய்யா வேடிக்கையா இருக்கு இது நெசந்தானா என்று கேட்டார். நெசமாவது ஒன்னாவது எல்லாம் பேப்பர்காரன் கிட்ட அவுட் என்று சொன்னார்கள். செட்டியார் அப்படியெல்லாம் ஒன்னும் இருக்காது அதுல ஏதாவது கொஞ்சம் நிஜமும் இருக்கும். என்று யதார்த்தமாக நம்பினார். நீர் ஒன்னு உமக்கு இன்னும் பித்தம் தெரியவில்லையே போல

இருக்கு எதையும் பட்டென்று நிதானிச்சிடப்படாது மானாகானியாக பேப்பர் காரன் போடுவான் என்று சொன்னார் ராமசாமி.

வடிவம்மாளின் குணங்கள்

அந்தி மயங்கி எழுந்து மறையும் நேரம் வீட்டு முற்றத்தில் கிழவர் குளித்து கொண்டு இருந்தான் வடிவம்மாள் அவருக்கு முதுகு தேய்த்துக் கொண்டிருந்தாள். தம்பி நீயும் குளிச்சிடுறேன் நேரம் காணாது என்றார் பெரியவர். செட்டியார் குளிக்கணும் என்று சொன்னாரே தவிர மனுசங்க இல்லை அவருடைய எண்ணம் எல்லாம் தன்னுடைய புஞ்சை நிலத்தை சுற்றி சுற்றி வந்தது. அந்த கிராமத்திலேயே கொஞ்சம் சவுரியமாக உட்கார்ந்து சாப்பிடக்கூடிய புள்ளிகளில் நம்முடைய செட்டியாரும் ஒருவர் அவருக்கு செழிப்பான புஞ்சை நிலம் 4 ஏக்கர் உண்டு. மேலும் ஒரு சின்ன கடை ஒன்று அந்த ஊருக்கு தகுந்த மாதிரி வைத்திருந்தார் நிலத்திலிருந்து வருகிற தானியம் சாப்பாட்டுக்கும் கடையிலிருந்து வருகின்ற கொஞ்சம் பணமும் அவருக்கு போதுமானதாக இருந்தது.

செட்டியாரின் அசாதாரண நம்பிக்கை



இனாமாக கிணறு வெட்ட சர்க்காரால் கொடுக்கும் அந்த 400 ரூபாயும் வாங்கி தம்முடைய நிலத்தில் ஒரு கிணறு வெட்டி அதை நல்ல ஒரு தோட்டமாக ஆக்கிவிட்டால் என்ன என்பதுதான் அவருடைய எண்ணம். நிறைய வருமானமும் கிடைக்கும் ஏதோ நம்முடைய குழந்தைகளுக்கு பிற்காலத்தில் ஒரு சௌகரியம் செய்து வைத்த மாதிரி ஆகும் என்று நினைக்கலானார்.

தகப்பனாரின் அறிவுரை

கிணறா அது எதுக்கு தோட்ட நிலம் என்றால் அது நிறைய சிரமப்பட வேண்டும். அது கடைக்கண்ணியை நிர்வகிக்கவே நேரம் சரியாக இருக்கு தோட்டத்தில் எல்லாம் சொந்த ஆள் பாடுபட்டால்தான் லாபமுண்டு. அதோடு அதில் போட்டு எடுப்பதற்கு நிறைய பணம் வேண்டும் இதுக்கெல்லாம் நாம் எங்கே போகிறது இதையெல்லாம் உத்தேசம் பண்ணி தான் நம்முடைய பெரியவர்கள் அதை அப்படியே புஞ்சை நிலமாக வைத்திருக்கிறார்கள். பணத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம் அப்பா சர்க்காரில் இருந்து கிணறு ஒன்றுக்கு 400 ரூபாய் இனாமாக கொடுக்கிறார்கள் அப்படியே கொடுத்தாலும் அது பத்தாது என்று தன்னுடைய மனதில் பட்டதை அப்படியே சொன்னார் தந்தை. என்னமோபா உனக்கு தைரியமா இருந்தால் செய் எனக்கும் இத்தனை வயதாகிறது ஒருத்தர்கிட்டயும் கடன் என்று கையை காட்டி நின்றதில்லை பகவான் அருளால் நமக்கு அப்படியெல்லாம் வராது என்று சொன்னார் பெரியவர். சர்காரிடமிருந்து ரூபாய் வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டது. ஆபீஸ் இருக்க செட்டியார் நடையாய் நடந்து கிராம அதிகாரிகளிடம் சரி கட்டுவதற்கு போதும் போதும் என்றாகி விட்டது பணம் வருமா வராதா என்ற சந்தேகம் பலத்த கேள்விக் குறியாகிவிட்டது.

நாயக்கரின் குணம்

கிணறு வெட்டுவதற்கு பணம் பத்தவில்லை என்று தன்னுடைய மாமாவாக நினைக்கின்ற நாயக்கரிடம் பணம் வேண்டும் என்று கேட்டார். அதற்கு நாயக்கர் இதற்கென்னப்பா கொடுத்தா போச்சு என்று சொன்னார் வாங்கிய பணம் உண்டு என்றால் அவர் எழுதுவது மற்றொரு பணம் மாமா இது என்ன இப்படி என்று தயங்கினார் செட்டியார் அதுக்கு என்ன மருமகனே இதெல்லாம் ஒரு சம்பிரதாயம் தானே எவ்வளவு எழுதினால் என்ன என்று சொன்னார். வட்டியும் ஒன்னுக்கு ஒன்னேகால் போட்டு இருக்கிறீர்களே என்றதும் நாயக்கருக்கு சிரிப்பு வந்துவிட்டது சத்தம் கேட்காமல் உடம்பு மாத்திரம் குலுங்க சிரித்தார். ரூபாய் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொள் என்று சொல்லி 500 ரூபாய் நோட்டுக்களை இரண்டு மூன்று தரம் எண்ணி செட்டியாரிடம் கொடுத்துவிட்டு தன் தலையை தடவிக் கொண்டார் நாயக்கர் இது அவருக்கு என்று உள்ள ஒரு பழக்கம் கடன் வாங்கியது வீண் போகவில்லை என்று செட்டியார் நினைத்தார்.

மனமகிழ்வு



கற்களை சம்மட்டியால் அடித்து உடைக்கிற ஓசையும் கம்பியில் இடைவிடாமல் விழும் கத்தியின் ஒளியும் கிணற்றில் கேட்டுக் கொண்டே இருந்தது கிணற்றில் நல்ல தண்ணீர் நல்ல தண்ணீர் என்று குரல் கேட்டு திரும்பினார் செட்டியார் சப்தங்கள் எல்லாம் நின்றன அடிச்சது யோகம் அப்படியா அப்படி இல்ல இருக்கணும் சரியான தண்ணீர் இப்படி தண்ணீர் இந்த பக்கத்தில் கிடையாது. செட்டியார் வேகமாக கிணற்றுள் இறங்கினார் ஒருவாய் தண்ணீர் கையினால் அள்ளிக் குடித்தார் அவருக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை நம்மை பிடித்த பீடைகள் எல்லாம் இன்றோடு ஒளிந்தது என்று நினைத்தார். ஊறிய தண்ணீர் நல்லதாக இருந்தது தவிர அரை ஏக்கர் மகசூல் வைக்க காணாது. கிணற்றில் கூலி வேலை செய்பவர்கள் முதலாளி கிணைற்றைத் தோண்டி விட்டீர்கள் . இனி ஒரு ரெண்டு கெஜம் தோண்டிவதற்கு யோசிக்கலாமா கையோடு கையாக செய்து முடித்து விட்டால் தான் நல்லது. யானையை வாங்கிவிட்டு தொரட்டிக்கு யோசிப்பார்களா என்றார்கள். செட்டியார் சிரித்துக்கொண்டார் இவர்களுக்கு என்ன சொல்கிறவர்களுக்கு மாட்டின் புண் வேதனை காக்கைக்கு தெரியுமா என்று நினைத்தார் ஆனாலும் இவ்வளவு பாடுபட்டு தோன்றியும் பிரயோஜனம் இல்லாமல் போகிறதே என்று எண்ணினார் வீட்டிற்கு சென்ற செட்டியார் தன் மகன் சிவக்கொழுந்துவை அனுப்பி தன் கிணற்றிலிருந்து ஒரு குடம் தண்ணீரை எடுத்து வரச் சொன்னார் வீட்டில் உள்ளவர்கள் எல்லாம் தண்ணீரை சாப்பிட்டு நன்றாக இருக்கிறதே என்று வியந்தார்கள் நல்ல சோம்பு செட்டியாருக்கு மாத்திரம் தண்ணீர் ருசிக்கவில்லை இதற்குள் இந்த நல்ல தண்ணீர் விஷயம் தீப்போல் ஊருக்குள் பரவியது ஆண்கள் செட்டியாரின் யோகத்தை பற்றி பேசினார்கள். பெண்கள் தண்ணீர் எடுக்க கிணற்றின் மேல் படையெடுத்தார்கள் தண்ணீரின் அருமை அவர்களுக்கு அல்லவா தெரியும் இதை அறிந்த செட்டியார் பொங்கி பூரித்துப் போனார். செட்டியாருக்கு இப்பொழுது இரண்டு பிரச்சனைகள்

எழுந்தன புதிதாக ஒரு ஜோடி காளைகள் வாங்க வேண்டும் கிணற்றை இன்னும் ஆழப் படுத்த வேண்டும் தகப்பனாரிடம் கலந்தார். மகனே உனக்கு என்ன தோன்றுகிறதோ அதன்படி செய். கடவுள் விட்ட வழி என்று கூறிவிட்டார். திரும்பவும் அய்யாவார நாயக்கர் வீட்டை நோக்கி நடந்தார் செட்டியார். விஷயத்தை அறிந்த நாயக்கர் மிகவும் சந்தோஷம் கொண்டார். மாப்பிள்ளை குடிதண்ணீருக்கு கஷ்டப்படுகிற ஒரு ஊரில் ஒரு நல்ல தண்ணீர் கிணறு கிடைத்தது பெரிய தர்மம் அல்லவா என்று பாராட்டுவது போல் பாராட்டி கமலுக்கு மாடுகளுக்கும் அதற்கு வேண்டிய போக்குவரத்திற்கும் வேண்டும் என்கிறாய் கிணற்றை வேற தோண்ட வேண்டும் என்று சொல்கிறாய். இதற்கெல்லாம் குறைந்த ரூபாய் ஆயிரத்துக்கும் குறையாமல் வேண்டுமே என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டார். அதற்கு செட்டியார் மாமா அதற்கு தான் உங்களிடம் வந்திருக்கிறேன் நீங்கள் தான் அதற்கு ஒரு வழி செய்ய வேண்டும் என்று சொல்கிறீர் என்று சொன்னார். அதற்கு பணம் கொடுப்பதற்கு உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் கையெழுத்து போட வேண்டும் என்றால் நாயக்கர். நல்லசிவம் செட்டியாரிடம் பேனாவை கொடுத்தார்கள் கைகள் நடுங்க கையெழுத்து போட்டார் செட்டியாரிடம் பேனாவை கொடுத்தார்கள். தனக்காகவும் மைனருக்காகவும் என்று எழுதி கையெழுத்து போட்டார் ரூபாய் ஆயிரம் பெற்றுக் கொண்டார். பத்திரத்தில் ரூபாய் 2000-க்கு அடமானம் என்று எழுதியிருந்தார்.. கழுகுமலை சந்தையில் செட்டியார் இரண்டு செவலை காளைகள் பிடித்தார். விலை 600 ரூபாய் செலவு வேறு கவலைக்கு வேண்டிய சாமான்கள், கூனை வடம் வால், கயிறு, மண்வெட்டி முதலிய சாமான்கள் வாங்கி ஆயிற்று இனி கனைவாழ் தைக்க தோல் வாங்க வேண்டும் கூட வந்த விவசாயிகளோடு தோள் கடைக்கு போனார் செட்டியார். தோலின் விலை 50 ரூபாய் என்று சொன்னால் கடைக்காரன் என்ன தோளின் விலை 50 ரூபாயா என்ன அநியாயமா இருக்கிறது ஒரு பூனைக்கு வேண்டிய தோல் 50 ரூபாய் என்றால் கூட வந்த விவசாயிகள் செட்டியாரை பார்த்து சிரித்தார்கள். அதில் ஒரு வயசான விவசாயி அட பைத்தியக்கார செட்டியாரே விவசாயம் செய்கிறது என்றால் என்னவென்று நினைத்துக் கொண்டீர் விவசாயி கணக்கு பார்த்தால் தாறு குச்சி தான் மிஞ்சும் என்று சொன்னவன் பைத்தியக்காரனா என்று கேட்டார். கடைசியில் 40 ரூபாய் என்று பேசி சுமாரான தோல் ஒன்று எடுத்துக்கொண்டு ஊருக்கு வந்தார். கிணற்றை ஆளப்படுத்துதல் முதல் இதரத் தோட்ட சம்பந்தமான எல்லா ஏற்பாடுகளுக்கும் ரூபாய் ஆயிரத்துக்கும் சரியாக இருந்தது புதிதாக ஒரு வேலைக்காரனும் நியமிக்கபட்டான் அவனுக்கு தோட்ட சம்பந்தமான எல்லா விஷயங்களும் தெரியும். சாப்பாடு போக மாதம் பத்து ரூபாய் சம்பளம் என்று தீர்மானம் ஆயிற்று தோட்டத்தில் மிளகு செடி நட ஏற்பாடு நடந்தது அது சமயம் மிளகு வத்தலுக்கு ஏகப்பட்ட கிராக்கி பொது ஒன்றுக்கு 300 ரூபாய் விற்றது ஒரு ஏக்கரில் சுமாராக விளைந்தாலும் ஐந்து பொது விளையும் செட்டியார் தோட்டத்திற்கு வேண்டிய உரங்களை பக்கத்து ஊர்களில் எல்லாம் சென்று விலைக்கு வாங்கினார். வாடகை கொடுத்து வண்டிகளில் கொண்டு வந்து சேர்த்தார். மேற்கே ஒரு ஊரில் மிளகு நாற்று வாங்க 30 ரூபாய் கொடுத்து ஒரு ஆளை அனுப்பினார். இப்படியாக காரியங்கள் வெகு தடபுடலாக நடந்து கொண்டிருந்தது. அந்த வேலையில் செட்டியாருக்கு ஒரு சமாச்சாரம் வந்தது உண்மை என்றும் தெரியவந்தது.



சர்க்காரில் இனாமாக பணம் வாங்கியவர்கள் மூன்று வருடத்திற்கு மிளகு, பருத்தி போன்ற பணப்பயிர்கள் சாகுபடி செய்யக்கூடாது உணவுப் பொருள்கள் மட்டுமே சாகுபடி செய்ய வேண்டும் என்று அவருக்கு தெரிந்தது. இந்த நிலையில் இருந்து மீள அவருக்கு பல நாட்கள் ஆகியது. தந்தை நல்லசிவம் செட்டியார் படுத்த படுக்கையாகி விட்டார் அவருக்கு சாவு வரவில்லை அதற்கு பதிலாக நல்ல சிவம் செட்டியாரினுடைய மனைவி வடிவமாலுக்கு சாவு வந்தது. வடிவம்மாலை செட்டியாரின் தோட்டத்திலே அடக்கம் செய்தார்கள். நாயக்கர் சில நாட்கள் கழித்து செட்டியாரை வரச் சொல்லி ஆள் அனுப்பினார். அதற்கு மாமா உங்களுக்கு நான் வட்டி கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். நேராக வீட்டுக்கு வந்து தன்னுடைய குழந்தை கைலாசத்தின் நகைகளை விற்று மூன்றாவது மனிதனுக்கு தெரியாமல் வட்டியை கட்டி விட்டார். செட்டியாரால் மறு வருஷம் வட்டி கட்ட முடியவில்லை நாயக்கர் ஆல்மேல் ஆள் அனுப்பி நெருக்கினார். என்ன செய்வார்கள் பாவம் வீட்டையும் நிலத்தையும் தவிர அவர்களிடம் என்ன இருக்கிறது? இரண்டையுமே நாயக்கருக்கு தாரைவார்த்து விட்டார்கள் நாயக்கர் தயாள குணம் உள்ளவர் அவர்கள் பஞ்சம் பிழைக்க செல்வதற்கு 100 ரூபாய் கொடுத்தார். செட்டியார் குடும்பத்தோடு புறப்பட்டார் தான் பிறந்து வளர்ந்த அந்த கிராமத்தை விட்டு தவழ்ந்து விளையாடிய அந்த மண்ணை விட்டு புறப்பட்டார் அவருடைய தோட்டத்தின் வழியாக தான் பாதை தன்னுடைய நிலத்தின் மேல் கால் வைத்ததும் செட்டியாருக்கு உடம்பு புல்லரித்தது. தான் இருக்கும் இடத்தை விட்டு மதுரை வழியாக புலம்பெயர்ந்தார்கள். அப்பொழுது புகை வண்டியில் பயணம் மேற்கொண்டார்கள். தன் குழந்தைகளுக்கு தின்பண்டங்கள் வாங்கி கொடுத்தார். அப்பொழுது செய்தித்தாள் ஒன்றையும் கையில் வாங்கிக் கொண்டார். ரயிலில் பயணம் செய்தவர்கள் அந்த செய்தித்தாளை வாங்கிப் படித்தார்கள் அப்போது ஒருவர் உரக்க குரலில் படித்தார். சர்க்கார் கிணறு வெட்டுவதற்கு இந்த ஆண்டு 500 ரூபாய் கொடுப்பதாக உரக்க படித்தார் அப்பொழுது செட்டியாருக்கு கண்ணெல்லாம் சிவந்தன, மயிர்கள் எல்லாம் குத்திட்டு நின்றன அந்த பேப்பரை வெடுக்கென்று பிடுங்கி அதை சுருட்டி கிழித்து கீழே தூக்கி வீசி எறிந்தார். அனைவருக்கும் வியப்பாக இருந்தது. இது என்ன கொடுமை இவருக்கு என்ன ஆயிற்று? என்று நினைத்தார்கள் ஆனால் செட்டியாருக்கு தான் தெரியும் இதனுடைய வலியும் வருத்தமும் தன்னைப்போல் இந்த செய்தியை பார்த்து யாரும் என்னை போல் ஆகி விடக்கூடாது என்று எண்ணி அதை நினைத்து அப்படி செய்தார்.



இக்கதையின் மூலம் நாம் நமக்கு விளங்குவது என்னவென்றால் இருப்பதை விட்டு பறப்பதை பிடிப்பது இருக்கக் கூடாது என்று தான் சொல்ல வேண்டும். இம்மாயமான உலகில் மாயமான ஒன்றை நாம் தேடக்கூடாது என்பது இக்கதையின் மூலம் புரிந்துக் கொள்ள வேண்டும்.

****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ராவின் கதைகளில் கரிசல் வட்டார வழக்குகளும் பிறமொழிச் சொற்களும்

முனைவர் சு மாரியப்பன்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் க மாரியப்பன்
உதவிப் பேராசிரியர்
தமிழ்மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம் - 517 426
சித்தூர் மாவட்டம், ஆந்திரப் பிரதேசம்
Cell - 09494454410

கி.ராவின் கதைகளில் கரிசல் வட்டார வழக்குகளும் பிறமொழிச் சொற்களும்

தமிழ் இலக்கிய உலகம் கொண்டாடி தீர்க்கிற கரிசல் எழுத்தாளர் கி.ரா என்று அழைக்கப்படும் கி.ராஜநாராயணன் ஆவார். கி.ராவின் நாற்காலி, வந்தது, கன்னிமை, வேட்டி, விளைவு, சந்தோஷம், கதவு, வலி வலி, அவுரி, பேதை முதலான சிறுகதைகளை மட்டும் இக்கட்டுரைக்குப் பயன்படுத்தியிருக்கிறேன்.



கி.ரா பிறப்பால் தெலுங்குப் பின்னணியைக் கொண்டவர். அவர்தம் வீட்டில் தாய்மொழியான தெலுங்கைப் பேசுவது இயல்பான ஒன்றுதான். ஆனாலும் தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த ஒருவருக்கு இயல்பாகவே தமிழ்மேல் தீராக் காதல் ஏற்படும் என்பது மறுக்க முடியாத ஒன்றுதான். அவரின் எல்லாக் கதைகளிலும் கரிசல் வட்டார வழக்குகள் நிறைந்திருக்கின்றன. இவரின் பத்துக் கதைகளில் அவர் பயன்படுத்திய கரிசல் வட்டாரச் சொற்கள், பிறமொழிச் சொற்கள், வட்டார வழக்குகள், பழமொழிகள், விடுகதைகள், பொன்மொழிகள், நகைச்சுவைகள் போன்றவற்றை நாம் காணமுடிகிறது. இவைகளை எதற்காகப் பயன்படுத்தினார், ஏன் பயன்படுத்தினார் என்பதை நாம் ஊகித்தறிய முடியும்.

பிறமொழிச் சொற்கள்

தூய தமிழ்ச்சொற்களில் கதை எழுதுவது சாத்தியப்பட்டாலும் அந்த மொழிநடை வாசகருக்கும் படைப்பாளிக்கும் ஏற்புடையதாக அமையாது. வழக்கத்தில் பேச்சுமொழியோடு கலந்திருக்கிற பிறமொழிச் சொற்கள் ஒருவித நயத்தையும் புரிதலையும் இயல்பாகவே தந்துவிடும். எனவே தான் படைப்பாளிகள் பேச்சுமொழியோடு கலந்திருக்கிற ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு, கன்னடம், பாரசீகம், அரபு, உருது போன்ற பிறமொழிச் சொற்களைத் தங்கள் படைப்புகளில் கலந்துவிடுகின்றனர். அதுவும் மிகுதியாக புனைகதைகளில் இத்தன்மையிருப்பதை நாம் காணமுடிகிறது.

பழமொழிகள், வட்டார வழக்குச் சொற்கள், விடுகதைகள்

கதைப்போக்கிற்கு உறுதுணை செய்கின்ற வகையில் பழமொழிகள், கரிசல் வட்டார வழக்குச் சொற்கள் போன்றவற்றை கி.ரா பயன்படுத்தியுள்ளார். அவை கதையின் போக்கிற்கு உறுதுணை செய்வதாகவும் அழகியலாகவும் அமைந்து விடுகிறது.

நாற்காலி

கி.ராவின் நாற்காலி கதையில் ‘அஜெண்டா, விஜயம், சப்ஜட்ஜ், சூட்டு, ஆசனம், அஜாக்கிரதை, பெத்தண்ணா, காகிதபாணம், திவ்வியமாய், லோபி, பிரீதி, பிரஸ்தாபித்து, மோஸ்தர், விசேஷம், ஜமக்காளம், துப்பட்டி’ போன்ற பிற மொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

சூட்டும் பூட்டுமாக (எதுகை மோனை)
ஆளோடி வழியாக, புழக்கடைத் தோட்டம், வரவேணும் மாப்பிள்ளைவாள் (வட்டார வழக்கு)
ராமர் லட்சுமணர் மாதிரி (உவமை)
முத்தப்பனை பிடிச்சு முதுகுத்தோலை உறிச்சி பச்சை வெண்ணையைத் தடவி... (விடுகதை)

வந்தது

கிராவின் வந்தது என்ற கதையில் ‘பஸ், பர்லாங், ஜாடை போன்ற பிறமொழிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கடுகுஞ்சியைக் கூட, காவட்டுப்போட்டு, பீச்சாங்கை, சக்கைப் பிறட்டிகள், பொலிப் பலகைகள், வாளிப்பு மார்கள், கடகங்கள், சுளகுகள், (வட்டார வழக்கு)



போதை நிறைந்து வழியும் குடிகாரனதுபோல, கிளி மூக்கு மாம்பழம் அளவு, பனம்பூவின் துணுக்குகளைப் போல, சோப்பு நுரையாய் நரைத்திருக்கும் பரட்டைத்தலை (உவமை)

கன்னிமை

கன்னிமை என்ற கதையில் ஜரூர், ராவே, அற்பம், வாய்தா, ஏகாலி, வைபவம், ரோமம், லஜ்ஜை, உஷ்ணம், பிரக்ஞை, லயிப்பு போன்ற பிறமொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

சருவச் சட்டி, சீனியவரைக்காய், வெஞ்சனமாக, கும்பா, மொங்காங்கட்டை, சல்ல முத்த, கல்லாஞ் சிரட்டை, நிரை போட்டு, கம்பரக் கத்தி, மடிப் பருத்தி, பிள்ளைப் பருத்தி, போடு பருத்தி, கிஸ்தான் தாட்டு, அம்பாரம், சுவரொட்டி இலை, லேஞ்சி, சூரித்தட்டு, விசனம், காடைக்கண்ணி, குலுக்கை, சினுக்குவலி, ரெப்பை ரோமம், ஒரும்பாகிவிட்டது, கச்சாத்து போன்ற வட்டார வழக்குச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

கறிக்கு உப்பைப்போல், பால்நுரை பீச்சும்போது ஏற்படும் சப்தத்தைப் போல, மண்டைப் பொருத்தோடுகளில் ஆக்ரா இறக்கியதுபோல, எரிந்துகொண்டிருக்கும் சிதைக்குள் படுத்திருப்பதுபோல், இடைவிடாது மீட்டப்படும் சுருதிபோல் போன்ற உவமைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்.

வேட்டி

வேட்டி என்ற கதையில் ஆகஸ்டு, ஜனங்கள், சர்க்கார், உத்தரவு, போலீஸ், பூட்ஸ், கைலி, கலர், ஏகாலி, டெரிக்காட்டன், இங்கிலாண்டு, ஜென்மம், செட், மல் பீஸ், அற்புதம்,

நைஸ், அவலெச்சணம், ஜோர், மேஸ்திரி, பீரோ, சந்தோஷம், நிமிஷம், பிளஷர்க் கார், லாரி, மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர்கள், ஜெயில் போன்ற பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளர்.

லாத்தலாய், கஞ்சம்பத்தி, ஈயாப்பத்தி, சமட்டுகிறமாதிரி, சொலவடை, அல்வாந்துணி, குழாய்மல், பதனமாக, கமலை, சிறகுப் பலகை, சுங்குல் பிடித்து, முச்சூடும், கொப்பறை, கராலான, ஈரிழைச் சிட்டித்துண்டு, லேஞ்சி, சுள்ளாப்பு, பலகாரம், பட்சணம், சம்பை முதலான வட்டார வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

மதியும் புதனும் மயிர் களை – முதுமொழியைப் பயன்படுத்தியுள்ளார்
சுரைக்காய் மாதிரி - உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.

விளைவு



விளைவு என்ற கதையில் வரும் பிற மொழிச்சொற்கள் வருஷம், பிரயாசை, நிஜமான, விசுவாசம், விஷயம், குஷி, நிதானம்,

வெங்கயம்பய – வட்டார வழக்குச் சொல்

'சர்த்தாங்செ:வேலைக்காரன் இது வெளியிலெ', 'ஓடுகிற நாயைக் கண்டால் விரட்டுகிற நாய்க்குத் தொக்கு', 'வாய்புளிச்சதோ மாங்காய் புளிச்சதோண்ணு பேசாதீரும்' – பழமொழி

சந்தோஷம்

கி.ராவின் சந்தோஷம் என்ற கதையில் ரோமம், சந்தோஷம், கலர், தபஸ், குஷி, பிரியம், சப்தம், புருஷன், ஜில்லா, பவுன் போன்ற பிறமொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

மறுக்கி மறுக்கி, பிறாந்தா, கண்ணாணை, எம்புட்டு, சீமை சஜ்ஜூ என்பன வட்டார வழக்குச் சொற்களாகும்.

கதவு

கி.ராவின் கதவு கதையில், டிக்கெட், சந்தோஷம், வருசம், புண்ணியம், மைதானம், சகிதம், சுவாசம், பிரயோஜனம், விஷம், ஆரோக்கியம் போன்ற பிற்மொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

கூப்பாடு, சடைச்சி – வட்டார வழக்குச் சொற்கள்

பேதை

பேதை என்ற கி.ராவின் கதையில் சீஸன், அப்சரஸ், ஸ்தன்யங்கள், சந்தோஷம், ஜோலி, குஷி, திருஷ்டி, ஸ்தாயை, லைட், அர்த்த ஜாமம், பிரேதம், ஜீவராசி, ராட்சஷ,

சமிக்ஞை, ரகஸிய, ஜனங்கள், உயிர்ஸ்தலம் போன்ற பிறமொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

உளத்தல், போகினி, பித்தளைக் குணுக்கு, கோட்டி, இல்லிக் கண்கள், வசவு, பாதகத்தி, நெறசல் வெத்து, வெள்ளனும், சீந்தரிப்பு, உடங்காடு, வெருகுப் பூனை – வட்டார வழக்குச் சொற்களாகும்.

அவுரி

அவுரி என்ற சிறுகதையில் சர்க்கார், பவுன், வருசம், ஏக்கர், அபூர்வம், சந்தோஷம், ஆபீசு, ஜாஸ்தி போன்ற பிறமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

கவுல், உரக்கால் நிலம், மகுந்து, ஏனம், கொத்து அளத்தல், போகிணி, தவுதாயப்பட்டார் - வட்டார வழக்குச் சொற்கள்

வலி வலி



வலி வலி என்ற கதையில் சுருதி, ஞாபகம், லயித்து, பால்யம், அபிலாசைகள், கமிஷன், சௌக்யம், உத்தியோகம், வைத்தியம், சமாதானம், டாக்டர், அலோபதி, ஆயுர்வேதம், யுனானி, பிரியம் போன்ற பிறமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

வெள்ளிடி, தவசுப்பிள்ளை, கைக்கஞ்சி, அத்தக்கொத்து வேலைகள், அரைக்குறுக்கம், பணஏர், தவசம், செங்கல்மங்கல், சோலிய, விருத்தாந்தம், இசைப்புகள்ள – வட்டார வழக்குச் சொற்கள்

பாதிச் சாப்பாட்டில் இலையை எடுத்துக்கொண்டு போய்விட்டதுபோல், பச்சை ரத்தத்தை ஒரு அட்டை வலியில்லாம குடித்தது கணக்கா, பனம்பழத்த சேத்து கடிச்சு இழுக்கறாப்புல, - உவமைகள்

கதைப்போக்கிற்கு துணை

இலக்கியக் கர்த்தா தான் எழுதப்புகும் சிறுகதைக்கான நடை, கதைக்கரு, கதைப்பின்னல் போன்றவற்றை முன்முடிவு செய்துகொண்டு கதை எழுதுவது வழக்கம். அவ்வாறே கி.ரா அவர்களும் கதை அமைக்கின்றபொழுது, கோவில்பட்டி கரிசல் வட்டார வழக்குச் சொற்களை அதிகம் பயன்படுத்தியுள்ளதை நாம் காணமுடிகிறது. பெரும்பாலும் இவரின் அனைத்துக் கதைகளிலும் ஒரு சிலவற்றில் தவிர உவமைகள் சரளமாக வந்து அமைந்துவிடுகிறது. அவை கதைக்குப் பொருத்தமாகவும் இருப்பதைப் பார்க்கலாம்.

கதைமாந்தர்கள் ஒருவருக்கொருவர் உரையாடுகின்றபொழுது, பேச்சு வழக்கில் எவ்வாறு பேசுவார்களோ அதை அப்படியே எழுத்திக் கொண்டு வந்திருக்கிறார்.

உதாரணமாக,

“என்னாத்தா: யாரு நீ. எங்க வந்தெ ஏம் அழுவுதே?ன்னு கேட்டாம்.

“ஏம் விதி நா அழுவுதேம். ஒமக்கென்ன: நீரு உம்ம சோலியப் பாத்துப் போரும்” (வலி வலி – கதை)

முடிவுரை

கதைகள் புனைவுகளாகயிருந்தாலும் அதன் உருவமும் உள்ளடக்கமும் சரியாக இருந்தால் தான் வாசகர்களிடையே பெரும் வரவேற்பை அடையும். இல்லையென்றால் பாராமுகமாக அமைந்துவிடும். கி.ரா வெற்றியாளராக இருப்பதற்கு காரணம் அவரின் இயல்பான புனைவுதான். கரிசல் மண்ணின் வாடையைத் தன் கதைகளில் எளிமையாகக் கொண்டுவந்து விடுகிறார். அதைப்போன்றே எள்ளல் சுவை அவரின் சிறுகதைகளில் இழையோடுவதையும் நாம் காணலாம். ஆக ஒட்டு மொத்தமாக கி.ராவின் கதைகளைக் காண்கின்ற பொழுது முழுநிறைவும் தெளிவும் கிடைப்பதை நாம் அவரின் படைப்புகளின் வழி தரிசிக்கமுடியும். இதுவே அவரின் வெற்றி.



****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ரா. படைப்புகளில் நாட்டார் பண்பாட்டு மரபுகள்

லூா ஜினிஷா






தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

லூ ஜினிஷா
பதிவு எண் 2023PHDFTTM05
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்) ,
தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,
திராவிடப் பல்கலைக்கழகம்,சீனிவாசவனம்
குப்பம் – 517426 ஆந்திரப்பிரதேசம், இந்தியா
ORCID: https:// orcid.org/ 0009 - 0002 - 9012 - 1174

கி.ரா. படைப்புகளில் நாட்டார் பண்பாட்டு மரபுகள்

கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்படும் கி.ரா கரிசல் நில மக்களின் வாழ்வியல் கூறுகளையும் பண்பாட்டுப் பதிவுகளையும் தமது படைப்புகளின் வழி படம்பிடித்துக் காட்டும் சிறந்த நாட்டாரியல் ஆய்வாளர் ஆவர். தமிழ் இலக்கியத்தில் நாட்டார் அழகியலைப் பயன்படுத்திய முன்னோடியான இவர் நாட்டார் வழக்காற்றுக் கூறுகளை தான் வாழ்ந்த சமூகத்தின் பின்னணியிலிருந்து ஆராய்பவர். இவரது படைப்புகளுக்குள் நாட்டார் பண்பாட்டு மரபுக் கூறுகள் பல பொதிந்து கிடக்கின்றன. தமது வட்டார வழக்குச் சொற்களை பயன்படுத்தி கரிசல் நிலப் பகுதியின் சொலவடைகள், வேளாண்மைச் செய்திகள், நாட்டார் வழக்கற்றுக் கூறுகள் போன்றவற்றை தம் படைப்புகளின் வழி வெளிக்கொணர்ந்தவர். நாட்டாரியல் ஆய்வாளரான இவரை முன்னுதாரணமாகக் கொண்டு கழனியூரன், பாரத தேவி போன்ற ஆய்வாளர்கள் நாட்டாரில் ஆய்வில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கரிசல் இலக்கியவாதியான இவர் அவ்வட்டார வழக்கு அகராதியையும் உருவாக்கியுள்ளார். சிறுகதை,நாவல்,குழந்தை இலக்கியம், கடித இலக்கியம், பத்திரிக்கை, அரசியல் என்று பன்முகத்தன்மை கொண்டும் விளங்கியவர்.




கி.ரா தனது புத்தகங்களில் கரிசல் மக்களின் வாழ்க்கை முறை மற்றும் கலாச்சாரங்களை வலியுறுத்தும் வகையில் கரிசல் மக்களின் வாழ்க்கை முறைகளை கரிசல் வட்டார இலக்கியமாக உருவாக்கினார். இவ்விலக்கியம் வழி அம்மக்களின் பேச்சு மொழி, உச்சரிப்பு ஆகியவற்றை தெளிவுரை விளக்கின. கரிசல் பெண்கள், குழந்தைகள் மற்றும் விவசாயிகள் பாடும் நூற்றுக்கணக்கான நாட்டுப்புறப் பாடல்களை ஆவணப்படுத்தியதை அறியமுடிகிறது.

சொல் கதை மரபானது உலகின் தொன்மையான கதை சொல்லும் மரபாகும். இத்தகைய கதை வெளிகள் உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் நிலவி வருகின்றன. தமிழ் மொழியில் செவிவழிக் கதைகளாக உலாவிய 378 நாட்டுப்புற கதைகளைக் கொண்ட நாட்டுப்புறக் கதை களஞ்சியம் இதுவரை வெளியான மற்ற நாட்டுப்புறக் கதைக் களஞ்சியங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாய் விளங்குகிறது. மிக அதிக கதைகளை உள்ளடக்கி நாட்டார் கதைகளை நுட்பமாக ஆராய்ந்து இந்நூலில் தொகுத்துள்ளார்.

கி.ரா. கதை கூறும் நாட்டார் மரபை மீட்டெடுத்தவர். ‘பேசுவது போலவே எழுதுதல்’ என்பதை தன் எழுத்தின் பண்பாகப் பிரகடனப்படுத்தினார். அவர் இலக்கியம் படைத்தார் என்பதைக் காட்டிலும் பண்பாட்டைப் படம்பிடித்தார் என்பதே பொருத்தமானது. பண்பாட்டை எழுத்தில் வடித்தக்

கதைசொல்லி அவர். அவரின் ஒவ்வொரு கதைக்குள்ளும் மக்களின் வாழ்வும் பண்பாடும் இரண்டறக் கலந்து நிற்பதைக் காணலாம். கரிசல் மக்கள் பின்பற்றும் மரபுக் கூறுகள், பழக்கவழக்கங்கள், மூடநம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், பழமொழிகள் போன்றவை அவரது கதைகளுக்குள் கரிசல் மண் மணத்துடனே தழுவி இருக்கின்றன. கதைக் கூறல் முறைகளில் நாட்டார் வாய்மொழி மரபுகளின் அழகியலைப் பின்பற்றும் போக்கானது இவரது படைப்புகளில் வெளிப்படுகின்றது. ஷபிஞ்சுகள்' என்ற கதை வெளிப்படுத்தும் இயற்கை சித்தரிப்புகள், சாமர்த்தியம், இடக்கரடக்கல், நக்கல்கள் போன்ற கிராம வழக்கங்களை வெளிப்படுத்துகின்றது.

ஷசாவு' என்ற சிறுகதையில் இராமானுஜ நாயக்கர் எனும் இளைஞருக்கு மூன்று வயதில் ஒரு மகன் இருக்கிறான். அவனது மனைவி கருவுற்றிருக்கிறாள். இத்தருணத்தில் அவ்விளைஞர் மாரடைப்பால் மாண்டு போகிறார். இந்த நிகழ்வைக் காட்சிப்படுத்துவது தான் கதையின் மையமாக அமைகிறது. இறப்புச் சடங்குகள் முடிந்த பதினாறாம் நாள் ஷபெண்கள் சடங்கு', தாலி அகற்றும் சடங்கு நடைபெறுகிறது. சடங்கு நடைபெறும் போது நள்ளிரவில் ஒரு வயதான மூதாட்டி கூட்டத்தினரிடம் வந்து வெங்கலத்தட்டைத் தட்டுவதாக ஒரு காட்சி. இதற்கான பொருள் “தாலி அறுக்கப் போகும் சுமங்கலிப் பெண் கருவுற்றிருக்கிறாள். பிறக்கப் போகும் குழந்தைக்கு இவன்தான் தந்தை” என்பதை ஊரறிய வெளிப்படுத்துவது.



இது ஒரு முக்கியமான பண்பாட்டு வழக்கம். இக்கதை முழுவதுமே பண்பாட்டு மரபுகள், தொன்மங்கள், குறியீடுகள் போன்றவை அமைந்திருக்கிறது. இறந்த இளைஞனையும் அவனது குழந்தையின் பிறப்பையும் பிணைத்து ஒரு பண்பாட்டுச் சங்கிலியை இக்கதை உருவாக்கி விடுவதைக் காணலாம்.

ஷநிலைநிறுத்தல்' கதையில் மாசாணம் மழைக்காக ஷவயணம் காக்கும்' சடங்கும் ஷகனிவு' கதையில் தம்பதிகளை இயல்பாக இணையவிடும் அச்சாதியின் பழக்கவழக்கங்கள் குறித்தும் எழுதியுள்ளார்.

ஷகரண்டு' கதை கரிசல் காட்டுக்கு மின்சாரம் வந்து விவசாயத்தைச் சீரழித்த கதையை பேசுகிறது.

“ கரண்ட்டை நம்பிக் கலியாணம் வைக்காதே
எலக்ட்ரிக்கை நம்பி எலை வைக்காதே”

என்ற பழமொழியை கி.ரா கூறுவதை அறியலாம்.

'கோபல்ல கிராமம்' என்ற நாவல் ஆந்திராவிலிருந்து தென் தமிழ்நாட்டின் கோவில்பட்டி வட்டாரத்திற்கு இடம் பெயர்ந்த கம்மவர் நாயக்கர்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் பேசுகிறது. கிராமிய வழக்கங்கள், நிலத்தின் தன்மை, அந்நிலம் இழந்துகொண்டிருக்கின்ற உயிர்க்களைப் பற்றியும் இந்நாவல் கவலைகொள்கிறது. ஒரு கிராமத்தின் நிலவியல் தோற்றத்துடன் அதன் விலங்குகள், பறவைகள், செடிகள், கொடிகள், மனிதர்கள் என ஒரு முழுமையான சித்திரத்தை


முன்வைக்கும் கதையாடலை இந்நாவல் கூறுகிறது. கிராம வாழ்வில் சாதியின் இருப்பையும் மனிதர்களின் இடத்தையும் இயல்பாகக் கவனப்படுத்துகிறார்.

ஷகிடை' நாவலில் கால்நடை பராமரிப்பு, கீதாரியை முக்கிய அதிகாரியாக ஏற்கும் சமூக அமைப்பு முறை, பஞ்சாயத்து முறை, பேய், பிசாசு குறித்த நம்பிக்கைகள், சாதிப் படிநிலைகள், நாட்டார் தெய்வங்கள் போன்றவற்றை விளக்கியுள்ளார்.

ஷஒரு காதல் கதை' என்ற சிறுகதையில் ஒரு கிறிஸ்தவப் பெண்ணும், இந்து ஆணும் மெய்யாகவே ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்து கொள்கின்றனர். எனினும் இருவரது வேறுபட்ட பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் போன்றவை அவர்களை சிறிது சிறிதாக அதிருப்தி அடைய வைக்கிறன. அவர்கள் வளர்ந்த சூழல், சாதி மதப் பின்னணியில் உருவான அவர்களது வாழ்வியல் பார்வை இறுதியில் வலிமை பெற்று காதலையும் மீறி அவர்களை பிரிய வைக்கின்றது.

அவர்களின் காதலுக்கு வெளியில் யாரும் எதிரிகள் இல்லை என்று எழுதி முடிக்கிறார். கி.ரா இன்றும் நிரம்பவும் கொண்டாடப்படக் காரணம் அவரின் நாட்டார் மரபு. எழுத்து மரபில் நாட்டுப்புற மக்களின் வழக்காறுகளையும் வாழ்க்கை முறைகளையும் அவர் பதிவு செய்ததேயாகும்.

மொழிநடை என்ற ஒன்றையும் தாண்டி தொன்மங்கள், வழக்காறுகள், சடங்குகள், நம்பிக்கைகள் ஆகியனவற்றை தன் எழுத்தில் ஊடுபாவாகக் கொணர்ந்தார். இதன் வழியே கி.ரா தன்னை ஒரு பண்பாட்டு எழுத்துக்குச் சொந்தக்காரராக உருமாற்றிக் கொண்டு சமுதாயத்தில் தனகென்று ஒரு அடையாளத்தை நிலை நிறுத்தியதை அறியலாம்.



****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கிரா.வின் ‘பேதை’ உணர்த்தும் சமூக அவலம்

முனைவர் அ திலகவதி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் அ திலகவதி,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அரசு ஆடவர் கலைக் கல்லூரி,
கிருஷ்ணகிரி – 635001.

கிரா.வின் ‘பேதை’ உணர்த்தும் சமூக அவலம்

தமிழ் வாசகர்களின் இலக்கிய உலகில் நீங்காத இடத்தைப் பிடித்த, கரிசல் இலக்கியத்தின் தந்தையாக அறியப்படும் கி.ராஜநாராயணன், கி.ரா என்று அன்போடு அழைக்கப்படுகிறார்.

கரிசல் வட்டாரத்தில், நாட்டுப்புறத்தில் கிராமிய வாழ்க்கை வாழ்ந்த மக்களின் துன்பங்கள், துயரங்கள் அவலங்களை மையமாகக் கொண்டு, நிஜ உலகின் துயரங்களை எளிய முறையில், மிக நுட்பமாக, தெளிவாக பல சிறுகதைகளாகவும், குறும்புதினங்களாகவும், புதினங்களாகவும் இத்தமிழ்ச் சமூகத்திற்குப் படைத்தளித்துள்ளார்.



“தன் மனத்தைத் தைத்த ஒரு சம்பவம் காலத்தை வென்ற கதையாக்கும் சூட்சுமம், தேர்ந்த எழுத்தாளனிடம் சாத்தியமாகும்” என்கிறார் நாறும்பூநாதன்.

அதன்படி கரிசல் வட்டாரத்து மக்களிடம் காணப்பெற்ற, யாரும் பேசத்துணியாத, பதிவு செய்யாத, பேசத் தயங்கிய சம்சாரிகளின் அகவாழ்க்கையை, சமுதாய அவலங்களை எவ்வித அலங்காரமும் முகப்பூச்சும் இல்லாமல், இருப்பதை அப்படியே எழுதி, காலத்தை வென்ற இலக்கியமாக்கி இலக்கிய உலகில் தனக்கென தனியான ஓரிடத்தை ஏற்படுத்திக் கொண்டவர். அந்த வகையில் அதிகம் படிக்காத கி.ரா. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப்பேராசிரியராக பணியாற்றியதோடு, இவரின் படைப்புகள் பல்வேறு பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் இடம்பெற்று, தடம் பதித்துள்ளது.

சாகித்திய அகாடமி விருது, இலக்கிய சிந்தனை விருது உள்ளிட்ட தமிழின் முக்கிய இலக்கிய விருதுகள் பலவற்றைப் பெற்ற கி.ரா அவர்களின் ‘மாயமான்’ எனும் சிறுகதைத் தொகுப்பில் ‘பேதை’ எனும் இச்சிறுகதை 1966 ல் சாந்தி இதழில் வெளியாகியுள்ளது. இக்கதையில் இடம் பெற்ற ‘பேச்சி’ எனும் பாத்திரத்தின் வாயிலாக அறியலாகும் சமூகமும், அதன் அவலங்களும், பெண்ணுக்கு இச்சமூகம் இழைத்த கொடுமை, அதனால் அப்பெண்ணின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம், ஆணின் பாலியல் வன்மம் ஆகியவற்றைப் பேச விழைகிறது இக்கட்டுரை.

பேச்சி : பாத்திரப்படைப்பின் தன்மை

பருத்தி எடுக்க வரும் வலசைக்காரர்களில் ஒருத்தி, அங்கே சம்சாரியின் தொழுவத்தில் தங்க இடம் கிடைக்காததால் பொது இடத்தில் தங்குகின்றாள்.

இயல்பாகவே குளித்தறியாத வலசை பெண்களில், இவளின் தோற்றம் இன்னும் மோசமாக சித்தரிக்கப்படுகிறது. பறட்டைத்தலை, சிங்கப்பல், இல்லிக்கண்கள், அடர்ந்த புருவம், கருமை நிறம், மயிர் நீண்ட வியர்வை ஓடும் கக்கங்கள், அழுக்கு படிந்த கால்கள், நைந்த அழுக்கேறிய சேலை என பிறவிக் கோரத்தோடு கோட்டி போல் இருந்தாள். எனினும் அவள் தனங்கள் கோயில் சிலைகளை மிஞ்சுவதாக இருந்தது.

தாங்க முடியாத சந்தோஷத்தினால் அழுவதுபோலவும், தாளமுடியாத துக்கத்தினால் சிரிப்பது போலவும் செய்யுமிவள், இரவு நேரங்களில் வேப்ப மரத்தடியில், மரக்கட்டையைப்போல் உறங்குகிறாள்.

இந்நிலையில், கன்னிகழியாத, கல்யாணமாகாத அவள், மூன்று மாதத்தில் மசக்கையானது அனைவரையும் அதிர்ச்சியாக்கியது.



பேச்சியின் குடும்பத்தார் செயல்கள்

செய்தி அறிந்த, பேச்சியின் குடும்பத்தைச் சார்ந்த ஆண்களில் பலர் வந்து, மசக்கைக்கு காரணம் யாரென்று? கேட்டு அடித்தபோது சத்தியமாய் எனக்குத் தெரியாது என்றே அழுகிறாள்.

வந்தவர்கள் அவமானம் தாங்காது அவளை அடித்து நொறுக்கினர். ஆனாலும் எதுவும் தெரியவில்லை. தங்கள் முயற்சியில் தோற்ற அவர்கள் முகத்தில் அறைந்து கொண்டு அழுதார்கள்.

உறவுப் பெண்களின் மனநிலை

ஒருத்தி,

“இந்த முண்டைய கண்டங்கண்டமா நறுக்கினாலும் மனசு ஆறாது”(ப.71) என்றாள்.

இன்னொருத்தி,

“ஒரு குழியைத் தோண்டி இவளை இங்கேயே உயிரோடு புதைச்சிட்டுப் போயிடுவோம்”(ப.71) என்றாள்.

பேச்சி பற்றி ஊர் பெண்களின் மனநிலை

“அம்மா இனிமே சின்னஞ்சிறுசுகள் வேனல்காலத்திலே வெளியில் முத்தத்திலே படுத்துத் தூங்க நீதி இல்லை தாயே நீதி இல்லை”(ப.72)என்றும்,

“இப்படி ஒரு வங்கொடுமை நடந்து இந்தக் கண்ணாலே பார்த்ததில்லை தாயே”(ப.72) என்றும்,

“ஒரு பொம்பிளைக்கு “இது” கூடவா தெரியாமலா போய்விட்டது?”(ப.72) என்றும்,


“அப்படியா வரும் தூக்கம் ஒரு பொம்பிளைக்கு? திருட்டுச் சிறுக்கிங்கே கோட்டியில்லை அவ, கோட்டிக்காரி மாதிரி வேசம் போடுதா?”(ப.72) என்றும் பலவாறு பேசினர்.

எனினும், பிள்ளைத்தாய்ச்சியான அவளுக்கு, வேலை கொடுத்தும் அதற்கு கஞ்சி ஊற்றியும் ஆதரித்து வந்தனர். வேலையில்லாத நேரங்களில் அவள்மீது இரக்கப்பட்டு வடிதண்ணீரும் கொடுத்தனர். அவர்கள் ஊற்றிய கஞ்சியைக் குடித்து, வயிறு வளர்த்தவளின் பிரசவத்தை ஊர் கூடிப் பார்த்தது.

தாயான கோட்டி

கோட்டிக்காரி வயிற்றில் சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்தது.

அவள் ஊர் நடுவில் குழந்தையை வைத்துக்கொண்டு, போகிற வருகிற இளவட்டங்களின் முகங்களை, அவர்களுக்குத் தெரியாமல் குழந்தையின் முகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தப்படி இருந்தாள்.



செழிக்க செழிக்க தாய்பால் குடித்த குழந்தை. டிப்தீரியா கண்டு இறக்கிறது. ஊரார் சொல்லியும் குழந்தை இறந்ததை அவள் நம்பவில்லை. குழந்தை இருப்பதாகவே நினைத்து, கொஞ்சி, முத்தமிட்டு, சிரித்து, குழந்தையை பக்கத்தில் கிடத்திக் கொண்டு தனங்களில் பீச்சும் பாலால் குழந்தையை நனைத்துக் கொண்டு உறங்குகிறாள்.

அவளுக்கு மீண்டும் கோட்டி வந்து விட்டது என பேசிய ஊரார், அவள் ஊருக்கு சொல்லி அனுப்பினர். வந்த ஆட்கள் கேட்டும், குழந்தையை புதைக்கக் கொடுக்காமல் குழந்தையுடன் ஓடுகிறாள்.

உப்பிய குழந்தையின் சதை வெடித்து, வாடை வீசியது. துரத்திப்பிடித்து மல்லுக்கட்டி குழந்தையைப் பிடிங்கி புதைக்கிறார்கள். அப்போதும் அங்கு வந்து கலவரம் செய்ய அவளை அடித்து உதைத்து, கட்டி, வண்டியில் ஏற்றி ஊருக்கு கொண்டு போய், ஒரு வீட்டில் அடைத்து வைக்கிறார்கள்.

ஓடுகளைப் பிரித்த அவள் அங்கிருந்து தப்பி, ஆடையில்லாமல் ஓடினாள். இரவோடிரவாக தன் குழந்தையைப் புதைத்த மயானத்துக்கு வந்து அங்கு பிரேதம் எரியும் வெளிச்சத்தில், குழந்தையைப் புதைத்த இடத்தில் தோண்டித்தோண்டி புதைத்த குழந்தையை எடுத்து விடுகிறாள். சதை அழுகி நீர் வடிவதை எடுத்த அவள் மார்போடு அனணத்து கலகலவென சிரிக்கிறாள், அழுகிறாள். அப்போது அவளுக்கு அளவு கடந்த பசி எடுத்ததால், அங்கெரிந்த பிரேதத்தைப் பிய்த்து ஊதி ஊதி தின்றபடியே, தன்னோடும் குழந்தையோடும் பேசிச் சிரிக்கிறாள்.

அதுவரை அப்படி யாரும் அறிந்திடாத துர்நாற்றத்தால் விழித்த மக்கள், பயந்து ஒடுங்கும்படியான குலவைச் சத்தமும் கேட்கிறது. யாரோ யாருக்கோ ஒரு அநீதி இழைத்ததை அது உணர்த்துகிறது.

கூகைபோல் இரவில் வெளிவந்தும், பகல் முழுதும் உடைமரத்தின் மேலும் இருந்தாள். நரகத்தின் நாற்றம் வீசும் சிறிய எலும்புக் கூட்டை இடது கையால் மார்போடு அணைத்தபடி, பயங்கரமாக நடுராத்திரியில் குலவையிட்டுச் செல்லும் பேச்சியால் ஊரே அஞ்சி நடுங்கியது.

சுடுகாட்டில் எரியும் பிரேதத்தைத் தின்றும், அது கிடைக்காதபோது கற்றாழையைத் தின்றும், பசியாறி, இந்த உலக மனுச சங்காத்தமே வேண்டாமென்பது போலிருந்துவந்தாள்.

ஊராரின் அச்சம்

பகல் முழுவதும் பேச்சி எங்கிருக்கிறாள்? எனத் தெரியாத ஊரார், இரவில் அவள் ஊருக்குள் வருவதறிந்து இரவில் வெளிவரவே பயந்து வீட்டிற்குள்ளேயே உறங்கினர். அந்த ஊருக்கு விருந்துக்கு வந்த ஓர் இளைஞன், அது தெரியாது இரவு நேரத்தில் வேப்ப மரத்தடியில் நிறுத்தியிருந்த வண்டியில் படுத்து உறங்கிவிட்டான். தன் உயிர் ஸ்தனத்தில் ஏற்பட்ட வலியால் துடித்து, கண்விழித்தவனின் எதிரே ஆடை இல்லாது கோரமாக நிற்கும் பெண் உருவத்தைப் பார்த்து, பயந்து அலறினான். அது கேட்ட கிராமத்தார் ஓடி வந்து அவளைப் பிடிப்பதற்குள் தப்பித்துவிட்டாள்.



பேச்சின் ஊர்காரர்களோடு சேர்த்து, கிராமத்தார் பன்றியை வேட்டையாடுவதுபோல் கம்புகளுடன் அவளை அடித்துப் பிடித்து, அவர்கள் வசம் ஒப்படைத்தனர். அவர்களும் அவளை மச்சுவீட்டில் போட்டு மூடி வைத்தும், சுவரில் ஓட்டையிட்டு மீண்டும் தப்பி விட்டாள் பழைய இடத்துக்கு.

நிலாக்கால இரவுப் பொழுதில் முன்புபோல ஆர்பாட்டம் செய்யாமல் வரும் அவள், வேப்பமர நிழலில் கொஞ்ச நேரம் கைகால்களை விரித்தபடி சவமாய் தூங்குவாள். விழிக்கும்போது வரும் குழந்தையின் நினைவால், வேப்பமரத்தை கட்டிக்கொண்டு சப்தமில்லாமல் குலுங்கிக் குலுங்கி அழுவாள். குழந்தையைக் கனவிலாது காணமாட்டோமா? என ஏங்குகிறாள்.

சில மாதங்களுக்கு பின் பகல் நேரத்தில் ஊருக்குள் எல்லோரும் அஞ்சி வீடுகளுக்குள் புகுந்து கதவடைத்துக்கொண்டு சன்னல் வழியாக பார்க்கிறார்கள்.

அங்கே பேச்சி கர்ப்பிணியாய் வயிற்றைத் தள்ளிக் கொண்டு நடந்து சென்றுக் கொண்டிருக்கிறாள்.

பெண்ணுக்கு இழைக்கப்பட்ட கொடுமை

ஒரு பெண், அவள் எப்படிப்பட்ட நிலையிலிருந்தாலும் (மனநலமற்ற பெண்) அவளிடத்தில் ஆண் தன் காம இச்சையை தீர்த்துக் கொள்ளும் மிருகங்களாக செயல்படுவதும், சில

நிமிடங்களில் தீர்ந்துவிடும் அவர்களின் இச்சையால் பெண்ணுக்கு வாழ்நாள் முழுவதும் ஏற்படும் துயரங்களையும், அதனால் அவளது வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களையும் இக்கதை மிகுந்த வலியோடு உணர்த்துகின்றது.

அந்த ஆண்களின் செயலை நினைத்து, வெட்கித் தலைகுனியவும், வெறுப்பு கொள்ளவும் வைக்கின்றது.

இங்கே பேச்சி தன்னை உணரும் நிலையில் இல்லாதபோதும், தோற்றம் அருவருப்பாக இருந்தபோதும், ஆதரவற்ற அந்த பெண்ணை, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கும் அளவுக்கு கீழ்த்தரமான மனம் கொண்ட காமுகர்கள், கயவர்கள் இச்சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

அதனால் தான் பேச்சிக்கு ஒரு முறையல்ல, இரண்டாவது முறையாகவும் இக்கொடுமை நிகழ்ந்துள்ளது.

கர்ப்பத்திற்கு காரணம் யாரென? அறிய முடியாத நிலையில், ஊரும், உறவும், சமூகமும் பலவாறு தூற்றி நிந்திக்கின்றது. அதனால் அவளின் வாழ்க்கை முறை மாறுகின்றது.



எல்லாப் பெண்களைப்போல் வாழ வேண்டிய அவள், கொடிய பாம்புப் புற்றுகள் நிறைந்த காட்டில், உடைமரத்தில் தங்கி, பிணத்தைத் தின்று, எல்லோரும் அஞ்சியொதுங்கும்படி அவளது, தோற்றமும், செயலும் மாறுவதற்கு யார் காரணம்? இச்சமூகத்தின் ஆண் வர்க்கம் தானே காரணம்?

தாய்மையின் அற்புதம்

பேச்சி தன் நிலைக்கு யார் காரணம்? என்றே அறியாதவளாக இருக்கின்றாள். ஆனால், பிள்ளை பெற்றதும், அதற்காக பால் கொடுத்து, அதோடுப் பேசுவது, சிரித்து ஒரு நலல மனநிலையில் உள்ள தாயின் செயல்களைகளைப் போலவே செயல்படுகிறாள்.

அக்குழந்தை இறந்தபோதும் அது இறந்ததாகவே நினைக்காமல் அதோடே சுற்றித் திரிகிறாள். அந்த குழந்தையை கனவிலாவது காண மாட்டோமா? என ஏங்குகிறாள். அங்கே தாய்மை உணர்வும், குழந்தை பாசமும், எல்லா உயிர்களுக்கும் பொதுவான தாய்மை இங்கு இவளிடத்தும் விழிப்போடு இருப்பதைக் காணமுடிகிறது.

சமூகத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய பெண்களை, பாதுகாக்க வேண்டியவர்களே பாதிப்புக்குள்ளாக்குவது, வேலியே பயிரை மேய்வது போலாகின்றது.

தொகுப்புரை

இக்கதையில் இடம்பெறும் பேச்சி, அவளின் மனநிலை, இச்சமூகம் அவளுக்கு இழைத்த கொடுமை, அதனால் அவள் அடைந்த துயரம், அவளது வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவும் எண்ணத்தக்கது.

ஒரு சாதாரண பெண்ணுக்கு கிடைக்க வேண்டிய குறைந்தபட்ச பாதுகாப்பும் இச்சமூகத்தில் அவளுக்கு இல்லாததால், தனிமனித வாழ்க்கையில் அவள் அடையும் இன்னல்களும், தனிமனிதத் தாக்கத்தால் இச்சமூகமும் அடையும் பாதிப்பு எத்தகையது என்பதை விளக்குகின்றது.

கி.ரா.வின் 'பேதை' எனும் இச்சிறுகதையில், பேச்சியின் துயரும் அவள் செயலும் மனதில் தைத்து மனதைவிட்டு நீங்காத துயரமாக கண்ணீரை வரவழைத்து நிலைத்துவிடுகிறது.

கரிசல் வட்டாரத்து மக்களின் ஏமாற்றங்களையும், வாழ்க்கை பாடுகளையும், கண்முன் சித்திரமாக கொண்டுவந்து நிறுத்துகிறது இக்கதை.

****





ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ராவின் படைப்புகளில் பெண் பாத்திர படைப்பு

முனைவர் கலையரசி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் வ கலையரசி
உதவிப்பேராசிரியர் – பதிப்புத்துறை
திராவிடப் பல்கலைக்கழகம்
குப்பம் – 517 426, ஆந்திர மாநிலம்

கி.ராவின் படைப்புகளில் பெண் பாத்திர படைப்பு

அறிமுகம்

கி.ரா. என்று சுருக்கமாக அழைக்கப்படும் கி. ராஜநாராயணன் கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுபவர். இவருக்கு இப்பெயர் வரக்காரணம் இவரது படைப்புகளில் பெரும்பாலும் கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கையும் ஏமாற்றத்தையும் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களையும் விவரிப்பவையாக உள்ளன. இவர் நல்ல இசைஞானம் உள்ளவர். விவசாய குடும்பத்தைச் சேர்ந்த விவசாயி தன்னைப் பற்றி கூறுகையில் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன் பள்ளிக்கூடத்தை பார்க்காமல் மழையை பார்த்துக் கொண்டே இருந்து விட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.



மக்கள் தமிழுக்கு அகராதி உருவாக்கிய முன்னோடி. ***வட்டார வழக்கு சொல்லகராதி*** என்ற அகராதியை இயற்றிய பெருமைக்குரியவர். பல்வேறு சிறுகதைகள் குறுநாவல்கள் கட்டுரைகள் என பல பரிமாணங்களில் தம்முடைய புலமையை வெளிப்படுத்தியவர்

சாகித்திய அகாடமி விருது, இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசின் விருது, கனடா தமிழ் இலக்கிய தோட்டத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியச் சாதனை விருது என பல விருதுகளை வாங்கியவர். பல பெருமைக்குரியவர்.

கி.ராவின் படைப்புகளில் பெண் பாத்திரம் படைப்பு என்ற தலைப்பில் பெண்களை எந்த அளவிற்கு மரியாதைக்குரிய படைப்பாக படைத்துள்ளார் என்பதை இங்கு சிலவற்றின் மட்டும் சுட்டிக்காட்டி உள்ளேன்

சிறந்த கதை சொல்வதில் வல்லவரான இவர் நாட்டுப்புற கதை வழக்குகளை அடிப்படையாகக் கொண்டு தமது படைப்புகளில் ஒரு புதிய வழித்தடத்தை தமிழ் இலக்கியத்தில் புகுத்தி புதுமை செய்துள்ளார். இவரது படைப்புகளில் ஆழ்ந்த சிந்தனை ரசனை இருக்கும் எதார்த்தத்தை மையமாகக் கொண்டு தம் வாழ்க்கையில் கண்ட கேட்ட அனுபவங்களை கதைகளாக படைத்துள்ளார்.

இவர் எளிய மொழி நடை தெளிவான உரையாடல் வர்ணனைகள் இயல்பானவையாக இருக்கும். சாதாரண மக்களின் வாழ்க்கை முறை மிகுதியாக கரிசல் நிலத்து மக்களின் மண் சார்ந்த

பதிவுகள் தம் கதைகளில் கையாண்டுள்ளார் விவசாய மக்களின் வாழ்க்கையும் உழைப்பையும் மிகுதியான கதைகளில் எடுத்துரைத்துள்ளார்.

கி.ரா.வின் கதைகளில் பெண்கள்

கி.ரா. பெண்கள் மீது மிகுந்த மரியாதையும் நம்பிக்கையும் கொண்டவர் என்பது அவரது படைப்புகளில் காணலாம் பெண்களின் அறிவையும் அனுபவத்தையும் பல இடங்களில் போற்றி புகழ்ந்துள்ளார் இப்ப என்னுலகு என தனி உலகைபெண்களுக்காக படைத்துக் காட்டியுள்ளார். இந்த உலகில் பலதரப்பட்ட பெண்களையும் அவர்களின் மகத்துவ கதைகள் மூலம் வாசகர்களுக்கு எடுத்துரைத்து அதில் வெற்றியும் பெற்றுள்ளார் அதில் குறிப்பாக பெண் கதை எனும் பெருங்கதை பெண் மனம் பெண் கதைகள் போன்றவைகுறிப்பிடத்தக்க நூல்கள் ஆகும்



இவரது சிறுகதைகள் இவருக்கு இலக்கிய உலகில் அழியாத சிறப்பினை பெற்று தந்துள்ளது எனில் மிகையாகாது அதிலும் குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் ஜடாயு வேட்டி நாற்காலி போன்ற பல சிறுகதைகள் இவருக்கு சிறப்பை பெற்று தந்துள்ளன. விவசாயத் தொழிலில் நசிவடைந்து அரசு வேலை சமூக அந்தஸ்து காலம் மாற்றத்தை விவரிக்கும் வகையில் இவரது கொத்தை பருத்தி என்ற நூல் உள்ளது விவசாயத்தை நம்பி இருந்த காலம் மாறிவிட்டது அதனால் மக்கள் விவசாயத்தை மறந்து அரசு வேலை தேடி அலைவதும் வானம் பொய்த்து போனதால் மக்களுக்கு விவசாயத்தின் மீது இருந்த நம்பிக்கை போய்விட்டதையும் தம் கதைகளில் குறிப்பிட்டுள்ளார்

கி.ரா. வை எழுத்து உலகத்திற்கு அடையாளம் காட்டியது இவரது முதல் நாவலான கோபல்ல கிராமம்இன்று நாவல் இவர் பல்வேறு விதமான பெண்களை தம் படைப்புகளில் காட்டி உள்ளார் எடுத்துக்காட்டாக கோபல்ல கிராமம் என்று நாவலில் நூறு வயது கடந்த முதிர்ந்தமங்காத்தாபாரம்மாள் கதை சொல்வதாக படைத்துக்காட்டியுள்ளார். தொடக்க காலத்தில் பெண்கள் இனக்குழு தலைவிகளாக இருந்துள்ளனர் என்பதை இந்த நாவலில் பதிவு செய்துள்ளார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை இதுதான் நடைமுறையில் இருந்தளதாக குறிப்பிட்டுள்ளார் மங்காத்தாபாரம்மாள் ஆந்திர மாநிலத்தில் இருந்து இடம்பெயர்ந்து தமிழகம் வந்த கம்மவார் இனத்தைச் சார்ந்தவர் இவர் பொறுப்பு மிக்க தலைவியாகவும் கோபல்ல கிராமத்தை வழிநடத்தி செல்லும் திறமை வாய்ந்தவர் ஆகவும் சித்தரித்துள்ளார். அந்த கிராம மக்களுக்கு அவர் வழிகாட்டுதலின்படி நடந்துள்ளனர் என்பதை இந்த நாவலில் குறிப்பிட்டுள்ளார் இதன்மூலம் பெண்ணை ஒரு தலைவியாக படைத்து அவர் வழிகாட்டுதலின்படி ஒரு கிராமமே செயல்பட்டு உள்ளது என்பதை அறிவதன் மூலம் பெண்கள் மீது அவர் கொண்டுள்ள மதிப்பையும் ஆணுக்கு பெண் சளைத்தவள் இல்லை என்பதை தன் கதையின் மூலம் நிரூபித்து காட்டியுள்ளார்

மனிதர்கள் மிருகங்களாக மாறாததற்கு காரணம் பெண்கள் தான் என்று குறிப்பிட்டுள்ளார் பெண்களை வீட்டிற்குள் சிறைப்படுத்துவதற்கு அவர் விரும்பவில்லை பெண்கள் வாழ்நாள் வீணாக

போகுவதற்கு ஜாதகம் தோ‘ம் பெயர் ஒத்துப் போகவில்லை என்ற வீணான ஆயிரம் காரணங்களைச் சொல்லி பெண்களின் வாழ்க்கையை வீணாக்குவதை தன் எழுத்தின் மூலமாக வருத்தத்துடன் வெளிப்படுத்தி உள்ளார்

பெண்கள் எனும் பெரும் சக்தி. பெண்தான் எல்லாம் என்று கூறும் இவர் இன்று நடைமுறையில் நம் வழக்கில் பயன்படுத்தப்படும் பாட்டி வைத்தியம் என்ற ஒன்று இன்றும் உள்ளது ஆகையால் எந்த இடத்திலும் அன்றும் சரி இன்றும் தாத்தா வைத்தியம் என்று ஒன்று இல்லையே என்று நகைச்சுவையாக கூறியதை அதில் ஒரு உண்மை உள்ளது அதாவது பெண் தான் அனைத்திலும் சிறந்து உள்ளால் என்பதை குறிப்பிட்டுள்ளார். இந்த வளர்ச்சி மாற்றங்கள் எல்லாம் பெண்ணிடத்தில் இருந்து வருவதை தான் பெண்கள் தனக்கென்று ஒரு சுதந்திரமான நாளாக தேர்ந்தெடுத்துக் கொண்டது தான் செவ்வாக்கிழமை விரதம் அதில் ஆண்கள் நுழைய முடியாது அவர்களின் உலக பேறு தவறு ஆண்கள் வந்து விட்டால் அவர்களின்கண்ணவிந்து போய்விடும் என்று பயமுறுத்தலோடு செவ்வாய்க்கிழமை இரவு விரதத்தை மேற்கொள்ளப்படும் இவ்வாறு ஒதுக்கப்பட்ட மக்கள் தங்களுக்குள் ஏற்படுத்க் கொண்ட பழக்கங்கள் எத்தனையோ என்று கி.ரா தம் கதைகளில் எடுத்துரைத்துள்ளார்



கி.ரா. புதிதாக வரும் கருத்துக்கள் கோட்பாடுகள் போக்குகள் எல்லாவற்றையும் மிகுந்த அக்கறையுடன் கவனித்து நம்பும் மதிப்பீடுகளை விடவும் சமூகத்தில் நிலவும் உண்மை கருத்துகளுக்கு கதைகள் நெருக்கமாக இருக்க வேண்டும் என நம்பினார் செவி வழி உள்ள நுழையும் வாய்வழி வழக்கத்தை காலத்திற்கு நீடிக்கும் எழுத்து வடிவில் நாம் படிக்கும் எல்லாம் கால ஓட்டத்தில் மறைந்து போகும் என்பதை அவர் திரும்பத் திரும்ப பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

”கி.ராவின் கன்னிமை ”என்ற கதையில் வரும் நாச்சியாரம்மாள் தாய்மையின் சிகரமாக சித்தரிக்கப்படுகிறாள்தன் வீட்டிற்கு வரும் அனைவரையும் அன்போடு உபசரிக்கும் தாய்மைகுணம் உள்ளவள். தன் தந்தையால் அடித்து காயப்படுத்தப்பட்டு கிடக்கும் சிறுவனை காண செல்கிறாள். அங்கு தன்னையும் தன் குடும்பத்தையும் எதிரியாக நினைக்கும் இல்லத்தில் மரணப்படுக்கையில் இருக்கும் அந்தச் சிறுவனைக் கண்டு மனம் உருகி தன் முந்தானையால் ரத்தக் கறைகளை துடைத்து அந்த குழந்தையின் மூர்ச்சை தெளிவிக்கிறாள். தன் குழந்தையை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் மீது கோபம் கொண்டு கொலை வெறியோடு இருக்கும் அந்தச் சிறுவனின் தந்தை தன் கையால் இருக்கும் அரிவாளை கீழே போட்டுவிட்டு ஒரு குழந்தையை போல குமுறி குமுறிஅழுகிறான்

இந்த மானுடத்தின் ஒரு மகத்தான காட்சியாக உள்ளது பெண் என்பவள் ஒரு பெரும் சக்தி கெட்டவனை கூட நல்லவனாக மாற்று திறம் படைத்தவள்

இவருடைய கதைகளில் பெண்கள் கம்பீரமாகவேலை வேலையே வாழ்க்கை என்று கதையில் வாழும்கெங்கம்மாள் ஒரு உதாரணம். தலைக்கோழி கூப்பிட்டதும் முழிப்பு தட்டியது தொழுவில்

மாடுகளின் மணியோசை அவைகள் பிள்ளை தின்னும் காடி பலகையின் சத்தமும் கேட்டது ஒரு நாள் முழுவதும் வேலை என கடக்கும் கெங்கம்மாள் சிறிது கூட சோர்வாகவோ மனவருத்தமாகவோ இல்லாமல் தம் கடமையை செய்யும் ஒரு சிறந்த கதாபாத்திரமாக சித்தரித்துள்ளார்

முடிவுரை.

தொடக்க காலத்தில் மனித குலம் தாய் வழி சமூகமாக இருந்துள்ளது பெண்ணே குடும்பத்தை வழிநடத்தும் தலைமை பொறுப்பில் இருந்துள்ளார் பின்னர் பல்வேறு சமூக மாற்றத்தினால் தாய் வழி சமூகம் வீழ்ச்சி அடைந்தது இவர் எழுதிய கோமதி பாரதமாதா பெண் கதைகள் பெண் மனம் தண்ணீர் போன்ற அழியாத புகழ்பெற்ற பாத்திரங்கள் . தான் எழுதுவது மட்டுமன்றி பலரையும் எழுத வைக்கும் சுடராக விளங்கியவர்.



****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ராவின் வட்டார வழக்குச் சொல்லகராதியில் அகராதியியல் உத்திகள்

முனைவர் கோ பிரியா





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் கோ பிரியா,
கௌரவ விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
காரிமங்கலம், தருமபுரி மாவட்டம் – 635111

கி.ராவின் வட்டார வழக்குச் சொல்லகராதியில் அகராதியியல் உத்திகள்

முன்னுரை

வட்டார வழக்கு என்பதற்கு ஒலிப்பு முறை, சொல் அமைப்பு, இலக்கண அமைப்பு ஆகிய கூறுகளின் அடிப்படையில் பொதுமொழியிலிருந்து சற்றே வேறுபடுவதும், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைச் சார்ந்தவர்களால் மட்டுமே பேசப்படுவதுமான மொழிவழக்கு என்று கூறுவர். குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தில் ஒரு வார்த்தை ஒரு பொருளில் பயன்பாட்டில் இருக்குமானால் அது வட்டார வழக்குச் சொல்லாகும். கரிசல் மண்ணின் தந்தை என்று அழைக்கப்படும் கி.ரா. அவர்கள் வட்டார வழக்குச் சொல்லகராதி ஒன்றை உருவாக்கியுள்ளார். அவ்வகராதியில் அகராதியியல் உத்திகள் கையாளப்பட்டுள்ள விதத்தை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.



அகராதியியல் உத்திகள்

அகராதி என்பது சொற்களுக்கு அகரவரிசையில் பொருள் தருவதாகும். இவ்வகராதியில் தலைச்சொல் பகுதி, பொருள் விளக்கப் பகுதி என இருபகுதிகள் இடம்பெறுகின்றன. இவ்விரு பகுதிகளில் பல்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன. இவ்வுத்திகள் எல்லா அகராதிகளிலும் கையாளப்படுவதில்லை. அகராதியின் தன்மைக்கும் வகைக்கும் ஏற்ப உத்திகள் கையாளப்படுகின்றன. அவ்வகையில் கி.ராவின் வட்டார வழக்குச் சொல்லகராதியில் கையாளப்பட்டுள்ள குறிப்பான்கள், விளக்கக் குறிப்புகள், குறுக்கு நோக்கீடு, நிறுத்தக் குறிகள், எதிர்மறை குறியீடுகள் போன்ற அகராதியியல் உத்திகள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

குறிப்பான்கள்

சொல் மற்றும் பொருள் குறித்த தகவல்களை அறியத் தரப்பெறும் சிறு குறிப்புகள் குறிப்பான் எனப்படும். இக்குறிப்புகள் தலைச்சொல் மற்றும் பொருளின் இயல்பு அல்லது சிறப்புத் தன்மைகளை வெளிப்படுத்தும் வகையில் அமைகின்றன. தலைச்சொல் பகுதி, பொருட்பகுதி எனும் இரு பகுதிகளிலும் குறிப்பான்கள் தரப்பெறுகின்றன. குறிப்பான்கள் அடைப்புக் குறிகளுக்குள்ளும் அடைப்புக் குறிகளின்றியும் தரப்பெறுகின்றன. தலைச்சொல் பகுதியில் தரப்பெறும் குறிப்பான்கள் தலைச்சொல்லின் இலக்கணம், தொடரியல் பண்பு, தலைச்சொல் சார்ந்துள்ள துறை, இடம், காலம் போன்ற செய்திகளைத் தருகின்றன. பொருள் விளக்கப்பகுதியில் இடம்பெறும் குறிப்பான்கள் பொருளின் சிறப்புத்தன்மை, வகை, பொருள் வழங்கப்படும் காலம், இடம், சமுதாயப் பின்னணி

என்பனவற்றைச் சுட்டுவனவாக அமைகின்றன. சொற்களின் குறிப்புப்பொருள்களையும், ஒருபொருட் பன்மொழிகளையும் வேறுபடுத்திக் காட்டக் குறிப்பான்கள் துணைநிற்கின்றன. குறிப்பான்கள் அகராதிகளில் இடம்பெறும் தன்மைக்கேற்ப மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை,

1. **இலக்கணக் குறிப்பான் (Grammatical Label)**
2. **துறைக் குறிப்பான் (Subject Label)**
3. **நிலைக்குறிப்பான் (Status Label)**

என்பனவாகும்.

தலைச்சொல்லை அடுத்து அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டிருப்பவை குறிப்பான்களாகும். இக்குறிப்பான்களில் நிலைக்குறிப்பான் இடக்குறிப்பான், நடைக்குறிப்பான், இனக்குறிப்பான், மொழிக்குறிப்பான் என்ற குறிப்பான் வகைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. இதில் கி.ராவின் வட்டார வழக்குச் சொல்லகராதியில் இலக்கணக் குறிப்பான்களும் மொழிக்குறிப்பான்களும் இடம்பெற்றுள்ளன.

ஏச்சு : வசவு
ஏசு : வை. ஏசுதல் - வைதல்.



மேற்காணும் பதிவுகளில் இலக்கணக் குறிப்பான்கள் இடம்பெற்றுள்ளன.

அவ்வா : பாட்டி. (அவ்வா என்பது தெலுங்குச் சொல்; தமிழில் அவ்வை.)
ஈரங்கி : ஆர்க்கியூமெண்ட் வாய்தா. (Hearing - ஈரங்கி)

இப்பதிவுகளில் மொழிக்குறிப்பான்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

விளக்கக் குறிப்பு

சொல் மற்றும் பொருள் குறித்தக் கூடுதலான தகவல்களைத் தருவதற்குச் சில பொருள் குறிப்புகள் அடைப்புக்குறிக்குள் தரப்பெறுகின்றன. இவ்விளக்கக் குறிப்பு இலக்கண விளக்கக் குறிப்பு, சொற்பொருள் விளக்கக் குறிப்பு, கலைக்களஞ்சிய விளக்கக் குறிப்பு என மூன்று வகையாக அமைந்துள்ளது.

அடிதண்டம் : நிர்பந்த அபராதம். (செய்யாத "குற்றத்" துக்கு)
ஒத்தபேரன் : தனியாள் (ஆண்பால்)
ஒத்தபேரி : தனியாள் (பெண்பால்)

மேற்காணும் பதிவுகளில் அடிதண்டம், ஒத்தபேரன், ஒத்தபேரி எனும் சொற்களுக்கு இலக்கண விளக்கக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

அச்சுத் தெரட்டுதல் : தேய்ந்து போன வண்டி அச்சை உலையில் வைத்து (வேண்டிய இரும்பைச் சேர்த்து) முன் போல புதுப்பித்தல்.
அடங்கிருச்சி : (வேட்கை அடங்குதல்; சினையாகி விட்டது.) "காளைக்குக்

கதறிக்கிட்டே இருந்தது போட்ட பிறகு அடங்கி இருக்கு.”

அடிசால் பிடிசால் : விதை விழுவதற்கு உழும் சால்குடி அடிசால். விழுந்த விதையை மூடும்படியாக உழுவது பிடிசால். (பட்டம் போடுதல்).

அத்தாளம் : ராச் சாப்பாட்டுக்கு மேல் ருசியாகத் திங்கும் பட்சணங்கள். "பயலுக்கு அத்தாளம் கேக்கு”- இப்போ உதை விழப்போறான். (உதை விழுந்தால் தான் ஒழுங்குக்கு வருவான் என்பது.)

அலவர : பனங்கதிர் (அலவரை)


ஈசானியமூலை : (வடகிழக்கு) உழவு, களையெடுப்பு போன்றவை இங்கு ஆரம்பிப்பது.

ஓய்ஞ்சி போனான் : கெட்டு போனான் (பொருளாதாரத்தில்)

இப்பதிவுகளில் அச்சுத் தெரட்டுதல், அடங்கிருச்சி, அடிசால் பிடிசால், அத்தாளம், அலவர, ஈசானியமூலை, ஓய்ஞ்சி போனான் போன்ற சொற்களில் சொற்பொருள் விளக்கக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

குறுக்கு நோக்கீடு

அகராதிகளில் சொற்களின் இடையேயுள்ள பொருள் உறவு, வேறுபாடு முதலியன குறுக்கு நோக்கீடு மூலம் சுட்டப்படுகின்றன. ஒருசொல் மற்றொரு சொல்லுடன் குறுக்குநோக்கீடு மூலம் இணைக்கப்படுகிறது. இது மறைக் குறுக்குநோக்கீடு, வெளிப்படைக் குறுக்குநோக்கீடு என்று இருவகையாகும். ஒருமொழி அகராதிகளில் ஒருபொருட்பன்மொழி, எதிர்ச்சொற்கள் என்பன மறைக் குறுக்குநோக்கீடாகத் தரப்பெறுகின்றன.



அக்குசு : கவனம். அக்கறை.

அரி : கைப்பிடி அளவு. "நடப்போற நாத்துக்களை அரி அரியாக் கட்டுங்க.”

அரி;சித்தரி: ஆரம்பம். ஏட்டுப் பள்ளிக்கூடத்தில் அரி, சித்தரி என்றுதான் பாடம் தொடங்குவார்கள் ஆனா ஆவன்னா மாதிரி.

எக்கண்டம் : இகழ்ச்சி. கேலி. கிண்டல்.

மேற்காணும் பதிவுகளில் அக்குசு, அரி, எக்கண்டம் போன்ற சொற்கள் ஒருபொருட் பன்மொழியாக வட்டார வழக்குச் சொல்லகராதியில் இடம்பெற்றுள்ளன.

நிறுத்தக் குறிகள்

தமிழ் ஒருமொழி அகராதிகளில் கால்புள்ளி(,), அரைப்புள்ளி(;), முக்காற்புள்ளி(:), முற்றுப்புள்ளி(.) எனும் நான்கு நிறுத்தக்குறிகள் இடம்பெற்றுள்ளன. இக்குறிகள் தலைச்சொல்லிற்கும் பொருளிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் காட்டவும், ஒருபொருட் பன்மொழி, பலபொருள் சொற்கள் போன்றவற்றைப் பிரித்துக் காட்டவும் பயன்படுத்தப் படுகின்றன.

கட்டையிலே போக : வசவு. கட்டை- பாடை.

கப்பு : காலிடுக்கு - தொடை இடுக்கு.

மேற்காணும் பதிவுகளில் தலைச்சொல் பகுதிக்கும் பொருள் விளக்கப் பகுதிக்கும் இடையில் முக்காற் புள்ளியும் (:), பொருள் விளக்கப் பகுதியில் பொருள் விளக்கத்திற்கு இடைநிறுத்தக் குறியும் (-) பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஏழை எம்போகி : எம்போகி ஸ்ரீஆதரவு அற்றவன்.
ஓவாப்பானை : உலையேறாது. ஓவாப்பானை ஸ்ரீ வாவளையம் உடைந்த பானை.

இப்பதிவுகளில் பொருள் விளக்கப் பகுதியில் பொருள் விளக்கத்தில் இணையான சொற்கள் இடம்பெறும் நிலையில் சமக்குறியும் (ஸ்ரீ) பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஏறாங்காடு : எட்டாகையி ஐதூரமுள்ளகாடுஸ கடேசிப்புஞ்சை.
ஈக்கி : தட்டையில் உரித்த (அல்லது) உரிந்த தோலின்பகுதி.
ஓட்டராட்டு : ஓட்டை ராட்டு. வசவு. உபையோகமில்லாதவன்(ள்)
கம்மனாட்டி : வசவு. (கைம்பெண்)
கிளி கிளிண்ணு கிளிக்கிறது : எதிராளியின் குட்டு நெட்டை எல்லாம் பகிரங்கமாக எடுத்து வீசுறது. (கிளித்தல் -கிழித்தல்)
கைலைட்டு : பேட்டரி லைட்டு (டார்ச் லைட்)



இதில் பொருள் விளக்கப் பகுதியில் இடம்பெற்றுள்ள வேறு பெயர்களுக்குப் பகர அடைப்புக்குறியும் ஐ ஸ, விளக்கக் குறிப்புகள், குறுக்கங்கள், எழுத்துமாற்றங்கள், மாற்று வடிவங்கள் போன்றவற்றைச் சுட்டுவதற்கு பிறைக்குறியீடும் ( ), அல்லது எனும் சொல்லும் கையாளப்பட்டுள்ளன.

ஈரடிப்பழம்
ஈரடிக்காய் கோலி விளையாட்டில் இரண்டு காய்களை ஒரே தடவையில் அடித்த விட்டால் சொல்வது.
கூப்பிடு தொலை
கூப்பிடு தூரம் எழுப்பும் குரல் கேட்கும் தூரம்.

இப்பதிவுகளில் ஈரடிப்பழம், ஈரடிக்காய் மற்றும் கூப்பிடு தொலை, கூப்பிடு தூரம் போன்ற சொற்களில் தலைச்சொல் இணைப்பிற்குக் கோபுரக் குறியீடு { } பயன்படுத்தப்பட்டுள்ளது.

கண்டா ஒண்ணு காணாட்டா ஒண்ணு : நேரில் பார்க்கும்போது ஒன்று பேசுவதும், அதே நபரை பார்க்காதபோது வேறொன்றைப் பேசுவதும்.
"கண்டா காமாட்சி; காணாட்டா பூனை திண்ணி" -சொலவம்
கண்ணக்கெடுத்தவன் மதியைக் கொடுத்தான் : படைத்தவன். ஒன்றை எடுத்துக் கொண்டவன் இன்னொன்றை - இரக்கப்பட்டு - அதிகமாகக் கொடுப்பானாம்.
"ஒரு கதவு மூடுனா இன்னொரு கதவு திறக்கும்": சொலவம்.

பொருள் விளக்கப் பகுதியில் பொருள் விளக்கத்தின் இறுதியில் முற்றுப்புள்ளியும்(.), உதாரணங்களுக்கு இரட்டை மேற்கோள் புள்ளியும் (" ") பழமொழிகள் இடம்பெறும் பொழுது சொலவம் என்ற சொல்லாடலும் அரைப்புள்ளியும் (;) கையாளப்பட்டுள்ளது.

எதிர்மறை

வேறுபட்ட முரணான பொருட்கூறுகளை வெளிப்படுத்தும் நோக்கில் அமைவது எதிர்மறையாகும். எதிர்மறைச் சொற்கள் நான்கு வகைப்படும். பொருள் விளக்கப் பகுதியில் பொருள் வேறுபாட்டை அறிந்துகொள்ள எதிர்மறைச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. எதிர்மறைச் சொற்களைத் தருவதன் மூலம் தலைச்சொல்லின் பொருள் மேலும் தெளிவு பெறுகின்றது. பெயரடையின் பொருள்களை விளக்க எதிர்மறையின் பயன்பாடு இன்றியமையாத ஒன்றாக உள்ளது. பொருள் விளக்கத்தில் எதிர்மறைச் சொற்கள் குறியீடுகள் மூலம் சுட்டப்படுகின்றன.

ஒருப்பணிக்களுதை : அடைத்துத் தின்னாமல் உணவைகொறித்துக் கொண்டே மெலிந்து காணப்படும் மனித, உயிர்ப் பிராணிகளைக் குறித்து சொல்லப்படுவது. ஒருப்பணி ஒ வாய் அடம்

குறுத்தோலை : இளம் ஓலை. குறுத்தோலை ஒ சாரோலை.
(குருத்துஓலை)

தணுசு : தணிந்து இருப்பது. வெடுசு ஒ தணுசு."மண் வெட்டி ரொம்பத் தணுசா இருக்கு".

வெடுசு : நிமிர்ந்து.

மேற்காணும் பதிவுகளில் ஒருப்பணி, குறுத்தோலை, தணுசு போன்ற சொற்கள் எதிர்மறைக் குறியீட்டின் (ஒ) மூலம் பொருள் விளக்கம் செய்யப்பட்டுள்ளது.

வட்டார வழக்குச் சொல்லகராதியில் கி.ரா. முக்கால் புள்ளி, அரைப்புள்ளி, இடைநிறுத்தக் குறி, முற்றுப்புள்ளி, பகர அடைப்புக்குறி, பிறையடைப்புக் குறி, கோபுரக்குறி, சமக்குறி, எதிர்மறைக் குறி, இரட்டை மேற்கோள் குறி போன்ற நிறுத்தற்குறிகளைக் கையாண்டுள்ளார் என்பதை அறியமுடிகிறது.



முடிவுரை

கி.ராவின் வட்டார வழக்குச் சொல்லகராதியில் குறிப்பான்கள், விளக்கக் குறிப்புகள், குறுக்கு நோக்கீடு, முக்கால் புள்ளி, அரைப்புள்ளி, இடைநிறுத்தக் குறி, முற்றுப்புள்ளி, பகர அடைப்புக்குறி, பிறையடைப்புக் குறி, கோபுரக்குறி, சமக்குறி, இரட்டை மேற்கோள் குறி போன்ற நிறுத்தக் குறிகள், எதிர்மறை குறியீடுகள் போன்ற அகராதியியல் உத்திகள் பயன்படுத்தப் பட்டுள்ளதை அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. கி.ராஜநாராயணன், வட்டார வழக்குச் சொல்லகராதி, அன்னம் வெளியீடு, சிவகங்கை, முதற்பதிப்பு 1982.
2. சரளா ரங்கநாதன், தமிழ் அகராதிகளின் வளர்ச்சிப்போக்கும் அமைப்பு வேறுபாடும், அமைதி இல்லம், செஞ்சிக்கோட்டை, முதற்பதிப்பு 2009.

****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ராவின் நாற்காலிச் சிறுகதையில் கதைக் கூறுகள்

முனைவர் தே தியாகராஜன்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் தே தியாகராஜன்
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ விஜய் வித்யாலயா கலை மற்றும் அறிவியல்
கல்லூரி, நல்லம்பள்ளி, தருமபுரி.

கி.ராவின் நாற்காலிச் சிறுகதையில் கதைக் கூறுகள்

முன்னுரை

சிறுகதை என்பது சிறிய கதையாகும். சிறுகதை என்பது சுருக்கமாகவும், சொல் சிக்கனமுடையதாகவும் சொல்ல வேண்டியதைத் தெளிவாகச் சொல்லுவதாகவும் அமைய வேண்டும் என்று கூறுவர். அரங்க.சுப்பையா, எட்கர் ஆலன்போ என்பவர் ஒரு துப்பாக்கி சுவற்றில் மாட்டியிருக்கிறது என்று தொடங்கினால் கதை முடிவதற்குள் அது வெடித்துவிட வேண்டும் என்று சிறுகதைக்கு விளக்கம் தருவதாக கூறியுள்ளார். வில்லியம் ஹென்றி அட்சன், ஒரே மூச்சில் படித்து முடித்தற்குரிய கதையே சிறுகதை என்பர். சிறிய அளவு, கவன ஈர்ப்பு, தொடர் ஓட்டம், நிறைவு, தெளிவு போன்றன சிறுகதையின் முக்கியமான உட்கூறுகளாக கருதப்படுகின்றன. கி.ராவின் நாற்காலிச் சிறுகதையில் கதையின் கூறுகளை எடுத்துரைப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.



கி.ராஜநாராயணன்

கோவில்பட்டியின் அருகில் உள்ள இடைசெவல் எனும் கிராமத்தில் ஸ்ரீகிருஷ்ண ராமானுஜம் - லட்சுமி அம்மாள் எனும் தம்பதியினருக்கு ஐந்தாவது பிள்ளையாக 16 செப்டம்பர் 1922 ஆம் ஆண்டு பிறந்தவர் கி.ராஜநாராயணன். கி.ரா. என்று அழைக்கப்படும் கி.ராஜநாராயணனின் முழுப்பெயர் ராயங்குல ஸ்ரீ கிருஷ்ண ராஜ நாராயணப் பெருமாள் ராமானுஜ நாயக்கர் என்பதாகும். இவர் கரிசல் இலக்கியத்தின் தந்தையாக கருதப்படுகிறார். இவர் சிறுகதை, புதினம், நாட்டுப்புறவியல், கிராமிய வாழ்க்கை, வட்டார அகராதி போன்றவைகளைப் படைத்துள்ளார். 1958 இல் சரஸ்வதி இதழில் இவருடைய முதல் கதை வெளியானது. இவருடைய படைப்புகள் கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், வாழ்க்கையையும் மையமிட்டதாகவே படைக்கப்பட்டுள்ளது. சாகித்ய அகாடமி விருது, இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசின் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியச் சாதனை விருது போன்ற விருதுகளைத் தன் படைப்பிற்காகப் பெற்றவர். மே மாதம் 17 ஆம் நாள் 2021 ஆம் ஆண்டு தன்னுடைய 99 வயதில் இயற்கை எய்தினார். இவருடைய படைப்புகளுள் நாற்காலிச் சிறுகதையில் கதைக் கூறுகள் பற்றி இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.


சிறுகதைக் கூறுகள்

கரு, வடிவம், உள்ளடக்கம், தலைப்பு, ஒருமைப்பாடு, உரையாடல், வருணனை, கதைப்பின்னல், பாத்திர ஆக்கம், மோதல், கால அளவு, இடம், நோக்குநிலை, முன்னோக்கு உத்தி, பின்னோக்கு உத்தி, தொடக்கம், முடிவு போன்றவை சிறுகதைக் கூறுகளாகும். இச்சிறுகதைக் கூறுகள் கி.ராவின் நாற்காலிச் சிறுகதையில் இடம்பெற்றிருப்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

கதையின் கரு

சிறுகதையின் பொருள் அதன் கருவாகும். ஒரு கதையின் கரு எவ்வளவு சிறந்ததாக அமைகிறதோ அந்த அளவுக்கு அக்கதையும் சிறப்பாக அமையும். அவ்வகையில் நாற்காலியின் கருவானது மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. நாற்காலியை மையமிட்டதாகவும் நாற்காலியின் அவசியத்தையும், அதை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மரங்கள் பற்றியும் கதையின் கருவானது அமைகிறது.

தொடக்கம்



படிப்பவரின் ஆர்வத்தையும் கற்பனையையும் தூண்டக் கூடிய வகையில் சிறுகதையின் தொடக்கம் அமைவது உண்டு. சிறுகதையின் தொடக்கம் சொல்ல வருகின்ற கருவைப் பொறுத்து அமையும். நிகழ்ச்சியை மையமாக கொண்ட கதையில் நிகழ்ச்சி அறிமுகம் தொடக்கமாகவும், பாத்திரத்தை மையமாக கொண்ட கதையில் பாத்திரச் சித்திரிப்புத் தொடக்கமாகவும் அமையும். அவ்வகையில் கி.ராவின் நாற்காலிச் சிறுகதையில் நாற்காலியை மையமாக கொண்டே கதையின் தொடக்கமானது அமைக்கப்பட்டுள்ளது. கி.ராவின் நாற்காலிச் சிறுகதையில், **"நாற்காலி இல்லாததும் ஒரு வீடா! எங்கள் வீட்டில் இப்படித் திடீரென்று எல்லோர்க்கும் தோன்றிவிட்டது. அவ்வளவுதான் குடும்ப அஜெண்டாவில் வைக்கப்பட்டு இந்த விஷயத்தில் விவாதம் தொடங்கியது."**[1] என்று கதையானது தொடங்குகிறது.

வடிவம்

சிறுகதை தங்கு தடையின்றிச் சரளமானதொரு நடையில் அமைய வேண்டும். நல்ல தொடக்கமும் புதுமையான சிந்தனை உடைய முடிபும் கதையில் அமைய வேண்டும். கதையின் பொருளுக்கும் கருவிற்கும் ஏற்றதாக கதையின் தொடக்கம் அமைய வேண்டும். கதையைப் படிப்பவர் மனநிறைவு அமையுமாறு கதை இருக்க வேண்டும். அவ்வகையில் நாற்காலி சிறுகதை சரளமானதொரு நடையிலும், நல்லதொரு தொடக்கமும் புதுமையான சிந்தனையும் கதையின் பொருளுக்கும் கருவிற்கும் ஏற்றதாக கதையின் தொடக்கமும் அமைக்கப்பட்டுள்ளது. நாற்காலியை மையமிட்டே கதையானது நகர்த்தப்படுகிறது. பல இடங்களில் நகைச்சுவை ஏற்படுத்தும் வகையிலும் கதையானது அமைக்கப்பட்டுள்ளது.

தலைப்பு

கதைக்குப் பெயரிடுதல் மிக முக்கியமான உத்தியாகும். சில கதைகளின் தலைப்பு வெளிப்படையாக அமையும். கதையின் தொடக்கம், கருப்பொருள், பாத்திரத்தின் பண்பு, பாத்திரப் பெயர், பாத்திரத்தின் சிறப்பு, கதையின் முடிவு, இடம், கதைக்கு அடிப்படையாக அமைக்கப்படும் பொருள், சிந்தனையை எழுப்பும் காலக் குறிப்பு, கேள்வி, கதை நடக்கும் சூழல், உவமை உருவகமாக அமைதல், கதைப்போக்கை உணர்த்துவதாக அமைத்தல், கதை நோக்கத்தை உணர்த்துவதாக அமைத்தல், தலைமைப் பாத்திரத்தைப் பெயராலன்றிக் குறிப்பால் உணர்த்துவதாக அமைத்தல், புதுமையாகத் தலைப்பை அமைத்தல் போன்றவை கதையின் தலைப்பாக அமைக்கப்படலாம். அவ்வகையில் கதையின் தொடக்கமும் கருப்பொருளும் நாற்காலியை மையமிட்டதாகவே அமைக்கப்பட்டுள்ளது.

உரையாடல்

கதையின் நோக்கத்தை வெளிப்படுத்துதல், விருப்பத்தையும் விறுவிறுப்பையும் உண்டாக்குதல் ஆகியன கதையின் உரையாடலின் பண்பாகும். பாத்திரங்களின் பண்பை, உள்ளத்தை உரையாடல் உணர்த்துகிறது. சிறுகதை உரையாடலில் வட்டார வழக்கும் கிளைமொழிகளும் இடம்பெறுகின்றன.



புழக்கடைத் தோட்டத்தைப் பார்க்க ஓடினோம்[2],

பெத்தண்ணா ஒரு யோசனையை முன்வைத்தான்[3],

அண்ணா அவரைப் பார்த்து எக்கண்டமாகச் சொல்லிச் சிரிப்பான[4],

எங்களுடைய ஏடாசிப் பேச்சுகளின் காரம் அதிகமாகும்போது மட்டும் அம்மா எங்களைப் பார்த்து ஒரு பொய் அதட்டுப் போடுவாள்.[5],

எங்கள் மாமனார் எங்கள் ஊரிலேயே பெரிய கஞ்சாம்பத்தி. அதாவது ஈயாத லோபி என்ற நினைப்பு எங்களுக்கு.[6,]

இறந்து போன ஆசாமி எங்களுக்கும் வேண்டியவர் ஆனதால் நாங்கள் யாவரும் குடும்பத்தோடு போய்த் துட்டியில் கலந்து கொண்டோம்.[7]”

இதில் புழக்கடைத் தோட்டம், பெத்தண்ணா, எக்கண்டம், ஏடாசி, கஞ்சாம்பத்தி, ஈயாத லோபி, துட்டி போன்ற வட்டார வழக்குச் சொற்கள் உரையாடலில் இடம்பெற்றுள்ளது.

வருணனை

சிறுகதையில் வருணனை சுவையூட்டக் கூடியது. பாத்திரங்களையும் இடத்தையும் காலத்தையும் அவற்றின் பின்னணியோடு புரிந்து கொள்ள வருணனை உதவுகிறது. வருணனை அளவோடு அமைதல் வேண்டும். கதையைச் சூழலோடு புரிந்து கொள்ளவும் பாத்திரங்களை நன்கு அறிந்து கொள்ளவும் வருணனை துணைபுரிகின்றது. **"முதல் நாள் எங்க வீட்டுக்கு ஒரு குடும்ப நண்பர் விஜயம் செய்தார். அவர் ஒரு சப்ஜட்ஜ். வந்தவர் நம்மைப்போல் வேட்டி சட்டை போட்டுக்கொண்டு வரப்படாதோ, சூட்டும் பூட்டுமாக வந்து சேர்ந்தார்."**[8] இதில் சப்ஜட்ஜ் சூட்டும் பூட்டுமாக வந்து சேர்ந்தார் என்பதில் வருணனை இடம்பெற்றுள்ளது.

கால அளவு

சிறுகதைகளின் இயக்க காலம் ஒரு மணி, ஒரு நாள், ஒரு வாரம் ஆகிய கால எல்லைக்குள் ஏதாவது ஒன்றனுள் அமையும். நாற்காலி சிறுகதையில் ஒருநாள் எனும் கால அளவானது பயன்படுத்தப்பட்டுள்ளதை, **"ஒருநாள் அம்மா என்னை ஏதோ காரியமாக மாமனாரின் வீட்டுக்குப் போய்வரும்படி சொன்னாள்"**[9] என்பதன் மூலம் அறியமுடிகிறது.

இடம்

கதை நிகழ்கின்ற இடத்தைக் களம் என்பர். சிறுகதையில் இடம் முக்கியமானது. படைப்பாசிரியன் கதை நிகழ் இடத்தைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். நாற்காலி சிறுகதையில் குடும்ப நிகழ்வுகள் காட்டப்பட்டதால் வீடு கதையின் களமாக அமைக்கப்பட்டுள்ளது.



நோக்குநிலை

கதை யாருடைய பார்வையின் மூலம் பார்க்கப்படுகிறதோ அவர்களின் சொற்களால் கதை சொல்லப்படுவது நோக்குநிலை ஆகும். கதையாசிரியர், கதைப்பாத்திரம், யாரோ ஒரு பொதுமனிதர் போன்றவர்களுள் ஒருவரால் கதை சொல்லவதாக கதையானது அமைக்கப்படலாம். அவ்வகையில் நாற்காலி சிறுகதையில் ஆசிரியர் கதைப்பாத்திரமே கதைச் சொல்வதாக நோக்குநிலையைக் கையாண்டுள்ளார்.

முன்னோக்கு உத்தி

கதை நிகழும் கால அளவை இன்று, நாளை, அடுத்த நாள், அடுத்த வாரம், அடுத்த ஆண்டு என்று கதையை முன்னோக்கி நகர்த்தும் நிலையும் ஒரு மணி, அரைநாள், ஒருநாள், சிலநாள், மாதங்கள், ஆண்டுகள் இவற்றைக் கால அளவாக எடுத்துக் கொண்டு அக்காலம் முழுவதும் கதை நடப்பதாக்க் கூறுவது முன்னோக்கு உத்தியாகும். **"ஒருநாள் ராத்திரி இருக்கும்...**[10], **"ஒருநாள் நல்ல வேளையாக**

எங்கள் வீட்டுக்கு ஒரு விருந்தாளி வந்தார்...[11], **"மறுநாள் எங்கள் வீட்டுக்கு வந்த ஒரு...**[12]**"** இதுபோன்று ஒருநாள், மறுநாள் போன்ற சொல்லாடல்கள் இடம்பெற்றிருப்பதன் மூலம் இதில் முன்னோக்கு உத்தியை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

பின்னோக்கு உத்தி

பின்னோக்கு உத்தி என்பது சிறுகதையில் முன்னர் நடந்த நிகழ்ச்சிகளைத் திரும்பவும் எடுத்துக் கூறுவதாகும். **"முதல் நாள் எங்க வீட்டுக்கு ஒரு குடும்ப நண்பர் விஜயம் செய்தார். அவர் ஒரு சப்ஜட்ஜ். வந்தவர் நம்மைப்போல் வேட்டி சட்டை போட்டுக்கொண்டு வரப்படாதோ, சூட்டும் பூட்டுமாக வந்து சேர்ந்தார். எங்கள் வீட்டில் முக்காலிதான் உண்டு. அதன் உயரமே முக்கால் அடிதான், எங்கள் பாட்டி தயிர் கடையும்போது அதிலேதான் உட்கார்ந்து கொள்வாள். அவளுக்குப் பாரியான உடம்பு. எங்கள் தாத்தா தச்சனிடம் சொல்லி அதைக் கொஞ்சம் அகலமாகவே செய்யச் சொல்லியிருந்தார்.**"[13] என்பதில் முதல் நாள் நடந்த நிகழ்வைச் சொல்வதாக அமைந்திருப்பதால் இதில் பின்னோக்கு உத்தி கையாளப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது.

முடிவு



கதையின் தொடக்கத்தைத் திட்டமிடும் போதே முடிவு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்திட வேண்டும். முடிவை முன்னரே முடிவு செய்தால் கதை நிகழ்ச்சிகள் முடிவை நோக்கியே நகரும். கதைக் கருவிற்கேற்ற முடிவு வேண்டும். கதை விளக்கம் பெறக்கூடிய இடம் முடிவுதான். கருப்பொருளை வெளிப்படுத்தும் முடிவுகள், படைப்பாளர் கருத்தை வெளிப்படுத்தும் முடிவுகள் எனப் பல முடிவுகள் சிறுகதையில் அமைகின்றன. அவ்வகையில் நாற்காலிச் சிறுகதையின் முடிவானது கருப்பொருளை வெளிப்படுத்தும் முடிவாக அமைந்துள்ளது.

முடிவுரை

கி.ரா. தன்னுடைய நாற்காலிச் சிறுகதையில் கதைக்கரு, தொடக்கம், வடிவம், தலைப்பு, உரையாடல், வருணனை, கால அளவு, இடம், நோக்குநிலை, முன்னோக்கு உத்தி, பின்னோக்கு உத்தி, முடிவு போன்ற சிறுகதைக் கூறுகளைக் கையாண்டிருப்பதையும் புழக்கடைத் தோட்டம், பெத்தண்ணா, எக்கண்டம், ஏடாசி, கஞ்சாம்பத்தி, ஈயாத லோபி, துட்டி போன்ற வட்டார வழக்குச் சொற்கள் உரையாடலில் இடம்பெற்றிருப்பதையும் இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது.

<u>சான்றெண் குறிப்புகள்</u>


1. எழுத்தாளர்கள், கி.ராஜநாராயணன், சிறுகதை, படைப்புகள், ப.128.
2. மேலது., ப.128
3. மேலது., ப.129
4. மேலது., ப.129
5. மேலது., ப.130

6. மேலது., ப.130
7. மேலது., ப.132
8. மேலது., ப.128
9. மேலது., ப.133
10. மேலது., ப.132
11. மேலது., ப.132
12. மேலது., ப.133
13. மேலது., ப.128

<u>துணைநூற்பட்டியல்</u>

1. அரங்க.சுப்பையா, இலக்கியத் திறனாய்வு இசங்கள், கொள்கைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, எட்டாம் பதிப்பு - ஜீலை, 2016.
2. மு.வரதராசன், இலக்கிய மரபு, பாரி நிலையம், சென்னை, மறுபதிப்பு - 2009.
3. எழுத்தாளர்கள், கி.ராஜநாராயணன், சிறுகதை, படைப்புகள் ebook

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

நெல்லை வட்டார வழக்கு

MM ஜெயசீலன்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

MM Jayaseelan
Senior Lecturer
Department of Tamil
Faculty of Arts
University of Peradeniya
Sri Lanka

நெல்லை வட்டார வழக்கு

முன்னுரை:

பொதுவாக மொழியானது மனிதன் வாழுமிடம், தட்பவெப்பநிலை மற்றும் அன்றாட வாழ்க்கை ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது. இயற்கைச் சூழல் காரணமாக ஒரே மொழி பேசும் குழுவினரிடையே மொழியை ஒலிப்பதில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. இதனால் ஒரு மொழியிலிருந்து கிளை மொழிகள் தோன்றுகின்றன. இத்தகைய கிளை மொழிகள் வட்டார வழக்கு என அழைக்கப்பெறுகின்றன. இன்று தமிழகத்தினை வட்டார வழக்கு அடிப்படையில் ஐந்து பிரிவுகளாக மொழியியலாளர்கள் பிரிக்கின்றனர். எழுத்து வழக்கென்னும் போது தமிழகமெங்கும் பொதுத் தமிழே வழக்கிலுள்ளது. பேச்சு வழக்கு வட்டாரந்தோறும் மாறுபடும் நிலையில், ஒவ்வொரு வட்டாரத்திலும் அதற்கே உரிய சொற்கள் பெரும்பாலும் பேச்சு வழக்கிலுள்ளன. இவ்வட்டார வழக்குகளில் சமூகம், தொழில், பண்பாடு, சாதி, மதம், அந்நிய மொழி சார்ந்து வட்டார வழக்குகள் வேறுபடுகின்றன. தொலைக்காட்சி இணையம் தொடர்பான முன்னேற்றம் காரணமாக புதிய வழக்குகளாக இன்று பெருமளவுக்கு ஆங்கிலம் கலந்த சொற்கள் வட்டார புழக்கத்துக்கு விடப்பட்டுள்ளன. மேனாட்டுக் கல்வி மற்றும் அறிவியல் வளர்ச்சி தொடர்பில் புதிய சொல்லாக்கம், கலைச் சொல்லாக்கம் முதலிய அம்சங்களில் ஒருங்கிணைவு அற்ற முயற்சிகள் வேறுபட்ட மொழி வழக்குகளை உருவாக்கியுள்ளன.

தமிழ் எழுத்தாக மாறும்போது ஏறத்தாழ எல்லோருக்கும் ஒரே போன்ற பொருளை தருகிறது. ஆனால், வட்டாரத்திற்கு ஏற்ப வாயில் வகை தொகை இல்லாமலும் புழங்குகிறது. குமரியில் ரயில் ஏறி சென்னை வந்து சேருவதற்குள் ஒரே தமிழை ஓராயிரம் புது வார்த்தைகளில் கேட்டு மகிழலாம். நாஞ்சில் தமிழ், நெல்லை தமிழ், மதுரை தமிழ், கொங்கு தமிழ் மட்டுமில்லால் மெட்ராஸ் தமிழும் இந்த தமிழ்கூறும் நல்லுலகிற்கு புதிது கிடையாது.

தமிழ் மொழி பொதிகை மலையில் பிறந்தது என்பது ஒரு நம்பிக்கை. அந்தப் பொதிகை மலைத் தமிழே நெல்லைத் தமிழாகும். எனவே நெல்லை தமிழ் தமிழின் துவக்கநிலை மற்றும் தூய வடிவம் என்று சிலரால் கருதப்படுகிறது. நெல்லைத் தமிழ் என்பது திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் பிற தென்தமிழக மாவட்டங்களில் பேசப்பெறும் வட்டார வழக்குத்தமிழ் மொழியாகும். மேலும், கரிசல் நிலம் என்பது திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் பிற தென்தமிழக மாவட்டங்களை குறிக்கின்றது.

கரிசல் நிலம்

கரிசல் நிலம் எவ்வாறு காணப்பெறுகின்றது? இருமருங்கும் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை விரிந்து கிடந்த மேடுபள்ளம் அற்ற விரிந்த பொட்டல் அது. தேவதச்சனின் கவிதைபோலக் குனிந்து நாற்று நடும் பெண்ணுடன் தானும் குனிந்திருக்கும் பிரம்மாண்டமான வானம். கீழே பசுமையே இல்லாத செம்மண் நிலம். தொலைவில் அது சிறிய மேடுகளாக எழுந்து வானில் இணைந்தது. உடைமுள் பரப்புகள் வெயிலில் உலர்ந்து கிளைபின்னிக் கிடந்தன. பனைமரக் கூட்டங்கள் வானத்தின் தூண்கள் போல, யானைக்கால்கள் போல, பொட்டலில் முளைத்த மயிர்கற்றைகள் போல நின்றன. கி.ராஜநாராயணனின் கதைகள் வழியாக அந்த நிலத்தை ஒருவர் கண்டு மகிழலாம். மனிதர்கள் வாழ்ந்து வாழ்ந்து அந்த நிலத்தை ஒரு உயிர்ப்படலமாக ஆக்கிவிட்டிருந்தார்கள். அதன்பின் கரிசல் நிலத்தை எப்போது கடந்து சென்றாலும் அதன் கதாபாத்திரங்களை நினைவு கூர்ந்துதான் செல்ல முடியும். உண்மையில், கரிசலில் மழை பெய்யும் அழகை ஓரிடத்தில் நின்று மணிக்கணக்காய் அனுபவித்து மகிழலாம்.

திருவள்ளுவர் காமத்துப்பாலில் ஒரு குறளில் பைய என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். காதலனும் காதலியும் சந்தித்துக் கொள்கிறார்கள். அப்போது காதலி காதலனைப் பார்த்து மெதுவாக சிரிக்கிறாள். இந்த சூழ்நிலையை வள்ளுவர் சொல்கிறார்.

"அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்." (குறள் - 1098)

இரண்டாவது அடியில் தலைவி மெதுவாக சிரிக்கிறாள் என்பதை "பைய நகும்" என்கிறார் வள்ளுவர்.

திருநெல்வேலி பக்கம் "பைய" எனும் சொல் மிகவும் அடிக்கடி பயன்படுத்தப் பெறுவது. "பைய" என்ற சொல்லிற்கு 'மெதுவாக' என்று பொருள்.

தன் மகன் சைக்கிள் எடுத்து ஊர் சுற்ற கிளம்பி விட்டால் அடுப்பங்கரையில் இருந்து அம்மாவின் குரல் வரும், "ஏல பைய போயிட்டு வா என்னா".

திருநெல்வேலி மற்றும் பிற அண்டை மாநிலங்களில்
அதிகமாக பயன்படுத்தப்பெறும் சில சொற்கள்:

ஆச்சி - வயதான பெண்மணிஇ பாட்டி
பைய - மெதுவாக
ஏல(லே) - நண்பனை அழைப்பது
அண்ணாச்சி - பெரியோர்களை மரியாதையாக அழைப்பது
பைதா - சக்கரம்
சாரம் - லுங்கி
கொண்டி - தாழ்ப்பாள்
வளவு - முடுக்கு சந்து
சிரை - தொந்தரவு
சேக்காளி - நண்பன்

தொரவா - சாவி
மச்சி - மாடி
மக்கா - நண்பா
கசம் - ஆழமான பகுதி
துஷ்டி - எழவுஇ சாவுஇ இறப்பு
கொடை - திருவிழா
செத்த நேரம் - கொஞ்ச நேரம்
சவுட்டு - குறைந்த
கிடா - பெரிய ஆடு (male)
ஆக்கங்கெட்டது - கெட்ட நேரம்இ சரியில்லாத ஆள்இ
குறுக்க சாய்த்தல் - படுத்தல்
அந்தானிக்கு - அப்பொழுது
வாரியல் - துடைப்பம்
சீக்கு - நோய்
இடும்பு - திமிறு (arrogance)
சீனி - சர்க்கரை (Sugar)
ஒரு மரக்கா வெதப்பாடு - சுமார் 8 ழுசெண்ட் நிலம்
நொம்பலம் – தள்ளவும்இ தள்ளலாம்
கொட்டாரம் – அரண்மனை
திட்டு - மேடு
சிரிப்பாணி - சிரிப்பு
பாட்டம் - குத்தகை
பொறத்தால - பின்னாலே
மாப்பு - மன்னிப்பு
ராத்தல் - ஊர் சுத்துதல்
சோலி - வேலை
சங்கு - கழுத்து
செவி - காது
மண்டை - தலை
செவிடு - கன்னம்
சாவி - மணியில்லாத நெல்இ பதர்
மூடு - மரத்து அடி
அண்டிப் பருப்பு - முந்திரிப் பருப்பு
கோதி வை - மொண்டு வை
தொறவா - சாவி
குறுக்கு - முதுகு
வெக்க - சூடு, அனல் காற்று
சட்டுவம் - கரண்டி
களவானி - திருட்டுப்பயல்
பிளசர் - கார்
புரவாட்டி - அப்புறம்
முகரை - முகம்

முடுக்குது - நெருக்குகிறது
இங்கன - இங்கு
சொல்லுதான் - சொல்கிறான்
செய்தான் - செய்கிறான்
வேக்காடு - வியர்வை

திருநெல்வேலி மற்றும் பிற அண்டை மாநிலங்களில் அதிகமாக பயன்படுத்தப்பெறும் சில சொற்றொடர்கள் (எடுத்துக்காட்டுகளுடன்)

1. மொதண்டாதிக - முரண்டு (அடம்) பிடிக்காதீர் ❖ "அண்ணாச்சி! நீங்க ஒரேடியா மொதொண்டாதிக. இப்பதக்கி நெலத்துக்கு இதுதான் வெல.."
2. வைக்கச்சண்டு – வைக்கோல், சண்டு, கூலம், பதர் ❖ "பலவேசம் இருக்கானே, கட்டேலே போவான், ஒரு வைக்கச்சண்டுக்கும் பெறாத பய.."
3. மானாங்கண்ணி - ஒழுங்கீனம் (மானாங்காணி மரூவு) ❖ "இந்தா, எங்கிட்ட வம்புவளக்காத. அப்றமேட்டு நான் மானாங்கண்ணியா பேசிப்புடுவேன்"
4. வழிச்சுக் கொட்டு - மொத்தமாக் காலியாக்கு ❖ "மருதூர்க்காரி குடும்பத்தோட வந்து வழிச்சுக் கொட்டித் தின்னுட்டுப் போய்ட்டா.."
5. வடிச்சுக் கொட்டு - சமையலறையே தஞ்சம் ❖ "ஒங்க மொத்தக் குடும்பத்துக்கும் வடிச்சுக் கொட்டத்தான் ஏமாளி நா இருக்கேனே.."
6. நீத்தண்ணி - நீராகாரம் ❖ "பால் இல்லைனா என்ன.. என் புள்ளெகள் நீத்தண்ணி குடிச்சு வளந்துக்கிடும்" என்றார் பிள்ளைவாள்.
❖ 7. பொசங்கெட்டு - மனம் திரிந்து அவன்தான் பொசங்கெட்டுப் போய் பேசுறாம்னா நீயுமாடே ஒத்து ஊதுற...
8. சீக்காளி - நோயாளி (சீக்கு ஆள்) சீக்கு - நோய் சீழ்க்கை என்பது இதன் மூலச் சொல் ஆகும். தொடர்ந்து நோயாளியாக இருப்பவரைச் சீக்காளி என்பார். ❖ "ராமசாமியல்லாம் கூப்புடாத. அவென் ஒரு சீக்காளிப்பய. ஒரு சோலிக்கும் ஒதவமாட்டான்"
9. துப்புக் கெட்டவன் - தெரிந்து செயல்வகை செய்யாதவன். துப்பு - துப்புதல் எனும் செயல்வகை. ❖ "பிச்சாண்டி மவன் துப்புக்கெட்டுப்போயி படிச்ச மூதியக் கட்டிட்டு வந்து நிக்கான். நாலு கை வேல பாத்தாத்தான விவசாயி மிச்சம் பாக்க முடியும்" ❖ "ஏல கண்டமானிக்குத் துப்பிக்கிட்டு அலயாத. உனக்கு உங்கப்பன் சப்பாணின்னு பேரு வெச்சதுக்கு துப்பாணின்னு வெச்சிருக்கலாம்.

10. கங்குகரை – அளவு, எண்ணிக்கை ❖ “அவன் வாழ்வுக்கு என்று மாசம் நான்கு ரூபாய் சம்பாவனை கொடுப்பதாக பாதிரியார் வாக்களித்ததில் கோனாருக்கு மகிழ்ச்சி கங்குகரையில்லாமல் பிறந்தது.” - புதுமைப் பித்தன்
11. சொக்காரன் – பங்காளி, சொந்தக்காரன், உறவினர், சொந்தக்காரங்க என்ற நேரடிச் சொல்லில் பிறந்தது. ❖ ” ஏப்பே. . சொக்காரங்க எல்லாம் வந்து பட்டம் கட்டிக்கங்க. . .” வெட்டியான் சங்கை ஊதி அறிவிப்பு கொடுத்தான். இறந்துபோன ராமசாமியின் உறவினரும் சிறு குழந்தைகளும் வெட்டியானிடம் பட்டத்தை வாங்கித் தலையில் வைத்துக் கொண்டனர். (பட்டம் - சிறிய பனைஓலைக் கொட்டான். உள்ளே கொஞ்சம் உதிரிப்பூவை போட்டு வைத்திருப்பார்கள்.)
12. வேசடை - மனவேதனையில் தளர்ந்து போதல் ❖ “தண்ணியில்லாம பயிரெல்லாம் காஞ்சு கெடக்குன்னு நானே வேசடையில் இருக்கேன். இப்ப எதுக்கு ஆத்தா எனக்கு கல்யாணம்..” பச்சமுத்து அம்மாவிடம் வேதனைப்பட்டான்.
13. மேலுக்கு - உடம்புக்கு மேலுக்கு - மேலோட்டமான உடல் சார்ந்த நிலை. “பண்ணுதல்“ என்பது நெல்லைப் பெண்களிடையே “சமைத்தல்“ என வழக்கில் இருப்பதுபோல “மேலுக்கு“ என்ற பொதுசொல் “மேல் உடம்பு“ எனும் குறிப்புப் பெயராகப் பயனுறுகிறது. ❖ ”ஏலே பொழுது போயி கூதலு அடிக்கிது. மேலுக்கு ஒண்ணியும் போத்திக்காம எங்க கெளம்பிட்ட?” என முருகாயி மகனைக் கண்டித்தாள். ❖ ”என்னவே.. ஒருமாதிரியா இருக்கீரு...மேலுக்கு என்னாச்சி. வைத்தியரப் பாக்க வேண்டிய தானே” என்று சுடலைமுத்து தன் நண்பரிடம் கேட்டார்.
14. தொங்கட்டான் - காதணி (ஜிமிக்கி) “தொங்கட்டான்“ என்பது எவ்வளவு எளிய பொருள் பொதிந்த சொல்லாயிருக்கிறது! குதம்பைஇ குழைஇ கடிப்பிணை என்று பனையோலையாலும்இ சங்கினாலும் செய்த காதணிகளை அணிந்தனர் பண்டைய தமிழர். அண்மைக் காலங்களில்கூடத் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் வயது முதிர்ந்தோர் பாம்படம் அணிவதும் வழக்கமாக இருந்துள்ளது. எல்லாப் பெயர்களும் காரணத்தோடுதான். ❖ ”நேத்துதா செல்விக்குக் கம்மலும் தொங்கட்டானும் கூலக்கடை பசார்ல வேங்கிட்டு வந்து போட்டேன். வயசுக்கு வந்த புள்ள ஈக்குச்சிய சொருவிட்டு நின்னா நல்லா இருக்காதுல...”

மேலும் சில சொற்கள்/சொற்றொடர்கள் விளக்கங்களுடன்

அண்ணாச்சி

உடன் பிறந்த, மூத்தவனை அண்ணே என்று தான் அழைப்பார்கள். நம்முடன் பிறக்கா விட்டாலும் வயதில் மூத்தவராக இருந்தால் அவரை அண்ணாச்சி என்று அழைக்கும் வழக்கம் இருந்து வருகின்றது.

இன்று வயதில் மட்டுமன்றி வசதியில், பதவியில், செல்வாக்கில் உயர்ந்தவர்கள் கூட அண்ணாச்சி என்று தான் அழைப்பார்கள். மிகப்பெரிய நிறுவனத்தின் முதலாளியாக இருந்தால்கூட அவரிடம் வேலை பார்க்கும் ஊழியர்கள் உட்பட அவரை அண்ணாச்சி என்று அழைப்பது தான் வழக்கம் அதைத்தான் அவர்களும் விரும்புவார்கள். இன்றைக்குச் சென்னையில் பெயர் விளங்க நிற்கும் பல்வேறு நிறுவனங்களுக்கு, கடைகளுக்கு உரிமையாளர்களாக விளங்கும் நெல்லை மாவட்டத்துக்காரர்களை அனைவருமே அண்ணாச்சி என்றுதான் சொல்வார்கள். அண்ணாச்சிக்கடை என்றுகூட குறிப்பிடுவார்கள்.

"பெரிய அண்ணாச்சி வர்ற நேரம் ஆச்சு பாத்தாருன்னா. . ."

கமுக்கம், அமுக்கன், பொதுக்கன்.

ரகசியம் என்னும் சொல் தமிழ் இல்லை. ரகசியம் என்பதைக் குறிப்பதற்கு எத்தனையோ சொற்கள் இருந்தாலும் , நெல்லை மாவட்டத்தில் வழங்கும் ஷகமுக்கம் ஷஎன்னும் சொல் மிகச் சரியான பொருளைத் தருகிறது. விசயம் நமக்குள் இருக்கட்டும் கமுக்கமாய் வைத்துக்கொள்.கேட்டாலும் மனதிற்குள் அடக்கிக்கொண்டு எதையும் வெளியில் சொல்லாமல் இருப்பவனை நோக்கி "என்ன கமுக்கமா இருக்க?" என்று கேட்பார்கள்.

என்ன நடந்தாலும் யார் வந்து கேட்டாலும் தன் மனதிற்குள் இருப்பதை வெளியில் சொல்லாத வனை, குடும்பக் க்'டங்களை கூட வெளியில் சொல்லாத ஒருவனை சரியான'அமுக்கன்' என்று சொல்வார்கள்.

உடல் கொஞ்சம் பூசினாற் போல் இருக்கும் ஒருவனைக் குறிக்க குண்டன் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதைவிட நெல்லை மாவட்டத்தில் கிராமங்களில் ஷபொதுக்கன்' என்னும் சொல்லைப் பயன்படுத்துவார்.

ஓட்டலாட்டு, கொடக்கி

நன்றாக ஓடும் நிலையில் இல்லாத சைக்கிளுக்குத் திருநெல்வேலியில் வைத்த பெயர் ஓட்டலாட்டு சைக்கிள்.

நன்றாக இயங்கிக் கொண்டிருந்த ஒரு பொருளையோ வண்டியையும் சிறுவர்கள் நோண்டி இயக்கத்தை நிறுத்தி விட்டால் அம்மா கேட்பாள் கொடக்கிட்டயா?

வண்டியில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அதைக் கோளாறு எனும் வார்த்தை குறிப்பிடும். வயிற்று நோயை வயிற்றுக் கோளாறு என்றும் , ஒருவேளை பேய் பிடித்தது என்று முடிவுக்கு வந்தா அதையும் பேய் கோளாறு என்று கூறுவார்கள்

கோட்டி

நாய்க்கு வெறி பிடித்தால் பிற மாவட்டங்களில் வெறிநாய் என்று குறிப்பிடுவர். நெல்லை மாவட்டத்தில் கோட்டி நாய் என்று சொல்வார்கள்.

மனநிலை பாதிக்கப்பட்ட மனிதனை க்கிறுக்கன் என்று சொல்வதை விட கோட்டிக்காரன் என்று சொல்வதுதான் வழக்கம்.

சிலுப்பட்டை, சேக்காளி

ஏதோ ஒன்றில், தான் பெரியவனாக இருந்து அதை வார்த்தைகளில் அல்லது செயல்பாடுகளில் வெளிப்படுத்திக் கொண்டே இருப்பவனை, சிலுப்பட்ட்டை என்று சொல்வார்கள். பனைமரத்தில் உச்சியில் இருக்கும் குச்சிகளால் ஆன ஒரு பொருள் தான் சிலப்பட்டை. அது காற்றில் ஆடும்போது சத்தம் போட்டுக்கொண்டே இருக்கும்.

நண்பனைக் குறிக்க எத்தனைச் சொற்கள் இருக்கின்றன. ஆனால் நெல்லை மாவட்டத்தில் ஒரு அருமையான சொல் அதுதான் சேக்காளி . சேர்க்கை ஆளி. சேர்க்கை என்றால் நட்பு. சேர்க்கையை ஆள்பவன் சேக்காளி.

கட்டட வேலையில் கொத்தனாருக்கு உதவியாக இருப்பவனை பல்வேறு பகுதிகளில் சித்தாளு, நிமிர்ந்தாள் என்று அழைப்பார்கள். நெல்லை மாவட்டத்தில் மட்டும் கையாளு என்பார்கள்.

முடுக்கு, வளவு, பத்து

நெருக்கமாக இரண்டு சுவர்களுக்கு இடைப்பட்ட குறுகிய இடத்தை சந்து என்று கூறுவார்கள் பொதுவாக. சில ஊர்களில் இடுக்கு என்று கூறுவதும் உண்டு. ஆனால் நெல்லை மாவட்டத்தில் அது முடுக்கு.

வீட்டின் பின்பக்கம் தண்ணீர் பயன்பாட்டுக்கு என்று ஒரு சிறிய இடம் இருக்கும். கை கால் கழுவ அந்த இடத்தை வளவு எனும் சொல் குறிக்கும்.

நன்செய் நிலத்தை நெல்லை மாவட்டத்தில் பத்து என்னும் சொல்லால் குறிப்பிடுவர். மேற்குத் திசையில் உள்ளது மேலப்பத்து. தென்திசையில் உள்ளது தென்பத்து.

கொல்லைக்கு

வீட்டிற்குப் பின்புறம் கொஞ்சம் இடத்தை விட்டு வைத்திருப்பார்கள். அதில் வாதமடக்கி போன்ற மரங்களை வைத்து இருப்பார்கள். அல்லது ஏதாவது இரண்டு செடிகள் இருக்கும். அதன் பெயர் கொல்லை. ஒரு காலத்தில் அங்கேயே தானியங்கள் விளைந்து இருக்கலாம். வீட்டுக்கு வீடு கொல்லை இருக்கும்.

அந்தக் காலத்தில் காலைக்கடன் கழிப்பதற்கு வீட்டில் இன்று இருப்பது போல் கழிப்பறைகள் கிடையா. எனவே கொல்லை எனப்படும் இடத்தில் காலைக்கடன் கழிப்பது வழக்கமாக இருந்திருக்கிறது. அதனால் இப்போது காட்டுப் பகுதிகளில் சென்று காலைக்கடன் கழித்தால் சரி அல்லது கழிப்பறைகளில் கழித்தாலும் சரி கொல்லைக்குப் போறேன் என்று தான்

சொல்வார்கள். பிள்ளை கொல்லைக்கு போயிருக்கிறது. மூணு நாளா கொல்லைக்கு போகல .என்று வருத்தப்படுவதுண்டு.

கொல்லையை விட்டு ஊருக்கு ஒதுக்குப்புறமாக வெளியே சென்று வரும் பழக்கத்தை பின்பற்றிய பிறகுதான் வெளிக்கு போய் வந்தேன். குழந்தை வெளிக்குப் போய்விட்டான் என்று சொல்லும் பழக்கம் ஏற்பட்டு இருக்கும்.

<u>இரப்பாளி</u>

கோபத்தில் ஒருவனை இந்த வார்த்தை சொல்லித் திட்டுவார்கள். ரொம்ப நாளாக எனக்கு அர்த்தம் தெரியவில்லை. இப்போது புரிகிறது .இரவு என்றால் பிச்சை எடுத்தல். பிச்சை எடுத்துப் பிழைக்கும் தொழிலை செய்கிறாயா?. அதாவது பிச்சைக்காரப்பயலே என்று திட்டுவதற்காக , இரப்பாளி எனும் சொல் பயன்படுகிறது.

ஏராளமான கூட்டம் இது ஒரு மாவட்டத்தின் பழக்கம். நிறைய கூட்டம் இது சில இடங்களில். கூட்டம் அதிகமாக இருந்தால் அதைப்பார்த்து கொஞ்சம் கூட்டமா கொள்ளக் கூட்டம் என்பார்கள் மதுரையில். நெல்லை மாவட்டத்தில் எக்கச்சக்கமான கூட்டம். ஏக்கம் என்பதும் சக்கம் என்பதும் மிகப் பெரிய எண்களை குறிப்பிடுகிறது.

பாக்கி, மீதி, மீதி சில்லறை, சொச்சம் என்பதையெல்லாம் விட்டுவிட்டு நெல்லை மாவட்டத்தில் மிச்சம் என்ற வார்த்தையை மட்டும் பயன்படுத்துவார்கள்.

நண்பர்கள் இருவர் சேர்ந்து பேசினாலும், தோழிகள் சேர்ந்து பேசினாலோ பக்கத்து வீட்டுப் பெண்கள் ஒன்றாக அமர்ந்து பேசினா அதன் பெயர் நெல்லை மாவட்டத்தில் பழக்கம் விடுதல்.

உழைக்காமல் சும்மா இருந்து தின்பவனை மாப்பிள்ளை சோறு தின்பவன், வகுப்பறையில் கடைசி இருக்கை பெயர் மாப்பிள்ளை பெஞ்ச். தகப்பனுக்கு நெருங்கிய உறவினர்களை சொக்காரன் என்று சொல்வார்கள். விருந்தினரை விருந்தாடி என்று சொல்வதுண்டு.

சிறிய டீக்கடைகளில் கை கழுவும் இடம் எங்கே இருக்கிறது? என்று கேட்டா பிறத்தால போங்க என்று சொல்வார்கள். இச்சொல் பின்பக்கம் என்பது குறிக்கிறது.

<u>முடிவுரை</u>

பேச்சு வழக்கு வட்டாரந்தோறும் மாறுபடும் நிலையில், ஒவ்வொரு வட்டாரத்திலும் தனிப்பட்ட சொற்களஞ்சியத்தினைத் தொகுக்க முடியும். இது தவிர, கரிசல் வட்டார வழக்குச் சொற்கள், கொங்கு வட்டாரச் சொற்கள், செட்டிநாட்டு வழக்குச் சொற்கள், நாஞ்சில் நாட்டுச் சொற்கள் என்று ஏதோ ஒரு அடையாளத்தினை முன்னிறுத்தி,ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியை வட்டாரமாக அடையாளப்படுத்துவது சொற்கள் சார்ந்தது ஆகும். இத்தகைய வட்டாரங்களில் புழங்கும் வட்டார வழக்குச் சொற்கள் தொகுக்கப்பட்டு, தனி நூலாக அண்மையில் வெளியாகியுள்ளன. இவை போன்ற நூல்களும் கள ஆய்வின் மூலம் ஒவ்வொரு வட்டாரத்திலும் சேகரிக்கப்படும் சொற்களும் சொல் மூலங்களாக விளங்குகின்றன.

****

நெல்லை வட்டார சொற்களை கேட்க, இணையவும்:


https://www.youtube.com/watch?v=PKLq8cXMcxE


கரிசல்மண் பற்றிய தகவல்கள் அறிய, இணையவும்:

https://www.youtube.com/watch?v=I5yMOUsjoJE














ISBN 978-81-968802-1-7


கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

செட்டிநாட்டு வட்டார வழக்கு

Dr AR Arunachalam





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

Dr AR Arunachalm
Dean-Academic
Phase: II
Dr MGR Educational and Research Institute
Maduravoyal (Adayalampattu), Chennai – 600 095

செட்டிநாட்டு வட்டார வழக்கு

செட்டிநாட்டுத் தமிழ் (Chettinattu Tamil) என்பது தமிழ் மொழியின், வட்டார வழக்கு மொழியாகும். இந்த மொழியை தமிழகத்தின், தென்பகுதிகளான சிவகங்கை, காரைக்குடியைச் சுற்றி 96 ஊர்களை உள்ளடக்கிய செட்டிநாட்டுப் பகுதியில் பேசப்படுகிறது. இங்கு பெரும்பாலும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினர் வசிக்கின்றனர். நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் வழக்கு மொழியின் சிறப்பு, இன்றும் புழக்கத்தில் இருக்கும் பழம்பெரும் வார்த்தைகள் எனலாம். உதாரணம்: சீசா (Bottle), சவுக்காரம் (Soap) போன்றவை ஆகும்.



செட்டிநாட்டு மக்கள் என்போர், காரைக்குடி, திருப்பத்தூர், திருமயம் ஆகியவற்றுக்குட்பட்ட இடங்களில் வாழும் மக்களை குறிக்கின்றது. நிலப்பகுதியைப் பொறுத்தவரை இந்தப் பகுதி வறண்ட நிலப்பகுதி. அதனால், விவசாயத்தைவிட வியாபாரமே பிரதானம். பொதுவாக இப்பகுதியில் - குறிப்பாக நாட்டுக்கோட்டை நகரத்தார் - வாழ்வாதாரம் பொருட்டு பர்மா, கொழும்பு ஆகிய இடங்களுக்குச்சென்று வியாபாரம் செய்தனர். வணிகம் என்றாலே பயணம் தான். அதனால், பல்வேறு பகுதிகளிலிருந்து பல்வேறு பொருட்களை தருவித்துவரும் வசதி இருந்தது. அதனால், சமையல் கலை, கட்டிடக்கலை வெகுவாக இங்கு வளர்ச்சி பெற்றுள்ளது. உழைக்கும் மக்கள் உட்பட இங்கே வாழ்கின்ற அத்தனை பேராலும் ஆளப்படுகின்ற மொழி வழக்கைத்தான் பொதுவாக செட்டிநாட்டு வட்டார வழக்கு என்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒவ்வொரு வழக்கமுறைகள் உண்டு. அவ்வாறே இந்தப் பகுதியில் வாழும் சமூகங்களுக்கும் தனித் தனி வழக்கமுறைகள் உண்டு. இவற்றில் பணம் அதிகம் கொண்டுள்ளோருக்கு அவற்றை பெரிதாக செய்ய வாய்ப்புகள் உண்டு. பிறவற்றுக்கு இருக்காது.

மஞ்சுவிரட்டு என்ற சொல், சேதுபதி சீமை, தொண்டைமான் சீமை, வேலுநாச்சி சீமையில், புத்துணர்ச்சி பாய்ச்சும் ஒரு மந்திரச் சொல். பன்னூறு ஆண்டுகளாக இந்த விளையாட்டை போற்றி, அரவணைத்து தழுவிப் பிடித்து அடக்கி, வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், இன்றைய உழைக்கும் மக்களான, நேற்றைய போர்க்குடி மக்கள். ஏறு தழுவுதல் என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடும் வீர விளையாட்டு தான் மஞ்சுவிரட்டு. மஞ்சு என்றால் மழைமேகம் என்ற பொருளும் உண்டு. இங்கே, கரியநிறக் காளை என்ற பொருளில் ஆளப்படுகிறது. மஞ்சு விரட்டு என்றால் காளையை விரட்டிப் பிடிப்பது எனக் கொள்ளல் வேண்டும். ஏறு தழுவுதல், எருதுகட்டு, மாட்டு வண்டிப் பந்தயம் என்ற வரிசையில் முன்னணியில் நிற்கத் தகுதி வாய்ந்த சொல் மஞ்சுவிரட்டு. இராமநாதபுரம், சிவகங்கை,

புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த பலநூறு கிராமங்களில் பலநூறு வருடங்களாக நடக்கும் விளையாட்டு இது. அந்த மாவட்டங்களுக்கு உரிய விளையாட்டும் கூட!

தமிழ்மொழி தொன்மையும் தனித்துவமும் உடைய செம்மொழிகளில் ஒன்றாக இருந்தாலும் தன் தனிச்சிறப்பு இன்றும் வாழும் அதன் அழிவின்மையே. ஒவ்வொரு தளத்துக்கும் ஏற்ப மக்களால் விரிவுபடுத்தபப்ட்டு பயன்படுத்தபடுவதனூடாகவே அதன் 'சீரிளமைத்திறம்' வெளியாகின்றது என்றால் மிகையல்ல. அவ்வகையில் தமிழின் பல்வேறு வகைபேதங்களை நாம் இன்று காண்கிறோம். அதில் ஒன்று வட்டார வழக்கு. பொதுவாக, எல்லாமொழிகளுக்கும் வட்டார வேறுபாடுகள் உண்டு என்றாலும் வரைமொழிக்கும் உரைமொழிக்கும் உள்ள வேறுபாடும் வட்டார வேறுபாடுகளும் இத்தனை துலக்கமாக உள்ள இந்தியமொழி வேறு இல்லை. தமிழின் தீராத அழகுகளில் ஒன்று இது. நவீன காலத்துக்கு ஏற்ப தமிழ் மறு ஆக்கம் செய்யப்பட்ட காலத்தில் தமிழின் இந்த நுண்மைகளை களைந்து அதை சீராகத் தரப்படுத்தும் முயற்சிகள் நிகழ்ந்தன.

வட்டாரவழக்கு இலக்கியத்தில் மெல்ல அழுத்தமான இடம்பெற ஆரம்பித்தது. இரு படைப்பாளிகளை அதில் முக்கியமானவர்களாகக் கூறலாம் சொல்லலாம். நீலபத்மநாபன் முழுக்கமுழுக்க வட்டாரவழக்கிலேயே அமைந்த '***தலைமுறைகள்***' என்ற தன் முதல் புதினம் மூலம் ஒரு புதியவழியை திறந்தார். கி.ராஜநாராயணன் வட்டார வழக்குக்கான தீவிரமான முன்னோடி.



ஆகவே தமிழின் முன்னோடி படைப்பாளிகள் தமிழின் வட்டாரவழக்குக்கு முக்கியத்துவமளித்து அதிலுள்ள நுட்பங்களையும் அழகுகளையும் புனைகதைக்குள் கொண்டுவந்தார்கள். அ.மாதவையா அதில் முன்னோடி. ஆயினும் அதற்கு பெரும் வீச்சை அளித்தவர் புதுமைப்பித்தன். வட்டாரவழக்கின் அவசியத்திற்காக சலியாது குரல்கொடுத்து வந்தவர் இலக்கிய விமரிசகரான க.நா.சுப்ரமணியம். வட்டாரவழக்கு மக்களின் வாழ்க்கையுடன் நேரடியான தொடர்புடையது, அவர்களின் வாழ்க்கையின் அழகுகளையும் சிக்கல்களையும் உடனடியாக பிரதிபலிப்பது. உழைக்கும் மக்கள் உட்பட இங்கே வாழ்கின்ற அத்தனை பேராலும் ஆளப்படுகின்ற மொழி வழக்கைத்தான் பொதுவாக செட்டிநாட்டு வட்டார வழக்கு என்கிறார்கள்.

செட்டிநாட்டு வட்டார வழக்கு அகராதி பழனியப்பா சுப்ரமணியனின் தொகுப்பில் வெளிவந்துள்ளது. செட்டிநாட்டு உரைமொழிக்கே உரிய தனித்த சொற்கள் பெரும்பாலும் அடையாளம் காணப்பட்டு இதில் தொகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய சொல்லகராதிகள் மிகுந்த ஆர்வமூட்டுவன. இந்நூலில் செட்டிநாட்டுச் சடங்குகள் மற்றும் வாழ்க்கைமுறைகள் பற்றிய குறிப்புகள் பின்னிணைப்பாக உள்ளன. அத்துடன் செட்டிநாட்டு மொழிக்கு சிறந்த படைப்பிலக்கிய உதாரணமான ப.சிங்காரத்தின் புயலிலே ஒரு தோணியில் உள்ள சில உரையாடல் பகுதிகளும் எடுத்து அளிக்கப்பட்டுள்ளன.

ஒரு வட்டாரவழக்கு அகராதி பலவகையான கற்பனைகளை தூண்டிவிடுவது. நாம் அதில் நுண்ணிய முறையில் புதைந்துகிடக்கும் பல்வெறு பண்பாட்டு அம்சங்களை வாசித்து எடுக்க முடியும். மேங்கோப்பு என்றால் ஒரு வீட்டின் மேல்மாடி மட்டும். மாளிகைகள் நிறைந்த

செட்டிநாட்டில் மட்டுமே இப்படி ஒரு சொல்லாட்சி உருவாக இயலும். இன்று தொலைக்காட்சி போன்ற பொது ஊடகங்களின் ஆதிக்கத்தால் தமிழின் வட்டார இயல்புகள் அழிந்து பொதுமொழி உருவாகிவரும் காலகட்டம். இத்தகைய பண்பாட்டுக் கூறுகல் விரைவிலேயே அழிந்துவிடக்கூடும். அவற்றை பதிவுசெய்து தொகுக்கும் பணி மிக முக்கியமான கலாச்சாரக் கடமை.

செட்டிநாட்டு வட்டாரத்தில் மிகச் சிறந்த சொல்லாக ‘ஆத்தா’என்ற சொல்லைக் கூற வேண்டும். இது பெற்றவளை விளிக்கும் சொல் ஏழுகிளைச் சீமையின் அத்தனை ஆண்களும் தங்கள் தாயை, தமக்கையை, தங்கையை, மகளை, அக்கா மகள்களை, தங்கை மகள்களை, பேத்தி களை, மருமகள்களை வாய் நிறைய மனம் நிறைய அழைக்கும் சொல், அருள் நிறைந்த சொல், அன்பின் ஈரம் கசியும் சொல் இது. மனைவியைத் தவிர அத்தனை பெண்களையும் அழைக்கத்தக்க மாசற்ற வார்த்தை இது. காமத்தின் நிழல்கூட நெருங்க முடியாத கருவறை மூலச்சொல்.

யாய், ஞாய், தாய் என்று தன்னிலை முன்னிலை படர்க்கையில் பதிவான பெற்றவளைக் குறித்த இலக்கியப் பதிவுகள், இங்கே நாத்தா, நோத்தா, ஆத்தா என்று பேச்சு மொழியாக வட்டார வழக்காக ஆளப்படுகின்றன. இவற்றைப் போன்றே எந்தை, நுந்தை, தந்தை என்பவை நய்யா, நொய்யா, அய்யா என்று பேசப் பட்டன; அம்மா அப்பா என்ற சொற்களின் ஆதிக்கத்தால் அவை மிகச் சிறுபான்மையாகி விட்டன. தந்தையின் தாயை விளிக்கப் பயன்பட்ட ‘அய்யத்தா’என்ற சொல்லை நூறு ஆண்டு களுக்கு முன்னே துரத்திவிட்டது அப்பத்தா என்ற சொல்.

தந்தையின் தாயைக் குறித்த அப்யத்தா என்ற சொல்லையும் தாயின் தாயைக் குறித்த ஆயா என்ற சொல்லையும் இப்போது பரணுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது பாட்டி என்ற சொல்.



கீழ்காணும் பேச்சு வழக்கு செட்டிநாட்டிற்கே உரிய பாங்கு:

மணி ஒன்பதைக் கடந்தது.

- ✓ “தூரத்தில் இருந்து மகனோ மகளோ வர வேண்டி இருக்கோ?” அருகில் இருந்த உள்ளூர்க் காரரிடம் கேட்டேன்.
- ✓ கெழவிக்குப் புள்ளை குட்டி இல்லை”
- ✓ ஒம்போதைத் தாண்டிருச்சு. இன்னமும் பாடை கட்டலையே...?”
- ✓ கெழவிக்கு கல்யாணம் ஆகலை. கல்யாணம் ஆகாதவங்க அரை மனுஷிதானே... அரை மனுஷிக்கு பாடை கட்ட மாட்டம்ல! அந்தாக் கெடக்கில்ல கம்பு, அதுல ஒரு சீலையைத் தொட்டியாக் கட்டி, தூக்கிட்டுப் போயி செம்மிப்பிட்டு வர வேண்டியது தான்!”
- ✓ ஏன் கல்யாணம் நடக்கலை?”
- ✓ கன்னிமாப் பொண்ணை யாரு கட்டிக் கொடுப்பாக? யாரு கட்டிக்கினு போவாக?
- ✓ வெளங்கலை!” என்றேன்
- ✓ கன்னிமாப் பொண்ணுனா யாருனு தெரியாமக் கேக்கிறயனு நெனைக்கிறேன். கன்னிமாப் பொண்ணுனா புஷ்பவதி ஆகாத பொண்ணுனு அர்த்தம்!” என்றார் அவர்.

<u>செட்டிநாட்டு வட்டார வழக்கிலுள்ள சில சொற்கள்:</u>

வட்டார சொற்கள்	பொருள் மற்றும் விளக்கம்
அகராதி பேசாதே	குதர்க்கமாக பேசாதே, தாறுமாறாகப் பேசாதே
அங்ஙனே	அங்கு, அந்த இடத்தில்
ஆகச்சே	ஆகையால்
ஆத்தி	வியப்பு / பயத்தைக் குறிக்கும் சொல்
இங்ஙனே	இங்கு, இந்த இடத்தில்
இத்துனூண்டு	மிகமிகச் சிறியது
ஈரெட்டு	நிச்சயமில்லாத, உத்தேசமான
ஈரங்கி	நீதிமன்ற விசாரணை நாள்
உக்கி	தோப்புக்கரணம்
உள்ளது போல	சுமாரான, அழகில்லை என்று நேரடியாகச் சொல்வதைத் தவிர்க்கும் சொல் (பெண் உள்ளது போல இருக்கும்)
ஊத்தம்	திமிர், கொழுப்பு
ஊர்பட்ட	ஏராளமான, அதிகமான
எங்கிட்டு	எங்கே? எந்தப் பக்கம்?
எதவான குடும்பம்	சுமாரான, பெரும் வசதியில்லாத குடும்பம்,
ஏகப்பட்டது	ஏராளமானது, அதிகமானது
ஏடா கூடம்	முறைகேடு, விதிக்கு மாறாக
ஐந்தொகை	வரவு செலவு கணக்கு
ஐயுரவு	கூச்சம், சந்தேகம்
ஒட்டுதல்	நெருங்கி உறவாடுதல், பற்றுடன் பழகுதல்
ஒப்பேறாது	பொருந்தாது, சரிப்பட்டு வராது
ஓட்டைவாய்	ரகசியத்தை பாதுகாக்க தெரியாதவன்
ஓயா மடம்	ஓய்வில்லாமல் அன்ன தானம் செய்யும் இடம்
கச்சிதம்	சரியானது, பொருத்தமான அளவு
கண்ட மேனிக்கு	வரன்முறை இல்லாமல், இஷ்டப்படி
சங்காத்தம்	உறவு, தொடர்பு
சல்லிப்பயல்	கீழத்தரமானவன்
தட்டுக்கெட்டு	சீர் கெட்டு
தட்டுக்கெட்டவ	ஒழுக்கமில்லாத பெண்
நஞ்சபயக	கஞ்சன், தரமில்லாதவன்
நறுவிசா இல்லை	சிறிதுகூட இல்லை, துளிக்கூட இல்லை
பசப்புதல்	காரியம் நிறைவேற்றிக்கொள்ள நயமாக அல்லது மயக்கிப் பேசுதல்
பதவிசு	நிதானம் (பதவிசான பொண்ணு, குடும்பத்துக்கு ஏத்தவ)
மல்லுக்கட்டு	சண்டை போடுதல், வன்முறையில் ஈடுபடுதல்
மறுக்கா	மறுமுறை
யாது	நினைவு, ஞாபகம்
ரத்தினக்கம்பளம்	சிறிய வெல்வெட் சமுக்காளம்
ரோக்கா	சிட்டை, மளிகைக்கடை ரோக்கா
லண்டி	பொல்லாதவள், வம்பு செய்பவள்
லேக்கு	இலக்கு, இடம்
வக்கணை	ருசியாக, விரும்பிய வகையில்
வக்கத்தவன்	பணம் இல்லாதவன், வசதியற்றவன்

1990-இல் சுப சண்முகம் எழுதிய “**செட்டி நாட்டில் தமிழ் வழக்கு**” என்னும் நூல் வெளியானது. பின்பு பழநியப்பா சுப்பிரமணியன் எழுதிய, “**செட்டிநாட்டு வட்டார வழக்குச்சொல்லகராதி**” எனும் நூல் 2006-இல் வெளியிடப்பெற்றது. “**செட்டி நாட்டில் தமிழ் வழக்கு**” எனும் நூல் தன்னகத்தே பழமொழிகள், இணைச்சொற்கள், மரபுத்தொடர்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருக்கின்றது. ஆனால், சுப்பிரமணியத்தின் நூல் இன்னும் சில கூடுதலான சொற்களையும் வேறு பல அரிய பதிவுகளையும் கொண்டிருக்கின்றது.

"***செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொல்லகராதி***" எனும் நூலை பதிவிறக்கம் செய்ய, கீழ்க்கண்ட இணையதளத்தை, அணுகவும்:

செட்டிநாட்டு வட்டார வழக்குச் சொல்லகராதி : இணையவும்

https://www.tamildigitallibrary.in/admin/assets/book/TVA_BOK_0002507_%E0%AE%9A%E0%AF%86%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81_%E0%AE%B5%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BE%E0%AE%B0_%E0%AE%B5%E0%AE%B4%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81_%E0%AE%9A%E0%AF%8A%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%95%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%BF.pdf

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கொங்கு வட்டார வழக்கு

Dr K Senthilkumar





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

Dr K Senthilkumar
Dean-Administration
Phase: II
Dr MGR Educational and Research Institute
Maduravoyal (Adayalampattu), Chennai – 600 095

கொங்கு வட்டார வழக்கு

தமிழில் தற்காலத்தில் குறிக்கப்படும் வட்டார வழக்குகள் எல்லாமே ஒரே மதிப்புடையவை. இருப்பினும் கரிசல் வட்டார வழக்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகக் கருதப்படுகின்றது. அதற்குக் காரணம் கரிசல் வழக்கை நூல்களில் பதிவு செய்தவர் கி.ராஜநாராயணன்.

கிராவுக்கு தம் மண்ணின் மீது இருந்துள்ள பற்றை அவருடைய எழுத்துகளின் மூலை முடுக்குகளில் எல்லாம் அறியலாம். நல்லவர், கெட்டவர் என எல்லோரையும் இனங்கண்டுள்ளார். ஒட்டுமொத்தமாகக் கரிசல் காட்டு மக்களைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

என்னுடைய இந்த மக்களிடத்தில் அன்பு இருக்கின்றது. பிரியமிருக்கிறது.
பூமி வறண்டிருந்தாலும் மனசில் ஈரம் இருக்கிறது.
வேட்டி கருப்பாக இருந்தாலும் மனசு வெள்ளையாக இருக்கின்றது.
உடம்பு அழுக்காக இருந்தாலும் நாக்கு சுத்தமாக இருக்கின்றது. (கரிசல் கதைகள், ப.4)



கரிசல் வட்டார இலக்கியம் வளர்ச்சி அடைந்ததன் தாக்கத்தால் தான் தமிழ் மொழியின் பிற வட்டார வழக்குகளிலும் இலக்கியங்கள் வளர்ச்சி அடைந்தன. பழமொழி, விடுகதை, வழக்குச் சொற்கள் போன்றவை காலங்காலமாக இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டாலும் கி.ராஜநாராயணன் வழியாகவே வட்டார வழக்கு இலக்கியம் பேரளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. எனவே தான் கிரா வட்டார வழக்கிற்கு ஓர் அண்ணல் ஆகின்றார். இவருக்கு முன்னத்தி ஏர் கு.அழகிரிசாமி என்றாலும் இவர் அளவிற்கு அவர் எழுதவில்லை (கரிசல் கதைகள் 2002:6).

வட்டார வழக்கு என்பதைக் கையின் விரல்களைப் போலக் குறிப்பிடலாம். எல்லோருக்கும் தெரியும் சொல், புரியும் பொருள் என்பவை பொது மொழி உள்ளங்கை என்றால் வட்டார வழக்குகள் விரல்கள். சுண்டு விரல், மோதிர விரல், நடுவிரல், ஆள்காட்டி (சுட்டு) விரல், கட்டை விரல் எனப் பெயர்கள் இருக்கின்றன. கரிசல் வட்டார வழக்கு, நாஞ்சில் நாட்டு வட்டார வழக்கு, செட்டி நாட்டு வட்டார வழக்கு, சோழ நாட்டு வட்டார வழக்கு, கொங்கு நாட்டு வட்டார வழக்கு எனத் தமிழுக்குப் பல வட்டார வழக்குகள் இருக்கின்றன.

ஒரு சொல்லுக்கு உள்ள பொதுப்பொருளோடு இன்னொரு பொருளைப் பெற்றிருப்பதாலும் பிற வட்டார வழக்கில் இல்லாமல் அந்த வட்டார வழக்கில் மட்டுமே பல சொற்கள், பழமொழி, விடுகதை போன்றவை இருப்பதாலும் தனித்தனி வட்டார வழக்குகள் ஆகும்.

வட்டார வழக்குச் சொல் என்பதற்கான வரையறை என்ன ? மொழியியல் சார்ந்த விளக்கங்களை விவரிக்கப் புகவில்லை.இயற்கை அமைப்புகளால் நாடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது . அப்பிரிவுகள் அரசாட்சியாலும் அமைவதுண்டு அல்லது அரசாட்சியால் நிலைப்படுத்தப்படுவதுண்டு . ஆனால் இயற்கை அமைப்பே பிரதானம் . நிலத்தின் தன்மை , நீர்நிலைகள் , வாழிடங்கள் ஆகியவற்றைப் பொறுத்து வேளாண்மை , தொழில்கள் , வாழ்நிலைகள் அமைகின்றன. இப்படிப்பட்ட பகுதியே வட்டாரம் எனப்பெறுகின்கிறது.

கொங்குத் தமிழ் (முழபெர வுயஅடை) அல்லது கோயம்புத்தூர் தமிழ் என்பது கொங்கு நாட்டில் பேசப்படும் வட்டார வழக்கு மொழியாகும். இவ்வட்டார வழக்கு மொழியை கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல் மாவட்டத்தின் வட பகுதிகள் ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மக்களால் பேசப்படுகிறது.

கோவை வட பகுதிகளுடன் சேலம் பகுதிகள் சில இணைக்கப்பட்டன. தென் பகுதி தாராபுரத்தை தலைமையிடமாக கொண்டு அமைக்கப்பட்டது. 1804 ஆம் ஆண்டு கோவை மாவட்டமாக உருவானது. 1866ஆம் ஆண்டு நகராட்சியானது. அப்போதைய மொத்த மக்கள் தொகை 24,000 ஆகும். அதன் பிறகு வளர்ச்சி பெற்று 01.05.1981 ஆம் ஆண்டு மாநகராட்சியாக மாற்றம் செய்யப்பட்டது. தற்போது மொத்த மக்கள் தொகை 34,58,045 (2011ல் கணக்கெடுப்பு), ஆண்கள் – 17,29,297,பெண்கள் – 17,28,748. தொழில் துறை வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் முக்கிய காரணமாக இருப்பது சாலை வசதி, விமானம், இரயில் போக்குவரத்து மற்றும் இங்கு தடையின்றி பெறப்படும் குடிநீரும், மின்சாரமும் ஆகும்.



கொங்கு வட்டார பேச்சுவழக்கின் தூய வடிவம், வார்த்தை பயன்பாடுகள் கொங்கு மண்டலத்தின் பெரும்பான்மை மக்களான கொங்கு வெள்ளாளர் கவுண்டர் சமூகத்தால் மற்றும் 3-4 நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்த பகுதியில் வாழ்ந்த பூர்விக மக்களால் பேசப்படும் பேச்சுவழக்கு ஆகும். இது கொங்கு மண்டலம் முழுவதும் பொதுவானது ஆனால் சிறிய பிராந்திய மாறுபாடு கொண்டது. பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டை பகுதியில் குறிப்பிடத்தக்க மலையாளிகள் மற்றும் செட்டியார் இருப்பதால், வட்டார பேச்சு வார்த்தைகள் மாற்றப்பட்டுள்ளன. மேட்டுப்பாளையம் பகுதியில், படுகர் சமூகத்தின் குறிப்பிடத்தக்க மக்கள்தொகை காரணமாக, பிராந்திய பேச்சுவழக்கு முழு உச்சரிப்பில் இல்லை. காரமடை, சத்தியமங்கலம், ஈரோடு, சேலம் மற்றும் தர்மபுரி பகுதிகளில் குறிப்பிடத்தக்க கன்னடம் பேசுபவர்கள் இருப்பதால், பேச்சுவழக்கு சற்று மாறுபடுகிறது. கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், சேலம் மற்றும் கரூர் போன்ற தொழில் நகரங்களில், தமிழகத்தின் தென் மாவட்டங்கள் மற்றும் பிற பகுதிகளில் இருந்து ஏராளமான தொழிலாளர்கள் வருவதால், பேச்சுவழக்குகள் கணிசமாக மாறிவிட்டன. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமங்களில் வசிக்கும் மக்கள் மட்டுமே சுத்தமான பேச்சுவழக்கில் சரியான தொனி மற்றும் சொற்களஞ்சியத்துடன் கொங்கு தமிழில் பேசுகிறார்கள்.



தமிழின் சிறப்பு 'ழ' என்பது போல் கொங்குத் தமிழின் சிறப்பு 'ற' மற்றும் 'ங்' என்பனவாகும். என்னுடைய, உன்னுடைய என்பதை என்ற, உன்ற என்றும், என்னடா என்பதை என்றா என்பார்கள். சாப்பிட்டுவிட்டு, குளித்துவிட்டு என்பனவற்றை சாப்டுபோட்டு, "தண்ணிவார்த்துகுட்டு", 'தண்ணிஊத்திக்கிட்டு' என்று கூறுவார்கள்.

மரியாதை கொடுத்துப் பேசும் தமிழ் கொங்குத் தமிழ். ஏனுங்கோ, சொல்லுங்கோ, வாங்கோ, போங்கோ என்று எதிலும் 'ங்கோ' போட்டு மரியாதையாகப் பேசுவார்கள். பெரியவர்களிடம் பேசும் போது 'ங்கோ' என்பதற்கு பதில் 'ங்' போட்டும் பேசுவார்கள். சொல்லுங், வாங், போங், சரிங், இல்லீங் என்று 'கோ' வை சொல்லாமல் முழுங்கி விடுவார்கள்.

கொங்கு தேசத்துச் சொலவடைகள்

இவற்றைப் பழமொழிகள் என்னும் வட்டத்துக்குள் கொண்டுவர முடியும் என நான் நினைக்கவில்லை. இச்சொலவடைகள் பெரும்பாலானவை ஏதேனும் ஒரு நாட்டுப்புறக் கதையின் எச்சமாக தொக்கி

நிற்கின்றன. முதலில் கதைகள் அழிந்துவிட மிச்சமான வாக்கியங்கள் மட்டுமே “பட்டிக் காட்டு” ஆட்களோடு புழங்கித் திரிகின்றன.

1. அறுக்கமாட்டாதவன் இடுப்பைச் சுத்தி அம்பதெட்டு அருவாளு.
2. பழைய குருடி கதவத் தெறடின்னு.
தவறாக நடந்து மாற்றி நன்றாக செய்துவிட்டு, மீண்டும் தவறாக்கும் போது ”பழைய குருடி கதவத் தெறடிங்குற கதை ஆயிருச்சு”என்று சொல்வார்கள்.
3. மொசப் புடிக்கிற நாய் மூஞ்சிய பார்த்தா தெரியாதா?
4. நான் புடிச்ச மொசலுக்கு மூணு காலுங்காத.
5. நாய்க்கு பேரு முத்துமாலை.
பொருத்தமில்லாத ஒன்று என்றால் எள்ளலாக ”நாய்க்கு பேரு முத்துமாலையாமா” என்பார்கள்.
6. செத்தவன் கையில வெத்தல பாக்கு கொடுத்த மாதிரி
7. ஆனதுக்கு சொன்னா அறிவுண்டு நெனவுண்டு. ஆகாவழிக்குச் சொன்னா இல்லிடத்தையும் தோத்துட்டுப் போக வேண்டியதுதான்.
அறிவுரை கூட உருப்பட வாய்ப்பிருப்பவனுக்குத்தான் கொடுக்க வேண்டும்.
8. ஆடமாட்டாதவன் நெலம் கோணைன்னு சொன்ன கணக்கா இருக்குது.
(கோணை - கோணல்)
9. நாயக் குளிப்பாட்டி நடுவூட்டுல வெச்சாலும் நாக்கத் தொங்கப் போட்டுட்டு இட்டாரிக்குத்தான் போகும்.
10. கெழவன் கோமணம் கட்டுன மாதிரி
11. அழுதழுது பெத்தாலும் அவதான் பெக்கோணும்.
(பெக்கோணும் - குழந்தை பெறுதல்)
12. பொழப்பு கெட்ட நாசுவன் பொண்டாட்டி தலைய செரச்சானாம்.
13. பொழக்கிற புள்ளைய பேல உட்டு பார்த்தா தெரியாதா?
14. எல்லோரும் சிரிச்சாங்கன்னு பூனை பொடக்காலில போயி சிரிச்சுதாம்.

15. மொளச்சு மூணு எலை உடல.
வயதில் சின்னவர்கள் ஏதேனும் பிடிக்காத காரியத்தைச் செய்யும் போது உபயோகிப்பது.
16. எங்கயோ போற மாரியாத்தா எம் மேல வந்து ஏறாத்தாங்குற கதையா
17. நட்டாத்துக்கு போனாலும் நாய்க்குச் சலக்குத் தண்ணிதான்.
நடு ஆற்றுக்குச் சென்றாலும் நாய் “சலக் சலக்” என்று நக்கித்தான் குடிக்கும்.
என்னதான் புகழ், பணம் கிடைத்தாலும் அவனவன் அவனவன் தகுதிக்கு ஏற்பதான் நடப்பார்கள்.
18. புது வட்டலக் கண்டா நாய் எட்டு வட்டல் தண்ணி குடிக்குமாம்.
(வட்டல் - தட்டம்)

இங்கு சில சொற்கள் கீழ்க்கண்ட சொல்லகராதியிலிருந்து தரப்பெற்றுள்ளன:

கொங்கு வட்டாரச் சொல்லகராதி by Perumal Murugan https://www.tamildigitallibrary.in/admin/assets/book/TVA_BOK_0007515_%E0%AE%95%E0%AF%8A%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81_%E0%AE%B5%E0%AE%9F%E0%AF%8D%E0%AE%9F%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%9A%E0%AF%8D_%E0%AE%9A%E0%AF%8A%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%95%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%BF.pdf

கொங்கு வட்டார வழக்கு அகராதி

1. பொழுதோட - மாலை நேரத்தில் (பொழுதோட அந்த வேலையை முடிக்கிறேன்)
2. கோழி கூப்பிட - அதிகாலை நேரம்
3. பொறகால - பின்புறம் (ஊட்டுக்கு பொற்கால பொடக்காலி இருக்குது -வீட்டின் பின்புறம் காலிபுறம் இருக்கிறது.)
4. பொடக்காலி- புறம் காலி (புறம் காலி என்பது காலி புறத்தின் முற்றுப் போலி) ஜகாலி இடம் ஸ்ரீ கொல்லைப் புறம்ஸ
5. அம்மணி - பெண்மணியைக் குறிக்கப் பயன்படும். பொதுவாக சகோதரி உறவுமுறை.

6. வெடுக்குனு இருக்குது- சுகமாக இருக்கிறது. வெந்தண்ணில தண்ணி வார்த்தா வெடுக்குனு இருக்கும் (சுடு நீரில் குளித்தால் சுகமாக இருக்கும்) வெடுக்குன்னு - விரைவாக (என்ற பேனாவ வெடுக்குன்னு புடுங்கிட்டான்- என் எழுதுகோலை சட்டென்று பறித்துவிட்டான்)
7. என்றது - என்னுடையது.
8. உன்றது - உன்னுடையது.
9. அப்பச்சி- தாய்வழி தாத்தா
10. அப்பாரு- தந்தை வழி தாத்தா.
11. அமத்தா, அம்மச்சி, அம்மாயி- தாய்வழி பாட்டி
12. அப்பத்தா, ஆயா- தந்தைவழி பாட்டி
13. விசுக்குன்னு - திடீரென்று (அவன் விசுக்குனு கௌம்பிட்டான். -அவன் திடீரென்று கிளம்பிவிட்டான்)
14. நடவை - வெளிப்புறக் கதவு
15. வட்டல்- தட்டு
16. நருவசா- முழுவதுமாக
17. ஸோலி- பணி (கானங்காத்தால கடை கடையா என்ன ஸோலி உனக்கு?)
18. மடார் - உடனடியாக (ஒரு வேலையச் சொன்னா மடார்ன்னு முடிச்சுட்டு வேற ஸோலியப் பாரு)
19. மோந்துட்டு - மொண்டு (குடுவையில் நீர் மொண்டு வருதல்)
20. ஒட்டுக்கா - இணைந்து (ரெண்டு பேரும் ஒட்டுக்கா போயிட்டு வாங்க - இருவரும் இணைந்து சென்று வாருங்கள்)
21. மொளவு சாறு- மிளகு சாறு என்பதன் மாறுபாடு (அசைவக் குழம்பைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகிறது)
22. எகத்தாளம் - திமிரு.·. நக்கல் (பெரியவங்க கிட்ட எகத்தாளமா பேசாதே)
23. இட்டாரி.·. இட்டேரி - தெரு. (கிராமப்புறங்களில் குறிப்பாக மண் சாலை)
24. அவுறு - அவிழ்த்தல் (கயிற்றை அவிழ்த்து விடு)
25. அவத்தைக்கு - அங்கே
26. இவத்தைக்கு - இங்கே
27. சலவாதி - மலம்.
28. போச்சாது- "பரவாயில்லை விடு" என்பது போல (ஏதாவது பொருள் தொலைந்து விடும் பட்சத்தில் போச்சாது விடு என்று ஆறுதல் படுத்துவார்கள். போய்ச் சாகிறது என்ற சொல் இப்படி மாறி இருக்கலாம் என்பது என் தீர்மானம்)
29. போசி- பாத்திரம்




30. அலுங்காம -அசைக்காமல் (போசிய அலுங்காம எடுத்துட்டு வா - பாத்திரத்தை அசைக்காமல் எடுத்து வா)
31. சிந்திடாம - உதிராமல்.·.கீழே கொட்டாமல் (அரிசி சிந்தாம அள பார்க்கலாம்)
32. மலக்காகிதம் - மழைக்காகிதம் - பாலிதீன் காகிதம்
33. பொறவு - அப்புறம். (கடைக்கு பொறவு போறேன்)
34. வெசனம் - வருத்தம்.·.சோகம் (ஏண்டா அவன் வெசனம் புடிச்சு உக்காந்திருக்கான்?)
35, 36. கருமாந்திரம் - கருமாதி என்பதாக இருக்கலாம். பிடிக்காத ஒரு நிகழ்வில் கருமாந்திரம், கெரகம் என்ற இரண்டு சொற்களும் அடிக்கடி உபயோகிக்கப் படும். (கருமாந்திரம் புடிச்சது)
37. பொசுக்குனு - சடக்கென்று (இவனுக்கு பொசுக்கு பொசுக்குன்னு கோபம் வந்துடும்)
38. பொக்குன்னு - வருத்தமாக (முட்டாய் தரன்னு சொல்லிட்டு தராம இருந்தா குழந்தை பொக்குன்னு போயிடும்)
39. பவுடு- கீழ் அன்னம் (லோலாயம் பேசாதடா. பவுட்ட பேத்துடுவேன்)
40. தாவாக்கட்டை- கீழ் அன்னம்.
41. சீவக்கட்டை- விளக்குமாறு
42. கூமாச்சி- கூர்மையாக
43. தொறப்பு - பூட்டு
44. தொறப்புக் குச்சி - சாவி
45. மண்டு விடுதல்- சிறுநீர் கழித்தல்
46. வெடுக்குனு = வெடுக்கெண்டு
47. என்றது = என்ர
48. உன்றது = உன்ர
49. அப்பச்சி = அப்பு அல்லது அம்மப்பா
50. அப்பாரு = அப்பு அல்லது அப்பப்பா
51. அமத்தா = ஆச்சி அல்லது அம்மம்மா
52. அப்பாத்தா = ஆச்சி அல்லது அப்பாச்சி
53. ஸோலி = சோலி
54.விசுக்குன்னு = விறுக்கெண்டு
55. பொசுக்குனு = பொசுக்கெண்டு
56. பொறவு = பிறகு, பேந்து
57. தொறப்பு = திறப்பு
58. வெசனம் = விசனம்

- மேலும் அறிய, கீழ்க்கண்ட இணையதளத்தில், இணையவும்

Research Paper: **கொங்கு வட்டார நாவல்களில் நாட்டுப்புறக் கூறுகள்**

https://www.tamilaivugal.org/TamilPhd/TamilPalkalaikazhagaAayvugal?universityResearchId=973

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

வட்டார வழக்கு ~ ஒரு கண்ணோட்டம்

பேராசிரியர் சி.பி.பழனிவேலு





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

பேராசிரியர் சி.பி.பழனிவேலு
பதிவாளர்
டாக்டர் எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
மதுரவாயில், சென்னை – 600 095

வட்டார வழக்கு - ஒரு கண்ணோட்டம்

முன்னுரை

ஒரு மொழியானது மனிதன் வாழுமிடம், தட்பவெப்பநிலை, சூழ்நிலை, அன்றாட வாழ்க்கை ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது. இயற்கைச் சூழல், போக்குவரத்துக் காரணமாக, ஒரே மொழி பேசும் மக்களிடையே மொழியை ஒலிப்பதில் வேறுபாடுகள் தோன்றுவது இயற்கை. இதனால் ஒரு மொழியிலிருந்து கிளை மொழிகள் தோன்றுகின்றன. இத்தகைய கிளை மொழிகள் வட்டார வழக்கு என்று அழைக்கப்பெறுகின்றன. சங்க காலத்திலேயே வட்டார வழக்கு இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன.

இவ்வாறு பல்வேறு வட்டார வழக்குகள் நிரம்பிய ஒரு தமிழகத்தினைக் காணமுடிகின்றது. எழுத்து வடிவில் தமிழகமெங்கும் பொதுத் தமிழே வழக்கிலுள்ளது. பேச்சு வழக்கு வட்டாரந்தோறும் மாறுபடும் நிலையில், ஒவ்வொரு வட்டாரத்திலும் தனிப்பட்ட சொற்களஞ்சியத்தினைத் தொகுக்கின்ற வாய்ப்பு உள்ளது. ஆகவே, கரிசல் வட்டார வழக்குச் சொற்கள், கொங்கு வட்டாரச் சொற்கள், செட்டிநாட்டு வழக்குச் சொற்கள், நாஞ்சில் நாட்டுச் சொற்கள் என்று பல வட்டார வழக்குச் சொற்கள் உருவாகின.

சாதி வழக்குச் சொற்கள்

இந்தியாவில் வாழும் மக்கள் சாதி அடிப்படையில் வேறுபட்டுள்ளனர். ஒவ்வொரு சாதியினரும் தனித்த அடையாளத்தினைப் பின்பற்றி வருகின்றனர். மேலும், குறிப்பிட்ட சாதிக்குள் மட்டும் மணஉறவு கொள்வதால், அவர்களிடையே நிலவும் பேச்சு மொழி தனித்து விளங்குகிறது. தமிழகத்தில் பெரும்பான்மையாக ஒரே மாவட்டத்தில் வாழும் சாதியினரின் மொழியானது தனிப்பட்ட வழக்குடையது.

சமய வழக்குச் சொற்கள்

சமய அடிப்படையிலும் தமிழானது தனித்த அடையாளத்துடன் விளங்கி வருகின்றது. ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னர் மொழி பெயர்க்கப்பெற்ற கிறிஸ்தவ வேத மறையான விவிலியத்தில் காணப்பெறும் சமஸ்கிருதம் தழுவிய சொற்கள், இன்றும் கிறிஸ்தவர்களிடையே வழக்கிலுள்ளன. கிறிஸ்தவர்கள் வழிபாட்டுக் கூட்டங்களிலும் ஜெபக் கூட்டங்களிலும் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் அவர்களால் மட்டுமே பயன்படுத்தப்பெறுகின்றன. விவிலியத்தில் உள்ள சொற்கள் புனிதமாக்கப்பட்டு விட்டன.

இஸ்லாமியர்கள் தொடக்கத்தில் அரபி மொழியின் வழியே இறைவனைத் தொழுது வந்தனர். அண்மைக் காலமாகத் தமிழிலும் வழிபாடு நடத்துகின்றனர். அதற்குத் துணையாக குரானைத் தமிழாக்கியுள்ளனர். எனினும் அரபி மொழியிலுள்ள முக்கியமான சொற்களைத் தமிழுடன் கலந்து பயன்படுத்துகின்றனர். அரபிச் சொற்களை இயல்பாகக் கலந்து பேசுகின்றனர்.

தொழில் வழக்குச் சொற்கள்

ஒருவர் செய்கின்ற தொழில் காரணமாக அவர் தொழில் செய்யும் வட்டாரத்தில் தனிப்பட்ட சொற்களைப் பயன்படுத்துவது வழக்கமாக உள்ளது.அடிப்படைத் தொழில் நுட்பம் சார்ந்து கைவேலைக்கு முக்கியத்துவம் தரப்படும் மரவேலை,சிற்ப வேலை,இரும்பு வேலை, கொத்து வேலை போன்ற வேலை செய்திடும் தொழிலாளர்கள் தாங்கள் புழங்கிடும் கருவிகள், தொழில் நுட்பம் சார்ந்த வேலையினுக்குத் தனிப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர். உழவர்கள், மீனவர்கள், உப்பளத் தொழிலாளர்கள், கோயில் அர்ச்சகர்கள் போன்றோரும் தொழில் அடிப்படையில் சொற்களைப் பயன்படுத்துவது கண்கூடு.

கி ராவின் நூல்கள்

இவரது அனைத்து நூல்களும் வட்டார வழக்கினைச்சார்ந்தே அமைந்துள்ளன. அவைகளுள் மிகவும் புகழ்பெற்ற இரு நூல்களின் இணைதள இணைப்புகள் ஈண்டு தரப்பெற்றுள்ளன. இவைகளை வாசகர்கள் பயன்படுத்திக்கொள்ளவும்.

01) கோபல்லபுரத்து மக்கள் (நூல்)

https://tamilbookspdf.com/download-book/

02) கோபல்ல கிராமம் (நூல்)

https://dokumen.pub/qdownload/seventhnbsped-9788189359460.html

03) கோபல்ல கிராமம் (ஒலி நூல்)

https://www.storytel.com/ao/en/books/gopalla-gramam-796604

வட்டார வழக்கு தொடர்புடைய சில

[A] வட்டார வழக்கு – படம்
(2h 20m•Drama•UA•29 Dec 2023)

படம் முழுவதும் வட்டார வழக்குச்சொற்கள், வட்டார ஆடைஅணிகலன்கள், நடைமுறைகள், கிராமீய பின்புலங்கள் ஆகியவை பயன்படுத்தப்பெற்றிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது.

படத்தை இரசிக்க, இணையவும்

01] https://timesofindia.indiatimes.com/entertainment/tamil/movie-details/vattara-vazhakku/movieshow/106315643.cms

02] https://in.bookmyshow.com/chennai/movies/vattara-vazhakku/ET00381418

03] https://tamil.filmibeat.com/movies/vattara-vazhaku/videos.html#trailer

வட்டார வழக்கு – பட விமர்சனம்

படத்தின் வசனங்கள் கதைக்களத்தின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும்படி அமைந்திருந்தாலும், இடைவிடாமல் வசனங்கள் மட்டுமே ஒலித்துக்கொண்டே இருப்பது நம்மையும் டயர்டாக்குகிறது. குறைந்தபட்சம், அந்த வசனங்களாவது கதைக்குத் தொடர்புடையதாக இருந்திருக்கலாம்.

80களில் மதுரை மாவட்டம் தோடனேரி கிராமத்தில் ஒரே சமூகத்தைச் சேர்ந்த இரு குடும்பங்களுக்கு இடையே இருக்கும் பகையுணர்வு பல உயிர்களைப் பலி வாங்குகிறது. இப்பகைக்கு இடையில் மலரும் சேங்கை (சந்தோஷ் நம்பிராஜன்) மற்றும் தொடச்சியின் (ரவீனா ரவி) காதல் என்ன ஆனது என்பதை ரத்தமும் சதையுமாகப் பேச முயன்றிருக்கிறது அறிமுக இயக்குநர் கண்ணுச்சாமி ராமச்சந்திரனின் `வட்டார வழக்கு'.

வெட்டி வீராப்போடு சுற்றும் கிராமத்து இளைஞனாக சந்தோஷ் நம்பிராஜ் பக்காவாக பொருந்திப் போகிறார். கோபம்இ ஆக்ரோஷம்இ நையாண்டி போன்றவற்றுக்குத் தேவையான உடல்மொழியையும் முகபாவனையையும் வழங்கி சபாஷ் வாங்குகிறார். ஆனால்இ காதல் காட்சிகளிலும் சோக காட்சிகளிலும் இன்னும் மெனக்கெடல் தேவை. துடுக்கான கிராமத்துப் பெண்ணாக ரவீனா ரவி கச்சிதமான தேர்வு. நிதானம்இ தைரியம்இ காதல்இ கோபம்இ வேதனை என எல்லா உணர்வுகளையும் நேர்த்தியாகப் பார்வையாளர்களுக்குக் கடத்தியிருக்கிறார். வில்லனாக விஜய் சத்யா கொடுக்கப்பட்ட பணியைக் குறையின்றி செய்திருக்கிறார். மற்ற கதாபாத்திரங்கள் புதுமுகங்கள். அவர்களிடமிருந்து தேவையான நடிப்பை வாங்கத் தவறியிருக்கிறார் இயக்குநர்.

டோனி சான் மற்றும் சுரேஷ் மணியனின் ஒளிப்பதிவு பல காட்சிகளில் 'டிவி சீரியல்' ஆக்கத்தையே நினைவூட்டுகிறது. பரபரப்பாக நகரும் காட்சிகளில் கேமராவின் வேகத்திலும், இரவுநேர காட்சிகளில் ஒலியமைப்பிலும் கொஞ்சம் ஆறுதல் தருகிறார்கள். பிரதான கதாபாத்திரங்கள் தவிர்த்து, பிறருக்கு 'க்ளோஸ் அப்' ஷாட்கள் பெரிதாக வைக்கப்படவே இல்லை. அவர்கள் நன்றாக நடிக்காததுதான் காரணமா? காதல் காட்சிகள் தவிர மற்ற காட்சிகள் கோர்வையில்லாமல் தொகுக்கப்பட்டு, பலவீனமான திரைக்கதையை மேலும் பலவீனமாக்குகின்றன.

இளையராஜா இசையில் பாடல்கள் ஈர்க்கவில்லை. சில விறுவிறுப்பான காட்சிகளுக்கு மட்டும் கிராமிய இசை வாத்தியங்களால் பலம் சேர்த்திருக்கிறார். காதல் காட்சிகளில் `கேட்டுக் கேட்டுப் பழகிய' அவரின் ஆர்கெஸ்ட்ரா இசையையே மீண்டும் தூசு தட்டிச் சேர்த்துள்ளார். சில காட்சிகளில் பின்னணி இசையாகப் பயன்படுத்தப்பட்டுள்ள பழைய இளையராஜா பாடல்கள் கொஞ்சம் ரசிக்க வைக்கின்றன. 80களின் சினிமா போஸ்டர், ரேக்லா ரேஸ், கிடா சண்டை, கிராமத்து வீடுகள், டீக்கடை, திருவிழா எனக் கலை இயக்குநரின் உழைப்பால் படத்தில் யதார்த்த ரேகைகள் பலமாகப் பதிந்திருக்கின்றன.

ஒரே சமூகத்திற்குள் இருக்கும் வன்முறை, வஞ்சகமும் வன்மமும் எண்ணங்களும் கொண்ட கதாபாத்திரங்கள், வன்முறைக்குப் பலியாக்கப்படும் இளைஞர்கள், தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படும் குடும்பப் பகை, வன்முறையைப் பெண்கள் அணுகும் முறை, ஆண்கள் அணுகும் முறை என மிகவும் வீரியமான விஷயங்களையும் கிளைக்கதைகளையும் கொண்டிருக்கும் படத்தின் கதையை, அழுத்தமில்லாத திரைக்கதையும் பொறுப்பில்லாத திரையாக்கமும் பாதாளத்தில் தள்ளியுள்ளது.

ரேக்ளா ரேஸ், கிடா சண்டை, மாட்டுச் சந்தை வியாபாரம் முறை, கிராமத் திருவிழாவில் நடக்கும் வழக்காறுகளும் வழிபாட்டு முறைகளும், நல்ல தங்காள் கதை, பெண்கள் கையில் எடுக்கும் பிரத்யேக வன்முறை முறை என எக்கச்சக்கமான சுவாரஸ்யம் தந்திருக்க வேண்டிய காரணிகள் ஸ்க்ரிப்ட்டில் நிறையவே வருகின்றன. ஆனால், அவை எதுவுமே முறையாகத் திரைக்கதையோடு பொருந்தி வராமல் படத்தின் ஓட்டத்திற்கும் உதவாமல் துருத்திக்கொண்டு நிற்கின்றன.

பலவீனமான திரைக்கதையை, நடிகர்களின் நடிப்போ, தொழில்நுட்ப கலைஞர்களின் பணியோ காப்பாற்றவில்லை. அதனால், பிரதான கதாபாத்திரங்கள் எடுக்கும் அதிமுக்கியமான முடிவுகள், அவர்களின் இறப்பு, ரத்தம் தெறிக்கும் வன்முறை என எதுவுமே பார்வையாளர்களின் மனதில் பதியாமல், திரையை மட்டும் நிரைத்தபடி ஓடுகின்றன. கொலை செய்யக் கதாநாயகன் தயாராகும் காட்சித்தொகுப்பும் இளையராஜாவின் பழைய பாடல்களைப் பின்னணி இசையாகக் கொண்டும் நகரும் காதல் காட்சிகளும் மட்டும் சுவாரஸ்யம் தருகின்றன.

மதுரை கிராமத்து வட்டார வழக்கில் வரும் நையாண்டி வசனங்கள் பல இடங்களில் சிரிப்பை வரவழைக்கின்றன. பிரதானமாக, பாட்டிகள் - இளவட்டங்களுக்கு இடையிலான உரையாடல்கள், மாமன் - மாப்பிள்ளை உறவுகளுக்கு இடையிலான வாய் சண்டைகள் ஆகியவை சிரிக்க வைத்து, ரசிக்க வைக்கின்றன. மொத்தமாகவே, படத்தின் வசனங்கள் கதைக்களத்தின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும்படி அமைந்திருந்தாலும், இடைவிடாமல் வசனங்கள் மட்டுமே ஒலித்துக்கொண்டே இருப்பது நம்மையும் டயர்டாக்குகிறது. பெரும்பாலான நேரங்களில் திரையில் யாராவது ஒருவர் பேசிக்கொண்டே இருக்கிறார். குறைந்தபட்சம், அந்த வசனங்களாவது காட்சிக்குத் தேவையானதாக இருந்திருக்கலாம்.

கிராமத்தில் இருக்கும் சாதிய அமைப்பு, ஒரே சாதிக்குள் இருக்கும் வர்க்க வேறுபாடு, விளைநிலங்களின் மேல் குறிப்பிட்ட சாதிகள் காட்டும் உரிமை (?), விவசாயக் கூலிகளாக ஒடுக்கப்படும் உழைக்கும் மக்கள், பண்ணை முறையில் இருக்கும் சாதியம், சாதியத்திற்குள் வன்முறைக்கான இடம் எனப் பல விஷயங்களைத் தொட்டிருப்பதற்காக மட்டும் இயக்குநருக்குப் பாராட்டுகள்.

ஆனால், இவற்றுக்கு நியாயம் செய்யும் வகையிலான சுவாரஸ்யமான திரைக்கதையும், திரையாக்கமும் இல்லாது போனதால், இந்த `வட்டார வழக்கு' வாகை சூடாமல் பார்வையாளர்களை வதைக்கிறது.

Vattara Vazhakku : A Review

[Ms Roopa Radhakrishnan]

At the very beginning of Kannusamy Rajendran's *Vattara Vazhakku*, we are introduced to two rival clans that are at loggerheads with each other. The ground is therefore set for a storyline that, even though is as old as the hills, has been time and again told in an effectively distinctive manner. But even with an intriguing initial buildup, *Vattara Vazhakku* just doesn't move forward, as if the film is confused about what it is trying to say.

A reason that it comes across this way might be because none of the characters register, including the protagonist played by Santhosh Sreeram. All through the film, the actor, maybe to show the rough and tough nature of his character, has a go-to 'Hey, I'm a gangster' look on his face—which is basically him looking menacingly by raising one eyebrow.

Even when he is blushing or confused or overhearing a conversation or flirting with the woman he loves (Raveena Ravi) or trying to scare someone, he has that supposed-to-be fierce look on his face, which, if intended to make him terrifying, does the opposite. The romantic track is the most eye-catching portion of the film, and a huge reason for that is Ilaiyaraaja's music. For a major portion of *Vattara Vazhakku*, the lead couple is just exchanging glances at each other, but even with a lot of time spent on these moments, the culmination of the track just feels so abrupt.

Also, the dubbing is so blatantly out of sync in many places that it takes you out of the film. The abrupt cuts here and there, the evidently fake blood, and the way the conversations play out—all this takes away the authenticity of the film. That is not to say that the film is without its merits, but on the contrary, the negatives of *Vattara Vazhakku* stick out more because this is a film that could have been so much more. The Kannusamy Rajendran film is not one of those films that's dead-on arrival, but it progresses to be way less impactful than what it set out to be.

Vattara Vazhakku : A Review

[By Chennaivision in Cinema News, News, Tamil Movie Review]

The cinematic masterpiece "Vattara Vazhakku," directed by K. R. Chandru and scored by the maestro Ilaiyaraaja, unfolds as a gripping narrative set against the backdrop of a village reminiscent of an era long gone. The film has emerged as a compelling statement, depicting the complex social fabric of the Sottuvathala Chola region in the Madurai district.

The narrative weaves through the lives of two prominent families, intricately connected through generations of shared history. The protagonist, driven by a deep sense of justice, finds himself entangled in a web of violence that extends beyond his own family. The film delves into the repercussions of his efforts to avenge the murders committed against his kin, revealing the collateral damage inflicted upon the families of those responsible for the killings.

Director Chandru, known for his nuanced storytelling, skillfully crafts a tale that resonates with the audience. The film not only features established actors but also showcases the talents of local artists who contribute to the authenticity of the village milieu. The characters come alive on screen, portraying a compelling story of love, revenge, and the complexities of human relationships.

One noteworthy aspect of "Vattara Vazhakku" is Ilaiyaraaja's musical composition, which seamlessly integrates with the narrative, enhancing the emotional depth of the film. Ilaiyaraaja's ability to evoke sentiments without relying on extravagant musical arrangements is evident, and the absence of unnecessary background scores in certain scenes allows the audience to immerse themselves in the raw emotions portrayed by the actors.

The film also highlights the natural beauty of the Sottuvathala Chola region, capturing the essence of village life with authenticity. The dialect, body language, and colloquial expressions used by the characters contribute to the film's immersive experience, allowing the audience to connect with the rural setting.

In his directorial venture, Chandru successfully brings out the exceptional acting skills of Dinesh Ravi, who portrays the protagonist with finesse. The versatile Raveena Ravi, previously known for her roles in Love Today and Maman Machan, delivers a standout performance in her role as the female lead. Her portrayal of emotions, especially love and anger, adds depth to the character dynamics.

"Vattara Vazhakku" stands out as a thought-provoking film that not only entertains but also prompts reflection on societal norms and the consequences of seeking vengeance. With its compelling narrative, exceptional performances, and soul-stirring music, the film is a testament to the brilliance of director K. R. Chandru and the timeless artistry of Ilaiyaraaja.











[B] வட்டார வழக்குச்சொற்கள்

அறிந்து கொள்ள, இணையவும்

https://www.youtube.com/watch?v=crIpA-nSAko

[C] வட்டார வழக்கு - நூல்கள்

வ.எண்	வருடம்	நூலின் பெயர்	ஆசிரியர்
01	1982	வட்டார வழக்குச் சொல்லகராதி	கி ராஜநாராயணன்
02	1989	வழக்குச் சொல்லகராதி	புலவர் இரா இளங்குமரன்

03	1989	வட்டார வழக்குச் சொற்களும் விளக்கங்களும்	லேனா தமிழ்வாணன்
04	1990	செட்டி நாட்டில் செந்தமிழ் வழக்கு	சுப சண்முகம்
05	1991	கொங்குத் தமிழ்	டி.எம். காளியப்பா
06	2000	கொங்கு வட்டாரச் சொல்லகராதி	பெருமாள் முருகன்
07	2001	ஜீவா தொகுத்த வழக்குச் சொல்லகராதி	கே. ஜீவபாரதி வே. எழில்முத்து
08	2003	கோவை மாவட்ட வழக்குச் சொல்லகராதி	ச மகாலட்சுமி
09	2004	கொங்கு நாட்டுத் தமிழ்	புலவர் மணியன
10	2004	நெல்லை வட்டார வழக்குச் சொல்லகராதி	ப முருகையா
11	2004	நாஞ்சில் வட்டார வழக்குச் சொல்லகராதி	அ.க. பெருமாள்
12	2006	செட்டிநாட்டு வட்டார வழக்குச்சொல்லகராதி	பழநியப்பா சுப்பிரமணியன்
13	2007	நடுநாட்டுச் சொல்லகராதி	கண்மணி குணசேகரன்
14	2008	கொங்கு வட்டார வழக்குச் சொல்லகராதி	இரா இரவிக்குமார்

****













ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

தமிழக வட்டார வழக்குகள்

MS Sankari





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

Sankari MS
Assistant : JR-CDE
[Centre for Distance Education]
Dr MGR Educational and Research Institute
Maduravoyal, Chennai – 600 095

தமிழக வட்டார வழக்குகள்

வட்டாரமொழி வழக்குகள் என்பது ஒரு பொது மொழியிலிருந்து வேறுபட்டு ஒரு குறிபிட்ட இடத்தில் அல்லது வட்டாரத்தில் வசிக்கும் மக்களால் பேசப்படும் வழக்குகள் எனக்குறிப்பிடலாம். வட்டாரமொழி வழக்குகள் அந்தப் பொது மொழியின் ஒரு பகுதியே. பொதுவாக பல்வேறு வட்டாரமொழிகளைக் கொண்டுள்ள ஒரு மொழியினர் பேச்சிலும் எழுத்திலும் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளவர்.

வட்டார வழக்குகள் என்பது குறிப்பிட்ட நிலப்பரப்பிற்குள் செய்யப்படும் தொழில்கள், மக்களின் வாழ்க்கை சார்ந்து, சடங்குகள், சம்பிரதாயங்கள், உணவு பழக்க வழக்கங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள், விளையாட்டு, அன்றாட வாழ்வியல் ஆகிய வழியாக உருவாகின்றது. மேலும், கடந்த தலைமுறையினர் கைமாற்றிவிட்டு சென்ற கதைகள், பாடல்கள், புராண, இதிகாச, ஐதீக கட்டுக்கதைகளின் வழியாகவும் உருவாகின்றது எனவும் கொள்ளலாம். இவை ஒரு சொல், ஒரு தொடர், பலவாக்கிய அமைப்புகள், சிறுபாடல்கள், நெடும்பாடல்கள், கதைகள் ஆகியவகையாகக்கூட இருக்கலாம். இது தலைமுறை தலைமுறையாக கைமாற்றப்பட்டு வருகிறது. நிலைத்த நீடித்த வாய்மொழி இலக்கியம் என்றோ வட்டார இலக்கியம் என்றோ எதுவும் இருக்க இயலாது. காலத்திற்கேற்றவாறு, சூழலுக்கேற்றவாறு, பிறசாதியோடு பழகுவதால், பிறவட்டார மக்களோடு பழகுவதால் புதுவழக்குகள் ஏற்படுகின்றன..



வட்டார வழக்கு இதை பேசும் - இதை பேசாது என்று சொல்ல முடியாது. வட்டார வழக்கு எல்லாவற்றையும் பேசும் சுதந்திரத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. எழுத்து இலக்கியத்திற்கு இல்லாத சுதந்திரம் இது. ஒரு வாக்கியத்திலியே ஒரு முழுவாழ்வையும் சொல்லிவிட இயலும். இதுதான் வட்டார வழக்கின் மிகச்சிறந்த தன்மை ஆகும். இதனை விளக்கும் எடுத்துக்காட்டு:

'வாழும் காலம் சங்கட்டம், போவும் காலம் போராட்டம்.'

வாய்மொழி வட்டார இலக்கியம் என்பது வாழ்வியலோடு தொடர்புடைய அனைத்து விசயங்களையும் கூறுகின்ற தன்மையுடையது. வாய்மொழி வட்டார வழக்கில் சரளமாக புராண, இதிகாச, ஐதீக கதைகளின் கதை மாந்தர்கள் பயன்படுத்தப்படுவதையும் நாம் எளிதாக அறியலாம்.

வாய்மொழி - வட்டார வழக்கின் ஆகச்சிறந்த சிறப்பு என்பது: வட்டார வழக்குகள் சொல்நயம், பொருள்நயம், ஓசைநயம், அடுக்குத்தொடர் என்று அமைந்திருப்பதோடு ஒரு வாக்கியத்திலேயே, ஒரு பாடலிலேயே, ஒப்பாரியிலேயே ஒரு மனிதனுடைய, ஒரு குடும்பத்தினுடைய ஒரு சமூகத்தினுடைய முழுக்கதையையும் சொல்லிவிடும் பாங்கு. ஆகவே வட்டார வழக்குகளை ஒருவரையறைக்குள் நிச்சயமாக கொண்டுவர இயலாது. அப்படிக்கொண்டு வருவது எளிதான காரியமுமல்ல. ஆனாலும் சில சௌகரியத்திற்காக சில தலைப்புகளின் வழியே அவைகளை வகைப்படுத்தலாம்.



(1) **நெல்லை வட்டாரம்:**

நெல்லைச் சீமையின் வட்டார வழக்கு தமிழகத்தின் ஏனைய பிற பகுதிகளிலிருந்து வேறுபடுவது. பல சொற்களை உள்;ர் வாசிகளே கூட மறந்து விடும் நிலை இப்போது ஏற்பட்டிருக்கும் வேளையில் இந்த நிலத்திற்கே உரிய சிறப்பாம் இச்சொற்களை நாம் பதிந்து வைத்து அவற்றை கேட்டு மகிழலாம். நெல்லை வட்டார வழக்கிலுள்ள பல சொற்களின் அருமை அங்கேயே வசிக்கும் போது தெரியாது. ஆயிரம் மைல்கள் தாண்டி வசிக்கும் போது அசைபோட சுவையானது. பேச்சு வழக்கில் மிகவும் மருவிப்போன சொற்களின் மூலம் தூயவடிவமாக இருக்கும். சில எடுத்துக்காட்டுகள்:

- ”பைய” என்ற வார்த்தைக்கு ”மெல்ல” அல்லது ”மெள்ள” என்ற பொருள்.
- ”ஏலே”என்றால் ”அடேய்”.
- ”எல்லே இளங்கிளியே இன்னமும் நீ உறங்குதியோ” ஆண்டாள் பாடல். எல்லே ஏலே ஆகிவிட்டது.
- ஏட்டி = ஏண்டி,ஏனடி,என்னடி (பெண்பால்)
- ஓட்டம் கிண்ணி விட்டான் ஸ்ரீ விரைவாக ஓடிவிட்டான்.
- ஆவலாதி = புகார்
- தவசுப்பிள்ளை = சமையல்காரர்
- நீர்மாலை = இறுதிச்சடங்கில் நீர்ச்செம்பு எடுத்துச்செல்லுதல்.
- அங்கணக்குழி ,அங்கணாக்குழி = குளியலறைப் பள்ளம்.
- தார்ஸா = வரவேற்பறை பட்டகசாலைஸ்ரீ பட்டாலை, வீட்டின் இரண்டாம் கட்டு அறை.
- முானவெளி = வான்வெளியின் திரிபு. முன்வாசலையும் பின்வாசலையும் இணைக்கும் வானம் நோக்கித் திறந்த வெளி. காற்றோட்டமான வெளி.

(2) **நகரத்தார் வட்டாரம்:**





நகரத்தார் (நாட்டுக்கோட்டை) செட்டியார்கள் செய்த தன வணிகம், கடற் பயணம், கிட்டங்கிகள், திரும்பு காலில் சேகரிக்கும் பொருள்கள், காசுப் பைகள், நவரத்தினக் கற்கள், உணவு என நமக்கு அறிமுகம் இல்லாத வாழ்க்கை நிலைகள். பிழைக்கவும் தொழில் பழகவும் போன செட்டிப் பிள்ளைகள், பிள்ளைமார், இசுலாமியரின் பெட்டியடி வாழ்க்கை. செட்டியார்கள் மலாய் தேசத்தில் வாங்கிய தோட்டங்கள், அங்கு கூலி வேலை செய்த மலாய், சீன, தமிழ் மக்கள். அவர்கள் வாழிடம், உணவு எனப் பற்பல செய்திகள் பேசப்படுகின்றன. இங்கே நம்மூரில் நகரத்தாரின் வீடுகளின் அமைப்பு, விருந்தோம்பல், உணவுகள், உறவு முறைகள், தெய்வங்கள், வழிபாடுகள், சடங்குகள், மணவினை என்பனவும் விரிவாகப் பேசப்படுகின்றன.



காரைக்குடிச் சொல்வழக்கு: சில எடுத்துக்காட்டுகள்.

- சாத்து (வணிகர்) - வியாபார நிமித்தம் இடம் பெயர்ந்து செல்லும் குழுவினர். எனவே சாத்தப்பன் என்ற பெயர் இங்கே உண்டு. சாத்தையனார் என்பதும் ஐயனார் பெயர். ஊனையூர் கோவிலில் உள்ள சாமிக்கு முத்துவெள்ளைச் சாத்தையனார் என்று பெயர்.

- செலவு நடை - நடைமுறைச் செலவுகள் / தினசரிச் செலவுகள் / ஒரு வருடச்செலவு / செலவானவைகளைக் குறிப்பெடுத்தல்.

- மேலாள், அடுத்தாள், சமையலாள், எடுபிடிப் பையன்கள் - சைகோன், மலாயா, சிங்கப்பூர் போன்ற ஊர்களில் வட்டிக்கடைக் கிட்டங்கியில் வேலை செய்தோர். மேலாள் மேனேஜர் போன்ற பதவி, அடுத்தாள் அதற்கு அடுத்த உத்யோகமான கணக்குவழக்குப் பார்ப்பவர் , சமையலாள் இவர்களுக்கு சமையல் செய்து கொடுப்பவர், எடுபிடிப்பையன்கள் இவர்கள் வட்டிப் பணம் வசூல் செய்யப் பணிக்கப்பட்டவர்கள். கிட்டங்கியிலேயே வசிப்பார்கள். காலையில் பெட்டியடியை சுத்தம் செய்வதும் இறைவன் திருவுருவங்களைத் துடைத்து பூமாலை பாமாலைகளால் (திருப்புகழ்) தொழுது, தினப்படி நடைமுறைச் செலவுகளை அடுத்தாளிடம் ஒப்புவித்து பின் கிஸ்தி (தினப்படி வட்டி) வசூலுக்குச் செல்வார்கள்.

- செட்டிமக்க, நாட்டுக்கோட்டை நகரத்தார் - எல்லாவிதமான ஜாதியைச் சேர்ந்த மக்களும் கொடுக்கல் வாங்கல் லேவாதேவியில் ஈடுபட்டிருந்தாலும் மைடான், மலேயாவில் இவர்கள் செட்டி மக்களெனவே அழைக்கப்பட்டார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார் என்போர் காரைக்குடி ஈறான 96 ஊர்களில் கோட்டை போன்ற வீடுகளைக் கட்டி வசித்தவர்கள். அவர்களும் கொண்டுவிக்க நாடுவிட்டு நாடு சென்று இங்கே கிட்டங்கி அமைத்து லேவாதேவி செய்தார்கள்.

- யாபாரிக - வியாபாரிகள்.

- லேவாதேவி - பணத்தைக் கொடுத்து வட்டி வசூலித்தல்.

- பொட்டியடி, கைமேசை - கைமேசை கணக்குவழக்குப் பார்க்க உதவுவது. பொட்டியடி என்பது இம்மாதிரி ஒரு நிறுவனத்துக்கு மட்டும் உரியது. பல பொட்டியடிகள் / இரண்டு மூன்று பொட்டியடிகள் அடுத்தடுத்து இருப்பது கிட்டங்கி.



- கிட்டங்கி - இதுபோன்று பல பெட்டியடிகள் அடங்கியது கிட்டங்கி.

- காசுக்கடை - காசைக் கொடுத்து வட்டி வசூலிக்கும் கடை.

- கொண்டுவிக்கிறது - பணத்தைக் கொண்டுபோய் வட்டிக்கு விட்டு சம்பாரித்தல்.

(3) **<u>மதுரை வட்டாரம்:</u>**



மதுரைத் தமிழ் அல்லது மதுரை பேச்சுத் தமிழ் என்பது தமிழ் மொழியின் ஒரு வட்டார வழக்கு ஆகும். தென் தமிழகத்தில் மதுரை மற்றும் அதனை சுற்றியுள்ள திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர், தேனி ஆகிய மாவட்ட மக்களால் பேசப்படும் தமிழுக்கு பொதுவாக மதுரைத் தமிழ் என்று பெயர். மதுரைத் தமிழ் பிற வட்டார வழக்குகளை போல இருந்தாலும் இந்த வட்டாரத்தில் மட்டுமே பயன்படுத்தப்படும் ஒருசில வார்த்தைகளை ஈண்டு தரப்பெற்றுள்ளன.

- வந்தாங்கெ (வந்தார்கள்)
- போனாங்கெ (போனார்கள்)
- அங்கனக்குள்ள (அங்கே)
- இங்ஙனக்குள்ள (இங்கே)
- அங்கிட்டு (அந்த இடத்தில்)
- இங்கிட்டு (இந்த இடத்தில்)

(4) <u>கொங்கு வட்டாரம்</u>



கொங்குத் தமிழ் அல்லது கோயம்புத்தூர் தமிழ் என்பது கொங்கு நாட்டில் பேசப்படும் வட்டார வழக்கு மொழியாகும். இவ்வட்டார வழக்கு மொழி கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு, கரூர், நாமக்கல், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல்—(மேற்கு பகுதியான பழநி உட்பட அதை சுற்றியுள்ள சில பகுதிகள்) ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மக்களால் பேசப்படுகிறது.

கொங்கு நாட்டு வட்டார வழக்கில் புழங்கும் சில சொற்கள்:

- பொழுதோட - மாலை நேரத்தில் (பொழுதோட அந்த வேலையை முடிக்கிறேன்)
- கோழி கூப்பிட - அதிகாலை நேரம்
- பொறகால - பின்புறம் (ஊட்டுக்கு பொற்கால பொடக்காலி இருக்குது = வீட்டின் பின்புறம் காலிபுறம் இருக்கிறது.)
- பொடக்காலி- புறம் காலி (புறம் காலி என்பது காலி புறத்தின் முற்றுப் போலி) ஜகாலி இடம் = கொல்லைப் புறம்
- அம்மணி - பெண்மணியைக் குறிக்கப் பயன்படும். பொதுவாக சகோதரி உறவுமுறை.
- வெடுக்குனு இருக்குது- சுகமாக இருக்கிறது. வெந்தண்ணில தண்ணி வார்த்தா வெடுக்குனு இருக்கும் (சுடு நீரில் குளித்தால் சுகமாக இருக்கும்)
- வெடுக்குன்னு - விரைவாக (என்ற பேனாவ வெடுக்குன்னு புடுங்கிட்டான்- என் எழுதுகோலை சட்டென்று பறித்துவிட்டான்)
- என்றது - என்னுடையது.
- உன்றது - உன்னுடையது.
- அப்பச்சி- தாய்வழி தாத்தா
- அப்பாரு- தந்தை வழி தாத்தா.

(5) <u>***தஞ்சை வட்டார வழக்கு***</u>



(***"திண்ணை வீரர்"*** *என்றொரு சிறுகதை. தி.ஜானகிராமன் எழுதியது.)*

தன்னுடைய வீட்டுத்திண்ணையில் உட்கார்ந்தபடி ஊர்வழக்குகளைத்தீர்த்து வைக்கிறார் ஒரு பெரிய மனிதர். அந்த பெரிய மனிதருக்கும் கடனைத்திருப்பிக்கொடுக்காதவனுக்கும் நடக்கும் உரையாடலைப் படியுங்கள். தஞ்சை வட்டார வழக்கை படித்து மகிழுங்கள்.

"எல என்ன கட்டை ரொம்பத் துளுத்துப்போச்சு? ம்ஹும், சீ......கையைக் கீளப்போடு.......ஏண்டல, கணக்குத்தீக்க அம்மாசிக்கே வரேன்னு சொன்னியால்லியாடா?.......ஏண்டா! சொன்னியால்லியாடா? சொன்னியால்லியாடா? ஏண்டா சும்மா நிக்கிறியே? ஏல, உன்னத்தாண்டா.......ஏன், பேசமாட்டியா? இப்ப....எழுந்து வந்தேனோ.....?"

"அம்மாசிக்குத்தான் என் மாமியா இளுத்துக்கிட்டு கிடந்துச்சுங்க. காலங்காட்டியும் கிளம்பிவரணும்னுதான் படுத்தேன். ரண்டு சாமத்துக்கு ஆள் வந்துருச்சு......முன்னெத்தி மயிரைப்புடிச்சாத்தெரியாதுங்க.....அப்படி இருட்டு கும்பிக்கிட்டு இருந்தது. அதிலேயே உளுந்தடிச்சிகிட்டுப் போனோம். விடிஞ்சு போய் சேர்ரதுக்குள்ளாக திருவாலூர் ஆசுபத்திரிக்குத் தூக்கிட்டுப்போயிட்டாங்களாம். அப்புறம் மேலே போயி.......அவதியாப்பூட்டுங்க....."

"சரி, அப்புறம்? மருமவன் கைராசிதான் மாமியா பொளச்சுகிட்டா. சரி. உடனே வர்றதுக்கென்னவாம்? அம்மாசி போயி பதினோரு நாளாச்சிடா?"

"போன இடத்திலே டாகுட்டருக்கும் மருந்துக்கும் நாப்பது ரூவாக்கு மேலே போயிடுச்சுங்க. அப்புறம் மேலே......."

"சரி. எடு பணத்தை!"

”அதாங்க சொல்ல வந்தேன்.....இந்த மருந்து செலவு ரொம்ப அடாபுடியாப் பூட்டுங்க.....!”

”அதுக்காக......?”

”இந்த மார்களி முச்சூம் பொறுத்துக்கிட்டா, பொங்கல் களிஞ்சு மூணா நா கொண்டாரெனா இல்லியா பார்த்துக்கங்க...”

”ஏல, இஞ்ச வா இப்படி வாடாங்கறேன். வாடா இப்படி வரமாட்டியா? இப்ப எழுந்துவந்தேனோ, தெரியுமா?”

பந்தல் காலடியில் நின்ற ஆசாமி திண்ணைப்பக்கம் போனான்.

”இஞ்ச வாடா இப்படி......இப்படி கிட்ட வாடா, வரமாட்டே! இப்ப எழுந்து வந்தன்னா பாத்துக்க....”

ஆசாமி அருகில் போனான்.

”போட்டுக்கடா......என்னடா பாக்கிறியே? கன்னத்திலே போட்டுக்கடாங்கிறேன்......பளார் பளார்னு நாலு போட்டுக்கணும். மாட்டியா? நான் தான் போடணுமா?”

ஆசாமி பளார் பளார் என்று கன்னத்தில் நாலு போட்டுக்கொண்டான்.

”போட்டுக்கிட்டியா?.....இதைக்கையில எடு......எடுத்துக்கிட்டியா? என்னிக்குப் பணம் கொண்டாரே?”



”தை மாசம் நாலாம் தேதி.”

”நிச்சயமா?”

”நிச்சயமா.”

”கிழக்கே பாத்துக்கிட்டு சொல்லுறே பாத்துக்க. கையிலே எடுத்துக்கிட்டு நிக்கிறியே .....அது என்ன தெரியுமாடா?

”பொய்த்தவம்.”

”பொய்த்தவமில்லேடா, பொஸ்தகம்......சும்மா தங்கமத்தில்லால இல்லே. திருமுருகாற்றுப்படை. சுப்பிரமணியசாமி இருக்குறார் பாரு. அவர் மேலே பாடின பாட்டுங்க. அத கையிலே வச்சுக்கிட்டு கிழக்கைப்பாத்துக்கிட்டு, தைமாசம் நாலம் தேதி கொண்டாரேன்னு சொல்லியிருக்கே. ஜாக்ருதெ. பயலே, தேதி தப்பிச்சோ, கண்ணைப்பிடுங்கிப்புடுவாரு சுப்ரமணியரு! உஜாரா இரு.....தெரிஞ்சுதா? ஏய், செவுத்தியான்! கேட்டுக்கிட்டியா, தைமாசம் நாலாம் தேதின்னு சொல்றான்....சவநாது. நீயும் கேட்டுக்க!”

”கேட்டுதுங்க” என்று பந்தல் ஓரத்திலிருந்து இரண்டு ஆட்கள் சாட்சி சொன்னார்கள்.

****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

முல்லைநில வாழ்வியலில் கோபல்லபுரத்து மக்கள்

முனைவர் இரா.மணிமேகலை





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை


தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் இரா.மணிமேகலை
இணைப்பேராசிரியர்
தமிழ்த் துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் – 641 029
9486833980
manimegalai.cpr@gmail.co

முல்லை நில வாழ்வியலில் கோபல்லபுரத்து மக்கள்

முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் கி.ராஜநாராயணனின் படைப்புகள் காலத்தால் அழிக்கவியலாத சுவடுகளாகும். தமிழ் படைப்பாளர்களில் வட்டார வழக்கில் எழுதி மாபெரும் வரவேற்பு பெற்ற முதல் எழுத்தாளர் இவர் எனலாம். அதுவரை எழுத்துத் தமிழ் என்ற ஒன்றைப் படைப்புகளில் கடைபிடித்து வந்தனர். ஆனால் வெகுசன மக்களின் மொழியில் தன் முதல் புதினமான "கோபல்ல கிராமத்தை" படைத்துத் தமிழுலகைத் திரும்பிப் பார்க்க வைத்தார். கோபல்ல கிராமம் புத்தகமாக 1976 ஆம் ஆண்டு வாசகர் வட்ட வெளியீடாக வெளிவந்தது."கோபல்ல கிராமத்தின்" தொடர்ச்சியாக "கோபல்லபுரத்து மக்கள்" எனும் தலைப்பில் வெளியானது. அந்நூல் ஆனந்த விகடனில் தொடராக முப்பத்து நான்கு வாரங்கள் வந்ததாகும். பிறகு நூலாக்கம் பெற்று "கோபல்லபுரத்து மக்களுக்கு" சாகித்ய அகாதமி விருது கிடைத்த போதும் அந்நூலுடன் கோபல்லபுரத்து கிராமத்தையும் இணைத்துப் பார்த்தால் தான் முழுமை கிட்டும் என்று கி.ரா.குறிப்பிடுகிறார். 1991 ஆம் ஆண்டில் கோபல்லபுரத்து மக்கள் புதினத்திற்கு சாகித்ய அகாதமி விருது கிடைத்தது.



கோபல்லபுரம் மக்கள்

முன்னோர்களின் மொழியை ஆவணப்படுத்தும் நோக்கில் வட்டார வழக்கில் எழுதுவதாகக் குறிப்பிடும் கி.ரா. "என்னுடைய மக்கள் பேசுகிற பாஷையில் அவர்கள் சிந்திக்கிற மனோ இயலில் அவர்கள் வசிக்கிற சூழ்நிலையில் என்னுடைய சிருஷ்'டிகள் அமைய வேண்டும் என்று நினைக்கிறவன் நான். அவர்கள் சுவாசிக்கிற காற்றின் வாடை அவர்கள் பிறந்து விளையாடி நடந்து திரிகிற என் கரிசல் மண்ணின் வாசமெல்லாம் அப்படியே என் எழுத்துகளில் கொண்டு வந்து விட வேண்டும் என்பது என்னுடைய தீராத விருப்பம்" என்கிறார் .கி.ராவின் படைப்புகளில் மக்களின் நிலவியல் சூழலும் இயற்கைப் பின்னணியும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கும். கி.ரா.வின் சொந்த ஊரான இடைச்செவல் சிற்றூர் மழையை நம்பி வாழும் மானவாரி பயிர் விளைவிக்கும் ஊராகும். கோபல்லபுரத்து மக்கள் புதினத்திலும் மேய்ச்சல் நிலப் பண்பாட்டின் பின்னணியில் அவரது படைப்பு உருவாகியிருப்பது கவனிக்கத்தக்கது. கோபல்லபுரத்து மக்கள் புதினத்தில் முல்லைத்திணையின் வாழ்வியல் பதிவுகளைத் தொகுத்து நோக்குவது இக்கட்டுரையின் மையப் பொருளாகும்.

மேய்ச்சல் பண்பாடு

தமிழகத்தின் மிகத் தொன்மையான குடிமக்களில் ஆயரினத்தவரும் குறிப்பிடத்தக்கவராவார். அவர்களது வாழ்க்கைக் காடும் காடு சார்ந்த இடமுமான முல்லைத்திணையில் அமைந்தது. ஆயர்கள் ஆநிரைகளைக் காத்தோம்புவதால் அவர்களைப் புறநானூறு (390) ‘‘அறவை செஞ்சத்து ஆயர்’’ என்று புகழ்ந்து கூறுகிறது. இளங்கோவடிகளும் ‘‘ஆகாத் தோம்பி ஆப்பயனளிக்கும் கோவலர் வாழ்க்கை கொடும்பாடில்லை’’ (சிலப் : 15 : 120-21) என்று உரைக்கின்றார்.

மேய்ச்சலுக்குரிய நிலப்பகுதியுடன் இளமரங்கள் நிறைந்த பகுதியாக முல்லை நிலம் அமைந்திருக்கும். மாலைப்பொழுதில் கால்நடைகள் தம் இல்லம் நோக்கி திரும்பத் தொடங்கும். கி.ரா.அவர்கள் சங்க கால வீரயுகப் பாடல்கள் என்று அழைக்கப்பட்ட செவ்வியல் பாடல்களின் தன்மையுடன் தனது நூலின் தொடக்கத்தில் முல்லை வாழ்வியலை, ”நிழல்கள் இல்லாத மாலைப் பொழுது, கால்நடைகள் இப்போது மேய்ச்சலில் வேகம் காட்டின. மேய்ந்த தழைகளின் வாசம் காற்றில் மணத்தது. வயிறு நிறைந்த பசுக் கூட்டமும் ஆடுகளும் இப்போது ஓரிடத்தில் படுத்து நிம்மதியாக அசைபோட வேண்டும். மேய்ப்பர்கள் தங்கள் கால்நடைகளை ஒருங்கு கூட்டிப் பத்தத் தொடங்கினார்கள்.



மாலை நேரத்துக்கு உண்டான ஒரு நிறைவும் ஓய்வு விருப்பமும் சேர்ந்து இருப்பிடம் திரும்பும் ஒலிகளை ஏற்படுத்தின. கூடு திரும்பும் பறவைகள் குஞ்சின் நினைவில் கூவிக் கொண்டே பறந்து சென்றன. ” என்று காட்டுகின்றார். (கோபல்லபுரத்து மக்கள் ப.1)


மேற்காணும் தொடக்கமானது முல்லைப்பாட்டில் ஆயர் மகள் கால்நடைகளின் வரவுக்குக் காத்திருந்த காட்சியை நம் மனக் கண் முன் கொணர்கிறது.

”சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள், “கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர,
இன்னே வருகுவர், தாயர்’’ என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்: அதனால்,
நல்ல, நல்லோர் வாய்ப்புள்’ தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல், தலைவர், வாய்வது’ நீநின்
பருவரல் எவ்வம் களை, மாயோய்’ என
காட்டவும் காட்டவும் காணாள், கலுழ்சிறந்து,
பூப்போல் உண்கண் புலம்புமுத்து உறைப்ப,
(முல்லைப்பாட்டு 12 - 23)

சிறிய கயிற்றால் கட்டப்பட்டிருக்கும் இளம் கன்று தன் தாயினைக் காணாது துயருற்று அங்கும் இங்கும் சுழன்று கொண்டிருந்தது. அதனைப் பார்த்துக் குளிரால் நடுங்கித் தோளில் குறுக்கும் நெடுக்குமாகக் கைகளைக் கட்டியுள்ள ஆயர்குலப் பெண், ‘‘வளைந்த கோலினைக் கையிலே வைத்துள்ள கோவலர் பின்னே நின்று செலுத்த உம்முடைய தாயர் இப்பொழுதே வருவர்’’ என்று கூறிய நன்மை தரும் நல்ல சொல்லைக் கேட்டோம் என்கிறாள்.

முல்லைநிலத்தில் வாழ்ந்த மக்களுள் பெரும்பாலோர் நிரைமேய்க்கும் தொழிலில் ஈடுபட்டவர். இவர்கள் பற்றிய செய்திகள் ஆற்றுப்படை நூல்களிலும், புறநானூற்றிலும், முல்லைக்கலியிலும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் ஆயர்களின் வாழ்க்கைமுறை குறித்து நன்கு அறிந்து கொள்ளலாம். ஆயர்களுள் ஆண்கள் கோவலர், இடையர், பொதுவர் என்றும் ’ பெண்கள் ஆய்ச்சியர் கோவித்தியர், இடைச்சியர்’ பொதுவியர் என்றும் அழைக்கப்பெறுவர்.

எருதுகள் எப்பொழுதும் தன்னுடன் இருந்தலை விரும்பிய தமது இளைய பசுக்களைத் தழுவிக்கொண்டு ஊரின்கண் மீண்டுவரும் பொழுதில் யாவும் ஒருங்கு சேர்ந்து கன்றுகளை அழைக்கும் குரலினவாய்த் தொழுவிலே நிறையப் புகும். பசுக்கள் அணிந்திருக்கும் தெள்ளிய மணிகள் இனிதாய் ஒலிக்கும் ’ அம்மணியோசை ஆயர்தங் குழலிசையோடு கலந்து மெலிதாக ஒலிக்கும். மதர்வை நல்லான் மாசில் தெண்மணி கொடுங்கோல்! கோவலர் குழலொடு ஒன்றி ஐதுவந் திசைக்கும். (நற்.69). கழுத்து மணிகள் ஒலிக்க மாடுகள் களம் அடிக்கும் காட்சியை “வட்டங்களின் மேல் பிணையல்கள் ஆங்காங்கே சுற்றிவந்த வண்ணமாய் இருந்ததால் களத்துக்காட்டில் மாட்டின் சலங்கை சத்தமும் கழுத்து மணி ஓசை விடாமல் கேட்டுக் கொண்டே இருந்தன “(கோபல்லபுரத்து மக்கள் பக். 13) என்று உரைக்கின்றார்.



மாடுகளுக்குப் பிரியமான தாவர வகைகள் சுனைநீர் இருக்கின்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று மேய்ப்பர்கள் மேய்த்து வருவர். ஊருக்கு கிழக்கே உள்ள மந்தைப் புஞ்சையில் பசு மாடுகளின் மந்தை கிடை அமர்த்தப்பட்டிருந்தது. அந்த காலை வேளையில் பசுக் கூட்டம் படுத்துக்கொண்டும் நின்று கொண்டும் வாய் நுரைக்க சொகமாய் அசை போட்டுக் கொண்டிருந்தன (.பக் 58)

மற்ற மாடுகளெல்லாம் மேய்ச்சலில் இருந்து திரும்பி குளத்தில் தண்ணீர் விளிப்பருகே நின்று கொண்டு தண்ணீர் குடிக்கும் போது இந்த காராம் பசு மட்டும் தண்ணீருக்குள் இறங்கி முழங்கால் முங்கும் அளவுக்குத தண்ணீரில் நின்று கொண்டு, “இது என்னய்யா இந்த மாடு மாத்ரம் இப்படிக் குடிக்கி” என்று கேட்பவர்களுக்கு அவர் சொல்லும் பதில் உடம்புல கோரோஜனை இருக்கிற மாடுகள் இப்படித்தான் பிடிக்கும் என்பார்.

ஒரு நாள் அவர் குருமலையின் அடர்ந்த சிறைக்காட்டில் மலைக்கீரை பறிக்கப் போயிருந்தார். காட்டின் நடுவே ஒரு தாவில் ஒரு அழகான முதிர்ந்த காரி நிறத்தில் ஒரு பொலிகாளையைப் பார்க்க நேர்ந்த உடன் சந்தோ‘மும் பயமும் பின்ன அப்படியே நின்று விட்டார்.(ப. 39.) உடம்புத் திமிரின் தாங்க முடியா கொம்புத் தினவின் காரணமாக அது பூமியை முட்டி முட்டித் தென்னியதால் தேய்ந்த கொம்புகளும் அதில் மண் உறைந்து காணப்படுவதையும் கவனித்தார். நந்தகோபநாயக்கர் வைத்தகண் வாங்காமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.ஒரு தீர்மானத்துக்கு வந்தார் .உடனே அன்றிலிருந்து அவருடைய பசுமாட்டு மந்தையை அவர் அந்தக் குருமலைக் காட்டுக்கே மேய்ச்சலுக்கு ஓட்டிக்கொண்டு வரத்தொடங்கி விட்டார் (ப. 39). வழக்கமான மேய்ச்சல்த் தரையிலிருந்து இந்த மலங்காட்டுக்கு மந்தைகளை ஓட்டிக்கொண்டு

வர சிரமப்பட்டது. மாடுகள் புதிய இடத்தை விரும்புவதில்லை. "மாடு மேய்ந்த இடம்' மழை மேய்ந்த இடம்" என்று பெரியவர்கள் தெரியாமலா சொன்னார்கள் என்று எண்ணிக் கொண்டார். (ப. 40)

இசை இன்பம்

புல்லாங்குழல் எனும் காற்றுக் கருவியைக் கண்டு பிடித்தவர்கள் முல்லைத் திணை ஆயர்கள் ஆவார். "ஓலைக் குழல் ஊதிக் கொண்டு எருமைகள் பேரில் சவாரி செய்து கொண்டு வந்தார்கள் ஒன்று இரண்டு சிறுவர்கள் .கரிச்சான் பறவைகளும் தங்கள் பங்குக்கு எருமைகளின் கொம்பில் முதுகில் என்று சவாரி செய்து கொண்டு அவர்களோடு வந்தன. இருள் மெல்ல படியத் தொடங்கியதும் பகல் ஜீவராசிகளின் ஆட்டம் குறைந்து கொண்டே வந்தது. (கோபல்லபுரத்து மக்கள் ப. 7)

இதனை "இசை இன்பத்தால் உயிரினங்கள் அனைத்தும் மயங்கவல்லன. இசை என்னும் வித்து முளைத்தது முல்லைநிலப் பகுதியிலாகும். இந்த இசைக்கு மூலம் இசைக்கருவி. இசைக்கருவியில் முதற் கருவி குழல். அதற்கு வடிவமும் உயிரும் தந்தவன் முல்லை நிலத்து ஆயன். குழல் வழியே கருவியாம் யாழ் எழுந்தது. அதனையும் கண்டு மகிழ்ந்தவன் முல்லைநிலத்தவன். .இவற்றால்" பண்ணும் பாடலும் தோன்றி வளர்ந்த இடம் முல்லைநிலமே என்பதில் ஐயமில்லை." (மு.வ.,முல்லைத்திணை)



பத்துப்பாட்டில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் முல்லைநில ஆயர் எவ்வாறு குழலும் யாழும் அமைத்து அவற்றில் இனிய பண்களை ஏற்றி இசைத்தனர் என்று அழகாக விளக்குகின்றார். "ஆயன் கன்றுகளை விரும்பும் ஆநிரைகளோடு புல்லுநிறைந்த அகன்ற முல்லைக் காட்டிலே தங்கி, தீக்கடைகோலால் உண்டாக்கிய கடைக் கொள்ளியாலே துளையிட்ட கரிய துளையினையுடைய குழலால் எழுப்பின மிகவும் இனிய பாலை என்கிற பண்ணைத் தான்வெறுத்தால், குமிழினது உட்பொய்யாகிய கொம்பிடத்தே வளைத்துக் கட்டின மரலின் கயிறாகிய நரம்பினையுடைய வில்லாகிய யாழினை விரலாலே எறிந்து குறிஞ்சிப்பண்ணை இசைப்ப, அதனைத் தம் சுற்றத்தின் ஒலியாகக் கருதி வண்டுகள் செவிமடுத்துக் கேட்கும்'' (பெரும்பாண். 175-182) என்று அருமையாகக் காட்டியுள்ளார். பகற்பொழுது கழிந்து, வெம்மையடங்கி, முல்லை மலரும் மாலைப் பொழுது தொடங்கும். அப்பொழுது பலவாகிய கறக்கும் ஆனினங்கள்தம் கன்றொடு காடுதொறும் தாவி வர ஆயர்கள் தம் வாயில் குழல் வைத்து ஊதுவர் (அகம்.354)


களம் பாடும் கம்பர்

இசைக்கும் பாணர்களில் உழைக்கும் மக்களுக்காகப் பாடல்களைப் பாடி மகிழ்விப்பவர்கள் ஏர்க்களம் பாடுவோர் எனவும், போர் நடக்கும் போர்க்களங்களில் மன்னர் மற்றும் படை வீரர்களுக்காக அவர்களின் ஓய்வு நேரத்தின் போது போரில் அவர்கள் பட்ட வலிகளையும் வேதனைகளையும் ஆற்றவேண்டி இசைக்கருவிகளை மீட்டிப் பாடி அவர்களை மகிழ்விப்பவர்கள் போர்க்களம் பாடுவோர் எனவும் அழைக்கப்படுவர். கோபல்லபுரத்து மக்கள்

புதினத்தில் கம்பங்கதிர் அடிக்கும் களத்தில் புகழ்ந்து பாட வரும் கம்பரைக் குறித்து முழுமையாகப் பதிவு செய்கின்றார் கி.ரா.அப்பதிவுகள் சங்ககால நினைவுகளின் தொடர்ச்சியாக அமைந்துள்ளமை மகிழத்தக்கது.

"பிணையல் கண்ணிகளில் மாடுகளை பிணைத்தார்கள். வட்டம் போட்டு இருந்த கம்பங்கதிர்களின் மேல் பிணையல்களை பொலி பொலி பொலி என்று விரைவாக சொல்லிக் கொண்டே அதில் ஏற்றினர். மாடுகள் ஆவலோடு வேகமாய் வந்து கம்பங்கதிர்களை வாய் நிறைய அள்ளித் தின்று கொண்டேன் வட்டம் சுற்றிவந்தன (கோபல்ல புரத்து மக்கள் பக்.11) அதிகாலையில் பிணையல் விலக்குவதற்கு முன்னால் களத்துக் காட்டுக்குக் கவிராயர் வந்து விடுவார். கடவுளைப் பற்றியும் மாடுகளைப் பற்றியும் சம்சாரிகளைப் பற்றியும் அவர் புகழ்ந்து பாடுவார். அவர் பாடுவதைக் கேட்டுக் கொண்டே களத்து வேலைகள் நடைபெறும். கோபல்ல புரத்து மக்கள் (பக். 11).

கடவுள் ஆதியில் ஜீவராசிகளைப் படைத்து அவைகளைப் பார்த்து "நீ இந்த வேலைக்கு போ நீ செய்ய வேண்டிய வேலை இன்னது என்னது என்று சொல்லி உலகத்துக்கு அனுப்புகிறார். அப்போது மாட்டைப் பார்த்து பூமியை உழுவதற்கு நீ கலப்பையை இழுக்கணும். பாரங்களை இழுத்து நீ மனு'னுக்கு உதவணும், தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்கு அவைகள் செத்துப் போகாமல் காப்பாற்ற உன் பெண் வர்க்கங்கள் உங்கள் பாலைத் தந்து அவர்களை காப்பாற்றணும்" இப்படி எல்லாம் சொன்னார் கடவுள். சரி என்று தலை ஆட்டுவதற்குப் பதில் மாடு மௌனமாக நின்றது. "நீ மனதில் நினைத்துக் கொண்டிருப்பதை சொல் பக்கத்தில் இந்தா இருக்கும் மனுஷனும் கேட்டுக் கொள்ளட்டும்" என்றார்,



மாடு சொன்னது

"என்னைத் தொழுவிலேயே கட்டிப்போட்டு வைக்காமல் தினமும் கொஞ்சம் லாந்த விடணும். என்னையும் என் வம்சாவளிகளையும் அடித்துத் துன்புறுத்தக் கூடாது. பச்சை காலங்களில் தினமும் எங்களுக்கு ஒரு நேரமாவது பச்சை கொண்டு வந்து போடணும். கம்பங்கதிர் பிணையல் கட்டும் போது எங்களுக்கு வாக்கூடற பூட்டக் கூடாது. வருஷத்துக்கு ஒரு தாபா எங்கள் தொழுவில் பொங்கலிட்டு எங்களுக்கு மரியாதை செய்யணும். அன்றைக்கு எங்களைக் குளுப்பாட்டி கொம்புகளில் மஞ்சள் தடவி குங்குமம் இட்டு தின்பதற்குக் கரும்பு பொங்கல் எல்லாம் கொடுக்கணும்". கடவுளை சாட்சியாக வைத்து இதுக்கெல்லாம் ஒத்துக் கொண்டான் மனுஷன் .

அப்போது இப்படி ஒத்துக்கொண்ட மனுசனைப் பார்த்து மாடு சொன்னது "இப்படி எல்லாம் நீ செய்தால் நான் செத்ததுக்குப் பிறகும் உன் காலுக்கு செருப்பாக உழைப்பேன். உன் களத்தில் மலை உயரம் கதிர்கள் அம்பாரமாய் குவிந்து கிடக்கும். அப்போது கவிராயன் வந்து உன்னையும் என்னையும் தேனிலும் இனிய தமிழில் புகழ்ந்து பாடுவான். அவனுடைய இரண்டு கைகளாலும் பொலியை எவ்வளவு அள்ளி கொண்டு போக முடியுமோ அவ்வளவுக்கு நீ அவனை அனுமதிக்க வேண்டும் பூமி உனக்கு பொன்னாய் விளையும்" (கோபல்லபுரத்து மக்கள் பக் 12)

களத்துக்காட்டில் வந்து இப்படிப் பாடும் கவிராயனுக்கு கம்பர் என்று ஒரு பெயர் உண்டு. அவன் பாடி முடித்ததும் சுற்றி வந்து கொண்டிருக்கும் பிணையலை நிறுத்துவார்கள். கவிராயன் இரண்டு கைகளையும் பிணையல் வட்டத்துக்குள் நுழைத்து கொள்ளும் அளவுக்குப் பொலியும் சக்கையுமாக மூன்று தடவைகள் எடுத்துத் தரையில் விரித்து இருக்கும் அவனுடைய அங்க வஸ்திரத்தில் போட்டுக் கொண்டு போவான். காட்டிலிருந்து மகசூல் வந்தவுடன் சம்சாரி வழங்கும் முதல் தானம் இது. மற்றவருக்கெல்லாம் அவன் தன் கையினால் அள்ளிக் கொடுப்பான். கம்பருக்கு மட்டும் அள்ளிக் கொள்ளும்படி விட்டுவிடுகிறான் (கோபல்லபுரத்து மக்கள்.13)

இங்கு கி.ரா. குறிப்பிடும் கம்பர் முல்லை நிலத்தின் பாணன் என்று கருதலாம்.முல்லைத்திணைப் பாடல்களில் இடம்பெறும் பாணன் உயர்நிலையில் வைத்தெண்ணப்படுவதைக் காணலாம். பாண்ன் தலைமக்களிடம் அன்புள்ளவனாய் அவர்களுடன் இனிதிருந்து: தனது இசையால் மகிழ்விக்கச் செய்வான். தலைமகன் வினைவயின் பிரியநேர்கையில் அவர்களிடையே தூதுவனாகச் சென்று துன்பம் தவிர்ப்பான்: இவ்விரு நிலைகளில் இப்பாடல்களில் பாணன் சித்தரிக்கப்பட்டுள்ளான்.



ஏறு தழுவல்

முல்லைத்திணையின் மிக முக்கிய நிகழ்வு ஏறு தழுவுதலாகும். தமிழகத்தின் கால்நடைச் செல்வங்களின் பெருமைகளை மிக விரிவாக சங்க இலக்கியம் காட்டுகிறது.ஏறுதழுவல் என்பது கொல்லேறுகளைத் தழுவி அடக்குதலாகும். இது ஏறுகோள் என்றும் வழங்கும். இவ்வேறுதழுவலே இன்று காளைப்போர், சல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு எனப்பல பெயர்களில் வழங்குகிறது. ஏறுதழுவல் இடத்தில் விடப்பட்ட ஏறுகள் கணிச்சிபோல் சீவிய கூரிய கொம்பினையுடையன. நெற்றியில் சுட்டிகொண்ட காரேறும், செம்புள்ளிகள் நிறைந்த வெள்ளேறும் , வெள்ளிய காலும் கரிய உடலுமுள்ள ஏறும், சிவந்த உடலும் வெண்புள்ளியும் கொண்ட எருதும், இளம்பிறைக் கொம்பும் சிவந்த உடலுமுள்ள கொம்பேறும், வாலியோன் மேனி மானும் வெள்ளேறும், திருமறு மார்பனைப் போன்ற'' காரேறும், முக்கணான் நிறம் போன்ற கபிலையும், சேய்நிறம் மானும் செவ்வேறும், சங்குபோல் சுட்டி கொண்ட காரேறும், வாலியோனைப் போன்று சிவந்த மறுவினையுடைய வெள்ளேறும், இந்திரன் கண்கள் போன்று பல புள்ளிகளையுடைய கொல்லேறும், வெள்ளுடை உடுத்த முருகன் போன்று வெள்ளிய காலும் செவ்விய உடலும் உடைய ஏறும், இன்னும் பலவகைத்தாகிய ஏறுகளும் அங்கே ஊழித்தீ, கணிச்சி போலச் சுழன்று திரிதர

"எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழந்தன மருப்புக்
கலங்கினர் பலர்" (கலி : 102 :21-24)

என்று ஏறு தழுவுதற்கு வாடிவாசல் வந்த காளைகளின் விவரங்களைப் பட்டியலிடுகின்றது கலித்தொகை.

கி.ராஜநாராயணனின் புதினத்திலும் காரிக்காளையும் காராம் பசுவும் அங்க லட்சணங்களுடன் விவரிக்கப்படுகின்றன. ‘‘நந்தகோப நாயக்கருடைய தொழுவில் ஒரு நாள் சகல லட்சணங்கள் கொண்ட ஒரு காரிக்காளைக்கன்று பிறந்தது. அதனுடைய வடிவழகை நாள் பூராகவும் பார்த்து அனுபவித்துக் கொண்டேயிருப்பார்கள் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்ட முகத்தோடு.அவருடைய பசுத்தொழுவில் எப்பவுமே தெரிந்த மாடுகளாகத் தான் இருக்கும்.அவைகளில் அவருக்கு பிடித்தமான ஒரு காராம்பசு இருந்தது. அதனுடைய பாலின் மணம் அவருக்கு ரொம்பப் பிடித்தம்’’. (ப.39)

‘‘மனிதர்களை சர்வாங்க அழகுப் பிறப்பு எப்படி அபூர்வமோ அப்படியே தான் மாடுகளிலும்,எப்பவாவது தான் இந்த பிறப்பு நிகழும்’’.என்கிறார். ஜல்லிக்கட்டு நிகழ்வினைக் குறித்து, ‘‘பொங்கலுக்கு மறுநாள் காரியை ”பிடிக்கிறது” என்று ஏற்பாடு.கரிசில் காட்டில் ”எருது கட்டு” என்கிற வீர விளையாட்டு ஏற்பட முன்னோடியான அந்த நிகழ்ச்சியைப் பார்க்க ஊரிலிருந்தும் சுற்றுப்புறங்களிலிருந்தும் கூட்டம் கூடியிருந்தது. பல இடங்களிலிருந்து மாட்டைப் பிடித்து அடக்குகிற இளவட்டங்களும் திறமைசாலிகளும் வந்திருந்தார்கள் (ப. 54)



கோபல்ல கிராமத்தின் பக்கத்தில் உள்ள கொத்தூரு கிராமத்திலிருந்து சிம்மம் ரங்கசாமி நாயக்கர் வந்திருந்தார். அவரைப் பார்த்ததும் கிராமத்தார்கள் மரியாதை செய்து வரவேற்றார்கள். இவர் மாட்டுச் சந்தை கூடுகிற கழுகுமலைத் ”தாவணி”யில் போய் பயங்கரமான காய்ச்சல் காளைகளை விரும்பிப் பிடித்துக் கொண்டு வருவார் முன்பு (ப. 55). பாய்ச்சல் காளைகள் வேலைக்கு எப்போதும் வேகமாக இருக்கும் என்பதைத் தெரிந்து வைத்திருந்தார். அதோடு அவைகள் விலையும் மலிவாக கிடைக்கும். மாட்டுத்தாவணிகளில் பாய்ச்சல்க் காளைகளை ரெட்டைக் கயிறுகளில் கட்டிப்போட்டிருப்பார்கள். இவர் அந்த காளைக்குப் பக்கத்தில் போய் இடுக்கில் ரண்டு கைகளையும் ஊன்றி நின்று கொண்டு அமுத்தலான ஒரு பார்வையோடு அந்தக் காளையைப் பார்த்துக் கொண்டிருப்பார். அவர் அப்படிப் பார்ப்பதை மற்றவர்கள் ஒரு வேடிக்கையாகப் பார்ப்பார்கள். “கள்ளப் பாய்ச்சல்“ மாடுகள், “சதைக்கண்“ மாடுகள் இவைகளுக்கு எதிரே போய் நின்றால் அதுகளுக்கென்று உள்ள “கிருத்திரியத்தை“ அவைகள் காண்பிக்கத் தொடங்கும். அவைகளின் சினைப்புகளையும் தரையைக குளம்பால் த் தேய்ப்பதையும் அவர் மீசைக்குள் தெரியாத ஒரு புன்னகையோடு அமைதியாய்ப் பார்த்துக் கொண்டிருப்பார ்(பா. 56). என்று ஜல்லிக்கட்டு மாடுகளைத் தேர்ந்தெடுக்கும் இலாவகத்தை உரைக்கின்றார்.

கரிசல்காட்டில் இப்போது நடக்கும்” எருது கட்டு” போல அல்ல அது’ ஜனக் கூட்டத்துக்கு மத்தியில், மாட்டை வடக்கில் பிணைத்துவிட்டு, பிறகு மடக்கிப் பிடிப்பதற்கு. இங்கே குறிப்பிட்ட இடத்திற்குத் தந்திரமாகப் போக்கு காட்டி காளையைக் கொண்டு வந்து அமைக்க வேண்டும். அல்லது காளை நிற்கும் இடத்துக்குப் போய் அதை மடக்கிப் பிடிக்க வேண்டும். இடம் பிசகாக அமைந்து விட்டால் அதுபோல அபாயம் வேறு இல்லை. மனுஷன் தந்திரக்காரனாக இருந்தாலும் ,உயிருக்குப் பயப்படாத மூர்க்கம் கொண்ட காளையோடு நிராயுதமாக வெறும் கைகளாலேயே

அதைப் பிடிப்பது என்பது லேசான காரியமில்லை. மனு'ன் பல வி'யங்களுக்குக் கட்டுப்படுத்தி வளர்க்கப்கப்பட்டவன் .மிருகங்கள் அப்படி அல்ல. காளைக்கு ஆயுதங்கள் கொம்புகளும் குளம்புகளும் குளம்பிபினால் வசமாக ஒரு உதை வாங்கினால் அதிகபட்சப் மனித எலும்புகள் உடையும். கொம்பு அப்படி இல்லை ' குத்தி உயிரைக் வாங்கி விடும். (ப. 57,58)

முல்லைக்கலியில் ஏறு தழுவும் நிகழ்ச்சி வருணனை தரப்படுகின்றது."ஏறஞ்சாப் பொதுவர் ஏறுகளின் மீது பாய்கின்றனர். ஒன்று ஒருவனைக் கோட்டால் குத்திக். குடரைச் சரிக்கின்றது. இன்னொன்று குத்திக் குடர்சரித்துக் கோட்டிற் கொண்டு குலைக்கின்றது. சில ஏறுகள் பொதுவரைத் தெரிந்து தெரிந்து குத்துகின்றன. கொம்பெலாங் குருதிப் பூச்சு. கொம்புகளைச் சுற்றிலும் குடர்கள் சுற்றிக்கொள்கின்றன. ஒரு பொதுவன் ஓர் ஏற்றின் மீது பாய்ந்து மார்பிறுகப் புல்லிக் கொம்பினைப் பிடித்துக் கழுத்திற் கிடக்கின்றான். பாயும் பொதுவர்தம் உடல்களை ஏறுகள் உழலை மரத்தைப் போலத் துளைக்கின்றன. குருதி பெருகி வழிவதால் அவர் கையெல்லாங் குருதி ' அதனால் - கையில் வழுவழுப்புமிக, மணலை அள்ளிக் கையைப் பிசைந்து உடம்பிலுந் தூவிக் கணமுந் தாழாராய்க் கடல்மீது பரதவர் சிறு மிதவையில் ஏறினாற்போல எளிதாக ஏறுகளைத் தழுவுகின்றனர். " (முல்லைக்கலி) என்று காட்டுகின்றது.



கிட்டப்பன் காரியை அடக்கி மடக்கும் காட்சியைத் திரைப்படம் போல காட்டுகின்றார். ‘‘‘அவர்கள் ஏதோ ஒன்றுக்காகக் காத்துக் கொண்டிருப்பது போல் தெரிந்தது .கிட்டப்பன் காரியின் இடது பாரிசத்தில் சற்று தள்ளி மண்ணில் வசமாக கால் பதித்து நின்று கொண்டு துருதுறுக்கும் தனது துதிக்கை போன்ற கைகளைக் காரியை நோக்கி முன் நீட்டத் தயாராகி அதன் கண்களையே கவனித்துக் கொண்டிருந்தான் (ப. 60). தரையிலிருந்து ஒரே தவ்வலில் காரியின் மேல் விழுந்த கிட்டப்பனின் வலது கை இடுக்குக்குள் காரியின் உயரமான திமிலும் இடதுகையின் பிடிக்குள் அதன் இடது அடிக்கொம்பும் பிடிபட்டது. உடனே காரி எகிறிக் குதித்துக் கிட்டப்பனை உதறித் தள்ள முயன்றது. அட்டை போல் ஒட்டிக்கொண்டு அவன் காரியின் முன்னத்தங்காலோடு தனது வலது காலை பின்னிக் கொண்டான். காரி தலையை முன்கவிந்து தரைமண் தூசி கிளம்பும்படியாக ‘‘சீத்’’ அடித்தது' அதோடு வாலையும் பின்னத்தங்கால்களையும் தூக்கிக்கொண்டு வெட்ட வெளிக் காற்றை உதைத்தது. கிறுகிறு என்று சுழல ஆரம்பித்தது. கிட்டப்பன் பிடியை விடவில்லை. திமிலைச் சுற்றிப் போட்டிருந்த கையின் பிடியை அவன் இறுக்க சந்தர்ப்பம் பார்த்திருந்தான். அதற்குத் தோதாய் இடது கையால் கொம்பை அடை கொடுத்துக் கொள்ள வேண்டும்.

காரி திடீரென்று ஓட ஆரம்பித்தது. அதன் காலைச் சுற்றியிருந்த பிடி நழுவி விடுமோ என்று யோசித்தான். சரி இதை இப்படி விடக்கூடாது என்று நினைத்து கொம்பை தள்ளிக் கொண்டே திமிலை இறுக்கினான். ஓட ஆரம்பித்ததை நிறுத்தி அதுஅவனை தன் உடம்போடு சேர்த்து நைந்து விட நினைத்தோ என்னவோ இடது பக்கமாக பலம் கொடுத்து அவனை நெருங்கியது. கிட்டப்பன் எதிர்பார்த்தது இதைத்தான். அவன் நினைத்தது போல் இப்பொழுது இடது கைக்கு நல்ல அடை கிடைத்து விட்டது. அந்த அடையின் பலத்தில் வலது

குடங்கைக்குள் அகப்பட்டு இருந்த திமிலை இறுக்கினான். திமில் இறுக இறுகக் காரி முன்னத்தங்கால்களை மடித்துத் தரையில் மண்டியிட ஆரம்பித்தது.'' (ப.61,62)

ஜல்லிக்கட்டு நடை பெறும் வாடிவாசலில் அமர்ந்து வருணனை கேட்டுக்கொண்டே ஏறு தழுவுதலை கண்டது போல கி.ரா. அவர்களின் விளக்கம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது.

பால் கறத்தல்

முல்லை நிலத்தின் தொழிலாக பால் பயன்கொள்ளுகின்ற கால்நடை மேய்த்தல் தொழிலும் பால், மோர், தயிர், வெண்ணெய், நெய் விற்றலையும் கொள்ளலாம். கி.ராவின் பல்வேறு படைப்புகளிலும் பசு, காளை, எருமை, ஆடு ஆகிய கால்நடைகளை மேய்ப்பதின் நுட்பங்களைக் கூறிச் செல்கின்றார். நவீன இலக்கிய வகைமையாகிய புதினத்தில் மரபார்ந்த தொழில் நடைமுறைகளைப் பதிவு செய்கின்றார் கி.ரா. அதே சமயத்தில் செவ்வியல் இலக்கியமும் மிக விவரமாக நிரை மேய்த்து பால் கறப்பவர்கள் பற்றிய குறிப்புகளைத் தருகின்றது. ”ஆயர்கள் காலில் செருப்பு விடாமற் இட்டதால் வடுவழுந்தின வலிமையான கால்களை உடையவர். ’ நிரைகளை மேய்க்கும் கோலினைக் கையில் உடையர் ’ மரங்களை வெட்டும் கோடரி பிடித்தமையால் தழும்பேறிய வலிய கையினர் ’ இரண்டு தோள்களிலும் உறியினையுடைய கலங்கள் மேலே இருந்தமையால் உண்டான தழும்பினைத் தோளில் உடையவர் ’



”பசு கறந்த பாற்கையைத் தடவின தலைமயிரை உடையவர் : மலர்களை அணிந்தவர் ’ ஒற்றை ஆடையர் ’ பாற்சோற்றை உண்பவர் ’ பால் வைக்கும் கறவைக் கலங்கள் வைத்த உறியையும் கழுவொடு சூட்டுக்கோல்களை இட்டுச் சுருக்கிய தோற்பைகளையும் தம்முடன் எடுத்துச் செல்பவர் ’ நீண்டு வளர்ந்த கொன்றைக் காயால் செய்த குழலை இனிமை தோன்ற இசைப்பர் ’ வழுவின சொல்லையுடையவர் ’. தத்தம் ஆநிரைகளோடு மழையால் நனைந்த முல்லை நிலத்தில் வாழ்பவர் ”(கலி : 106 : 1-5) என்று ஆயர்களின் ஒழுகலாறுகளைக் கலித்தொகை காட்டுகின்றது. கி. இராஜநாராயணன் அவர்கள் கறவைத் தொழில் வாழ்வை மிக நெருக்கமாகக் கண்டவராக உள்ளார். அவையெல்லாம் அவரது வாழ்வியலின் ஒரு பகுதியாகவே உள்ளமையால் அதன் நுட்பங்கள் அவருக்குப் பிடிபடுகிறது எனலாம்.

”அவிழ்த்து விடப்பட்ட கன்றுக்குட்டி பாய்ச்சலில் குதியாளம் போட்டுக் கொண்டு தாயிடம் ஓடியது. காம்பில் வாயை வைத்ததும் வாலை உயர்த்தித் கோமியம் விட்டுக் கொண்டே கன்றின் அரையைப் பிரியத்தோடு நக்கியது. இந்த நக்கலின் சுகத்தில் கன்று விட்ட கோமியத்தை சொட்டு கீழே சிந்தாமல் சுவைத்து உண்டது. இதை கிட்டப்பன் பார்த்துக் கொண்டே இருக்கும்போது அச்சிந்திலு பால் பீச்சும் பாத்திரத்தோடு வந்து நின்றாள் .பசு காம்பில் பால் இறக்கி விட்டது. கன்று சத்தம் எழ வாயின் இருபுறமும் பால் நுரை வழிய சப்பிக் குடித்துக்கொண்டே இருந்தது. அச்சிந்தலு உட்கார்ந்து பாத்திரத்திலுள்ள தண்ணீரைக் கையில் விட்டு மடியில் இறைத்துக் கழுவி விறைப்பான காம்புகளை நீவி விட்டு பீச்சத் தயாரானாள். கிட்டப்பனுக்கு அவளுடைய முகம் தெரியவில்லை’ பசு மாட்டின் வயிறு மறைத்தது. அவள்

தரையில் முட்டுகள் ஊன்றாதபடி மண்டியிட்டு துடையிடுக்கில் பாத்திரத்தை இடுக்கிக் கொண்டு பால் கறக்க ஆரம்பித்தாள் .பால் பீச்சும் போது அவளுடைய "பயத்தங்காய்"விரல்கள் வேகமா இயங்குவதைக் கிட்டப்பன் பார்த்தான். பாத்திரத்தில் பால் பீச்சும் ஓசை, பால் மீது பால் விழும் ஓசை, பால் நுரையின் மீது பால் விழும் ஓசை இப்படிக்கேட்டுக் கொண்டிருந்தது. மத்தியில் நுரையைத் தொட்டு காம்புகளில் தேய்த்து பால் கறக்கும் லாவகம். சொரு சொரு சொரு என்று பாத்திரம் நிறைந்து கொண்டு வருவதை ஓசையிலிருந்து நிதானிக்க முடிந்தது. மாடு கன்றை நக்கிக் கொடுத்துக் கொண்டேயிருந்தது. (கோபல்லபுரத்து மக்கள் பக். 33, 34) என்று பால் கறக்கும் முறையை விவரிக்கின்றார்.

நெருப்புக்காத்தல்

பழங்காலத்தில் நெருப்பு காத்துவைத்தல் பெரும் பணியாக இருந்திருக்கின்றது. கிட்டப்பனின் மனைவி ரேணம்மாள மூலம் இதனைக் கூறுகின்றார் கி.ரா. "தனது பிறந்த வீட்டில் கன்னிகாக்கும்போது இவள் செய்து கொண்டிருந்த வேலைகளை பலவையும் இங்கே செய்ய வேண்டி இருந்தது முக்கியமாக பெரிய வீடுகளில் செய்து வருவது போல அணைந்து விடாமல் நெருப்பை பாதுகாத்து வைப்பதும் இல்லாதவர்கள் வந்து நெருப்பு கேட்கும் போது கொஞ்சம் கொடுப்பதும் ஒரு முக்கிய வேலை பார்ட்டி சொல்லி இருக்கிறாள் ரேணுமா தானங்களில் சிறந்த ஒன்று இந்த நெருப்புதானம் என்று மழைக் காலங்களில் நெருப்பைக் காப்பாற்றுவதும் கொடுப்பதும் பாடுதான் என்றாலும் முடியாது என்று சொல்ல முடியுமா பிழைப்புக்காக காட்டில் போய் குடும்பத்தோடு காலையிலிருந்து மாலை வரை உழைத்து விட்டு வீட்டுக்கு வந்தவுடன் அடுப்பை பற்றவைக்க நெருப்பு வேண்டுமே கிட்ட போன் வீட்டில இல்லாத சமயம் பார்த்து தெரு பக்கத்து வீடு என்று பெண்கள் நெருப்பு வாங்க வருவார்கள் நெருப்பு மாத்திரம் அவர்கள் வாங்கிக் கொண்டு போய் விடுவதில்லை நெருப்புக் கொடுத்தவர்களுக்கு மறு உபகாரமாக ஊருக்குள் நடந்த இரண்டு செய்திகளை சொல்லிவிட்டு போவார்கள் ஏற்கனவே செய்தி சொல்வதற்கு என்று காலையிலும் மாலையிலும் இரண்டு பேர் ஏகாளிச்சியும் குடிமகனும் சோறு வாங்க வருகிறார்கள் ஊரில் உள்ள கிராமத்தில் உள்ள பெரிய வீட்டுப் பெண்களை தான் செய்தி அறிவிப்பாளர்கள் அப்போது நடக்கும் செய்திகளை சூடு ஆறுவதற்குள் கிராமத்துக்கு தெரிவிப்பவர்கள் இவர்கள்தான். கோவலர்கள் தீ கடை கோலால் நெருப்பு உண்டாக்கி அதனைக் காப்பாற்றி வைத்திருக்கும் சங்கப்பாடல்கள் பலவற்றை முல்லைத்திணையில் காணலாம். மேய்ச்சலுக்குச் செல்லும் சில நேரங்களில் காட்டுப்பகுதியிலேயே தங்க வேண்டிவரும். அப்பொழுது அசையும் தலையினையுடைய செம்மறியாட்டின் தொகுதியைக் காக்க, கடையும் கோலினின்றும் எழுந்த சிறுதீயை விறகிற் சேர்த்து, வலிய தாம்பினால் கட்.



கடவுள் நம்பிக்கை

ஐந்திணைகளுள் முல்லை நிலத்திற்குரிய தெய்வமாக, "மாயோன் மேய காடுறை உலகமும் " என்பதால் திருமால் வணங்கப்பட்டார். பொதுவாக ஆயரினத்தார் மாயோனைத் தங்குல தெய்வமாகப் போற்றி வழிபடும் இயல்பினர். மேலும் பல சிறுதெய்வ வழிபாடுகளும் அவரிடையே காணப்பட்டன. நீர்த்துறைகளிலும் ஆலமரத்தடியிலும் மாமரங்களில் உறைகின்ற தெய்வங்களையும் வணங்கினர்.அத்தெய்வங்களுக்கு மாலை அணிவித்து மகிழ்வர். புதிய

மாலைகளை அணிவிக்கும்போது, பழைய மாலைகளைப் புறத்தே வீசி எறியாமல் அவற்றை அத்தெய்வங்கள் அமர்ந்திருந்த மரக்கிளைகளின் மேல் வீசி எறிவர். இவ்வாறு வீசியெறிந்த மலர்மாலைகள் பல அம்மரக்கிளைகளில் தொங்கிக் கொண்டிருக்கும். “ஆலும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட மாலை ” (கலி :106:28) என்று கலித்தொகை காட்டுகின்றது. ஏறுதழுவி வெற்றி பெற்ற பின்னர் ஆயர்கள் ஒன்றுகூடித் தம்வழிபடு தெய்வ மான திருமாலின் பெருமைகளைக்கூறி வழிபடுவர்.

இன்றைய நாளில் கோயில் காளை என்று நேர்ந்து விடும் வழக்கத்தை ‘‘‘ பிறந்த காளைக் கன்றை வளர்த்துப் பெரிதாக ஆக்கி வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பதில்லை .அந்த கன்று பால் மறந்ததும் கூளம் கடிக்க ஆரம்பித்து விட்டது என்றால் ஒரு நல்ல நாள்ப் பார்த்து பெருமாள் கோவிலுக்குக் கொண்டு வந்து ஊர்கூட்டிப்பொங்கல் வைத்து அந்த காளைக் கன்றின் முதுகில் திருநாமம் போன்று சூட்டுக் கோலால் ”சூலம் சாத்தி” அவிழ்த்து விட்டு விடுவார்கள். அந்த அடையாளம் எப்போதும் அழியாமல் பார்க்கிறவர்களுக்கும் இது கோவில் மாடு என்று தெரியும்படி இருக்கும். இதனால் அந்த மாட்டுக்கு ஒரு தனீசுதந்திரம் உண்டு.யாரும் அதை அடிக்கவோ துன்புறுத்தவோ மாட்டார்கள் இ‘ட்டப்படி அது சம்சாரிகளின் விளைச்சலைக் தின்று வளரும் காடுகளில், ”(பக். 38) என்று வழிபாட்டு முறையைக் கூறுகின்றார்.



கண்ணனுக்கும் கால்நடைகளுக்கும் உள்ள தொடர்பை இதிகாசங்கள் முதல் பக்தி இலக்கியங்கள் வரை காட்டும். அதனை‘‘பெருமாளுக்குக் காளை வாகனம் இல்லை’ என்றாலும் அவன் பசுக்களையும் கன்று காலிகளையும் மேய்த்துப் பராமரித்தவன் அல்லவா? சம்சாரிகள் அவைகளை அப்படியே பார்க்கிறார்கள். இன்றும் பசுமந்தைகள் மேய்ச்சலுக்குப் போகும்போது புல்லாங்குழலோடு அவைகளின் கூடவே அவன் வருவதாக மேய்ப்பவர்கள் நம்புகிறார்கள் என்று நினைத்தார்’’ (பக்.42) என்பார். மாநோம்பு எனப்படும் வழிபாட்டு முறையின் சடங்குகளையும் விவரிக்கின்றார்.

‘‘‘முதல் நாளை பச்சை வன்னிமரத்தை கைப்பிடிக்குள் அடங்குகிற கனமுள்ள இளம் வன்னி மரத்தைக் கொண்டு வந்து ஆழமாகத் தோண்டி மூடும்போது கற்களைப் போட்டு கிட்டித்துத் தரையை நிரத்துவார்கள். பார்ப்பவர்களுக்கு இப்பத்தான் ஒரு வன்னி மரம் தரையில் இருந்து முளைத்து வந்தது போலிருக்கும். இப்படி நட்டிய அந்த மரத்தை ஒரே தடவையில் பிடுங்கி எறிவது என்பது அவ்வளவு சுலபமில்லை.

மாநோம்பு ஊர்வலம் வன்னிமரம் நட்டிய இடத்துக்கு வந்ததும் நின்றது. சரஸ்வதி தேவியின் சார்பில் வாத்தியார் வன்னி மரத்தின் மீது வில்லை வளைத்து மூன்று தரம் அம்பு எய்கிறார் அதைத் தொடர்ந்து அவருடைய மாணாக்கர்கள் பனைமரத்து மட்டைகளில் செதுக்கிய வாள்களாலும் பட்டாகத்திகளாலும் வன்னி மரத்தை வெட்டுகிறார்கள் .அதைத் தொடர்ந்து வன்னி மரம் பிடுங்கப்படுகிறது “(.ப.19) கலித்தொகையில் காட்டப் பெறும் மரவழிபாட்டு முறையைப் போன்று கோபல்லபுரத்து மக்களும் வழிபட்டுள்ளனர்.

நிறைவுரை

முல்லைத்திணை வாழ்வியலானது படைப்பாளர் கி.ராஜநாராயணனின் கோபல்புரத்து மக்கள் புதினத்தில் புள்ளி விவரத்துடன் தரப்படுகின்றது. செவ்வியல் இலக்கியங்கள் வாய்மொழி மரபின் செய்யுள் வடிவம் என்பர். கி.ரா.வின் படைப்புகள் செவ்வியலின் மறு உருவாக்கம் என்று ஆழ்ந்து நோக்கும் போது அறிய முடிகிறது.

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ராவின் பார்வையில் மொழிநடை

முனைவர் சி சிவசங்கரி,






தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் சி சிவசங்கரி,
மெயின் ரோடு, சி.என்.பாளையம்,
கருவாட்சி அஞ்சல்,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்,
அ.கு. எண் : 605201.

கி.ராவின் பார்வையில் மொழிநடை

ஓர் எழுத்தாளரின் படைப்பு என்பது அவரது ஆளுமையின் வடிவு எனலாம். அதுபோலவே அவரது மொழிநடையும் ஆளுமையின் பதிவு என்றே கூறுவர். அந்தவகையில் எழுத்தாளரின் மொழிநடை அவரின் தனிக்கருவி என்றும் சொந்தக் கருவி என்றும் கூறலாம். இதனை அவர் மட்டுமே பயன்படுத்தி, அதன் மூலம் அவர் தம் அனுபவத்தை வெளிப்படுத்துகிறார். நடைமுறை வாழ்வில் இருக்கும் மொழியின் இயல்புகள் எழுத்தாளரின் படைப்பு மொழியில் அமையாது.



கி.ரா. மற்ற படைப்பாளர்களைப் போலவே தம்முடைய சிறுகதைகளிலும் சில நடைமுறைகளைக் கையாளுகிறார். அவை, சிறுகதைக்கென்றே இயல்பாகவுள்ள சிக்கனத்தை நடையில் கொள்ள வேண்டியதையும் நீண்ட வருணனைகளைத் தவிர்ப்பதையும் நிறையச்சொற்களைப் பயன்படுத்தாதிருப்பதையும் உணர்ந்து தம் சிறுகதைகளைப் படைத்துள்ளார். அதே நேரத்தில் தமது முன்னோர்களின் மொழிநடை முறையில் இருந்து மாறுப்பட்டு, தமக்கெனத் தனியான முழுவதும் மாறுப்பட்ட பேச்சுப்பாங்கான நடைமுறையினை மேற்கொள்கிறார். மற்ற எழுத்தாளர்களோ உரையாடலில் மட்டுமே பேச்சுப் பாங்கினைக் கொண்டுள்ளனர். ஆனால் கி.ரா. அவர்தம் கதைகளில் உரையாடலில் மட்டுமல்லாமல் பாத்திரச் சித்திரப்பு, தகவல்பதிவு, அனுபவப் பரிமாறல் என அனைத்திலும் பேச்சு நடையினைக் கையாளக்கூடிய தனித்தன்மையினைக் கொண்டுள்ளார்.

நடைக்கூறுகள்

“கரு - உரு ஆகியவற்றுக்கிடையே காணப்படும் உறவு எத்தகைய உத்திகளால் பின்னப்படுகிறதோ அவ்வுத்திகள் ஒட்டுமொத்தத்தை நடைக்கூறுகளாக ஏற்றுக்கொள்ளலாம்” என்று ஜெ. நீதிவாணனின் நடையியல் (ப. 148) என்ற நூலின் கூற்றின்படி நடை என்பது சிறுகதையின் கட்டமைப்புடன் உறவுடையது என புலனாகிறது. “ உரையாடல், தொகையுரை, வருணனை என்பனவற்றை நடையின் கூறுகளாகப் பகுத்துக் கூறுவர்” என மா. இராமலிங்கம் விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள் (ப.174) என்னும் நூலில் அமைந்துள்ளது. வட்டார இலக்கியங்களைப் பொறுத்தவரை ‘உரையாடல்’ என்பது வட்டார மொழியில் அமைந்த பேச்சு வழக்கு, குறிப்பு மொழி, ஒலிக்குறிப்பு ஆகியவை உள்ளடங்கிய உரையாடலாக அமைகிறது. ‘தொகையுரை’ என்பது படைப்பாளி எடுத்துக் கூறுவது ஆகும். ‘வருண்னைப்’ பகுதியில் படைப்பாளியின் தனித்த மொழித்திறமைகள் வெளிப்படுகின்றது.

அ. உரையாடல்

கி.ரா.வின் பெரும்பான்மையான கதைகளில் ஆசிரியரே கதைசொல்லியாக இருப்பதால் உரையாடல்கள் குறைவாகவே அமைந்துள்ளது. இவருடைய கதைகளில் உரையாடல் மூலமாகக் களம் அமைப்பது, போராட்டம் அறிமுகமாவது, கதைச்சிக்கல் அவிழ்வது என்கிற அமைப்புமுறை பெரும்பான்மையும் காணப்படவில்லை.

இவருடைய தொடக்ககாலக் கதைகளில் வட்டாரத்தன்மை குறைந்த உரையாடல்களேக் காணப்படுகின்றன. ‘மாயமான்’ (1958) கதையில் வரும் உரையாடல் ஓரளவு மட்டுமே பேச்சு வழக்காக அமைந்துள்ளன. கிணறு வெட்ட உதவித்தொகை வழங்கப்போவதாக அரசு அறிவித்துள்ள செய்தியைப் படித்த கிராமத்து மக்களின் உரையாடல்,

“இது என்னய்யா வேடிக்கையா இருக்கு. இது நெசந்தானா?

‘நெசமாவது ஒண்ணாவது எல்லாம் பேப்பர்காரன் விட்ட அவுட்டு’



‘சேச்சே, அப்படி எல்லாம் இருக்காது! இதிலே ஏதாவது கொஞ்சம் நிஜமும் இருக்கும்?’

‘நீர் ஒண்ணு! உமக்கு இன்னும் பித்தம் தெளியலே போலிருக்கு?’

‘ஐயோ... என் தலையில் எழுத்தா,

ஆனானப்பட்டவனுக்கெல்லாம் கடனே இல்லை என்னுட்டானே! இனாமாகக் கொடுக்க என்ன தெருவிலேயா கிடக்கு?”

என கி.ரா. மாயமான் (ப.33) என்ற நூலில் படைத்துக் காட்டியுள்ளார். மேலே குறிப்பிட்டுள்ள உரையாடல் கரிசல் வட்டாரத்துக்கே உரிய தனிநடை உரையாடல் என்று கூறமுடியாது. எந்த ஒரு கிராமத்தாரும் பேசும் இயல்பான கிராமத்து பாமர நடையாகவே இது அமைந்துள்ளது. இருப்பினும் ‘மானாங்கனியா, அவுட்டு, நிதானிச்சிரப்படாது’ என்ற சொற்கள் ஓரளவு வட்டார வழக்காக அமைந்துள்ளன. ‘கதவு (1959), ஜடாயு (1959), மனிதம் (1960), கோமதி (1964), நாற்காலி (1969)’ ஆகிய கதைகளிலும் இவ்வாறான உரையாடல் நடையே தொடர்ந்துள்ளது.

பிற்காலக் கதைகளில் வட்டாரப் பேச்சுவழக்கு உரையாடல்களே பெரிதும் அமையப்பெற்றுள்ளன. ‘விளைவு’ (1974) என்னும் கதையில், “அதுசரி அவன் எப்படி வச்சிருந்தா இவளுக்கென்ன? இந்த கோட்டிக் கழுதை

அதைப்போயி என்ன மயித்துக்கு நோண்டனும்?” என கி.ரா. விளைவு (ப.192) என்னும் சிறுகதையிலும், இதனைத்தொடர்ந்து ‘விடிவு’ (1980), ‘உண்மை’ (1984) போன்ற கதைகளிலும் உரையாடல்கள் வட்டார வழக்கு மொழிநடைக்கு முழுமையாக ஆட்பட்டுவிட்டதை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து இவர் தம் கதைகளில் உரையாடல்களை வெகுவாகக் குறைத்து உரையாடல் பண்பைத் தம் நடையில் ஏற்றிப் படைத்துள்ளார். ‘வேட்டி’ என்ற கதையில்

பாத்திரத்தின் பேச்சும், படைப்பாளியின் பேச்சும் கலந்து காணப்படுகிறது. "அந்தக் கிராமத்தின் மாலை நேரக் காட்சிகளை நாம் இப்போது பார்க்கிறோம்" என கி.ரா. ஒரு செய்தி (ப.309) என்னும் கதையில் ஒரு வர்ணனையாளர் போல கதைக்குள் தன்னையறியாமல் நுழைந்துள்ளார். 'சுப்பண்ணா' (1981) என்ற கதையில் ஒரு பார்வையாளன் போல கிராம நிகழ்வுகளைக் கோர்வையாக வட்டாரப் பண்புடன் கூறியுள்ளார்.

ஆ. தொகையுரை

தொகையுரைப் பகுதி என்பது உரையாடல், வருணனைகள் இரண்டையும் இணைத்து ஆசிரியர் கதைப்பின்னல் அமைக்கும் பகுதி ஆகும். இது, பெரும்பாலும் எல்லா ஆசிரியர்களிடமும் அவ்வக்காலப் பொது இலக்கிய நடையை ஒட்டியே அமைந்திருக்கும். கி.ரா.வின் தொடக்க காலக் கதைகளில் இத்தொகையுரைப் பகுதி ஓரளவு பேச்சுப் பாங்கானதாகவும் பிற்காலக் கதைகளில் பெரும்பான்மை பேச்சுப் பாங்கானதாகவும் எழுதப்பட்டுள்ளது. மக்களின் பேச்சு வழக்கில் காணும் குறிப்புச் சொற்கள், ஒலிக்குறிப்புகள் போன்றவற்றையும் அவர்தம் தொகையுரை நடையில் பயன்படுத்தியுள்ளார். 'மாயமான்' கதையில் "அப்பாவு செட்டியார் சைக்கிளில் வந்து 'ஜம்' என்று இறங்கினார்" (ப.32) என்பதும் "உலகம்மாள் தண்ணீரும் செம்புமாய் தயாராக நின்று கொண்டிருந்தாள்" (ப.32) என்பதும், திரிபு கதையில் "நிறைவு விழா அட்டகாசமாக கலகலப்பாய் நடந்து முடிந்தது" (ப.396) என்பதும் பேச்சு வழக்குத் தொடரமைப்புகளை அப்படியே பயன்படுத்தியுள்ளார். மந்தை நிலம், நஞ்சை புஞ்சை, கரிசக்காடு, தோட்ட நிலம், விவசாயியை சம்சாரியென்று குறிப்பிடுதல் போன்ற பேச்சுவழக்குச் சொற்கள் இவரது பெரும்பான்மையான கதைகளில் இடம் பெற்றுள்ளன.



"பெரியவர் உறுமினார்; 'ம்... அவன் மொதல்லெ வஞ்சான்லே; வந்து ஏங்கிட்டே சொல்றது... ம்....? சொல்லிருந்தா அவனே செருப்பெக் களத்திச் சாத்தியிருப்பனெ நாலு சாத்து. சரி, பதிலுக்கு வஞ்செ, என்ன சொல்லி வஞ்செ?.... என்று கேட்டார்" என கி.ரா.வின் கரிசல் காட்டுக் கடுதாசி (ப.25) என்னும் சிறுகதையில் பேச்சு பாங்கில் பேச்சுக்கே உரிய ஏற்றத்தாழ்வுடனும் நீட்டலுடனும் படைத்துள்ளமை காணப்பட்டுள்ளது.

இத்தொகையிரையில், பேசுவது போல எழுதுவதால் எழுத்து எளிதாக நமக்குள் ஓர் உணர்ச்சியாக மாறுகிறது. இவ்வாறு செய்வது உள்ளடக்கத்திற்குத் தரப்படுகின்ற சிறப்பைக் காட்டிலும் அகராதியில் காணக்கூடிய சொற்களுக்கிடையே அகராதியில் இல்லாத பேச்சு வழக்குகளை ஊடாடவிடுவது இருவகைச் சொற்களுக்குமே புதுப்பொருளை உருவாக்குகின்றது.

இ. வருண்னை

கதையைக் கலையாக மாற்றி, எழுத்தாளரது உணர்ச்சியை வெளிக்காட்டுவது வருணனை ஆகும். இது "பொருள்கள், செயல், மாந்தர், உணர்வு போன்ற கூறுகளைக் கதையில் வெளியிடும் போது உணர்ச்சி, அறிவு என்ற இரண்டு தன்மைகளால் அவற்றை நோக்குவதால் வருணனை பிறக்கிறது" என்று மு.சுதந்திரமுத்து படைப்புக்கலை (ப.114) என்னும் நூலில்

குறிப்பிட்டுள்ளார். வருணனைகள் இன்றைய சிறுகதைகளில் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. வருணனைகளே கதை கருவாகிவிடுவதும் உண்டு. வருணனைகள் காட்சிப்பதிவுகளாகப் படிப்பவர்கள் மனதில் பதிய வேண்டும் என்பதற்காகவே எழுதப்பெறுகின்றன.

கி.ரா. தம் கதைகளில் இயற்கைப் பொருள், செயற்கப்பொருள், மாந்தர் உருவம், மாந்தர் செயல், மாந்தர் உணர்வுகள் என மிகுதியான வருணனைகளை எடுத்துக்காட்டுகிறார். இவர் மாந்தர் உருவம், மாந்தர் செயல், உணர்வுகள் போன்ற வருணனைகள் இல்லாமல் கதைச் சொல்வதே இல்லை. இந்த வருணனைகளையும் கரிசல் வட்டாரப்பாங்குடனே சொல்லிருப்பதனையும் காணமுடிகிறது.

1. கதை மாந்தர் உருவம்

கதை மாந்தரின் உருவத்தை கி.ரா. அவர்கள் மிக நுணுக்கத்துடன் வருணித்துள்ளார். மற்ற மாந்தரிடமிருந்து வேறுபடுகின்ற மாந்தர்களின் தோற்றத் தன்மைகளையே வருணித்துள்ளார். வேறுபட்ட தன்மையில்லாத மாந்தரின் வருணனைக்கு அதிக கவனம் செலுத்துவதில்லை. ஊமை அங்குப் பிள்ளையின் உருவத்தை, “தங்கப் பூண் கட்டிய ஒற்றை ருத்ராட்சக் கொட்டை சிகப்புக் கயறுவில் கோர்த்துக் கட்டப்பட்டுள்ள கழுத்து. அணிலின் முதுகிலுள்ள வெண்கோடுகளைப் போலுள்ள மூன்று திருநீர்க் கீற்றுகளும் அர்ச்சனைக் குங்குமமும் அணிந்த குறுகிய நெற்றி. முன் நெற்றியில் சிரைக்கப்பட்டு கமான் வளைவு வைத்த விட்டல் கிராப். சிறு வயசிலேயே தலை முழுவதும் பரவிய பித்த நரை. எப்பவும் மயிர் கலையாமல் பின்பக்கம் சீவிய மாதிரியே இருக்கும்.” என்று கி.ரா.வின் ஜீவன் (ப.161 - 162) என்னும் சிறுகதையில் வருணித்துள்ளார். இந்த தோற்ற வருணனையைப் படித்தவுடேயே அவர்கள் பற்றிய உருவத்தை மனதில் எழுப்புகின்றது. ‘தாவைப்பார்த்து’ என்ற கதையில், “கேள்விப்பட்டது சரிதான்; ஆள் வாட்டசாட்டமாக ஒருப்பூட்டான ஆள்தான். மட்டமல்லாக்கப் படுத்துக்கிடந்தான். செப்பையிலே சின்ன மாசத்துக்கு ஒரு மாசத்தாடி, வயசும் அப்பிடி ஒண்ணும் அதிகமிருக்காது; முப்பதுக்கு உள்ளெதான் சொல்லணும். விரிந்து கிடக்கும் உள்ளங்கை நல்ல காய் காச்சி இருந்தது. வேலைக்காரன்தான்; பெருத்த மார்பும் சிறுத்த வயிறும்; நாய் உடம்பு” என கி.ரா. தாவைப்பாரத்து (ப.351) என்ற சிறுகதை மடத்தில் வந்து படுத்திருக்கும் ‘ராமய்யா’ என்னும் இவன் சோற்றுக்கானவன் அல்ல; வேலைக்கான நல்ல பாட்டாளி என்பதை படிப்போர் மனத்தில் பதிய வைக்கின்றது.



2. கதைமாந்தர் செயல்

மாந்தர் செயல்களில் வழக்கமாக அமைந்துவிட்ட செயல்களையே பெரும்பாலும் வருணித்துள்ளார். “உட்கார்ந்ததும் முதல் காரியமாக தன் குடுமியை அவிழ்த்து ஒரு தரம் தட்டித் தலையைச் சொறிந்து கொடுத்துத் திரும்பவும் குடுமியை இறுக்கிக் கட்டிக் கொண்டுவிடுவார். இது அவர் தவறாமல் செய்கிற காரியம். இப்படிச் செய்துவிட்டு அவர் தன்னையொட்டியுள்ள தரையைச் சுற்றிலும் பார்ப்பார்” என்று நாற்காலி (ப.129) கதையில் கி.ரா மாந்தர்களின் செயலை எடுத்துரைக்கிறார்.

ஒலிக் குறிப்புகளாலும் செயல் வேகத்தைக் கண்முன் காட்டியுள்ளார். “வந்தவர் பக்கத்தில் வந்து குத்துக்கால் வைத்து உட்கார்ந்தார். லேஞ்சியை அவிழ்த்து குண்டிக்கடியில் போட்டுக்கொண்டு தலையை ரண்டு கைகளாலும் பறட் பறட் என்று சொறிந்து கொண்டார். இது அவர் வழக்கமாக எங்கே போய் உட்கார்ந்தாலும் செய்யும் முதல்க்காரியம்” என கி.ரா தாவைப்பார்த்து (ப.353) சிறுகதையை கூறுகிறார். இவ்வாறு கூரிய பார்வையுடன் கவனித்துச் சிறிய செயலையும் வருணிக்கும் போது வருணிக்கப்படும் செயலின் புதுத்தன்மையினாலும் வருணனைக்குச் சிறப்பு ஏற்படுகின்றது.

3. கதை மாந்தர் உணர்வு

கதை மாந்தர் உணர்வுகளைக் கலைப் பண்புடன் வருணிக்கிறார். நிகழ்வின் தாக்கத்திற்கேற்பவும் கதைமாந்தின் தன்மைக்கேற்பவும் உணர்ச்சி வருணனை அமையப்பட்டுள்ளது. “இந்தச் செய்தியைக் கேட்டதும் ரங்கம்மாவுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. உடம்பெல்லாம் கண்ணுக்குத் தெரியாத ஒரு நடுக்கம் பரவியது. அவள் விடும் சுவாசத்தின் வெப்பம் அதிகமாகியது. வயிற்றில் தாங்க முடியாத ஒரு வலி தோன்றியது போல், குழந்தையை இறுகப் பிடித்துக் கொண்டாள். குழந்தைகளுக்கு முன் அழக்கூடாது என்று எவ்வளவுதான் அடக்கினாலும் முடியவில்லை. ‘என்னைப் பெற்ற தாயே’ என்று அலறிவிட்டாள்” என கி.ரா. கதவு (ப.4) என்னும் கதை வரி பாக்கிக்காகக் கதவை எடுத்துச் சென்றுவிட்ட செய்தியைக்கேட்ட ரங்கம்மாவின் துயர உணர்வை வெளிக்காட்டியுள்ளது.



4. இயற்கை வருணனை

கி.ரா. இயற்கையின் மீது மாறாத அதிக ஈடுபாடு உடையவர். இவர் சோளப்பபயிர், கம்புப்பயிர் அழகிலும் கொத்தமல்லித் தோட்டம் மினுமினுப்பதிலும் மனம் பறிகொடுப்பவர். “கரிசல் காட்டுக்கு அவுரி வந்தபோது அதுக்கு பொன்னவரிண்ணு ஒரு பேரு உண்டு. அதோட பூவைப் பார்த்து அந்தப் பேரை வச்சானோ; விளைஞ்சா பவுன் பவுனாக் குவியும்ண்ணு வச்சானோ; காய் விளைஞ்சி குவிஞ்சி கிடைக்கும்போது மின்னுற அந்த நிறத்தைக் கண்டு அப்படி வச்சானோ” என்னும் அவுரி (ப.320) கதையில் வியப்பு, ஐயம் என வருணனை புதிய வடிவம் பெற்றுள்ளது.

மழைவருவதற்கான அறிகுறியை முதலில் எறும்புகளே உணரும். தம் உணவையும் முட்டைகளையும் பாதுக்காத்துக்கொள்ளும். இந்தக் காட்சினை “தாரைப் புற்றுகளிலிருந்து தேங்காய்ப் பூப் போன்ற வெண்ணிறத்தில் தங்களின் முட்டைகளை அள்ளிக்கொண்டு மொலோர் என்று எறும்புக் கூட்டங்கள் கிளம்பிப் போவதையும் அவர் பார்த்தார்.” என நிலை நிறுத்தல் (ப.377) சிறுகதை நுட்பமாக ஒரு நிற உவமையினைக் கொடுத்து, எத்தனையோமுறை நாம் பார்த்த காட்சியை நம் மனக்கண்முன் கொண்டுவருகிறார்.

முடிவுரை

ஒரு படைப்பின் சிறப்புக்கு அப்படைப்பில் பயன்படுத்தப்படும் மொழி மற்றும் சொற்களின் தேர்வு, பயன்படுத்தப்படும் முறை, ஆக்கும் திறமை, புதிய பொருள்களை ஏற்கும் திறமை, புதிய

சிந்தனை முதலியவை இன்றியமையாத நடையியல் கூறுகள் ஆகும். இவைகளை கி.ரா.வின் சிறுகதைகள் உணர்த்துகின்றது. கரிசல் சமூகம் என்ற ஒரு வட்டாரத்தின் மொழியை ஒரு குழுவின் மொழியை, அதற்கேயுரிய எல்லாவுதமான பன்முகக் கூறுகளோடு உள்வாங்கிக் கொண்டு அதனை அதற்கே உரிய பாவத்தோடும் நயத்தோடும் தம் படைப்புகளில் கையாண்டு உள்ளார். உவமைகளாலும் உருவகங்களாலும் சொற்சேர்க்கைகளாலும் பேச்சு நடை அமைப்பாலும் காட்சியைக் கண்முன் கொண்டுவரும் நேர்த்தியாலும் கி.ரா.வின் படைப்புகளில் இடம்பெறும் உரையாடல், தொகையுரை, வருணனைகள் மொழிநடைக்கூறுகளுக்கு மிகப் பெரிய வளம் சேர்க்கின்றன.

<u>பார்வை நூல்கள்</u>

1. **இராமலிங்கம், மா., விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1977.**
2. **சுதந்திரமுத்து, மு., படைப்புகலை, சுவடு பதிப்பகம், சென்னை, 1999.**
3. **ராஜநாராயணன். கி., (தொ.ஆ.)., கரிசல் கதைகள், அன்னம்(பி)லிட், சிவகங்கை, 1984.**
4. **நீதிவாணன், ஜெ., நடையியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983.**



****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ராவின் சிறுகதைகளில் - வாழ்வியல் விழுமியங்கள்

முனைவர் கி அருள்ஜோதி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் கி. அருள்ஜோதி
உதவிப் பேராசிரியர்
எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 095

கி.ராவின் சிறுகதைகளில் - வாழ்வியல் விழுமியங்கள்

மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துக்கள் என்பவற்றின் உருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதே விழுமியம் (Value) எனப்படுகின்றது. விழுமியங்களை பயன்படுத்துவதே அவற்றின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. இந்தத் தொடர்ச்சியே விழுமியத்தின் தொடர்புடைய ஏனைய கருத்துருக்களான, நம்பிக்கை, கருத்து, எண்ணம் என்பவற்றிலிருந்து வேறுபடுத்துகின்றது. இத்தகைய சூழலில் விழுமியம் என்பது மனிதர் எதை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறார்களோ அதைக் குறிக்கிறது எனலாம்.

கி.ராவின் எழுத்துக்களில் எதிர்பாரத திருப்பங்கள் அந்தளவிற்கு காணப்படாது. ஆனால் நாம் வாழ்ந்த நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்வியலாக மிகவும் எதார்த்தமாக சொல்லிப்போகக்கூடியது இவருடைய வரிகள். கதை முடிந்ததும் நாமலே நம் வாழ்கையின் ஓர் அங்கத்தை அந்த கதாப்பாத்திரத்தோடு வாழ்ந்தது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தக்கூடியதாக அமைகிறது. குறிப்பாக கதைப்போக்கானது, நீரோட்டம் போல சென்றுகொண்டே போகும்.



குடும்பம்

குடும்ப உறவுநிலையை தன்னுடைய படைப்புகளில் அழகாக சித்தரித்துக்காட்டியுள்ளார் கி.ரா அவர்கள். இல்லற வாழ்வில் ஆணும் பெண்ணும் எல்லா சூழ்நிலையிலும் விட்டுக்கொடுத்தும் அன்பை வெளிப்படுத்தியும் வாழவேண்டும் என்பதை, ஓர் இவள் என்ற கதையில் கணவன் மனைவி உறவுக்குள் நாட்கள் கடந்து செல்லும்போது அவர்களுடைய வாழ்வில் ஏதோ ஒரு தொய்வு, சலிப்பு ஏற்படுகிறது. அந்த சலிப்பின் வெளிப்பாடாக அந்த உண்ணதமான உறவு கசந்து போய்விடுகிறது. ஆரம்பகாலத்தில் இருந்த அன்பு, சிரிப்பு, இனிப்பு, சுவைத்தன்மை ஏதும் இல்லாமல் விரக்தியான சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி இருக்கக்கூடிய உறவை நாம் புரிந்துகொண்டு உளவியல் ரீதியாக வெறுமையைப் போக்கி அவ்வப்போது மாற்றிக்கொள்வதற்கான வழியைத் தேடி இனிமையாக கடந்து செல்ல இக்கதை கற்றுத்தருகிறது.

ஒரு காதல் கதையில் தன்னுடைய தோழி வீட்டிற்கு விருந்து உண்ண அழைத்தபோது அங்கு சமையல் அறையில் மனைவி நிற்கிறாள், அதற்கு நேரே வரண்டாவில் படுத்திருக்கும் கணவனை பார்க்கிறாள். அப்போது தன் பார்வையாலே அவனை தட்டிக்கொடுத்து உறங்குவைப்பது போன்று பார்க்கிறாள்.(இராகவன், மேரி) இதனை வள்ளுவர் அப்போதே, காதலரில் ஒருவர் கண்ணால்

பேசும்போது அதற்கு இணையானவர் கண்ணாலே பதில் கூறுவதும் அங்கு வாய்ச்சொற்களுக்கு எந்தப்பயனும் இல்லை என்பதனையும்,

"கண்ணோடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல"

என்ற குறளை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

நம்பிக்கை

மாயமான் என்ற சிறுகதையில் விவசாயிகள் மழைவேண்டி வைக்கோல் பொம்மை செய்து கட்டி இழுக்கிறார்கள். இது போன்று இன்றும் நம்பக்கூடிய வகையில் தூத்துக்குடியில் மழைவெள்ளம் வரப்போகிறது அதனால் வீட்டுக்கொரு படகு வைத்துக்கொள்ளுங்கள் என்றாராம் ஒரு சாமியார். இன்றும் கிராம வழக்கங்களில் ஒருசில நம்பிக்கைகள் நம் முன்னோர்கள் கூறியபடி நடக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம் எனலாம்.

பெண்களின் நிலை



கி.ரா உடைய படைப்புகளில் பெண்களை உயர்ந்த நிலையில் படைத்திருந்தாலும் ஏதோ ஒரு வகையில் பெண்களின் நிலைபாடுகளின் ஒடுக்கநிலையையும் அழகாக சித்தரித்துக்காட்டியுள்ளார். "கன்னிமை" என்ற கதையில் ஒரு பெண் வயதிற்கு வந்த பிறகு பிறந்த வீட்டில் இருக்கும்போது எப்படி இருக்கிறாள்? கணவன் வீட்டில் இருக்கும்போது எப்படி இருக்கிறாள்? என்பது தான். தாய் வீட்டில் ராணி போல் எல்லோருக்கும் ஆலோசனைக்கூறும் தன்மை, பிறருக்கு உதவும் தன்மை, எல்லோரிடமும் பொறுமை காத்தல், அழகு, நளினம், முடிவு எடுக்கும் தருணம் போன்ற எண்ணற்றவைகள் மகிழ்ச்சியாக இருந்திருக்கிறது. ஆனால் கணவன் வீட்டில் வாழும்போது, ஒருவித சமூகக் கட்டமைப்புக்குள் ஆட்படுத்தப்படுகிறாள். எல்லா வேலையும் பெண்களே பார்க்கவேண்டும். குடும்ப வேலை, தோட்டவேலை, கணவனுக்கான வேலை, குழந்தைகள் பராமரிப்பு, என்ற நிலையில் தள்ளும்போது அவளுக்கான கன்னித்தன்மையில் இருந்த அவளுடைய குணநலன்கள், உணர்வுகள், ஆசைகள் எல்லாம் அப்படியே மழுங்கடிக்கப்படுகிறது. இக்கதையை சமகாலத்தில் பொருத்திப் பார்க்கும்போது திருமணத்திற்கு பிறகு பெண்கள் இழந்தவைகள் எத்தனை! எத்தனை! அவர்களுடைய ஆசைகள், கனவுகள், நட்பு வட்டாரங்கள் அனைத்தையும் இழந்து ஒட்டுமொத்த வாழ்வியல் சூழலையுமே தன்னுடைய குடும்பத்திற்குள் அழுத்திவிடுகிற ஏதோ ஒரு சூழல், ஏதோ ஒரு சமூக கட்டமைப்புக்குள் தள்ளப்படுகிறாள் என்பதை இக்கதையின் வழி உணர்த்தியுள்ளார்.

கதவு என்ற சிறுகதையில் ரங்கமாவின் கணவன் வெளிநாட்டுக்கு வேலைக்கு சென்றுவிட்டார். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள். கடன்தொல்லையால் வீட்டில் இருந்த கதவு பறிபோய்விட்டது.

தனிமையில் மூன்று பிள்ளைகளை வளர்ப்பது சற்றுக் கடினமாக இருக்கிறது. வீட்டின் வாயிற்படி இல்லாததால் சமைத்து வைக்கும் சோற்றை நாய் தின்றுவிடுகிறது. அதோடு கார்த்திகை மாத வாடைக்காற்றால் கைக்குழந்தையும் இறந்துவிடுகிறது. இதனை, "செய்தியைக் கேட்டதும் ரங்கம்மாவுக்கு மூச்சே நின்று விடும் போலிருந்தது. உடம்பெல்லாம் கண்ணுத் தெரியாத ஒரு நடுக்கம். வயிற்றில் தாங்க முடியாத ஒரு வலி தோன்றியது போல் குழந்தையை இறுகப் பிடித்துக் கொண்டாள். குழந்தைகளுக்கு முன் அழக் கூடாது என்று எவ்வளவு தான் அடக்கினாலும் முடியவில்லை. என்னைப் பெத்த தாயே"என்று அலறி விட்டாள். பயத்தினால் குழந்தைகள் அவள் பக்கத்தில்இருந்து விலகிக் கொண்டார்கள். இனம் புரியாத பயத்தின் காரணமாக அவர்களும் அழ ஆரம்பித்தனர்." என்ற வரிகளிலிருந்து உயரற்ற பொருள் கதவானது வீட்டிற்கு எந்த அளவு முக்கியம் என்பதனையும் பெண்ணாணவள் எவ்வளவு கடின உழைப்பைக் தன் குடும்பத்திற்கு கொடுத்தாலும் அவளுடைய இழப்பை சரிசெய்யவோ ஈடுகட்டவோ முடியாது என்பதையும் இக்கதை உணர்த்துகிறது.

முதியோர்களின் நிலை



நிம்மாண்டு நாயக்கர் வயதானவர். பேரக்காள் அவருடைய மனைவி. அந்த இருவரின் முடிவு காலத்தைப் பற்றிய கதை இது. கடைசி வரியில் கதையை உணர்வின் உச்ச அலைகளுக்கு கொண்டு சென்றிருக்கிறார் ஆசிரியர். வயசாளிகள் இருவரும் மெலிந்து போனார்கள். உடம்பெல்லாம் வங்கு வத்திப் போச்சு, இரண்டு பேரும் சாயம் போன கந்தல் துணி போல ஆகிப்போயிட்டாங்க. எட்டுப் பிள்ளைகள் பெற்று நன்றாக வாழ்ந்தவர்கள். கடைசிக் காலக்கட்டத்தில் எந்த மகனும் மருமகளும் பார்த்துக்கொள்ளாத நிலைக்கு தள்ளப்பட்டு இறுதியில் இராமேசுவரம் சென்று அங்கு பிச்சை எடுக்கும் காட்சியை அவருடைய ஊர்க்காரர் பார்த்துவிடுகிறார். பேர்க்காளுக்கு பாறைப்பட்டி நாயக்கரை அடையாளம் தெரிந்தது. வாயைத் திறந்து ஒரே ஒரு வார்த்தை மட்டும் பேசினாள்.

"எம்பிள்ளைக எல்லாரும் நல்லா இருக்காகளா?".

என்று கேட்டது பெத்தமனம் பித்து பிள்ளமனம் கல்லு என்ற பழமொழியை உணர்த்துவதோடு இன்றளவும் பல இடங்களில் இந்நிகழ்வுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றது என்பதை வெளிக்கொணரும் விதமாக இக்கதை அமைந்துள்ளது.

சாதியொழிப்பு

நாட்டார் தெய்வங்கள், சித்தாந்தம், சாதி ஒழிப்பு போன்ற நிகழ்வுகளை வெளிக்கொணரும் விதமாக இக்கதை அமந்துள்ளது. இக்கதையில் மாயம்மா உயர்ந்த சாதி பெண்ணாக இருந்தாலும் அதே ஊரைச்சார்ந்த தாழ்ந்த சாதி ஆண்மகனை காதலிக்கிறாள். அவளுடைய

காதலுக்கு பேயை, சாமியை பகடையாக வைத்து தன் காதலை நிறைவேற்றிக் கொள்கிற ஒரு பெண்ணின் துணிச்சல் மற்றும் சாதுர்யம் போன்றவற்றை இக்கதையின் மூலம் வெளிக்காட்டுகின்றார். சாதி ஒழிப்பு என்பது இன்றும் நடைமுறையிறையில் அத்திப்பூ பூத்தாற் போன்றுதான். ஆனால் கி.ரா அவர்கள் அதை அப்பொழுதே தோற்றது என்ற சிறுகதையின் வழியாக அழகாக சித்தரித்துக்காட்டியுள்ளார்.

முடிவுரை

ஒரு படைப்பின் சிறப்புக்கு அப்படைப்பில் பயன்படுத்தப்படுவது மொழி. அதிலும் வட்டார வழக்கு என்பது முதலிடம் வகிக்கக்கூடியதாக இருக்கும். காரணம் சொற்களின் தேர்வு, பயன்படுத்தப்படும் முறை, ஆக்கும் திறமை, புதிய பொருள்களை ஏற்கும் திறமை, புதிய சிந்தனை முதலியவை இன்றியமையாத நடையியல் கூறுகளை பின்பற்றுவதுதான். இவைகளை கி.ரா.வின் சிறுகதைகள் உணர்த்துகின்றன. கரிசல் சமூகம் என்ற ஒரு வட்டாரத்தின் மொழியை ஒரு குழுவின் மொழியை, அதற்கேயுரிய எல்லா விதமான பன்முகக் கூறுகளோடு உள்வாங்கிக் கொண்டு அதனை அதற்கே உரிய நயத்தோடும் ஒவ்வொரு கதையின் வழியாகவும் வாழ்க்கைக்குத் தேவையான நம்பிக்கைகள், சமூகச் சிந்தனைகள், வாழ்க்கையின் எதார்த்தங்கள், பெண்களின் நிலைபாடுகள், பெண்ணியம், குடும்ப உறவுகளின் மேம்பாடுகள், சாதி ஒழிப்பு போன்றவற்றை கரிசல் வட்டாரத்தோடு ஒருவித வாழ்வியல் விழுமியத்தை தம் படைப்புகளினல் மூலம் வெளிக்கொணர்ந்துள்ளார்.



****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கிராவும் நாளிதழ்களும்...

கு.ராமராஜன்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

கு.ராமராஜன்
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 95.

கிராவும் நாளிதழ்களும்...

முன்னுரை

“நான் மழைலையிலிருந்து தஞ்சம் அடைய பள்ளிக்குச் சென்றேன். அப்போதும், பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல் மழையைப் பார்த்துக் கொண்டே இருந்து விட்டேன்”. என்று கூறிக் கொள்ளும் கி.ரா. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராக பணியாற்றியவர். “மனிதருள் நீ ஒரு அபூர்வமான பிறவி, அதாவது உன் இயற்கையைச் சொல்லுகிறேனே ஒழிய தூக்கி வைத்துப் பேசவில்லை. உன் உள்ளத்திலே என்னென்னவோ ஆட்டங்கள் நடக்கின்றன. ஆனால் வெளிப்படையாக ஒரு சொல்லும் சொல்லாத அடக்கம் உன்னிடம் பலப்பட்டு இருக்கிறது. ஏதோ ஒரு ஆழங்காண முடியாத சமுத்திரம் தான்”. கரிசல் இலக்கிய முன்னத்தி ஏர் கி. ராஜநாராயணனுக்கு அமரர் கு. அழகிரிசாமி எழுதிய கடிதம் இவ்வாறு துவங்குகிறது. ஆகவே இத்தகு பெருமகனார் குறித்த செய்தியினைச் செய்திகளாக வெளிவந்த நாளிதழ் மூலம் அறியலாம்.



இந்து தமிழ் திசை

இந்து தமிழ் திசை எனும் நாளிதழானது கீரா. வைப் பற்றி ”கி.ரா. எனும் கதைச் சுரங்கம்” என்ற தலைப்பில் ஓர் கட்டுரை வெளியிட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவற்றில், கரிசல் இலக்கியத்தின் பிதாமகர் என்று கொண்டாடப்படுபவர் எழுத்தாளர் கி.ரா. எனும் கி ராஜநாராயணன். கோவில்பட்டி அருகே உள்ள இடைச்செவல் கிராமத்தை சேர்ந்தவர். சிறந்த வட்டார வழக்கு எழுத்தாளர்களில் ஒருவராக தமிழ் இலக்கிய உலகம் அவரைக் கொண்டாடுகிறது. சிறந்த இலக்கிய வாதியாக கொண்டாடப்படும் அதே நேரம் குழந்தைகளுக்கு அவர் ஒரு ”கதைச்சொல்லி தாத்தாவாக” இருந்தார் என்று குறிப்பிடுகிறது. கிராம மக்களிடையே புழங்கும் கதைகளை ஒரு இலக்கம் போல் சேகரித்து பதிவு செய்யக் காரணமாக இருந்ததில் கி.ரா. தாத்தாவுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு. குழந்தைகளுக்காக அவர் எழுதிய ”பெருவிரல் குள்ளன்” கதை புகழ்பெற்றது. பெரியவர்களுக்காக அவர் எழுதிய கதைகளிலும் குழந்தைகள் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றார்கள். அவருடைய புகழ் பெற்ற கதைகளில் ஒன்று “கதவு“ அந்தக் கால கிராமத்து வீடுகளில் குழந்தைகளின் விளையாட்டுக்கு உதவுவதாகவும் அவர்களிடமிருந்து பிரிக்க முடியாததாகவும் கதவு எப்படி இருந்தது என்பதை இந்தக் கதை உணர்த்துகிறது என்பதை வெளிப்படுகிறது. உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட

கதை அது என்றும், அவர் எழுதிய “பிஞ்சுகள்“ குறு நாவல் சிறந்த இயற்கை சார்ந்த இலக்கியமாகவும், சிறுவர் வேட்டை இலக்கியமாகவும் கருதப்படுகிறது என்பதும் இந்நாளிதழ் மூலம் அறியப்படுகிறது.

எக்ஸ்பிரஸ் செய்தி சேவை

சுதந்திரத்திற்குப் பிறகு நவீன தமிழ் இலக்கியம் பல்வேறு வடிவங்களைப் பெற்றிருக்கின்ற அதே வேளையில் கி.ரா. வின் இலக்கியச் சூழல் அமைப்பில் நுழைந்தது மதுரை, திருநெல்வேலி மற்றும் ராமேஸ்வரம் இடையே பரந்து விரிந்திருக்கும் கரிசல் சீமை - கருப்பு மண்ணின் நிலம் - பல தமிழ் எழுத்தாளர்களின் முனைப்பைக் குறித்தது. கரிசல் இலக்கியத்தை மைய நீரோட்டத்திற்குக் கொண்டு செல்வதில் முன்னோடியாகப் பணியாற்றினார்.

“கோவில்பட்டியில் கல்லை எறிந்தால் அது எழுத்தாளர் தலையில் படலாம்” என்பது ஒரு பிரபலமான பழமொழி. இந்த கலாச்சாரம் கி.ரா. வால் இயக்கத்தில் முன்வைக்கப்பட்ட ஒன்றாகும். உயிருடன் இருக்கும் எந்தவொரு கரிசல் எழுத்தாளரிடமும் பேசுங்கள். அவர்கள் அவரை நைனா (தந்தையை அழைக்கப் பயன்படுத்தப்படும் தெலுங்கு - தமிழ் வார்த்தை) அல்லது பீஷ்மர் என்று அன்புடன் அழைக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறது.



பூமணி மேலண்மை பொன்னுசாமி மற்றும் சோ. தர்மன் உட்பட அவரால் வழிகாட்டப்பட்ட சில எழுத்தாளர்கள் சாகித்ய அகாடமி விருது வென்றனர். பிரபல தமிழ் எழுத்தாளர் கோணங்கி இருபதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் கரிசல் சீமையின் இலக்கிய நிலப்பரப்பில் கி.ரா.வால் கையாண்டாவதாகக் கூறினார். ”கி.ரா.வின் வீடு நீண்ட காலமாக எனது ஒரே நிலமாக இருந்தது” என்று சோ. தர்மன் எக்ஸ்பிரஸிடம் பேசுகிறார். தனது சமகாலத்தவர்கள் அல்லது அவர் கி.ரா.வுக்குச் செல்லும் ஒவ்வொரு முறையும் அவர்கள் கைநிறைய புத்தகங்களுடன் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று அவர் கூறும் செய்திகளும் இந்நாளிதழ் மூலம் அறியப்படுகிறது.


தினமணி

கி.ரா.வின் முதல் நாவலான ”கோப்பல்லகிராமம்” தொடக்கத்தில் இலக்கியவாதிகளால் அங்கீகரிக்கப்படாவிட்டாலும் இன்றும் சிறந்த நாவலாகப் போற்றப்படுகிறது. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் 200 நாட்டுப்புறக்கதைகளைச் சேகரித்து நாட்டுப்புறக் கதை களஞ்சியம் என்ற பெயரில் வெளியிட்டார். தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விப் பணிகள் கழகத்தின் துணை இயக்குநர், (மொழிபெயர்ப்பு) டி.எஸ். சரவணன் கூறியதாவது 1982இல் கி.ரா. இயங்கியல் அகராதியை வெளியிட்டு, இந்த இலக்கியத்தில் வெளியான முதல் கல்வி படைப்புகளில் இதுவும் ஒன்றாகும். கி.ரா.வின் கடைசியாக வெளியிடப்பட்ட படைப்புகளில் ஒன்று, கார்ப்பரேஷன் மற்றும் ஹார்பர் காலின்ஸால் வெளியிடப்பட்ட கி.ரா.வால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் திருத்தப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பில் ஆங்கில மொழிபெயர்ப்பான “சன் வித் தி சன்“ ஆகும்.

“சூரியனுடன் சேர்ந்து புத்தகத்தை நான் அவரிடம் கொடுத்த போது அவர் கடினமான புத்தகங்களை விரும்புவதாக என்னிடம் கூறினார் என்று சரவணன் தனது ஆளுமைக்கு கூடுதலாக, கி.ரா. பல ஆர்வங்கள் மற்றும் ஆர்வங்களைக் கொண்டவர் குறிப்பாக உணவு, இருட்டுக்கடை அல்வாக்கு எப்படி பெயர் வந்தது தெரியுமா? என்று கி.ரா. தன்னிடம் கேட்டதாக அவர் கூறினார். ரசம் உள்ளிட்ட 40 விதமான பக்க உணவுகளுடன் தயிர் சாதம் மிகவும் சுவையாக இருக்கும் என்று கி.ரா. வலியுறுத்தினார் என்று சரவணன் குறிப்பிடுவதும், தொகுப்பூதியத்தின் ஒருங்கிணைப்பாளர் மினி கிருஷ்ணன் கூறுகையில் கி.ரா. புத்தகத்தைப் பெற்றுக் கொண்டதும், அவர்கள் அனைவரும் எனது நண்பர்கள் என் குழந்தைகளைப் போல” என்கிறார் கி.ரா. அவர் பெற்ற பல விருதுகளை வெல்லவில்லை, ஆனால் அவர் உண்மையிலேயே சூரியனுடன் வாழ்ந்தார் என்று அவர் கூறும் விதமும் இந்நாளிதழ் மூலம் கவனிக்க தக்கதாக உள்ளது.

தி நியூஸ் மினிட்ஸ்

பிரபல தமிழ் எழுத்தாளரும் நாட்டுப்புறவியலாளருமான கி. ராஜநாராயணன் மே 17ஆம் தேதி புதுச்சேரியில் காலமானார். அவரது இறுதிச் சடங்குகள் செவ்வாக்கிழமை அரசு மரியாதையுடன் நடைபெறும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. மறையும் போது 98 வயதாகும் எழுத்தாளர் அவரது பிறந்த இடமான கோவில்பட்டி அருகே உள்ள இடைசெவல் என்ற இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதிச் சடங்குகள் நடைபெறும் என்றும், இது குறித்து தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கி.ரா.வின் மறைவால் தமிழ்மொழி ஒரு முக்கியமான கதைச்சொல்லியை இழந்துவிட்டது. “தாய் தமிழ் தன் அடையாளங்களில் ஒன்றை இழந்து விட்டது. யார் ஆறுதல் கூறுவது? இந்த நிலம் இருக்கும் வரை கரிசல் இலக்கியம் இருக்கும் வரை அவரது புகழ் நம் நெஞ்சங்களில் வாழும்” என்று குறிப்பு வாசிக்கிறது என்பதுவும், ”ஐயோ, அந்த கரிசல் கோயிலின் இசை நின்றுவிட்டது. அவர் இறக்கவில்லை அவர் எழுத்துக்களாக வாழ்கிறார். அவர் வாழ்கிறார். நம் வாழ்வோடு இணைந்தார். வாழ்க அவர் புகழ்! அவரது குடும்பத்தினருக்கும், இலக்கியவாதிகளுக்கும், வாசகர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்ற குறிப்பும், சில மாதங்களுக்கு முன்பு விகடன் தமிழுக்கு வழங்கிய அவரது கடைசி நேர்காணலில் கி.ரா. கொரோனா வைரஸ் தொற்றுநோய் மற்றும் பூட்டப்பட்ட நிலையில் இருப்பதால் வரும் தனிமையின் தாக்கம் குறித்து பல்வேறு தலைப்புகளில் பேசினார். ”இசை தெரிந்தவனுக்கு தனிமை என்றால் என்ன... எழுதத் தெரிந்தவனுக்கும், படிக்கத் தெரிந்தவனுக்கும் தனிமை இல்லை” என்று சொல்லியிருந்ததையும் இந்நாளிதழ் கொண்டு அறியப்படுகிறது.




ப்ரிண்ட் வீக்

கதை ஒரு புதிய எழுத்தின் வருகையை அறிவித்தது. அவரது படைப்புகள் தான் தென் தமிழ்நாட்டின் கரிசல் பூமி-வெப்பம் மற்றும் வறண்ட நிலம்-மக்களின் வாழ்க்கையை அவர்களின் உண்மையான மொழியில் படம்பிடித்தது. 1991-ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் தென் பகுதிகளில்

குடியேறிய தெலுங்கு மக்களை சித்தரிக்கும் கோபல்லபுரத்து கிராமம் என்ற நாவலுக்காக சாகித்ய அகாடமி விருதை வென்றார். அதைத் தொடர்ந்து இன்னொரு நாவல் அந்தமான் நாயக்கர் என்ற தொகுப்பினையும் வெளியிட்டார். 2019 ஆம் ஆண்டு தனது 97 ஆவது பிறந்த நாளின் போது தி இந்துவிற்கு அளித்த பேட்டியில் “பேசும் மொழியே மொழியின் சரியான வடிவம்” என்று நம்பிக்கையை மீண்டும் வலியுறுத்தினார்.

“மனிதன் பேசத் தொடங்கும் போது அந்த மொழிக்கு எழுத்துக்கள் இல்லை. நம் குழந்தைகளுடன் எழுத்து வடிவில் தொடர்பு கொள்கிறோமோ? நமது அன்றாட உரையாடலில் மொழியின் எழுத்து வடிவத்தையும் நாம் பயன்படுத்துவதில்லை. பிறகு ஏன் ஒரு நொடியின் எழுத்து வடிவத்தை எழுத்தில் பின்பற்ற வேண்டும்? என்று பேட்டியில் கேட்டார். மேலும் “கதையை பதிவு செய்வது முக்கியம், ஏனெனில் அவற்றை எழுதுவது, கதை சொல்பவர் பயன்படுத்தும் தொனி மற்றும் அசல் வார்த்தைகளை மாற்றிவிடும் நாட்டுப்புறக் கதைகளின் அருமை அவற்றின் விவரிப்பிலேயே உள்ளது”. என்று பேட்டியில் விளக்கியமை இங்கு குறிப்பிட்டுள்ளதை இந்நாளிதழ் கூறும் செய்திகளாக காணப்படுகிறது.

முடிவுரை



“கி.ரா. கரிசல்காட்டுக் கடைகளில் ஒரு மாஸ்டர்” என்பதில் துளியளவும் ஐயமில்லை. இயற்கையாகவே, கி.ரா. வின் கவனம் கிராமப்புற வாழ்க்கையை அவற்றின் அப்பட்டமான எதார்த்தங்களுடன் பதிவு செய்வதில் சிறந்தது என்று அவரின் இலக்கியங்களும், படைப்புகளும் எடுத்து இயங்குகின்றன. “கரிசல் காடுகளின் வாழ்க்கையையும் காலத்தையும் அழியாத இலக்கியமாகப் பயன்படுத்திய கி.ரா. கதை வருங்கால சன்னதியினருக்கு விரிவுபடுத்தினார்” என்று கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன் உரைத்தவை பொருத்தமாக அமையும். மேற்குறிப்பிட்ட நாளிதழ்கள் மட்டுமல்லாது மென்மேலும் பல்வேறு நாளிதழ்கள் கி.ரா.வை பாராட்டவோ, போற்றவோ மறுத்ததுமில்லை, மறந்ததுமில்லை என்பது நிறுபனமாகிறது.

****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ரா.வின் தமிழ்ச் சொலவடைகள்~ஓர் பார்வை

முனைவர் கே.சி.ஆர். ஷிஜி





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் கே.சி.ஆர். ஷிஜி
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி
மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
மதுரவாயல், சென்னை – 600 095

கி. ரா.வின் தமிழ்ச் சொலவடைகள் ~ ஓர் பார்வை

முன்னுரை

இலக்கியங்கள் என்பவை ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழும் மக்களின் வாழ்வினை வெளிக்காட்டும் கருவியாகத் திகழ்கின்றன. இலக்கியம் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்ற கருத்து மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டும் வந்துள்ளது. மண்ணின் மைந்தர் தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்பெற்று உலாவரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள். இவ்விலக்கியங்கள் நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் ஆராய்கின்றன. இவை பல வடிவில் மாந்தர் தம் இதழாணிகளால் எழுதப்பட்டவை. அவ்வகையில் முதிர்ந்த அனுபவத்தின் வெளிப்பாடாகவும் காரண காரியங்களோடு உலக உண்மைகளை உணர்த்துவனவாகவும் திகழ்வன தமிழ்ச் சொலவடைகள். கி.ரா.வின் கட்டுரையில் இடம்பெற்றுள்ள சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தமிழ்ச் சொலவடைகளை வெளிப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.



சொலவடை விளக்கம்

மக்கள் மொழி கிராமப்புற வாழ்வியல் இலக்கணத்தை எடுத்துரைக்கும் கிராமத்துப் பழமொழியைத் தான் சொலவடை என்று கூறுகின்றது. இதை 'சொலவம்' என்று குறிப்பிடுகிறார்கள். உதிர்க்கும் முத்துப் போல பேச்சுக்குப் பேச்சு ஒரு சொலவடையைச் சொல்லுவதும் பாதுகாத்து வருவதும் நம்முடைய பெண்குலம்தான்.

படிப்பு அறியாத பாமரப் பெண்களிடமிருந்து அவர்கள் அறியாமலேயே இயல்பாக வந்துவிழும் சொலவடைகளையும் மொழிப் பயன்பாட்டையும் கேட்க நேரும்போது 'என்னமாச் சொல்'லீட்டா; என்னமாச் சொல்'லீட்டா' என்று வியந்து விடுகிறோம். கிராமத்து மக்களின் நாவில் தமிழ்மொழி இப்படிக் கோயில் கொண்டிருக்கிறது.

சொலவடையை மொட்டையாகத் தனியாகச் சொன்னால் தெரியாது. அழகும் தராது. குறிப்பிட்ட நிகழ்ச்சியின் போதோ, வாய்ப்பின் போதோ, பேச்சின் இடையிலோ வந்தால் தான் அதன் பயன், பொருத்தம் தெரியவரும்.

கதைகள் சொல்லும் சொலவடைகள்

"ஆமை சுடுகிறது மல்லாக்க; அதெ நாஞ் சொன்னா பொல்லாப்பு"

மனைவியைக் கணவன் அடித்துவிடுகிறான். இருவருக்குள்ளும் பலத்த சண்டை. அவனுக்கும் அவளுக்கும் வேலை செய்துவிட்டு வந்த அலுப்பு. பழைய சோறு மட்டும் இருக்கிறது. கறி செய்யவேண்டும். வரும்போது ஒரு ஆமையைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். இப்போது அதைச் சமைத்தால்தான் இருவருமே சாப்பிட முடியும். அதற்குள் இந்தப் பாழாய்ப் போன சண்டை வந்து தொலைந்துவிட்டது.

கையை நீட்டிய பிறகுதான் இவனுக்குத் தெரிந்தது அவளைப்போட்டு அடித்து விட்டோமே என்று. அந்தச் சுய அனுபவத்தால் அவனே அந்த ஆமையைக் கறியாக்க முயன்றான். ஆமையைத் தூக்கி முதலில் நெருப்பில் போட்டு வாட்டிக் கொண்டான். நெருப்பின் சூடு பொறுக்க முடியாமல் அது வெளியே வந்துவிட்டது. திரும்பவும் தூக்கிப்போட்டான். மறுபடியும் வெளியே வந்துவிட்டது.

மனைவி இதைப் பார்த்துக்கொண்டே இருந்தவள், நாம இப்போது அவருக்கு எது சொன்னாலும் பிடிக்காது. நமக்கு ஏன் வீண் பொல்லாப்பு என்று நினைக்கிறாள். ஆனால் கணவன்படுகிற பாட்டைப் பார்த்து சும்மாவும் இருக்கமுடியவில்லை. தனக்குத்தானே பேசிக் கொள்வது போல அவனுக்கும் கேட்கும் படியாகவே



"ஆமை சுடுகிறது மல்லாக்க; அதெ நாஞ் சொன்னா பொல்லாப்பு"

என்கிறாள்.

அதைக் கேட்ட பிறகு தான் தெரிகிறது கணவனுக்கும் 'கோளாறு'. மல்லாக்கப் படுக்கப் போடுகிறான். இப்போது ஆமையினால் நகர முடியவில்லை என்பது மட்டுமல்ல. அதன் முதுகு ஓடே கறிச்சட்டியாகவும் பயன்படுகிறது என்ற உண்மையும் புரிந்து கொள்கிறான். இதனை வள்ளுவர்,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (குறள் 45)

என்கிறார்.

ஒரு உண்மையைக் கண்டுகொண்டதும் மனிதனுக்கு ஏற்படுகின்ற ஆனந்தமானது பழைய துயரங்களை மறக்கடிக்கிறது.

"கரையான் புற்றெடுக்க கருநாகம் குடியிருக்க"

ஒருவர் மிகவும் கஷ்டப்பட்டு ஒரு வீட்டைக் கட்டினார். தனக்குச் சொந்தமாக ஒரு வீடு வேண்டும் என்பது அவரது நீண்ட நாள் கனவு. "வீட்டைக் கட்டிப்பார், கல்யாணம் செய்து பார்" என்பார்கள் அல்லவா? அதுபோல அவரிடம் பணம் இல்லாத காரணத்தால் கடன் வாங்கிக் கட்டி முடித்தார்.

வீட்டைக் கட்டி முடிக்கிற வரையில் பக்கத்திலிருந்து மகிழ்வுடன் வேண்டிய அளவு அதிக வட்டிக்குப் பணம் தந்து 'உதவி'ய கடன்காரன் அவ்வீட்டில் குடியேறினான். கருநாகம்

என்பது எவ்வளவு உண்மை. கட்டினவருக்கு இப்படி நடந்து போச்சே என்ற துக்கம், ஏக்கம், வெறுப்பு எல்லாம் கலந்திருப்பது அறிய முடிகிறது.

உழைப்பு

**"ஆயிரம் பனை வச்சவனுக்கு
பல்குத்த ஈக்கி இல்லை"**

உழைப்பை அபகரிப்பவர்கள் சொல்லும்போது அதில் திமிர் வெளிப்படும். செல்வம் எவ்வளவு பொங்கிப் பெருகி தண்ணீராய் ஓடினாலும் அதன் அனுபவிப்பு முற்றிலும் உழைப்பவனுக்கு இல்லை. உழைப்பாளி ஒரு பனை மரத்தை உண்டு பண்ண எவ்வளவு காலத்தையும் உழைப்பையும் செலவழிக்க வேண்டும். ஆனால் இப்போது அவன் அதில் பல்லுக் குத்த ஒரு ஈக்கி கூட எடுக்க முடியாது. காரணம் அவன் உழைத்த உழைப்பு இன்னொரு இடத்துக்குப் போய்விட்டது.

இரு சக்திகள்

ஆங்காரம் உச்சகட்டத்தை அடையும் போது அதிலிருந்து ஒருவகை நையாண்டி பிறப்பது வழக்கம். அந்த நையாண்டியோடு பிறந்த சொலவடை இதோ;



**"ஆமாண்ணுச்சாம் கத்தரிக்கா
அமுக்கிக்கிச்சாம் கருவாடு"**

கிராமத்தில் இரண்டு சக்திகள் இருக்கிறது. இவை மக்களுக்கு விரோதமான சக்திகள். இவை ஒன்றுக்கொன்று துணை. ஒன்று பயனை எடுத்துக்கொள்ளும். இன்னொன்று அது சரிதான் என்று சொல்லும்.

ஒன்று ஆமாம் ஆமாம் என்று ஒத்துப் பாடுகிறது. மற்றொன்று இதுதான் சமயம் என்று அமுக்கிக்கொள்கிறது. இது காலங்காலமாக நடந்து வருவது கண்கூடு.

பசி

"இல்லாதவனுக்கு வயத்திலெ பசி ; இருக்கிறவனுக்கோ முட்டுலெ பசி "

பசியில் இரண்டு வகை உண்டு. ஒன்று வயிற்றில் ஏற்படுவது. 'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்'. பசி என்பது உடலில் பற்றி எரியும் நெருப்பு. நிலத்திற்கு நீரானது எவ்வாறு இன்றியமையாததாக உள்ளதோ அதனைப் போன்று உடலுக்கு உணவு இன்றியமையாததாகும். ஒருவரின் பசிப்பிணியினை அறுப்பதன் வாயிலாக அவரின் உயிரானது காப்பாற்றப்படுகிறது என்பதை,

**"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே"** (புறம். பா.18)

என்னும் பாடல் விளக்குகிறது.

பசி இன்னொரு இடத்திலும் உண்டாகிறதாம். இரண்டாவதாகச் சொல்லப்படும் “பசி”காரனுக்கு எந்த இடத்தில் பசி உண்டாகிறது என்பதே தெரியாது. பசிக்காமலே சாப்பிட்டுக் கொண்டிருக்கும் அவனுக்குப் பசி என்பது கால் முட்டில்தான் உண்டாகும் போலிருக்கு என்கிற நினைப்பு.

பசி என்பதையே அறியாதவர் வேறு எப்படி நினைக்கக்கூடும்? என்பது கி. ரா.வின் பார்வை. கணக்குப்பிள்ளை

“இருக்க இருக்கத் தெரியும் புதுகணக்கன் சேதி”

ஊருக்குப் புதிதாக ஒரு கணக்குப்பிள்ளை அல்லது ஒரு நிர்வாக அதிகாரி வந்திருக்கிறார். அவர் மிகவும் ஒழுக்கமாகக் ‘கை சுத்தமாக’ இருப்பது போல நடந்து கொள்கிறார். மக்கள் ‘வெளுத்ததெல்லாம் பால்’ போல் அதை உண்மை என நினைத்துக் கொள்கிறார்கள். ‘இவரு பழைய கணக்குப்பிள்ளை போலத் தெரியவில்லை. ரொம்ப நல்லவர் மாதிரி இருக்கார்’ என்று பேசிக் கொள்கிறார்கள். அதைக் கேட்ட அந்த ஊரிலுள்ள வயதான, அனுபவப்பட்ட ஒரு விவசாயி தன் நரைத்த மீசைக்குள் சிரித்துக்கொண்டு அவர்களுக்கு இச்சொலவடையைச் சொல்லுவதாகக் கி.ரா. குறிப்பிடுகிறார்.

வரும் அதிகாரிகள் முதலில் **‘இந்தப் பூனையும் பால் குடிக்குமா?’** என்று இருப்பதும் பிறகு நாளடைவில் **‘ஊரை அடித்து உலையில் போட்டு’** திங்க ஆரம்பிப்பதும் கண் பார்த்து வாய்சொல்லும் செய்தி.



அரசியல்

மனித வாழ்வை இயக்கும் ஆற்றல்களுள் அரசியல் முக்கியமான ஒன்று. சிதறிக் கிடந்த மனிதன் சமுதாயமாக இணைந்த போதே அரசியல் மக்கள் வாழ்விலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகிவிட்டது. நல்லமுறையில் நாட்டைப் பாதுகாக்கும் அரசன் மனிதனே ஆனாலும் தெய்வமாகக் கருதப்படுவான். இதை வள்ளுவர்,

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்” (குறள் 388)

என்கிறார்.

“நரிக்கு அதிகாரம் கொடுத்தால்
கிடைக்கு ரண்டு ஆடு கேட்கும்”

தேர்ந்தெடுக்கப்பட்டு ஓட்டு வாங்கி அதிகாரத்திற்கு வந்தவர்களைக் குறித்த சொலவடை இது. ஒருநாளா இரண்டு நாளா தினமும்தான் கேட்கும்.

“தேளுக்கு அதிகாரம் கொடுத்தால்
நிமிஷத்திற்கு ஒரு கொட்டு கொட்டும்”

யாருக்கு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று மக்களை எச்சரிக்கை செய்கின்றன இந்தச் சொலவடைகள்.

“இந்திய மண்ணில்
வியாபாரம் செய்ய வந்தவர்கள்
அரசியல் நடத்தினார்கள்
அரசியல் நடத்த வந்தவர்கள்
வியாபாரம் செய்கிறார்கள்
இரண்டிலும் ....
நட்டப்பட்டது
மட்டும் நாம்தானே” (நேற்று போட்ட கோலம் பக்.111)

என்கிறார் வைரமுத்து. இது நம் நாட்டில் அப்பட்டமான உண்மை. இதை யாராலும் மறுக்க முடியாது.

நாட்டாமை

“எறைஞ்ச நாயக்கர் பெரிய நாயக்கர்”



கிராமத்தில் பெரியவர் யார்? ஓங்கிச் சத்தம் போட்டுப் பேசத் தெரிய வேண்டும். அவர்களுடைய குரலோசையில் மற்றவர்களின் நியாயமான குரல்களெல்லாம் அமுங்கிப் போகவேண்டும். அவரே பெரியவர். மகா பெரியவர் என்கிறது சொலவடை.

ஆனால் அந்தத் தகுதி மட்டும் இருந்தால் போதுமா? போதாது. மானம், மரியாதை, நேர்மை, ரோசம், நாணம் முதலிய அனைத்து நல்ல குணங்களையும் உதிர்த்து விட்டவராகவும் இருக்கவேண்டும்.

“உதுத்த கழுதை ஊருக்குப் பெரிய கழுதை”

அப்பேர்பட்டவரே ஊருக்குப் ‘பெரிய மனிதர்’ என்று பொட்டில் அடித்ததுபோல சொல்லுகிறது சொலவடை. உண்மையையும் சத்தியத்தையும் அப்படியே மக்கள் வாயிலிருந்து வரும் சொலவடைகள் கூறுவது போற்றுதற்குரியன.

சொட்டடி வீடு

“மழைப்பேறும் பிள்ளைப் பேறும்
மகா தேவனுக்கே தெரியாது”

மழை பெய்யும் போதெல்லாம் சொட்டடி போடும் வீட்டில் குடியிருப்பவர்களுக்கு அதன் துன்பம் தெரியும். உழைத்துவிட்டு, களைத்து வந்து நிம்மதியாகப் படுத்தோம் உறங்கினோம் என்றல்லாது சொட்டும் இடங்களிலெல்லாம் ஏனத்தை வைத்துவிட்டு விடிய விடிய உட்கார்ந்து சில சமயம் நின்றுகொண்டே இரவைக் கழிக்கும் ஏழைகளின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார் கி.ரா.


மழையும் பிள்ளைப்பேறும் ஏன் ராத்திரிகளிலேயே வருகிறது என்று கேட்கிறாள் பேத்தி. இது எப்போது வரும் என்று கடவுளுக்குக்கூட தெரியாது என்கிறாள் பாட்டி.

ஏழைகளின் உள்ளம்

"அரிசி என்று அள்ளிப் பார்ப்பாருமில்லை
உமி என்று ஊதிப் பார்ப்பாருமில்லை"

ஏழை மக்களிடம் தாழ்வு மனப்பான்மை அதிகமாய் இருப்பதற்கு எத்தனையோ காரணங்கள் உள்ளன. தலைவிதி, மூடநம்பிக்கைகள், பயம் எனப் பலவற்றைக் கூறலாம். ஒரு இடத்தில் மக்கள் மகிழ்ச்சியாகக் கூடி இருக்கிறார்கள் என்றால் அங்கே யாரைச் சிறப்பாகப் பார்ப்பார்கள்? உபசரிப்பார்கள்? பணம் பெத்த ஆசாமிகளைத்தானே! தங்களை யாருமே கவனிக்கவில்லை என்கிறது இச்சொலவடை.

உமியாகக் கிடந்தாலும் கூட ஒருவேளை இதனுள்ளும் அரிசி இருக்குமோ என்று ஊதிப் பார்ப்பார்கள். இங்கே அதுவும் கிடையாது. உமிக்கும் கேவலமாகிப் போய்விட்டோம் என்று எண்ணி ஏழைகளின் உள்ளம் வருந்துவதை உணரமுடிகிறது.



வறுமை

"அடிச்ச ஏருக்கும் வார்த்த கூழுக்கும் சரி"

ஒரு பணக்காரர் வீட்டில் ஒரு உழவாளி உழுது கொண்டிருந்தான். கொஞ்ச நாள்தான் கழிந்திருந்தது. அவன் தெருவிலே நிற்க வேண்டிய நிலை வந்துவிட்டது. அப்போது அவனைப் பார்த்து இன்னொரு பணக்காரர் கேட்கிறார். 'என்னப்பா, இன்னொரு வீட்டில் நீ உழுதிட்டிருந்தாயே என்ன கிடைச்சது கூலி? அதற்கு இந்தச் சொலவடையைப் பதிலாகச் சொன்னான்.

நம் நாட்டில் வயத்துக் கஞ்சிக்கு மட்டுமே வேலை பார்த்த காலமும் இருந்தது. இன்னமும்கூட இருக்கிறது என்பதைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

நாட்டின் வறுமையை எண்ணி வருந்திய வைகுண்டர் 'மக்கள் தேவைக்கு உண்டு மகிழ்ந்து நெடுநாள் வாழ்ந்திருக்கும் காலமே தர்மயுகம்' எனக் கூறினார். நவபாரதம் குறித்து சிந்தித்த விவேகானந்தர் நாட்டின் ஏழ்மை கண்டு இரங்கியதுடன் செல்வம் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்தார். கவிஞர் மு. மேத்தாவின்,

"பச்சை வயல்களும்
பனி மலை நதிகளும்
மட்டுமல்ல
பசித்த வயிறுகளும்தான்
பாரதமாகும்" **(ஊர்வலம் பக்.59)**

என்னும் கவிதை, வளங்கள் மிகுந்திருந்தும் நம் நாட்டில் வறுமை இன்னும் ஒழியவில்லையே என்பதனைச் சுட்டிக் காட்டுகிறது.

மூடநம்பிக்கை

"அட்டமத்துச் சனி பிட்டத்துத் துணியையும் உரிந்து கொண்டது"

ஒரு விவசாயி கட்டிக்கொள்ள வேட்டி இல்லாமல் கோமணத் துணியோடு நின்று கொண்டிருந்தான். முகம் தெரிந்த ஒருவன், 'என்னப்பா வேட்டி என்னாச்சு?' என்று கேட்டான். வேட்டி இல்லாமல் போனதற்கு விவசாயிக்கு உண்மை காரணம் தெரியாது. அதை அவனுக்குச் சொல்வார் யாருமில்லை. அவனுக்குத் தெரிந்த காரணமெல்லாம் தரித்திரம், சனி திசை. தனக்குச் சனிதிசை வந்ததினால் தரித்திரமும் வந்தது என்று திடமாக நம்புகிறான்.

பக்கத்துத் தெரு முதலாளிக்குப் பத்து வேட்டியும் அடுத்த தெரு முதலாளிக்கு ஐம்பது வேட்டியும் இருப்பது சுக்கிர திசைதான் காரணம் என்று நினைக்கிறான். அவனுக்கு சோதிடத்தில் இருக்கிற நம்பிக்கை வாழ்க்கையில் கிடையாது. இதைப் பாரதி வருத்தத்தோடு,

"கஞ்சி குடிப்பதற்கு இல்லார் - அதன்
காரணங்கள் இவை என்னும்
அறிவும் இல்லார் ......"



என்கிறார். இதனைப் பாரதிதாசன்,

"நாணு மூடவழக்கம் நாடுதல் பெரிதா?
நல்லறி வென்னும் வழிச் செல்லுதல் பெரிதா?

எது பெரிது என்று பகுத்தறிந்து பார்த்திடக் கேட்கிறார்.

அகவிலை ஏற்றம்

"அகவிலையை அறிய மொகரையைப் பார்த்தாத் தெரியும்"

ஏறிக்கொண்டே போகும். அகவிலையைத் தெரிந்து கொள்ள பல புள்ளி விவரங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர்.

உஷ்ண (வெப்ப) மானியைப் பார்த்து உஷ்ணத்தின் (சூட்டின்) கடுமையைத் தெரிந்து கொள்வது போல மக்களுடைய முகத்தைப் பார்த்து விலைவாசி நிலவரங்களைத் தெரிந்து கொள்ளலாம் எனச் சொலவடை ஒரு வழியைச் சொல்லுகிறது.

கூலி

"ஆண்டை கூலியைக் குறைச்சால்
சாம்பன் வேலையைக் குறைப்பான்"

நில உடைமைக்காரர் கூலிக்காரனுக்கு எப்படி எல்லாம் கூலியைக் குறைக்க முடியுமோ அப்படி எல்லாம் குறைக்கிறான். அவர்களுக்கென்றே ஒரு நாழியும் வைத்திருப்பான். கரிசல் காட்டில் இந்த நாழிக்குக் 'கைத்தாளி' என்று பெயர். அதற்குப் 'பொட்ட நாளி' என்ற ஓர் பெயரும் உண்டு என்கிறார் கி.ரா. (குருட்டுத்தனமாக அந்த நாழி இருப்பதால் அப்படி பெயர் வந்திருக்கக் கூடும்.)

உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்காமல் கூலி மக்களின் வயிற்றில் அடித்தால் என்ன நடக்கும் என்பது இதன் மூலம் புலப்படுகிறது.

ஒட்டுண்ணி

"ஒழைக்கிறவன் ஒரு கோடி ஒக்காந்து திங்கறவன் ஒன்பது கோடி"

மனிதர்கள் பலர் வாழ்க்கையில் ஒட்டுண்ணிகளாக வாழ்கிறார்கள். அடுத்தவர் பணத்தில் மஞ்சைக் குளிப்பவர்களாக இருக்கின்றனர் எனச் சொலவடைக் கூறுகின்றது. இத்தன்மை இன்று அதிகமாகி வருகிறதைப் பார்க்க முடிகிறது,

பரிகாரம்

மக்களுடைய துயரங்களைச் சொல்லும் சொலவடைகள் அந்தத் துயரங்களை நிவர்த்தி செய்து கொள்ளப் பரிகாரங்களையும் சொல்லித் தருகிறது. உழைப்பாளி மக்கள் ஒன்று சேர்ந்துக் கொதித்து எழுவார்களானால் - அது எப்படி இருக்கும் என்பதை

"கடல் கொதித்தால் விளாவ நீர் ஏது?



என்று கேட்கிறது.

கொஞ்சம் நீர் கொதித்தால் குளிர்ந்த நீரைவிட்டு சரிசெய்து கொள்ளலாம். மகா சமுத்திரமே கொதிக்க ஆரம்பித்துவிட்டால்.....!

மக்களின் துயரங்களுக்கெல்லாம் ஒரு தீர்வு பிறக்கவேண்டும்? எது பிறந்தால் மக்களுக்கு நியாயம் பிறக்கும்? என்று தீர்க்கமாகக் கூறுகிறது சொலவடை.

"கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்" "மயிலே மயிலே இறகு கொடு என்றால் கொடுக்குமா? என வினவுகிறது மக்கள் சொலவடைகள்.

முடிவுரை

தமிழ்ச் சொலவடைகள் ஒரு சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்துவனவாகத் திகழ்வன. உண்மையைப் பளிங்குபோல் பறைசாற்றி நிற்பன. எனவே சொலவடைகள் சொல்லித்தரும் மக்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியதும் உண்டு; கற்றுத்தந்து வழிகாட்ட வேண்டியனவும் உண்டு என்பதனைப் புலப்படுத்துகின்றது.

****

ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

'நிலைநிறுத்தல்' சிறுகதை தரும் பண்பாட்டு வெளி

முனைவர் போ. மணிவண்ணன்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் போ. மணிவண்ணன்
தமிழ்த் துறைத் தலைவர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அவிநாசி 641654
அலைபேசி: 9443751641
மின்னஞ்சல்: manivannan140809@gmail.com
ORCHID ID No: Bo.Manivannanmanivannan179222

‘நிலைநிறுத்தல்’ சிறுகதை தரும் பண்பாட்டு வெளி

முன்னுரை

மலையுறையும் தெய்வமான முருக கடவுளுக்கு பலிப் பொருள்களைத் தூவி **“மலைவான் கொள்கென உயர் பலி தூஉய்”** என்று வழிபட்டு குறவர்கள் மழை வேண்டுதலைச் செய்கின்ற காட்சியை சங்க இலக்கியத்தில் கபிலர் பதிவு செய்கின்றார். வாயுறை வாழ்த்து என்றும் வேளாண் வேதம் என்றும் போற்றப்படும் திருக்குறளிலும் கடவுள் வாழ்த்திற்கு அடுத்ததாக வான் சிறப்பு அதிகாரத்தை வைத்துப் பாடியுள்ளார் திருவள்ளுவர். மழை பெய்யாமையால் விளையும் கேட்டினையும் அதிக மழை பெய்ததால் மக்களுக்கு ஏற்படும் கேட்டினையும் என்று இரண்டு நிலையிலும் வள்ளுவப்பெருமான் மழையின் பண்புகளைச் கூறுகின்றார் .தேவாரத்தில் திருஞானசம்பந்தர் பாடிய திருக்கழுமலம் திருவையாறு ,திருமுதுகுன்றம், திருவேகம்பம், திருப்பறியலூர், திருப்பராய்த்துறை ஆகிய தலங்களில் பாடிய மேகராகக் குறிஞ்சிப்பண்ணில் அமைந்த பதிகங்கள் மழை தரும் பதிகங்களாக இயற்றப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியப் பரப்பில் மழை வேண்டிப் பாடுதலும் மழை நிற்கப்பாடுதலும் தொடர்ந்து இருபத்தொன்றாம் நூற்றாண்டு வரை புலவர்களால் கைக்கொள்ளப்பட்ட ஓர் இலக்கிய நெறியாகவே கடைபிடிக்கப்பட்டுள்ளது எனலாம். ‘“நிலை நிறுத்தல்”என்ற சிறுகதையில் கரிசல் எழுத்தின் தந்தை கி.ராஜநாராயணன் அவர்கள் மழை நோன்பு கடைபிடித்த மாசாணம் என்ற கதாபாத்திரம் வழியாகத் தமிழகத்தின் பண்பாட்டின் அடியொற்றிக் கிடக்கும் வரலாற்றையும் அரசியலையும் பதிவு செய்துள்ளார். காலச்சுவடு பதிப்பகம் 2018 டிசம்பரில் வெளியிட்ட “கி.ராஜநாரயணன் மாயமான்” சிறுகதைத் தொகுப்பில் “நிலை நிறுத்தல்” சிறுகதை இடம்பெற்றுள்ளது.



மாசாணம்

பஞ்சம் பிழைக்க வேண்டி அனாதரவாக வேற்றூருக்கு செல்லுகிறான் மாசாணம்.ஊர் மாடத்தில் புளிய மரத்தடியில் தங்கி இருந்தபோது அவ்வூரின் பெரிய முதலாளியின் கண்ணில் படுகிறான் மாசாணம் . கடினமான உழைப்பாளி என்பதை மாசணத்தின்திடமான உடல் காட்டிக் கொடுக்கிறது. பெரிய முதலாளி மாசணத்தைத் தன் வீட்டிற்கு உணவு உண்ண வருமாறு அழைத்துச் செல்கின்றார். விசுவாசமான கருப்பு நாய்க்குட்டி போல அவருக்கு பின்னால் மரியாதையோடு நடக்கிறான் மாசாணம். சட்டியில் கம்மஞ்சோறு வைத்து அவனுக்கு உணவு கொடுக்கிறார்கள் .கம்பஞ் சோறு வைக்க வைக்க சாப்பிட்டு கொண்டே இருந்தான் மசாணம். பெரிய முதலாளி மனமகிழ்வுடன் மாசாணத்தை வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்.

“ பிடிக்கப் போகும் மாட்டுக்கு முன்னால் ஒரு தளுக்கு நாத்துக் கூளத்தை எடுத்துப் போடுவார்கள். எப்படி அது வாய் நிறைய அள்ளி எடுத்து திங்கிறது என்று கவனிப்பார்கள். சோத்தை அள்ளறதிலிருந்தும் நாத்தை அள்றதிலிருந்தும் தெரிஞ்சிடும் பூளாக்கு “ என்பார் பெரிய நைனா என்று உணவு உண்ணும் முறையிலேயே உழைக்கும் விதம் அறிந்து விட முடியும் என்று பெரிய முதலாளி கூறுகிறார்

வேலையும் வசவும்

வேலையின் சுமையைக் கூட மாசாணத்தால் தாங்கி விட முடிந்தது. ஆனால் விழுகின்ற அடிகளையும் ஏச்சுக்களையும் வசவுகளையும் தாங்க முடியாமல் திகைக்கிறான். பெரிய முதலாளியின் வசவுக்கு நடுவில் புழுத்த நாய் கூட போகாது.

இரவு பதினோரு மணிக்கு படுக்கையில் விழுந்தால் அதிகாலை நான்கு மணிக்கு பெரிய முதலாளி காலால் எத்தினால் தான் எழ முடியும் அளவுக்கு உடல் அசதி ஏற்படுகிறது மாசாணத்திற்கு. வேலைக்குச் சேர்ந்த முதல் வருடம் சாத்திரப் பொங்கல் விழா நடந்தது. பகலில் வேலை செய்துவிட்டு இரவில் மந்தையில் நடக்கும் நாடகங்களைத் தொடர்ந்து ஏழு நாட்கள் முன்னால் அமர்ந்து பார்க்கின்றான் மாசாணம் .இரவில் நாடகம் பார்த்தல் பகலில் வேலை செய்தல் என்று ஏழு நாட்களும் கழிகிறது. ஏழாம் நாள் நாடகம் முடிந்தது. உறக்கம் விழித்து இருந்தது பொறுக்க முடியாமல் பெரிய முதலாளியின் வீட்டில் தானியப்பட்டறைகளுக்கு இடையில் உள்ள சுவர் அருகில் துண்டை விரித்து உறங்கி விடுகிறான். பெரிய முதலாளி மாசாணத்தைக் காணாமல் ஊர் முழுவதும் தேடுகிறார்.



மாசாணம் உறங்கி முடித்து ஏழாவது நாள் எழுந்து நனைய போட்ட பருத்திக்கொட்டையை ஆட்டுரலில் ஆட்டத் தொடங்குகிறான். சத்தம் கேட்டு எழுந்து வந்த பெரிய முதலாளி தாக்கு பிடிக்க முடியாத கோபத்துடன் மாசாணத்தை சாட்டையால் வெளுத்து விடுகின்றார் .வலி தாங்க முடியாமல் இருந்தாலும் உடம்பை முறுக்கிக் கொண்டு அடி வாங்கிக் கொள்கிறான் மாசாணம். சாட்டையடி சாமி கொண்டாடிகள் புனித சாட்டையால் அடித்துக் கொள்ளும் பேரோசை போல அவன் மனக்கண்ணில் மின்னலிடுகிறது. எப்போதும் அடி வாங்கியவுடன் நீண்ட நேரம் அழுது கொண்டிருக்கும் மாசாணம் அன்று கனத்த மவுனத்துடன் வேலை செய்து கொண்டிருந்தது பெரிய முதலாளிக்குப் புதிய விஷயமாய் படுகிறது

பஜனை மடத்திற்குச் செல்லுதல்

மாசாணம் சனிக்கிழமை தோறும் ஊர் பஜனை மடத்தில் நடக்கும் பஜனைக்குத் தவறாமல் போகிறான்.பாடத்தெரியாவிட்டாலும் கேட்டுக் கொண்டிருப்பான் .தெலுங்கு பாடல்கள் அவனுக்கு கேட்பதற்கு ரம்யமாக இருக்கும். ஓரிரு தமிழ் பாடல்கள் வரும்போது மனம் மலர்வான் . பஜனைக்கு ஸ்ருதிப்பெட்டி இசைக்கும் ஆள் வராததால் மாசாணத்திடம் கொடுக்கிறார்கள்.

முதலில் கொஞ்சம் முகச்சுளிப்பு இருந்தாலும் பிறகு சரியாய் வந்து கொண்டிருந்தது ஸ்ருதி. அப்போதுதான் கவனித்தான். தன்னை அது ஒரு அமுத தாரையாய் கரைக்கிறது என்பதை லயித்து போனான் அதன் சொகத்தில். மாசாணம் தன்னுடைய பிறப்பினால் வந்த நிலையில்

இருந்து மாற விரும்புகிறான். அதற்கான வழிமுறைகளாக இச் செயலைக் கையில் எடுக்கின்றான். இது அவனுக்கு மிக உயர்வாகத் தெரிகிறது. அனைவரோடும் சமமான மரியாதையைப் பெறுவதால் அவனை இழிவாகப் பார்ப்பவர்கள் இல்லை என்று அச்செயலை அவன் தொடர்கின்றான்.

மாசணத்தின் திருமணம்

மாசாணம் திருமணம் செய்த பெண்ணின் பெயரும் மாசாணம் என்பதுதான் . இதனை கேட்டு ஊர்க்காரர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது . ஏனெனில் ஒரே பெயருள்ள தம்பதிகள் ஊரில் இருந்தால் அவர்களிடம் சென்று கைகால் சுளுக்கியிருந்தால் எண்ணெய் நீவினால் குணமாகிவிடும் என்பது அவ்வூரினரின் நம்பிக்கையாகும். இதனால் மாசாணத்தின் வீட்டில் கைகால் சுளுக்கு எடுக்க ஆட்கள் வர தொடங்கினார்கள். மெதுவாக ஊர்ப் பூசாரியாக நிலை உயரத் தொடங்குகிறான் மாசாணம். திருஷ்டிக் கோளாறு ,பச்சிலை பூசுதல், விபூதி போடுதல் என்று ஆட்கள் வந்து கொண்டே இருந்தனர். ஊர் முழுவதும் மாசாணத்தின் கைராசியை மெச்சியது என்றாலும் அவனது எளிய குணத்தினால் அவனை ஏளனம் செய்வதையும் கேலி செய்வதையும் வம்பு இழுப்பதையும் விடுவதில்லை.



சின்ன முதலாளிக்குத் திருநீறு போடுதல்

ஒரு முறை பெரிய முதலாளியின் மகன் சின்ன முதலாளிக்கு உடல் நலம் இன்றி போய் விடுகிறது. திருநீறு பூசி விட மாசாணத்தை அழைத்துச் செல்லுகின்றனர். ஒன்பது வயதுள்ள சின்ன முதலாளியை அழைத்துத் தன் எதிரில் அமர்த்துகிறான் மாசாணம். தாம்பாளத்தில் திருநீறு பரப்பி அதில் ஏதோ விளங்கிக் கொள்ள முடியாதபடி எழுதுகிறான். அதனைத் தலை தூக்கி பெரிய முதலாளி கவனிக்கின்றார். எழுதப் படிக்க தெரியாத மாசாணம் மூடிய கண்களுடன் ஒலி எழாமல் ஏதோ உச்சரிப்புகளை வேகமாகச் சொல்லுகிறான். பிறகு சின்ன முதலாளிக்குத் திருநீறு பூசி சொடக்கு எடுத்து விடுகிறான். சின்ன முதலாளிக்குஉடல் நலமாகி விடுகிறது. ஊர்ப்பெரியவர்கள், பெரிய முதலாளி வீட்டம்மா என்று அனைவரும் மாசாணத்திடம் திருநீறைக் குனிந்து மரியாதையுடன் வாங்கிக் கொள்கின்றனர். பெரிய முதலாளிக்குத் தன் நிலத்தில் உழைத்து தன்னிடம் சோறு வாங்கியுண்ணும் இந்த பயலிடம் போய் இப்படி குனிந்து வாங்க வேண்டுமா? என்று தோன்றுகிறது. இருந்தாலும் வீட்டினரின் அழுத்தத்தால் இரு கைகளையும் நீட்டித் திருநீறு வாங்கிக் கொள்கிறார். மாசாணம் என்ற அற்புதமான உழைப்பாளியை கேலி செய்யும் ஊரினர் அதே சமயம் மாசாணம் என்ற பூசாரியிடம் பவ்யமாக நடக்கின்ற முரணான மனநிலை மாறுபாடுகளைக் கதை சொல்லி கி.ரா. நுட்பமாக விவரிக்கின்றார்.

மழை வேண்டி வழிபாடு

மாசாணம் வாழ்கின்ற ஊரின் மக்கள் மழை வருவதற்கு முன் நடவு வேலைக்கான முன்னேற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். புரட்டாசி முதல் பட்டத்தில் விதைக்கத் தயாராகின்றார்கள். ஐப்பசி ஆகியும் மழை வரவில்லை. ஊர் மக்கள் அனைவரும் கூடி மழையை தருவிக்க சடங்குகள் செய்யத் தொடங்குகின்றார்கள். மழைக்கஞ்சி எடுத்தல், கொடும்பாவி கட்டி இழுத்து ஒப்பு சொல்லி அழுதல், கிராம தேவதைகளுக்கு எல்லாம் கொடை நடத்தி பலி

தருதல் என்று பல்வேறு சடங்குகளையும் வழிபாடுகளையும் ஒன்று விடாமல் நடத்துகின்றனர். எந்த வகையிலும் மழை வருவதற்கான எந்த சிறு அறிகுறியும் காண முடியவில்லை. வேளாண் வேலைகள் நின்று போனதால் கூலிகள் பட்டினி கிடந்தார்கள். மாசானத்தின் வீட்டிலும் சேமித்து வைத்திருந்த தானியமும் தீர்ந்து விடுகிறது. ஊரெங்கும் பசியும் பட்டினியும் தாண்டவமாடுகின்றது.

மாசணத்தின் சபதம்

மாசாணம் உணவு கிடைக்காமல் இரண்டு நாள் பட்டினி கிடந்தான். குத்தப்பட்டவன் தூங்கினாலும் குறைவயித்துக்காரன் தூங்க முடியுமா? என்பது போல் அவனது நிலை ஆனது. மூன்றாவது நாள் மதியம் ஒரு முடிவெடுத்து பார்வதியும் அம்மன் கோயிலை நோக்கிச் செல்கிறான். நெடுஞ்சாண் கிடையாக அம்மனை வணங்கி விட்டு எழுந்திருந்த மாசாணம் தரையைக் கிள்ளி நெற்றியில் இட்டு சபதம் போல் உரக்கச் சொன்னான்.

மழை பெய்கிற வரை இங்கேயே அம்மனுக்கு முன்னால் உட்கார்ந்து வயணம் காக்க போவதாகவும் மழை பெய்யாமல் போனால் பட்டினி இருந்து இங்கேயே உயிரை விட்டுவிடப் போவதாகவும் சொல்லி அந்த மைதானத்தின் கிழக்காமல் பார்த்து சப்பணம் போட்டு உட்கார்ந்து கண்களை மூடிக்கொண்டான் என்று மாசாணம் உண்ணா நோன்பு தொடங்குவதை கி.ரா. கூறுகின்றார். எப்படியும் உணவின்றி இறக்கப் போகிறோம் ஊரின் வேண்டுதலாக மழைக்காக உண்ணா நோன்பு இருந்து உயிர் போனதாக இருக்கட்டும் என்பது மாசாணத்தின் நிலைப்பாடாக இருக்கலாம். பலரும் இதனை வேடிக்கையாகவும் கோமாளித்தனமாகவும் கருதுகின்றனர். சிலர் உணர்ச்சிவசப்பட்ட பரபரப்புடன் கோயிலுக்கு விரைந்தார்கள்.



இரவும் பகலும் குளிரும் வெயிலுமாய் மாசணம் அம்மன் கோயில் வாசலில் வயணங்காத்தல் எனப்படும் உண்ணா நோன்பினைத் தொடர்கின்றான். கீதாரி கிருஷ்ணப்ப கோனார் மாசாணத்தை வந்து பார்த்துவிட்டு ஆட்டுப்பாலினை குருத்துப்பனை ஓலை பட்டையில் வைத்து அருந்துமாறு கொடுக்கின்றார்.மாசாணம் அதனைத் தீர்மானமாக மறுத்து விடுகின்றான் .உலகில் உள்ளவர்கள் தங்களின் சொந்த நன்மைகளுக்காக வயணம் காப்பார்கள். ஆனால் மாசாணம் ஊர் நன்மைக்காக உண்ணா நோன்பு இருக்கிறான் என்று கிருஷ்ணப்ப கோனார் அவனை பாராட்டி விட்டுச் செல்கின்றார்.

மழை வருவதற்கான அறிகுறிகள்

நிலைநிறுத்தல் சிறுகதையில் கி.ரா அவர்கள் மழை வருவதற்கான அறிகுறிகளாக இயற்கையில் நிகழும் மாற்றங்களை மண்ணின் மைந்தர்களின் உரையாடல் மூலம் காட்டுகின்றார். அவை வருமாறு:

வானத்தின் உச்சியில் பருந்துகள் நூற்றுக்கணக்கில் வட்டமிட்டு பறத்தல்

சலங்கை பறவைகள் சிறிய நங்கூர வடிவத்தில் பறத்தல்

மாலை நேரத்தில் மேகங்கள் வானத்தில் நீர் வாய்க்கால் இடுதல்

சந்திரன் வானத்தின் மிகத் தொலைவுக்குச் சென்று விடுதல்

மலைகள் மிக அருகில் வருதல் மலையின் திருப்பங்கள் கூட மிகத் தெளிவாகத் தெரிதல்

#சொறித்தவளை டொர்டொறக் என்று சத்தம் கொடுத்தல்

மேக கோபுரங்கள் வானத்தில் எழுதல்

வேகமாக நகரும் வெள்ளை மேகங்கள் நிறைசூல் கொண்ட யானை மந்தை போல நகர முடியாமல் நிற்றல்

கட்டுத்தரையிலிருந்து காளை கயிற்றை அறுத்துக் கொண்டு குதியாட்டம் போடுதல்

சூ இரைதேடச் சென்ற காகங்கள் பாதியிலேயே கரைந்து கொண்டு தங்கள் கரை மரங்களுக்கு வருதல்

இப்படி மழை வருவதற்கான அனைத்து அறிகுறிகளும் அவ்வூரில் தோன்றுகின்றன. நெல்லிக்காய் அளவு பெரிய துளியாய் மழைத்துளி பேரிச்சலுடன் பூமியில் விழுகின்றது. ஊரே துள்ளிக் குதிக்கின்றது.

மாசாணத்தின் சபதம் நிறைவேறுதல்




ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையில் யாரோ நெசவுக்கு வடித்த பாவினை ஆற்றுவது போல கம்பித் தூரல் பெரும் மழையாக வலுத்துக் கொட்டுகின்றது. நீர் பெருக்கெடுத்து ஓடுகின்றது. மாசாணம் தெப்பமாக நனைந்து விடுகிறான். தன் அருகில் விழுந்த ஆலங்கட்டி ஒன்றை எடுத்து அம்மனை வணங்கி விட்டு வாயில் போட்டுக்கொள்கிறான். ஆனந்தமாக ஊரே சேர்ந்து அவனைக் கொண்டாடித் கைத்தங்கலாக நடத்திக் கொண்டு ஊர்வலமாக மாசணத்தின் வீட்டுக்குச் செல்கிறார்கள். மாசாணம் மிகுந்த பெருமிதத்துடன் வானத்தையும் மக்களையும் தலை நிமிர்ந்து பார்க்கிறான். இதுவரை மாசாணத்தை எடுத்தெறிந்து பேசி வந்த மாசாணத்தின் மனைவியும் தன் கணவனுக்கு நடக்கும் மரியாதைகளைக் கண்டு பெருமை கொள்கிறாள். பெரிய முதலாளி சூடான பசும்பாலை சில்வர் குவளையில் நிரப்பி மிக்க பிரியத்துடன் மாசாணத்திற்கு அளிக்கின்றார் .அதை வாங்கிக் கொண்ட மாசாணம் தீர்க்கமாக அனைவரின் முகத்தையும் பார்க்கிறான். இதுவரை ஏழ்மையாலும் சாதியாலும் ஒடுக்கப்பட்டிருந்த மாசாணம் பெரிய முதலாளி வீட்டில் உணவு முதலானவற்றை சட்டியில் வாங்கி அண்ணாந்தே குடித்துப் பழகி இருந்த மாசாணம் அன்று டம்ளரில் வாய் வைத்து சப்பிக் குடிக்கின்றான். பெரிய முதலாளி "இன்னும் கொஞ்சம் இன்னும் கொஞ்சம்" என்று பாலினை டம்ளரில் ஊற்றி உண்ணுமாறு அவனை உபசரிக்கின்றார்.

நிலை நிறுத்தல்

மிக எளிய உழைக்கும் மனிதன் ஒருவனின் வாழ்வியலை சிறுகதையாக்கி தமிழகத்தின் வருக்க முரணிகளை வரலாற்றுப் பார்வையுடன் இக்கதையில் விளக்கியுள்ளார் கரிசல் எழுத்தாளர் கி.ரா. கிராமிய மணத்துடன் கரிசலின் வலிமையான அழகினை எடுத்துக் காட்டுவதுடன் பல நூற்றாண்டுகளாக மனித மனம் செயல்படுகின்ற உளவியலையும் பதிவு செய்கின்றார். மாசாணத்திற்கு வாய்த்தது போல பிற விளிம்பு நிலை மக்களுக்கு வாய்த்திடாது. தென் தமிழ்நாட்டின் வறண்ட நிலப் பின்னணியில் வாழும் மக்களின் உணர்வு நிலையை ஆழமான

தரிசனத்துடன் எழுதியுள்ளார். கடின உழைப்பினால் ஒருவன் அனைவருக்கும் சமமானவனாக மதிக்கப்படவில்லை. அதே சமயம் சாமி கொண்டாடியாக, புரட்டாசி மாத பஜனைக்காரனாக, திருஷ்டி கழிப்பவனாக, மந்திர உச்சாடனம் செய்து திருநீறு பூசுபவனாக, பச்சிலை மந்திரிப்பவனாக, உண்ணா நோன்பிருந்து மழை வேண்டலை நிகழ்த்துபவனாக உருமாறும் போதுதான் மக்கள் மாசாணத்தை மரியாதையுடன் நடத்துகிறார்கள். தன்னையும் தன் சுயமரியாதையையும் நிலைநிறுத்திக் கொள்ள மாசாணம் எடுத்துக்கொள்ளும் அவதாரங்களாக அச்செயல்கள் நிகழ்கின்றன. மிக எளிய அழகிய அற்புதமான ஒரு கதையின் மூலம் கரிசல் எழுத்தின் தந்தை கி.ரா அவர்கள் ஒட்டு மொத்தமான ஓர் வரலாற்றுப் பார்வையை நமக்கு வழங்குகிறார்.

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

கி.ரா. வின் சிறுகதைகளில் சமூகப் பார்வை

முனைவர் ப சிலம்பரசன்





தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

முனைவர் ப. சிலம்பரசன்,
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 095

கி.ரா. வின் சிறுகதைகளில் சமூகப் பார்வை

முன்னுரை

சமூகம் என்பது மக்கள் ஒன்றிணைந்து கூட்டமாக வாழும் அமைப்பே சமூகம் எனப்படும். மக்களின் பண்பாடு, கலாச்சாரம், வாழ்க்கை முறை, உணவு, உடை, தொழில் போன்ற அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்து மக்களின் அடுத்த தலைமுறைக்கு தேவையானவற்றை தகவல்களைச் சேமித்து வைக்கும் பெட்டகமாக சமுதாயம் திகழ்கிறது. தனிமனிமர்கள் பலர் இணைந்து சமுகம் உருவகிறது, சமுகத்தின் தேவை தனிமனிதனுக்கு இன்றியமையாததாகிறது.



வள்ளுவரின் சமுதாயப் புரட்சி

மனத குலத்தைப் பற்றி விரிவாக எழுதிய வள்ளுவர் தங்களின் கருத்தை சுருங்கக் கூறியதோடு மட்டுமல்லாமல் ஒன்றே முக்கால் அடிகளில் ஒரு குறளையும் இயற்றியதோடு அவற்றை உள்ளடக்கிய ஓர் அதிகாரமும் அமைத்தார். ஒரு அதிகாரத்ததிற்கு பத்துக் குறளும் அப்பத்துக்குறளில் முதலில் அதற்கான காரணத்தையும் பின்பு அதற்கானத் தீர்வையும் தீர்க்கமாக உரைக்கிறார். மேலும் இவ்வுலகில் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அனைவரும் பின்பற்ற வேண்டி,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை. (குறள் - 322)

என்னும் குறளில் பல்வேறு வகையான குற்றங்களுக்கு ஆரம்பப் புள்ளியாக அமைவது பசிப்பிணி ஆகும். இதனை உணர்ந்த வள்ளலாரின் அனையா தீபம் இன்றும் உயிர்ப்புடன் உள்ளது. மேலும் நாம் நமக்குத் தேவையானவற்றை வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு கொடுத்து உதவிநோமானால் பசிப்பிணி இல்லாமை நீங்கும். இவற்றைத் தவிர்த்து மற்ற அறங்களை செய்வதைக்காட்டிலும் நம்மிடம் உள்ளதை பிறருக்கு கொடுப்பதே சிறந்த அறம் என்பதால் தான் இன்று பலர் அன்னதானம் செய்கின்றனர். இதனையே வள்ளுவரும் எடுத்து உரைக்கிறார். கி.ரா அவர்களும் கதவு என்னும் சிறுகதையில் ரங்கம்மாபடும் துயரத்தை எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாமல் வறுமையால் ஒரு குழந்தையும் இறந்துவிடுகிறது. ஆகவே இவ்வுலகில் பகிர்ந்தளிப்பது உணவுக்காக மட்டும் அல்ல. இதனால் சகோரத்துவமும் மேலோங்குகிறது. இதன்மூலம் உறவும் நீடித்து வேற்றுமையை அகலச்செய்கிறது.

பாரதியும் தனிமனிதனுக்கு உணவு இல்லையெனில் இச்சகத்தினை அழித்திடுவோம் என்று சூளுரைத்தான். கி.ரா அவர்களும் நம் அனைவரும்

பயன்படுத்தும் கதவை மையமாக வைத்து ஒரு குடும்பம் அடையும் இன்னல்களை படம்பிடித்துக்காட்டுகிறார். மேலும் அன்பு என்பது மனிதர்களித்து மட்டுமல்லாமல் பிற உயிரற்ற பொருட்களிடமும் விரைவிக்கிடக்கும் என்பதை ரங்கம்மாளின் மூத்த மகள் ஊராட்சிமன்ற அலுவலக இடத்தில் இருந்தக் கதவைப் பார்த்தப்பின் அவள் அடைந்த மகிழ்ச்சி எல்லையற்றது. வள்ளுவரும் இதனை,

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும் (குறள் - 71)

என்னும் குறளுக்கு ஏற்ப அந்த சிறுவர்கள் அடைந்த மகிழ்ச்சி வானமளவிற்கு உயர்ந்தது. ஒரு அரசாங்கம் மக்களைக் காப்பதே அதன் தலையாய கடைமையாகும். ஆனால் மக்களைக் காப்பதைக்காட்டிலும் அவர்களிடம் வரி வசூலிப்பதையே தலையாய கடமையாக செயல்படுகிறது இன்றைய அரசு. கி.ரா அவர்களும் இக்கதையில் தலையாரி செய்த செயல் கண்டிக்கத்தக்கதாக இருந்தாலும் இதுபோன்றே இன்றைய விவசாய தொழிலுக்கு வாங்கிய கடனுக்காக அவர்களின் பொருட்களை கையகப்படுத்துவதும் தொடர்கிறது, விவசாயிகள் படும் துயரங்கள் எண்ணிலடங்கா. பல கோடி ரூபாய் வங்கியில் வாங்கிய பெருமுதலாளிகள் நாட்டை விட்டு உல்லாசமாக வெளியில் சுற்றி வருகின்றனர். சில இலட்ச ரூபாய் பெற்றுவிட்டு வறட்சி, வெள்ளப்பெருக்கு, போதிய விலையின்மை போன்ற பல சிக்கல்களால் வாங்கியக் கடனை திருப்பித்தர முடியாமல் இறக்கும் நிகழ்வுகளை செய்தித்தாளின் மூலமும் நேரடியாகவும் இன்றும் நம்மால் காணமுடிகிறது.



சாமான்ய மக்களின் பொருட்களை ஜப்தி(கையடக்கம்) செய்யும் அரசாங்கம் பெரு முதலாளிகளுக்கு வரி சலுகைகள் வாராக்கடன் என வாரி வழங்குகின்றது. இக்கதையில் ரங்கமாளின் கணவன் சொந்த ஊரில் வேலையில்லாதக் காரணத்தால் வெளியூருக்கு வேலைக்கு சென்றதால்(பஞ்சம் பிழைக்க) ரங்கம்மாளின் நிலை யாதென அறியாமல் பல இன்னலுக்கு ஆளாகிறது. மேலும் அவளின் கணவன் உயிரோடு இருக்கிறான இல்லை மடிந்தான என்ற செய்தியைக்கூட அவளால் அறியமுடியவில்லை என்ற சிக்கலான குடும்ப சூழ்நிலையிலும் இலட்சுமியும் சீனிவாசனும் தன் தங்கை இறந்ததைக் காட்டிலும் தலையாரியால் எடுத்துச்செல்லப்பட்ட கதவிற்காகவே மிகவும் மனவருந்துகின்றனர். காரணம் சிறுவர்கள் கதவின் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடு. நாடு சிறப்படைய அரசனுக்கு ஔவை சொன்ன அறிவுரை இன்றைய ஆட்சியாளர்களு கவணத்தில் கொள்ள வேண்டும். இதனை,


வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல்உயரும்
நெல் உயர குடி உயரும்
கோல் உயர கோன் உயருவான்

என்ற ஔவையின் வரிகளுக்கு ஏற்ப ஒரு அரசானது மக்களின் நிலையறிந்து செயல்பட்டால் மட்டுமே சிறப்படைய முடியும் என்பதை கி.ரா அவர்கள் கதவு என்னும் சிறுகதையில் நமக்கு உணர்த்திச் செல்கிறார்.

மாயமானும் விவசாயும்

இவ்வுலகில் இன்றளவும் உயிர்ப்புடன் வாழ முக்கியமானது விவசாயம் ஆகும். இதனைத் தான் வள்ளுவர் பெருந்தகையும் **'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'** என்று கூறியுள்ளார். ஆனால் இன்றைய நடைமுறையான எதார்த்த வாழ்க்கையில் உழவர்கள் படும் இன்னல்களை சொல்லி மாலாது. **"உழைத்தவன் கணக்குப்பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது"** என்ற வழக்காற்று மொழியைப் போல மாயமான் என்ற சிறுகதையில் அப்பாவுச் செட்டியார் தான் செய்த பெட்டிக்கடைத் தொழிலையும் விட்டுவிட்டு அரசு தரும் மானியத்திற்குக்காக கிணறு வெட்ட அதன் மூலம் கடன்பட்டு திருப்பி அடைக்க முடியாமல் தனது சொத்துக்கள் அனைத்தையும் இழப்பதோடு மட்டுமல்லாமல் ஊரைவிட்டு வெளியேறும் நிலையை கி.ரா அவர்கள் படம்பிடித்துக் காட்டுகிறார்.

அரசின் இலவசங்கள்



ஒருவனுக்கு மீன்களை இலவசமாக கொடுப்பதைவிட அவனுக்கு மீன்பிடிக்க கற்றுக்கொடுப்பதே சிறந்தது என்றொரு பழமொழி உண்டு. இன்றைய ஆட்சியாளர்கள் இலவசம் என்ற பெயரில் மக்களின் வாழ்வியலை சிதைக்கின்றனர். மாயமான் எனும் சிறுகதையிலும் கிணறு தோண்டுவதற்கு ரூபாய் ஐநூறு மானியம் கொடுத்து மக்களை விவசாயம் செய்ய ஊக்குவிக்கும் செயலில் ஈடுபடுத்தி அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு உந்துதலாக இருக்குமென்று நினைத்தார்கள். ஆனால் அத்தொகை போதுமானதாக இல்லாத காரணத்தால் கிணறு தோண்டுவதற்கு வட்டிக்கு வாங்க தள்ளப்பட்டார் அப்பாவுச்செட்டியார். அதோடு தான் செய்து வந்த தொழிலையும் மறந்தார். மேலும் கிணறு வெட்டியும் அதற்குத் தகுந்த பயிர் செய்ய அரசாங்கம் தடைபோட்டது. ஒரு விவசாயி எந்த பயிர் செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்கும் அரசு வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் இன்றும் பல சலுகைகளை வழங்கி அவர்களுக்கு கைப்பாவையாக செயல்படுகிறது. ஆனால் விவசாயிகளுக்கோ தான் செய்யும் பயிருக்கு ஏற்ற விலைக் கிடைக்காமலும் காலநிலை மாற்றத்தாலும் துன்பத்திற்கு ஆட்படுகிறான். இவற்றை சரிசெய்ய வேண்டிய ஆட்சியாளர்கள் எந்தவொரு பயனுள்ள திட்டத்தையும் சரிவர செய்யாமல் தனக்கும் தனது கட்சியினருக்கும் சாதகமான சூழ்நிலையை எற்படுத்தி பல்வேறு இலவசங்களை பயனற்றதாக மாற்றியதோடு மக்களை கடனாளிகளாக மாற்றியதே நிதர்சனமான உண்மையாகும்.

ஒரு குண்டூசி தயாரிக்கும் நிறுவனம் அதற்கான வரவு செலவு இவற்றின் இலாபம் போன்றவற்றை கணக்கில் கொண்டு விலை நிர்ணயம் செய்கிறது. ஆனால் வயல்வேலியில் பல மாதங்கள் பாடுபட்டு உழைக்கும் விவசாயிகள் அதற்கான உரியவிலை கிடைக்காமல் நஷ்டப்பட்டு காலமுழுவதும் வறுமையில் உழல்வதோடு நோய்வாய்ப்பட்டு ஒரு சராசரி மனிதனின் ஆசைகளைக்கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் இறுதிவரை துன்பப்படுகின்றனர். இதுபோன்ற செயலே சமூக சீரழிவிற்கு ஆரம்பமாக அமைகின்றது. இதனை உணர்ந்த வள்ளுவர்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு" (குறள் - 734)

எனும் குறளின் மூலமாக ஒரு நாட்டின் இவையெல்லாம் இருக்கக்கூடாது என வள்ளுவர் ஆட்சியாலர்களுக்குச் சுட்டியுள்ளார். அவற்றைக் கண்டறிந்து களைவதும் நாட்டில் நடைபெரும் நிகழ்வுகளை மக்களிடம் எடுத்துரைப்பது ஒரு நூலின் சிறந்த அறமாகும். அதைத்தான் கி.ரா அவர்களும் தனது கரிசல் இலக்காயப் படைப்புகளில் சமூகத்தில் ஏற்படும் பல்வேறு சிக்கல்களை எடுத்துரைத்து மக்களை நல்வழிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அறிவார்ந்த சமூகத்தை ஏற்படுத்தவும் மக்களை மேம்படுத்தவும் தனது படைப்பின் மூலம் வழிகாட்டுகிறார் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

****



ISBN 978-81-968802-1-7





கரிசல் இலக்கியத்தந்தையின் நினைவாக

கரிசல் களம்

'Along with the Sun' : A Profile

Prof Dr S Ramalingam






தமிழ்த்துறை
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

தமிழ் மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை
திராவிட பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம்

Prof Dr S Ramalingam
Joint Registrar-Languages
Dr MGR Educational and Research Institute
Maduravoyal, Chennai – 600 095
Email: jr-ph2@drmgrdu.ac.in
Cellphone: 9444542060

'Along with the Sun': A Profile



Ki Rajanarayanan has the unique ability to make the reader feel emotive even towards his so-called anti-heroes. There are only shades of grey to his writing, which in effect is brilliant as it gives the reader the opportunity to think and ponder. Edited by Ki. Rajanarayanan, one of the most acclaimed and influential writers in Tamil, these stories tell, with genuine affection and concern, of the lives of people living against the backdrop of the black soil land (கரிசல் நிலம்). Here the rain plays hide-and-seek, sometimes oppressing them with drought, sometimes with floods; caste and religion still play larger part of the social order, cattle and moneylenders decide the fate of populations.

"*Karisal Kathaigal*" is an anthology of short stories from the Karisal Seemai; hand-picked and edited by the writer Ki Rajanarayanan. This book is now in English : "*Along with the sun - Stories from Tamil Nadu's Black Soil Region*." The book was translated by Padma Narayanan. The Tamil Nadu Textbook and Educational Services Corporation, in a collaboration with Harper Perennial (an imprint of HarperCollins

Publishers), has translated and published the anthology of 20 short stories that explores the dark episodes of abject famine and drought against the backdrop of vibrant culture of Tamil Nadu's southern districts [கரிசல் நிலம்].

A unique anthology of short stories from the 'Karisal' or 'Black Soil' region of Tamil Nadu, edited by Ki. Rajanarayanan, one of the most acclaimed and influential writers in Tamil, these stories tell, with genuine affection and concern, of the lives of people living against the backdrop of the black soil land. Here the rain plays hide-and-seek, sometimes oppressing them with drought, sometimes with floods; caste and religion still form a large part of the social order; cattle and moneylenders decide the fate of populations; and local gods are a very real presence. Written by celebrated contemporary Tamil authors in a range of literary styles, these are stories that will resonate universally long after they are read.

Along With the Sun: Stories from Tamil Nadu's Black Soil Region is an anthology of 20 stories. Written about the people of a particular region, the stories cohere into a collective voice that presumably marks or known as 'Karisal literature' (கரிசல் இலக்கியம்). The stories have several stylistic similarities, such as an elliptical nature of introducing characters via their relationships to one another; characters who are quick to sorrow or lash out, and dramatic about how they do it; adhering to the virtues of writing how people speak; endings that arrive almost uniformly the reader expects them to and are usually bitter— or more appropriately, laced with salt.

Water, the search and wait for its arrival, is a tangible presence throughout the anthology. People are quarrelsome and gush forth with the emotion in an abundance their streams do not have. The sky without rain is "a deep hole without a drop of water".

Along with the Sun, the book begins with stories that are unremittingly bleak— the first two end, literally, in tears. Eventually, it settles with spaces where you can put down the sense of anticipatory dread that the stories have cultivated in the reader thus far. But not for long. For the most part it traffics in uneasy endings. These stories here are significant to Tamil literature and have been the subject of school syllabi and research for years. With this translation, they are available in English for the first time.

The stories which are a peek into these village paths and households lets the reader sneak into raw manifestations of inequality before broader conversations on these subjects seeped into the region. The landscape is riddled with belief in caste, gender roles, superstitions and religion, a seeming respite from the uncertainty beckoned by the unrelenting weather.

In 'Dry Leaves', the skilled writer has you empathising with the material plight of wife-beater Sankan, who cannot control the urine soaking through his veshti. Here is water, in reverse— a deluge from the sky in a scene reminiscent of the tortured fugue state Elena Ferrante's protagonist experiences in Days of Abandonment. In the story 'Arrival', a man is woken from his sleep by a voice that "pierces him like a mosquito bite" and the sweat from his skin "maps a picture on the ground". A sliver of a story by Gowrishankar about baby white cranes (Krauncha birds) caught in my throat like a shard of glass. 'Dearer than Life' is another standout, where a man given to fainting spells would rather risk death than stop working on thatching roofs, a task which lets him perch high from where he can view the dominant castes of the village as ants crawling beneath him.

The poetry in some of these lines is startling— even in translation, perhaps especially in translation. For instance, when people go to relieve themselves, the stench is described as "rising as high as a palm tree throughout the village". Translator Padma Narayanan does a wonderful job with lines like "Just as one picks out particles stuck between the teeth with one's tongue, they scraped out the grass stuck to the edges of the fields with small sickles and gathered enough…", which will leave a trace in readers' memory long after readers have turned the page.

Some of appreciation from the noted Tamil scholastic-authors have been provided hereunder to enable the readers to understand the value and enrichment of these 20 stories:

"*The black soil region and the lives lived on it are both equally miraculous. And it is a miracle that so many writers have sprung from this arid land. Ki Rajanarayanan, acclaimed writer and folklorist, has collected these stories which are all set in this particular landscape; he is also a unique person, I would,*

therefore, call this anthology a collection of wonders." <<< Perumal Murugan

"Ki Rajanarayanan, the Pitamah of contemporary of Tamil literature, brought into Tamil households stories of the black soil of his region. The outstanding stories chosen by him for this collection are as sublimely forceful as the Thamirabarani river that flows through the land." <<< Ambai

List of stories in the Anthology:

S.No.	Stories	Authors
01	Bullocks	A Muththanandam
02	Dry Leaves	Cho Dharman
03	Ruin	Konangi
04	Leftovers	Thidavai Ponnuchami
05	The Wretched Bulls	Suyambulingam
06	A Fierce Love for One's Soil	Ve Sadasivan
07	Helpless	Azha Krishnamurthy
08	The Solitary Householder	Po Azhugukrishnan
09	Gruel for Rain	C Kasirajan
10	Cooked Rice	K Ramasami
11	Dearer than Life	Melanmai Ponnusamy
12	Arrival	Pon Raja
13	Saraswathi Pooja	Dhanushkodi Ramasami
14	Old Woman Komboothi	Ra Azhagarsami
15	The Slaying of Krauncha Birds	Gowrishankar
16	Sharing	Veera Veluchami
17	A Way of Life	Poomani
18	Women with Their Flowers on their Thalis	Paa Jeyaprakasam
19	Credibility Established	Ki Rajanarayanan
20	Azhagammal	Ku Alagirisami

About the Authors:



Ki Rajanarayanan (1922 - 2021) is an acclaimed writer and folklorist. He started writing in the late 1950s. With his firm conviction that the spoken language was the correct language to use while writing, he was a pioneer in the introduction of dialect in his works. He has over thirty books to his credit, the most recent being the novel Andarandap Pakshi (The Andaranda Bird).

In 1991, he was honoured with the Sahitya Akademi Award for Gopalapurathu Makkal, a novel about a community of Telugu-speaking people who had migrated to Tamil Nadu. He was also the recipient of the Ilakkiya Chinthanai Award in 1979, as well as a Literary Achievement Special Award from the Toronto-based Tamil Literary Garden in 2016. From 1998 to 2002, he was a member of the General Council and Advisory Board of the Sahitya Akademi. As a member of the Communist Party of India, he was twice imprisoned in the late 1940s and early 1950s, for his support for and participation in peasant rebellions. To mark his sixtieth birthday celebrations in 1982, he embarked on the publication of this anthology, Karisal Kadaikal. His centenary in 2021 was grandly celebrated by the government of Tamailnadu.



Padma Narayanan (b. 1935) is a short-story writer and the translator of numerous works of literary fiction from Tamil to English, including a collection of stories by the noted writers Imayam , Aadhavan, Ramaseshan, La. Sa. Ramamritham, Indira Parthasarathy, Ramamritham, and two collections of short stories by Appadurai Muttulingam. Her work has appeared in Agni (Boston), Words Without Borders, and elsewhere. Her translation of Dilip Kumar's 'The Story of a Clerk', published in Caravan in 2012, inspired a celebrated movie adaptation, Nasir (2020). She has also translated several books from English into Tamil, and has written and spoken on the subject of translation. She lives in New Delhi.

The following web links are recommended for readers:

A] To read the Book " Along With the Sun: Stories from Tamil Nadu's Black Soil Region"

https://www.google.co.in/books/edition/Along_with_the_Sun/VYQHEAAAQBAJ?hl=en&gbpv=1&dq=book+++%27along+with+the+sun%27&printsec=frontcover


B] The following web links may be used to buy the book:

1]https://harpercollins.co.in/product/along-with-the-sun-paperback/

2]https://pagdandi.org/product/along-with-the-sun-ed-ki-rajanarayanan/


3]https://www.exoticindiaart.com/book/details/along-with-sun-stories-from-tamil-nadu-s-black-soil-region-naz934/

****



https://www.kirajanarayanan.com/

கோபல்ல கிராமம்



கி. ராஜநாராயணன்

கோபல்ல கிராமம்

காலச்சுவடு பதிப்பகம்

கோபல்ல கிராமம்

எங்கள்

தகப்பனாரைப் பெற்ற

பாட்டியார்

ராயங்கல அக்கம்மாள்

அவர்களுக்கு

முன்னுரை

கோபல்லம் என்ற கிராமத்தினுள்ளே . . .

1979இல் புதுமைப்பித்தனின் காஞ்சனை தொகுதி படிக்கக் கிடைத்தது. அடுத்ததாக, ஒரு நண்பனின் ஆலோசனையின் பேரில் கோபல்ல கிராமத்தை எடுத்துப் படித்தேன். அமெரிக்கன் கல்லூரி நூலகத்தில் இதுபோன்ற நூல்கள் ஏகப்பட்டவை இருந்தன. ஒருவேளை, அந்தச் சமயத்தில் இரண்டாவது புத்தகமாக மௌனியின் கதைகளைப் படிக்க நேர்ந்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று சிலசமயம் நினைத்துக்கொள்வேன். திகைத்துப் போய் மிரண்டு விலகவும் நேர்ந்திருக்கலாம். மாற்று எழுத்தின்பால் எனக்கு உண்டான ஆர்வத்துக்கு ஆரம்பக் காரணங்களில் ஒன்றாக கோபல்ல கிராமம் இருந்தது இனிமையான ஒரு தற்செயல் என்று கருதுகிறேன். அதுவரை நான் படித்தவை நாவல் என்ற பெயரில் தொகுக்கப்பட்ட தொடர்கதைகள்தாம் என்று உடனடியாகப் புரிந்தது. புதுமைப்பித்தனை விடவும் கி. ராஜநாராயணனிடம் கூடுதலாக இருந்த ஒரு அம்சம், அவர் எழுத்தாளர் என்ற பீடத்திலிருந்து என்னுடன் உரையாடவில்லை என்பது. கோபல்ல கிராமவாசிகளில் ஒருவராக இருந்து தமது வம்சக் கதையைச் சொல்லும் கதைமாந்தராகவே தென்பட்டார்.

கதைமாந்தர்களில் ஒருவர் நூலுக்குள்ளிருந்து வெளியேறி கோபல்ல கிராமத்தை வாசிக்க நேர்ந்தால் இந்த நூலின் ஒரு வரியும் ஒரு அம்சமும் அவருக்குப் புரியாமல் போகாது. தீவிர வாசகனுக்கான உள்ளோட்டமும், மேலோட்டமான வாசிப்புக்கும் உகந்த எளிமையும் உள்ள ஆபூர்வமான வசீகரம் கொண்ட எழுத்து.

வாசிப்பவனின் தோள்மீது கைபோட்டுக்கொண்டு இயல்பான குரலில் பேசும் எழுத்து. பேச்சு வழக்குக்கும் எழுத்து மொழிக்குமான இடைவெளியை மெல்லமெல்ல அழித்துச் செல்லும் எழுத்து. எளிமையாகவும் நேரடியாகவும்

கதை சொல்வதால், மொழியின் அழகிலும் லாகவத்திலும் சமரசம் செய்துகொள்வதில்லை கி.ரா.

. . . இப்படியாக ராவும் பகலும் அந்த ஊருணியில் உயிர் தின்று உயிர் வாழும் காரியம் நடந்த வண்ணமிருக்கும் . . .

. . . ஜம்புத்தட்டைகள் கொழுத்து வளர்ந்து கம்மங் கதிர்கள்போல் கதிர் வாங்கியிருந்தது. கொஞ்ச தூரத்தில் ஒரு கதுவாலிப் பறவை 'குட்டிச் சேர் ஆ குட்டிச் சேர்' என்று கத்தியது . . . ஜம்புத்தட்டையையும் கதுவாலிப் பறவையையும் அறியாத வாசக மனமும் கூட இந்தச் சித்தரிப்பில் திளைக்கத்தான் செய்யும்.

துலுக்க ராஜாவுக்கு அஞ்சி தெற்கு நோக்கி ஓடிவரும் தெலுங்குக் குடும்பம் கோபல்லம் என்ற புதிய கிராமத்தை உருவாக்கி நடைமுறையாக வாழ்ந்து வரும் காலகட்டம். ஊருக்கு வெளியில் உள்ள ஊருணியில் ஒரு கொலை நடந்துவிடுகிறது. கொலைகாரனை விசாரித்துக் கழுவேற்றுகிறார்கள். பிற்பாடு, பாரதம் முழுக்கப் பரவிய ஆங்கிலேயர் கோபல்ல கிராமத்துக்கும் வருகை தருகிறார்கள்.

இவை நிகழ்ந்துகொண்டிருக்கும்போதே, கோட்டையார் குடும்பத்தின் மூத்த ஜீவனான மங்கத்தாயாரு என்கிற பூட்டியின் நினைவுகூரலாகப் பூர்வ கதை விரிகிறது.

பூட்டியின் விவரிப்பில் இறந்த காலத்திலும், கோவிந்தப்ப நாயக்கரின் பார்வையில் நிகழ்காலத்திலுமாக ஒரே சமயத்தில் இரு காலங்களில் நிகழ்கிறது கதை. நிகழ்காலம் திறந்த விதமாக நடப்பியல் சார்ந்தும், இறந்த காலம் மர்மம் சூழ்ந்ததாக தேவதைக் கதைகளின் கனவுத் தன்மை கொண்டும் விளங்குகின்றன.

வாசிப்பவனுக்குள்ளிருக்கும் முதிர்மனத்தையும் குழந்தை மனத்தையும் ஒரே சமயத்தில் கிளர்த்துகிறது கதையின் போக்கு.

துலுக்க ராஜாவிடமிருந்து தப்பி ஓடி வரும் வழியில் மங்கத்தாயாருவின் குடும்பத்தை நதியின் மறுகரை சேர்ப்பதற்காக கிளை வளைந்து ஏந்தும் எதிர்க்கரை அரச மரமும், இவர்கள் ஒரு கோயிலுக்குள் பதுங்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் பெண்தெய்வமொன்று அடைக்கலம் தருவதும், இவர்களைத் தேடிவந்த குதிரைவீரர்களின் எதிரில் இருந்தும் அவர்கள் பார்வைக்கு இவர்கள் தட்டுப்படாமல் போவதும், வேறொரு துலுக்க ராஜாவின் துரத்தலுக்கு அஞ்சி ஓடும் துளசி என்ற சிறு பெண்ணை பூமி பிளந்து விழுங்குவதும், கிராமத்தை நிறுவுவதற்காகக் காட்டை எரிக்கும் சந்தர்ப்பத்தில், 'சுத்தக் கட்டியில் செய்ததைப் போன்ற வெள்ளியின் நிறத்தில், கைப்பருமனும் ஒன்றரைப் பாகம் நீளமுள்ளதாக' வெளியே வந்து ஓடும் பாம்பும், நடப்பியலின் தர்க்கத்துக்கு அப்பால் நடப்பவை என்றாலும் கதையோட்டத்தின் ஈர்ப்பில் இவற்றில் எதையுமே நம்புவதற்குத் தயக்கமில்லை வாசகனுக்கு.

மங்கத்தாயாருவின் சுற்றத்தாரைக் காக்கும் பெண்தெய்வமும் பூமி விழுங்கிய துளசி என்ற சிறுமியும் ஒருவரேதானோ என்ற ஐயமும் எழத்தான் செய்கிறது.

ஒரு ஜனசமூகம் தன் பூர்விக நிலத்தை விட்டு நிர்ப்பந்தத்தின் பேரில் இடம்பெயரும் வரலாறு, அதன் சமூகவியல் அழுத்தங்களை உதிர்த்து ஒரு தேவதைக் கனவு போல விவரிக்கப்படுகிறது. மங்கத்தாயாருவின் சுற்றத்தாரைத் துரத்திய துலுக்க ராஜா யார், அவன் எந்த ராஜ்யத்தை ஆண்டவன், எந்தக் காலகட்டம் என்பதுபோன்ற வரலாற்றுத் தகவல்கள் விடுபட்டிருக்கின்றன. பூர்வகதையின் புகைமூட்டத்துக்கு உதவிகரமாக இருக்கும் அம்சம் இது.

கதைமாந்தருடன் படைப்பாளிக்கு எவ்வளவு நெருக்கமும் வாஞ்சையும் இருக்கிறதோ, அதே அளவு நெருக்கம்தான் வாசகனுக்கும் கதைமாந்தருக்கும் இருக்கும். இந்த நெருக்கம் வெளிப்படையாகத் தெரிவது அல்ல. ஆசிரியரின் புகாரற்ற விவரிப்பின் வழியாகவும், கதைமாந்தர் ஒருவருக்கொருவர் கொள்ளும் நேசத்தின் வழியாகவும் மௌனமாகத் தொற்றுவது.

தமது பரம எதிரியான கொத்த பாவையாவின் மந்தைப் புஞ்சையில் கம்மம் பயிர் அமோகமாக விளைந்திருப்பதைக் கண்டு வயிற்றெரிச்சல் கொள்ளும் பங்காரு நாயக்கர் இரவோடிரவாகக் கதிர்களை உழுது தள்ளிவிடுகிறார்.

அடுத்துப் பெய்த மழையில் கம்மம் பயிர் பல மடங்கு அதிகமாகப் பொங்கிப் பெருத்துவிடுகிறது. கெடுதல் நினைத்துச் செய்திருந்தாலும் விளைவு நல்லதாக இருந்ததால் கிராமம் அவரை மன்னிக்கிறது.

கோட்டையார் வீட்டில் கொள்ளையடிக்க வந்த தீவட்டிக்காரர்கள் தோற்றுத் திரும்பிப் போகும் போது 'கிடையில் இருக்கும் ஆடுகளில் நல்ல கொழுத்த கிடாயாக நாலு கிடாய்களைப் பிடித்துக்கொண்டு' போய்விடுகிறார்கள். அவர்களில் நாலுபேரையாவது கொன்று புதைத்திருந்தால் இப்படி நடந்திருக்குமா என்று கீதாரி கோபப்படுகிறார். ஊர்க்குடும்பன் அக்கையாவையும் அக்கையா கிருஷ்ணப்ப நாயக்கரையும் பார்க்கிறார்கள். கிருஷ்ணப்பர் தமது தமையன் கோவிந்தப்ப நாயக்கரை ஏறிட்டுப் பார்க்க சிரமப்படுகிறார். திருடவருகிறவர்கள் யாரையும் கொல்லக் கூடாது என்று ஏற்கனவே ஒரு முடிவு எட்டப்பட்டிருக்கிறது என்பது வாசகனுக்கு மறைமுகமாகத் தெரிவிக்கப்படுகிறது.

கழுவேற்றப்பட்ட கொலைகாரன் தாகம் என்று தவிக்கும்போது, 'தவிச்ச வாய்க்குத் தண்ணீர் தரக்கூடாதுண்ணு யார் சொன்னா. கொடு. ஓடு ஓடு.' என்கிறார் கோவிந்தப்ப நாயக்கர்.

கோபல்ல கிராமம் கெட்டவர்களே இல்லாத ஆதரிச கிராமமாக விளங்குகிறது. நல்ல மனசு திரவத்தி நாயக்கர் என்றே ஒரு பாத்திரத்திற்குப் பெயர். தீயவர்களாகச் சித்தரிக்கப்படும் ஓரிருவரும் கிராமத்துக்கு அந்நியர்களாய் இருக்கிறார்கள் — துலுக்க ராஜா, கழுவன் போன்றவர்கள் மாதிரி.

என்றாலும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் 'மனுசப்பயல்கள்' மேல் விமர்சனம் பதிவாகிறது. உடும்பையும் குழிமுயலையும் பிடிக்கும் தந்திரோபாயங்களையும் உணவாகவும் மருந்தாகவும் அவற்றைப் பயன்படுத்துவதையும் இயல்பாக விவரித்துச் செல்கிறார் ஆசிரியர். ஆனால், வேறு மாட்டுக்குப் பிறந்த கன்றைத் தன்னுடையது என இன்னொரு பசு நம்பிப் பால்கொடுக்க வைப்பதற்கு வாகடம் புல்லையா ஒரு தந்திரம் செய்கிறார். 'தழையிறது' என்று அதற்குப் பெயர்.

வேத்துக் கன்றை தனது கன்றாக நினைத்து பாசத்தோடு நக்கிக்கொடுக்கும் பசுவைப் பார்த்து அந்த கிராமத்து மனிதன்கள் சிரிப்பார்கள். அந்தச் சிரிப்பில் பெண்டுகளும் சேர்ந்துகொள்வாள்கள்.

எழுத்தின் போக்கு தனது மையத்தை விட்டு விலகுவது இயல்பாக நிகழ்கிறது. சொல்முறை அதற்கு உதவுகிறது.

ஆசிரியர் சொல்லும் பகுதி எது, கதையை நவில்வோன் சொல்லும் பகுதி எது, கதை மாந்தர் சொல்லும் பகுதி எது என்ற மயக்கம் நூல் முழுவதும் விரவிக் கிடக்கிறது. நவீன எழுத்து சகஜமாகக் கைக்கொள்ளும் உருவக் குழப்பமும், மொழிப் புழுக்கமும் இல்லாமலே இது நிகழ்ந்துவிடுகிறது. எளிமை என்ற பெயரில் மொழி தட்டையாகவும் நகர்வதில்லை.

ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை போலத் தென்படும் உதிரிச் சம்பவங்கள் பலவும் சூட்சுமமாகக் கோக்கப்பட்டு கோபல்ல கிராமம் என்ற பெருநிகழ்வாக உருவாகின்றன. கதை தன்னிச்சையாக நகர்ந்து கொண்டே போகிறது —ஆசிரியர் கையை மீறி.

வாஸ்தவத்தில் யாருடைய கதை இது, கம்மாளப் பெண்ணைக் கொன்றதற்காக தீரவாசத்துக்காரன் கழுவேற்றப்பட்டதைச் சொல்லவந்த கதையா, துலுக்க ராஜாவின் பெண்ணாசைக்குத் தப்பி தெற்கே ஓடிவந்து குடியமர்ந்த நாயக்கர்களின் கதையா, அல்லது நாவல் தொடங்கும்போதும் முடிந்த பின்னும் உயிருடனிருக்கும் பூட்டி மங்கத்தாயாருவின் வம்சம் தழைத்த கதையா என்று அறுதியாகச் சொல்வதற்கில்லை. நிகழ்வுகளின் கால வரிசை குலையும்போது வாசிப்பின் சுவாரசியம் மேலும் அதிகரிக்கிறது.

நடைமுறை வாழ்வையே என்றோ நடந்தது போன்ற தொலைவுடன் சொல்ல முற்படும்போது நடப்பியல் வாழ்வே கர்ணபரம்பரைக் கதையின் சாயல் கொள்கிறது. அன்றாட நிகழ்வுகளுக்குள் இருக்கும் கதைத்தன்மையைப் பறித்தெடுக்கும் யுக்தி அற்புதமாகப் பதிவாகியிருக்கும் சந்தர்ப்பம் என்று கழுவனை விசாரிப்பதற்காகக் கூடும் பஞ்சாயத்துக் காட்சியைச் சொல்லலாம்.

பஞ்சாயத்துக்கு வந்து சேரும் ஒவ்வொருவரும் அவர்களின் பட்டப்பெயர்களுடனும், அவை சூட்டப்பட்டதற்கான காரணங்களுடனும் அறிமுகமாகிறார்கள். ஒவ்வொருவரையும் சுற்றி தனித்தனியான கதை மையங்கள் உருவாகின்றன. இவற்றின் வழியாக கோபல்ல கிராமம் பற்றிய பெருங்கதை பின்னப்படுகிறது.

கோபல்ல கிராமத்துக்குள் ஆங்கிலேயரின் வருகை சொல்லப்பட்டதற்கு அடுத்த அத்தியாயத்தில் விட்டில்கள் படையெடுத்து உண்டாக்கும் அழிவு விவரிக்கப்படுகிறது. விட்டில்கள் ஆங்கிலேயருக்குக் குறியீடாக மாறுவதும் வெகு இயல்பாக நிகழ்கிறது.

90களின் ஆரம்பத்தில் தமிழில் வந்திறங்கிய சில இலக்கியக் கோட்பாடுகள் முன்வைத்த வாசிப்பின் இன்பம், மையமற்ற எழுத்து, நேர்கோட்டிலல்லாத எழுத்து போன்ற கருதுகோள்கள் இந்த நூலில் அதற்கு இருபது வருடத்துக்கு முன்பே செயல்பட்டிருக்கிறது. சமூகவியல் பார்வையும் இலக்கிய விமர்சனமும் கூட்டாக இயங்கி உருவாக்கும் கோட்பாடுகளை விடவும் படைப்பாளியின் நுண்ணுணர்வு மேலாண்மை கொண்டது என்பதும் உறுதி செய்யப்படுகிறது.

ஒரு கதை எப்போது நாவலாகிறது என்பது மிகப் பெரிய கேள்வி. நாவல் என்ற அகண்ட தளத்தின் நிபந்தனைகள் அழுத்தமானவை. நாவல் முழுவதும் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ ஒரு தத்துவ விசாரம் ஓடுவது; கதையின் பரப்பில், கதை நிகழும் கால = வெளிப்பரப்பில் இருக்கும் மாறுபாடுகளின் வீச்சும் விந்நியாசங்களும் என்று ஆரம்பித்து அவற்றைப் பட்டியலிட்டுக்கொண்டு போகலாம்.

ஒரே குடும்பமாக ஓடிவந்தவர்கள் ஓரிரு தலைமுறைகளுக்குள் பல குடும்பங்களாகப் பிரிந்து விடுவதும், அவரவருக்கான நிலத்தை உடமையாக்கிக் கொள்வதும் பிற குடும்பங்களைவிடவும் கோட்டையார் குடும்பம் பொருளாதார ரீதியில் மேலானவர்களாக உருவாவதும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கும் பட்சத்தில் கோபல்ல கிராமத்தின் நரம்பு மண்டலம் வேறு ஒரு கோணத்தில் பதிவாகியிருக்கும்.

உண்மையில், விவரிக்கப்பட்டிருப்பது கோபல்லம் என்ற கிராமத்தின் கதை என்பதைவிட மங்கத்தாயாருவின் குடும்பக் கதை என்றுதான் சொல்லவேண்டும். இந்தக் குடும்பத்துக்கும் கிராமத்தில் குடியமர்த்தப்படும் தச்சர்கள் கொல்லர்கள் போன்ற பிற சாதிகளுக்கும் உள்ள உறவு நிலைகள் விவரிக்கப்படவில்லை. அவ்வாறு விவரிக்கப்படும்போது இந்தக் குடும்பத்தின் இன்னொரு முகம் தெரிவதற்கு வாய்ப்பிருக்கிறது. அப்போது கதையின் போக்கு வேறு திசையில் நகர்ந்து ஆழம் பெறவும் வாய்ப்புண்டு.

இன்றைய பின்னோக்கிய பார்வையில், தமிழ் நாவல் வந்து சேர்ந்திருக்கும் இடத்தை முன்னிட்டு, நாவலின் இலக் கணம் எனக்குள்மாறிஇருக்கிறது. என்றாலும் கோபல்ல கிராமம் ஒரு முன்மாதிரியான நெடுங்கதை என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. கி.ரா. வின் பிற படைப்புகளிலிருந்தும் தனித்துவமான படைப்பு இது.

சொல்லலின் சுவாரசியத்தில், அறியாத ஊரின் வழிகாட்டி போல ஆசிரியர் பேசத் துவங்கும் இடங்கள் கதையோட்டத்தைத் தடைசெய்யும் விவரணைகளாக மாறுகின்றன. கிராமங்களில் பொதுவாக மனிதர்களுக்குத் துலங்கும் பெயர்கள் வந்து சேரும் விதம், குந்தம் என்ற கண் நோய் பற்றிய விவரிப்பு, சென்னா தேவியின் சிரிப்பு வகைகள் இவற்றை உதாரணமாகச் சொல்லத் தோன்றுகிறது.

நாட்கள் மனப்புன்னை ஆற்றினாலும் நினைப்பு என்னும் கோல் படும்போது அதில் மீண்டும் ரத்தம் கசிகிறது . . .

பெண்ணுக்கு அநீதி என்றால் அவர் இப்படித்தான் கொதிப்பார். சாந்த மூர்த்தியான ராமனை தெய்வமாக வழிபட்டாலும், அவர் லக்ஷ்மணன் போல கோபியாகவே இருக்கிறார் . . .

என்பது போன்று, கதைமாந்தர்களில் ஒருவராகவே தென்படும் கதைசொல்லி, நேரடியாகவும் தத்துவத்தொனியிலும் குறுக்கிடும் இடங்களும் உணர்வொன்றிய வாசிப்பைத் தடை செய்வதாகவே இருக்கின்றன.

அக்கையாவின் வெற்றிலைக் குறும்பில் சிக்கிக்கொண்ட சுந்தரப்ப நாயக்கர் எழுத்தின் வேகத்தில் கிருஷ்ணப்ப நாயக்கராக மாறுகிறார்.

என் பதின்பருவத்தின் இறுதிப் பகுதியில் கோபல்ல கிராமத்தை வாசித்தேன். ஏகப்பட்ட கதாபாத்திரங்களும் சம்பவங்களும் வரிசைகட்டி வரும் நூலில் கோவிந்தப்ப நாயக்கர் தமக்குத்தாமே உருவாக்கிக்கொள்ளும் பிரமைகள் பற்றிய பகுதியைப் படித்தபோது அடைந்த பரபரப்பு இன்னமும் நினைவிருக்கிறது. ஒரு மிகப்பெரிய கூட்டுக் குடும்பத்தின் தலைவராகவும், ஊரின் தலையாய மனிதராகவும் இருப்பவர் அவர்.

திடீரென்று மனோராஜ்யத்தில் இறங்கி, தனது இரண்டு கண்களும் குருடாகிவிட்டதாகவும் தன்னுடைய சகோதரர்கள் தன்னைக் கைவிட்டு விட்டதாகவும் தான் ஏழையாகி அநாதையாகிவிட்டதாகவும் இந்த இலைகளைத் தைத்து விற்றுத்தான் பிழைப்பதாகவும் நினைத்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு கண்ணீர் விட்டுக்கொண்டே தைப்பார்.

என்னுடைய இயல்பான மனோபாவம் காரணமாகவும் குடும்பச் சூழ்நிலை காரணமாகவும் வயதின் காரணமாகவும் விதவிதமான உணர்ச்சிச் சந்திகளைக் கற்பிதமாக உருவாக்கிக் கொண்டு அவற்றில் மிதந்து மிதந்து நான் தப்பிக்கொண்டிருந்த நாட்கள்.

கோவிந்தப்ப நாயக்கருடன் எனக்கு ஆழமான பிடிப்பு உடனடியாக உருவாகிவிட்டது. பிராயம் காலகட்டம் சமூக பொருளாதார வாழ்க்கைச் சூழல் என்பனபோன்ற பல்வேறு அம்சங்களின் வழியாக தடைச்சுவராக எழுந்து நின்ற வேறுபாடுகள் யாவும் ஒரே நொடியில் தகர்ந்துவிட்டன. என்னுடைய நகலாக கோபல்ல கிராமத்துத் திண்ணையில் அவர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் என்று பட்டது.

இலக்கியத்தின் செயல்பாடு பற்றியும் படைப்புநிலையின் கூர்மை பற்றியும் அடிப்படையான ஒரு அம்சம் புலப்பட்ட சந்தர்ப்பம் அது.

யுவன் சந்திரசேகர்

(காலச்சுவடு பதிப்பகத்தின் கிளாசிக் வரிசைப் பதிப்புக்காக எழுதப்பட்ட முன்னுரை)


1

கிராமம் ஆழ் . . . ந்த தூக்கத்தில் லயித்திருந்தது.

நிலவு பட்டாய்ப் பிரகாசித்துக் குளுமையாய்க் காய்ந்து கொண்டிருந்தது.

மேல் காற்று அப்பொழுதுதான் சற்று அமர்ந்திருந்தது.

வெகு தூரத்திலிருந்து தினமும் பறந்து வரும் பழ வெளவால்கள், குளத்தங்கரை அத்தி மரங்களில் வயிறு முட்டப் பழங்கள் தின்றுவிட்டு, அவைகளின் இருப்பிடத்துக்குப் புறப்படுகிற வேளை.



இரவு ஜீவராசிகளின் அரவம் சன்னஞ்சன்னமாக ஒடுங்கிக்கொண்டு வந்தது. பூனைகள் வேட்டையை முடித்துக்கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தன. கூகை, ஆந்தை முதலிய பறவைகள் பொந்துகளுக்குத் திரும்ப ஆரம்பித்துவிட்டன. பெருச்சாளிகள் அவைகளின் செலவை நோக்கித் திரும்ப ஆரம்பித்துவிட்டன. ராமுச்சூடும் பாடிய சுவர்க் கோழிகளும் வாய் ஓய்ந்து தூங்க ஆரம்பித்துவிட்டன. நாய்கள் அவைகளது காவல் வேலையை முடித்துக்கொண்டு சுருண்டு படுக்கத் துவங்கிவிட்டன. இரவு தூங்க ஆரம்பித்துப் பகல் விழிக்கப் போகும் நேரம்.

பகல் ஜீவராசிகளின் முன்னோடியான சேவல் சிறகுகளைத் தட்டி கிராமத்தை விழிக்கச் சொல்லிக் கூவியது. கரிச்சானும் ஆள்க்காட்டியும் ஏற்கனவே சத்தங்கொடுக்கத் துவங்கியிருந்தது. காகங்களும் கரைய ஆரம்பித்துவிட்டன.

கோவிலில் சங்கும் நகராவும் முழங்கியது.

முடிவுத்தூக்கத்தில் சோம்பல் முறித்துக் கண்விழித்தது கிராமம்.

முனகும் ஒலிகள்.

ஒட்டியிருந்த உடம்பைப் பிரித்துக் கொள்ளும்போது ஏற்படும் செல்லச் சிணுக்கட்டங்கள்.

பச்சிளம் குழந்தைகள் தாலியுடனோ மறு காம்பை நெருடிக்கொண்டோ முலை உண்ணும் மெல்லொலிகள்.

பெரியவர்கள் சிறுசுகளை எழுப்பும் அன்பான கண்டிப்புக் குரல்கள்.

கதவுகள் கிறீச்சிடும் ஒலிகள்.

செருமல்கள்; இருமல்கள்.

சாணிப்பால்கொண்டு முற்றம் தெளிக்கும் சத்தங்கள்.

கன்றுகளின் பால்தாகக் குரல்கள்; அதை வாங்கி எதிரொலிக்கும் தாய்மாடுகளின் கத்தல்கள்.

ஒரு ஜீவ இயக்கத்துடன் கிராமம் பூரணமாக விழித்துச் செயல்பட ஆரம்பித்துவிட்டது.

பெரியவர்கள் 'மந்தை'க்குப் போகிறார்கள். குழந்தைகள் 'தெரு'வுக்குப் போகிறார்கள். கிராமம் மலம்கழித்து சுத்தப்படுவதின் மூலம் சூழல் அசுத்தமாகிறது.

தெருவில் வந்து நின்றுகொண்டு தன் குழந்தையைப் பெயர் சொல்லி பலமாகக் கூவி அழைக்கிறாள் ஒருதாய்.

பொதுக்கிணற்றில் தண்ணீரைத் தட்டி சேந்தும் 'திடும்' சப்தங்கள். மாற்றுக்குடங்களை எதிரே பெற்றுக் கொள்கிறவர்களோடு சிறிய சம்பாஷணைகள்.

வீதியில் நிறுத்தியுள்ள மொட்டை வண்டியின் இருப்புச் சட்டத்தில் சாய்ந்து நின்றுகொண்டு ஒரு விடலைப் பிள்ளை குச்சியால் பல் தேய்த்துக்கொண்டே தண்ணியெடுக்கும் பொம்பிள்ளைகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

தொழுவங்களிலுள்ள கல் உரல்களில் பருத்திவிதை அறைபடும் ஓசை கேட்கிறது.

இளஞ்சூரியனின் செவ்வொளியில் இப்பொழுது கிராமம் குளித்துக்கொண்டிருக்கிறது.

குழந்கைகள் அன்றைய விளையாட்டை விளையாட ஆரம்பித்தனர். பெரியவர்கள் அன்றைய வேலைகளுக்குச் செல்ல ஆரம்பித்தனர்.

ஊரின் மேலத்தெருவிலுள்ள அந்த மாடி வீட்டைத்தான் கோட்டையார் வீடு என்று சொல்லுகிறது. கோட்டை கட்டி ஆண்டதினால் அந்தப் பெயர் வரவில்லை; அந்த வீட்டைச் சுற்றி கோட்டைச்சுவர் கட்டியிருந்தார்கள் ஒரு காலத்தில். அதனால் அந்த வீட்டாரை ஊரிலும் பக்கத்திலும் கோட்டை யார் என்று அழைத்தார்கள்.

ரொம்பத் தாட்டியமாய் வாழ்ந்த குடும்பம். இப்பொழுது, சிதிலமடைந்த வீடும் இடிபாடுகள் அடைந்த கோட்டைச் சுவரும் ஏதோ புராதனச் சின்னங்கள்போல் சோகமாய் நின்றுகொண்டிருந்தன. அந்தக் காரை வீடு கருப்பு நிறமாகிவிட்டது. மழைக்காலங்களில் அது இன்னும் கருப்பாகத் தெரியும். நத்தமண்ணினால் கட்டப்பட்ட கோட்டைச்சுவரில் பச்சை வெல்வெட் மாதிரி பாசி படர்ந்திருக்கும்.

வீட்டின் மாடியில் யாரும் குடியிருப்பு இல்லை. அதில் காட்டுப்புறாக்கள் வந்து தன்னிச்சையாக அடையும். கோட்டை யாருக்கு இதில் லாபம் உண்டு. விருந்தாளிகள் யாராவது வந்த அன்று கறிக்கு சதை நிரம்பிய புறாக்குஞ்சுகள் கிடைக்கும்.

ஒரு காலத்தில் வீட்டைச் சுற்றிலும் பெரிய பெரிய மரங்கள் நின்றதுண்டு. இப்பொழுது அவ்வளவையும் வெட்டி விறகாக்கி 'சாப்பிட்'டாகிவிட்டது.

அந்தத் தெருவின் வழியாக இப்போதும் போகும் கிராம மக்கள் பவ்யமாக நடந்து செல்வார்கள். அப்படிச் செல்லும்போது அவர்களுடைய பார்வையில், ஒட்டிய வயிறும் சிறுத்த இடையும் பசியினால் ஒளிரும் கண்களும் கொண்ட கோட்டையார் வீட்டு ஆட்கள் தட்டுப்படுவார்கள்.

எவ்வளவுதான் நொடித்துப்போனாலும் அவர்களிடம் உள்ள காம்பீர்யம் இன்னும் குறைந்த மாதிரி தெரியவில்லை. வீட்டுக்கு உள்ளே அவர்கள் நடந்து திரியும்போது உடம்பை தொய்வாகத்தான் வைத்துக்கொண்டு நடக்கிறார்கள். வேத்து ஆட்கள் முன்பு மார்பை நிமிர்த்தி மூக்கைச் சற்றே விடைத்துக்கொண்டு தக் தக் என்றுதான் அடிவைத்து நடப்பார்கள்.

வீட்டின் தலைவாசல் நிலையில் மரத்தில் செதுக்கப்பட்ட சங்கு சக்கரமும் நாமமும் பெரிதாகத் தெரிகிறது.

முற்றத்தைத் தாண்டி உள்ளே போனால் விசாலமான நீண்ட தாழ்வாரத் திண்ணை. அதன் இடதுபக்கத்தில் ஆள் உயரத்துக்கு ஒரு பெரிய்ய ஒழுக்கரைப்பெட்டி. அதன் இரண்டு கதவுகளிலும் பித்தளையினால் செய்து பதிக்கப்பட்ட சங்கு சக்கரமும் நாமமும். அந்தப் பெட்டிக்குள் ஒரு காலத்தில் விலைமதிக்க முடியாத நவரத்தினங்கள் பதித்த பொன் ஆபரணங்கள் நிறைந்திருந்தன. இப்பொழுது எருமைத்தோலினால் முறுக்கப்பட்ட உழவுவடங்களை எலிகள் கடித்துவிடாமல் இருப்பதற்காக — வைத்து மூடியிருக்கிறார்கள்.

பிரதானவாசலுக்கு நேராய் இப்போதைய வீட்டின் அதிகாரியும் மூத்தவருமான மணியம் அரசப்பநாயக்கர் கல்த்தூணில் சாயாமல் நிமிர்ந்து உட்கார்ந்திருக்கிறார். காலையில் வந்து உட்கார்ந்தவர்; மதியம் அடித்திரும்பியும் கூட அதே நிலையில் அப்படியே உட்கார்ந்திருக்கிறார். விடியிறதிலிருந்து அடையறதுவரை அவரால் அப்படியே உட்கார்ந்திருக்க முடியும்.

தினம் தவறினாலும் ஊருக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வழக்குகள் அவரிடம் விசாரணைக்கு வருவது தவறாது. வியக்கும் பொறுமையுடன் காதுகொடுத்துக் கேட்டுக்கொண்டிருப்பார்.

கிராமத்தில் உருவாகும் வழக்குகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

(1) ஊர்ப்பொது கூடித் தீர்க்கும் வழக்குகள்.

(2) தனிநபர் செல்வாக்கின் கீழ் விசாரணைக்கு வரும் வழக்குகள்.

தரகு, மகிமை, காவல், அழிம்பு, நில ஆக்கிரமிப்பு, ஜாதியத் தகராறு, பொழிக்கல்லை நகட்டுதல், தீவைப்பு, தொள்ளாளித் தலைக்கட்டுத் தகராறு இன்னும் இந்த மாதிரியான பொது விவகாரங்களெல்லாம் ஊர்ப் பொதுச் சபை கூடித்தான் விசாரித்துத் தீர்ப்பு வழங்கும்.

குடும்பங்களுக்குள் ஏற்படும் உள்த்தகராறுகளான தாயாதிச் சண்டை, கணவன் – மனைவித் தகராறு, வயசாளிகளுக்கான அன்னவஸ்திரம், பாகப்பிரிவினை, சீதனத் தகராறு, இந்த மாதிரியான விவகாரங்கள்தான் தனிநபர் செல்வாக்குள்ளவர்களிடம் வரும். இவைகளில் சிக்கல் மிகுந்த வழக்குகள் சில சமயம் வந்துவிட்டால், நாள்க்கணக்கு மாசக்கணக்கு என்றாகிவிடும் தீர்த்துவைக்க. ஏனெனில் காலமே இவைகளுக்கான அருமருந்து. ஒரு நீதிபதியால் தீர்த்துவைக்க முடியாத விவகாரத்தைக் காலம் சரியாக்கி விடுவதும் உண்டு.

எல்லாவற்றிலும் கஷ்டம் இந்த வழக்குகளைக் கேட்டுப் புரிந்துகொள்வதுதான்! கிராமமக்கள் தங்கள் வழக்குகளைத் தெரிவிக்க அவர்களுக்கு என்று ஒரு தனியான 'சொல்நடை' வைத்திருக்கிறார்கள்; இதிலே நபருக்கு நபர் வித்தியாசம் வேறு!

வாதியானவன்(ள்) வழக்கைக் கேட்டுக்கொண்டு இருப்பவரையே தனது பிரதிவாதியாகப் பாவித்துக்கொண்டு(!) "பாவிப் பயலே, உனக்கு நா என்ன செஞ்சேன்? எனக்கு நீ இப்படிச் செய்யலாமா?" என்று கேட்பான்(ள்)!

பார்ப்பவர்களுக்கு, வழக்குரைப்பவனுக்கும் கேட்பவனுக்கும் தான் தகராறோ என்று நினைக்கத் தோன்றும்.

"நீ விளங்குவயா; தொலங்குவயா; நீ நாசமாத்தான் போவெ" என்றெல்லாம்கூட வழக்கைக் கேட்பவரைப் பார்த்துக் கேட்பார்கள்!

இப்படிச் சமயங்களில் அரசப்ப நாயக்கர் குறுநகை காட்டி, அபயமுத்திரைபோல் தன் இடதுகையை உயர்த்தி 'சற்றே அமைதிகொள்' என்பதுபோல அசைப்பார். பேசியவள் மௌனமாகி தலைவணங்கி ஒதுங்கி நின்றுகொண்டு வழியும் கண்களை முந்தானையால் துடைத்துக் கொள்வாள்.

வழக்குத் தீர்க்கும் விஷயத்தில் கோட்டையார்கள் உயர்ந்த பண்புகளைக் கைக்கொண்டு வந்தார்கள். அவருடைய 'பாட்டனாரின் பாட்டனார்' காலத்திலிருந்தே இது அவர்களுக்குக் கை வந்த கலையாக இருந்தது.

நாட்டில் அப்போது பாளையப்பட்டுகளின் ஆட்சி முடிந்து 'கும்பினி' யானின் ஆட்சி சரியாக அமுலுக்கு வராத நேரம். 'இடைவெளி'யான அந்த நேரத்தில் எங்கே கண்டாலும் ஒரே கலவரம், பீதி, தீவட்டிக்கொள்ளை, வழிப்பறி, களவுகள் இப்படியாக ஒழுங்கு குலைந்து விட்டிருந்தது. எந்த அரசும் அமுலில் இல்லாததால் மக்களே கூடி தங்களையும் உடமைகளையும் தற்காத்துக்கொள்ள வேண்டியிருந்தது. போக்கிரிகளையும் திருடர்களையும் மக்களே பிடித்து 'மக்கள் நீதி மன்றங்க'ளில் விசாரித்துத் தண்டனையும் வழங்கினார்கள்.

அந்தக் காலத்தில் ஒரு நாள் . . .

***

2

சரியான கோடைக்காலம்.

கயத்தாற்றுக்குப் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தில் தன்னுடைய வீட்டிலிருந்து கோபித்துக்கொண்டு கம்மாளர் ஜாதியைச் சேர்ந்த ஒரு பெண் மங்கம்மா சாலை வழியாக நடந்து வந்துகொண்டிருந்தாள்.

கிடை எழுப்புகிற நேரத்துக்கும் மேலாகிவிட்டது. தாங்க முடியாத வெயில். குடிக்க எங்கேயாவது ஒரு சிரங்கைத் தண்ணீர் கிடைக்காதா என்று சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே வந்தாள்.



இப்போது மாதிரியில்லை; எந்தப் பக்கம் திரும்பினாலும் அப்போது இந்தக் கரிசல் காடு அடிவானம் தெரியாமல் கருவை மரங்கள் அடர்ந்து தெரியும். பல இடங்களில் தொகுதி தொகுதியாக உடைமரங்கள் அழுங்கலான —வெண்ணிறத்தில் அந்த மரங்களின் மேலே மெத்தை விரித்தது போலப் பூக்கள் பூத்துத் தேன் மணத்துக்கொண்டிருந்தது. அந்த உடைமரங்களின் அடிப்பாகம் தெரியாதபடி கோவைக் கொடிகள் குத்திப் படர்ந்திருந்தன. உடைப்பூவின் தேன் மணம் ஒரு கிறக்கத்தைத் தருவதாயிருந்தது. சிள் வண்டுகளின் எச்சான ஸ்தாயையின் ஒலிநீளம் நிற்காமல் போய்க்கொண்டே . . . இருந்தது. கடும் வெக்கையினால் காற்று விரிவடைந்திருந்தது. அதனால் மிகச் சிறிய ஒலிகள் கூடத் தெளிவாகவும், இதற்கு முன்பு அந்த ஒலிகளைக் கேட்டதில்லையோ என்று எண்ணும்படியாகவும் காதில் விழுந்துகொண்டிருந்தது.

அவளுக்கு நாக்கு உலர்ந்துகொண்டே வந்தது. காதுகளில் நீண்டு தொங்கிக்கொண்டிருந்த பாம்படங்கள் வெளியே தெரியாமலிருக்கவும் வெயிலுக்காகவும் முக்காடு போட்டிருந்தாள். வியர்வையால் ஆடை தெப்பமாக நனைந்துபோயிருந்தது. தாகமும் தனிமையும் அவளை வாட்டியெடுத்தது. முக்காடு சரிந்து விழாமல் இருக்க பற்களால் கடித்துக் கொண்டிருந்ததால் அந்தத் துணி வேறு வாயை உலர்த்தியது.

இப்படி நடந்துவந்துகொண்டே இருந்தவளுக்கு ஒரு இடத்தில் வந்ததும் கிளிகளின் கெச்சட்ட ஒலி கேட்டது. கொஞ்சம் நின்று கவனித்தாள். சமீபத்தில் எங்கோ தண்ணீர் நிரம்பிய ஒரு சோலை இருக்கவேண்டும் என்று நினைத்தாள். அவள் நின்றிருந்த இடத்திலிருந்து இரண்டு ஒற்றையடிப் பாதைகள் கிழமேலாகப் பிரிந்து போனது. தொடர்ந்து சாலை வழியே போவதா ஒற்றையடிப் பாதையில் திரும்புவதா என்று அவளுக்கு விளங்கவில்லை. அவளை அறியாமலேயே அவளு டைய கால்கள் ஒற்றையடிப் பாதையில் நடந்தன.

நடந்துகொண்டே போன கொஞ்ச தூரத்துக்கெல்லாம் அங்கே தண்ணீர் இருப்பதுக்கான அடையாளங்கள் தெரிந்தன. செழிப்பான உயரமான

நவ்வாமரங்கள் தட்டுப்பட்டது. அவளைக் கண்டு தண்ணீர்க்கோழி ஒன்று தன் குஞ்சுகளுடன் புதருக்குள் மறைந்தது. ஜம்புத்தட்டைகள் கொழுத்து வளர்ந்து கம்மங் கதிர்கள் போல் கதிர் வாங்கியிருந்தது. கொஞ்ச தூரத்தில் ஒரு கதுவாலிப் பறவை "குட்டிச்சேர் ஆ குட்டிச்சேர்" என்று கத்தியது.

அந்தப் பாதை அவளை ஒரு ஊருணிக்குக் கொண்டு வந்துவிட்டது. அந்த ஊருணியை ஒட்டித்தான் அந்த இடத்தில் மங்கம்மா சாலையும் சென்றது. அவள் தொடர்ந்து சாலை வழியே வந்திருந்தாலும் இந்த ஊருணியை வந்து அடைந்திருக்கலாம்.

இந்த ஊருணி கடுங்கோடையிலும் கூட வற்றாது. தண்ணீர் தேங்காய்ப்பால் மாதிரி இருக்கும். வழிப்போக்கர்களுக்கு இயற்கையன்னை கொடுத்த சீதனம்.

தண்ணீர்த்துறையில் பொதுவாகவே பல காரியங்கள் நடக்கும். தண்ணீர் ஒரு அரிய செல்வம். செல்வமானது இப்படி ஒரு இடத்தில் தனிமையாகத் தேங்கிக் கிடந்தால் அங்கே என்னதான் நடக்காது?

நண்டு தனது சொந்த சௌகரியத்துக்காக வளை தோண்டி வைத்திருக்கிறது. ஆனால் அங்கே இந்தக் குரவை மீனுக்கு என்ன சோலி! அந்த வளை நீரின் நிலையை ஒட்டி அதன் சிற்றலைகள் அந்த வளைக்குள் சென்று வரும்படியாக அமைத்திருக்கும். மண்ணும் தண்ணீரும் சேர்ந்து பதப்பட்டிருக்கும் அந்தச் சொதமண்ணில் வசிக்கும் மண்புழுவைத் தின்ன குரவை மீனுக்கு ரொம்பப் பிரியம். அந்தக் குரவை மீனைப் பிடித்துத் தின்ன நாரை ஒற்றைக்காலில் நிற்கிறது. நாரையை பிடித்துத் தின்ன நரி பதிப்போட்டுக் காத்துநிற்கிறது.

வேட்டையாடுகிறவன் கூட நீர்நிலையில் வந்துதான் காத்துக் கொண்டிருக்கிறான். அவனுக்குத்தெரியும், மிருகங்கள் எங்கே சுற்றித் திரிந்தாலும் கடேசியில் இங்கேதான் தண்ணீர் குடிக்க வரவேண்டும் என்று. மிருகங்களும் தங்கள் இரையைத் தேடி நீர்நிலையில் காத்திருப்பதுண்டு.

பகலில்தான் இந்த 'உயிர்வாழும் பிரச்சினை' என்று இல்லை; ராத்திரியும் கூட இதே கதைதான். ஊருணியின் கரை மரங்களில் தூங்கிக்கொண்டிருக்கும்

பறவைகளை வேட்டையாட மரநாய்கள் வரும். வெருகுப்பூனைக்கும் மரநாய்க்கும் இந்தப் போட்டியில் கோரமான சண்டை நடக்கும். மரங்களுக்கும் புதர்களுக்கும் ஊடே புனுகுப்பூனைகள் முள்ளெலிகளை வேட்டையாடிக் கொண்டிருக்கும். இப்படியாக ராவும் பகலும் அந்த ஊருணியில் உயிர் தின்று உயிர் வாழும் காரியம் நடந்தவண்ணமிருக்கும்.

அந்தப் பெண் வேகமாகத் தண்ணீர் குடிக்க வந்துகொண்டிருந்தாள். அவள் வருவதையே ஒருவன் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். அவனும் ஒரு 'வேட்டை'க்காகத்தான் காத்துக்கொண்டிருந்தான் அங்கே.

கைகளால் மொண்டு குடிப்பதைவிட அப்படியே அந்தக் குளிர்ந்த நீரில் விழுந்து வாயாலேயே குடிப்போமா என்றிருந்தது அவளுக்கு. சேலையைத் திரைத்து எடுத்துச் சொருகிக்கொண்டாள். மளமளவென்று தண்ணீருக்குள் இறங்கி இருகைகளையும் சேர்த்துவைத்துக்கொண்டு வாரிவாரிக் குடித்துக்கொண்டே இருந்தாள். முகத்தில் கழுத்தில் தண்ணீரை எடுத்து அறைந்துகொண்டாள். கைகளால் கோரி அந்தக் குளுமையான தண்ணீரில் முகத்தை வைத்து அளைந்தாள். ஒரு குழந்தையை வாரி எடுத்து அதன் மெல்லிய வயிற்றில் முகத்தைப் புதைத்து சுகம் காணும் ஒரு தாயின் செய்கையைப் போலிருந்தது அவள் செய்தது.

கரையில் நின்றுகொண்டிருந்த அந்த மனிதனுக்கு அவள் காதுகளில் அணிந்துகொண்டிருந்த பாம்படங்களின் மீதே கண்ணாக இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே அவன் அவளை நெருங்கினான்.

ஓரக்கண்ணில் நிழலாடிய அந்த உருவத்தை அவள் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த அவனைப் பார்த்து அவள் பயங்கொள்ளவில்லை; மாறாகச¢ சிரித்தாள்!

"என்னமா இருக்கு இந்தத் தண்ணி; நாய்க்குட்டி வளக் கலாம் போலிருக்கே!" என்றாள் மனம் திறந்த ஆனந்தத்தோடு அவனைப¢ பார்த்து. அந்த வெள்ளைச் சிரிப்பு அவனையும் தொட்டு சற்றே சிரிக்க வைத்தது கோணலாய். தான்

எங்கே பின்வாங்கி விடுவோமோ தன் காரியத்திலிருந்து என்று அவன் பயந்தான்.

திடீரென்று, "ஓங் காதிலிருக்கிற பாம்படத்தை பேசாமெ களத்திக் குடுத்திரு. சத்தம்போட்டே, அப்படியே தண்ணியிலெ அமுக்கிக் கொன்னுருவேன்" என்று வேகமாகச் சொல்லி "இம்" என்று துரிதப்படுத்தினான்.

அப்படியே பிரமித்துப்போய் நின்றுவிட்டாள் அவள். வாயையோ உடலையோ அசைக்க முடியவில்லை. தண்ணீரை யேந்திய கைகள் அப்படியே நின்றிருந்தது. அது அவனிடம் தயவுகாட்டு என்பதுபோல் இருந்தது. அந்தக் கைகளிலிருந்து நீர் சொட்டிக்கொண்டிருந்தது.

அவளுடைய பீதிநிறைந்து குத்திட்ட பார்வையும் மௌனமும் அவனை வேகமடையச் செய்தது. சீக்கிரம் சீக்கிரம் என்று அவன் மனசு அடித்துக் கொண்டது. யாராவது வந்துவிடக் கூடாதே என்று பயந்து அவளை அவன் தண்ணீருக்குள் பிடித்துத் தள்ளி அமிழ்த்தினான். அப்போது அவள் ஒரு குரல் கொடுத்தாள். அது பெற்ற தாயின் பெயரும் இல்லை; கடவுளின் பெயரும் இல்லை.

"அம்மானோ . . . வ் . . ."

மூக்கினுள்ளும் வாயினுள்ளும் தண்ணீர் ஏறியது.

தண்ணீருக்குள் வைத்து அவளைக் காலால் மிதித்துக்கொண்டே அவளுடைய பாம்படங்களைப் பறித்து எடுத்து மடியில் வைத்துக்கொண்டான்.

இந்தச் சமயத்தில்தான் எதிர்பாராதவிதமாக அந்த இரண்டு காரியங்கள் நடந்தன.



ஒன்று:

அவன் அவளுடைய முகத்தைத் தண்ணீருக்குள் மிதித்துக்கொண்டிருந்த போது அவனுடைய வலது கால் பெருவிரலை அவள் பலமாகப் பற்றிக் கடித்துக்கொண்டிருந்தாள். அந்தக் கடி வரவர இறுகிக்கொண்டிருந்தது.

இரண்டு:

அதே நேரத்தில் ஒரு மாட்டுவண்டி அங்கே வந்து நின்றது.

***

3

வண்டியைப் பத்திக்கொண்டு வந்தவர் அதில் ஆஜானு பாகுவாக வீற்றிருந்தார். மங்கம்மா சாலையிலிருந்து அந்த வண்டி ஊருணிக்குள் மெதுவாக இறங்கி வந்தது.

அந்த வண்டியோட்டியின் பெயர் கிருஷ்ணப்ப நாயக்கர். பிடிகயிற்றை இழுத்துப் பிடித்து லாவகமாய் அவர் ஊருணிக்குள் வண்டியை இறக்கினார்.

மாடுகள் ஆவலோடு தண்ணீர் குடித்துக்கொண்டிருந்த அதேநேரத்தில் பிடிகயிறுகளை மார்புக்கு நேராகப்பிடித்தபடியே அவனை அவர் உற்றுப்பார்த்தார். அவனும் அவரையே கூர்ந்தும் அதேசமயத்தில் பராக்காகவும் கவனித்தான்.



அவர் லேஞ்சியை சுங்குவிட்டுக் கட்டியிருந்தார். அகலமான மார்பு. மார்பில் முளைத்திருந்த ரோமங்கள் கீழ்நோக்கி முளைக்காமல் மேல்நோக்கி வளர்ந்திருந்தது. மூக்கைப் பார்த்தாலே பெரிய்ய முன்கோபியாக இருப்பாரோ

என்று தோன்றியது. மீசைக்குக்கீழே வெற்றிலைச் சாரால் சிவந்த ஈக்கி உதடுகள். கடினமான வேலைகளைச் செய்து செய்து காய்ப்பேறிப் போன தடித்த கைகள். அந்தக் கைகளிலும் முதுகுப்புறமும் தகுணு தகுணாய் சதையின் மேடு பள்ளங்கள். இருப்புச் சட்டத்திலிருந்து தொங்கும் கால்களில் அகலமான பாதங்கள்.

அவருடைய வண்டிப் பைதாவின் பட்டைகள் வெய்யிலுக்கு விரிந்து கழலும்போல் தெரிந்ததால் அதன்மேலே குளிர்ந்த நீரை இறைத்து இறுகும்படி செய்வதற்காக அந்த ஊருணிக்குள் வண்டியைக் கொண்டுவந்தார்.

மாடுகள் தண்ணீரைக் குடித்தானதும் அவர் பைதாக்களை தண்ணீர் இறைப்பதற்குத் தோதாக வண்டியைத் திருப்ப முயன்றார். பைதாக்கள் சகதியில் புதைந்து சிரமங்கொடுத்தது. கீழே இறங்கி ஆரக்கால்களைப் பிடித்துத் திருப்பிப் பார்த்தார். முடியாததால், இடுப்பளவு தண்ணீரில் பேசாமல் நின்றுகொண்டிருந்த அவனை உதவிக்கு அழைத்தார். அவன் ஊமை போல் நின்றுகொண்டிருந்தான்.

அவனுக்கு தான் எப்படித் தண்ணீரைவிட்டு வெளியே வருவது என்று தெரியவில்லை. அடி எடுத்து வைத்தால் காலோடு பெருவிரலைக் கவ்விக்கொண்டு அவளுடைய உடலும் வருகிறது.

தனது முழுச் சக்தியையும் உபயோகித்து கிருஷ்ணப்ப நாயக்கர் வண்டியைத் திருப்பினார். திருப்பிவிட்டு அவனைப் பார்த்தார். அவன் அசையாமல் அவரையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அவர், பைதாக்களின் இரும்புப்பட்டைகள் நனையும்படி தண்ணீரை இருகைகளாலும் குனிந்து வாரிவாரி இறைத்தார். அப்படி இறைக்கும்போதே அவனை ஒரு பார்வை பார்த்துக்கொள்ளுவார்.

இப்பொழுது அவனே வாய் திறந்து பேசினான்.

"உஷ்ணக் கடுப்பு தாங்க முடியலை; அதான் இப்பிடி தண்ணியிலே நிண்ணுக்கிட்டிருக்கேன்."

அவனுடைய சமாதானத்துக்கு கிருஷ்ணப்ப நாயக்கர் பதில் ஒன்றும் சொல்லவில்லை; அவர் பாட்டுக்குக் கேட்டுக்கொண்டு தண்ணீரை இறைத்துக் கொண்டிருந்தார். அவருடைய கைகளிலிருந்து பைதாக்களின் மேல் போய் விழும் தண்ணீர், ஒரு ஓணியால் இறைக்கப்படும் தண்ணீரளவுக்கு இருந்தது. அது ஆரக்கால்களில்பட்டு ஒரு ஓசை உண்டாக்கியது. பேய் இறைக்கிற மாதிரி என்று சொல்லுவார்களே அந்த மாதிரி இருந்தது.

அவருடைய மௌனமான செய்கைகளையும் முரட்டுத்தனத்தையும் பார்த்த அவனுக்கு வயிற்றைக் கலக்கியது.

அந்தச் சமயத்தில் அங்கே இன்னொரு ஆள் வந்து சேர்ந்தான். அவன் கருப்பாகவும் ஒல்லியாகவும் குள்ளமாகவும் இருந்தான். மேல்வேட்டியை தலையில் போட்டுக்கொண்டிருந்தான். அந்தக் கருப்பு உடம்பில் வெண்ணிறமான பூணூல் தெளிவாகத் தெரிந்தது.

"ஐயா, இப்பிடிக்கூடி ஒரு பொம்பிளை போனதைப் பாத்தியளா?" என்று அவன் இந்த இருவரையும் பார்த்துக் கேட்டான்.

தண்ணீர் இறைத்து முடிந்திருந்த கிருஷ்ணப்ப நாயக்கர், 'என்ன கேட்டே?' என்பதைப்போல அவனைப் பார்த்தார். வந்தவன் திரும்பவும் அதே மாதிரியாகக் கேட்டுவிட்டு, கட்டிய தொண்டையைச் செருமிச் சரி செய்துவிட்டு "வீட்லெயிருந்து கோவிச்சிக்கிட்டு தனிவளியாப் புறப்பட்டு வந்துட்டாய்யா. காதுல பாம்படம் போட்டிருப்பா; ஈருசுரு ஆள்1, சேப்புக் கண்டாங்கிச் சேலை உடுத்தியிருப்பா." அவன் சொல்லியவிதம் 'பாவமாய்' இருந்தது.

'எல்லாத்துக்கும் காரணம் நானேதான்' என்பது போலிருந்தது. "அய்யாமாரே பாத்தியளா; பாத்தியளா அவளை? இப்பத்தான் செத்த நேரத்துக்கு மின்னாடி இந்த சாலை வழியாத்தான் வந்தாளாம்" என்றான் அவன்.

கிருஷ்ணப்ப நாயக்கர், வடக்கேயிருந்து வண்டியைப் பத்திக்கொண்டு வருகிறார். இந்த ஆளோ தெக்கேயிருந்து தேடிக்கொண்டு வருகிறான். மத்தியில் எங்கே அவள் மாயமாய் மறைந்து போயிருக்கக் கூடும்? அவருக்குக் காரணமில்லாமல் திடீரென்று தண்ணீரில் நின்றுகொண்டிருப்பவன் பேரில் சந்தேகம் வந்தது. 'இவனுக்குத் தெரிஞ்சிருக்கணும்; இவனுக்குத் தெரியாமெ முடியாது.'

ஆனால் அவனோ வாய் திறப்பதாக இல்லை.

கிருஷ்ணப்ப நாயக்கர் பூணூல்க்காரனைப் பார்த்து "வர்ணம் என்ன?" என்று கேட்டார்.

"நா ஆசாரி அய்யா."

"அப்பிடியா; சரி. ஆசாரியாரே ஒண்ணும் நீர் கவலைப்படாதீரும். இந்த வண்டியை செத்தப்பிடியும்; சாலை மேலே கொண்டுபோயி மரத்தடியிலெ நிறுத்திட்டு நாம தேடுவோம் அவளை."

நாயக்கர், இருப்புச் சட்டத்தில் குதித்தேறி உட்கார்ந்து கொண்டு மாடுகளை அதட்டிப் பத்தினார். ஆசாரியார் மேல் வேட்டியைத் தலையில் வரிந்து கட்டிக்கொண்டு, ஆரக்கால்களைப் பிடித்தார். பைதா கொஞ் . . . சம் நகர்ந்து திரும்பவும் வந்து சகதியில் வசமாகப் பதிந்துகொண்டது.

ஆசாரியார் தண்ணீருக்குள் நின்றுகொண்டிருந்தவனைப் பார்த்து, "வாய்யா, வந்து ஒரு கை பிடியேன்; அங்கே என்னத்தக் கையில பிடிச்சிக்கிட்டு நிண்ணுக்கிட்ருக்கே தண்ணிக்குள்ளே?" என்று கூப்பிட்டார். ம் ஹூ ம்; அவன் அசைவதாய்க் காணோம்.

நாயக்கர் வண்டியிலிருந்து குதித்தார். இடுப்பில் ரெண்டு கைகளையும் வைத்துக்கொண்டு கண்ணைச் சுரித்துக்கொண்டு அவனையே பார்த்தார். பிறகு, திடீரென்று மரியாதையில்லாமல் "ஏய், இங்கெ வா" என்றார்.

பின்னால் திரும்பி வண்டியிலிருந்து ஒரு பக்கத்தின் இருப்புச் சட்டத்தை உருவினார். அவருடைய கோபா வேசத்தைக் கண்ட ஆசாரியாருக்கு ஆச்சரியமாகவும் பயமாகவும் இருந்தது.

*

நாயக்கர் எப்பவுமே இப்படித்தான். மற்றவர்களுக்கெல்லாம் கோபம் வந்தால் வண்டியிலிருந்து ஊணுக்கம்பைத்தான் உருவுவார்கள். ஆனால் இவரோ இப்படி இருப்புச் சட்டத்தைத் தான் உருவுவார். இவருடைய அண்ணாச்சி கோவிந்தப்ப நாயக்கருக்குக் கோபம் வந்துவிட்டால் உலக்கையைத்தான் எடுப்பார். பாரியான அவருடைய உருவத்துக்கு உலக்கை ஏதோ ஒரு பூண் பிடித்த சிறிய கம்பு மாதிரிதான் தெரியும். இவர்களுடைய தகப்பனார் நாரணப்ப நாயக்கருக்குக் கோபம் வந்துவிட்டது என்றால் நோக்கலை (நுகந்தடி) எடுத்து அடிக்க ஆரம்பித்துவிடுவார். இவர்களுடைய தாத்தா வெங்கடப்ப நாயக்கர் கலப்பையையே எடுத்துக்கொண்டு வருவாராம். அவருக்கு பெரிய்ய முன்கோபி என்று பெயர்.

"நீ இப்போ வெளியே வாரயா, இல்லே நா அங்கெ வரவா?" என்று கேட்டார்.

அவனுடைய அசையாத்தனம் அவரை அவன் பக்கம் பாய்ந்து போகச் செய்தது. நெடுக ஓங்கிக் கொண்டே அவன் மேல் ஓங்கி வீசி அடித்தார். அவன் விலகிக்கொண்டதால், மூங்கிலில் செய்த அந்தக் கனமான இருப்புச் சட்டம் தண்ணீரில் பட்டு பெருத்த ஓசையுடன் ரெண்டாகப் பிளந்துவிட்டது.

நாயக்கர் வேகமாகத் திரும்பி வந்து இன்னொரு பக்க இருப்புச் சட்டத்தை உருவிக்கொண்டே, "தாயோளி; நீ எங்கே போனாலும் நா விட மாட்டேன். தப்பிச்சிட்டேங்கிற நெனப்பா? இரு, வந்திட்டேன்" என்று ஆவேசமாகப் புறப்பட்டார்.

அவன் மளமளவென்று ஒற்றைக்காலைக் கிந்திக் கிந்தி இழுத்துக்கொண்டே தண்ணீருக்குள்ளிருந்து வெளியே வந்தான்.

கரைக்குப் பக்கத்தில் வந்ததும் தடுமாறி விழுந்து கையை ஊன்றி ஒரு காலை மடித்து உட்கார்ந்து மற்றொரு காலை தண்ணீருக்குள் நீட்டிக்கொண்டிருந்தான். அவனுடைய இரண்டு கைகளும் தலைக்கு மேலாக கிருஷ்ணப்ப நாயக்கரைப் பார்த்துக் கும்பிட்டன.

அவனுடைய நீட்டிய காலையொட்டி தண்ணீருக்கு வெளியே சரியாகத் தெரிந்தும் தெரியாமலும் இருந்த 'அது' என்ன? கொஞ்ச நேரத்துக்கு என்னதென்றே இருவருக்கும் விளங்கவில்லை. கீழே விழுந்து கிடந்தவனுக்கு பக்கத்தில் தரையில் மின்னிய பாம்படத்தை எடுத்து ஆசாரியார் பார்த்தார். பார்த்த உடனே . . .

அது யாருடையது என்று அவருக்குத் தெரிந்துவிட்டது. அவர் ஒரு 'தொள்ளாளி.' அதிலும் அவருடைய கைப்படச் செய்து போடப்பட்ட பாம்படம் அது.

பாம்படத்தைப் பார்த்து அடையாளம் தெரிந்துகொண்டதற்குப் பிறகுதான் அந்த உடலை அவர் கண்டுகொண்டார்.

இருப்புச் சட்டத்தை ஓங்கிக்கொண்டிருந்த நாயக்கர் அதைத் தரையில் ஊன்றி அதன் பலத்தில் நின்றார்! பிறகு தண்ணீரில் இறங்கி சடலத்தை இழுத்துக் கரையில் போட்டார்.

அந்தக் கொள்ளைக் கொலைகாரன் தன்னுடைய கால் பெருவிரலை அவளுடைய பற்களின் கடியிலிருந்து விடுவித்துக்கொள்ள முயன்றான். முடியவில்லை. பெருவிரலில் பற்கள் நன்றாகப் பதிந்துபோயிருந்தது. கிருஷ்ணப்ப நாயக்கர், அவனுடைய இடுப்பில் செருகியிருந்த வங்கியை எடுத்து அவனுடைய பெருவிரலை அறுத்துக் காலை விடுவித்தார்.

அறுக்கும்போது வலிதாளாமல் அவன் கூச்சலிட்டான். அப்போது நாயக்கர் ஆவேசமுடன் அவனுடைய மார்பில் தனது முழங்கையினால் ஓங்கி ஒரு இடி வைத்தார். குரலெழுப்பக் கூட முடியாத அளவு வலிக்கும்படியான அந்த முழங்கை இடியினால் அவன் வாயை மட்டிலும் திறந்து திறந்து மூடினான்.

விரலை அறுத்து முடிந்ததும், வண்டியிலிருந்த பாரக் கயிற்றை எடுத்து அவனுடைய கைகளைப் பின்பக்கமாக மடக்கி 'இளிச்சாக்கட்டு' கட்டித் தூக்கிக்கொண்டு போய் வண்டிப் பைதாவின் ஆரக்கால்களில் வைத்துச் சேர்த்துக் கட்டினார் அவனை. பெருவிரல் இல்லாத அவனுடைய பாதத்திலிருந்து மளமளவென்று இரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது.

அறுந்த காதுகளோடு அந்தப் பெண் வாயில் கடித்த பெருவிரலோடு — ஏதோ கரும்புத் துண்டைக் கடித்து வாயில் வைத்துக்கொண்டது மாதிரி — பற்கள் தெரியச் 'சிரித்து'க்கொண்டு கண்களை அகட்டி பயம் காட்டுவது போன்ற முகத்துடன் மல்லாந்து கிடந்தாள்.

மிரண்டு, பிரமை பிடித்த மாதிரி நின்று கொண்டிருந்த ஆசாரியாரைப் பார்த்து நாயக்கர் கையமர்த்திவிட்டு, தரையில் இரத்தமும் மணலும் தோய்ந்துகிடந்த வங்கியை எடுத்துக்கொண்டு கிராமத்தைப் பார்க்க வேகமாய் நடந்தார். அவர் பாதையின் முக்குத்திரும்பி நடக்கையில் நெஞ்சை உலுக்கும்படியான வார்த்தைகள் இப்படிக் கேட்டன:

"அட பாதகத்தி; உனக்கு இப்பிடி ஒரு சாவு வரும்ண்ணு நா நினைக்கலையே ஆத்தா . . . ஐயோ ஐயோ என் உயிரு போகமாட்டேங்குதே; என் உயிரு போமாட்டேங்குதே . . ."

அவர் தனது முகத்தில் ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டு அவள்மீது விழுந்து புழுவாய்த் துடித்தார்

"ஒரு எறும்பைக் கொண்ணாக்கூட பாவம்ண்ணு சொல்வயே என் ராசாத்தி, உன்னைக் கொல்றதுக்கு எப்படி யாத்தா மனசு வந்தது . . . ஐயோ . . ."

ஒரு ஆண் குரல் ஓசை எழுப்பி அழும்போது உண்டாகும் கனமும் விகாரமும் அந்தக் குரலில் தொனித்தது.

***

4

கோவிந்தப்ப நாயக்கர் அப்பொழுதுதான் ஆகாரம் பார்த்துவிட்டு வீட்டின் முற்றத்திலுள்ள வேம்படியிலுள்ள பலகைக் கல்லில் வந்து உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார். எதிரே கோட்டைச்சுவர் நிழலில் ஊர்க் குடும்பன் அவருக்கு முன்பாக கைகளைக் கட்டிக்கொண்டு நின்றுகொண்டிருந்தான்.

அவன் அந்த வீட்டின் பண்ணைக்காரன். வேலை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவன் அங்கே எப்போதும் நின்றுகொண்டே இருப்பான், ஒரு உயிருள்ள சிலை மாதிரி.

கோவிந்தப்ப நாயக்கர் திரும்பவும் வெற்றிலை போட ஆரம்பித்தார். ஒரே தடவையில் ஐந்து களிப் பாக்குகளுக்குக் குறைந்து அவர் போடுகிற வழக்கம் இல்லை!

சாதாரணமாக எல்லோருக்கும் ஒரு பாக்கே போதுமானது. சிலர் அபூர்வமாக இரண்டு பாக்குகள் போடுகிறதும் உண்டு.

ஐந்து பெரிய பாக்குகளை எடுத்து முன்னால் வைத்துக்கொண்டார். அரைக்கட்டு வெற்றிலை, சுண்ணாம்பு, வெள்ளைப் புகையிலை முதலியவைகளை எடுத்துக் கடை பரப்பிக்கொண்டார்.



முதலில் மூன்று பாக்கை எடுத்து வாயில் போட்டுக்கொண்டார். தனித்தனி வெத்திலையாக எடுத்து சுண்ணாம்பு தேய்க்கும் வழக்கம் இல்லை. மும்மூன்று வெத்திலையாகவே எடுத்து, வளமான சுண்ணாம்பைத் தடவி, இறுக்கமாக மடித்து வாயில் இட்டு மொறுக் மொறுக் என்று மெல்லும்போது காதுகளின் பக்கத்தில் மேல்தாடையின் எலும்புப்புடைப்பு மேலும் கீழும் வந்து வந்து போவது தெரியும்.

இருந்த இடத்தில் இருந்துகொண்டே எச்சிலைப் பீச்சித் துப்பினால் வெகுதூரம் தாண்டி மத்தியில் ஒரு சொட்டுக் கூட சிதறாமல் போய் விழும்.

இப்படியாக அவர் ஒரு நேரத்துக்கு ஐந்து பாக்கும் அரைக் கட்டு வெத்திலையையும் 'தகர்த்து' விடுவார்.

"வெத்திலை போடுகிறவர்கள் ஏன் அதைத் துப்புகிறார்கள் தெரியுமா?; திரும்பவும் வெத்திலை போடுறதுக்குத்தான்!" என்று அவர் சொல்லுவார்.

இடதுபுறங்கை விரல்களின்மீது வெத்திலைச் சக்கையைத் துப்பி வீசிவிட்டு மூன்றாவது வட்டத்துக்கு போடத் தயாரானார். பத்துத்தரம் வெத்திலைபோட்டால் ஒருதரம் தான் சேர்மானம் சொகமாய் அமைகிறது. அந்த ஒரு தரத்துக்கு ஏங்கித்தான் இத்தனை தடவைக்கு அவஸ்தைப் பட வேண்டியதிருக்கிறது. வெத்திலை 'பிடித்து' வருகிறது என்றால் போட்டுக்கொண்டே வரும்போது அது தெரிந்துவிடும். அந்த மணமே ஒரு தனீ.

கோவிந்தப்ப நாய்க்கர் பாக்குப்பெட்டிக்குள் கையை விட்டார். கண்களை மூடிக்கொண்டு பாக்குகளை அள்ளினார். சரியாக ஐந்து பாக்குகள் வரவேண்டுமென்று நினைத்தார். அவரை மீறி அவருடைய கைக்குள்ளிருக்கும் பாக்குகளை விரல்கள் உணர்வினால் எண்ணிப் பார்த்தன. 'சை அது தப்பு. பட்டெண்ணு எடுக்கணும்; பிறகு அதை எண்ணிப் பார்க்கணும்; இப்படி எடுத்தால் அது கூட்டா?' கையில் வந்த பாக்குகளைப் போட்டுவிட்டு திரும்பவும் எடுக்க ஆரம்பித்தார். அப்பொழுது அவர் முன்னே ஒரு உருவம் வந்து நிற்பது போல ஒரு பிரமை உண்டானது. பாக்குகளை எடுத்துக்கொண்டு கண்ணைத் திறப்பமா அல்லது . . . என்று நினைத்தபோது, அவரை அறியாமலேயே கண்ணைத் திறந்துவிட்டார்!

கையில் இரத்தம் தோய்ந்த வங்கியுடன் வந்து நின்றுகொண்டிருக்கும் தனது தம்பியைப் பார்த்த கோவிந்தப்ப நாயக்கர் பதறிப்போனார்.

கிருஷ்ணப்ப நாயக்கர் விறுவிறு என்று நடந்த சங்கதிகளைச் சொல்லி முடித்தார்.

ஊர்க்குடும்பனை கோவிந்தப்ப நாயக்கர் உடனே அந்த இடத்துக்குக் கையில் கவணுடன் ஓடச்சொன்னார். கவணை, அவன் எப்போதும் அரைவேட்டியின் மேல் இடுப்பில் சுற்றிக் கட்டிக்கொண்டிருப்பான்.

"ஊர்க்குடும்பா, அவன் கூட்டத் திருடங்களைச் சேர்ந்தவனா தனீ ஆள்தானான்னு தெரியலை, முதல்லெ அவன் அங்கெருந்து தப்பிச்சிரப்பிடாது. அடுத்தாப்லெ, அந்த ஆசாரியார் அவனை எக்குத்தப்பா ஆத்திரப்பட்டு எதையாவது செஞ்சிரப்பிடாது; பாத்துக்கோ. நாங்க இப்பொ உனக்குப் பின்னாலெயே இந்தா வந்திருவோம்."

குடும்பன் இடுப்பில் சுற்றியிருந்த கவணை அவித்துக் கையில் பிடித்தான். கையில் கவண் வந்தவுடன் அவனை ஆள் அடையாளம் தெரியாது. முகத்தில் உடனே வீரலட்சுமி துதி கொண்டுவிடுவாள். கொஞ்ச நேரத்துக்கு முன்னால¢ பவ்யமாக கையைக் கட்டிக்கொண்டு நின்றிருந்த அந்த மனிதனா இவன் என்று தோன்றும்.

தூப்பாக்கி அமுலுக்கு வராத அந்தக் காலத்தில் அவன் கவணில் செய்துகாட்டிய சாகசங்கள் அனந்தம். அதில் சிகரம், இருட்டில் ஒலிவரும் இடத்தை நோக்கி துல்லியமாகக் கவண் எறிந்து குறியை வீழ்த்திவிடுவான் என்பதே.

ஓடுகிற முயல் அவன் எறிக்குத் தப்பியதே கிடையாது. மலைப்பன்றியை வேட்டையாடும்போது இன்னயிடத்தில் இப்பொ விழப்போகிறது என்று உடம்புறுப்பின் பெயரைச் சொல்லிக்கொண்டே எறிந்து வீழ்த்துவான். போய்ப் பார்த்தால் அவன் சொன்ன இடத்தில் அது தப்பாமல் விழுந்திருக்கும். வானத்தில் பறந்து கொண்டிருக்கும் பறவைகளை கவண் கல்லால் அடித்து வீழ்த்திக் காண்பிப்பான். கண்ணால் நேரில் பார்த்தாலல்லாது அவன் விஷயத்தில் நம்ப முடியாது.

தெல்லுத் தண்டி கல்லிலிருந்து தேங்காய்த் தண்டி கல்வரை கவணில் வைத்து வீசுவான். கல் இரைந்து சத்தங் கொடுத்துக்கொண்டே செல்ல வேண்டுமானாலும் செய்வான். சத்தமே கேட்காமல் எதிரிக்குக் கல் எந்தத் திசையிலிருந்து வருகிறது என்று தெரியாமல் எறியவேண்டுமானாலும் செய்வான்.

குடும்பன் வேகமாய்ப் போவதைக் கண்டு அவர்கள் ஒருவருக்கொருவர் அவனைப்பற்றிய கௌரவமான புன்னகையைப் பரிமாறிக்கொண்டார்கள்.

கோவிந்தப்ப நாயக்கர், தன்னுடைய தம்பியிடம் ஊர் சாட்டச் சொல்லுவதற்குமுன் கிராம முக்கியஸ்தர்களிடம் கலந்துகொள்ளச் சொன்னார். அது செய்து முடித்த பிற்பாடு சில இளவட்டங்களுடன் போய் அந்தக் கொள்ளைக்காரனை ஊர்ப்பொதுவுக்குக் கொண்டு வருவோம் என்று சொன்னார்.

தம்பி அங்கிருந்து போனவுடன் கோவிந்தப்ப நாயக்கர் யோசித்துக்கொண்டே பாக்குப் பெட்டிக்குள் கைவிட்டு ஐந்து பாக்குகளை எடுத்தார். 'கலி முத்திப்போச்சி' என்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.

கிராமமும் சுற்றுப்பக்கமும் அமைதி இழந்துவிட்டது. எங்கும் பரபரப்பு. எந்த சமயத்தில் என்ன நடக்கும் என்று யாராலும் சொல்லமுடியாத நிலை.

*

ஒருநாள் இப்படித்தான் கோவிந்தப்ப நாயக்கர் வெற்றிலை புகையிலை குதப்பிக்கொண்டு ஆலிலை தைத்துக் கொண்டிருந்தார். அப்பொழுதெல்லாம் கரிசல்காட்டில் வாழை இலை பிரபல்யம் அடையாத காலம். கோபல்ல கிராமத்தின் மக்கள் விரதம்விடும் நாட்களில் மட்டும், ஆல இலைகளைச் சேர்த்து வைத்து அதைச் சோளத்தட்டை ஈக்கிகளால் தைத்து அந்த 'இலை'யில்தான் சாப்பிடுவது வழக்கம். மற்ற நாட்களிலெல்லாம் அவர்கள் கும்பா, வட்டில், தாலம், மரவை முதலியவைகளில் தான் உண்பார்கள்.

கோட்டையார் கோவிந்தப்ப நாயக்கருக்கு இந்த இலை தைப்பது ஒரு இனிய பொழுதுபோக்கு. தனது இடதுகைப் பெருவிரல் நகத்தை அவர் அவ்வளவு நீளமாகவும் கூர்மையாகவும் வைத்திருப்பது இந்த சோளத்தட்டை ஈக்கிகளை நூல் கனத்தில், மிகவும் நுண்ணிதமாகக் கிழிப்பதற்குத்தான்.

ஊர்க்குடும்பனிடம் சொல்லி அகலமான தளதளப்பான ஆல இலைகளைப் பறித்துக்கொண்டு வரச் சொல்லுவார். இலைகளை எத்தனையோ மாதிரியாக, விதமாகத் தைப்பார். பல்வேறு உருவங்களைக் கொண்டு வருவார் அதில்.

கண்ணைத் திறக்காமல் ஒரு இலையைத் தைத்துமுடித்து அது எப்படி அமைந்திருக்கிறது என்று பார்ப்பார். திடீரென்று மனோராஜ்யத்தில் இறங்கி, தனது இரண்டு கண்களும் குருடாகிவிட்டதாகவும் தன்னுடைய சகோதரர்கள் தன்னைக் கைவிட்டுவிட்டதாகவும், தனது வீட்டில் எல்லோருமே இறந்து போய் விட்டதாகவும், தான் ஏழையாகி அனாதையாகிவிட்டதாகவும், இந்த இலைகளைத் தைத்து விற்றுத்தான் பிழைக்க வேண்டியதிருப்பதாகவும் நினைத்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு கண்ணீர் விட்டுக்கொண்டே தைப்பார். அப்புறம் ஒரு யோசனை வரும்; மனோராஜ்யத்தில் ஒரு திருத்தம் செய்வார். தான் அனாதை ஆகவில்லையென்றும் . . . இல்லை இல்லை அனாதை ஆகிறதுதான் சரி. ஊர்க்குடும்பனை இந்த சமயத்தில் பக்கத்திலேயே வைத்துக்கொள்வதா, வேண்டாமா? சிரிப்பு வந்துவிட்டது அவருக்கு! அவன் இல்லையென்றால் ஆலமரத்தின் மேல் ஏறி இலைகளை யார் பறித்துப்போடுவார்கள்?

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சுற்றும்முற்றும் பார்த்தார். நல்லவேளை யாரும் கவனிக்கவில்லை. இப்பொழுது அவர் இலையைத் தைத்துக்கொண்டே வேறொரு மனோ ராஜ்யத்தைத் தொடங்குவது என்று தீர்மானித்த சமயத்தில் ஊர்க்குடும்பன் வந்தான். அவன் ஒரு தகவலைக்கொண்டு வந்திருந்தான். அதாவது அன்று ராத்திரி தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் கிராமத்தைக் கொள்ளையடிக்க வருகிறார்கள் என்று.



"இந்த மாதிரித் தகவல்கள் இது எத்தனாவது தபா?" என்று சொல்லிச் சிரித்தார் நாயக்கர். "ரொம்பத் தபா இப்படிச் சொல்லிச்சொல்லியே நாம தயாரில்லாத சமயமாகப் பார்த்து வந்துட்டா?" என்று கேட்டான் ஊர்க்குடும்பன்.

"ஆமா ஆமா, அது ஞாயந்தான்; நாம முழிப்பா இருந்ததைப் பத்தி குத்தமில்லெ."

அவர் கண்ணை மூடிக்கொண்டார். கண்களை மூடிக்கொண்டுதான் யோசனை செய்வார்.

பிறகு அவர் சொன்னார்.

"ஊருக்கு ஒரு பாதை இல்லை. திட்டாந்திரமா இன்ன பாதை வழிதான் வருவாங்கெண்ணு தெரிஞ்சா நீ ஒருத்தன் போதும்டா; ஊர் என்னத்துக்கு?" என்றார். கோட்டையாரிடமிருந்து இப்படி மனம் திறந்து வரும் புகழ்ச்சியைக் கேட்கும்போதெல்லாம் வெட்கத்தினால் குங்கிப்போவான் அவன்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது அக்கையா வந்தார். அவர் கோட்டையாருக்கு சம்மந்தகார முறை. ஆள் கொஞ் . . . சம் குட்டை. நாப்பது வயசை எட்டிய உடல்; ஆனால் வயசு தோணாது. பிரம்மச்சாரி. மீன்களின் கண்ணைப் போல் வட்டமான கண்கள். கொஞ்சம் மேலே ஏற்றி 'உச்சிக்கொண்டை' போட்டிருப்பார். நீளமான மேல் வேட்டியை, வேலை செய்கிற நேரம் தவிர மற்ற நேரங்களில் ஏத்தாப்பு போட்டுக்கொண்டிருப்பார். அவரைப் பார்த்ததும் பெண்களுக்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வரும். குதிங்கால் தரையில் பாவாமல் முன்னங்கால்களாலேயே தேய்த்துக்கொண்டு எக்கி எக்கி நடப்பார். முகத்தை ஒன்றுமே தெரியாத அப்பாவிமாதிரி வைத்துக்கொண்டிருப்பார்.

கோவிந்தப்ப நாயக்கர் தனக்கு இளையவரே ஆனாலும் மரியாதைக்காக அவரை மாமா என்றே அழைப்பார். இவர் கோட்டையார் வீட்டில்தான் வேலை செய்துகொண்டிருந்தார்.

***

5

அந்தக் காலத்தில் ஊர்விட்டு ஊர்போக நடந்தேதான் போகவேண்டுமென்ற காரணத்தினாலோ சொந்தக்காரர்களின் ஊர்கள் தொலைவில் இருக்கிறது என்ற காரணத்தினாலோ, அல்லது பழக்கதோஷமோ விருந்தாட வரும் விருந்தாளிகள் ஒரு வீட்டுக்கு வந்தால் குறைந்தது ஒரு மாசமாவது தங்கிவிட்டுத்தான் போவார்கள். வீட்டுக்காரர்களும் அதுக்குக் குறைந்து அவர்களை விடவும் மாட்டார்கள். கோட்டையார் வீட்டுக்கு வரும் விருந்தாளிகளோ இரண்டு மூன்று மாசம் தங்கித்தான் போகிறது வழக்கம்.

சமையல் பிரையில், மூன்று அடுப்பங்கட்டிகளில் ஒன்றுக்குப் பதிலாக ஒரு பெரிய மடா பதித்திருப்பார்கள். அதில் எப்பொழுதும் தண்ணீர் நிறைந்திருக்கும். ஒருநாளில் அடுப்பு இரண்டு அல்லது மூன்று முறை எரியும் காரணத்தினால் அந்தத் தண்ணீர் சதா வென்னீராகவே இருக்கும். வருகிற விருந்தாளிகள் வென்னீரில் குளிக்கவேண்டியது; சமைத்து வைத்திருக்கும் சாப்பாட்டைப் போட்டுச் சாப்பிடவேண்டியது.

கோட்டையார் வீட்டுப் புகை போக்கியிலிருந்து எந்நேரமும் புகைபோன வண்ணமாகத்தானிருக்கும். பெண்டுகள், வீட்டுக் கிணற்றிலிருந்து தண்ணீர் சேந்துகிறவர்களும், காய்கறி நறுக்குகிறவர்களும், ஊறுகாய் வடகம் போடுகிறவர்களும், கம்மம்புல் குத்துகிறவர்களுமாக ஒரே பரபரப்பாக இருப்பார்கள். வீட்டினுள் சில கிழவிகள் காதுகளில் வண்டிக் கம்மல் ஆட ஒரே சீரான இரைச்சலுடன் திருகைகளில் வரகு திரித்துக் கொண்டிருப்பார்கள். பக்கத்தில் சில திருகைகளில் 'பட்டு' போடப்பட்டு காய்ந்துகொண்டிருக்கும்.

வீட்டின் வட பாரிசத்தில் இறக்கப்பட்டிருக்கும் நாழி ஓட்டின் சாய்ப்பிலுள்ள நீளமான மாட்டுத் தொழுவத்தில் நாட்டு எருமைகளும் நாட்டுப் பசுக்களும் உழவு ஜோடிக¢ காளைகளும் வெண்கலமணி ஓசையிட அசைபோட்டுக்கொண்டும் கூளம் தின்றுகொண்டுமிருக்கும். அவை தண்ணீர்

குடிப்பதற்கு ஒரு ஆள் படுத்துக்கொள்ளும் அளவுக்கு நீளமான இரண்டு கல்தொட்டிகள். பக்கத்தில் நெஞ்சளவுக்கு உயரமான, பருத்திக்கொட்டை ஆட்டும் அகலமான கல் உரல்கள்.

கோட்டையாரின் குடும்பம் கூட்டுக்குடும்பமாகவே இருந்து வந்தது. குடும்பத்தில் நடக்கும் சகல காரியங்களுக்கும் அக்கையாதான் மேல்பார்வை. எந்த இடத்தில் பார்த்தாலும் அங்கே அக்கையா நின்று கொண்டிருப்பார். அவருடைய உள்ளங்கால்களில் பாதசக்கரம் இருக்கிறது என்று கேலி பண்ணுவார்கள் பெண்கள் அவரை.

வீட்டின் இளையவர் கண்ணப்ப நாயக்கர். அவர் கோட்டையார் வீட்டின் செல்லப்பிள்ளை.

செல்லப்பிள்ளை கண்ணப்ப நாயக்கர் தினமும் செய்கிற வேலைகள்:

இரும்புக் கரண்டியில் கட்டியான தீக்கங்குகளை எடுத்துக் கொண்டுவந்து மாடுகளின் மேலுள்ள உண்ணிகளை சாமணத்தினால் தேடிப்பிடித்து எடுத்துக் கரண்டியிலுள்ள கங்குகளில் போடவேண்டியது.

இடுப்பு உயரம் வளர்ந்துள்ள, வெண்மையும் சாம்பலும் கலந்த இரண்டு ஜாதி நாய்களுக்கு அதுக்கென்றுள்ள சிறிய கல்தொட்டிகளில் சுத்தமான பாலை படிக்கணக்கில் ஊற்றி அவை சளப் சளப் என்று நாக்கை நீட்டி நக்கிக் குடிப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பது.

வான்கோழியின் குஞ்சுகளுக்கு, பொடுதலை இலைகளைப் பறித்துக் கொண்டுவந்து கோழிமுட்டைகளைப் பொரித்து அதோடு கலந்து தீனியாக வைப்பது.

புனுகுப்பூனைகளைக் கூட்டில் அடைத்து வளர்ப்பது; அதிலிருந்து புனுகு எடுப்பது. சேவல் கட்டுக்காக வளர்க்கும் ஜாதிச் சேவல்களுக்கு நனையப்போட்டு ஊறிய கேப்பையை ஊட்டுவது.

விடலைப் பனைகளிலிருந்து குருத்தோலையை வெட்டிக் கொண்டுவந்து விதவிதமான விசிறிகளைச் செய்து பிரியமானவர்களுக்கு அன்பளிப்பாக வழங்குவது.

இன்னும் இம்மாதிரியான காரியங்கள் அவருடைய ஆனந்தம் மிகு ஆத்மார்த்திகமான பொழுதுபோக்கு. செல்லப் பிள்ளை அழகாகப் பாடுவார். சங்கின் நாதத்தைப்போல சாரீரம். ஏதாவது ஒரு ராகத்தைக் குரலெடுத்து முனகிய வண்ணமாக இருப்பார். கொஞ்சம் ஸ்திரீலோலன். பனம்பால் சாப்பிடுவார். காமரசம் சொட்டும் தெலுங்குப் பதங்களை சொகமாய் பாடுவார். கிராமத்துப் பெண்டுகளுக்கு — முக்கியமாக வெடைகளுக்கு — எப்பவும் அவர் பேரில் 'ஒரு கண்' உண்டு!

செல்லப்பிள்ளைக்கு முந்தியவர் சுந்தரப்ப நாயக்கர். இவருடைய கவனம் எருமை மாடுகளின் மேல். குட்டியானை மாதிரியுள்ள எருமைப் பொலிகிடாயைப் பேணுவதிலும், அதைப் பருவமடைந்த எருமை மாடுகளின் மேல் பயிராக விடுவதிலும் இவருக்குக் கொள்ளை இன்பம்!

இவரை விசுவாமித்திரன் என்று அக்கையா வேடிக்கையாகச் சொல்லுவார். அதுக்கு அவர் சொல்லும் காரணம், ஆதியில் பிரம்மா உலகத்தைப் படைத்தபோது பசுமாடுகளைத்தான் உண்டாக்கினாராம். போட்டி உலகத்தை¢ உண்டாக்கிய விஸ்வாமித்திரன்தான் பசுமாடுகளுக்குப் போட்டியாக எருமை மாடுகளையும், தென்னைமரத்துக்குப் போட்டியாக பனை மரத்தையும், மூஞ்சூறுக்குப் போட்டியாக பெருச்சாளியையும் உண்டாக்கியதாக அக்கையா சொல்லுவார்! இப்படியாக ஒவ்வொரு பொருளுக்கும் போட்டியாக இருக்கும் மற் றொன்றைச் சுட்டிக் காண்பித்துச் சிரிப்பார்.

கோட்டையார் வீட்டுச் சகோதரர்கள் ஏழு பேர்கள். இவர்கள் ஏழு பேரும் நாரணப்ப நாயக்கரின் மூத்த பாரியாள் கொண்டம்மாவின் புதல்வர்கள். இளைய பாரியாள் ரங்கம்மாவுக்கு ஒரே ஒரு பெண்; மங்கம்மா என்று பேர்.

அண்ணன் தம்பி ஏழுபேரும் குடும்பத்தில் ஒவ்வொரு 'இலாகா'வை நிர்வகித்தார்கள்.

மூத்தவர் — கோவிந்தப்ப நாயக்கர், குடும்பமேல் பார்வை, பொதுநிர்வாகம்.

இரண்டாவது — கிருஷ்ணப்ப நாயக்கர், விவசாயம்.

மூன்றாவது — கோவப்ப நாயக்கர், பசுமாடுகள்.

நாலாவது — ராமப்ப நாயக்கர், ஆடுகள், கிடை பராமரிப்பு.

ஐந்தாவது — தாசப்ப நாயக்கர், உள்ளூரிலும், சொந்தக்காரர்கள் வசிக்கும் வெளியூர்களிலும் நடக்கும் இழவு, கல்யாணம், சடங்கு, கிரஹப்பிரவேசம், முடிஇறக்கு, காதுகுத்து முதலிய விசேஷங்களுக்கு குடும்பத்தின் சார்பாக போகவும் வரவுமே அவருக்கு நேரம் சரியாக இருக்கும்.

ஆறாவது — சுந்தரப்ப நாயக்கர், எருமை மாடுகள்.

ஏழாவது — கண்ணப்ப நாயக்கர், செல்லப்பிள்ளை. இவர் ஒருத்தர்தான் வீட்டில் இருப்பார். முன்னே சொன்ன வேலைகளைச் செய்துகொண்டு.

கோட்டையார் வீட்டுக்கு, முன்புறம் இரண்டு வாசல்களைத் தவிர வீட்டின் பின்புறம் தள்ளி இரண்டு பக்கங்களிலும் பக்கவாசல்கள் இருந்ததினாலோ என்னமோ அந்த வீட்டுக்குப் புறவாசல் — புழக்கடை வாசல் — கிடையாது. அந்த இருபக்க வாசல்கள்கூட, இரண்டு பக்கமும் உள்ள தொழுவங்களுக்காக விடப்பட்டிருக்கலாம். கோபல்ல கிராமத்திலுள்ள எல்லா வீடுகளையும் போலவே இவர்களுடைய வீட்டுக்கும் புறவாசல் கிடையாது.

வீட்டைச் சுற்றிலும் இருப்பதைப் போலவே வீட்டுக்குப் பின்புறமும் அடர்ந்த வேப்பமரங்கள். வெயில் காலத்தின் இரவு நேரங்களில் அந்த மரங்கள் கொத்துக் கொத்தாய் வெண்மை நிறத்தில் மனசுக்கு இதமான ஒரு கசந்த வாசனையோடு பூத்துக் குலுங்கும். பெண் ஒருத்தி பச்சை உடுக்கை உடுத்தி வெண்ணிற ரவிக்கை அணிந்து கொண்டிருப்பதைப் போலிருக்கும். அக்கையா வேப்பமரத்தை வேப்பம்மாள் என்றே சொல்லுவார். காய்கள் காய்த்துக் குலுங்கும்போது "வேப்பம்மா குணுக்கு போட்ருக்கா" என்பார். இலை அவ்வளத்தையும் உதிர்த்துவிட்டு நெத்துகள் மட்டுமே கொண்டுள்ள

வாகைமரத்தைப் பார்த்தால், "இந்த வாகைக்கு லச்சை கிடையாது; எல்லாத்தையும் உதுத்துட்டு அம்மணமாய் நிற்கிறதைப் பார்!" என்பார்.

வீட்டின் நீண்ட திண்ணையை ஒட்டி ஆள் உயரத்துக்கு இருக்கும் நான்கு ஜன்னல்கள். வடக்குக் கடைசி ஜன்னல் வழியாகப் பார்த்தால் ஒரு தனி அறையில் பனைநார்க் கட்டிலில் ரொம்பவும் வயசான ஒரு பெரியம்மாள் இருப்பது தெரியும். எலும்பும் தோலுமாய் நீண்ட மூக்குடன் இருக்கும் அந்த உருவத்தைப் பார்க்கும்போது, ரோமத்தையெல்லாம் இழந்துவிட்ட ரொம்ப வயசான ஒரு கழுகின் ஞாபகம் வரும். அந்த பூட்டியின் பெயர் மங்கத்தாயாரு அம்மாள். அவளுக்கு இப்பொழுது நூற்றி முப்பத்தி ஏழு வயசாகிறது.



கணிப்பிள்ளை அடைத்த, தோலினால் செய்த திண்டில் சாய்ந்து, தலைகுனிந்து கண்களை மூடி இறைவணக்கம் செய்வதுபோல் — வயிற்றை ஒட்டி கூப்பியதுபோல் துவண்டு கிடக்கும் கைகள். காதுகளில் தொங்கும் வட்ட வளையமான வண்டிக் கம்மல்கள். அவை தொங்கும் தோலின் நீளம்

நீண்டு பெரிதாக இருப்பதால் அவை நழுவிக் கீழே விழுந்துவிடாமல் இருக்கப் பூண் பிடிக்கப்பட்டிருக்கிறது.

பூட்டி தூங்கி வெகு வருஷங்கள் ஆகிறது. சாய்ந்தவாறே உட்கார்ந்து தூங்கும் கோழித்தூக்கம்தான். எப்பவாவது தொண்டையைச் சரிசெய்ய செருமும் ஒலிமட்டும் கேட்கும். இரண்டுதரம் தொடர்ந்து அந்த ஒலி கேட்டுவிட்டால் கோவிந் தப்ப நாயக்கர், என்ன என்று கேட்க ஓடி வந்து விடுவார்.

பூட்டிக்குக் காதுகள் பரவாயில்லாமல் கேட்கிறது. பற்கள் இல்லாததால் அவளுடைய குரல் ஒலியோடு பழகியவர்களுக்குத் தான் அவள் சொல்வது இன்னது என்று சரியாக விளங்கும்.

"கோயிந்தப்பா" என்று அழைத்து அவரைப் பக்கத்தில் இருத்திக்கொண்டு அவருடைய உடம்பைத் தடவித்தடவி விடுவாள். அவரை மட்டும் என்றில்லை, யார் அவளுடைய அருகில் போனாலும் இழுத்து உட்காரவைத்துத் தடவி விடுவாள். அந்தத் தடவுதலுக்கு எத்தனையோ அர்த்தங்கள் உண்டு. சௌக்யமாய் இருக்கயா, உடம்பெல்லாம் எப்படி இருக்கு, அடிக்கடி இப்படி என் அருகே வரக்கூடாதா, உன்னை விட்டுட்டு இருக்கமுடியலையே . . . மெலிந்து சுருக்கம் விழுந்த கையின் அந்தத் தடவுதலுக்கு இப்படி எத்தனையோ அர்த்தங்கள் உண்டு.

எவ்வளவு உப்பிய சரீரமுடையவர்களாக இருந்தாலும் மெலிஞ்சி போய்ட்டயே குழந்தை; நல்லாச் சாப்பிடு; நெய் விட்டுக் கொள்றயா? எண்ணெய் தேய்த்து ஒழுங்காகத் தலை முழுகிறயா? காலையில் எழுந்ததும் ஒழுங்காகத் தயிர் சாப் பிடுறயா; நிறைய மோர் சாப்பிடு. பேதிக்கு விளக்கெண்ணெய் ஒழுங்கா சாப்பிடுறயா? என்றெல்லாம் கேட்பாள்.

பூட்டி சாப்பாட்டை நிறுத்தி ரொம்ப வருஷங்கள் ஆகிறது. இப்போது அவளுடைய உணவு தயிரும் கருப்பட்டியும்தான்.

பாசத்தோடு அப்படித் தடவும் நடுங்கும் கைகளின் அந்த ஸ்பரிசம் கோவிந்தப்ப நாயக்கரின் உடம்பை சிலசமயம் புல்லரிக்க வைக்கும்; கண்கள்

பனித்துவிடும்.

"இண்ணைக்கு என்ன கிழமை, என்ன நட்சத்திரம்?" என்று அவரிடம் கேட்பாள். இப்பொழுதெல்லாம் இவை அவளுக்குக் குழப்படியாகப் போய்விட்டது. பகலில் தூங்கி வழிந்து அதை இரவாகக் கற்பித்துக்கொள்கிறதும், இரவைப் பகலாக நினைத்து விழித்துக்கொண்டிருப்பதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அவள் தனது பாலியப் பருவத்தில், யௌவனத்தில், முதுமையில் நடந்த அதிசய நிகழ்ச்சிகள், ஆனந்த சம்பவங்கள் முதலிய எத்தனைகளையோ சொல்லி இருக்கிறாள். அவள் இன்னும் சொல்லி முடிக்காத, சொல்லாத சம்பவங்களும் உண்டு. கோவிந்தப்ப நாயக்கருக்கு அவைகளைக் கேட்டுக் கேட்டு அனுபவிப்பதில் எல்லையில்லா ஆனந்தம். சிலதுகளை திரும்பத்திரும்ப சொல்லிக் கேட்பதில் ஒரு நிறைவு. பூட்டியம்மாள் ஓர் அனுபவக் களஞ்சியம்.

ஆந்திர நாட்டிலிருந்து கம்மவார்கள் புறப்பட்டு இங்கே தமிழ்நாட்டுக்கு வரும்போது இவளும் அவர்களுடன் வந்தவள். அந்தநாட்களில் ஜனங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை, துன்ப துயரங்களை விவரித்துச் சொல்லும்போது சில இடங்களில் உணர்ச்சி வசப்பட்டுவிடுவாள். பொலபொலவென்று கண்ணீர் சிந்தும் இடங்கள், கலகலவென்று சிரிக்கும் கட்டங்கள். தாங்கமுடியாத உணர்ச்சிவயப்படும் தெய்வ விஷயங்களுக்குத் தலைக்குமேல் இரண்டு கைகளையும் கூப்பி பாட ஆரம்பித்துவிடுவாள். உடனே சுற்றியுள்ள யாவரும் மௌனமாகக் கலைந்துவிடுவார்கள். அன்றைக்குக் கதை அவ்வளவுதான்.

***

6

ஆந்திர தேசத்திலிருந்து கம்மவார் மட்டும் இங்கே வரவில்லை. ரெட்டியார், கம்பளத்தார், செட்டியார், பிராமணர், பொற்கொல்லர், சக்கிலியர் இப்படி எத்தனையோ.

இவர்கள் இங்கே புறப்பட்டு வந்ததற்கும் காரணங்கள் எத்தனையோ.

தெலுங்கு அரசர்கள் இங்கே ஆட்சி செலுத்தியதையொட்டி வந்தவர்கள், பஞ்சம் பிழைக்க வந்தவர்கள், முஸ்லீம் ராஜாக்களுக்குப் பயந்துகொண்டு வந்தவர்கள், இப்படி இப்படி.

கம்மவார் என்று பெயர் வந்ததற்கு மங்கத்தாயாரு அம்மாள் சொல்லும் காரணம், காதுவளர்த்து வளையம் போன்ற 'கம்ம' என்ற காது ஆபரணத்தை இந்தப் பெண்கள் அணிந்துகொள்வதால் இப்பெயர் வந்தது என்று சொல்லுவாள். கம்மவாரின் முதல்த்தோன்றலைப் பற்றியும் ஒரு பூர்வ கதை சொல்லுவாள். நாகார்ஜுன மலையில் வீரம் நிறைந்த ஒரு ராட்சதப்பெண் இருந்தாளாம். அவளை அடக்க யாராலும் முடியவில்லையாம். அழகும் வீரமும் கொண்ட ஒரு பிராமணன் அவளை அடக்கி அவளுடைய மூக்கில் துறட்டியைப் போட்டு இழுத்துக்கொண்டு வந்தானாம்.

மூக்கில் தொறட்டியைப் போட்டு அவளை இழுத்துக்கொண்டு வந்ததால் அந்தத் தொறட்டியையே அவள் ஆபரணமாக விரும்பிப் போட்டுக்கொண்டாளாம். ஆகவேதான், அவர்களுடைய சந்ததியாராகிய நமது பெண்டுகள் இன்றும் மூக்கில் தொறட்டி என்ற ஆபரணத்தை அணிந்து கொண்டிருக்கிறோம் என்பாள்.

"ஆந்திர தேசத்திலிருந்து நீங்கள் புறப்பட்டு வந்ததை இன்னொருதரம் சொல்லு" என்று கேட்பார், கோவிந்தப்ப நாயக்கர். அவர் இப்படி கேட்பது இது ரெண்டாவது தடவை அல்ல; எத்தனையோவாவது தடவை.

மங்கத்தாயாரு அம்மாள் ஒரு கவிஞையாகப் பிறந்திருக்க வேண்டியவள். விஷயங்களைப் பார்க்கிறதிலும், அதை மனசுக்குள் கொண்டுவந்து வெளியீடு செய்யும் அழகும் கோவிந்தப்ப நாயக்கரும் அக்கையாவும் தனித்திருக்கும் போது பேசிப்பேசி மகிழ்வார்கள். அவளுக்கும் தனது அந்தக் கதையைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்ப்பதில் ஒரு தீராத பிரேமை. அவளால் இந்தத் தள்ளாமையில் செய்யக்கூடிய காரியம் அது ஒன்றே.

கோவிந்தப்ப நாயக்கர் அப்படிக்கேட்டதும் மங்கத்தா யாருவின் மலர்ந்த முகம் கொஞ்சங் கொஞ்சமாக சுருங்கிக்கொண்டே வரும். கண்கள் இடுங்கி, இங்குள்ள பொருள்கள் எதிலும் பதியாமல் மனதூரத்தில் எங்கோ பார்க்கும். அப்புறம் சற்றே முகம் மலருவதைப்போல் வந்து, முகம் அழுவதைப் போல் உணர்ச்சி வயப்பட்டு பின்பு செருமி சரி செய்துகொண்டு தொடங்குவாள்.

என்னுடைய ஒன்றுவிட்ட சகோதரியாக்கும் அந்த சென்னாதேவி. என்னைவிட ஆறுவயசு மூத்தவள். அப்பொ எனக்கு ஒம்பது வயது.

கோயிந்தப்பா, எனக்கு இத்தனை வயசாகிறது; இன்னும் இப்படி ஒரு ரூபலாவண்யமுள்ள 'சிறை'யை நான் பார்த்ததில்லைடா!

சென்னாதேவி இருக்குமிடத்தில் அவளுக்கு அருகே அவளைச் சுற்றி ஒரு பிரகாசம் குடிகொண்டிருக்கும். அவள் நிறை பௌர்ணமி அன்று பிறந்ததினாலோ என்னமோ அப்படி ஒரு சோபை அவளுடைய முகத்தில்.

பசுமாடுகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் அந்த அந்த பிரதேசத்துக்குரிய அங்கலட்சண ஜாடைகளோடும் சுத்தத்தோடும் விளங்குவதில்லையா; அதுமாதிரிதான் மனிதர்களுடைய ஜாடையும் அழகும். ஆந்திர தேசத்தின், அந்த தேசத்துக்குரிய அழகு தேவதையின் லட்சணம் கொண்டவளாக்கும் அவள்.

அவளுடைய அழகு பக்கத்து கிராமங்களுக்கு மட்டுமில்லை, வெகுதூரம் பிராபல்யம் அடைந்தது. அந்தப் பிராபல்யமே அவளுக்கு வினையாக முடிந்தது.

அவளுடைய குரல்தான் என்ன இனிமை என்கிறாய்! அவள் பாட ஆரம்பித்தால் இந்தப் பிரபஞ்சமே ஒலியடங்கி மௌனியாகிவிடும். காற்று அசைவதை நிறுத்திவிடும். கொடிகள் ஆடாமல் நிற்கும். பூமியில் நம்முடைய பாரம் லேசாகி அப்படியே கொஞ்சங் கொஞ்சமாக மேலே கிளம்பி காற்றில் மிதப்பது போல் ஆகிவிடும். பெருங்குளத்தின் நிறை தண்ணீரைப் போல ஆனந்தம் தாங்காமல் தத்தளிக்கும் நம் மனசு.

அவள் அபூர்வமாகத்தான் வாய்விட்டுச் சிரிப்பாள். இன்னொருதரம் அப்படிச் சிரிக்கமாட்டாளா என்று இருக்கும். அவளுடைய சிரிப்பிலேதான் எத்தனை விதம்!

கண்களால் மட்டும் சிரித்துக்காட்டுவது.

கண்கள் சிரிப்பதற்குப் புருவங்கள் அப்படி ஒத்துழைக்கும்!

கடைக்கண்ணால் சிரிப்பது.

முகத்தில் எந்தவித சலனமும் இல்லாமல் நேர்பார்வையில் சிரிப்பது. தரையைப் பார்த்துச் சிரிப்பது. (அவளுடைய சிரிப்பிலேயே இதுதான் அழகு.) கண்களைச் சுழற்றி — பறவை யாடவிட்டு — ஒரு சிரிப்புக் காட்டுவாள். (அப்போது கண்கள் ஜொலிக்கும்.) சில சமயம், சற்றே மூக்கை மட்டும் விரித்து மூக்கிலும் ஒரு சிரிப்பை வரவழைப்பாள்!

உதடுகள் புன்னகைக்கும்போது வாயின் அழகு பல மடங்கு அதிகமாகிவிடும். சிரிப்பை அடக்க உதடுகளை நமட்டும் போது அவை இளஞ்சிகப்பின் எல்லையைத்தாண்டி குருவி இரத்தம் போல் செஞ்சிகப்பாகிவிடும்.

அவளுடைய மூக்கில் தொங்கும் புல்லாக்கின் கீழ் ஒரு முத்து தொங்கும். பற்கள் மின்ன அவள் சிரிக்கும் போதெல்லாம் அந்த முத்துக்கும் பற்களுக்கும் போட்டிதான்! புல்லாக்கில் அப்படி ஒரு முத்தைக் கோத்து, பற்களுக்கு நேராய்த் தொங்க விடணும் என்று ஒரு ஆசாரிக்குத் தோணியிருக்கே, அது எப்பேர்ப்பட்ட ரசனை!

அவள் பூப்பதுக்கு கொஞ்சநாள் முந்திதான் அந்த சம்பவம் நடந்தது.

அவளுக்கு மாணிக்கமாலை செய்வதற்காக கெம்புக்கற்கள் வாங்கத் தீர்மானித்தார்கள். வீட்டில் ஏற்கனவே கொஞ்சம் கெம்புக்கற்கள் இருந்தன. காணாததுக்கு மேலுங் கொஞ்சம் வேண்டியதிருந்தபோதுதான், "அவர்கள்" அந்த ஊருக்கு வந்தார்கள். அவர்கள் வந்தது கெம்புக்கற்கள் விற்பதற்காக அல்ல; வாங்குவதற்கு.

சென்னாதேவியின் தகப்பனார், அவர்களிடம் கற்கள் விலைக்குக்கிடைக்குமா என்று கேட்டார். அவர்களைக் கூப்பிட்டுத் தன்னிடமுள்ள கற்களையும் காட்டினார். ரத்ன வியாபாரிகளான அந்தத் துலுக்கர்கள் இந்த கெம்புக் கற்களைப் பார்த்து அசந்து போய்விட்டார்கள். "இதை எங்கிருந்து வாங்கினீர்கள்?" என்று கேட்டார்கள். இது எங்கிருந்து வாங்கினது என்பது தங்களுக்குத் தெரியாது என்றும், குடும்பத்தில் பூர்வீகமாகவே இருந்து வருகிறது என்றும் சென்னாவின் தகப்பனார் சொன்னார்.

அந்த வியாபாரிகள் அந்த கெம்புக்கற்களிலிருந்து தங்கள் கண்களை எடுக்கமுடியாமல் திணறினார்கள். வீடே அதன் சிகப்பினால் ஒரு பிரகாசம் அடைந்தது போலத் தோன்றியது. அவர்கள் அதிலுள்ள சில தேர்ந்த கற்களை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு முற்றத்தில் போய்ப் பார்ப்பதும், அதிக வெளிச்சத்தில் கொண்டு போய் வைத்து அப்படியும் இப்படியும் புரட்டி ஒருவரைப் பார்த்து ஒருவர் மனம்திறந்து அதிசயச் சிரிப்புச் சிரித்து அவர்களுக்குள் அவர்கள் பாஷையில் சத்தம்போட்டுப் பேசிக் கொண்டுமிருந்தார்கள். அவர்கள் அப்படி பேசிக்கொண்டதைப் பார்த்தால், ஒருவன் வைத்திருக்கும் கல்லைவிட மற்றவன் வைத்திருக்கும் கல்லே சிறந்தது என்று அடித்துச் சொல்லுவது போலிருந்தது.



அந்த நேரத்தில் சென்னாதேவி அங்கே தற்செயலாய் வந்தாள். அவர்களுடைய தலைப்பாகைகளையும், வெட்டி ஒழுங்கு செய்துவிடப்பட்ட தாடிகளையும் அவர்களுடைய பருத்த முழிகளையும் பார்த்து, 'கக்ரே புக்ரே' என்று வேகமாகச் சொல்லும் பேச்சையும் கேட்ட அவளுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை!

அவர்களில் வயசாளியான ஒருத்தன் இந்த இனிமையான சிரிப்பொலி வந்த திக்கில் பார்த்தான். கூர்ந்து பார்த்தான். கண்ணைக் கசக்கிவிட்டுப் பார்த்தான். தான் பார்ப்பது நிஜம் தானா என்பது போலிருந்தது. சென்னாவுக்கு அவன் அப்படிச் செய்தது வேடிக்கையாக இருந்தது. முத்துமாலைகள் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாய் விழுவதுபோல் அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்.

அன்று சென்னாதேவி நீலநிறத்தில் பட்டுப்பாவாடை கட்டியிருந்தாள். காவி நிறம் மாதிரியான ஒரு நிறத்தில் ஜரிகைப் புட்டா போடப்பட்டுள்ள பட்டுத்தாவணி அணிந்து அதன்மேல் வைரக்கற்கள் இழைத்த ஒட்டியாணம் அணிந்திருந்தாள்.

மாணிக்கக் கற்களின் மேல் பதித்த கண்களை எடுக்க முடியாமல் திண்டாடிய அந்த ரத்னவியாபாரிகள் இப்பொழுது இந்த ஸ்திரீரத்னத்தின் மேல் பதித்த கண்களை எடுக்க முடியாமல் திண்டாடினார்கள்!

அந்த வயசாளி அவர்களுடைய மொழியில் பகவானைத் தோத்தரிப்பது போல் கண்களையும் கைவிரல்களையும் ஆகாயத்தை நோக்கி உயர்த்தி ஏதோசொல்லி, சென்னாவைப் பார்த்து ஆசீர்வதிப்பது போலக் கைகளை அசைத்தார்.

அந்த வயசாளி அப்படிச்செய்ததில் ஒன்றும் அதிசயமில்லை. சென்னாதேவியைப் பார்க்கும் எந்தப் புதியவர்களும் இந்த மாதிரி ஏதாவது ஒன்றுசெய்ய நான் பார்த்திருக்கிறேன்.

ஒரு நாள் நாங்கள் கோவிலுக்குள் போய்விட்டு வெளியே வந்தபோது ஒருவன், கண்களுக்கு சென்னாதேவி மறையும் வரையிலும் அவளைப் பார்த்துக் கும்பிட்டுக் கொண்டே இருந்தான்.

இன்னொருநாள் அவளைக்கண்ட மற்றொருவன் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்திருந்துவிட்டுப் பிறகு மௌனமாக அழுதான்!

இதையெல்லாம்விட எங்கள் சின்ன வயசில் ஒன்று நடந்தது. அன்று நடு மத்தியானம். ஜனசந்தடி இல்லாத காட்டுப்பாதை. மூடு பல்லக்குக்குள் நானும் சென்னாவும் மட்டுமே இருந்தோம். அவளுடைய அம்மாவைப் பிறந்த வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்புகிற வழி. சென்னா என்னைத் தன் பக்கத்தில் இழுத்து உட்கார வைத்துக்கொண்டு சிறு குழந்தைகள் தங்களுக்குள் சொல்லி மகிழும் கதைகளில் ஒன்றை எனக்கு சுவாரஸ்யமாக சொல்லிக் கொண்டு வந்தாள். இரண்டு ஈக்களுக்குக் கல்யாணமாம். மாப்பிள்ளை ஈ என்னென்ன நகைகள் போட்டுக்கொண்டிருந்தது, பொண்ணு ஈ என்னென்ன நகைகள் போட்டுக்கொண்டிருந்தது தலையிலிருந்து பாதங்கள் வரை என்று வர்ணித்துக்கொண்டு வந்தாள். பொண்ணு ஈ கழுத்தில் அவ் . . . வளவு நகை போட்டுக் கொண்டிருந்ததாம். கழுத்தைத் திருப் . . . ப முடியலையாம். மாப்பிள்ளை ஈயின் முகத்தை ஒருதரம் பார்க்கணும்ணு

பொண்ணு ஈக்கு ரொம் . . . ப ஆசை. கழுத்தில் கிடக்கிற நகைகளோ கழுத்தைத் திருப்ப முடியாமல் செய்துகொண்டு இருக்கிறது. அந்த சமயத்தில் . . . என்று சென்னாதேவி சொல்லிக்கொண்டு வரும்போதே, மூடு பல்லக்கு பலமாக ஆடி எங்களைக் குலுக்கியது. நான் அவளைப் பலமாகச் சேர்த்துப் பிடித்துக்கொண்ட அதேவேளையில் வெளியே பரபரப்பான கூக்குரல்களும் சத்தங்களும் கேட்டது. மூடு பல்லக்கு தரையில் வைக்கப்பட்டது தெரிந்தது.

பல்லக்கு திறக்கப்படாமலே உள்ளேயிருந்து கொண்டு வெளியிலுள்ள காட்சிகளைப் பார்க்க வசதியான துவாரங்கள் உண்டு. அதுவழியாக நானும் சென்னாவும் என்ன என்று கவனித்தோம். எங்களைக் கொள்ளைக்காரர்கள் நாலுபக்கமும் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்த மனிதர்களைப் பார்க்கவே பயமாக இருந்தது. கருப்புநிற வேட்டிகளால் இறுக்கமாகத் தார்ப்பாய்ச்சிக் கொண்டிருந்தார்கள். குளிக்காத காட்டு யானைகள் மாதிரி மேலெல்லாம் மண்ணும் புழுதியும். உடம்பெல்லாம் அடர்ந்த செம்பட்டைபாய்ந்த ரோமக்கற்றைகள். எண்ணெய் படாத சிலிர்த்த தலைகள். அணில் வாலைப் போன்ற நீண்ட மீசைகள். பருத்த துருத்திய முழிகள். ஒவ்வொருத்தர் கையிலும் ஒரு வேல்.

"மூடு பல்லக்கை நீங்களே திறக்கிறீர்களா, இல்லை நான் திறக்கவா?" என்று கனமான குரல்கேட்டு நான் பதறிப் போனேன். சென்னாதேவியோ அமைதியாக துவாரத்தின் வழியாக அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவனுடைய முகத்தில் துல்லியமான பெரிதாக நெற்றியில் இட்ட குங்குமம் பளிச்சென்று தெரிந்தது. அதன் கீழ் நீளமாக இழுக்கப்பட்ட சத்தனக் கீற்று. கழுத்தில் துளசி மணிமாலை. கருநீல நிறத்தில் தார்ப்பாய்ச்சிக் கட்டிய வேட்டி, தோள்களில் நீளமாகப் போடப்பட்ட மஞ்சள் நிறப் பட்டு அங்கவஸ்திரம். முக்கால் பாக நீளமுள்ள, கண்ணைப் பறிக்கும் ஒளி வீசும் ஒரு வாளைக் கையில் ஏந்தியிருந்தான். வளர்ந் . . . த தாட்டியமான உருவம்.

யாரும் ஒன்றும் பேசவில்லை. அடுத்தகணம் என்ன நடக்கும் என்று யாருக்கும் திகையவில்லை. பளிச்சென்று சென்னாதேவி மூடுபல்லக்கின் கதவைத்

திறந்துவெளியில் இறங்கி நின்றாள். கூட்டத்தைப் பூராவும் ஒருதரம் தலையைத் தூக்கி முகத்தில் புன்னகையோடு மிகவும் நிதானமாக சுற்றிலும் பார்த்தாள். பின்பு அவளுடைய அருள்கண்கள் அந்தக் கொள்ளைக்கூட்டத் தலைவனிடம் வந்து நிலைத்தது.

சென்னாதேவி அப்படியே ஒரு சிலை மாதிரி நின்றுகொண்டிருந்தாள். அவள் முகத்தில் அந்தப் புன்னகை மாறவே இல்லை. அவளுடைய புல்லாக்கில் பதிந்திருந்த பெரிய வைரத்திலிருந்து ஒரு பிரகாசமான ஒளி பளீரிட்டது.

***

7

கொள்ளைக்கூட்டத் தலைவன் மெதுவாக நடந்து தேவியின் அருகில் வந்தான். அவன் எங்கள் அருகில் வந்ததும் கற்பூர வாசனை அடித்தது. வந்தவன், செம்பஞ்சு பூசப்பட்ட அவள் பாதங்களையே பார்த்துக்கொண்டிருந்தான், பிறகு அவன் அந்த வாளின் நுனியைத் தரையில் ஊன்றி ஒரு காலை மட்டும் மடக்கி மண்டியிட்டான். வாளின்மேல் கைகள் கோத்து இருந்தன. தலையைத் தாழ்த்தி கண்களை மூடிக்கொண்டான். பிறகு எழுந்து இரண்டடி பின்வாங்கி நின்றுகொண்டு கண்களை மூடி தியானத்தில் இருப்பவனைப் போல் சற்றுநேரம் இருந்து, தொண்டை கட்டிய ஒரு அழும் குரலில், 'அடே பொம்மா' என்று மெதுவாகக் கூப்பிட்டான்.

அரையில் இடைவாருக்குப் பதிலாக இரும்புச்சங்கிலி அணிந்த ஒருவன், வேலை இடதுகைக்கு மாற்றி அதைப் பின் பக்கமாகப் பிடித்துக்கொண்டு வலது கையால் வாயைப் பொத்திக்கொண்டு, தலைவருக்கு இடதுபக்கத்தில் வந்து சற்றே குனிந்து நின்றான்.

"இந்த வனம் முடிகிறவரையிலும் இவர்களோடே நீ போய் வழியனுப்பிவிட்டு வா" என்று சொன்னான். சொல்லிய பிறகும் அவன் அதே நிலையில் நின்றுகொண்டிருந்தான்.

கூட்டம் விலகி வழி கொடுத்தது. பொம்மன் வேலை மார்பில் சாத்திக்கொண்டு, இரண்டு கைகளையும் மரியாதையாக, கதவு திறந்திருந்த பல்லக்கின் ஆசனங்களை எங்களுக்குக் காட்டினான்.

சென்னாதேவி அதே கம்பீரத்தில் பல்லக்கினுள் என் அருகே வந்து அமர்ந்தாள். பல்லக்கின் கதவு அடைக்கப்பட்டதும் பிரயாணம் தொடர்ந்தது. பயந்த என் முகத்தைக் கண்ட சென்னா, "செல்லீ2 பயந்து போயிட்டியா!" என்று என்னை அணைத்துக்கொண்டு சிரித்தாள்.

எங்களுக்குப் பிறகுதான் தெரிந்தது, அவன்தான் பிரபலமான கொள்ளைக்காரன் மல்லையா என்று. திடுக்கிட்டுப் போனோம்!

கோயிந்தப்பா, அவன்செய்த கொலைகளுக்கும் கொள்ளைகளுக்கும் கணக்கு வழக்கே இல்லை. சென்னாதேவியை அவன் கொல்லாமலும் அவளிடமிருந்த நகைகளை அவன் பறித்துக்கொள்ளாமலும் விட்டதுக்குக் காரணம் அவளுடைய தெய்வீக அழகுதான். அது பூஜிக்கிற அழகு.

மல்லையா பெரிய்ய கொள்ளைக்காரன்தான் என்றாலும் மகாபக்திமான். பெண்களைத் தாயாக நினைப்பவன். அவன் பூஜிக்கிற சண்டிகா தேவியின் வீர அழகை சென்னாதேவியிடம் அவன் தர்சித்தான் போலிருக்கிறது.

ஆனால் கோயிந்தப்பா, பெண்ணுக்கு இப்படி ஒரு அழகு இருந்தால் அவள் சௌக்யமாக வாழவே முடியாது. சென்னாதேவிக்கு எந்த அழகு கீர்த்தியைக் கொடுத்ததோ, அதே அழகு அவளுக்கு சோகத்தையும் கொடுத்தது. இது அவளுக்கும் அவளுடைய குடும்பத்துக்கு மட்டுமில்லை; அந்த சமூகத்துக்கும் துன்பம் கொடுத்தது என்று சொல்லிவிட்டு பூட்டி கொஞ்சம் ஓய்வாக இருந்துவிட்டு, பிறகு தொடர்ந்தாள்.

சென்னாவின் வீட்டுக்கு முதலில் வந்த துலுக்கர்களான ரத்ன வியாபாரிகளைப் போலவே ரெண்டாவது தரமும் சில வியாபாரிகள் வந்தார்கள். இவர்கள் ரத்தினங்களை விற்பவர்கள் என்று வந்தார்கள். இவர்களிடம் வேண்டிய அளவு கெம்புக் கற்கள் இருந்தது. சென்னாவின் தகப்பனார் சிகப்பு பார்ப்பதில் தேர்ந்தவர். அவரே ஒரு பொற்கொல்லரின் உதவியுடன் வேண்டிய கற்களை அவர்களிடமிருந்து தேர்ந்தெடுத்தார்.

அவர்கள், ஏற்கெனவே தங்களிடம் ஒரு மாணிக்க மாலை இருப்பதாகவும் அதை வேண்டுமானாலும் பார்க்கலாம் என்றும் சொன்னார்கள்.

அதை வாங்கிப் பார்த்த பெரியப்பா — சென்னாவின் தகப்பனார் — அசந்து போனார்! அப்புறம் அவர் சொன்னார், இது மனிதர்கள் அணியக்கூடியதில்லை; கோயிலுக்கு உரியது என்று சொல்லிவிட்டு, இதை வேண்டுமானால் நாம்

வாங்கி திருப்பதியிலுள்ள அலர்மேலுமங்கைக்குச் சாத்தலாம் என்றார். பாதி உண்மையாகவும் பாதி வேடிக்கையாகவும்.

ஆனால், அது விலை திகையவில்லை. அவர்கள் சொன்ன விலைக்கும் இவர்கள் நினைத்ததுக்கும் ஏணிபோட்டாலும் எட்டாது.

சென்னாவின் பாட்டிக்கு, இதை நாம் வாங்கத்தான் முடியலை; எப்படி இருக்கிறது என்று சென்னாவின் கழுத்தில் போட்டுப் பார்க்கலாமே என்று தன் ஆசையை வெளியிட்டாள். பெரியப்பா, அதெல்லாம் கூடாது; வாங்குகிறதாக இருந்தால் மட்டுமே போட்டுப் பார்க்கணும்; வெறுமனே அதெல்லாம் கூடாது; அது முறையில்லை என்று தடுத்துப் பார்த்தார். ஆசை யாரை விட்டது! "நாமதான் மாலை செய்யப் போறமே; வேண்டாம் அம்மா இது" என்று திரும்பவும், சொல்லிப் பார்த்தார் பெரியப்பா.

நீ பேசாமல் இருடா என்று சொல்லிவிட்டு உள்ளே திரும்பி, "நா அபரஞ்சீ" என்று கூப்பிட்டாள். அவள் சென்னாவை அபரஞ்சி என்றுதான் செல்லமாகக் கூப்பிடுவாள்.

இவ்வளவையும் ஜன்னல் மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த சென்னா, பாட்டியின் கையிலிருந்த மாணிக்க மாலையைப் பார்த்ததும் வெளியே வந்துவிட்டாள்.

மாலையை அணிந்த சென்னாதேவியின் அழகு ரெண்டு மடங்கு ஆயிற்று.

திருஷ்டி விழாமல் இருக்க, பாட்டி அவள் கன்னங்களைத் தடவி இரண்டு கைவிரல்களையும் மடக்கி அழுத்தி சடசடவென்று சொடக்குகள் விழ வைத்தாள்.

கோயிந்தப்பா, அந்தத் துலுக்க வியாபாரிகளை நாங்கள் நிஜமான வியாபாரிகள் என்று நினைத்து மோசம் போனோம். அவர்கள் அப்பொழுது எங்களை அரசாண்ட துலுக்க ராஜாவின் கையாட்கள் என்பதை நாங்கள் அறியவில்லை.

மறுநாள் காலை எங்கள் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் நல்லமுறையில் விடியவில்லை. அதிகாலையிலேயே எங்கள் வீட்டுக்கு முன்னால் துலுக்க ராஜாவின் பட்டாளமும் அந்தப்புர மூடு பல்லக்குகளும் வந்து நின்றன. நாங்கள் வீட்டைவிட்டு ஓடிப்போகாமலிருக்க சுற்றிலும் பாராக்காரர்கள். வந்தவர்கள், இதை நாங்கள் தப்பிதமாக எங்கே நினைத்துக்கொள்வோமோ என்று, அது மரியாதைக்காக என்று எங்களிடம் சொன்னார்கள்!

ராஜாவின் காரியஸ்தர் ஒரு பிராமணனைப் போலிருந்த வயசாளி; அவர்தான் எங்கள் பெரியப்பாவைக் கூப்பிட்டு, பல்லக்குகளில் கொண்டு வந்திருந்த வைர வைடூரிய நகைகளையும் முத்துமாலைகளையும் பட்டாடைகளையும் ராஜாவின் மற்ற சன்மானங்களையும், மரியாதைகளையும் ஏற்றுக்கொள்ளும்படி சொன்னார். ராஜாவினுடையதை மறுக்க முடியுமா? ஆனால் துலுக்க ராஜாவிடமிருந்து வரும் இப்படி மரியாதைகளை ஏற்றுக்கொள்வதிலுள்ள அபாயங்களையும் நாங்கள் கேள்விப்பட்டிருந்தோம்.

கடேசியில் நாங்கள் பயந்தபடி ஆயிற்று. வந்தவர்கள் சென்னாதேவியை துலுக்க ராஜாவுக்குப் பெண் கேட்டார்கள். அந்த வயசான 'பிராமணன்' பெரியப்பாவைப் பார்த்து, "அப்பாயி, நீ ஒண்ணும் பயப்படாதே. ராஜா உன் பொண்ணைக் கல்யாணம் செய்து தனக்கு ராணியாக ஆக்கிக் கொள்ளவே இஷ்டப்படுகிறான். உனக்கும் உன் குடும்பத்துக்கும் அதிர்ஷ்டம் வந்திருக்கு; யோஜிக்காதே" என்று சொன்னான்.

பெரியப்பா ஒன்றும் பேசவில்லை. அந்தப் பிராமணனையே பார்த்துக்கொண்டிருந்தார். பிராமணன் பளிச்சென்று சுற்றிலும் ஒரு கண்வீச்சு பார்த்துவிட்டு முணுமுணுக்கும் குரலில் பெரியப்பாவின் தோளில் கை வைத்துக்கொண்டு "மாட்டேண்ணு நீ சொன்னாலும் உன் மகளை அவன் தூக்கிட்டுப் போகத்தான் போறான். கடவுள்விட்ட வழிண்ணு பேசாமல் சம்மதிச்சுடு" என்றான்.

காரியஸ்தனின் கையை பெரியப்பா தனது தோளிலிருந்து தள்ளினார்.

தனது மகள் இவ்வளவு அழகாய் இருக்காளே என்று பெருமைப்பட்ட சென்னாவின் தாய், ஐயோ இவள் ஏன் இவ்வளவு அழகோடு பிறந்தாள் என்று கண்ணீர் விட்டாள்.

யாரும் எதுவும் பேசவில்லை; பேச்சுநின்று போய்விட்டது. அன்ன பானம் கிடையாது. வீட்டில் ஒரு துக்கம் நடந்திருந்தால்கூட இவ்வளவு வருத்தப்பட்டிருக்க மாட்டார்கள்.

பெரியவர்கள் யோசித்து யோசித்துப் பார்த்தார்கள். ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை அவர்களால். எல்லோரும் எதையாவது தின்று இறந்து போய்விடலாம் என்றாலும் முடியாதுபோலிருக்கு; வந்தவர்கள் சூழ்ந் . . . து கொண்டிருக்கிறார்கள். புறப்பட்டுப் போவதாகத் தெரியவில்லை. யோசித்துச் சொல்கிறோம் என்று சொன்னாலும் நகருவதாக இல்லை.

பாட்டி பெரியப்பாவை பூஜை அறைக்குள் கூட்டிக்கொண்டு போனாள். பெரியம்மாவும் அங்கே போனாள். எல்லோரும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு சத்தமில்லாமல் அழுதார்கள்

எவ்வளவு நேரம்தான் அழமுடியும்?

குடும்பத்தார் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்க பாட்டி குத்துவிளக்கைப் பிரகாசமாகத் தூண்டினாள். திருப்பதி மலை இருக்கும் திசையை நோக்கி, "ஓ ஏடுகொண்டலவாடா; ஸ்ரீனிவாசமூர்த்தி . . ." என்று உரக்கச்சொல்லி பூமியில் விழுந்து நமஸ்கரித்தாள். எழுந்திருந்து இரண்டு வெற்றிலையை எடுத்து ஒன்றில் செவ்வரளிப்பூவையும் இன்னொரு இலையில் பிச்சிப்பூவையும் திருத்துளாயையும் வைத்துக்கட்டி குலுக்கிப் போட்டாள்.

"மங்கத்தாயாரு" என்று பெயர் சொல்லி பாட்டி என்னை அழைத்தாள். நான் போய் விளக்குநாச்சியாரை விழுந்து கும்பிட்டு, அதில் ஒன்றை எடுத்து பாட்டியிடம் கொடுத்தேன்.

பாட்டி அதைப் பிரிப்பதை எல்லோரும் ஆவலோடு பார்த்தோம். பிரித்த வெற்றிலையில் பிச்சிப்பூவும் திருத்துளாயும் இருந்தது! "பகவானே . . . நீ என்ன நினைச்சிருக்கே என்பது உனக்குத்தான் தெரியும்; எங்களுக்கு ஒண்ணும் தெரியலையே அப்பா . . ." என்று பாட்டி அழுதுகொண்டே, அதைத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு பெரியப்பாவிடம் கொடுத்தாள்.

***

8

ராஜாவின் அரண்மனையிலிருந்து வந்த சேடிப் பெண்கள் சென்னா தேவியை அலங்காரம் செய்தார்கள். எத்தனையோ கழுத்தணிகளுக்கு மத்தியில் அரண்மனையிலிருந்து ராஜாவால் கொடுத்தனுப்பப்பட்ட அந்த மாணிக்க மாலை சென்னா தேவியின் கழுத்தையொட்டி அளவெடுத்ததுபோல் அவ்வளவு பொருத்தமாக இருந்தது. அவள் ராணி ஆவதற்காகவே பிறந்தவள். தலையில் கிரீடம் வைக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி.

அரண்மனைக்குக் கொஞ்சதூரத்தில், எங்கள் குடும்பத்தாரும் சுற்றத்தார் பலரும் தங்குவதற்குப் பல மண்டபங்களையொட்டி கொட்டகைகள் போட்டு அதில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அது மழைக்காலத்தின் முன்னிரவு நேரம். விடிந்தால் கல்யாணம். நீண்ட பிரயாணத்தினால் எல்லோரும் அசதியினாலும் பசியினாலும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். முழுப் பனை மரங்களை இடுப்புயரத்துக்கு அப்படி அப்படியே குறுக்காக வெட்டி அதைத் தரையில் நட்டமாக நிறுத்தி வைத்து அதன் மேல் அகலமான உலைமூடிகளை வைத்து அதில் நிறைய எண்ணெய் விட்டு மூன்று விரல் தண்டியுள்ள நூல் சிட்டங்களைப் போட்டு எரியவிட்டிருந்தார்கள். இந்தப் பனை விளக்குகள் ஐந்து பாகங்களுக்கு ஒன்று வீதம் எரிந்து கொண்டிருந்தன.

கொட்டகையைச் சுற்றிப்பார்க்கும் ஆவலில் எங்களில் சிலர், எங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமையல் புறை பக்கம் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தார்கள். அங்கே ஒரு ஒதுக்குப்புறமாக ஒரு பெரிய கூடை கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தது. எங்களில் யாரோ ஒருவர் அது என்னது என்று தற்செயலாகத் திறந்து பார்த்தார். உடனே எல்லோரும் பதறிப் போய்விட்டார்கள். அது வெட்டிய ஒரு பசுமாட்டின் தலை!

ஆஹா, மோசம் போய்ட்டமே; இதுதான் நமக்கு நடக்கும் சமையலா! என்ன ஆனாலும் சரிதான், இங்கிருந்து நாம் தப்பி ஓடிப்போயிற வேண்டியதுதான் என்று ரகசியமாக உடனே தீர்மானம் செய்தோம்.

நாங்கள் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி, 'வெளிக்கு'ப் போகிறமாதிரி கொஞ்சம் கொஞ்சம் பேராய்க் கிளம்பினார்கள். சென்னா தேவியின் அலங்காரம் கலைக்கப்பட்டு, அந்த துலுக்க ராஜா கொடுத்த ஆடை, ஆபரணங்கள் எல்லாத்தையும் அங்கேயே ஒரு மறைவிடத்தில் வைத்துவிட்டு, அவள் ஒரு பழைய ஆடையைக் கட்டி மறைத்துக்கொண்டு, ரொம்ப சாதாரணமாகவும் பரபரப்பு இல்லாமலும் நாங்கள் ஊருக்கு வெளியிலுள்ள ஒரு தோப்பில் வந்து கூடினோம்.

எங்கள் மேல் யாருக்கும் அங்கே சந்தேகமில்லாததால் யாரும் எங்களைத் தொடரவில்லை. பாதிப்பேர் கொஞ்சம் கொஞ்சமாக கொட்டகைக்குத் திரும்பிப்போகிறது என்றும், பாதிப்பேர் சென்னாதேவியுடன் தப்பித்து ஓடிவிடுவது என்றும், கொட்டகையில் உள்ளவர்களை சாப்பிடும்படி உபசரித்தால் இன்று இரவு மட்டும் விரதம், காலையில் ஆகாரம் செய்கிறோம் என்று சொல்லிவிடுவது என்றும், ராத்திரி எல்லோரும் தூங்கிய பிறகு அவர்களும் தப்பித்து ஓடிவிடுவது என்றும் தீர்மானித்தோம்.

நாங்கள் சென்னாவைக் கூட்டிக்கொண்டு காட்டுப்பாதையில் வேகமாக நடந்தோம். தெற்கு நோக்கிப் போக வேண்டும் என்பது எங்கள் திட்டம். ஆனால் இப்பொழுது எந்தத் திசையில் போகிறோம் என்று தெரியவில்லை. வானத்தில் மேகங்கள் கூடி நட்சத்திரங்களே தெரியவில்லை. எந்த நேரமும் மழை வரும் போல் இருந்தது.

எவ்வளவு வேகமாக எங்களால் நடக்கமுடியுமோ அவ்வளவு வேகமாக நடந்தோம். வழியெல்லாம் முள்ளாக இருந்தும் காலில் ஒரு முள்கூட தைக்கவில்லை! மின்னலையும் இடியையும் கண்டு எங்களுக்கு பயமே தோணவில்லை. பின்னால் யாரோ எங்களை வெட்டுவதற்கு வாளை உருவிக்கொண்டு குதிரை மேல் ஏறி துரத்திக்கொண்டு வருவதாக ஒரு

அருக்கு. ஒரே ஓட்டம். ஓடமுடியாத நேரத்திலெல்லாம் நடந்தோம்; நடையோட்டம்.

மின்னல் எங்களுக்கு வழி காட்டும்போது சந்தோஷமாக இருக்கும்; அதே மின்னல் எங்களைக் காட்டியும் கொடுத்துவிடுமோ என்று பயம்.

கடைசியில், இனி நடக்கமுடியாது என்று உடம்புக்கு ஒரு நிலைமை வந்ததும்தான் ஒரு இடத்தில் உட்கார்ந்தோம்.

பெரியப்பா சொன்னார் பாட்டியிடம், "அம்மா இனியும் நீங்கள் நடப்பது என்பது முடியாது. இங்கே எங்காவது பக்கத்து கிராமத்தில் நம்முடைய இந்து மதத்தைச்சேர்ந்த பெரியவர்கள் யாராவது இருப்பார்கள். அவர்களிடம் போய் நான் உங்களுக்கு அடைக்கலம் கேட்டு வருகிறேன். நீங்கள் அமைதியாக தைரியமாக இங்கேயே இருங்கள். விடிவதற்கு இன்னும் கொஞ்ச நேரமே இருக்கும் என்று தோணுகிறது" என்று அலுப்பில் மூச்சு இறைத்துக் கொண்டே சொன்னார்.

பாட்டியால் பேச முடியவில்லை; அவ்வளவு அலுப்பு. பெரியப்பாவின் வாயை மட்டும் பொத்தினாள். பிறகு கொஞ்சம் அசுவாசம் அடைந்து, "அப்பாயி, நீ இங்கே எங்களை விட்டுட்டுப் போறதாவது!; அதைவிட உன் கையால் எங்களைக் கொண்ணு போட்டுப் போயிறலாம். அப்பா, இந்த கணத்தில் நாம் பிரியவே கூடாது; நமக்கு சாவு வந்தாலும் சரி, வாழ்வு வந்தாலும் சரி; நமக்கு எல்லாம் அவனே துணை" என்று கைகளையும் தலைமீது குவித்து வைத்துக்கொண்டாள்.

ஓடிக் களைத்த மான்குட்டி போல் பக்கத்தில் அமர்ந்திருந்த சென்னாதேவியைப் பாட்டி பிரியத்தோடு தனது மடிக்கு இழுத்து அவளைத் தனது மடியில் தலைவைத்துப் படுத்துக்கொள்ளும்படி செய்து "பங்காரு; நா அபரஞ்சி" என்று சொல்லிக்கொண்டே உடம்பைத் தடவி விட்டாள். பின்பு தொண்டை அடைக்க "சீத்தா பிறந்தாள்; லங்கை அழிஞ்சது. நீ பிறந்ததினால் எந்த துலுக்க நாடு அழியப்போகுதோ . . ." என்றாள் பாட்டி.

இதைக் கேட்ட பெரியப்பா துக்கத்தோடு சிரித்தார். "துலுக்க நாடு ஒண்ணும் அழியராப்லெ தெரியலை; நாமதான் அழிஞ்சிக்கிட்டிருக்கோம் இப்பொ" என்றார்.

தூரத்தில் கொள்ளிவாய்ப் பிசாசுகள் போல் வரிசையாக தீப்பந்தங்கள் தெரிய ஆரம்பித்தது. பயங்கரமான மனித ஓலங்களும் அதைத் தொடர்ந்து கேட்க ஆரம்பித்தன.

நம்மைத்தான் தொடர்கிறார்கள் என்று பெரியம்மா சொன்னாள். வேட்டையில் மருண்டு உயிருக்குப் பயந்து ஓடும் மிருகங்களைப்போல் பழையபடியும் ஓட ஆரம்பித்தோம். இந்த அலுப்பிலேயே ஈரல் வெடித்து இறந்து போய்விட்டால் தேவலையே என்று இருந்தது.

நேரம் விடிந்துகொண்டே இருந்தது. மழை கொட்ட ஆரம்பிக்கும்போல் இருந்தது.

பல்லென்று விடிந்தபோது ஒரு நதிக்கரையை அடைந்திருந்தோம். நதியில் வெள்ளம் கரைபுரண்டு போய்க்கொண்டிருந்தது. இனி முன்னால் ஓட முடியாது. நதி எங்களைக் குறுக்காட்டி நிறுத்திவிட்டது. படகோ படகோட்டிகளோ இருந்தால் அக்கரைக்குப் போய்விட்டால் கொஞ்சம் நிம்மதி.

என்ன செய்வது என்று திகைத்து நின்றுகொண்டிருந்தபோது எங்களைத் துரத்திக்கொண்டு தூரத்தில் குதிரை வீரர்கள் நிறையப் பேர் கையில் ஈட்டிகளோடு எங்களைப் பார்த்து வேகமாய் வருவது தெரிந்தது.

உயிரோடு துலுக்கர்களிடம் சிக்குவதைவிட பொங்கி ஓடும் இந்த நதியின் வெள்ளத்தில் குதித்து எல்லோருமே மாண்டு போவது என்று தீர்மானித்தோம் என்று சொல்லிக்கொண்டு வந்த பூட்டியின் முகம் தயங்கி இந்த இடத்தில் சொல்லொணாப் பரவசம் ஆகியது.

கோயிந்தப்பா . . . கோயிந்தப்பா, அந்த சமயத்தில்தான் அந்த அற்புதம் நடந்தது.

நதியின் எதிர்க்கரையில் கோபுரம் உயரமிருந்த ஒரு பிரம்மாண்டமான அரசமரம் அப்படியே இக்கரைக்கு எங்களை நோக்கி வளைந்தது. நாங்கள் முதலில், அந்த மரம் ஒடிந்துதான் நதியின் குறுக்கே சாய்கிறதோ என்று நினைத்தோம். நாங்கள் நின்றுகொண்டிருந்த கரையை அதன் கிளைகள் தொட்டு கொஞ்சநேரம் இருந்துவிட்டுத் திரும்பவும் நிமிர்ந்தபோதுதான் ஏதோ தெய்வ சங்கல்பம் நடக்கிறது என்று அறிந்துகொண்டோம். இதை எங்களில் முதலில் அறிந்து கூக்குரலால் சொன்னவள் எங்கள் பாட்டிதான்.

நட்டமாக நிமிர்ந்த மரம் திரும்பவும் எங்களை நோக்கி வளைந்தது. "என் குழந்தைகளே, என் மக்களே இந்த அரசமரத்தின் கிளைகளைப் பத்திரமாகப் பிடித்துக்கொள்ளுங்கள். இது நம்மைக் காப்பாற்றி அக்கரை கொண்டு சேர்க்கும்" என்று பாட்டி கூவினாள்.

இக்கரையின் தரையைத் தொட்ட அந்த அரசமரத்தின் கிளைகளின் மீது ஏறி கெட்டியாகப் பிடித்துக்கொண்டோம். குதிரை வீரர்கள் எங்களை நெருங்கும் சமயத்தில் நாங்கள் பற்றியிருந்த மரம் நிமிர ஆரம்பித்தது. தாங்க முடியாத சந்தோஷ மிகுதியால், எங்கே எங்கள் கைகளை விட்டுவிடுவோமோ என்று பயந்தோம்!



அந்தக் குதிரை வீரர்கள் எங்களைப் பார்த்தது பார்த்தபடியே திகைத்து நின்றது இன்னும் என் கண்முன்னாடி அப்படியே தெரிகிறது. கோயிந்தப்பா, அரசமரத்தை நம்ம பெரியவர்கள் தலைமுறை தத்துவமாய் சுத்திசுத்தி வந்து கும்பிட்டது வீண் போகலை.

நாங்கள் அக்கரையில் தரையிறங்கியதும் பிடித்த மழை போல் நான் எண்ணைக்குமே பார்த்ததில்லை. மறுகரையிலுள்ள குதிரை வீரர்கள் மட்டுமில்லை, எங்களுக்குப் பக்கத்திலுள்ள ஒருவரை ஒருவர்கூடத் தெரியாத அளவு அப்படி ஒரு மழை என்று சொல்லிக்கொண்டே வந்த மங்கத்தாயாருவின் கண்களிலிருந்து நீர் கொட்டியது. பகவானே; எம்பெருமானே என்று உரக்க அழைத்துவிட்டு தலைக்குமேல் கைகூப்பி உணர்ச்சி வயப்பட்டுப் பாட ஆரம்பித்துவிட்டாள்.

சரி; கதை இன்று இவ்வளவுதான் என்று ஒவ்வொருவராகக் கலைய ஆரம்பித்தார்கள்.

***

9

அக்கையாவுக்கு, "திவான் அக்கையா" என்று ஒரு கேலிப்பெயர் பிற்காலத்தில் ஏற்பட்டது. அவர் காலத்தில் அவர் கோட்டையார் வீட்டுக்கு மேல் பார்த்தார் என்கிற காரணத்தால் கிராமத்தார் அப்படி வேடிக்கையாகக் குறிப்பிடுவார்கள்.

சின்ன வயசிலிருந்தே அவர் வேடிக்கைக்குப் பேர் போனவர். யாரும் அவரைக் கிண்டலோ கேலியோ செய்ய முடியாது. யார் வழிக்கும் போகமாட்டார்; யார் தனது வழிக்கு வந்தாலும் விடமாட்டார்.

ஒரு சமயம் துணிநெய்பவர்கள் தலைச்சுமையாக விற்பதற்கு சேலைகள் கொண்டு வந்திருந்தார்கள். கோட்டையார் வீட்டில் எல்லாரும் துணிகளை எடுத்துப் பார்த்தார்கள். அக்கையாவும் பார்த்தார். சில துணிகளின் நிறங்கள் மனசைக் கவர்வதாக இருந்தது. அவை நெசவான செய் நேர்த்தி, இவைகளை கவனித்து மனசுக்குள் பாராட்டிக் கொண்டிருந்தார்.

அங்கே வந்த சுந்தரப்ப நாயக்கர் இவரிடம் வேடிக்கைக்காக "இந்தச் சேலை சாயம் போகுமா?" என்று கேட்டார்.

அவ்வளவுதான்!

அவருக்கே உண்டான பார்வையோடு சுந்தரப்ப நாயக்கரைப் பார்த்து அந்தச் சேலையைக்காட்டி "குளத்துத் தண்ணியிலே அலசுனா சாயம் போகாது . . ." என்று சொல்லி நிறுத்தினார். அவர் அப்படிச் சொன்னது யாருக்கும் புரியலை. நெசவாளிகள் அவரை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். அந்தப் பார்வை 'அதென்ன குளத்துத் தண்ணியிலே அலசுனா சாயம் போகாது?' என்று கேட்பது மாதிரி இருந்தது.

அக்கையா நிறுத்தின இடத்திலிருந்து தொடர்ந்தார். " . . . ஆத்துத் தண்ணியிலே அலசுனா சாயம் போயிடும்! . . . ஏன்னா குளத்துத் தண்ணியெச்

சுத் . . . தி நாலுபக்கமும் கரை போட்டிருக்கு; சாயம் போகாது!"

நெசவாளிகளுக்கும் மற்றவர்களுக்கும் அதுக்கப்புறம்தான் புரிந்தது அவர் கொண்டுவந்த தோரணை. ரொம்ப நேரம் அதை அனுபவித்துச் சிரித்தார்கள்.

அக்கையா பிறந்த குடும்பத்தில் அவரைத் தவிர வேறு யாரும் கிடையாது. ஒரு தடவை அந்த கிராமத்தில் 'விளையாண்ட' பயங்கரமான பெரியம்மை நோயில் அவர்கள் அனைவருமே இறந்து போய்விட்டார்கள்.

அவருக்கு ஒரு சின்ன வீடு மட்டுமே உண்டு. அவர் அனாதையாக ஆனதும் மங்கத்தாயாரு அம்மாள் தங்களுடைய கோட்டையார் வீட்டுக்கு அவரைக் கூட்டிக் கொண்டு வந்துவிட்டாள்.

அக்கையா ரொம்ப நாள் தனது குடும்பத்தாரை நினைத்து அழுதுகொண்டே இருந்தார். அப்புறம் யாரோடும் பேசாமலே கொஞ்ச நாள் இருந்தார். சொன்ன வேலைகளை மௌனமாகச் செய்வார். போட்டு வைத்ததை, நினைத்தால் சாப்பிடுவார். மற்ற நேரங்களில் தரையில் கிடக்கும் ஏதாவது ஒரு துரும்பை வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டே இருப்பார். அப்படிச் சமயங்களில் அவரைப் பார்த்தவர்கள் நெஞ்சம் உருகிப்போவார்கள்.

நாளாவட்டத்தில் அவர் அதிலிருந்து தேறி, அவரில் ஒரு புதுமை தோன்ற ஆரம்பித்தது. வாய் சிரிக்கவே செய்யாது என்றாலும் அந்தப் பையனின் கண்களில் ஒரு குறும்புத்தனம் பளிச்சிட ஆரம்பித்தது. பிறவியிலேயே ஒரு அசாத்திய சுறுசுறுப்பு; வேலையில் யாரும் அவரோடு போட்டிபோட முடியாது பிராயத்தில். யோசனையிலும் நுட்பத்திலும் வல்லவரானார்.

ஒரு சமயம் கோட்டையார் நாரணப்ப நாயக்கர் கம்மம்புல் களஞ்சியத்தை சுத்தப்படுத்த அதற்குள் இறங்கப் போனார். உள்ளே 'சீத்'தடிக்கும் சத்தம் கேட்டு உஷாராகி கவனித்துப் பார்த்தார். இரண்டு நல்ல பாம்புகள்! எப்படியோ வெத்து தானியக் களஞ்சியத்துக்குள் விழுந்து கிடந்தது. அதற்குள் எப்படி வந்து விழுந்தது என்று எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம். பாம்புகளைக் கொல்லாமல் முடியாது; எப்படிக் கொல்றது? எல்லோரும் மலைத்து நின்று

கொண்டிருந்த போது, அக்கையா பழைய கம்பளிகளைக் கிழித்து இரண்டு கால்களிலும் சுற்றி பாதங்களையும் முழங்கால்வரையும் மறைத்து, அதன்மேல் அது அவிழ்ந்துவிடாதபடி இருக்க கயிறுகளைக்கொண்டு சுற்றிக் கட்டிக்கொண்டு கையில் 3குத்துத்தரத்தை எடுத்துக்கொண்டு களஞ்சியத்துக்குள் குதித்து பாம்புகளைக் குத்திக் கொன்றார். அப்பொழுது அவருக்கு வயசு பதினாலு.

சாதாரணமாக அவர் ஓடுகிற பாம்பை லாவகமாக அதன் வாலைப்பிடித்து வேகமாகச் சுழற்றி தரையில் அடித்துக் கொன்றுவிடுவார்.

பாம்புகளைக் குத்திக் கொன்ற அந்த சம்பவம் அவரைப் பற்றி மற்றவர்கள் அறியவும், அவரைப்பற்றிப் பேசவும் கிராமத்துக்கு ஒரு சந்தர்ப்பமாக வாய்த்தது.



அவருடைய இருபத்தி ஒண்ணாவது வயசில் இன்னொரு சம்பவம் நடந்தது. கோபல்ல கிராமத்தின் தெற்கே இருக்கும் உடங்காட்டிற்கு அவர், முள்வேலிக்கு உடைமுள் வெட்டிக் கொண்டுவரப் போயிருந்தார்.

முள்ளை வெட்டி, ஓராள் சுமக்கிற அளவு ஒரு கவையாகச் சேர்த்து அதனுள் கவைக்கம்பைப் புகுத்தி எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு ரெண்டு கைகளாலும் கவைக் கம்பைத் தாங்கிப்பிடித்துக்கொண்டு நடந்து வரும்போது, ரெண்டு திருடர்கள் வந்து இவரை மறித்து காதிலுள்ள கடுக்கன்களைக் கழத்திக் கொடுத்துவிட்டுப் போகும்படி சொன்னார்கள்

"யப்பா, ஒங்களுக்கு கடுக்கன்தானே வேணும்? நான் இப்பிடியே நிக்கேன்; மகராசனா வந்து ஆளுக்கொண்ணாய் கழத்திக்கிட்டு போங்க" என்று சொன்னார். அவன்களும் ஆளுக்கொரு பக்கமா வந்து கடுக்கனைக் கழத்த வந்தான்களோயில்லையோ, அப்படியே ரெண்டு கக்கத்திலேயும் ரெண்டு பயல்களை இடுக்கிக்கொண்டு தலையிலேயும் ஒரு கவை முள்ளையும் சுமந்துகொண்டு ஊருக்குள்ளேயே கொண்டுவந்துவிட்டார்!

ஊரே கூடி அதிசயப்பட்டது அவருடைய பலாட்டியத்தை, இளவட்டங்கள் அந்தத் திருட்டுப் பயல்களை ஊர்க் கம்மாய்க் கரை அத்திமரத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு புளிய விளாறுகளைக்கொண்டு வெளுவெளு என்று வெளுத்தார்கள். சுத்துப் பட்டிகளிலிருந்தெல்லாம் கேள்விப்பட்டு இதைப் பார்க்க வந்தார்கள்.

ரெண்டுநாள் அந்தப் பயல்களை அப்பிடியே தொங்கவிட்டிருந்து பிறகு அவிழ்த்துவிட்டு "ஓடிப்போங்கடா சின்னப்பய புள்ளைகளா; இனிமெ இந்தத் தெசையிலெ தலைவச்சிப் படுத்துராதீகெ; பிழைச்சிப் போங்க" என்று சொல்லிவிட்டார்கள்.

அக்கையாவின் இந்த பலத்திற்குக் காரணம் அவருடைய பிரம்மச்சரியமே என்று கோவிந்தப்ப நாயக்கர் அடிக்கடி சொல்லுவார். முக்கியமாக அவருடைய கடைக்குட்டித் தம்பி இருக்கும்போது இதைக் கொஞ்சம் அழுத்தத்தோடு சொல்லுவார்!

அவருடைய பிரம்மச்சரியத்தைப் பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் கூட கேலி செய்வார்கள். ஆனால் இதில் ஒரு வித்தியாசம் உண்டு; ஆண்கள் அவருக்கு எதிரே இதைப் பற்றி ஒன்றும் சொல்ல மாட்டார்கள். பெண்கள் அப்படி

இல்லை. அவர்கள் எதிரே என்ன சொன்னாலும் அவர்களை மன்னித்துவிடுவார்; 'பழி' வாங்கமாட்டார்.

***

10

ஒருநாள் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு உடம்பு சௌகரியமில்லை. அதனால் அன்றைக்கு கலப்பை பிடிக்க அவருக்கு பதிலாக சுந்தரப்ப நாயக்கர் வந்தார். மந்தப் புஞ்சையில் எழுப்படிப்பு நடந்துகொண்டிருந்தது. கோடை உழவு முடிந்து, முதல் மழை பெய்ததும் விதைப்புக்குக் தயாராக்க நிலத்தை உழ ஆரம்பிக்கும் உழவுக்கு எழுப்படிப்பு என்று சொல்லுகிறது. இப்படி உழுது வைத்தால்தான் அடுத்துப் பெய்யும் மழை நீர் நிலத்தை நன்றாக நனைக்கும். அதோடு பெய்த முதல் மழையில் முளைவிட்ட களைகளும் போகும்.

அதற்கு முன்னாலெல்லாம் ஒத்தைக் கலப்பை வைத்து தான் எழுப்படிப்பு செய்துவந்தார்கள். அதனால் வேகமாக நிலத்தை உழுவதற்கு முன் ரெண்டாவது மழை வந்துவிடும். சம்சாரிகள், "அய்யோ அதுக்குள்ளே மழை வந்துட்டதே" என்று முணுமுணுப்பார்கள். அக்கையா நினைத்தார், ஒரே ஜோடி மாட்டில் இரண்டு கலப்பைகளைச் சேர்த்து வைத்து உழுதால் என்ன? ஆனா ரெண்டு கலப்பைகளை இழுக்க மாடுகள் சிரமப்படுமே. இப்படியே யோசனை செய்தார்.

தச்சாசாரியைக் கூட்டிக் கொண்டு வந்தார். கலப்பைகளிலிருந்த கனம் நிறைந்த நாங்கிள்மர ஏர்க்கால்களைக் கழற்றச் சொன்னார். லேசான தேக்கு ஏர்க்கால்களைப் போடச் சொன்னார். பாதி தேய்ந்த கலப்பைக் குத்திகளை எடுத்து அதில் பக்கங்களில் இன்னும் கொஞ்சம் செதுக்கி கனத்தைக் குறைக்கச் சொன்னார். பிறகு அதை ஏர்க்காலில் இணைத்து இப்படியாக ஆழமும் கனமும் குறைந்த இரண்டு கலப்பைகளைச் செய்து தயாரித்தார். அந்நேரத்தில் அங்கே வந்த சுந்தரப்ப நாயக்கர் அந்தக் கலப்பைகளைப் பார்த்துச் சிரித்தார்! "மாமனாரே என்னத்துக்கு இந்தக் கலப்பைகள்; விளையாடவா?" என்று கேட்டார்.



அந்த வீட்டில் ஒரு சிறிய கூட்டமே வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டது. கிருஷ்ணப்ப நாயக்கர் ஒன்றுமே சொல்லாமல் கலப்பைகள் செய்வதைப் பார்த்துக்கொண்டு மட்டும் இருந்தார். கோவிந்தப்ப நாயக்கர் மட்டும் அமைதியாகவும் மெதுவாகவும் சொன்னார், "அவன் ஒண்ணு செஞ்சா அதிலே ஏதாவது இருக்கும்." ஆனால் அவருடைய தம்பிமார்கள் அக்கையாவை வேடிக்கை பண்ணியே பேசிக்கொண்டிருந்தார்கள். வீட்டுப் பெண்கள் அதைக் கேட்டு ரசித்துச் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

மறுநாள் அதிகாலையில் அக்கையா கிருஷ்ணப்ப நாயக்கரை மட்டும் எழுப்பிக்கொண்டு கலப்பைகளை வெள்ளோட்டம் பார்க்க கோட்டேர் போட்டுக்கொண்டு மந்தைப் புஞ்சைக்குப்போனார்.

ஏர்வடங்களால் நுகக்காலில் கலப்பைகளைக் கட்டி முடித்து வழக்கம்போல் மேழியைத் தொட்டுக் கும்பிட்டு உழ ஆரம்பித்தார்கள்.

இரண்டு கலப்பைகளை இழுக்க மாடுகள் அவர்கள் எதிர்பார்த்தபடி திணறவில்லை. கலப்பைகளை ஒன்றோடு ஒன்றை நெருக்கிப்பிடித்து உழுதுபார்த்தார்கள்; எட்டப் பிடித்து உழுது பார்த்தார்கள். இருவருடைய, மேழியில் பிடித்தகைகள் ஒன்றோடு ஒன்று உரசி சிரமம் கொடுத்தது. ஏரை நிறுத்தி யோசனை செய்தார்கள். ஒரு கலப்பையை முன்னும், மற்றதைக் கொஞ்சம் பின்னுமாகக் கட்டி உழுது பார்க்கலாம் என்று கிருஷ்ணப்ப நாயக்கர் சொன்னது அக்கையாவுக்கு சரி என்று பட்டது. இடவன் ஏரை முன்னாலும் வலவன் ஏரைப் பின்னாலுமாகக் கட்டி உழுது பார்த்தார்கள்; இடைஞ்சல் இல்லை. ஆனால் சால் திரும்பும்போது கலப்பைகள் ஒன்றோடு ஒன்று மோதி ஒரு நெருக்கடியை உண்டாக்கியது.

என்ன செய்ய? என்று கலப்பையை நிறுத்திவிட்டு யோசனை செய்தார்கள். கிருஷ்ணப்ப நாயக்கர் மென்னகை புரிந்து "யோசனை நல்லயோசனைதான் . . ." என்ற தெலுங்கு நாடோடிக் கதையை ஞாபகப்படுத்திவிட்டு, "நம்ம பெரியாட்கள் கலப்பை விஷயத்தில் இதையெல்லாம் யோசிச்சிப் பார்க்காமலா இருப்பார்கள்?" என்று அக்கையாவைப் பார்த்துக் கேட்டார்.

அவர் சொன்னதை அக்கையா காதில் வாங்கிக்கொண்டவராகவே தெரியவில்லை. திடீரென்று அக்கையாவின் முகத்தில் பிரகாசம் தெரிந்தது. மோதிர விரலைப் பெருவிரலோடு ஒட்ட வைத்து ஒரு சொடக்கு போட்டார். வலது ஏரை முன்னும் இடதைப் பின்னுமாகக் கட்டினார். ஒரு சின்ன திருத்தம்தான்! மளமளவென்று மாடுகள் நடந்தன. ஒரு இடைஞ்சலும் இப்போ இல்லை உழவில்.

ஒவ்வொரு மடக்கிலும் கலப்பைகள் ஒன்றோடு ஒன்று மோதாமல் திரும்பின. அழுத்திப்பிடித்து உழுதார்கள். மண் பொங்கி மலர்ந்து கலப்பைகளின் இருபுறமும் விழுந்தது. அந்த உழவர்களின் கலப்பைக் கொழுவின் ஆழமான ஓட்டத்துக்கு பூமித்தாய் இணங்கி மகிழ்ந்து கொடுத்தாள்.

இப்படியாக அக்கையாவால் அன்று கண்டுபிடிக்கப்பட்ட ரெட்டைக்கலப்பை, கரிசல் காட்டில் பெருத்த மாறுதலையும் ஒரு பரபரப்பையும் அந்த நேரத்தில் உண்டு பண்ணியது.

கோடை உழவில் மட்டும் ரெட்டைக் கலப்பை பிரயோ ஜனப்படவில்லை. அந்த சமயத்தில் நிலத்தை ஆழமாக உழ வேண்டும். இரண்டு பெரிய்ய கலப்பைகளை மாடுகளால் இழுக்கமுடியாது.

சுந்தரப்ப நாயக்கரும் அக்கையாவும் ரெட்டைக்கலப்பை உழவுக்குப் போனார்கள். அது தொலைக்காடு.

போகும்போதே அக்கையாவை கெண்டை பண்ணிக்கொண்டே போனார். வழக்கம்போல் அக்கையா முகத்தை அப்புராணிபோல் வைத்துக்கொண்டு போனார். அவருடைய தலையில் கஞ்சிக் கலயம் இருந்தது. கலயத்தில் நீத்துப்பாகம். அதில் தேங்காய்ப் பருமனில் பன்னிரண்டு கம்மஞ்சோற்று உருண்டைகள். கலயத்துக்கு மூடி ஒரு சிரட்டை. அதில் எண்ணெயில் வறுக்கப்பட்ட வத்தல்களும் நார்த்தங்காய் ஊறுகாயும். கலயத்தின் வெளிப்புறம் மேலே ஒட்டிவைக்கப்பட்ட காணத் துவையல். சுந்தரப்ப நாயக்கர் தலையில் தண்ணீர்க்கலயம்.

கோட்டேரின் சரசரவென்ற சத்தத்தோடு ஏர்க்கால்கள் தரையில் இழுபட மாடுகள் முன்னே போய்க்கொண்டிருந்தது, அதுக்குப் பின்னால் இந்த இருவரும் தலையில் கலயங்கள் இருந்தபடியே வாயில் பாக்கை ஒதுக்கிக் கொண்டு வெற்றிலையில் சுண்ணாம்பு தேய்த்தபடியே பேசிக்கொண்டு போனார்கள்.

சுந்தரப்ப நாயக்கருக்கு இன்று அக்கையா மேலுள்ள கடுப்புக்குக் காரணம் இருந்தது. முந்தின இரவு எல்லாரும் சாப்பாட்டுக்கு மேல் வெளியே வந்து நிலாவில் உட்கார்ந்து பேசிக்கொண்டே வெற்றிலை போட ஆரம்பித்தார்கள். அப்போது அக்கையா சுந்தரப்ப நாயக்கரைப் பார்த்து "மாப்பிளே, இங்கே வா; நாம ரெண்டு பேரும் சேர்ந்து வெத்திலை போடலாம்" என்று 'அருமையாக' அழைத்தார். அவர் இப்படி நல்லதனமாக அழைக்கிறார் என்றாலே ஏதோ நடக்கப் போகுது என்று அர்த்தம்! குரலை வைத்து அக்கையாவை ஒன்றுமே கண்டுகொள்ள முடியாது. அவர் ஒன்றைச் சொன்னால் அது சாதாரணமாகச் சொல்லுகிறாரா ஏதாவது 'டக்கு' வைத்துச் சொல்லுகிறாரா என்பதே தெரியாது.

அருகில் வந்து உட்கார்ந்ததும் சுந்தரப்ப நாயக்கரைப் பார்த்து "என்ன இண்ணைக்கு நிறையச் சாப்ட்டுட்டயோ!" என்று கேட்டுக்கொண்டே ரெண்டு பாக்குகளை எடுத்து நீட்டினார். அது பாக்குதானா என்று வாங்கி சந்தேகப்பட்டுக் கொண்டே நிலா வெளிச்சத்தில் பார்த்தார். பாக்குதான். வாயில் போட்டுக்கொண்டார்.

அக்கையாவின் தொடையின் மீதுள்ள ஒரு வெற்றிலையில் சுண்ணாம்பு இருந்தது. "புதூச் சுண்ணாம்பப்பா; பார்த்துப் போடு; பிறகு புண்ணாகிவிட்டால் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு 'தே' என்று அலையாதே" என்று நாக்கில் பொத்துப்புண் வந்தவனைப் போல் நாக்கைத் தொங்கப் போட்டு நடித்துக் காட்டினார். எல்லாரும் சிரித்தார்கள்.

சுந்தரப்ப நாயக்கருக்கு வெற்றிலை 'பிடிக்க' வில்லை. காரமாக இருந்தது. முற்றத்தின் மூலையில் போய் தூ தூ என்று துப்பிவிட்டு வந்தார். "என்ன மாமனாரே, என்ன பண்ணினே?" என்று கேட்டுக்கொண்டே செல்லப்பிள்ளை கண்ணப்பா அக்கையாவின் கிட்டே வந்தார். துடை மீதுள்ள சுண்ணாம்பைக் காட்டினார். கண்ணப்பாவுக்கு விளங்கவில்லை. அக்கையா அதில் மோதிர விரலை ஊன்றி நடுவிரலிலுள்ள சுண்ணாம்பைத் தேய்த்து வெற்றிலை போட்டுக்கொண்டார் சந்தேகப்படாமலிருக்க!

கொஞ்ச நேரம் கவனித்த பிறகுதான் கண்ணப்பா ஹோ என்று சத்தம் போட்டுச் சிரித்தார். எல்லாரும் அக்கையாவின் பக்கம் வந்தார்கள். அப்புறம்தான் அவர் அந்த ஓட்டை வெற்றிலையை எடுத்து எல்லாருக்கும் காட்டினார். திரும்பவும் அது மாதிரி செய்து காண்பிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

ஒரு வெற்றிலையின் மத்தியில் நீண்ட வட்டமாகக் கிழித்து ஓட்டையிட்டு அதை துடைவேட்டியின் மேலே வைத்து அந்த ஓட்டையின் வழியாகத் தெரியும் வேட்டியின் துணியைக் கொஞ்சம் அதன் வழியாக மேலே இழுத்துவிட்டார். இலையின் மத்தியில் தெரியும் அந்த வெள்ளை பார்ப்பதற்கு அசல் சுண்ணாம்பு மாதிரியே தோற்றம் தந்தது. தொட்டால் விரலில் ஈரம் தெரிவதற்காக கொஞ்சம் தண்ணீரை விட்டுக் கொள்ளணும் என்று சொல்லிக்கொடுத்தார்.

கோவிந்தப்ப நாயக்கர் வந்து பார்த்துவிட்டு அக்கையாவின் கேலி மூளையை வியந்தார். இவனுக்கு எப்படி கற்பனையாக இதெல்லாம் செய்ய வருகிறது என்று மனசுக்குள் கேட்டுக்கொண்டார்.

***

11

யார் மேலேயாவது ஒருதரம் அக்கையா ஒரு கேலி அஸ்திரத்தை பிரயோகித்துவிட்டால் திரும்பவும் அதை, எப்பவுமே மறுபிரயோகம் செய்ய மாட்டார். புதுசு புதுசாகத் தான் செய்து காட்டுவார்.

முந்தின ராத்திரி நடந்த இதை, சுந்தரப்ப நாயக்கர் மனசுக்குள் நினைத்துக்கொண்டே வந்தார். இன்றைக்கு அக்கையாவை ஏதாவது பதிலுக்கு செய்யாமல் விடக்கூடாது என்று நினைத்தார்.

சாயந்திரம் உழவு முடிந்ததும், சுந்தரப்ப நாயக்கருக்கு 'வெளிக்கு' வந்தது. ஓடைக்குள் இறங்கி, 'இருந்து' கொண்டே "மாமனாரே, தோண்டியில் தண்ணி இருக்கட்டும்; சிந்தீராதே" என்று சத்தம் போட்டுச் சொன்னார்.

பிறகு வந்து, "தண்ணி எங்கே" என்று கேட்டார். "நீயாகக் கழுவிக்கிடறயா; நான் விடட்டுமா?" என்று கேட்டார் அக்கையா.

சுந்தரப்ப நாயக்கருக்கு உள்ளூரச் சந்தோஷம். தண்ணீரை விடச் சொல்லி 'கால்' கழுவிக்கொண்டு ஊருக்குள் போய், 'எனக்குக் 'கால் கழுவ'த் தண்ணி ஊத்தின மனுசன் தானே' என்று சொல்லி நாலு பேருக்கு முன்னால் எக்கண்டமாகச் சிரிக்கலாம் என்ற நினைப்பில் "சரி ஊத்து" என்று குனிந்தார்.

அக்கையா ஒரு சிரங்கைத் தண்ணீர்தான் ஊற்றி இருப்பார். சுந்தரப்ப நாயக்கர் அடி கழுவ கையைக் கொண்டு போய் வைத்து ரெண்டு தேய்ப்புத் தேய்த்தார்; தோண்டித் தண்ணீர் அவ்வளவையும் தரையில் சிந்தி விட்டு ஓட்டம் பிடித்தார் அக்கையா!

"உன் மேல் இதைத் தேய்க்காமல் விடமாட்டேன்" என்று சுந்தரப்ப நாயக்கர் பின்னால் துரத்திக்கொண்டு ஓடிவர, ஒரே களேபரம்!

கோவிந்தப்ப நாயக்கர் முன்னால் வந்து, ஓடிவந்த அலுப்பில் இளைத்துக்கொண்டே வந்து நின்றார் அக்கையா. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் இடது கையை உயர்த்திக்கொண்டே சுந்தரப்ப நாயக்கரும் வந்து சேர்ந்தார் அங்கே. தன் அண்ணாவைக் கண்டதும் கையை பின்பக்கம் மறைத்துக்கொண்டார். கண்ணால், சொல்லாதே சொல்லாதே என்று கெஞ்சாத பாவனையில் பார்த்தார் அக்கையாவை.

கோவிந்தப்ப நாயக்கர் வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவிக்கொண்டே அக்கையாவிடம் "என்ன நடந்தது; மாடுகள் எங்கே?" என்று கேட்டுத் திரும்பிப் பார்ப்பதுக்குள் தம்பி மறைந்துவிட்டார்!

அக்கையா சாவகாசமாய், நடந்ததையெல்லாம் மெல்ல அவருக்கே உரித்த பாணியில் விவரித்தார். மூத்தவர் உடம்பு குலுங்கச் சிரித்தார். ஊர்க்குடும்பன் தனது சிரிப்பை மறைக்க முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டான்!

*

கோவிந்தப்ப நாயக்கரின் தகப்பனார் உடன்பிறந்த அத்தையின் ஊருக்கு, விதைக் கம்மம்புல் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வரும்படி அக்கையாவை அனுப்பினார்கள். அந்த ஊர் கோபல்ல கிராமத்திலிருந்து ஒருநாள் பயண தூரம். அந்தக் காலத்தில் தூரத்தை அளக்க நேரத்தையே அளவாகக் கொண்டிருந்தார்கள். சராசரி மனிதன் ஒரு நாழிகைப் பொழுதில் எவ்வளவு தூரம் நடக்கமுடியுமோ அதை ஒரு நாழிகைப் பொழுது தூரம் என்று சொல்லுவார்கள்.

அக்கையா அந்த ஊர் போய்ச் சேரும்போது பொழுது சாய்ந்துவிட்டது.

"கோவ்பல்ல எங்க்கடம்ம இல்லு எதி?" (கோபல்ல வெங்கிடம்மாள் வீடு எது?) என்று விசாரித்தார்.

கிராமங்களில் ஒரு சுவாரஸ்யம் என்னவென்றால், பெற்றவர்கள் இட்ட பெயர் அநேகமாய்த் துலங்காது; கிராமத்தாரெல்லாம் சேர்ந்து ஒருவருக்கு ஒரு

பெயரை வைத்துவிடுவார்கள்! அது காரணப்பெயராக இருக்கும்; சிலது கேலிப் பெயராகவும், குணப் பெயராகவும், வீட்டுப் பெயராகவும், நோய்ப் பெயராகவும், தொழில் பெயராகவும் இப்படி இன்னும் எத்தனையோ விஷயங்களைக் கொண்டதாக இருக்கும்.

கோபல்ல வெங்கிடம்மாள் அந்த கிராமத்துக்கு, வாக்கப்பட்டு வந்ததும் அந்த ஊரில் பல வெங்கிடம்மாக்கள் இருந்ததால் அடையாளத்துக்காக, அவளுடைய ரெத்தச் சிகப்பு நிறத்தின் காரணமாக 'துண்டபண்டு வெங்கிடம்மா' என்று பேர் வைத்துவிட்டார்கள். தெலுங்கில் துண்டபண்டு என்றால் கோவைப்பழம் என்று அர்த்தம்.

முதலில் அக்கையா கேட்டது அவர்களுக்கு விளங்கவில்லை. பிறகுதான் "ஓ துண்டபண்டு வெங்கடம்மா" என்று சொல்லி அவரைக் கூட்டிக்கொண்டு போய் அந்த வீட்டில் விட்டார்கள்.

அக்கையாவைப் பார்த்ததும் வெங்கடம்மாள் அவரை வா என்று கூடக் கேட்காதது மட்டுமில்லை, பேசக்கூட செய்யலை; அவள் பாட்டில் பேசாமல் இருந்தாள்.

தலையில் கம்மம்புல் மூட்டையைச் சுமந்துகொண்டு அக்கையா அப்படியே அவளைத் தனது கடல்மீன் கண்களால் பார்த்துக்கொண்டே நின்றார்.

தற்செயலாக அங்கே வந்த வெங்கடம்மாவின் கணவர்தான் அக்கையாவை வரவேற்று, தலையிலிருந்த மூட்டையைக் கைகொடுத்து இறக்கினார். ஊரில் எல்லாருடைய சௌகரியத்தையும் விசாரித்தார். எல்லாத்துக்கும் முறையாக பதில் சொல்லிவிட்டு அக்கையாவும் ஒன்றும் நடக்காதது மாதிரி வழக்கம்போல் இருந்துகொண்டார்.

துண்டபண்டு வெங்கடம்மாவுக்கு, தான் நிறைந்த அழகி என்கிற கர்வம் உண்டு. அதோடு பெரிய்ய குடும்பத்தில் பிறந்ததுவேறே. புகுந்த வீடும் அதேமாதிரி. அவளுக்கென்று சில தனிப்பட்ட குணங்கள் கொண்டவள். அவள் யாரிடமாவது பேசவேண்டும் என்றால் முதலில் அவர்கள் நல்ல சிகப்பு நிறமாக

இருக்கவேண்டும். அதோடு நகைகள் போட்டுக் கொண்டிருந்தால் இன்னும் நல்லது. அதோடும் அவர்கள் பணக்காரர்களாக இருந்துவிட்டால் கலகலப்பாகச் சிரித்துப் பேசிப் பழகுவாள். அல்லாத பட்சம் மௌனம்தான்.

ஊர் திரும்பியதும் கோட்டையார் வீட்டில் எல்லாரும் வெங்கடம்மாவைப் பற்றியும், அவளுடைய குடும்பத்தைப் பற்றிய சுகங்களையும் விசாரித்தார்கள்.

"எல்லாருமே நல்லாத்தான் இருக்காக; ஆனால் . . . வெங்கடம்மா பாடுதான் சங்கடம் பாவம் . . ." என்று அக்கையா தொடங்கியதும் "என்ன; என்ன" என்று அவசரப்படுத்தினார்கள்.

"அதை நா எப்படிச் சொல்வேன் . . . அப் . . .பா உடம்பே புல்லரிக்கிறது" என்று சொல்லி நிறுத்தினார். தொண்டையை செருமினார்; கூட்டி எச்சிலை விழுங்கினார். முகத்தை சோகமாக வைத்துக்கொண்டு "வெங்கடம்மாவின் ரெண்டு கண்களிலேயும் குந்தம் தள்ளி . . . பார்வையே தெரியாமலாகிவிட்டது; ரொம் . . . ப பயங்கரமாய் இருக்கு" என்று சொல்லி பட்டென்று தரையில் உட்கார்ந்து தலையில் கையை வைத்துக் கொண்டு விட்டார்.

பெண்கள் அழ ஆரம்பித்தார்கள். ஒரு தகவலும் சொல்லியனுப்பாமல் மனுசன் இப்படி உண்டா என்று வெங்கடம்மாவின் கணவரின் கல் மனசை சபித்தார்கள்.

மங்கத்தாயாரு அம்மாள் அக்கையாவைக் கூப்பிட்டனுப்பி மாறி மாறிக் கேட்டாள். "அவளுடைய 'ராஜ திரேகம்' இதை எப்படிடா தாங்கிக் கொள்கிறது அக்கையா" என்று அங்கலாய்த்தாள். "நா அடிக்கடி நினைக்கிறதுண்டுடா; இப்பிடி அழகான கண்ணை அந்த ஊர்க் கோட்டான்கள் திருஷ்டி போடாமல் இருக்கணுமேண்ணு; அப்படியே ஆய்ட்டதே, ஏழுமலையானே."

சுற்றிலும் பக்கத்திலும் இந்தச் செய்தி வேகமாய்ப் பரவியது. பலர் வந்து விசாரித்துவிட்டுப் போனார்கள்.





தாசப்ப நாயக் கரை மங்கத்தாயாரு அம்மாள் கூப்பிட்டு "அடே, நீயும் வேண்டியவர்களும் உடனே வெங்கடம்மாவின் ஊருக்குப்போய் அவளைப் பார்த்துட்டு வாருங்க; முடியுமானா அவளை இங்கே கூட்டிட்டு வந்துருங்க" என்று சொல்லி கோவிந்தப்ப நாயக்கரிடம் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னாள்.

கண் நோய்களில் குந்தம் என்பது கடுமையானதாகவும் பார்க்க பயங்கரமாகவும் இருக்கும். கண் விழிகளைக் குருடாக்கி அந்த விழியிலிருந்து கொம்பு முளைப்பதுபோல் சதைப் பிண்டம் வெளியே துருத்தி அரைவிரல் நீளம் நீண்டிருக்கும். இமைகள் மேலேயும் கீழேயும் திறந்தது திறந்த மானைக்கே இருக்கும்; மூட முடியாது. குழந்தைகள் இவர்களைப் பார்க்க நேர்ந்தால் பயந்து வீரிட்டுக் கத்திவிடுவார்கள். பெரும் பாலும் இது ஒரு கண்ணில்தான் வரும்; அபூர்வமாக ரெண்டு கண்களிலும் வரும்.

வெங்கடம்மாவுக்கு அழகான பெரிய்ய கண்கள். அவள் தூங்கும்போதுகூட அந்த மூடிய கண்கள் பார்க்க அழகாக இருக்கும். கோரைப்புல் மாதிரி நீண்டு மலர்ந்த ரெப்பை ரோமங்கள். கண் மை வைக்காமலேயே வைத்ததுபோல் ஒரு அமைப்பு. அந்த மாதிரி கண்களைப் பார்த்து அது போலிருக்க வேண்டுமென்றுதான் மற்றவர்கள் மை வைக்க ஆரம்பித்திருக்கலாம். அந்தக் கண்ணுக்கு கிரீடம் வைத்த மாதிரியான புருவங்கள்.

மேல் ரெப்பையில் கோடு மாதிரி ஒரு மடிப்பு ஒவ்வொன்றிலும். அந்த மடிப்பை, அந்த வளைவின் வடிவை நாளெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கலாம்.

தாசப்ப நாயக்கரும் மற்றவர்களும் வெங்கடம்மாவின் ஊருக்கு எவ்வளவு வேகமாகப் போனார்களோ, அவ்வளவு வேகமாகத் திரும்பிவந்தார்கள்!

அவர்கள் வெங்கடம்மாவைத் தங்களோடு கூட்டிக்கொண்டு வரவில்லை. அவர்கள் முகங்களில் குறுகுறுப்பு நிறைந்த புன்னகையும் சிரிப்பும் காணப்பட்டது. என்ன என்ன என்று கேட்டவர்களுக்குச் சிரிப்பையே பதிலாகத் தந்தார்கள்.

மங்கத்தாயாரு அம்மாவுக்கு முன்னால் அக்கையா நின்றுகொண்டிருந்தார். அவருடைய முகம் வழக்கம்போல அப்பாவியாக இருந்தது. அந்த முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த மங்கத்தாயாரு அம்மாவுக்கு சிரிப்பை அடக்கமுடியவில்லை!

சிரித்துக்கொண்டே "டேய் அக்கையா, நீ ஒண்ணும் பொல்லாதவனில்லை. அவளுக்கு அந்த வார்த்தை வேண்டியதுதான். சரி, போ" என்று சொன்னார்கள்.

அவர் போவதையே பார்த்துக்கொண்டிருந்த பெண்கள் எல்லோரும் அவரை ஒரு தினுசாகப் பார்த்தார்கள். அது, ஆசாமியிடம் ரொம் . . . ப ஜாக்ரதையாக இருக்கவேண்டும் என்பது போலிருந்தது!

கிராமத்திற்குள் வெங்கடம்மாவின் கர்வத்தை அறிந்தவர்களுக்கு அக்கையா செய்த காரியம் ரொம்பப் பிடித்திருந்தது. 'பின்னென்ன; சரிதானே' என்றார்கள்.

***

12

பின்னொரு நாள், பூட்டியிடம் கோவிந்தப்ப நாயக்கர் "பிறகு நீங்கள் அந்த துலுக்க ராஜாவிடமிருந்து எப்படித் தப்பித்து வந்தீர்கள்?" என்று கேட்டார்.

மங்கத்தாயாரு அம்மாள், அந்தத் தொடரை திரும்பவும் சொல்ல ஆரம்பித்தாள்.

அந்த விடாத அடைமழையில், "கோயிந்தா . . . கோயிந்தா" என்று பாட்டி சொல்ல, அதை நாங்கள் வாங்கிச் சொல்லிக்கொண்டே தெற்கே பார்த்து நடந்தோம்.

தெப்பமாக நனைந்தோம்; அந்த நனைவில்தான் எத்தனை ஆனந்தம்! விடாமல் கொட்டிக்கொண்டிருந்தது மழை. மழைத் தண்ணீரை இரண்டு கையாலும் ஏந்திப் பிடித்துக் குடித்துக்கொண்டே நடந்தோம்.

இப்படி நடந்துகொண்டே வரும்போது ஏதோ ஒரு ஊர் கிட்டெ வந்த மாதிரித் தெரிந்தது. ஒரு பெரிய வாகை மரத் தடியில் ஒரு சின்ன உருவம் குடை பிடித்துக்கொண்டு நின்ற மாதிரி தெரிந்தது. நெருங்கிப் போனபோது ஒரு குட்டையான சிகப்பு மனிதர் தாழம்பூக் குடை பிடித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார். அவர் நெற்றியில் திருமண் இட்டிருந்தார். கொஞ்சம் சப்பை மூக்கு. இளநி அளவுள்ள பருமனான கொண்டை "ரண்டி; ரண்டி" (வாங்கோ; வாங்கோ) என்று எங்களை வரவேற்றார்!

கோயிந்தப்பா, அவர் சொன்ன விஷயம் மேலும் எங்களை ஆச்சர்ய பரவசத்தில் ஆழ்த்தியது. "நீங்கள் இப்படி தப்பித்து வர்ரது, நேத்து ராத்திரி என் சொப்பனத்தில் தெரிஞ்சது. காலையிலிருந்தே இந்த வழியில் காத்துக்கிட்டிருக்கேன். சீக்கிரம் வாங்கோ; சீக்கிரம்" என்று கூப்பிட்டுக்கொண்டு போனார் எங்களை.

எங்கள் அறுபது எழுபது பேருக்கும் மாற்று உடைகள் கொடுத்தார். குளிப்பதுக்கு சூடான வெந்நீர். வயிறு நிறைய ருஜியான அன்னம். காலியாக இருந்த அவருடைய ஒரு தானியக் களஞ்சியத்தில் நாங்கள் பலநாள் நிம்மதியாகத் தூங்கினோம். "உங்களுக்கு இங்கே ஒரு பயமும் கிடையாது" என்றார் அவர்.

எத்தனை நாள்தான் ஒருத்தருடைய விருந்தாளியாகத் தங்கியிருக்க முடியும் நாங்கள். சொந்த ஊருக்கும் இனி போகமுடியாது. துலுக்க ராஜாவின் பயம் எங்களைப் பேயாக வதைத்தது. எங்கேயாவது தூரமாக, தெற்கே வெகுதூரமாக கண்காணாத இடத்துக்குப் போயிற வேண்டியதுதான் என்று தீர்மானித்தோம்.

ஏதோ ஒரு ராஜபோகம் வர்ரமாதிரி ஒளியைக் காண்பித்து திடீரென்று இப்படி அகதி பரதேசிகளைப்போல் எங்களை ஆக்கிவிட்டதே இந்த விதி. இன்னும் எதுவெல்லாம் நடக்கணும்ணு இருக்கோ என்று பயந்தோம்.

அந்த கோவய்யா எங்களுக்குப் பிரியாவிடை கொடுத்தார். எங்களை தற்காத்துக்கொள்ள ஆயுதங்களும், வழியில் எங்களுக்கு சமைத்துண்ணப் பாத்திரங்களும், நாங்கள் சுமக்கிற மட்டும் நவதானியங்களும், அதிகப்படியான மாற்று ஆடைகளும் கம்பளிப் போர்வைகளும் கொடுத்து உதவினார் அந்த பிரபு.

அவரையும் அவருடைய அந்த அன்பையும் மறக்கமுடியுமா கோயிந்தப்பா? என்னுடைய முதல் மகனுக்கு — உங்களுடைய தாத்தாவுக்கு — அந்த கோவய்யாவின் பெயரைத்தான் வைத்தோம். அதைத் தவிர வேறு எப்படி நன்றிக் கடனை செலுத்த அவருக்கு?

சுற்றுப்பக்கத்தில் கோவைய்யா தன்னுடைய ஆட்களை நாலா பக்கமும் அனுப்பி எங்களை யாராவது தேடுகிறார்களா என்று விசாரித்து வரச்சொல்லி தனக்குத் திருப்தி ஏற்பட்ட பிறகுதான், அவருடைய வாசல்படியை விட்டு எங்களை இறங்க அனுமதித்தார்.

பகலில் அவ்வளவாக எங்களுக்கு பயம் தெரியாது. இருட்டு எங்களை வதைக்கும்; திருட்டு பயம், கொள்ளையர் பயம் வேறே.

மனசு சதா பிறந்த ஊரையும் நிலபுலங்களையும் தெரிந்த முகங்களையும் நினைத்து நினைத்து மருகும். வீட்டில் வளர்த்த பசுமாடுகளையும் கன்றுகாலிகளையும் மற்ற உசுப்பிராணிகளையும் பற்றியே வழிநெடுகப் பேச்சாக இருக்கும்.

திடீர் திடீரென்று பெரியப்பா பாட்டியிடம் கேட்பார். அம்மா, நாம யாருக்கு என்ன தீங்கு செஞ்சோம்? இப்பிடி ஒரு துன்பம் நமக்குண்ணு இருந்திருக்கே என்று வருத்தப்படுவார்.

ஒருநாள் சாய்ந்தரம். இனிமேல் நடக்க முடியாது என்று திகைத்த வேளை. அது ஒரு காட்டுப் பிரதேசம். அந்த காட்டுப் பிரதேசத்துக்குள், தொலைவிலிருந்து பார்க்க ஒரு சின்ன கோபுரம் தெரிந்தது. அதைக் குறியாக வைத்து ஒரு ஒத்தையடிப் பாதை வழி நடந்து போனோம். அது ஒரு அம்மன் கோவில்; விசாலமாக இருந்தது.

சரி; இண்ணைக்கி ராத்திரி நமக்கு இங்கேதான் போட்டிருக்கு என்று நினைத்து, அங்கேயே தங்குறது என்று தீர்மானித்தோம்.

கோயிலுக்குப் பக்கத்திலுள்ள ஊற்றில் கால் முகம் உடம்பு முதலியவற்றைக் கழுவினோம். தண்ணீரை விட்டுக் கரையேற மனசில்லை; அப்படி ஒரு தண்ணீர். அந்தக் குளுமையில் அப்படியே அதில் உடம்பைக் கிடத்திக்கொள்ளணும் போல இருந்தது.

மஞ்சள் வெயில் சொகமாய் இருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு பாடும் குரல் கேட்டது. தேவகானம் என்று சொல்வார்களே அது மாதிரி. வனதேவதையே மனம்விட்டுப் பாடுகிற மாதிரி இருந்தது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தக் கோயில் பக்கத்திலிருந்து ஒரு சித் . . . து மனுஷி வந்தாள். அழகிய சின்ன சிலை மாதிரி குட்டை உருவம். காதுகளில் அகலமான வண்டிக் கம்மல். தொறட்டி ஆபரணம் மூக்கில். தலையிலுள்ள பெருங் கொண்ட கூந்தலைக்

கொண்டைபோட்டு, அந்தக் கொண்டையை மடக்கிச் செருகி 'கொப்பு' ஆகப் போட்டிருந்தாள். கழுத்தில் ஜாதிப் பவழங்கள் பெரிசு பெரிசானது கொண்ட பவழமாலை. இடது கக்கத்தில் மூடி போட்ட நீண்ட பனை நார்ப் பெட்டியை இடுக்கிக்கொண்டிருந்தாள். வலது கையில் ஒரு மூங்கில் பிரம்பு.

சிரித்த முகத்தோடு எங்களைப் பார்த்து வந்துகொண்டிருந்தாள். நாங்கள் தண்ணீரில் அளைந்து கொண்டிருப்பதைக் கரையில் நின்று சிரித்துக்கொண்டே பார்த்துக்கொண்டிருந்தாள். அப்போதும் அவள் தொண்டைக்குள் இனிமையாக முனகிக்கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரம் அவள் அப்படி எங்களைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு "மக்களே, எங்கேருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டாள்.

கிளி கொஞ்சுற மாதிரி இருந்தது அவளுடைய தெலுங்கு உச்சரிப்பு.

நாங்கள் வழக்கமாக எல்லாரிடமும் சொல்கிற மாதிரி அவளிடமும் ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்கிறோம் என்கிற பதிலையே சொன்னோம்! அதைக்கேட்டு அண்ணாந்து சிரித்தாள் அவள்.

எங்களோடு உணவு அருந்த அவளையும் அழைத்தோம். நீங்கள் சாப்பிடுங்கள்; உங்கள் வயிறுகள் நிறைந்தாலே நான் உண்ட மாதிரிதான் என்று அன்பாக மறுத்துவிட்டாள்.

விசாலமான அந்தக் கோயில் பிரகாரத்தில் அன்றைய எங்கள் இரவைக் கழிக்கத் தீர்மானித்து வந்து அமர்ந்தோம். செங்கமங்கலான நேரம். அவளும் எங்களோடு வந்து அமர்ந்தாள். அப்பொழுது நிறையப் பேர் குதிரை வீரர்கள் எங்களை நோக்கிக் கையில் ஈட்டிகளுடன் வந்தார்கள். நாங்கள் தப்பித்தபோது எங்களைத் துரத்திவந்த குதிரைப்படையைச் சேர்ந்தவர்கள் மாதிரியே இருந்தது. நாங்கள் பயந்து பரபரப்படைவதைக் கண்ட அந்த அவள் "மக்களே பயப்படவேண்டாம்; நான் இருக்கிறேன். நீங்கள் உங்கள் பாட்டில் சாதாரணமாக இருந்துகொள்ளுங்கள்" என்று சொன்னாள். அவள் அப்படிச்

சொன்னது எங்களுக்கு ஆறுதலாக இருந்தாலும், செய்வது அறியாமல் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டோம்.

குதிரைகளிலிருந்து குதித்து இறங்கிய படைவீரர்கள் படபடவென்று கோயிலுக்குள் நுழைந்தார்கள். நாலாபுறமும் கவனமாகப் பார்த்துக்கொண்டே வந்தார்கள். எங்களைப் பார்த்ததாகவே தெரியலை! அது, அவர்களுடைய கண்களுக்கு நாங்கள் தட்டுப்படாதது மாதிரி இருந்தது.

அவர்கள் உள்ளேயெல்லாம் நுழைந்து தேடிவிட்டு வேகமாக ஓடிவந்தார்கள். அவர்களில் ஒருவன் இவளிடம் கேட்டான் "ஏ பெரிய மனுஷி, ஒரு அழகிய பெண்ணுடன் ஒரு அறுபது எழுபது பேர்கள் இந்தக் கோவிலுக்குள் கொஞ்சம் முன்னதாக இங்கே வந்து நுழைந்தார்களா?"

"அப்படி இங்கே யாரும் வரலையே அப்பா; நா இங்கெ தானே இருக்கேன்." அவளுடைய குரல் உண்மையாகவே ஒரு பெரிய மனுஷியைப் போலவே இருந்தது!

அவர்கள் அந்த வார்த்தையை நம்பினார்கள். குதிரைகளில் தாவி ஏறி வந்ததைவிட வேகமாகத் திரும்பினார்கள்.

அவர்கள் போன உடனே அவள் எங்களைப் பார்த்து கண்களை விரித்து சத்தமில்லாமல் சிரித்தாள். "பைத்தியந்தான் பிடிச்சிருக்கு இவன்களுக்கு" என்று சொல்லி சிரிப்பதை நிறுத்தினாள்.

பிரகாரத்திலேயே நாங்கள் தங்கிக்கொள்ள ஆயத்தம் செய்தபோது, பெரியப்பா திடீரென்று பாட்டியைப் பார்த்து "அம்மா நாம் இங்கே தங்குறது அவ்வளவு சிலாக்கியமாகத் தெரியுதா உனக்கு?" என்று கேட்டார்.

பாட்டி சொன்னாள், "அப்பாயி, எங்கே போனாலும் நம்ம நிழல் கூடவேதான் வரும்" என்று சொல்லி, அந்தக் கோயிலின் மூலஸ்தானத்தை நோக்கி இருகைகளையும் நீட்டி "இங்கே அவளுடைய அடைக்கலம் நாம்" என்றாள் நா தழுதழுக்க.

அப்போது எங்களைக் காப்பாற்றிய மனுஷி எங்கள் பாட்டியிடம் எழுந்துவந்தாள். தான் வைத்துக்கொண்டிருந்த மூடிய பனைநார்ப் பெட்டியையும் பிரம்பையும் ஒன்றும் சொல்லாமல் பாட்டியிடம் நீட்டினாள். "என்னம்மா?" என்று கேட்டுக்கொண்டே பாட்டி அதை அவளிடமிருந்து பெற்றுக்கொண்டாள்.

'இதை நீ வச்சிக்கோ' என்று சொல்லிவிட்டு வேகமாகக் கோவிலுக்குள் போனாள்.

உள்ளே போனவள் என்னதான் செய்கிறாள் அப்படி என்று பார்க்க பாட்டியும் நானும் போனோம். அவளை அங்கே காணோம்!

மூல ஸ்தானத்தில் நாங்கள் பார்த்த அந்த சதுரமான பீடக்கல் அப்படியே இருந்தது. மேலே பக்கத்தில் எல்லாம் பார்த்தோம். அவளைக் காணோம்!

பாட்டிக்கு நிலைகொள்ளவில்லை. உணர்ச்சி வசப்பட்டு விட்டாள். அதுவரை நான் பாட்டியின் தொண்டையிலிருந்து அப்படி ஒரு கூக்குரல் கேட்டதே இல்லை. "அம்மா . . . அம்மா" என்று கேவினாள். பெட்டியையும் பிரம்பையும் அந்தப் பீடத்தின் மேல் வைத்து தடால் என்று தரையில் விழுந்து சேவித்தவள் மூர்ச்சையாகிவிட்டாள்.



முதலில் நாங்கள், பாட்டி உணர்ச்சிவசப்பட்டு மட்டுமே அப்படிக் கிடக்கிறாள் என்று நினைத்தோம்; பிறகுதான் தெரிந்தது, மூர்ச்சையாகிக் கிடக்கிறாள் என்று. குளிர்ந்த தண்ணீரை தெளித்தும் வெகு நேரம் கழித்தே தெளிந்தாள்.

மூர்ச்சை தெளிந்ததும் அவள் சென்னாதேவியைக் கட்டிக்கொண்டு ஆனந்தத்தால் அழுதாள். "நா இனி சந்தோஷமாச் சாகலாம்; உங்களுக்கு ஒரு குறைவும் வராதுடா. பகவானின் மூன்று அதிசயங்களை இந்தக் கண்ணாலே பார்த்துவிட்டேன். தேவி எனக்குப் பிரத்யட்சமாகி இப்பொ காட்சி அளித்தாளே . . . அந்தப் பாக்யம் . . . அந்தப் பா . . . ஆ . . ." பாட்டி அழுதாள். நாங்களும் அழுதோம். அனைவரும் அந்தப் பெட்டியையும் பிரம்பையும் விழுந்து கும்பிட்டோம்.

காலையில் அங்கிருந்து புறப்படுவதுக்கு முன்னால் குளித்து ஈரத்துணிகளுடன் அந்தத் திருக்கோயிலை வலம் வந்தோம். நாங்கள் அங்கேயே தங்குகிறதா அல்லது புறப்பட்டுப் போகிறதா என்று கேட்டுப் பூ கட்டிப் பார்த்தோம். புறப்பட்டுப் போகும்படியே உத்தரவு கிடைத்தது.

பாட்டி பிரம்பையும் பெட்டியையும் எடுத்து பெரியப்பாவிடம் கொடுத்தாள். பிறகு ஒரு மஞ்சள் துணியில் பிடி மண் எடுத்து முடிந்துகொண்டாள். எல்லோரும் வணங்கிப் புறப்பட்டோம்.

***

13

வழியில் யாராவது எங்களைப் பார்த்து எங்கே இருந்து வருகிறீர்கள்; எங்கே போகிறீர்கள் என்று விசாரிப்பார்கள். சமயோஜிதம் போலெல்லாம் இதுக்கு பதில் சொல்லுவோம். இன்ன ஸ்தலத்திலிருந்து வர்ரோம்; இப்பொ இந்த ஸ்தலத்துக்கு பகவானை சேவிக்கப் போறோம் என்று சொல்லுவோம். இடைவழியில் ஒரு தீர்த்த யாத்திரை கோஷ்டியோடு நாங்கள் சேர்ந்துகொண்டோம்.

அவர்கள் பாடிய நாமசங்கீர்த்தனம் எங்கள் செவிகளுக்கும் மனசுக்கும் இன்பமாய் இருந்தது. அவர்களோடு சேர்ந்து நாங்களும் பாடினோம். பாடிக்கொண்டே நடந்தோம்.

பல ஸ்தலங்களை அடைந்து புண்ணிய நீராடி பகவானை தரிசித்தோம். ஏழு மலைகளிலும் நடந்து ஏறி ஸ்ரீனிவாசப் பெருமானை சேவித்தோம். எங்கள் மனசிலுள்ளதை எல்லாம் அவன் சன்னதியில் சொல்லி அழுதோம். அங்கே கொஞ்ச நாள்தங்கியிருந்து மனநிம்மதி அடைந்தோம்.

பிறகு அங்கிருந்து மேலும் தெற்கே பார்த்து நடந்து வந்தோம். தெற்கே வரவர எங்களுக்குப் பயம் விலகிப்போய் விட்டது.

நடந்து நடந்து கால்கள் வீங்கி பொத்து வெடித்து வடிந்து புண்களால் அவதிப்பட்டோம். எங்களோடு வந்த இரண்டு குழந்தைகளும் மூணு வயசாளிகளும் நோய்ப்பட்டு தவறிப் போய்விட்டார்கள். அவர்கள் இறந்து போன துக்கம், மேலும் பலர் நோய் அடைந்த கஷ்டம், எங்களை ரொம்ப பாதித்தது.

அனுபவித்திராத பட்டினி, காலம் தாழ்ந்து கிடைக்கும் அன்னம், உடம்பு அசதி, மனத்தின் சோர்வு, கூட வருவோரிடம் காரணமற்ற மனக்கசப்பு, மௌனம், குறை கூறல் இப்படியெல்லாம் துன்பப்பட்டோம்.

எங்களோடு புறப்பட்டு வந்தவர்களில் ஒரு குடும்பத்தார் எங்களோடு சண்டை போட்டுக்கொண்டு பிரிந்து போய்விட்டார்கள். வரும் வழியில். என்ன சொல்லியும் அவர்களை சமாதானப்படுத்த முடியவில்லை.

வழியில் நாங்கள், இதுவரை பார்க்காத மரங்கள் செடி கொடிகளையெல்லாம் பார்த்தோம். எத்தனை மாதிரியான அதிசயப் பூக்கள்; வாசனைகள்! மனிதர்களின் ஜாடை கூட மண்ணுக்கு மண் வித்தியாசப்படும் போலிருக்கிறது.

இங்கே நாங்கள் பார்த்த பசுமாடுகளின் உருவம் ஜாடை கூட வேற மாதிரியாக இருந்தது. ஜனங்கள் பேசுற பாஷையும் புதுசு! ஆச்சரியமான ஜனங்கள்; அன்பான ஜனங்கள். இனி இந்த 4அரவதேசம்தான் எங்கள் புகலிடம்.

*

இப்படி நாங்கள் நடந்து வந்துகொண்டிருக்கும்போது ஒரு கிராமத்தின் சத்திரத்தை வந்து அடைந்தோம். சத்திரத்துக்கு உள்ளே இடமில்லை; அவ்வளவு கூட்டம். சத்திரத்துக்குப் பக்கத்தில் ஒட்டி அடர்ந்த மரங்கள் கொண்ட ஒரு தோப்பு. அங்கே சில நாள் தங்கியிருந்தோம்.

நாங்கள் போன அன்று, அந்தத் தோப்பில் எங்களைப் போலவே ஒரு கோஷ்டி தங்கியிருந்துவிட்டு அன்றுதான் புறப்படுகிறது. அவர்களும் மூடிபோட்ட பனைநார்ப் பெட்டியை மஞ்சள் துணியால் சுற்றி ஏந்திக் கொண்டிருந்தார்கள். பெரியம்மா, அவர்களிடம் அது என்னது என்று கேட்டாள்.

அந்த அம்மாவுக்கும் எங்கள் பெரியம்மா வயசுதான் இருக்கும். தலை சுண்ணாம்பாய் நரைத்திருந்தது. நிறைந்த முத்தேவி (சுமங்கிலி). முகம் நிறைய மஞ்சளும் நெற்றி நிறைய குங்குமமுமாக இருந்தாலும் முகம் வாடி இருந்தது.

எங்கள் கேள்விக்கு பதில் சொல்லுவதற்கு முன்னால் எங்களையே கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தப் பார்வைக்கு எத்தனையோ அர்த்தங்கள் சொல்லலாம். நீங்க யாரு; உங்களை நம்பலாமா? என்ற மாதிரி இருந்தது. அய்யோ, பாவிகளே திரும்பவும் அந்த நினைப்பைத் தூண்டி

விட்டுவிட்டீர்களே; எப்படி அதைச் சொல்லுவேன் என்கிற மாதிரியெல்லாம் இருந்தது அந்தப்பார்வை. ஆனாலும், நம்முடைய மக்கள்; பார்த்தாலே தெரியலையா. மனசில் உள்ளதை நம்பிக்கையாய்ச் சொல்லலாம். சொல்லித்தான் ஆத்திக்கொள்ளணும். பார்க்கிறவர்களையெல்லாம் சந்தேகப்பட்டுக்கொண்டே போனால் முடிவேது?

"கோயிந்தப்பா, அதுவும் ஒரு துலுக்க ராஜா கதைதான்.

அந்த அம்மாளின் மகள் பேர் துளசி. ஒரே மகள். பிறக்கும் போதே அவளுக்குத் தலைமுடி கொடுக்காப்புளி பிஞ்சுகள் மாதிரி சுருள் சுருளாய் இருக்குமாம். அந்தக் குழந்தைக்கும் முடி மீது அவ்வளவு பிரியமாம் கூந்தலை முடிக்காமல் அவிழ்ந்து கிடந்தாலும் ஒரு அழகு; அது காற்றில் விலகி பாதி முகத்தை மூடினால் அது ஒரு அழகு. எத்தனை வகை வகையாகத்தான் முடிந்து முடிந்து பார்க்கிறது! முடிந்தாலும் அழகு; முடிப்புக் கலைந்தாலும் அழகு.

அவள் நின்றால் கூந்தல் தரையில் விழும். குதிங்கால் அளவு போக மீதியைப் பல தடவை நாங்கள் கத்தரித்து விட்டுவிடுவோம். அதுகூட அவளுக்குப் பொறுக்காது!



அவளைக் குளிப்பாட்டி விடுகிறது குடும்பத்தோடு ஒரு வேலை. உயரமும் நீளமுமாக உள்ள கண்விட்டுக் கட்டிய பனைநார்க் கட்டிலின் நீளக் கோடியில் அவள் உட்கார்ந்து கொள்வாள். கட்டிலின் நீளத்தில் நிறைகூந்தல் அலைபுரளும். தேங்காய் நெய்யினால் கூந்தலைத் தடவுவது ஒரு பாடு. சீயக்காயைக் கொதிக்கவைத்து வடிகட்டிய நீரினால் தேய்த்து, சுத்தமான நல்ல தண்ணீரை ஆறவைத்து நக வெதும்பலில் ஊற்றி அலசுவது ஒரு பாடு. பதனமாகத் துடைத்து சாம்பிராணிப் புகையிட்டு கட்டிலை மாற்றி வேறு கட்டிலில் அதே மாதிரி உட்காரவைத்து உணர விட்டும், உணருவதற்காகவும் சிக்கெடுப்பது ஒரு பாடு.

பிராயத்தில் அவளுக்குக் கூந்தல் பதினாறு அடி நீளம் இருந்தது. அதனால் அவளுக்கு ஒரு 5ஏணி நாற்காலி செய்யணும் என்று அவள் அப்பா

சொல்லிக்கொண்டிருந்தார். அவளுடைய கூந்தலின் நீளம் அந்தப் பிராந்தியத்திலேயே ஓர் அதிசயமான பேச்சாக இருந்தது. தூரமான இடங்களிலிருந்தெல்லாம் கூந்தலையும் அவளுடைய அழகையும் பார்க்க பலபேர் வருவது வழக்கமாக இருந்தது.

ஒருநாள் வழக்கமாக அவள் குளித்து முடிந்து கட்டிலில் உட்கார்ந்து தலையை சிக்கெடுத்துக்கொண்டிருந்தாள். தெருவில் திடீரென்று நாய்கள் குலைக்கிற சத்தம் கேட்டது. புழக்கடைத் தோட்டத்தின் வழியாய் ஏழெட்டுப் பேர், உயரமான குதிரைகள் மேல் சவாரி செய்தபடியே நாங்கள் குளிக்கும் இடத்துக்கு வந்துவிட்டார்கள்! அவர்கள் துலுக்கர்கள் என்று கண்டதும் வீட்டுக்குள் ஓடத் தொடங்கினோம். துளசியால் ஓட முடியவில்லை. அவர்கள் கையில் சிக்காமல் இருக்க மறுக்கி ஓடும்போது அவளுடைய கூந்தலே அவளுக்கு வினையாக கால்களில் சிக்கித் தடுமாறி விழுந்துவிட்டாள். நாங்கள் வீட்டுக்குள் நுழைந்தவர்கள் அவளைக் காப்பாற்ற, திரும்பி அந்த இடத்துக்கு வந்தோம். அப்போ . . ."

அந்த அம்மாள் மேலே சொல்ல முடியாமல் கஷ்டப்பட்டாள். அவளுடைய உதடு கோணி, மூக்குத்துடித்து கண்கள் கொப்பளித்தது.

"அப்போது . . . அவள். . . என் மகள் துளசி பதிவிரதா தெய்வங்களின் பெயர்களைப் பலக்கச் சொல்லிக் கூப்பிட்டாள். நாங்களும் எங்களை அறியாமல் அவள் சொன்ன பெயர்களை உரக்கச் சொன்னோம். அம்மாமார்களே . . . அப்பதான், எங்கள் கண்களே நம்பமுடியாத அந்த அதிசயம், கண்மூடித் திறப்பதுக்குள் நடந்து முடிந்துவிட்டது.

தடுமாறிக் கீழே விழுந்த புண்யவதி துளசியின் கூந்தலை அந்தச் சண்டாளன் பிடித்துக்கொண்டான். அப்போது அந்த இடத்தில் பூமி பிளந்து அவளைத் தன்னுள் வாங்கிக்கொண்டு அதே வேகத்தில் மூடிக்கொண்டது.

இதைக் கண்ட துலுக்கர்கள் நடுங்கினார்கள். கூந்தலைப் பிடித்தவன் அப்படியே, தன் கையோடு பிய்ந்து வந்த கூந்தலை உதறிவிட்டு, எல்லாருமே குதிரைகள் மேல் ஏறி ஓடித் தப்பிவிட்டார்கள்.

அந்த இடத்தில் தரையில் நீளமாக ஒரு விரிவு மட்டும் தெரிந்தது. அதில் வாயை வைத்து "துளசீ . . . அம்மா . . . எங்கள் தாயே துளசீ" என்று கத்தி அழைத்தோம். மண்ணில் காதுகளை ஒட்டவைத்துக் கேட்டோம். திரும்பத் திரும்ப அவள் பெயர் சொல்லி அலறினோம்.

கண்களைத் துடைத்துக்கொண்டே அந்த அம்மாள் சொன்னாள், "எங்கே வருவாள் துளசி? பூமாதேவி அவளை அழைத்துக்கொண்டாள். அவள் தெய்வமாகிவிட்டாள்."

அந்தத் துலுக்கன் கையிலிருந்து உதறி எறிந்துவிட்டுப் போன கூந்தலும், அவள் மறைந்த இடத்திலிருந்து எடுத்த பிடிமண்ணும் இந்தப் பெட்டியில் இருக்கிறது.

"இதைத் தரையில் வைக்காமல் ஒருவர் மாற்றி ஒருவர் சுமந்து கொண்டே போகிறோம். எந்த இடத்தில் நாங்கள் இருப்பிடமாகத் தங்கப் போகிறோமோ அங்கே அவளுக்கு ஒரு கோயில் — எங்களுக்கு ஏண்ட மாதிரி — கட்டணும்" என்று சொல்லி முந்தானையால் மூக்கைத் துடைத்துக் கொண்டு நடந்தாள்.

பாட்டி அன்று முழுவதும் உட்கார்ந்து அப்படியே கையில் தலையை ஏந்திக்கொண்டு யோசித்தபடியே இருந்தாள். நாக்கில் பச்சைத் தண்ணீர்கூட விட்டுக்கொள்ளவில்லை.

கோயிந்தப்பா, நம்ம ஊரிலெ நாம கட்டியிருக்கும் குலதெய்வம் பொட்டியம்மன் கோயிலில் அந்தப் பொட்டியையும் பிரம்பையும் வைத்து நாம கும்பிடுகிற மாதிரி, நம் ஊருக்கு அஞ்சி நாழித் தொலைவில் இருக்கும் அந்த ஊரில் அவர்கள் அந்தக் கூந்தலையுடைய பெட்டியை வைத்து ஒரு கோயிலை எழுப்பி இப்பொழுதும் கும்பிட்டுக்கொண்டு வருகிறார்கள்."

மங்கத்தாயாரு அம்மாள் கூறிவரும், வழக்கமான இந்தக் கதைகளை அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் ஆண்களும் குழந்தைகளும் சிரத்தையோடு கேட்டாலும் அக்கையா மட்டும், இந்தக் கதைகள் யாவும் மிகைப்படுத்திக் கூறப்படும் விஷயங்கள் என்று நினைப்பார்.

***

14

தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் அன்று ராத்திரிக்கு வரப் போகிறார்கள் என்று ஊர்க்குடும்பன் தன்னிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது அங்கே வந்த அக்கையாவிடம் கோவிந்தப்ப நாயக்கர் அந்த விஷயத்தைப் பிரஸ்தாபித்து அபிப்பிராயம் கேட்டார்.

"தீவட்டிக்காரங்கதானே, பேஷாய் வரட்டும்; 6சந்திப்பு நடத்துவோம்!" என்று குஷாலாய்ச் சொன்னார் அக்கையா. அவருடைய வேடிக்கை உணர்ச்சி அவர்களையும் பாதித்தது.

"ராத்திரிக்கு வந்தா பயல்களுக்கு வகைய்யா 7அத்தாளம் கொடுத்தனுப்பலாமுண்ணு சொல்லுதியா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தார் கோவிந்தப்ப நாயக்கர்.

தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் தங்களுடைய தொழிலை நடத்த பல போர்த் தந்திரங்களைக் கையாளுவார்கள். ஒரு கிராமத்தைத் தாக்கிக் கொள்ளையடிக்கப் போவதாக பல நாட்கள் வதந்திகளைப் பரப்பிப் பரப்பி, கிராமத்து மக்கள் பல இரவுகள் தூங்காமல் விழித்திருக்கச் செய்து, 'சரி, இனி எங்கே வரப்போகிறார்கள்' என்று நினைத்து அவர்கள் அசந்து தூங்கிக்கொண்டிருக்கும்போது திடீரென்று வந்து தாக்குவார்கள்.

கிராமத்தின் ஒரு கோடியில் தீவனப் படப்புகளில் தீ வைப்பார்கள். ஜனங்களெல்லாம் தீயை அமத்துவதில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும்போது, இந்தப் பயல்கள் மறு கோடியில் உள்ள வீடுகளில் கொள்ளையடித்துக்கொண்டு போய்விடுவார்கள்.

தீவட்டிக் கொள்ளைக்காரர்கள், பத்து இருபது பேர் என்று வருகிறதில்லை; நூறு இருநூறு என்று வருவார்கள். ஒவ்வொருத்தனுக்கும் ஒரு கையில் எரிகிற

தீவட்டியும், மறுகையில் ஒரு ஆயுதம் வெட்டறுவாளோ வேல்க்கம்போ பாலாக் கத்தியோ கண்டகோடாலியோ — எதுவோ ஒண்ணு— இருக்கும்.

ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் இரண்டு மூன்று பேர் நின்றுகொண்டு அந்த வீட்டுக்காரர்கள் கதவைத் திறந்து வெளியே வராமல் பார்த்துக்கொண்டு, கிராமத்தில் சில குறிப்பிட்ட ஒன்றிரண்டு வீடுகளுக்குள்ளே புகுந்து கொள்ளையடிப்பார்கள்.

வீட்டுக்காரர்கள் நகைகளை பானைக்குள் போட்டு மூடி வீட்டுக்குள் எங்கேயாவது தரைக்குள் ஓரிடத்தில் புதைத்து ஒளித்து வைத்திருந்தால் "அதை எந்தயிடத்திலே வச்சிருக்கே சொல்லு" என்று வீட்டுக்காரனின் முகத்தை எரிகிற தீவட்டியால் வாட்டியெடுப்பார்கள்.

இவர்களுடைய தாக்குதல் பெரும்பாலும் குளிர் காலத்தில்தான் அதிகமாக இருக்கும்.

பூட்டிய கதவைப் பந்தத்தால் கொளுத்துகிறதும், பகிரங்கமாக கடப்பாறைகளால் சுவரை இடித்து வீட்டுக்குள் நுழைகிறதும் சாதாரணம்.

வீடு பூட்டியிருந்தால் ஒரே சமயத்தில் வீட்டின் மூன்று பக்கச் சுவர்களிலும் இடித்து வாசல் அளவு பெரிய ஓட்டை செய்து ஒன்றுபோல் நுழைவார்கள்.

தீவட்டிக் கொள்ளைக்காரர்களின் தாக்குதலை சமாளிக்க கிராமமும் கோட்டையாரின் வீடும் தயாராகிக் கொண்டிருந்தது.

கையாலும் கவணாலும் எறிவதற்கு வசதியான கற்கள் வண்டி வண்டியாக முதல் மாடியிலும், தட்டட்டியிலும் வேறு பல இடங்களிலும் குவித்து வைத்தார்கள். தீவட்டிக்காரன்களை சமாளிக்க மக்களுக்கு பிரதான ஆயுதம் கல்தான்!

இளவட்டங்களெல்லாம் எறிவதற்கு நல்ல உருண்டைக் கற்களைத் தேர்ந்தெடுத்தால் அக்கையா சப்பட்டை வசத்திலுள்ள கற்களைத்தான் தேர்ந்தெடுப்பார்! சப்பட்டைக் கல்லை அதிவேகமாகச் சுழலும்படி எறிந்தால்

அது காற்றைக் கிழித்துக் கொண்டு செல்லும்போது எதிரிகள் பீதி கொள்ளும்படியான ஒரு ஓசை உண்டாகும்.

தேர்ந்த இளவட்டங்களை பல வீடுகளின் மாடிகளில் உஷார் நிலையில், கற்களோடும் ஆயுதங்களோடும் தயார்படுத்தி வைத்தார்கள்.

இருட்டியதும், எல்லாரும் சீக்கிரமாகவே சாப்பிட்டுவிட்டு முக்கியமான பொருள்களை பந்தோபஸ்து செய்து, விளக்குகளை அணைக்க ஆரம்பித்தார்கள்.

கோட்டையார் வீட்டில் பெண்களையும் குழந்தைகளையும் மாடியிலுள்ள இரும்புக் கதவு போட்ட பெரிய அறையில் போட்டு உள்ளே பூட்டிக்கொள்ளும்படி சொன்னார்கள். கதவு பூட்டுவதற்குமுன் கோவிந்தப்ப நாயக்கரின் பத்து வயசுப் பையன் திருவத்தி ஓடிவந்து அக்கையாவின் மேல் வேட்டியைப் பிடித்துக்கொண்டு சன்னமான குரலில் "மாமா, நம்ம வீட்டுக்குக் கள்ளப்பயல்கள் வரப்போராகளாமே; மாமா மாமா நான் கள்ளப்பயலைப் பார்த்ததேயில்லை, பாக்கணும் போலிருக்கு. அவன் வந்ததும் நீ வந்து என்னை எழுப்புவயா?" என்று கேட்டான். அக்கையா தன் வட்டமான கண்களில் வியப்பையும் சிரிப்பையும் வரவழைத்துக்கொண்டு எல்லோரையும் சுற்றி ஒருமுறை பார்த்தார்! பிறகு சரி என்று தலையசைத்து விட்டு, அவனுடைய கையில் ஒரு கல்லைத் திணித்து, "ஏதொண்ணுக்கும் இதை தலைமாட்லெ வச்சிப் படுத்துக்கோ" என்றார்! பெண்கள் சிரிப்பை அடக்கிக் கொண்டார்கள்!

மாடியில் வீட்டு முற்றத்தைப் பார்த்து இறக்கியுள்ள சாய்ப்பில், கிருஷ்ணப்ப நாயக்கரும் அக்கையாவும் ஊர்க் குடும்பனும் இருந்தார்கள்.

இருட்டியதும் பறவைகள் தங்கள் தங்கள் கூடுகளுக்குள் சென்று அடைவதுபோல் அன்று மனிதர்களும் அவர்களவர்கள் வீட்டுக்குள் அடைந்திருந்தார்கள்.

கோவிந்தப்ப நாயக்கரின் சொல்ப்படி கோட்டைக் கதவுகள் விரியத் திறந்தே வைக்கப்பட்டிருந்தது. சமதளமான விசாலமான அந்த முற்றத்தில் அக்கையா, நாலுகடகம் கேப்பையைக் குளூரத் தெளித்திருந்தார்.

நேரம் இருட்டிக்கொண்டே போனது. குறிப்பிட்ட பல பேரைத் தூங்கும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். சொல்லும்போது மட்டும் அவர்கள் விழித்துச் செயல்பட்டால் போதும். ஆனால் பரபரப்பு மிகுந்த இந்த நேரத்தில் தூக்கம் எங்கிருந்து வரும்!

அமைதியாக அடங்கி இருப்பது சங்கடமாக இருந்தது. நேரம் நகருவதாகத் தெரியவில்லை. நட்சத்திரங்களின் நிலைகளை வைத்து அப்போதைக்கப்போதும், ராப் பறவைகளின் சப்தங்களைக் கொண்டும் நேரத்தை யூகமாகச் சொல்லிக்கொண்டார்கள்.

கிருஷ்ணப்ப நாயக்கர் அக்கையாவைப் பார்த்து "மாப்ளே, ஒரு கதை சொல்லேன்; தூக்கம் வராமயாவது இருக்கும்" என்றார்.

சரி . . . என்று சொல்லிவிட்டு, வீட்டுக்கு மேலே ஏறிப்போய் நாலு இளவட்டங்களை நாலு திசைகளைப் பார்த்து உட்கார வைத்து இருட்டில் கவனித்துக்கொண்டே இருக்கும்படி செய்த ஏற்பாட்டை மீண்டும் ஒருமுறை சரி பார்த்துவிட்டு இறங்கி வந்தார்.

"ம் . . . கதை வேணுமாக்கும்; சரி" என்று சொல்லிக்கொண்டார். கதையை கவனம் பண்ணிய அதே நேரத்தில், கம்மாய்க்கரை மரங்களின்மேல் ஒளிந்துகொண்டு இருக்கும் இளவட்டங்கள் எப்படி இருக்கிறார்களோ என்று ஒரு நினைப்பும் வந்தது. அங்கே ரகுபதி இருக்கான்; கவலை வேண்டாம் என்று நினைத்துக்கொண்டார்.

கிராமங்களில், ஒருவரைக் கதை சொல்லும்படி கேட்டுக்கொண்டால் அவர் உடனே, நான் பிறந்த கதையைச் சொல்லவா, வளந்த கதையைச் சொல்லவா என்று கேட்பார். இவர்கள் ஏதாவது ஒன்றைச் சொல்லிக் கேட்கவேண்டும். அந்த ஆள் தனது பிறந்த கதையையும் சொல்லமாட்டார்; வளர்ந்த

கதையையும் சொல்லமாட்டார்; ஒரு கதையைத்தான் சொல்லுவார். ஆனாலும் இந்தக் கேள்வி எதுக்காக வந்தது என்று தெரியவில்லை.

அக்கையாவும், சம்பிரதாயமான அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டுக் கதையை ஆரம்பிப்பார் என்று ஊர்க்குடும்பனும் எதிர்பார்த்தான். ஆனால் அவர் நேரடியாகவே கதை சொல்ல ஆரம்பித்தார்.

"ஒரு ஊர்லெ ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒருமகன், கல்யாணம் ஆகவேண்டிய வயசு. கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்தார்கள். பொண்ணு ரெண்டு. அக்கா தங்கை. அதுகளும் ராஜகுமாரத்திகதான். கல்யாணம் தடபுடலாய் நடந்து முடிஞ்சது.

முதல் நாள் ராத்திரி. மாடியிலெ ரெண்டு அறைகள். அந்த அறைகள் எப்பிடி அமைஞ்சிருந்ததுண்ணா . . . ஒரு அறை மேலே; இன்னொன்னு கீழே. ரெண்டுக்கும் போக ஏணிப்படிகள்.

கீழ் அறையிலெ தங்கச்சிக்காரி இருந்தா. மேலே அக்காக்காரி. கல்யாணமான ராஜகுமாரன் வந்தான்.

இந்த நேரத்துலெ ஒரு திருடன் அரண்மனையிலெ களவாங்க உடும்புலெ கயத்தைக்கட்டி மேலேவீசி அந்த கயிறு வழியா மேலேஏறி அந்த இடத்துக்கே வந்திட்டான். ராஜகுமாரன் அந்த அறையில் ஏதாவது ஒண்ணுக்குள்ளே போயி கதவைப் பூட்டிக்கிட்டதும் இவன் வேலையை இவன் ஆரம்பிக்கலாம்ண்ணு காத்துக்கிட்டிருந்தான். இந்த இடத்தில் கிருஷ்ணப்ப நாயக்கர் லேசாய் சிரிப்பது இருட்டிலும் தெரியத்தான் செய்தது!

ராஜகுமாரன் ஏணிப்படி வழியாய் ஏறி முதல் அறையைக் கடந்து மேலே உள்ள அறைக்குப் போகப் போனான். வாசலில் காத்திருந்த இளையவள் அவனுடைய காலைப் பிடிச்சிக்கிட்டா.

"எங்கே போறீர் என்னைக் கடந்து; முதல்லெ நா இருக்கிறது தெரியலையா?"ண்ணு கேட்டா.

சரீண்ணு சொல்லி அவன் ஒருபடி கீழே இறங்கக் கால் வச்சான் அவகிட்டெ போறதுக்கு. இதுக்குள்ளே, மேலேயுள்ள அறைவாசல்லெ காத்திருந்த மூத்தவள் அவன் கழுத்தைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு "என்ன அர்த்தம் இது? முதல்லெ தாலிகட்டினது என்னைத்தானே; இங்கெ வந்திட்டுப் பிறகுதான் அங்கே போகணும், நாவிடமாட்டேன் ஆமா"ண்ணு சொல்லிட்டா!

ராஜகுமாரன் சொன்னான் "அவ சின்னவ; குழந்தைக்குச் சமானம். மூத்தவள் நீ; இளையவளுக்குக் கொஞ்சம் விட்டுக் கொடுக்கலாமே? அதோடு அவ வாய்திறந்து கேட்டுட்டா" என்று சமாதானம் சொல்லிப் பாத்தான். மூத்தவள் அவனை விடுறதாய் இல்லை.

ராஜகுமாரன், காலைப் பிடித்துக்கொண்ட இளையவளிடம் "உன் அக்கா சொல்றதும் நியாயம்தானே. முதல்லெ முறைப்படியே நடந்துகொள்றதுதான் முறை. காலை விட்டுரு"ண்ணு கேட்டுப் பார்த்தான்.



"மூத்தவர்களுக்குத்தான் பொறுமை வேணும். நானோ வெக்கத்தைவிட்டு வாய்திறந்து கேட்டுட்டேன்; விட்டுக் கொடுத்தாத்தா என்ன? அவ எப்பவும் இப்பிடித்தான்" என்றாள் இளையவள்.

"ஓஹோ, முறைதவறி நடந்துக்கிட்டதுமில்லாமெ வாய் வேறயா? முடியாது. இங்கெதான் முதல்லெ வரணும்" என்று முரண்டு பிடித்தாள் மூத்தவள். அவன் கழுத்தில் போட்ட பிடியை விடாதது மட்டுமில்லெ, பிடியை இறுக்கினாள்.

இளையவளோ காலைப்பிடித்த பிடியை விடவே இல்லை. கீழ்நோக்கி அவனை இழுத்தாள்.

இப்படி அவனை அவர்கள் பாடாய்ப் படுத்தி, அந்த ரெண்டு உடன்பிறப்புகளும் நீயாச்சி நானாச்சி என்று சண்டைபோட்டுக் கொண்டே இருந்தார்கள்.

அரமணைக்குள் வந்த கள்ளன் இதைப் பார்த்துக்கொண்டே இருந்தான். 'பாப்போம்; இது எப்படித்தான் முடியுது' என்று.

ராஜகுமாரன் அந்த ரெண்டு பொண்களையும் எப்படியாவது சமாதானப்படுத்திரலாம்ண்ணு முயற்சி செய்து பாத்தான். நடக்கலை. என்ன செய்யிறதுண்ணும் தெரியலை.

'ரெண்டு பேர்ட்டேயும் நா வரலை; விட்டுருங்க என்னை' என்று கோபமாய்த் திமிறிப் பாத்தான். கட்டியிருந்த வேட்டி அவுந்து போச்சி! அவர்கள் வகையான பிடியைப் பிடித்துக்கொண்டார்கள். (வந்த சிரிப்பை கிருஷ்ணப்ப நாயக்கர் அடக்கப் பார்த்தார்!)

திருடன் என்ன செய்ய முடியும்; வந்து விளக்குப் பிடிக்க முடியுமா?

பெண்டுகளோ ஒருத்திக்கு ஒருத்தி விட்டுக்குடுப்பதாக இல்லெ; ஓயிரதாயும் இல்லை. ராஜா மகனுக்குக் கண்ணு முழி பிதுங்கிப் போச்சி.

ஆக, இப்படியாக விடிஞ்சி போச்சி.

அரண்மனையில் ரெண்டாவது சங்கும் ஊதியாச்சி.

திருடனுக்கு, 'அய்யோ வெளிச்சம் வந்திட்டதே எப்பிடி வெளியே போக'ண்ணு. பதுங்கிப் பதுங்கிப் போகும்போது காவலாளிகள் பிடிச்சிட்டாங்க அவனை.

அகப்பட்ட திருடனை ராஜா முன்னால் கொண்டு போயி நிறுத்தினாங்க. அவன் தலையைச் சீவும்படிக்கு உத்தரவு போட்டார் ராஜா."

இந்த சமயத்தில் வீட்டின் மேலே 'கசபுசல்' கேட்டு அக்கையா அது என்னெவென்று பார்க்க ஒருதரம் போய்விட்டு வந்தார். "ஒண்ணுமில்லெ; வெறும் அருக்கு!" என்று சொல்லிவிட்டு மேல்க்கொண்டு கதையைத் தொடங்கினார்.

"திருடன் அரமனைக்குள்ளெ திருடவந்ததும், பிடிபட்டதும், ராஜா அவனுடைய தலையைக் கத்தியாலெ சீவும்படி உத்தரவு போட்டதும் ராஜகுமாரனுக்குத்

தெரியாதுண்ணாலும் பிறகு தெரியவந்தது. உடனே அந்த ராஜகுமாரன் ராஜாட்டெ ஓடி அவன் தலையை சீவ வேண்டாம்ண்ணும் அதைவிட நல்ல தண்டனை கொடுக்கலாம்ண்ணும் சொன்னான்.

அது என்ன தண்டனை?ண்ணு ராஜா கேட்டார்.

பேசாமெ ரெண்டு பொண்களெ ஒரே மூர்த்தத்திலெ பயலுக்குக் கட்டிவச்சிருங்க; அது போதும்ண்ணாம் ராஜ குமாரன்!"

அக்கையா கதையைச் சொல்லி முடித்துக் கொண்டிருக்கும் போதே வீட்டு மேலே பரபரப்பும் கசபுச என்ற ரகசியக் குரல்களும் கொஞ்சம் அதிகமாகவே கேட்டது.

வீட்டின் கீழே, பக்கங்களிலே இருந்தவர்களையெல்லாம் உஷார்படுத்திவிட்டு அக்கையா மேலே ஏறிப்போய்ப் பார்த்தார்.

மேற்கே ரெண்டு கொள்ளிவாய்ப் பிசாசுமாதிரி தீ வெளிச்சம் மறைந்து மறைந்து நகர்ந்து வர்ர மாதிரி இருந்தது.

"ஒருவேளை கொள்ளிவாய்ப் பிசாசுதானோ?" என்று கேட்டான் ஒரு இளவட்டம்.

"போடா; பேயாவது பிசாசாவது. மனப்பிசாசுதான்" என்றார் அக்கையா.

இண்ணைக்குத்தானே அம்மாசி? ஒருத்தன் கேட்டான். நேத்தோடெ அமாவாசை முடிஞ்சிட்டது. பரம்பரை திருட்டுப் பயல்கள் அமாவாசை அண்ணைக்கு திருடப் போக மாட்டான்கள். மாசத்திலெ ஒருநா; அண்ணைக்கிதான் அவனுகளுக்கு 8தைப்பாறுறது என்றார் அக்கையா.

அவர்கள் எதிர்பார்த்தபடி தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் மேற்கேயிருந்து வரவில்லை. நேர் கிழக்கேயிருந்து வந்துகொண்டிருந்தார்கள்.

***

15

அந்தத் தீவட்டிக் கொள்ளைக்கூட்டத்தில் மொத்தம் அறுபது எழுபது பேர் இருக்கலாம். ஓடுவதற்கு வசதியாக தும்புவார்ச் செருப்புகள் போட்டுக் கொண்டிருந்தார்கள். அதில் ரெண்டு மூணு பேர் தோல்ப் பைகளில் குடிக்கத் தண்ணீரோ மதுவோ வைத்துக் கொண்டிருந்தார்கள். அனேகமாக ஒவ்வொருத்தனிடமும் அரைப் பாகம் முக்கால்ப் பாகம் நீளம் கொண்ட எரியாத தீவட்டிகள் இருந்தன. ஐந்தாறு பேர் எண்ணெய் நிரம்பிய பித்தளைச் சட்டிகளை ஒரு கையில் ஏந்தியிருந்தார்கள். மறு கையின் மணிக்கட்டில் துணியைக் கங்கணம்போல் கட்டிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கையினால் எரியும் தீவட்டிகளுக்கு எண்ணெயைக் கோரிக் கோரி விடும்போது வழிந்து முழங்கைக்கு வந்துவிடாமல் இருப்பதற்கு அந்தத் துணிக்கட்டு ஒரு தடுப்பு.


ஊருக்குப் பக்கத்தில் அவர்கள் வந்ததும் அதில் ஒருத்தன், மடியிலிருந்து, காய்ந்த வாழைமரப் பட்டையில் மடித்து வைத்திருந்த பஞ்சுக்கரிக்கில் சக்கிமுக்கியால் தட்டினான். அதிலிருந்து பறந்த தீப்பொறிகளில் ஒன்று அந்தக் கரிக்கில் விழுந்ததும் தீ கனிந்தது. உடனே அதை ஒரு தீவட்டியில் ஒட்ட வைத்து ஒருவன் ஊதினான். கொஞ்ச நேரம் ஊதிய பிறகே தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது.

மளமளவென்று ஒன்றிலிருந்து மற்றொன்று, அதிலிருந்து பலது என்று தீவட்டிகளைப் பற்றவைத்துக் கொண்டார்கள். தீவட்டிகள் எரிந்து கொண்டிருக்கும்போதே அவைகளுக்கு, எண்ணெய்ச் சட்டி வைத்துக் கொண்டிருப்பவன்கள் கோளாறாய் அது அணைந்துவிடாமல் எண்ணெயை ஊற்றினார்கள். தீவட்டி வைத்திருப்பவன் அதைத் திருப்பித் திருப்பிக் கொடுத்து, களைக்குச்சி போன்ற ஒரு குச்சியால் எரிகிற தீவட்டியைக் குத்தி அகலப்படுத்திக் கொடுத்தான். எண்ணெய் ஊற்றுகிறவன் கையில் துணி சுற்றிக் கொண்டிருந்தது போலவே ஒவ்வொரு தீவட்டிக்கும் எரிகிற இடத்துக்குக் கீழே

முக்கால் சாண் ஒரு சாண் தள்ளி ஒரு துணி சுற்றப்பட்டிருந்தது. சுடு எண்ணெய் வழிந்து கைக்கு வந்து விடாமல் இருக்க அது ஒரு பாதுகாப்பு.

ஊருக்குள்ளே அவர்கள் நுழையும்போது எதிர்ப்படும் கோவில்களைக் கண்டதும் கும்பிட்டுக் கொள்வார்கள்! ஜனங்கள் தங்கள் பொருள்களை லேசில் இவர்களிடம் தந்துவிடுவார்களா? அந்தப் போராட்டத்தில் இருபக்கமும் பலர் சாகவேண்டியது இருக்கலாம். திரும்பிப் போகும்வரை இவர்களுக்கு நிச்சயமில்லை. பெண்டாட்டியிடம் "தாலியைக் கழத்தி உறியிலெ கட்டிவை; நான் திரும்ப வந்தால் எடுத்து அதை மாட்டிக்கோ" என்றுதான் வீட்டில் சொல்லிவிட்டு வருவான்களாம்.

பகலில் பல நாட்கள் இவர்களில் சிலர் தெருவையும் வீடுகளையும் மற்றும் பலதுகளையும் பிச்சை எடுப்பவர்களைப் போல வேஷம் போட்டுக்கொண்டு வந்து பார்த்து அடையாளம் கண்டு வைத்திருப்பார்கள்.



அவர்கள் பழக்கப்பட்டவர்களைப் போலத் தெருவுக்குள் மளமள என்று நுழைந்து நேராகக் கோட்டையார் வீட்டுக்கு முன்னால் வந்து நின்றார்கள். நாய்கள் குரைத்தும் அவர்கள் மீது பாய்ந்தும் அவர்களைத் தெருவுக்குள் நுழையாமல் தடுத்துப் பார்த்தன. நெருங்கும் நாய்களுக்கு எதிராக பற்றி எரியும் தீவட்டிகளை நீட்டியதால் அவைகள் பின்வாங்கி விட்டன. மிருகங்களுக்கு எரியும் தீயைக் கண்டால் 'பிறவி பயம்' உண்டு என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள்!

நாய்கள் பயங்கரமாகக் குரைக்கும் சத்தம் கேட்டதுமே கிராமம் பூராவும் உஷார் நிலை கொண்டுவிட்டது.

இளவட்டங்கள் அனைவருமே வீட்டுக்கு மேலும், உள்ளுக்கும் 'அடைபட்டு' விடாமல், கம்மாய்க்கரையிலுள்ள உயர்ந்து அடர்ந்த மரங்களின் மேலும் கணிசமான அளவு பயிற்சியுள்ள இளவட்டங்களை ஆயுதங்களோடு ஒளிந்திருந்து கொள்ள ஏற்பாடு செய்திருந்தார் அக்கையா.

கொள்ளைக்காரன்கள் ஊருக்குள் நுழைந்ததுமே, ஏற்பாட்டின்படி அவர்கள் அனைவரும் மரங்களிலிருந்து இறங்கி ஆயுதங்களையும் கற்களையும் எடுத்துகொண்டு தயாராக ஒரு அடையாள ஒலிக்காகக் காத்துக்கொண்டிருந்தனர்.

வீட்டின் கோட்டை வாயில் அகலமாகத் திறந்தே வைக்கப்பட்டிருந்தது, கொள்ளைக்காரன்களுக்குச் சிறிது ஆச்சரியத்தையும் யோசனையையும் கொடுத்தது. எரியும் பந்தங்களை உயர்த்திப் பிடித்து வீட்டின் மேலேயும் சுற்றிலும் நோட்டம் பார்த்தார்கள். தப்பிதமாக ஒன்றும் தெரியவில்லை போலும்; கூட்டத்தின் தலைவன் போலுள்ள ஒருவன் சரி என்கிற பாவனையில் தலையை அசைத்தான். முதலில் ஒரு ஒன்பது பேர் முற்றத்தைக் கடக்க ஆரம்பித்தார்கள்.

ஒன்பது பேரும் சரட்டென்று வழுக்கிக் கீழே விழுந்தனர். இதை அவர்கள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை! வீடு பூராவுமே வாய்விட்டு சிரித்தது. இதையும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை!!

தாங்கள் விழும்போது தங்கள் எடையை சமன் செய்ய கைகளை அவர்கள் விரித்துக்கொண்டு விழுந்ததால் தீவட்டிகளின் தீ நாக்குகள் ஒவ்வொருவரின் மேலும் பட்டுத் தகித்ததாலும், என்ன நடந்தது என்று அறிந்துகொள்ளவும் வேகமாக எழுந்தார்கள். எவ்வளவு வேகமாக எழுந்தார்களோ அதே வேகத்தில் திரும்பவும் விழுந்தார்கள் நம்பிக்கையோடு அணிந்து வந்த தும்புவார்ச் செருப்பு காலை வாரிவிட்டது!

அபாய காலத்திலும் அவர்களுக்கே உரிய துரிதமாக முடிவெடுக்கும் புத்தியுடன் மேலும் பலர் வேகமாகத் தவழ்ந்து வந்து நீளமான வரப்பு போல் ஒருவன் காலில் ஒருவன் தலைவைத்து, கோட்டை வாசலிலிருந்து வீட்டுவாசல் வரை குப்புறப் படுத்துக்கொண்டார்கள். தரையில் கேப்பையின் மீது மிதித்து நடந்தால்தானே வழுக்கி விழ வேண்டும். இந்த 'மனித வரப்பு'க்கு மேலாக இப்பொழுது நடந்து சுலபமாக வீட்டுக்குள் வந்துவிடலாம்.

இந்த செய்கையைக் கண்டு அக்கையா திடுக்கிட்டார். தனது வாழ்நாளில் தான் செய்த தந்திரத்தில் முதல் முதலில் தோற்றார் அவர்.

கோட்டை வாசலுக்குள்ளே அவர்கள் அடி எடுத்து வைக்கும்போதே கவண் கல்லால் தாக்க வேண்டுமென்று சொன்ன ஊர்க்குடும்பனின் கையைத் தடுத்து நிறுத்தியது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்று நினைத்து தன் புத்தியை தனக்குள்ளேயே ஏளனம் செய்துகொண்டார்.

அந்தமனிதவரப்பின் மேல், தீவட்டிகளை ஏந்திக்கொண்டு வரிசையாய் நடந்துவரும் அந்த கொள்ளைக்காரர்களைக் கண்டதும் அக்கையாவின் வாயிலிருந்து ஒரு ஒலி புறப்பட்டது.

கம்மாய்க்கரையில் தயாராகக் காத்திருந்த இளவட்டங்கள் ஓடிவந்தார்கள். ஊர்க்குடும்பனின் கவண் 'விளையாட' ஆரம்பித்தது. அக்கையாவின் கையிலிருந்தும் கிருஷ்ணப்ப நாயக்கரின் கையிலிருந்தும் கற்கள் புறப்பட்டன.

மனித உடம்புகளின் மேல் கல்பட்டு பந்துபோல் அது எழும்புவதும், எலும்பு மேடான இடங்களில் படும்போது உண்டாகும் ஒருவித சத்தமும், மனித ஓலங்களும் ஆங்காரத் கூக்குரல்களும், விடாதே முன்னேறு என்கிற மாதிரியான ஒலிகளும் அங்கே கணநேரத்தில் அலை மோதின.

முன்னேற முடியாதபடி ஆலங்கட்டி மழை போல் பெய்த கற்களின் சரமாரியான தாக்குதலால் அவர்கள் வரிசை குலைந்து பரத்திய கேப்பையில் திரும்பவும் விழுந்து, பின்னுக்கும் முன்னுக்கும் போகமுடியாமல் தத்தளித்தனர்.

ஊர்க்குடும்பனின் ஒவ்வொரு கவண் எறியிலும் ஒருவன் தரையில் விழுந்தான். விழுந்தவன்கள் தாளமுடியாமல் துடித்தார்கள்.

மேல்த் தட்டட்டியிலிருந்தும் வீட்டின் பக்கங்களிலிருந்ததும் உள்ளிருந்தும் அந்த நாயக்க சதோதரர்களும் மற்றவர்களும் கொடுக்கும் பலமுனைத் தாக்குதல்களிலிருந்து தங்களை சமாளித்துக்கொள்ள மற்றொரு போர்த் தந்திரத்தை அவர்கள் தீர்மானிப்பதற்குள் தெருவிலிருந்து அவர்கள் மீது அந்த இளவட்டப்படையும் தாக்குதல் தொடுத்தது. கீழே விழுந்து செயலிழந்து துடிப்பவர்களை எடுத்து தோள்மீது போட்டுக்கொண்டு பின்வாங்கி ஓடுவதைத் தவிர வேறு நிவர்த்தி இல்லை அவர்களுக்கு.

கொஞ்ச நேரத்துக்குள் கனமழை பெய்து ஓய்ந்ததுபோல் இருந்தது.

அந்த அர்த்தராத்திரியில் ஊரே வெற்றி முழக்கத்திலும் தாங்கமுடியாத மகிழ்ச்சியிலும் துள்ளியது. வீடுகளில் எல்லாம் விளக்குகள் எரிய ஆரம்பித்தன. பலர் ஓடிச்சென்று கோவில்களிலிருந்த மணிகளையும் நகராவையும் சங்கையும் முழக்கினார்கள். ஆரவாரம் அந்த குளிர்ச்சியான வேளையில் ரொம்ப தூரம் கேட்டது.

கேப்பையைத் தூத்து எடுத்த பிறகு, அந்த தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் முற்றத்தில் விட்டுச்சென்ற ஒரு நீளமான தீவட்டியை எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு சிரிப்புச் சிரித்தார் அக்கையா! இதுவரை அந்த கிராமத்தார் அப்படி ஒரு சிரிப்பைக் கேட்டதே இல்லை அவரிடமிருந்து.

ரொம்பநாள் வரைக்கும் அந்த தீவட்டியை கோட்டையார் வீட்டின் திண்ணைக்கு மேலே ஒரு வளையத்தில் கட்டித் தொங்கவிட்டிருந்தனர். அவர்களுடைய சந்ததி பரம்பரையினர் அதை மற்றவர்களுக்குக் காட்டி பெருமைப்பட உபயோகமாக இருந்தது அது.

அந்தக் கிராமத்தில் இப்போதும்கூட கோட்டையாரின் வீட்டுக்கு மேலே மட்டுமல்ல, அங்குள்ள எந்தக் காரவீட்டின் மொட்டைமாடியில் ஏறிப்பார்த்தாலும் தேங்காய் பருமனுள்ள கற்கள் பல கிடப்பதைப் பார்க்கலாம்.

*

பொழுது விடிந்ததும் கிராமத்திலும் சுற்றுப்புறத்திலும் எங்கே பார்த்தாலும் இதே பேச்சாகத்தான் இருந்தது. விடிவதற்கு கொஞ்ச நேரத்துக்கு முன்னால் கிடைக்காவல்காரன் கிடையின் கீதாரியான ராமப்ப நாயக்கரைத் தேடி கோட்டையார் வீட்டுக்கு வேகமாய்வந்தான்.

தீவட்டிக்காரன்கள் கிடையைத் தாக்கி நல்ல கொழுத்த கிடாயாக நாலு கிடாய்களைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்ற தகவலைச் சொன்னான் அவன்.

அங்கே கூடியிருந்தவர்கள் அதைக் கேட்டு திகைத்துச் சிரித்தார்கள்.

"வெறுங்கையோடெ வீட்டுக்குப் போனா எப்படி?" என்றார் அக்கையா!

"போட்டும்; போட்டும். அந்த வலிக்கு நல்ல சாராயத்தையும் குடிச்சி, ஆட்டு வறுவலையும் திங்கணும்!" என்றார் கோவப்ப நாயக்கர்.

கீதாரி ராமப்ப நாயக்கர், அவர்கள் பேசியதைக் கண்களால் மாறி மாறிப் பார்த்துக் கேட்டுக்கொண்டிருந்தாரே தவிர ஒன்றும் பேசவில்லை. கிருஷ்ணப்ப நாயக்கர்தான் அவரைப் பார்த்து "தம்பி, போனால்ப் போகுது; கவலையை விடு. அதைப் பொதுவிலிருந்து ஏற்றுக் கொள்ளலைண்ணாலும் நாமளே அதுக்குப் பதிலாகக் கொடுத்துருவோம்?" என்று சொல்லி அண்ணனைப் பார்த்தார். சரி என்கிற மாதிரி தலையை இசைவாக அசைத்தார் கோவிந்தப்பன்.

"அண்ணா, அவன்களில் நாலுபேரையாவது இங்கே 9பூமி தானம் செய்திருந்தால் இப்படிப்போய் கிடையில் ஆட்டை எடுத்துக்கிட்டுப் போவான்களா?" என்று கோபத்தோடு கேட்டார் கீதாரி.

இந்தக் கேள்விக்கு யாரும் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. ஊர்க்குடும்பன் மட்டும் அக்கையாவைப் பார்த்தான். அந்தப் பார்வையை வாங்கி அக்கையா கிருஷ்ணப்ப நாயக் கரைப் பார்த்தார். கிருஷ்ணப்ப நாயக்கருக்குத் தன் அண்ணாவை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த கோவிந்தப்ப நாயக்கர், நெல்மணி வாய்கீறியது போல மெல்நகையாய் நகைத்து தலையை மட்டும் மேலும் கீழும் லேசாக ஆட்டிக்கொண்டார்.

***

16

வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவிக்கொண்டே கோவிந்தப்ப நாயக்கர் அண்ணாந்து ஒருதரம் அந்தத் தீவட்டியைப் பார்த்தார். அவர் மனசுக்குள் பல யோசனைகள் ஓடின.

எழுந்திருந்து வீட்டின் பின்புறம் போய்வந்தார். தொண்டை வறண்டுகொண்டு வருவதுபோலத் தோன்றியது. எல்லாம் இந்த வெள்ளைப் போயிலை பண்ற வேலை என்று தனக்குள் சொல்லிக்கொண்டார்.

வாயைக் கொப்பளித்துவிட்டு, குளிர்ந்த மண்பானை நீரை அள்ளி அள்ளி முகம் கைகள் கால்கள் அனைத்தும் கழுவினார். மேல் வேட்டியால் முகத்தைத் துடைத்துக்கொண்டே பக்கவாசல் வழியாக சமையல்ப்பிறைக்குள் நுழைந்தார். நுழை வாசலில் ஒரு ஒட்டுத்திண்ணை. அதில் அரைகுறையாகவும் செய்து முடிக்காமலும் சில பனைஓலை விசிறிகள், அதற்குண்டான ஆயுதங்கள் அங்கே கிடந்தன. கண்ணப்பாவைப் பெரும்பாலும் அங்கேதான் பார்க்கலாம். இப்பொழுது அவர் ஊர்க்குடும்பன் அக்கையா முதலியோருடன், அந்தக் கொலைகாரனை ஊர்ப்பொதுவுக்குக் கொண்டு வரப் போயிருந்தார்.

சமையல் கட்டுக்குள் இவர் காலடி எடுத்துவைக்கும் போது, அந்த சம்பவத்தைப் பற்றித்தான் பெண்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது.

தன்னுடைய மகள் சீத்தம்மாவின் பெயரைச் சொல்லிக்கொண்டே நுழைந்தார்.

பெண்கள் எழுந்து நின்றும், மரியாதைக்கு ஒதுங்கி பக்கத்து அறைகளுக்குள்ளும் வேகமாகப் போனார்கள்.

சீத்தம்மா ஒரு சொம்பு நிறைய மோர் கொண்டுவந்து கொடுத்தாள். வாங்கிக் குடித்துவிட்டு வாயைத் துடைத்துக்கொண்டே ஒரு சிறிய ஏப்பத்துடன்

கம்மாய்க் கரைக்குப் புறப்பட்டார்.

கோடை மழை பெய்து கம்மாய் ததும்பி நின்றது. மர நிழல் குளிர்ச்சியாக இருந்தது. கோவிந்தப்ப நாயக்கர், அரச மரத்தடியில் வந்து "ஸ்ரீராமா" என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தார். அந்தக் கம்மாய்க் கரையிலுள்ள ஒவ்வொரு மரத்தையும் அந்த கிராமத்தின் ஒவ்வொரு குடும்பத்தின் பூர்வீகமானவர்களால் நட்டு வைத்து உண்டாக்கப்பட்டது. இப்பொழுது அவை பிரம்மாண்டமான மரங்களாக வளர்ந்துவிட்டன.

இப்பொழுது அவர் உட்கார்ந்திருக்கும் அந்த அரசமரம் கோட்டையார் வீட்டு மங்கத்தாயாரம்மாவின் மாப்பிள்ளை கொண்டையாவால் நட்டு வளர்க்கப்பட்டது.

அதற்கடுத்துள்ள அத்திமரம் நுன்னகொண்ட வெங்கடப்பய்யாவின் முன்னோர் நுன்னகொண்ட ஸ்ரீ ரெங்கய்யா வைத்தது.

அடுத்தபடியுள்ள கல்லத்திமரம் கோனேட்டி ராகவைய்யா வைத்தது.

அடுத்துள்ள ஆலமரம் மானேரி செங்க்கன்னா வைத்தது.

அந்தப் புன்னரசி மரம் சக்கனி பங்காரய்யா வைத்தது.

இப்படியாக அந்தக் கம்மாயைச் சுற்றியுள்ள நாவல், வேம்பு, புளி, வாகை முதலிய அனைத்து மரங்களும் ஒவ்வொரு குடும்பத்தின் முன்னோர்களால் வைத்து சிரமப்பட்டு, போற்றிக் காப்பாற்றி உண்டாக்கப்பட்டவை.

அந்தக் கிராமத்தை முதல் முதலில் கால்கோள்ச் செய்து குடியேறியபோதுதான் அந்தக் கம்மாயையும் வெட்டினார்கள். அப்போது அந்த இடத்தில் ஒரு பள்ளம் மட்டும்தான் இருந்ததாம். சுற்றிலும் ஒரே சப்பாத்திக்கள்ளி புதர் புதராய் மண்டிக் கிடந்ததாம். அதையெல்லாம் அவர்கள் வந்து திருத்தி செம்மை செய்ததைப்பற்றி மங்கத்தாயாரம்மாள் கதை கதையாகச் சொல்லி இருப்பது கோவிந்தப்ப நாயக்கரின் நினைவுக்கு வந்தது.

மங்கத்தாயாரும் அவரது முன்னோர்களும் இந்த இடத்துக்கு வந்து சேர்ந்தபோது, இதுவே நாம் இருக்க வேண்டிய இடம் என்று அவர்களுக்குத் தோன்றியதாம். இந்தப் பள்ளத்தில் சுத்தமான நீர் தேங்கியிருந்தது. பள்ளத்தின் கரையில் ஒரு வயதான வேப்பமரம். அந்த மரநிழலில்தான் இவர்கள் வந்து அமர்ந்தார்கள். வடக்கே சற்றுத் தள்ளி ஒரு பாம்புப் புற்று பெரிசாய் உயரமாக பல கண்களுடன் இருந்தது. அதன் அருகில் கொண்டுபோய் அந்தப் புனிதமான மூடியிட்ட பனை நார்ப் பெட்டியை வைத்தார்கள். அப்படி வைப்பதற்கு முன்னால் அந்தப் புற்றை மூணு தரம் வலம் வந்தார்கள். பெட்டியைத் தலையிலிருந்து இறக்கி புற்றின் அருகே தரையில் வைக்கும்போது பெண்கள் குலவையிட்டார்கள். அப்படி மூணு தரம் குலவையிட்டு எல்லாரும் கீழே விழுந்து கும்பிட்டுத் தரையிலுள்ள மண்ணைக் கிள்ளி உச்சந்தலையில் தூவிக்கொண்டு நாக்கிலும் துளி இட்டு மீதியை நெற்றியில் பூசிக்கொண்டார்கள். உடனே பாட்டிக்கு அருள் வந்தது. கீழே விழுந்துவிடாமல் அவளைப் பெரியப்பா தாங்கிப் பிடித்துக் கொண்டார்.



பாட்டி, மூஸ் மூஸ் என்று அழுதாள். எல்லாரும் அவளை வணங்கி, அம்மனுடைய மனசில் உள்ளதைத் தெரிவிக்கும்படி வேண்டுதல் செய்தார்கள்.

ஒரு பாட்டுப் பாடுவதைப்போல பாட்டி மெதுவான குரலில் நீட்டி நீட்டிச் சொன்னதாவது, "என் மக்களே, எங்கேயோ ஒரு தேசத்தில் பிறந்து, எங்கேயோ ஒரு தேசத்தில் வந்து வாழ வேண்டியிருக்கிறதே என்று நீங்க நினைச்சி மனம் கலங்க வேண்டாம். எல்லாம் பூமித்தாயினுடைய ஒரே இடம்தான். அவளுடைய கையிலுள்ள ஒரு விரலிலிருந்து நீங்க இன்னொரு விரலுக்கு வந்திருக்கிறீக; அவ்வளவுதான். நீங்க ஒண்ணுக்கும் பயப்பட வேண்டியதில்லை. உங்களோடேயே சதா நா உங்களுக்குத் துணை இருப்பேன்."

"அவ்வளவுதான் வேணும் எங்கள் தாயே" என்றார்கள்.

பாட்டி தெற்குத் திசையில் கையை நீட்டிச் சொன்னாள், "இந்தப் பக்கம் உள்ள உடங்காட்டை உங்களுடைய, பின்னால் ஏற்படப்போகும் மாடு ஆடுகளுக்கான மேய்ச்சல் தரையாக வைத்துக்கொள்ளுங்கள்."

பாட்டி கிழக்குத் திசையில் கையை நீட்டிக் காண்பித்தாள். "இந்தக் கள்ளிக்காட்டை அழித்து உங்களுக்கு வேண்டிய நிலங்களைச் செய்துகொள்ளுங்கள். எனக்கு இதே இந்த இடத்தில், ஒரு கோயிலைக் கட்டிக் கொடுங்கள்."

அப்படியே, என்று சொல்லி விழுந்து கும்பிட்டார்கள்.

பிறகு பாட்டி பெரியப்பாவின் மீதே மயக்கம் போட்டு சாய்ந்துவிட்டாள். அப்படியே அவளைப் படுக்கவைத்தார்கள். அவருடைய மடியில் தலைவைத்து வெகுநேரம் அயர்ந்து தூங்கினாள்.

பாட்டி தூங்கி எழுந்ததும், அவளுக்கு 'அருள்' வந்ததையும் அம்மனுடைய உத்தரவு பற்றியும் அவளிடம் மற்றவர்கள் சொன்னார்கள்.

பாட்டிக்கு சென்னாதேவியின் நினைப்பு வந்தது. அவள் மௌனமாக அழுதாள். அய்யோ, அது எவ்வளவு பெரிய இழப்பு!

அவர்களுடைய நடைப் பயணத்தின்போது அவர்களில் பல குழந்தைகளும் பெரியவர்களுமாக பல அருமந்த உயிர்களைப் பறிகொடுத்தார்கள். ஆனால் அதையெல்லாம் விட சென்னாதேவியின் மரணம்தான் அவர்களைக் குலுக்கி எடுத்துவிட்டது.

நாட்கள் மனப்புண்ணை ஆற்றினாலும் நினைப்பு என்னும் கோல் படும்போது அதில் மீண்டும் ரத்தம் கசிகிறது.

ஸ்ரீரங்கத்துக்கு சில நாழிகைப் பொழுது தூரம் இருக்கும்போதே சென்னாவால் நடக்க இயலவில்லை. வாந்தியெடுத்தாள். வயிற்றுப்போக்கும் கண்டது. அவளைக் கைத்தாங்கலாகப் பக்கத்திலுள்ள சத்திரத்துக்குக் கொண்டு போய்ப் படுக்க வைத்தார்கள். ராத்திரி கடுமையான ஜுரம் கண்டது.

கொஞ்ச நாட்களாகவே அவள் யாருடனும் பேசுவது இல்லை. மௌனமாகவே தன்னை வாட்டிக்கொண்டாள். தனது குடும்பத்தாரும் சுற்றத்தாரும் தன் பொருட்டுத்தானே இவ்வேதனையை அடைய நேர்ந்தது என்று நினைத்து நினைத்து குங்கிப்போவாள்.

பாட்டிக்கு அபசூசகம் போல ஏதோ தோன்றியிருக்க வேண்டும். அவள் அமைதியிழந்து தவித்தாள். சில நாட்களாகவே அவளுக்குத் தோன்றும் கனவுகளை நினைத்துக் கலங்கினாள்.

"அம்மா நீ மனசு கலங்காதே; எங்களால் தாங்க முடியலை. நீ பார்த்து இப்படிச் சொல்ல ஆரம்பித்தால் எப்படி?" என்று பாட்டியைப் பார்த்து துக்கத்தை அடக்க முடியாமல் சொன்னார் பெரியப்பா.

சென்னாவின் நிலைமை எங்களுக்குத் தெளிவாகிவிட்டது. அவள் எங்களைக் கடந்து போய்க்கொண்டிருக்கிறாள். அது எங்களுக்கு நன்றாகத் தெரிந்தது.

மரணம் என்ற பூதத்துக்கு முன்னால் நிராயுதபாணிகளாய் செய்வதறியாது அதையே திகைத்துப் பார்த்துக்கொண்டிருந்தோம்.

"சென்னா, என் கண்ணே, என்னை விட்டுட்டுப் போறயா?" என்று சென்னாவின் தாய் அழுதாள்.

பாட்டி சொன்னாள், மரணம் சம்பவித்துக் கொண்டிருக்கும்போது யாரும் அழக்கூடாது.

இதுக்கு முன்னாலும் பாட்டி அப்படிச் சொல்லியிருக்கிறாள். குருவையா இறந்து கொண்டிருக்கும்போது அவருடைய மனைவி அழுதாள்.

"ஆத்மா பிரிந்து பயணப்படும்போது நாம் அழுதால் நம்முடைய கண்ணீர் அது சென்றுகொண்டிருக்கும் வழியில் குறுக்கே வெள்ளம்போல் பரவிப் பெருகி அதனுடைய பயணம் தடைபட்டுப்போகும். ஆத்மா பிரிந்த பிறகு அழலாம்; பிரிந்துகொண்டிருக்கும்போது அழவேகூடாது."

பாட்டியின் மடியில் சென்னாவின் தலை இருந்தது. பெரியம்மாவின் மடியில் அவளுடைய பத்ம பாதங்கள் இருந்தன.

அது உத்ராயண புண்ணிய காலம். அதிகாலை நேரம். சூரியோதயத்துக்கு முன்னால்.

மனிதர்கள் சாவதற்கு முன்னால் அவர்களுடைய முகத்தில் ஒரு தெளிச்சி உண்டாகுமே, அது சென்னாவுக்கும் வந்தது. கண்ணை விழித்து எல்லோரையும் பார்த்தாள். பார்த்துக்கொண்டே வரும்போது என்மேல் அவள் பார்வை கொஞ்சம் அதிகமாகவே நிலைத்ததுபோலத் தெரிந்தது. பாட்டி உரத்த குரலில் ஸ்ரீரெங்நாதர் பேரில் ஒரு ஸ்தோத்திரம் சொன்னாள்.

"என்னை உட்காரவைங்க."

இதுதான் அவள் பேசிய கடேசி வார்த்தை. பாட்டி அவளைத் தன் மடிமீதே உட்கார வைத்து தன்மீதே சாய்த்து வைத்துக்கொண்டாள். எல்லாரும்

அவளையே பார்த்துக்கொண்டிருந்தோம்.

முகத்தில் ஓர் பரவசம். உட்கார்ந்து தூங்கும்போது தலை துவளுமே அதுமாதிரி விழுந்துவிட்டது தலை.

கோயிந்தப்பா, நா என்ன சொல்லுவேன்! சாவு எப்பேர்ப்பட்ட மனுஷ முகத்திலேயும் ஒரு விகாரத்தை உண்டு பண்ணிவிடுமே; சென்னாதேவி இறந்ததுக்குப் பிறகும்கூட அழகாகவே இருந்தாள்!

சென்னாவின் காரியம் முடிஞ்சது.

சிந்தனை, இயக்கம், உணவு எல்லாம் ஸ்தம்பிச்சுப் போச்சு எங்களுக்கு.

என்ன செய்கிறதெண்ணே தெரியலை.

ஸ்ரீரங்கத்தைப் பார்த்து ஜனங்கள் சாரை சாரையாய் போய்க்கொண்டிருந்தார்கள். அது திருவிழாக் காலம்.

நாங்களும் மெள்ள எழுந்து நடந்தோம்.

காவேரியில் எங்கள் உடலை நனைத்தோம்.

ஸ்ரீரெங்கநாதனைப் போய்ப் பார்த்தோம். உலகத்துக்கெல்லாம் படி அளந்துவிட்டு மரக்காலைத் தலைக்கடியில் வைத்துக்கொண்டு நிம்மதியாகப் படுத்திருக்கிறான்.

வெள்ளை நிறமுள்ள ஒரு பெரிய கிளி. ஆலம்பழத்தின் நிறத்திலுள்ள தன் சிகப்பு அலகைத் திறந்து "ரங்கா . . . ரங்கா" என்று சொல்லிக்கொண்டே இருந்தது அந்தப் பெரிய கோயிலில்.

***

17

அந்தக் காட்டில் அவர்களுக்கு தின்பதற்குப் பனம்பழங்கள், கோவைப்பழங்கள், கள்ளிப்பழங்கள், நெய்த்தக்காளி முதலியன கிடைத்தன.

வழியில் அவர்களுக்குத் திருடர், கொள்ளையர் பயத்துக்காகப் பாதுகாப்புக்குக் கொண்டுவந்த வாள், கத்தி, வெட்டறுவாள், கண்டகோடாலி முதலிய ஆயுதங்கள் இப்போது காட்டைத் திருத்தவும் மரங்களை வெட்டவும் பயன்பட்டது.

மழைக்காலம் தொடங்குவதற்கு முன் பல சிறிய மண் குடிசைகள் கட்டிக்கொண்டார்கள்.

முதலில் கட்டி முடித்தது அம்மன் கோயில்தான். மஞ்சணத்தி, பூவரசு, வேம்பு முதலிய நீண்ட மரக்கிளைகளால் முகடு கூட்டி பனைநார்களால் கட்டினார்கள். சீகைப் புற்களையும் ஐம்புத் தட்டைகளையும் அறுத்துக் காயவைத்து அவைகளால் கூரை வேய்ந்தார்கள்.

பிரம்மாண்டமான, பரந்த கள்ளிக் காட்டோடு அவர்கள் போராடினார்கள். கள்ளிகளை வெட்டிக் குவித்துக் குவித்து அதுவே அவர்கள் திருத்திய இடங்களை மலைபோல் காத்துக் கொண்டுவிட்டது.வெட்டிக் குவித்த சப்பாத்திக் கள்ளிகள் சீக்கிரம் காய்வதாக இல்லை; அதோடு அவைகள் அந்த நிலையிலும் திரும்பவும் தளிர்க்க ஆரம்பித்தது!

மழைக்காலத்துக்கு முன்னால் கொஞ்சம் நிலங்களை ஆக்கி திருத்தலாம் என்றால் அது அவ்வளவு லேசில் முடியாது போலிருந்தது. அவர்கள் சோர்ந்து போனார்கள். கள்ளிச் செடிகளை தரையோடு தோண்டி வேரோடும் வேரடி மண்ணோடும் பெயர்த்தெறிய வேண்டியதிருந்தது. தோண்டும்போது பெயறும் பாறைக்கற்களை அப்புறப்படுத்த வேண்டியிருந்தது. பெரிய்ய கற்கள் பெயர்ந்த இடங்களில் ஏற்பட்ட பள்ளங்களை சமப்படுத்த வேண்டும்.

பூமியைத் தோண்டும்போது பலவிதமான வினோதமான கிழங்குகள், செடிகளின் வினோதமான வேர்கள் அவர்களுக்குத் தட்டுப்படும். இந்தக் கிழங்குகளைத் தின்னலாமா கூடாதா என்று அவர்களுக்குத் தெரியவில்லை! சில இடங்களைத் தோண்டும்போது மண்மணம் கமழும் பருத்த கோரைக்கிழங்குகள் தின்பதற்குக் கிடைக்கும். உண்பதற்கு வளமான காட்டுக் கீரை வகைகள் அவர்களுக்கு ஏராளமாகக் கிடைத்து வந்தது. அதற்கு வெஞ்சனமாகப் பொரித்துச் சாப்பிடுவதற்கு நிறைய காட்டுப் பறவைகளின் முட்டைகள் தாராளமாகக் கிடைத்தன.

அவர்கள் தங்களிடம் மீதமுள்ள நவதானியங்களை சமைத்து உண்டுவிடாமல் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள். பலநாள் பயணவழி சுமந்து நம்பிக்கையோடு கொண்டு வந்த தானிய மணிகளை உண்ணாமல் மண்ணில் விதைப்பதற்குப் பத்திரப்படுத்திக்கொண்டு, இந்த மாதிரியான உணவுகளையே உண்டு வாழ்ந்தார்கள்.

சிலர் சோற்றுக் கத்தாழையை உரித்துத் தண்ணீரில் அலசி அதன் கசப்பை நீக்கி உண்டார்கள். "இது திவ்யமான உணவு. வயிற்றிலுள்ள சகல நோவுகளையும் போக்கக் கூடியது" என்று பாட்டி சொன்னாள்.

அந்தப் பள்ளத்திலுள்ள தண்ணீர் குடிப்பதற்கு அமிர்தமாக இருந்தது. மண் கலந்த அந்தத் தண்ணீர் அவர்களுக்கு ஒரு வேளைப் பசியைத் தாங்கும் சக்தியையும் தெம்பையும் கொடுத்தாகச் சொன்னார்கள்.

உணவுக்காகப் பறவைகளையும் பிராணிகளையும் வேட்டையாடினார்கள். கள்ளிப் புதருக்குள் எங்கே கண்டாலும ஏராளமான தேன் தட்டுகள் காணப்பட்டன. இதனால் அவர்களுக்கு சட்டி சட்டியாகத் தேன் கிடைத்தது. தீயில் பக்குவமாக வாட்டப்பட்ட மாமிசத் துண்டுகளைத் தேனில் தோய்த்து உண்டார்கள்.

சில நாட்களில் நிறைய மிச்சம் விழும் மாமிசத்தைச் சிறு துண்டுகளாக வெட்டி உப்புக்கண்டம் போட்டு வெயிலில் நன்றாகக் காய வைத்து, மழைக் காலத்துக்கு என்று பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுவார்கள்.

*

இந்தக் காட்டை இனி தீ வைக்காமல் அழிக்கமுடியாது என்று கண்டுகொண்டார்கள். இப்படி ஒரு முடிவுக்கு அவர்கள் வந்ததற்குப் பல காரணங்கள் உண்டு.

மழைக்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. கையினால் காட்டை அழித்து நிலத்தை மீட்ட முடியலை. தாங்க முடியாத அலுப்பு.

எத்தனை நாட்கள்தான் முள் நிறைந்த இந்தக் கள்ளிக் காட்டோடு கைகளினால் போராடுவது?

கூடி யோசித்து இந்த முடிவுக்கு வந்தார்கள்.

இந்த யோசனைக்கு பலமான சில எதிர்ப்புகளும் அவர்களுக்கு மத்தியில் நிலவியது. அவர்கள் சொன்ன காரணங்களாவன:

காட்டை அழிப்பது லேசு; பிறகு இந்த மாதிரி வேண்டும் என்றால் கிடைக்குமா?

மழைக்காலம் ஒருவேளை தாமதமாகிவிட்டது என்றால் உணவுக்குப் பிராணிகளும் பறவைகளும் முட்டைகளும் பழங்களும் தேனடைகளும் கீரை வகைகளும் கிடைக்கும் இந்தக் காட்டைத் தீ வைத்துப் பொசுக்கிவிட்டுப் பிறகு என்ன செய்வதாம்?

காற்று சாதகமாக அடித்தால்தான் ஆச்சி; இல்லையென்றால் நம்மைச் சுற்றிலுமுள்ள இந்தக் காட்டுப் பரப்பு தீப்பற்றி நம்மையும் வளைத்துக்கொள்ளலாம். இப்படியாகவும் இன்னும் பலமாதிரியும் சொன்னார்கள். யோசிக்க யோசிக்க மலைப்பே மிஞ்சியது.

கடேசியாக பாட்டி ஒரு அருமருந்தான யோசனையைச் சொன்னாள்.

நாம் தீ வைக்கவேண்டிய அளவுள்ள ஒரு குறிப்பிட்ட காட்டுப்பகுதியை மொத்தக் காட்டிலிருந்து, வேண்டிய இடை வெளியின் மூலம் பிரித்துவிடுவது.

அதாவது நமக்கு இப்பொழுது தேவைப்படும் நிலப்பகுதியுள்ள காட்டை மற்ற காட்டிலிருந்து தனிமைப்படுத்திவிடுவது என்று சொல்லி பாட்டி தரையில் தன் விரல் கொண்டு கீச்சி ஒரு படம் வரைந்து காட்டினாள்!

முதலில் விஸ்தாரமான ஒரு சதுரக்கட்டம் வரைந்தாள். இது மொத்தமான காடு என்று அதைக்காட்டிச் சொன்னாள். எல்லாரும் சரி என்று ஒப்புக்கொண்டார்கள். அந்தக் கட்டத்தின் மத்தியில் ஒருச்சாண் அகல, நீளமுள்ள ஒரு சிறிய கட்டம் வரைந்து, இந்தக்காடு நமக்கு நிலமாகக் கிடைக்கவேண்டும்; இல்லையா; இப்போ இந்த நிலமாகப் போகிற காட்டின் நாலு எல்லைகளையும் ஒட்டி, ஐந்து வண்டிப்பாதை அகலமுள்ள காட்டை மட்டிலும் நாம் வெட்டி — நாலு புறமும் வெட்டி — எறிந்துவிட்டு தீ வைத்துவிட்டால் மற்ற எந்தப் பகுதிக்கும் தீ பரவ வழியே இல்லை; இல்லையா? என்று கேட்டாள்.

பெரியவர் நல்லைய்யா சிரித்தார். எல்லோரும் அவரைப் பார்த்தார்கள். "என்ன சித்தி நீ சொல்றது; நாம வெட்டிப் போட்டுவைக்கும் காட்டுப் பகுதி அந்த இடைவெளிப் பகுதிகளிலெ நல்லா உலர்ந்து காஞ்சி போயிருக்கும். அதிலேதான் சீக்கிரமா தீப்பிடிச்சி மத்தப் பக்கள்ளாம் பரவிருமே; என்ன நீ சொல்றது!"

பாட்டி அதுக்கு ஒரு திருத்தம் சொன்னாள். அப்படி வெட்டி எறியும் அந்தப் பகுதிகளை நாம் எரிக்க வேண்டிய காட்டுக்குள் போடவேண்டும்; பாதையில் போடக்கூடாது.

'என்னமோ; சரி; செஞ்சி பார்ப்போம்' என்று பெரும்பாலோருக்குத் தோன்றியது.

ராத்திரி காவல் இருக்கும் இரண்டு மூன்று பேரைத் தவிர மற்றவர்கள் இதைப்பற்றியே பேசிக்கொண்டு உறங்குவதற்குப் போனார்கள்.

பொழுது மறைந்த உடனேயே குழந்தைகள் சாப்பிட்டுவிட்டு தூங்கிவிடுவார்கள். அவர்கள் பகலெல்லாம் காட்டுக்குள் கிடைக்கும் வினோதமான பூச்சி புட்டரைகளைப் பிடித்து விளையாடுவார்கள். கொஞ்சம் பெரிய குழந்தைகள்

பெரியவர்களுக்குக் காட்டை அழிக்கும் வேலைகளில் ஒத்தாசனை செய்வார்கள்; மரக்கிளைகளின் தூளிகளில் தூங்கும் பச்சைக் குழந்கைகளுக்குப் பக்கத்தில் நரி, ஓநாய் முதலியவைகள் வந்து விடாமல் இருக்கக் காவல் இருப்பார்கள்.

பகலில் தூங்கிய ராக் காவலாளிகள் இப்பொழுது அந்தக் குடியிருப்பைக் காவல் காக்கிறார்கள். தீக்குழியில் தீ குறையும் போதெல்லாம் அவர்கள், தயாராயிருக்கும் விறகுக் கட்டைகளை எடுத்து அந்தக் குழிக்குள் போட்டு தீ அணைந்துவிடாமல் காப்பாற்றி எரியவிட்டுக்கொண்டே இருப்பார்கள்.

அந்த அக்கினித் தெய்வம், விளக்குகள் இல்லாத அந்த நேரத்தில் அவர்களுக்கு வெளிச்சம் கொடுத்தது. குளிர் அவர்களை ரொம்பவும் பாதித்துவிடாமல் அபயம் கொடுத்தது. துஷ்ட மிருகங்கள் இரவு நேரங்களில் அவர்களை அண்ட விடாமல் பாதுகாத்தது.

***

18

அந்தக் காட்டில் பட்சிகள் அதிகாலையில் விழித்து எழும்போது அவர்களும் எழுந்துவிடுவார்கள். அந்தப் பட்சிகளைப் போலவே கலகலப்பாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்கினார்கள்.

முந்தின நாள் மாலை தீர்மானித்த பிரகாரம் காட்டுக்குள்ளேயே ஒரு தீவுக் காட்டை உண்டாக்க அன்று அதி காலையிலேயே முனைந்துவிட்டார்கள். நிறை கர்ப்பிணிகள், வயதால் மிகவும் தளர்ந்தவர்கள், நீண்ட நடைப் பயணத்தின் போது கால்கள் வீங்கி வெடித்துப் புண் ஆறாதவர்கள், நோயாளிகள், தூரமான பெண்கள் இவர்களைத் தவிர மற்ற ஆண் பெண் அனைவருமே இந்தக் காட்டை அழித்து நிலம் உண்டாக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டார்கள்.

சீறிக்கொண்டுவரும் அடைகாக்கும் பாம்புகள், சேடா, நட்டுவக்காலி, தேள், பூரான் முதலிய விஷ ஜந்துக்களை சந்தித்தார்கள். அடையாளம் தெரியாத முன்பின் பார்த்திராத சில வண்டுகள் வந்து தாக்கிக் கடித்தன. இதனால் மேலெல்லாம் சிலருக்கு பொரி பொரியான பொக்களங்கள் ஏற்பட்டு நீராய் வடிந்தது.

ஏராளமான உடும்புகள் அகப்பட்டன. உடும்பைப் பிடிக்கிறது ரொம்பவும் லேசு. ஆட்களைக் கண்டவுடன் அது வளைக்குள் பூராவும் நுழைந்து மறைந்து கொண்டு முகத்தின் நுனியை மட்டும் லேசாகத் தெரியும்படி வைத்துக்கொண்டிருக்கும். ஒரு குச்சையை எடுத்து அந்த வளைக்குள் விட்டால் போதும்; அந்தக் குச்சியை பலமாகக் கடித்துக்கொள்ளும்; விடாது. அப்படியே இழுக்க வேண்டியதுதான். குச்சியைக் கடித்துக்கொண்டே வந்துவிடும். அதுக்கு நினைப்பு, எதிரிவந்து அதனிடம் வகையாக மாட்டிக்கொண்டதாக!

சேடாவைக் கொல்லும்போது கோளாறாக அதன் தலையை மட்டும் நைத்து, அப்படியே ஒரு அடையாளமான இடத்தில் புதைத்துவிடுவார்கள். கொஞ்ச நாள் கழித்து தோண்டி எடுத்தால், அதன் சதைப் பகுதியையெல்லாம் மண்தின்றது போக அதன் உடம்பிலுள்ள அழகான கருப்பும் மஞ்சளும் கலந்த சிறிய வளையங்கள் கிடைக்கும். அதைக் குழந்தைகளின் அரைஞாண் கயிற்றில் கோர்த்துப் போடுவார்கள். பார்க்க ரொம்ப நன்றாய் இருக்கும் ஒரு ஆபரணம் போல.

கொழுத்த சாரைப்பாம்பின் தோலை உரித்து அதன் கொழுப்பை எடுத்துக் காய்ச்சி 'பாம்பு நெய்' தயாரித்து வைத்துக்கொள்வார்கள் மருந்துக்கு.

முள்ளெலிகளைப் பிடித்து அதன் சதைகளை எடுத்து வாட்டி உப்பிட்டு குழந்தைகளுக்குக் கொடுத்துவிட்டு அதன் முட்கள் நிறைந்த தோலை நிழலில் காயவைத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொள்வார்கள், குழந்தைகளின் குன் இருமலுக்கு மருந்தாகக் கொடுக்க என்று. முள்ளெலிகளைப் பிடிப்பதும் ரொம்பச் சுலபம். அவைகள் மெதுவாகவே ஓடும். அவைகளின் மேல் கொஞ்சம் மண்ணை அள்ளி வீசினாலும் போதும்; அதன் மேலே விழவேண்டும் என்றுகூட இல்லை. உடனே பந்துபோல் சுருண்டு கொள்ளும். அப்படியே எடுத்துக்கொண்டு வந்துவிட வேண்டியதுதான்!

முயல்களை அறுக்கும்போது அதன் இரத்தத்தைப் பெண்கள் பழைய துணிகளில் படிய வைத்துக்கொள்வார்கள், அதைத் தலையில் தேய்த்துக் குளித்தால் கூந்தல் அடர்த்தியாகவும் நீளமாகவும் வளரும் என்று.

காட்டாமணக்கு விதைகளையும் வேப்பம் விதைகளையும் பொறுக்கிச் சேகரித்து, பாறைகளில் போட்டுக் கற்களால் இடித்துப் பொடியாக்கி சட்டியில் போட்டு தண்ணீர் விட்டுக் கொதிக்க வைப்பார்கள். நீண்ட நேரம் கொதித்தவுடன் மேலே எண்ணெய் மிதக்கும். அதைப் பறவைகளின் நீண்ட இறகுகளால் மேலாகவே தள்ளி ஒரு ஏனத்தில் சொட்ட விடுவார்கள். இதில் எண்ணெயும் தண்ணீரும் கலந்தேதான் முதலில் வரும். இப்படியே அந்த ஏனம் நிறைந்தவுடன் அதைத் தனியாக மறுபடியும் நன்றாகக் காய்ச்சுவார்கள். அதிலுள்ள தண்ணீரெல்லாம் கொதித்து ஆவியாகிப் போய்விடும்; எண்ணெய்

மட்டுமே மிஞ்சும், அதைத் துணியில் வடிகட்டி ஈரமில்லாத பாத்திரங்களில் எடுத்து வைத்துக்கொள்வார்கள். இப்படியாக அவர்களுக்கு வேப்பெண்ணெயும் ஆமணக்கெண்ணெயும் கிடைத்தது.

இந்த நீண்ட வேடுவ வாழ்க்கையில் அனைவருமே சந்தோஷங்கொண்டு திருப்தி அடைந்தார்கள் என்று சொல்ல முடியாது. ஒரு சிலர் தாங்கள் பிறந்த மண்ணை நினைத்து நினைத்து ஏங்க ஆரம்பித்தார்கள். வரிசையாக நீண்ட நாட்கள் நடந்துகொண்டே வந்தபோது இது தெரியவில்லை. இனி இங்கேதான் நமக்கு என்று ஏற்பட்டவுடன், நாட்கள் ஆக ஆக அந்த எண்ணம் சிலரைப் பேயாய்ப் பிடித்து ஆட்டியது.

அப்படி ஏக்கம் கொண்டு வாடியவர்களில் முக்கியமாக போத்தன்னாவைச் சொல்லலாம். திடீரென்று அவர் குழந்தை போல் அழுவார்.

பகல் பொழுதில் அவருக்கு என்று ஒரு நட்சத்திரம் தெரியும் போலிருக்கிறது. அதையே அவர் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பார்.

ராத்திரி ஆகிவிட்டால் நட்சத்திரம் தரைக்கு வந்துவிடும் போலிருக்கிறது. தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு கீழேயே பார்த்துக்கொண்டிருப்பார்.

"போத்தன்னா, தூங்கலையா?" என்று பாட்டி விழிப்பு ஏற்படும்போது தலையைத் தூக்கிக் கேட்பாள்.

"தூக்கமா . . . தூங்குங்கெ; தூங்குங்கெ" என்று முடிப்பார். பிறகு ஒரு நீண்ட பெருமூச்சு விடுவார். அப்புறம் அவரை யாராலும் பேசவைக்க முடியாது.

*

அவர்கள், கிழமேலாய்த் தண்ணீர் ஓடி அரித்த ஒரு ஓடையை தீவுக் காட்டின் வடக்கு எல்லையாக நிர்ணயித்துக் கொண்டு முதலில் ஒரு பாதையை அகலமாக்கிக் கொண்டே போனார்கள். அப்படிச் செய்வது தோதாகவும் வசதியாகவும் இருந்தது.

அன்றைய வேலை சுளுவாகவும் உற்சாகம் தருவதாகவும் அமைந்தது. வெட்டிய செடி செத்தைகளையும் வளர்ந்த புல் பூண்டுகளையும் அவர்கள் எரிக்கவேண்டுமென்று நினைத்த தீவுக் காட்டுக்குள்ளேயே போட்டும், வீசி எறிந்துகொண்டும் போனார்கள்.

அந்தியில் அவர்கள் இருப்பிடம் திரும்பும் வேளையில் குழந்தைகளின் பலத்த கூக்குரல் கேட்டு என்னமோ ஏதோ என்று வேகமாக ஓடிவந்தார்கள். அங்கே வந்து பார்த்தால் அவர்களுக்கு ஒரு அதிசயம் காத்துக்கொண்டிருந்தது. அவர்கள் தண்ணீர் எடுக்கும் பள்ளத்தின் மறு பகுதியின் சகதிக்குள் ஒரு பசுமாடு ஆழத்தில் புகுந்து வெளியே வரமுடியாமல் திணறிக்கொண்டிருந்தது. அதன் 'அறை' யைப் பார்த்ததுமே அது நிறை சினை என்று தெரிந்தது. அந்தக் காட்சி அவர்களுக்கு அன்றைய உழைப்பின் அலுப்பெல்லாம் ஓட்டுவதாக இருந்தது.

இளவட்டங்கள் பலர் பசுமாட்டைக் கரையேற்ற சகதிக்குள் இறங்கினார்கள். மாட்டின் நான்கு கால்கள் பூராவும் தெரியாதபடி அடிவயிறுக்கும் மேலேயே அது சகதிக்குள் புகுந்து திணறிக்கொண்டிருந்தது. அந்த நிலையிலும் அந்தப் பசு தன் அருகே அவர்களை நெருங்கவிடாமல் ஆங்காரமாகச் 'சீத்' தடித்தது. ஒருமனிதக் கைகூட அதன் மேல் இதுவரையும் படாமல், பிறந்ததிலிருந்து தன்னிச்சையாக மேய்ந்து திரிந்து வளர்ந்த சுதந்திரமான காட்டுப் பசு அது.



வெளியே கொண்டுவந்துவிட்டால் அதை அமைப்பது சிரமம் என்று தோன்றியது. காட்டுக் கொடிகளால் திரித்த பலமான கயிற்றினால் அதற்கு முதலில் ஒரு மூக்கணி போட்டார்கள். பாட்டி கரையிலிருந்து கொண்டு சத்தம் போட்டுச் சொன்னாள். "பிள்ளைகளே, மூக் கணியினால் மாட்டை அமைக்கமுடியாது. இது காட்டு மாடு; அந்த நிலையிலேயே அதை வைத்துக்கொண்டு அதற்கு மூக்கைக் குத்தி மூக்கணாங்கயிறு பூட்டிவிடுங்கள்."

"அதான் சரி" என்றார்கள் கரையைச் சுற்றிலும் நின்றுகொண்டு பார்த்துக் கொண்டிருந்தவர்கள்.

கத்தியால் மூக்கைத் துளையிட்டதும் அது பயங்கரமாக கத்திக்கொண்டு சகதியில் இவர்களைப் புரட்டி எடுத்தது. இளவட்டங்கள் அதன் மூக்கில், மல்லுக்கட்டி கயிற்றைத் திணித்து இழுத்து முடிபோட்டு அதை கரைக்கு சிரமப்பட்டு இழுத்துக்கொண்டு வந்தார்கள். அந்தக் காட்சி பார்ப்பதற்கு எப்படி இருந்தது என்றால், நாப்பது ஐம்பது எறும்புகள் சேர்ந்து கொண்டு ஒரு பெரிய புழுவை மொய்த்து அது உதறியும், புரண்டாலும் விடாமல் இழுத்துக் கொண்டே போவது மாதிரி இருந்தது.

"மெள்ள; மெள்ள. மாட்டை வயிற்றில் அடித்து விடாதீர்கள். அதன் வயித்துக்குள் இன்னொரு மாடு இருக்கிறது. நமக்கு ரெண்டு மாடும் வேணும்" என்று பெரியவர்கள் உற்சாகமாகக் கூவினார்கள்.

அதைக் கோவிலுக்கு முன்னால் கொண்டுவந்து சேர்ப்பதுக்குள் பெரும்பாடு ஆகிவிட்டது; நிலை கொள்ளமாட்டேன் என்றது.

ஒரு முளை அறைந்து கட்டிப்போட்டார்கள். ஒரே நொடியில் அது அந்தப்பலமான கயிற்றை அறுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தது. திரும்பவும் இளவட்டங்களெல்லாம் உயிரைத் திரணமாக மதித்து ஒருசேரப் பாய்ந்து அதன் மேல் விழுந்து அப்பி அதை மறுபடியும் அமைத்து, தள்ளிக்கொண்டு போய் ஒரு வீட்டுக்குள் போட்டு கம்புகளால் ஆன கதவை வைத்து மூடி

அந்தக் கதவை நன்றாக வெளியே இழுத்துக் கட்டினார்கள். இதற்குள் நன்றாக இருட்டிவிட்டது.

அங்கே அன்று குழந்தை முதல் கிழவர் வரை தாங்க முடியாத ஆனந்தம் கொண்டார்கள். பலர் சந்தோஷம் தாங்காமல் குதித்தார்கள்.

போத்தன்னாகூட மகிழ்ச்சியால் சிரித்தார்!

***

19

மறுநாள் அதிகாலை. பறவைகள் எழுந்திருக்க முன்னாலேயே பலர் எழுந்துவிட்டார்கள்! தீக்குழியிலிருந்து எரியும் ஒரு நீண்ட கட்டையை எடுத்துக்கொண்டு ஒருவன் பசுமாடு மூடப்பட்டிருக்கும் வீட்டைப் போய்ப் பார்த்தவன் ஆனந்தக் கூச்சலிட்டான். எல்லாரும் ஓடிப்போய்ப் பார்த்தார்கள். அந்த நெருப்பு வெளிச்சத்தில், அப்பொழுதுதான் ஈன்ற கன்றை அந்தப் பசுமாடு நக்கிக் கொண்டிருந்தது.

பாட்டி சொன்னாள், "இனி பசுமாடு காட்டைப் பார்த்து ஓடாது; கண்ணுக்குட்டியை மாத்திரம் நாம் பாத்துக்கிடணும், அவ்வளவுதான்."

"கோயிந்தப்பா, அந்தப் பசுமாட்டோடு மகாலட்சுமியும் இந்தக் கிராமத்துக்கு அண்ணைக்கே வந்துட்டா. அது வந்தவேளை ஊர் நிறைய பசுமாடுகளாப் பெருகிட்டது. கோபல்ல என்று பேர் வந்ததே இந்தக் கிராமத்துக்கு, அந்தப் பசுமாடு தான் காரணம்."

பசுமாட்டைவிட கன்றுதான் அவர்களோடு நன்றாகப் பழகி சேர்ந்துகொண்டது.

திடீர் திடீரென்று பசுமாடு அந்த மண்வீட்டின் சுவர்களை ஆவேசமாக முட்டி முட்டிப் பெயர்க்கும். காதுகளை விடைத்துக்கொண்டு எதையோ கவனித்துக் கேட்கும். கிட்டே போய் புல்லைப் போட முடியாது. தூரத்திலிருந்து கொண்டே தான் வீசி எறியணும்.

இஷ்டப்படி பால் குடித்து அந்தக் காளைக்கன்று, பார்த்துக் கொண்டிருக்கும்போதே மளமளவென்று வளர்ந்து பெரிசாகிக் கொண்டு வந்தது.

நாகையா என்ற இளவட்டம்தான் பிடிவாதமாக அந்தப் பசுமாட்டோடு நாளாவட்டத்தில் பழகி நெருங்கி அதைக் கட்டுப்படுத்த முடிந்தது. அவனுடைய 'மனுஷ வாடை' அதுக்கு எப்படியோ பிடித்துப் போய்விட்டது. அவன் ஒருத்தனைத்தான் பாயாமல் அது இருந்தது கடேசி வரைக்கும்.

*

அந்தக் காட்டில் அவர்கள் உண்டாக்கிய 'தீவு' முதலில் அவர்கள் நினைத்ததுபோல் சிறியதாக அமையவில்லை. நிறைய்ய நிலம் வேணும் என்ற விவசாயிகளுக்கே உண்டான பேராசையால் ரொம்பப் பெரிதாகவே அமைந்துவிட்டது. நாலுபக்கமும் பாதையை — இடைவெளியை — நல்ல அகலமாகவே உண்டாக்கியிருந்தார்கள். மேல் காற்று பலமாக ஒரே சீராக அடிக்கத் தொடங்கிவிட்டது. அவர்கள் எதிர்பார்த்த தருணம் இதுதான்.

காற்றின் வேகம் பலப்பட்டாலும்கூட தீயின் நாக்குகள் இடைவெளியைத் தாண்டாது; பக்கத்திலுள்ள காட்டுக்குத் தீ பரவாது என்பதை நிச்சயித்துக் கொண்டார்கள்.

தீயேற்றுவதற்கு ஒரு நல்ல நாள் பார்த்து நிச்சயித்தார்கள். அன்று சூரியன் நடு உச்சியில் இருக்கும்போது ஆரம்பிக்க வேண்டும் என்று ஏற்பாடு.

தீவுக் காட்டின் தென்மேற்கு மூலையில், காய்ந்த சருகு செத்தைகளைப் பரவலாகக் குவித்தார்கள். குழந்தைகளும் பெரியவர்களும் சேகரித்திருந்த காட்டாமணக்கு விதைகளையும் வேப்பம் விதைகளையும் தாராளமாகத் தூவினார்கள். தீக்குழியிலிருந்து கொழுந்துவிட்டு எரியும் நீண்ட கட்டைகளை எடுத்துக்கொண்டு வந்தார்கள். அந்தத் தீக் கட்டைகளை அதன் மேல் எறிவதற்கு முன்னால் பாட்டி சத்தம் போட்டு அந்தக் காட்டை நோக்கிக் கும்பிட்டுச் சொன்னாள், "ஏ வனதேவதைகளே, காத்துக்கருப்புகளே, இந்தக் காரியத்துக்கு எந்த வித விக்னமும் வராமல் நீங்கதான் எங்களுக்குத் துணை செய்யணும்."

எல்லாரும் தீக்கட்டைகளை எடுத்து அதன் மேல் வீசினார்கள். எண்ணெக் கொட்டைகள் வெடித்துச் சிதறின. தீ சடசட வென்று வேகத்தோடு பிடித்து எரிந்தது. தீயின் அந்த ஓசை, அது பற்களை நெடு நெடு என்று கடித்து ஆங்காரமாகக் கோபம் கொண்டு எழுவதுபோல் இருந்தது. புகை உயர்ந்து ஆகாயம் முட்டியது. காற்றின் வேகம் தீயை உசுப்பி எழுப்பியது. அந்தக் காட்டை அக்கினி தேவன் புசிக்க ஆரம்பித்தான்.

*

மூன்று இரவுகள் மூன்று பகல்கள் தீ எரிந்தது. பற்றி எரியும் அந்தப் 10பிள்ளைக்காட்டிலிருந்து வினோதமான பிராணிகள் தீக்குப் பயந்து வெளியே சிதறி ஓடின.

சுத்தக்கட்டியில் செய்ததைப்போன்ற வெள்ளியின் நிறத்தில், கைப்பருமனும் ஒன்றறைப் பாகம் நீளமுள்ள பாம்பு ஒன்று வெளியே வந்து ஓடியது.

அவர்கள் ஆயுளில் அந்த நிறத்தில் அப்படிக் கண்ணைப் பறிக்கும் பிரகாசத்தில் ஒரு பாம்பைப் பார்த்ததும் இல்லை, கேள்விப்பட்டதும் இல்லை! அதைப் பார்த்த ஆச்சரியத்தில் அவர்கள் கண்கள் விரிந்தது விரிந்தது போலவே இருந்தது; தொண்டையிலிருந்து குரல்கூட வெளிவரவில்லை. ஒரு வெள்ளி மின்னலைப் போல் அது தோன்றிய வேகத்தில் ஓடி மறைந்தது.

ஒரு பெரிய்ய கீரி. அவ்வளவு பெரிய கீரிப்பிள்ளையை பார்த்தது இல்லை. அதன் மேலெல்லாம் தங்க நிறத்தில் ஒரு மின்னாப்பு. கழுத்தின் கீழும் அடிவயிறும் பால் வெள்ளை. அதன் வால்தான் எவ்வளவு நீளம் கருப் . . . பு நிறத்தில்! அதில் எவ்வளவு மென்மையான அடர்த்தி மயிர்!

வேகமாக ஓடித் தப்பிக்க வரும் முள்ளம்பன்றிகள், ஆட்கள் எதிரே நிற்பதைக் கண்டதும் உடம்பை எழுத்தாணிகளாய் சிலிர்த்துக்கொண்டு உறுமும். இளவட்டங்கள் அதைக் கற்களால் எறிந்து கொல்வார்கள். சிலது தப்பி ஓடிவிடும்.

பறவைகளின் கூக்குரல்கள்தான் கேட்கப் பரிதாபமாய் இருந்தது. பல தாய்ப்பறவைகள் எரியும் நெருப்பின் புகைக்கு மேலேயே கூவிக்கொண்டு வட்டமிட்டு சுற்றிச் சுற்றி வரும். உள்ளே அகப்பட்டுக்கொண்ட பறக்காட்டப்படாத, ரோமம் முளைக்காத குஞ்சுகளைத் தீயில் மடியவிட்டு விட்டுப்போக அவைகளுக்கு மனசு வரவில்லை. சில பறவைகள் விலகி ஓடிப் போய்விடும். சிலது கடேசி வரைக்கும் ஓலமிட்டுக் கொண்டே வட்டமிட்டு வட்டமிட்டு தீயிலேயே விழுந்து மடியும்.

எரியும் காட்டிலிருந்து ஒரு பெரிய காட்டுப் பன்றி, உறுமிக் கொண்டு வெளியே வந்தது. எல்லோரும் அதைக் கொல்ல வளைத்தார்கள். அதன் அருகே நெருங்க பயமாக இருந்தது. அதன் கீழ்த்தாடையிலிருந்து இரண்டு கொம்புப் பற்கள் மேல்நோக்கி வளர்ந்து யானைத்தந்தம் போல் இருந்தது. சரமாரியான கற்கள் வந்துவிழுவதைக் கண்ட அந்தக் காட்டுப் பன்றி திரும்பி அதே எரியும் நெருப்புக்குள் பாய்ந்து சாதாரணமாக ஒரு மீன் தண்ணீருக்குள் போவதைப் போல் புகுந்து மறைந்துவிட்டது! நெருப்புக்குப் பயந்து அது கட்டாயம் வெளியே திரும்பவரும் என்று நம்பினார்கள். ஆனால் அது வரவேயில்லை. இந்த மனுசப் பயல்கள் கையால் சாவதைவிட நெருப்பில் விழுந்து உயிரை விடுவோம் என்று நினைத்துவிட்டது போலிருந்தது அது.

காடு எரிந்து முடிந்த பிறகும்கூட பல நாட்கள் அங்கே நெருப்புக் கங்குகள் சில இடங்களில் இருந்து கனிந்து கொண்டே இருந்தது. அந்தப் பசுமை எரியும்போதும் எரிந்து முடிந்த பிறகும் நெடுநாள் அந்த 'ஒருவித மணம்' இருந்து கொண்டே இருந்தது.

சிற்றெறும்புகளைப் போல்சுறுசுறுப்பாக வேலையில் இறங்கினார்கள். அவர்கள் முதலில் நினைத்ததுபோல் அவ்வளவு சுலபமாகவும் அவ்வளவு சீக்கிரமாகவும் அந்தபரப்பு பூராவையும் நிலமாக்கிவிட முடியவில்லை. பூமியிலுள்ள கற்பாறைகள் இவைதவிர மண்ணுக்குக் கீழே எரியமுடியாமல் நின்றுபோன மரங்களின் கனமான வேர்கள் இவையெல்லாம் அவர்களுடைய வேலைகளுக்குத் தடங்கலாக இருந்தது. பரப்பு அவ்வளவு நல்ல நிலங்களாய் ஆகப் பல வருடங்கள் பிடித்தன.

***

20

அந்த வருஷம் மழைக்காலம் எதிர்பார்த்தபடி சீக்கிரமாகவே துவங்கியது.

மரத்தில் கலப்பைகள் போல் செதுக்கி, மாடுகள் போல் அவர்களே இழுத்தார்கள். தங்களிடமுள்ள நவதானியங்களைக் கைவிதைப்பாய் விதைத்து, கருவேலமுள்ளை வெட்டிக் கவையாக்கி, காட்டுக்கொடிகளால் கட்டி இழுத்து விதைத்த விதைகளை மூடினார்கள். அப்போது அவர்களிடம் மாடுகளோ கலப்பைகளோ இருக்கவில்லை.

அவர்கள் விதைத்த தானியங்கள் முளைவிட்டபோது அவர்களது நம்பிக்கையும் முளைவிட்டது.

அரும்பாடுபட்டார்கள்; அதனால் பூமாதேவி கண் திறந்தாள்.

முளைக்கும்போதே பயிர்கள் தாட்டியமாக கரும்புச் சோகைகள் போல் அகலமாகவும் கரும்பச்சை நிறத்திலும் இருந்தது.

கம்புப் பயிர் கணக்கில்லாமல் தூர்கட்டி வந்தது. தினைப் பயிர் நம்ப முடியாதபடி கனமாக வளர்ந்து வந்தது. எள்ளுச் செடியின் வளர்ச்சி ஆள் கை எடுப்பு உயரத்துக்கு இருந்தது. பருத்திச் செடிகளுக்கு ஊடே ஆள் நுழைந்தால் தெரியாது. அதில் பூத்த பூக்களும் காய்களும் பிஞ்சுகளும் தேர் ஜோடித்த மாதிரி விளங்கியது.

அந்த முதல் வருடம் அவர்களுக்கு நல்ல மாசூல். பொதுவில் அறுவடை செய்து குடும்பவாரியாகப் பகிர்ந்து கொண்டார்கள்.

அதன் பிறகு அவர்கள், ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவர்களது சக்திக்கும் ஏற்ப நிலங்களை, ஒவ்வொருவராலும் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவு

நிலத்தை அவர்கள் சொந்தத்தில் செப்பம் செய்து பயிர் செய்ய ஆரம்பித்தார்கள்.

கோடை நாட்களில் வெகு தூரம் நடந்துசென்று மற்ற சமூக மக்களோடு தொடர்பு கொண்டார்கள். தங்களிடமுள்ள பொருள்களைக் கொடுத்து மாடுகள், கலப்பைகள் வாங்கினார்கள்.

இவர்களைப்போல தெலுங்கு நாட்டிலிருந்து வந்து ஆங்காங்கே குடியேறிய மக்களோடு தொடர்பு கொண்டார்கள். சம்மந்த வழி செய்துகொண்டார்கள். தங்களிடம் இல்லாத விவசாயத் தொழிலாளர்களான தச்சர்கள், கொல்லர்கள் முதலிய 'தொள்ளாளி'களைக் கூட்டிவந்து தங்கள் கிராமத்தில் குடியமர்த்தினார்கள்.

மொழிப் பிரச்னை முதலில் அவர்களுக்குக் கொஞ்சம் சங்கடமாக இருந்தாலும் நாளாவட்டத்தில் அதெல்லாம் சரியாகிவிட்டது. இவர்கள் இருதரப்பிலும் குழந்தைகள், பெண்கள் இவர்களே ஒருவர் மொழியை ஒருவர் பேசுவதற்கு சீக்கிரம் கற்றுக்கொண்டார்கள்!

வீடுகள் கட்ட ஆரம்பித்தார்கள். கிராமம் முறையாக வளர ஆரம்பிக்கவே, மழையினால் தேங்கிய தண்ணீர் காணாததால் குடிநீர்க் கிணறுகள் தோண்டினார்கள். கால் நடைகளின் தண்ணீர் வசதிக்காக கம்மாயைத் தோண்டி அகலப்படுத்தினார்கள். கம்மாயின் கரைகளைச் சுற்றிலும் பலப்படுத்தி அதில் நீண்ட நாட்கள் நிற்கக்கூடிய மரங்களாக நட்டார்கள். அப்படி நட்டு தண்ணீர் எடுத்து ஊற்றி காபந்து செய்து வளர்க்கப்பட்ட மரங்கள்தான் இவைகள்.

ஒவ்வொரு குடும்பத்தாரும், அவர்களுடைய பெயர் சொல்லும்படியாக ஒரு மரம் நடவேண்டும் என்று ஊர்ப் பொதுவிலிருந்து ஏற்பாடு. இதனால் கம்மாயைச் சுற்றிலும் மட்டுமல்ல, ஊரின் பல முக்கியமான இடங்களிலும் மரங்கள் நட்டு வளர்க்கப்பட்டன.

அந்த நாட்களில் மனித பலமும் மனித எண்ணிக்கையும் அதிகமுள்ள குடும்பம்தான் பெரிய குடும்பம்; பெரிய வீடு. மனித பலம் அதிகமுள்ள குடும்பத்தால் அதிக நிலத்தை சீர்திருத்தி, அதிகக் கால்நடைகளையும் வைத்துப் பராமரிக்க முடியும். இதனால் அது அதிக வருமானமுள்ள 'பெரிய குடும்ப'மாக ஆக முடிந்தது. கோட்டையார் குடும்பம் அப்படியாக ஆனதுதான்.

*



வெற்றிலை குதப்புகிறவர்களின் வட்டம் கோவிந்தப்ப நாயக்கரைச் சுற்றி உட்கார்ந்து கொண்டது. அந்தக் காலத்திய வளமுறை கல்யாணம் ஆன பிறகுதான் வெற்றிலை போட வேண்டும் என்பது. ஆதலால் இளவட்டங்கள் சற்றே ஒதுங்கி இருந்து இவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

வெற்றிலைச் சாறு நாடியில் வழிந்துவிடாமல் இருக்கக் கீழ் உதட்டை ஓடத்தின் நுனி போல ஏந்தி வைத்துக்கொண்டு புகையிலையின் போதையில் 'மழலையாடும்' வார்த்தைகளை சிறு புன்னகையோடு பார்த்து மகிழும் சில இளவட்டங்களுக்குத் தாமும் அதுமாதிரி வெற்றிலை போட்டுக் கொண்டு 'பேச' வேண்டும் என்று தோன்றும்!

சின்னைய்ய நாயக்கர் அப்பொழுதுதான் எழுந்திருந்து வெற்றிலைச் சக்கையைத் துப்பிவிட்டு வந்தார். சிவந்த அவருடைய முகத்தில் வாயும் பற்களும் உதடுகளும் ரெத்தமாகச் சிவந்திருந்தன. புகையிலையின் கிறக்கம். நுனிமூக்கிலும் கழுத்தடியிலும் ஒரு இளம் வியர்வை துளிர்த்திருந்தது.

முகத்தில் ஒரு அரிய பரவசம்! பல் இடுக்குகளில் அங்கங்கே சிக்கிய பாக்கின் மிச்சங்களை நாக்கு நுனியால் மெல்லிதமாகவும் அழகாகவும் கொண்டுவந்து நாசுக்காக மெல்லிய சப்தத்தில் டுப் என்று ஊதி வெளியேற்றுவார். அப்படி வெளியேற்றும் போது எவ்வளவு கூட்டம் இருந்தபோதிலும் அது யார் மேலும் விழாது. ஒரு சிறிய இடைவழி கிடைத்தாலும் போதும்.

இன்னொரு குணம் அவருக்கு; மற்றவர்கள் போல் சக்கையைத் துப்பிவிட்டு துரும்பைத் தேடி பல்லைக் குத்த மாட்டார். துப்பியதும் அவருக்குக் காதுதான் 'புருபுரு' என்று ஊறலெடுக்கும். மரத்தடியில் எங்காவது ஒரு வசமான பறவையின் இறகு கிடக்கிறதா என்று பார்ப்பார். அதை எடுத்து, வேண்டிய அளவு போக பாக்கியை உரிப்பார். அப்படி அவர் உரித்துக்கொண்டிருக்கும்போதே காதுகள் நிலைகொள்ளாது; சீக்கிரம், சீக்கிரம், கொண்டா கொண்டா என்று சொல்லுமாம்! எச்சிலை ஒருதரம் நன்றாகக்கூட்டி விழுங்கிவிட்டு, மேல் வேட்டி காற்றில் நகர்ந்து விடாமல் இருக்க இழுத்து கக்கத்தில் இடுக்கிக்கொண்டு, இறகின் நுனியைப் பதனமாகக் காதின் துவாரத்துள் நுழைப்பார். அப்போதே கண்கள் சொகத்தின் ஆரம்பத்தால் சொருக ஆரம்பித்துவிடும். வேண்டிய அளவு நுழைந்தானதும் இறகின் அடியை இரண்டு விரல் கொண்டு கடைய ஆரம்பிப்பார். அய்யோ, அந்த இன்பத்துக்கு எதை ஒப்பிட்டுச் சொல்ல!

வாயைக் கோணலாக அகட்டிக்கொண்டு கண்களைச் சொருகிச் சொருகி மூடி, தலையை இறகின் கடைதலுக்கு ஏற்ப அசைக்கும் அவரைப் பார்ப்பவர்களுக்கும் ஒரு ஆனந்தம் வராமல் போகாது. இதிலே அவர் அடிக்கடி மிளகாயைக் கடித்தவர் போல் ஈஸ் . . . ஈஸ் . . . என்று வாய் வழியாகக் காற்றை ஓசையுடன், ரசித்து அனுபவித்து உள்ளுக்கு இழுப்பார். உச்ச கட்ட சொகத்தில் அனைத்தையும் மறந்து அந்த லயிப்பில் கடைவாய் ஓரம் மளமளவென்று ஜொள்ளு — எச்சில் — வடிந்துவிடும்!

தன்நிலை ஏற்பட்டு திடுக்குற்று வாயை வேகமாகத் துடைத்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுச் சிரிப்பார். அது அசட்டுச் சிரிப்பாக இருக்காது; இதெல்லாம் சகஜம்தான் என்கிற மாதரி இருக்கும்.

அப்படி அவர் லயிப்பாகக் காது குடைந்துகொண்டிருக்கும் போது கோவிந்தப்ப நாயக்கர் "எப்படி இருக்கு?" என்று கேட்பார்.

சின்னைய்ய நாயக்கரிடமிருந்து இப்படி வரும் பதில்: அடேயப்பா; என்ன சொகம்; போக சொகமாய் இருக்கே!

இதைக் கேட்டதும் கோவிந்தப்ப நாயக்கர் சத்தமில்லாமல் உடம்பு குலுங்கச் சிரிப்பார். இவர்கள் இரண்டு பேருக்கும் இந்தக் கேள்வி பதில், சிரிப்பு இந்த இரண்டும் அலுக்காது. இது வழக்கம்!

சின்னைய்ய நாயக்கருடைய வீட்டில் கோழிகள் ஏராளம். எந்த இடத்தில் கவனித்துப் பார்த்தாலும் ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்திலும் காது குடைய கோழிமயிர் அங்கங்கே சொருகி வைக்கப்பட்டிருக்கும். அடுப்பங்கூடத்தில் சாப்பிடுகிற இடத்தில் நாலைந்து, சாப்பிட்டுவிட்டு உள் திண்ணையில் உட்கார்ந்து வெற்றிலை போடும் இடத்தில் நாலைந்து, தார்சாவில் நாலு பேரோடு உட்கார்ந்து பேசுமிடத்தில் நாலைந்து, தொழுவில் மாட்டுக் கூளம் போடுகிற இடத்தில், பட்டக சாலையில், ஆளோடியில், அரங்கு வீட்டுக்குள், படுக்கை அறையில், இப்படி அங்கங்கெனாதபடி எங்கும் பலவிதங்களில் பல நிறங்களில் கோழி மயிர்கள் தயாராக உரித்து இடுக்குகளில் சொருகி வைக்கப்பட்டிருக்கும், தேடாமல் எடுக்கும்படியாக.

யாருடனாவது அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே அவரை அறியாமல் அவருடைய கை ஒரு திசையில் நீளும். அவர் பார்க்காமலேயே அந்தக் கை தொடும் இடத்தில் சரியாக ஒரு கோழிமயிர் அந்தக் கையின் விரல்களில் வரும்!

அவருடைய சம்மந்தக்காரர்கள் அவரைக் கேலி செய்வதற்காக அவரைக் கோழிமயிர் சின்னைய்ய நாயக்கர் என்று குறிப்பிடுவார்கள். நாளடைவில் அவருக்கு அந்தப் பெயரே பட்டப் பெயராக நிலைத்துவிட்டது. வெறுமனே, சின்னைய்ய நாயக்கர் என்று மட்டும் கேட்டுவிசாரித்தால், எந்த சின்னைய்ய நாயக்கர்? என்று கேட்பார்கள்!

***

21

சின்னைய்ய நாயக்கருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பவர் மண்ணுதிண்ணி ரெங்க நாயக்கர். மண்ணு திண்ணி என்றால் உடம்பில் சத்துக்குறைவு காரணமாக சின்னவயசில் மண்ணைத் தின்றவர் என்று அர்த்தமில்லை. அவர், நிலங்களின் தராதரத்தையும் உரத்தன்மையையும் அறிவதில் வல்லவர். ஒரு நிலத்தை வாங்கவேண்டுமென்றால், அது எப்பேர்ப்பட்ட நிலம் என்று அவரைக் கூட்டிக்கொண்டு போய் காட்டுவார்கள். அவர் அந்த நிலத்திலுள்ள மண்ணைக் கொஞ்சம் அள்ளி வாயில் போட்டுத் தின்றுபார்த்து, இந்த நிலத்தில் இன்னென்ன பயிர்கள் நன்றாக வரும்; இன்னென்ன பயிர்கள் சரியாக வராது என்று ரொம்ப சரியாகச் சொல்லிவிடுவார். இது சத்துள்ள நிலம்; இது பொக்கு நிலம் என்று சொல்லிவிடுவார். அவர் சொன்னது தப்பாது.



மண்ணுதிண்ணி நாயக்கருக்குப் பக்கத்தில் பீமசேனனைப் போல் உட்கார்ந்திருப்பது நல்லமனசு திரவத்தி நாயக்கர். இவருக்கு 'நல்லமனசு' என்ற பட்டப்பெயர் வந்தது ஒரு சுவாரஸ்யமான விஷயம்!

அப்போது திரவத்தி நாயக்கருக்கு சரியான பிராயம்; பதினைந்து பதினாறு வயசிருக்கும். ஆள் நல்ல கரலாக்கட்டை மாதிரி உடம்பு உருண்டு திரண்டு இருக்கும். வெள்ளை மனசு. ஒற்றையடிப் பாதை வழியே அவர் போனால் எதிரே ஆள்வந்தால் விலகமாட்டார். இடித்துக்கொண்டு போகிறமாதிரி தான் போவார்! தன்னைக் கண்டு மற்றவர் தான் விலகிப் போகவேண்டும் என்றொரு சுபாவம்.

ஒருநாள் அவருடைய வீட்டில் ஆட்டுக்கறி. வயிறு நிறைய்ய சாப்பிட்டார். உளுந்து வடை வேறு சுட்டுக் கொண்டிருந்தார்கள். அதிலேயும் ஒரு பதினைந்து இருபது வடைகள் தின்றார். இருப்புக் கொள்ளலை; உடனே

யாரோடாவது அப்படியே அமுக்கிப் பிடிச்சி மல்லுக்கட்ட வேணும் போல் உடம்பெல்லாம் ஒரு தினவு.

வாசப்படி இறங்கித் தெருவுக்கு வந்தார். அந்த வழியாக உள்ளூர் வாணியச் செட்டியாரின் பையன் சின்னத்தம்பி செட்டியார் பக்கத்து ஊர்களில் கொண்டுபோய் நல்லெண்ணெய் ஊற்றிவிட்டு, அவனைப்போலவே எண்ணெய்ப் பளபளப்புள்ள கருத்த எண்ணெய்க் குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு எதிரே வந்துகொண்டிருந்தான்.

திரவத்தி நாயக்கருக்கு ஒரே குஷி; தனக்கு சரியான ஜோடி உடனே கிடைத்துவிட்டானே என்று!

சின்னத்தம்பி ஆள் வாட்டசாட்டமாய் வஞ்சகமில்லாமல் வளர்ந்திருந்தான். அவனுடைய கைவிரல் ஒவ்வொன்றும் இரண்டு விரல் தண்டி இருக்கும். அகப்பை கொண்டுதான் சோற்றில் எண்ணெய் எடுத்து விட்டுச் சாப்பிடுவான்.

ராத்திரி அவன் படுத்துத் தூங்கியவுடன் அவனுடைய தாயார் வீட்டை ஒதுங்க வைக்கும்போதே ஒரு கும்பா நிறைய சோறு போட்டு, அதில் நாலைந்து அகப்பை பருப்புக் கறியை தாராளமாக விட்டு அன்று ஆட்டிய நல்லெண்ணெய்யை ஒரு உழக்கில் ஊற்றி அவன் பக்கத்தில் வைத்துவிடுவாள்.

சரியாக நடுச்சாமத்தில் சின்னத்தம்பிக்கு முழிப்புத்தட்டும். எழுந்திருந்து வெளியே வந்து உட்கார்ந்து, கண்ணைத் திறக்க மனசில்லாமல் கண்ணை மூடிக்கொண்டே 'ஒண்ணுக்கு' இருப்பான்.

உள்ளே வந்து தலைமாட்டிலுள்ள கும்பாவைத் திறந்து உழக்கிலுள்ள எண்ணெயை விட்டுக்கொண்டு, எடுத்து எடுத்து பெரிய பெரிய கவளமாக ரொம்ப சீக்கிரத்தில் விழுங்கிவிட்டு கும்பாவிலேயே கைகழுவி வாயைக் கொப்பளித்துக் கும்பாவிலேயே துப்பிவிட்டு, கையைத் துடைத்துக் கொள்ளக்கூட மனசில்லாமல் அப்படியே அந்தத் தூக்கத்தின் தொடர்பு விட்டுப்போகாமல் படுத்துத் தூங்கிவிடுவான்.

எல்லார்க்கும் மூணு வேளைச் சாப்பாடு. சின்னத்தம்பிக்கு மட்டும் நாலு வேளை. இதில் இம்மி குறையக்கூடாது!

சின்னத்தம்பியை திரவத்தி நாயக்கர் அமுத்தலான புன்னகையோடு சைகை செய்து கூப்பிட்டார். அவனும் மரியாதையோடு பக்கத்தில் வந்து நின்றான். அந்த எண்ணெய்க் குடத்தை எறக்கி அப்பிடி வை என்றார். அவனும் வைத்தான். சரி; ஏங்கூட மல்லுக்கட்ட வா என்று சொல்லிக்கொண்டே அவன் தோள்மேல் கையைப் போட்டார். சின்னத்தம்பிக்கு சிரிப்பு வந்துவிட்டது. என்ன நீங்கெ, சின்னப்புள்ளெ மாதிரி! விட்டுருங்கெ. விட்டுருங்கன்னா. நா இப்பத்தான் பட்டிகளுக்குப் பொயிட்டு வாரேன்; இன்னும் சாப்பிடலை. விட்டுருங்கெ; ம்ஹூம், சொன்னாக் கேளுங்கெ என்று எவ்வளவோ மன்னாடிப் பார்த்தான். திரவத்தி நாயக்கருக்கோ ஒரே வெறி!

சின்னத்தம்பியை சேர்த்துப்பிடித்து மல்லுக்கட்டி கீழே தள்ளி ஒரே அமுக்காய் அமுக்கி அவன் மேல் உட்கார்ந்து சவாரி செய்துகொண்டார். சின்னத்தம்பியும் மனசுக்குள் இது என்னடா பெரிய்ய பாதரவாப்போச்சி என்று நினைத்துக்கொண்டு, சரி. நீங்கதான் என்னெ அமுக்கிட்டீரே; விட்ருங்கெ என்று கேட்டான்.

அதெப்படி? அது முடியாது. நீ என்னெப் பெறட்டி கீழே தள்ளணும் என்றார் திரவத்தி.

சரி என்று சொல்லி சுலபமாய் அவரைக் கீழே தள்ளி திரவத்தியின் மேல் அவன் ஏறி உட்கார்ந்துகொண்டான்!

இதற்குள் கூட்டம் கூடிவிட்டது. பலர், என்ன என்ன என்று ஓடிவந்தார்கள். சத்தம்போட்டு கூட்டத்தைப் பார்த்து திரவத்தி சொன்னார், ஒண்ணுமில்லை. ஒண்ணுமே இல்லை; சும்மாதான் நாங்கெ மல்லுக்கட்டிப் பார்க்கோம் என்று சமா தானம் சொல்லிவிட்டு சின்னத்தம்பியைப் பார்த்து, டேய் சின்னத்தம்பி, இப்பொ நா உன்னைக் கீழே தள்ளி சவாரி செய்யப்போறேன்; எச்சரிக்கை என்று சொல்லிவிட்டு திரவத்தி முயன்றார். முடியவில்லை!

விட்டுரட்டுமா? என்று ரகசியமாக அவருக்கு மட்டும் கேட்கிற மாதிரி கேட்டான் சின்னத்தம்பி. திரவத்திக்குக் கோபம் வந்துவிட்டது!

விட்ரவா; இதுக்காடா நா உன்னை மல்லுக்குக் கூப்பிட்டேன்? பாரு உன்னை இப்பொ என்று தன் பலத்தையெல்லாம் கொடுத்து முண்டிப் பார்த்தார். சின்னத்தம்பி அசையவில்லை; அவன் பிள்ளையார் மாதிரி ஜம்மென்று மேலே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

கூட்டத்தில் ஒரே சிரிப்பொலி. எல்லோரும் திரவத்தியை உற்சாகப்படுத்தினார்கள். திரவத்தியும் தன்னால் முடிந்ததையெல்லாம் செய்து பார்த்தார். முடியவில்லை. தனது தோல்வியைப் பெருந்தன்மையோடு ஒப்புக்கொண்டு தன்னைவிட்டு விடும்படி சின்னத்தம்பியைக் கேட்டுக்கொண்டார்.

திரவத்தி எழுந்ததும் அவருடைய முதுகில், உடம்பில் பட்டிருக்கும் மண்ணையெல்லாம் சின்னத்தம்பி தனது கைகளால் துடைத்துவிட்டான். அப்போதுதான் திரவத்தி நாயக்கர் அப்படிச்சொன்னார், அடேய் சின்னத்தம்பி, சரியான மனசுடா உனக்கு; நல்ல மனசுக்காரன்டா நீ.

அதிலிருந்து கிராமத்தில் எல்லோரும் திரவத்தியை நல்ல மனசுக்காரன் என்றும், நல்லமனசு திரவத்தி நாயக்கர் என்றும் கூப்பிட்டு வந்தார்கள்.

அவருக்கு அடுத்தபடியாக உட்கார்ந்து கொண்டிருப்பவர் பெத்த கொந்த்து கோட்டைய்யா. இவர் உரத்த குரலில் சத்தம் போட்டேதான் பேசுவார். அவர் தொண்டையின் வாய்ப்பு அப்படி. எத்தனை பேர் கூப்பாடு போட்டுப் பேசினாலும் தன் குரலால் அத்தனை சத்தங்களையும் அமுக்கி, தனது குரலே மேலோச்சும்படியான ஒரு மணிக்குரல். இறைஞ்ச நாயக்கர், பெரிய நாயக்கர் என்ற சொலவம் உண்டானதுக்கு இவர் மாதிரியான ஆட்கள் தான் காரணமாக இருந்திருக்கலாம்! ஆனால், உள்ளார்ந்த நிஜம் ரொம்ப பேருக்குத் தெரியாது! கோட்டைய்யாவின் மனைவி சரியான பீரங்கிச் செவிடு. அதனால் இவர், வீட்டில் அவளோடு சத்தம் போட்டுப் பேசிப் பேசி அதே பழக்கமாக ஆகி வெளியிலும் அவர் அதே குரலில் பேசிவருகிறார்.

பெத்த கொந்த்து கோட்டையாவுக்குப் பக்கத்தில் இருப்பவர் பொடிக்கார கெங்கா நாயக்கர். இவருடைய வீட்டில் பொடி கடையப்படுகிறது. நல்ல தரமான புகையிலையை வாங்கிக்கொண்டுவந்து, அதற்கென்றுள்ள அகலமான கல்ச்சட்டியில் போட்டு, வைரம் பாய்ந்த புளியமரத் தடியினால் வேகமாக, நிறுத்தாமல் நீண்ட நேரம் கடைந்து பொடியாக்கவேண்டும். இவர் வீட்டில் தயாராகும் பொடி ஊரிலும் சுத்துப்பட்டிலும் பிரசித்திபெற்றது. கம்மம்புல் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, தொன்னைகளில் போட்டுக் கட்டி வைத்திருக்கும் பொடியைப் பிரியமாக வாங்கிக்கொண்டு போவார்கள். இதனால் இவருக்கு பொடிக்கார கெங்கா நாயக்கர் என்று பேர். மற்றபடி இவர் பொடி போடுகிறவர் என்பதற்காக மட்டும் வந்ததல்ல இந்தப் பெயர்.

அதற்கடுத்தபடியாக முட்டைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பவர் காரவீட்டு லெட்சுமண நாயக்கர். இந்தக் கிராமத்தில் முதல்முதலில் காரவீடு கட்டியவர்கள் இவரது முன்னோர்கள். அதிலிருந்து இவர்களுக்கு, காரவீட்டு இன்னார் என்ற பெயர் நிலைத்துவிட்டது.



லெச்சுமண நாயக்கருக்குப் பின்னால் உட்கார்ந்திருப்பவர் கங்கணால் சுப்பன்னா. புலிகுத்தி சுப்பன்னா என்றும் சொல்வார்கள். இவருடைய கல்யாணத்தின்போது இவருக்குக் கையில் கங்கணம் கட்டியிருந்தது. கங்கணம் கட்டியபிறகு அது அவிழ்க்கிறவரை மணமகன் எந்தவித வேலையும் தொடக்கூடாது. ஆனால் அன்று எதிர்பாராதவிதமாய் அந்த நேரத்தில் ஒரு புலி காட்டிலிருந்து தப்பி ஊருக்குள் வந்துவிட்டது! ஊருக்குள் வந்த புலி கல்யாண வீட்டுக்கும் வந்துவிட்டதாம். இன்னது செய்வதென்று தெரியாமல் ஜனங்கள் அலறிப் புடைத்து சிதறி ஓடியபோது சுப்பன்னா தைரியமாக வேல்க்கம்பை எடுத்துக் கொண்டு வந்து கையில் கங்கணத்தோடு புலியைக் குத்திக் கொன்றாராம்.

இந்த வீரச்செயல் காரணமாக அவருக்கு அந்த இரண்டு பட்டப்பெயர்கள் துலங்குகின்றன.

***

22

தெற்கு வரிசையில் முதலில் உட்கார்ந்து கொண்டிருப்பவர் படுபாவி செங்க்கன்னா. இதை அவருக்கு எதிரில் யாரும் சொல்ல மாட்டார்கள்! ஊரில் நாலைந்து செங்கன்னாக்கள் இருக்கிறார்கள். விசாரிப்பவர்களுக்குப் பளிச்சென்று ஒரு தெளிவுக்குத்தான் இதெல்லாம்.

நிலங்களெல்லாம் தனிக்குடும்பச் சொத்தாகி, கூட்டுமனித சக்தியின் உழைப்பை நம்பி இருந்த காலத்தில் கூட்டுக் குடும்பமே பிரதானமாக இருந்தது. வரவர கூட்டுக் குடும்பங்கள் உடைந்துபோக ஆரம்பித்தன. தாயாதிகள் பாகப் பிரிவினை செய்துகொள்ள ஆரம்பித்தார்கள். அப்படி செங்கன்னாவின் குடும்பத்தில் ஒரு பாகப்பிரிவினை ஏற்பட்டபோது, காய்ந்து போன உபயோகமில்லாத ஒரு சுண்ணாம்புக் கலயம் மிஞ்சியது. அதை அவர் தனது தாயாதிக்குக் கொடுக்க மனசில்லாமல் அந்த மண்கலயத்தை உடைத்துப் பகிர்ந்து கொடுத்தாராம்! அதிலிருந்து ஜனங்கள் அவரைப் படுபாவி செங்கன்னா என்று அழைத்தார்கள்.

அவரை ஒட்டி மேற்கே இருப்பவர் பச்சை வெண்ணெய் நரசய்யா. இவர் பச்சை வெண்ணெய்யைப் பிரியமாகத் தின்பார் போலிருக்கிறது என்று தெரியாதவர்கள் நினைத்துக்கொள்வார்கள். குடிமகனிடம் இவர் தலைச் சவரம் செய்து முடித்தவுடன் அந்த இடத்தில் பசு வெண்ணெயைத் தடவி, கொஞ்ச நேரம் கழித்து வென்னீரில் குளிப்பார். நாளாவட்டத்தில் இந்த வெண்ணெய் ஸ்நானத்தில் அவர் ஏதோ ஒரு சொகம் கண்டு தினமும் வெண்ணெய் தேய்த்தே குளிக்க ஆரம்பித்துவிட்டார். அவர் கிட்டே வரும்போதெல்லாம் நெய் மணக்கும்!

பச்சை வெண்ணெய்க்குப் பக்கத்தில் அவரோடு பேசிக்கொண்டிருப்பவர் பொறை பங்காரு நாயக்கர். எண்ணெய் இறங்கிய கனமான சிகப்புக்கல் கடுக்கன் அவருடைய கருத்த பாரியான உடம்புக்குப் பொருத்தமாக இருக்கிறது. அவர்

இந்தக் கிராமத்தில் உற்பத்தியாகும் பருத்தியைப் பெரிய சம்சாரிகளிடமிருந்து பெற்று அதைக் கொட்டை நீக்கிக் கொடுக்கிறார். அவரிடம் முப்பது ராணங்கள் (கை மணைகள்) இருக்கின்றன.

கோபல்ல கிராமத்தில் அனேகமாக வீடு தவறாமல் இந்தக் கைமணையும் நூல் நூற்க சிறகுராட்டும் உண்டு. பெரிய சம்சாரிகளின் காடுகளில் விளையும் அதிகமான பருத்தியை அவர்கள் தாங்களாகவே தங்கள் கைமணைகளில் கொட்டை நீக்க முடிவதில்லை. அந்தக் காரியத்தை பங்காரு நாயக்கர் செய்து தருகிறார்.

உழவு காளைகளுக்கும் பால் பசுக்களுக்கும் மற்ற சினை கால்நடைகளுக்கும் தாராளமாகப் பருத்திவிதை வைத்த காலம் அது. ஒரு பொதி பருத்தியைப் பெற்றுக்கொண்டு ஈடாக மூன்று பொதி பருத்திவிதையைக் கொடுப்பார் அவர்.

பருத்தியைக் கொடுத்து பஞ்சையும் விதையையும் பிரித்து வாங்கிக்கொள்ளலாம். அதுக்குக் கூலியாக பொதிக்கு இவ்வளவு தானியம் என்று ஏற்பட்டதைப் பெற்றுக்கொள்வார்.

காலையிலிருந்து சாயங்காலம் வரை முப்பது பெண்கள் அவரது பொறையில் வந்து உழைத்தார்கள். உழைப்பு நேரத்தின் மத்தியில் அவர்களுக்கு இரண்டு விடுப்பு நேரம் (இடைவேளை) உண்டு. நாள் ஒன்றுக்குக் கூலியாக அவர்களுக்குக் கைநாழிக்கு இரண்டுபடி கம்மம்புல் தானியம் கொடுத்தார். இந்தப் பொறைதான் சமுதாயத்தில் தோன்றிய முதல் தொழிற்சாலை!

பருத்திக்காலம் முடிந்ததும் பொறையில் நூல் நூற்பு தொடங்கும். எருமை நரம்பைக் கொண்டு முறுக்கிய நாண்கொண்ட வில்லினால் பஞ்சை வெட்டுகிறது, பட்டை போடுகிறது முதலிய வேலைகள் பரபரப்பாக இருக்கும்.

பக்கத்து கிராமங்களிலிருந்து நெசவாளிகள் வந்து நூலை வாங்கிக்கொண்டு போவார்கள். இத்தனை சிட்டங்களுக்கு இத்தனை முழம் துணி என்று ஒரு

கணக்கு உண்டு. ஒவ்வொரு வீட்டில், நூற்ற நூலைக் கொடுத்து சேலையாகவும் வேட்டியாகவும் நெய்துகொண்டு வரச்சொல்லுவதும் உண்டு.

நெசவாளிகள் மூட்டை மூட்டையாக தானியத்தை சுமந்து கொண்டு போவார்கள்; போகும்போது தானிய மூட்டை, வரும்போது துணிமூட்டை.

பொறை பங்காரு நாயக்கருக்குப் பக்கத்தில் தாடியுடன் உட்கார்ந்துகொண்டிருப்பவர் ஜோசியம் எங்க்கட்ராயலு.

கல்யாணம் ஆகாதவர்கள் அந்தக்காலத்தில் திருமணத்தன்று தான் முகச்சவரம் செய்துகொள்வதுவழக்கம். அதுவரையும் முகத்தில் தாடிதான்! எங்க்கட்ராயலுவுக்குக் கல்யாணமே ஆகவில்லை. கல்யாண வயசைத் தாண்டி அவருக்கு ரொம்ப வருஷங்கள் ஆகிவிட்டது. அதனால் தாடியும் நிலைத்துவிட்டது. இந்தக் 'கட்டு'வை முதலில் மீறியவர் அந்தத் தலைமுறையில் அக்கையா ஒருத்தர்தான். அந்தத் தைரியம் வேறு யாருக்கும் அப்போது வரவில்லை.

எங்க்கட்ராயலுவுக்குப் பக்கத்தில் அவருடைய தம்பி சின்ன எங்க்கட்ராயலு உட்கார்ந்திருக்கிறார். அவரும் தாடி வளர்த்திக்கொண்டு வருகிறார். அவர் கல்யாணம் ஆனவர். இப்போது அவருடைய மனைவி கர்ப்பசங்கி. மனைவி கர்ப்பமாக இருக்கும்போது புருஷன் சவரம் செய்துகொள்ளும் வழக்கம் இல்லை.

மற்றொரு தாடி வழக்கமும் அப்போது அமுலில் இருந்தது. அபூர்வமாக சிலர் ஒரு தாரம் மட்டுமே கல்யாணம் செய்துகொள்வார்கள். அந்தச் சமூகத்தில் பெரும்பாலும் குறைந்தது இரண்டு தாரங்களாவது இருக்கவேண்டும். ஒரு பொண்டாட்டி தான் என்று இருப்பவனை "அந்த ஒத்தைப் பெண்டாட்டிக்காரனையா சொல்லுதே; சை அவன் என்ன மனுசன்" என்று ரொம்பக் கேவலமாகப் பேசுவார்கள்!

ஒரு தாரம் உள்ளவன், அவள் இறந்துபோனால் மறுதாரமும் செய்துகொள்வான். ஆனால் சிலர் திரும்பவும் தாடி வளர்க்கத் தொடங்கி

விடுவார்கள்! அவர்களால் வேறு கல்யாணம் செய்துகொள்ள முடியாது. அவனுடைய இறந்து போன மனைவி அவனுடைய மனசையெல்லாம் அப்படிக் கவர்ந்து கொண்டு போயிருப்பாள்.



எங்கட்ராயலு கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று நினைத்திருந்தால் செய்திருக்கலாம்; ஆனால் அவர் அப்படிச் செய்யாததற்கு அவர் சொல்லும் காரணம் தன் ஜாதகப்படி தனக்குத் திருமணமே செய்துகொள்வதற்குச் 'சட்டம்' இல்லை என்பார்.

ராயலுவிடம், அவருக்கு என்று அமைந்த சில தனித்துவங்கள் உண்டு. சில சமயம் அவரிடத்தில் அது தோன்றிப் பிரகாசிக்கும். ஒரு மனிதன் உட்கார்ந்திருக்கும் சித்திரத்தைக் கொண்டு அவனுடைய ராசி இன்னது என்று சரியாகச் சொல்லிவிடுவார்!

தூர ஊர்ப் பிரயாணத்தின் போது ஒருநாள் அவர் ஒரு சத்திரத்தில் ஒதுங்க நேர்ந்தது. அப்போது அவரோடு அக்கையாவும் இருந்தார். அந்த சத்திரத்தின் விசாலமான திண்ணையில் பலபேர்கள் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தனர். அப்போது ராயலு அக்கையாவைப் பார்த்து. தம்முடு, உனக்கு ஜோசியத்தில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுவயே; இப்போ இங்கே உக்காந்திருக்கும்

ஒவ்வொரு நபரின் பிறந்த ராசியை சொல்லுகிறேன். சொல்லட்டுமா? என்று கேட்டார்.

அப்படியா; எங்கே சொல்லுங்க பார்ப்போம் என்றார் அக்கையா.

ராயலு, வரிசையாய் அவர்கள் உட்கார்ந்திருக்கும் சித்திரத்தைப் பார்த்து, இது இந்த ராசிக்கு உண்டான லட்சணம்; ஆகவே இவன் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருக்கவேணும் என்று சொல்லிக்கொண்டே வந்தார்.

அங்கே உட்கார்ந்துகொண்டிருந்த ஒவ்வொருவனையும் கவனித்தார் அக்கையா.

ஒருவன் மண்டிபோட்டு உட்கார்ந்துகொண்டு இடது கையைத் தரையில் ஊன்றி, வலதுகை விரல்களை மடித்து இடுப்பில் வைத்துக்கொண்டிருந்தான்.

ஒருவன் தரையில் உட்கார்ந்து மேல்முதுகு சுவரில் படும்படி சாய்ந்துகொண்டு கால்களை மடக்கித் தன் நெஞ்சோடு ஒட்டவைத்து முட்டுகளை இரண்டு கைகளாலும் இறுக அணைத்துக்கொண்டு பாதங்கள் தரையில் படாமல் ஒரு நாலு விரல்க்கடை உயரே தூக்கி இருக்கும்படி அமர்ந்திருந்தான்.

ஒருவன் கால்களை நீளமாக நீட்டிக்கொண்டு இரண்டு முழங்கைகளையும் தரையில் ஊன்றி முஷ்டிகளை இறுக மூடி தொடைகளோடு ஒட்ட வைத்துக்கொண்டு சுவரில் சரிந்து சாய்ந்துகொண்டிருந்தான்.

இன்னொருவன் அதேமாதிரி கால்களை நீளமாக நீட்டி இடதுகாலை வலதுகால்மேல் போட்டுக்கொண்டு இரண்டு கைவிரல்களையும் கோர்த்துப் பிடரியில் போட்டுக்கொண்டு நிமிர்ந்து சுவரில் சாய்ந்துகொண்டிருந்தான்.

மற்றொருவன் வலதுகையைத் தரையில் ஊன்றி வலது காலைத் தரையோடு நீட்டிக்கொண்டு இடது காலை குத்துக் காலாக மடக்கி வைத்து அதன் முட்டின்மேல் இடது கையை நீளமாக நீட்டி வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தான்.

ஒருவன் முழங்காலை கட்டிக்கொண்டு உட்கார்ந்து லேசாக முன்னும் பின்னும் ஆடிக்கொண்டேயிருந்தான்.

இப்படி அங்கிருந்த ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு மாதிரியாக உட்கார்ந்திருந்துகொண்டிருந்தார்கள். ஒருவனும் மற்றவனைப்போல் உட்கார்ந்திருக்கவில்லை!

அங்கிருந்த பதினோருபேரில் ஐந்துபேருக்கே தங்களுடைய ராசி இன்னது என்று தெரிந்திருந்தது. அதை அவர்கள் ஆச்சரியத்தோடு, உண்மைதான் என்று ஒப்புக்கொண்டார்கள்.

***

23

இதேமாதிரிதான் மற்றொருநாள், ஜோசியம் எங்கட் ராயலுவும் அக்கையாவும் ஒரு ஊருக்குப் போய்விட்டு வருகிறபோது நன்றாக இருட்டிவிட்டது. கொஞ்சம் சிரமம் பாராமல் மேலும் நடந்து வந்தால் ஊருக்கு வந்திருக்கலாம். ஆனால் எங்கட்ராயலு மலைத்துவிட்டார். ஒரு வீட்டின் திண்ணையில் இருவரும் படுத்து நன்றாகத் தூங்கிவிட்டார்கள். நடுச்சாமத்தில் மேளச்சத்தம் கேட்டு இருவரும் விழித்துக்கொண்டார்கள்.

அக்கையா எழுந்திருந்து பார்த்தார். ஒரு பெண் அழைப்பு ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. அக்கையா இவரைப் பார்த்து "எங்கட்ராயலு அண்ணா, எழுந்துவந்து பாரேன்" என்று அழைத்தார். இவர் எழுந்து வந்து பார்த்தார். பல்லக்கில் வந்துகொண்டிருந்த அந்த மணப் பெண்ணைப் பார்த்ததும் இவருடைய முகம் வாடிவிட்டது. "ஏமி பத்துகூரா அக்கையா" (என்ன வாழ்க்கையடா அக்கையா) என்று சோர்ந்த சொற்களுடன் திரும்பவும் வந்து எங்கட்ராயலு திண்ணையில் உட்கார்ந்துவிட்டார்.

"என்ன; என்ன விஷயம்?" என்று அக்கையா கேட்டதும் தலையை அசைத்து சொல்ல மறுத்தார். அக்கையா வற்புறுத்திக் கேட்டபின் "பிரேதம் வருதுடா . . ." என்று சொல்லி அதற்கு மேலும் சொல்லாமல் நிறுத்திக்கொண்டார்.

மூணாவது நாள், அந்த மணப்பெண்; சரியாகக்கூட கல்யாணம் முடியவில்லை. (அந்த நாட்களில் ஐந்து நாள் கல்யாணம்.) திடீரென்று அந்த மணப்பெண்ணைப் பூநாகம் தீண்டி இறந்துபோனாள் என்ற செய்தி பக்கத்து ஊரிலெல்லாம் பரவியது.

எங்கட்ராயலு சில கல்யாணங்களை வினோதமாக முடித்துவைப்பார்.

ஊரில் ஒரு குடும்பத்தில் ஒருவரின் மனைவி இறந்து போய்விட்டாள். ஒரே பையன்தான், அவனுக்குப் பதினேழு வயசாகிறது. வீட்டில் ஒத்தாசனைக்கு

வகையான வேறு ஆள் இல்லை. ஜாதகத்தைத் தூக்கிக்கொண்டு பையனின் தகப்பனார் எங்க்கட்ராயலுவிடம் வந்தார். மகனுக்குக் கல்யாணம் செய்து விடவேண்டும் என்று சொல்லி ஜாதகத்தைப் பார்க்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டார்.

ராயலு ஜாதகத்தை வாங்கிப் பார்த்தார். தாடியை வருடிக்கொண்டே யோசனை செய்தார். பிறகு தகப்பனிடம் கேட்டார் "ஏன் நீ கல்யாணம் செய்து கொண்டாலென்ன?" அதுக்குத் தகப்பனார், "கைக்கு மிஞ்சிய பிள்ளையை வீட்டில் வைத்துக்கொண்டு, நான் கல்யாணம் செய்து கொள்கிறதாவது!"

"பையனுக்கு களஸ்திரம் சரியாக இல்லை. இதுக்கு ஒரு பரிகாரம் உண்டு, அதுப்படி செய்தால் குடும்பம் நல்ல அமைதியாக நடக்கும்."

"சரி; சொல்லுங்கோ. உங்களுக்குத் தெரியாததா; அப்படியே செய்துருவோம்."

கல்யாணத்தன்று, பெண்ணின் கழுத்தில் தாலியை முதலில் தகப்பனாரைக் கட்டச்சொன்னார். இரண்டாவது தான் மணமகனான பையன் கட்டினான்! இதை இரட்டைத் தாலி சம்பிரதாயம் என்று சொல்லுவார்கள்.

இந்தக் கல்யாணம் நடந்து பலநாள் கழித்து ஒருநாள்! கோவிந்தப்ப நாயக்கர் எங்க்கட்ராயலுவிடம், "என்னது இது நீர் செஞ்சி வச்ச கல்யாணம்? ரெண்டு பேருமே அவளைப் பெண்டாளுகிறார்களாமே!" என்று ஆச்சரியத்தோடு கேட்டு சிரித்தார்.

"என்ன செஞ்சிருக்கணும்ண்ணு நினைக்கே நீ?" என்று திருப்பிக் கேட்டார் ராயலு!

"ஏன் தகப்பனுக்கே கட்டி வச்சிருக்கப்படாதா அந்தப் பொண்ணை?"

சிரித்தார் ராயலு. அந்தச் சிரிப்பில் ஒரு இரக்கம் இருந்தது. ஐயோ பாவம் இந்த ஜனங்கள் என்பது போலிருந்தது. அப்புறம் சொன்னார். "அந்த ரெண்டு பேரில் யார் ஒருத்தனுக்குக் கட்டிவச்சாலும் அது இப்ப நடக்கிற மாதிரியே நடக்கும். அந்த அமைப்பு அப்படி. அதில் ஒருத்தனுக்கு மட்டும் கட்டி இருந்து,

பிறகு இந்த மாதிரி 'நடை' இருந்தா குடும்பத்தில் சதா தகராறு இருந்துகிட்டே இருக்கும். அதுக்குத்தான் இப்படிச் செய்தது" என்றார் ராயலு.

எங்கட்ராயலுவுடன் பேசிக்கொண்டு, ஏதோ ஒரு மாட்டு நோய்க்கு இந்த மாதிரி சூடு போட வேண்டும் என்று தரையில் விரலால் கோலம் போட்டுக் காண்பித்துக்கொண்டிருப்பவர் வாகடம் புல்லைய்யா.

கால்நடை சம்மந்தப்பட்ட சகல நோய்களுக்கும் அவர் தான் வைத்தியர்.

கண் திருஷ்டிகளுக்குப் பச்சிலை பூசுவார். பச்சிலை பூசுகிற அன்று யாரோடும் பேசமாட்டார்; பேசினால் பச்சிலையின் மகத்துவம் போய்விடுமாம்!

முதல் நாளே அவரிடம் பச்சிலை பூசவேண்டியதிருந்தால் சொல்லிவிடவேண்டும். அதிகாலையில் எழுந்து விடுவிடு என்று நடந்து போவார். முகத்தை ஒரு மாதிரி உம்மென்று வைத்துக்கொண்டு உதடுகள் வேகமாக எதையோ முணுமுணுக்கிற மாதிரி இருக்கும்.


பச்சிலையைப் பிடுங்கிக் கொண்டு வரும்போது அவருக்கு சம்மந்தகார முறையுள்ளவர்கள் வம்புக்காவது அவரிடம் பேச்சுக் கொடுப்பார்கள்; அவரை எப்படியாவது ஒரு வார்த்தை பேசவைத்துவிட வேண்டுமென்று!

பசுமாட்டின் நெற்றியில், கசக்கிய பச்சிலையைப் பிழிந்து, வடியும் அந்தச் சாற்றை முதுகு நோக்கித் தடவி விட்டுக்கொண்டே வால்வழியாகக் கீழ்நோக்கி இழுத்துவிடுவார். வாலிலிருந்து கை நழுவியதும் ஒரு சொடக்குப்போடுவார். அப்படி மூணுதரம். பிறகுதான் பேசுவார்!

காம்பு வீங்கிய மடி, இரத்தம் கசியும் காம்பு, சரியாகக் கூளம் தின்னாமலும் தண்ணீர் குடிக்காமலும் நிற்கும் மாடுகள் முதலியவற்றுக்கு அவர் பூசும் பச்சிலை ரொம்பச் சொன்னாங்கம்.

வாகடம் புல்லைய்யா இன்னொரு காரியம் செய்வார். அதுக்கு 'தழையிறது' என்று பெயர். கன்றுக்குட்டி இறந்து போன பசுமாட்டோடு, பசுமாடு இறந்துபோன கன்றுக்குட்டியை சேர்த்து வைப்பது. இது மற்றவர்கள் நினைக்கிற மாதிரி

அவ்வளவு லேசான காரியமில்லை. மாடுகளுக்கு மோப்ப சக்தி அதிகம். கண்கள் பார்க்க முடியாத கரும் இருட்டில்கூட வேற்றுக் கன்றுக்குட்டியைக் கொண்டுபோய் ஒரு பசுமாட்டில் பால்குடிக்க வைத்துவிட முடியாது. முகர்ந்து பார்த்து உதைத்துத் தள்ளிவிடும். ஆகவே தழையவிட வேண்டிய கன்றுக்குட்டியை முதலில் அதன் கண்ணில் காட்டாமல் வைத்துக்கொண்டு அந்தப் பசுமாட்டையும் இந்தக் கன்றுக்குட்டியையும் ஆள் நட மாட்டமில்லாத ஒரு காட்டுக்குக் கொண்டுபோவார் புல்லையா.



பசுவை அவர் முன்னால் பத்திக்கொண்டுபோவார். பின்னால் ஒருத்தன் கன்றுக்குட்டியைக் கொண்டுவருவான். உடங்காட்டில் அவர் இதுக்கு என்று ஒரு இடத்தைப் பார்த்து வைத்திருக்கிறார். இரண்டு மரங்கள் நெருக்கமாக இருக்கிற ஒரு இடம். அதன் மத்தியில் கொண்டு போய்ப் பசுமாட்டை நிறுத்திக் கயிறுகளால் அசைய முடியாமல் கட்டிப் போட்டுக் கொள்வார்.

இரண்டு கைகளையும் சேர்த்து ஒட்டவைத்துக்கொண்டு, பையப் பைய்ய கொஞ்சங் கொஞ்சமாகப் பசுமாட்டின் 'அறை'க்குள் மெதுவாக நுழைப்பார். பசுமாடு ரொம்பச் சிரமப்படும். பார்க்கிறவர்களுக்கு ஐயோ இது வேண்டாமே

என்று தோன்றும். முழங்கைகள் வரைக்கும் நுழைத்து சிறிது சிறிதாக 'அறை'யை அகலப்படுத்துவார். மாடு பிரசவ வேதனைப்படும். அந்த வலி அதற்கு, தான் ஒரு கன்றை இப்பொழுது ஈனப் போவதாகவே ஒரு தோற்றம் கொடுத்துவிடும். இந்த சமயத்தில் புல்லைய்யா அந்தக் கன்றை மறைத்து வைத்திருப்பவனை சைகை காட்டி அழைக்கிறார். கன்றைக் கிட்டே கொண்டுவந்ததும் 'அறை'யினுள் இருந்த தனது கைகளைப் பளிச்சென்று வெளியே இழுத்துத் தனது கைகளில் படிந்த இரத்தத்தையும் நிணநீரையும் அந்தக் கன்றின்மேல் தடவுகிறார். கூட வந்திருந்த ஆள் பசு மாட்டின் கட்டுகளை வேகமாக அவிழ்த்து விடுகிறான். மாடு ஆவலாக ஓடிவந்து அப்பொழுதுதான் ஈன்ற(!) கன்றுக்குட்டியை பாசத்தோடு நக்குகிறது!

முதல்நாள் வேத்துக் கன்றுக்குட்டி என்று வாடையால் அறிந்து உதைத்த அதே பசு, இன்று அதே கன்றுக் குட்டியை இப்பொழுது தான் ஈன்ற கன்று என்று நினைத்து ஆசையோடு நக்கிக்கொடுக்கிறது. இனி அந்தக் கன்றுக்குட்டி பிழைத்துக்கொள்ளும். அதன் இறந்து போன உண்மையான தாய்க்குப் பதிலாக இப்பொழுதும் ஒரு உண்மையான தாய் அதுக்குக் கிடைத்துவிட்டது.

வேற்றுக் கன்றைத் தனது கன்றாக நினைத்து பாசத்தோடு நக்கிக்கொடுக்கும் பசுவைப் பார்த்து அந்த கிராமத்து மனிதன்கள் சிரிப்பான்கள்; அந்தச் சிரிப்பில் பெண்டுகளும் சேர்ந்துகொள்வாள்கள்!

ஒருதரம் ஒரு பசுவுக்குக் கன்று செத்துப் பிறந்தது. புல்லைய்யா கிடைக்கு ஓடிச்சென்று, மூன்று குட்டிகள் போட்டு பால் இல்லாமல் கஷ்டப்படும் ஆட்டுக்குட்டிகளில் ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்து அந்தப் பசுவில் தழைய வைத்தார்.

பசுமாட்டில் வெள்ளாட்டுக்குட்டி பால் குடிப்பதையும் அந்தப் பசு அதைப் பாசத்தோடு நக்கிக் கொடுப்பதையும் பார்த்து ஊரே மூக்கின் மேல் விரலை வைத்தது.

***

24

புல்லையயாவுக்கு இடதுபுறம், அண்ணாந்து மேலே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பவர் பெயர் பயிருழவு பங்காரு நாயக்கர். அவருக்கு இந்தப் பெயர் வந்ததற்கு ஒரு ருசிகரமான சம்பவமே காரணம். அவருடைய பரம எதிரியான கொத்த பாவையாவின் மந்தைப் புஞ்சையில் அந்த வருஷம் கம்மம் பயிர் ரொம்ப நன்றாக இருந்தது. இதைக் கண்ட பங்காரு நாயக்கருக்கு வயிறு எரிந்தது. இரு இரு என்று மனசுக்குள் கறுவிக் கொண்டே இருந்தவர் அன்று நிலாவில் ஒருவருக்கும் தெரியாமல், உழவுமாட்டின் கழுத்து மணிகளை அவிழ்த்து வைத்துவிட்டு கலப்பையையும் எடுத்துக்கொண்டு போய் மேழியை அழுத்தி முங்கப்பிடித்து உழுதுவிட்டு வந்துவிட்டார் யாருக்கும் தெரியாமல்.

ஊரே திரண்டு போய்ப் பார்த்தது இந்த வங்கொடுமையை. பச்சைப் பசேல் என்று தரை தெரியாமல் இருந்த அந்த இடம் கன்னங்கரேர் என்று பயிரெல்லாம் மண் மூடிப் புதைந்து போய் இருந்தது.

பாவிப்பயல் எவனோ அவ்வளவு கிட்டத்தில் நெருக்கிப் பிடித்திருக்கிறான் உழவை; அவன் வாயில் மண்தான் விழும் என்று பேசிக்கொண்டார்கள்.

வருசத்துக்கு ஒரு பயிர்; அதுவும் போச்சி என்று மனசு விட்டுப்போய் பேசினார்கள் ஜனங்கள்.

ஒரு வாரம் வெயில் அடித்தது. அப்புறம் ஒரு மழை அறைந்தது. என்ன அதிசயம்! அந்தப் பயிர்கள் வேகமாக பக்கங்களில் கணக்கில்லாமல் தரையிலிருந்து சில்லுகள் வெடித்து 'குதித்துக்கொண்டு' வளர்ந்தது. பக்கத்துப் புஞ்சைகளெல்லாம் கம்மம்பயிர் பச்சை நிறத்தில் இருந்தால் இந்தப் புஞ்சையில் பயிர்கள் கரும்பச்சை நிறமாக இருந்தது.

அதை சம்சாரிகள் மொழியில் சொல்வதென்றால்,

பேய் அடிக்கிறாப்லெ கரேர் என்று,

எச்சில் துப்பினாக் கீழே விழாமல்,

உள்ளே ஒரே இருட்டாய்,

சீள் வண்டுகள் இரையும் படியாய்,

ஈ கொசுகூட உள்ளே நுழைய முடியாமல் . . .

இப்படியெல்லாம் இருந்தது!

கதிர் வாங்கிய வயணத்தையோ சொல்லி முடியாது. 'ஒரு கதிரைப் பிடுங்கி ஆளை அடித்துச் சாய்த்துவிடலாம்!'



அந்த வருஷம் கொத்தபாவையாவுக்கு புஞ்சையில் வழக்கமான விளைவைவிட இரண்டு மடங்கு கம்மம்புல் ஆனது. தானியமணியின் திரட்சியும் அப்படி இருந்தது. ஊர்கூடி களத்தில் அந்த அதிசயத்தைப் பார்த்தது.

இந்த அதிசயம் பங்காரு நாயக்கரையும் வெகுவாகப் பாதித்தது. அவரால் தன்னை அடக்கிக்கொள்ள முடியவில்லை. "நானே பயிரை உழுதேன்; நான்தான் பயிரை உழுதேன்" என்று சத்தம் போட்டுச் சொன்னார்!

கெடுதல் நினைத்துச் செய்திருந்தாலும் விளைவு நல்லதாக இருந்ததால் கிராமம் அவரை மன்னித்தது. கோவிலுக்கு ஒரு மாதம் தீபம் போடுவதற்கான எண்ணெய்ச் செலவை ஏற்றுக்கொள்ளும்படி செய்தது அவரை.

பங்காரு நாயக்கர் ஆராய்ச்சி செய்து பயிருழவைக் கண்டு பிடித்து விடவில்லை. அவர் செய்த 'கெடுதல்' இன்றும் இந்தக் கரிசல் காட்டுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது. அன்றிலிருந்து அவருக்கு பயிருழவு பங்காரு நாயக்கர் என்று பெயராகியது.

புல்லைய்யாவுக்கு வலதுபுறம், தலையில் பெரிய லேஞ்சி கட்டிக்கொண்டிருப்பவர் வைத்தியம் மஞ்சைய்யா. எப்பப் பார்த்தாலும் சதா பச்சிலைகளைத் தேடிக்கொண்டே அலைகிறவர். மேலே பார்த்தோ நேராகப் பார்த்தோ நடந்து அறியாதவர்!

அந்த வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு புல் பூண்டும் இவருக்குத் தெரியும். இவருக்குத் தெரியாத இலை தழையே கிடையாது. மரப்பட்டைகள், வேர்கள், பூக்கள், காய்கள், இலைகள் இவைகளைத் தேடி வேட்டையாடிக்கொண்டே இருப்பார்.

இந்த இந்தச் செடிகள் இந்த வருஷம் அதிகம் முளைத்திருக்கிறது. ஆகவே மனிதர்களுக்கு இந்த வருஷம் இந்த நோய்கள் அதிகமாகக் காணப்படும் என்று சொல்லுவார்!

ஒவ்வொரு பச்சிலையைப் பறிப்பதற்கும் இன்ன இன்ன கிழமை என்று உண்டு; நேரம் காலம் எல்லாம் உண்டு என்பார்.

சில பச்சிலைகளைப் பிடுங்க திசைகள் உண்டு; அந்த திசையைப் பார்த்துதான் அதைப் பிடுங்கவேண்டும். சில சொற்களை உச்சரித்துப்

பிடுங்கவேண்டிய பச்சிலைகளும் உண்டு என்றெல்லாம் சொல்லுவார்.

சனிக்கிழமை தோறும் அவரைக் குருமலையில் ஏதாவது ஒரு இடத்தில் பார்க்கலாம். அங்கே அந்த நாள் முழுதும் பச்சிலை தேடிக்கொண்டே இருப்பார்.

குருமலையை அவர் சஞ்சீவிமலை என்பார். அந்த மலைக் காற்று பட்டாலே போதும்; ரோகங்கள் மனிதனை நாடாது என்பார்.

"அனுமான் சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கிக்கொண்டு இந்த வழியாகப் போகும்போது அதிலிருந்து விழுந்த ஒரு பகுதிதான் இந்த மலை.

"இந்த மலைக்கு சித்தர்கள் பச்சிலை தேடி வருவார்கள். இன்றும்கூட நம் கண்ணுக்குத் தெரியாமல் இந்த மலையில் சித்தர்கள் வாழ்கிறார்கள்.

"ஒரு சமயம் ஒரு வேடுவனுக்குக் கையில் பலத்த காயம் பட்டுவிட்டது. அவன் அப்போது மலையின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு வந்து கொண்டிருந்தான். கையில் பட்ட காயத்திலிருந்து இரத்தம் வந்துகொண்டே இருந்தது. கைக்குக் கிடைத்த செடியிலிருந்தெல்லாம் இலையைப் பறித்து அவன் அந்தக் காயத்திலிருந்து வடியும் இரத்தத்தைத் துடைத்துக்கொண்டே வந்தான்.

"அவன் மலையை விட்டு வெளியே வரும்போது கையில் காயமே இல்லை!

அவன் துடைத்துப் போட்டுக்கொண்டே வந்த செடியின் இலைகளில் ஏதோ ஒன்று அந்த சஞ்சீவியின் இலையாக இருந்திருக்கிறது! அதை அவன் கவனிக்கவில்லை.

"மறுநாள், அந்தச் செடியைக் கண்டுபிடித்து விடவேண்டும் என்று ஆசைப்பட்டு, தானே வலிய ஒரு காயத்தை உண்டு பண்ணிக்கொண்டு, தான் முதல் நாள் வந்த வழியாகவே ஒவ்வொரு செடியின் இலையையும் பறித் துடைத்துக்கொண்டே வந்தான். அகப்படவே இல்லை அந்தச் செடி.

"அப்பேர்ப்பட்ட பச்சிலைகளெல்லாம் இந்த சஞ்சீவி மலையில் இன்னும் இருக்கிறது. நாளையும் இருக்கும்" என்பார் மஞ்சையய்யா.

வைத்தி மஞ்சையய்யாவிடம் கைபிடித்துப் பார்க்கச் சொல்லி நீட்டுவதே ஒரு சுகானுபவம். கையைப் பற்றியதுமே நாடியைப் பிடித்துப் பார்த்துவிட மாட்டார். கையைப் பிடித்து ஒவ்வொரு விரலையும் மென்மையாக இழுத்து சொடக்கு விழ வைப்பார். அப்புறம் எல்லா விரல்களையுமே ஒரு சேரப் பற்றி பதமாக ரெண்டு மூணுதரம் நீட்டி மடக்கி, மடக்கி நீட்டி . . . இப்படியெல்லாம் செய்துதான் பிறகு நாடியைப் பிடித்துப் பார்ப்பார். இந்தக் கைச் சுகத்துக்காகவே பல ஆண்களும் பெண்களும் அவரிடம் நீட்டுவார்கள் கையை!

ஆண்களுக்கு வலதுகை; பெண்களுக்கு இடதுகை. இது முதலில் தொடங்கும்போது. ஆனால் ஒருவரின் இரண்டு கைகளிலுள்ள நாடிகளையுமே பார்த்த பிறகுதான் தீர்மானத்துக்கு வருவார்.

பார்ப்பவரின் கையிலிருந்து தனது கையை எடுத்தவுடன் தவறாமல் மூன்றுதரம் ஆள்க் காட்டி விரலால் தரையைச் சுண்டித் தட்டுவார். பிறகு ஒரு பாட்டு. குரல் கேட்க இனிமையாக இருக்கும். எல்லாம், வாத பித்த சிலேட்டும கூடுதல் குறைச்சல் பற்றி விவரிக்கும். பரிகாரமும் பாட்டாகவே வரும்.

தீண்டாத ஜாதியைச் சேர்ந்தவர்கள் வைத்தியத்துக்கு வந்தால், அவர்களுடைய கையின் மேல் போட்டுப் பார்ப்பதற்கு ஒரு மெல்லிய பட்டுத்துணி வைத்திருக்கிறார். அதைப் போட்டுத்தான் நாடி பார்ப்பார்.

வைத்தி மஞ்சையய்யாவிடமுள்ள தனித்துவம், நோயாளியிடம் என்ன செய்கிறது என்று கேட்டுத் தெரிந்துகொள்ளுவதல்ல; நாடியைப் பார்த்தபின் இன்னது செய்கிறது உனக்கு என்று சரியாகச் சொல்லுவார்!

மற்ற வைத்தியர்கள் மாதிரி இவர் நெடுநாள் உப்பில்லாப் பத்தியம் வைத்து நோயாளிகளை வதைக்கமாட்டார். உப்பில்லாப் பத்தியம் இருக்க வேண்டியவர்களுக்கு இவர் ஒரு பொடி கொடுப்பார். அதை அவர்கள் தங்கள்

ஆகாரத்தில் கடுகளவு சேர்த்துக் கொண்டால் போதும். நாக்குக்கு வேண்டிய 'உப்பு' தெரியும் அதில்! உணவும் உப்பிட்ட மாதிரியே ருசியாகவும் இருக்கும்.

சிலரிடம், நீ ஆகாரத்தில் இந்த இந்த உணவுகளைத் தள்ளி விடு, இந்த இந்த உணவைச் சேர்த்துக்கொள். உனக்கு ஒரு நோயும் வராது என்பார்.

சிலரைப் பார்த்து நீ சரியாக இத்தனை மாதம் 11அகப் பத்தியம் மட்டும் இருந்தால் போதும், உனக்கு சரியாகிவிடும் என்பார்!

***

25

நெற்றியில் பிரகாசமாய்த் திருமண் இட்டுக்கொண்டிருப்பவர் எளவுப்பெட்டி ராமய்யா.

இவர் வேலைக்குப் போய்விட்டு வந்து குளித்து முடித்தவுடன் நெற்றிக்கு இட்டுக்கொள்ளாமல் சாப்பிடமாட்டார். அதுக்கென்றே சிறிய அழகிய மரவேலைப்பாடுகள் அமைந்த 'திருநாமப் பெட்டி' ஒன்று செய்து வைத்திருக்கிறார்.

இவர் கொஞ்சம் போஜனப் பிரியர். பெண்டாட்டி முதுகு தேய்க்கும்போதே "சின்னக்குட்டி, இன்னைக்கு என்ன சமையல்?" என்று விசாரிப்பார். அவருக்குப் பிடித்தமான பாகங்கள் இருந்தால், உடம்பு துவட்டிக்கொண்டிருக்கும் போதே "சின்னக் குட்டீ அந்தத் திருநாமப் பெட்டியை எடுத்துக்கொண்டு வா" என்று உற்சாகமாகக் கூவுவார். சமையல், அவர் நினைத்த மாதிரி ஒன்றும் சரியில்லையென்றால் "அடியே, அந்த எளவுப் பெட்டியை எடுத்துக்கிட்டு வந்துத் தொலை" என்று கத்துவார்.

ராமைய்யாவுக்கு அருகில் இருப்பவர் காயடி கொண்டய்யா. இவரை அக்கையா காய்கடி கொண்டைய்யா என்றுதான் சொல்லுவார்!

ஆட்டுக்கிடையில் இவருக்கு அமோக வரவேற்பு. ராஜ வரவேற்பு என்று சொன்னாலும் தப்பில்லை! காய் அடிக்க வேண்டிய கிடாய்க்குட்டிகளை இவரிடம் கொண்டுவருவார்கள். இவர் ஒரு மெல்லிய துணியை ரெண்டாக மடித்து விதையின் மேல் பகுதியில் போட்டுக் கொண்டு நரம்பைத் தன் பற்களால் கடக்கென்று கடித்து 'வெட்டி' விடுவார்! நெமை (இமை) தட்டுவதற்குள் ரெண்டு பக்கமும் சோலியைத் திருத்திவிடுவார். பார்ப்பதற்கு இது 'ஒரு மாதிரியாக' இருந்தாலும் கிடாய்களுக்கு அவ்வளவாய் அவஸ்தை இல்லை. இந்த 'இவருடைய முறை' அமுலாவதற்கு முன்னால் கிடையில், இரண்டு கம்புகளுக்கு இடையே கிடாயின் விதைகளைக் கொடுத்து

நெறிப்பார்கள். அதனுடைய கட்டித்தன்மை நீங்கும் வரையிலும் மாறி மாறிப் பிடித்து நெறிப்பார்கள். கிடாய் அலறிக் கூப்பாடு போடும். அந்த ஓலத்தைக் கேட்கவே பரிதாபமாக இருக்கும். இவ்வளவு சங்கடத்தையும் நீக்கியவரல்லவா இந்தக் காயடி கொண்டய்யா!

"உன்னோடு யாரும் மல்லுக்கு வரமாட்டார்கள்; உன்னைப் பார்த்தாலே பயமா இருக்கு" என்பார் அக்கையா!

அவரையடுத்து பெரிய கொண்டை போட்டுக்கொண்டு அடக்கமாய் கண்கள் தூக்கக் கலக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாரே அவர் பெயர் ரகுபதி நாயக்கர். அங்கேயுள்ள அத்தனை நாயக்கர்களும் போட்டுக்கொண்டிருப்பதை விட அவருடைய கொண்டைதான் பெரிசு. பெண்டுகளே கண்டு ஆசைப்படும்படியான அத்தனை பெரிய கொண்டை அவருடையது!

ஆள் சரியான பாட்டாளி. தலைக்கோழி கூப்பிட எழுந்திருந்தால் தீபம் வைக்கிற நேரம் வரைக்கும் ஓயமாட்டார். செய்யும் வேலையை நிறுத்திவிட்டார் என்றால் தூக்கம் வந்துவிடும்! தூக்கத்துக்கும் அவருக்கும் அப்படியொரு கும்பகர்ண ராசி.

அவருடைய சில அந்தரங்கங்கள் பல பேருக்குத் தெரியாது. அவருக்குக் கல்யாணமாகி ஆறு வருஷங்கள் ஆகிறது. கோபல்ல கிராமத்திலுள்ள முக்கால்வாசி ஆண்களைப் போலவே அவருக்கும் இரண்டு தாரங்கள். அவருக்குச் சொந்த அக்காள் மகள்கள்தான். நாளது தெய்தி வரைக்கும் ஒத்தைக் குழந்தை கிடையாது.

குழந்தை இல்லையென்றுதான் ஊராருக்குத் தெரியுமே தவிர உண்மை தெரியுமா?

ரகுபதி நாயக்கரின் வார்த்தையிலேயே அதைச் சொல்லுவதென்றால் 'அது ஒரு வெக்கக்கேடு!'



அவருக்குக் கல்யாணம் செய்துவைக்கும்போது அதுகள் ரெண்டும் சடங்காகி இருக்கவில்லை. ஒரு வருஷமோ என்னமோ கழித்துத் தான் முன்னும் பின்னுமாக சடங்கானதுகள்.

வேலைவெட்டியெல்லாம் முடிந்து அவர் வீட்டுக்குவர பொழுது சாய்ந்துவிடும். மாடுகளைக் கொண்டுவந்து தொழுவத்தில் கட்டிவிட்டு கூளம் ஒடித்துக்கொண்டுவர படப்படிக்குப் போவார்.

தட்டைப் படப்பில் ஒண்ணுபோல கூளம் பிடுங்கி ஒடித்து ஒடித்துப் போட்டு, நாத்துப் படப்பிலேயும் கூளம் பிடுங்கிய பின் சடைப்போட்டுவிட்டு, இரண்டு கூளங்களையும் சேர்த்து பெரும் கட்டாகக் கட்டி முடித்து மாலைக் கடனையும் முடித்துவிட்டு, யாராவது அப்படிக்கூடிப் போகிறவர்களைக் கூப்பிட்டு தலையில் தூக்கிவிடச் சொல்லி வீடு கொண்டுவந்து சேர்ப்பார்.

மாடுகளுக்கெல்லாம் கூளம் போட்டுவிட்டு, குளிக்கத் தயாராவார். பெரிய சருவச்சட்டியில் வென்னீர் விளாவி இருவரில் யாராவது ஒருத்தியின் ஒத்தாசனையுடன் ஒரு கை பிடித்து முற்றத்துக்குக் கொண்டுவருவார்.

முதுகு தேய்த்துவிடும்போதே அவருக்கு 'சாமி அருளாகி' விடும்! முதுகு தேய்த்துவிட்டு அவரிடமிருந்து விலகுவது ஒருபாடு! வளையல் ஒலியும் கைக்குக் கை பிடிபடாமல் தப்பிக்கிறதும், மௌனச் சிரிப்பும் கிளுகிளுப்புமாக ஒரு சின்ன 'ரகளை'யே அங்கு நடைபெறும்! நாயகி அவரிடமிருந்து

திரும்பும்போது முந்தானையால் முகத்தைத் துடைத்துக்கொள்கிற மாதிரி, சிரிப்பையும் பொங்குதலையும் துடைத்துக்கொண்டே வரவேண்டியதிருக்கும்!

நாயக்கர் ஒன்றுமே நடக்காதது மாதிரி நல்ல பிள்ளையாக முகத்தை வைத்துக்கொண்டு வந்து வட்டிலுக்கு முன்னால் உட்காருவார். சாப்பாடு மௌனமாக நடைபெறும்.

குளித்த வென்னீரின் ஒத்தடமும் சாப்பாட்டின் கனமும் ஓய்வை விரும்பும் உடம்பின் அசதியும் அவரை நிலைகொள்ளவிடாது. படுக்கையில் கொஞ்சம் சாய்வார். வீட்டில் வேலைக்காரர்களுக்கு, ஆடு, மாடு மேய்ப்பவர்களுக்கு உடன் பிறந்தவர்களுக்கு, வண்ணாத்தி, குடிமகளுக்கு, அவர்கள் பாட்டுக்கு இப்படியெல்லாம் சாப்பாடு போட்டு, சாப்பிட்டு, பாலைக் காய்ச்சி ஆறவைத்து உறையூத்தி, மாடுகளுக்கெல்லாம் திரும்பவும் கூளம் அள்ளிப்போட்டு, கதவுகள் பூட்டுகள் சரியாகப் பூட்டி இருக்கா என்று பார்த்து, உஸ் அப்பாடா என்று 'அது'கள் படுக்கைக்கு வரும்போது நாயக்கர் மெல்லிய குறட்டைவிட்டு சொகமாய்த் தூங்கிக்கொண்டிருப்பார்.

அக்காளும் தங்கையும் வெற்றிலை போட்டுக்கொண்டு விளக்கை சிறிதாக்கிவிட்டு சிறிது நேரம் மெல்லிய குரலில் கசுபுசு என்று ஏதாவது நடப்புச் சமாச்சாரங்கள் பேசுவார்கள். அப்புறம் ஒன்றிரண்டு கொட்டாவி; குரல் கனத்துத் தூக்கம் சொக்கி அவர்களும் தூங்கிவிடுவார்கள். தலைக்கோழி கூப்பிட்டதும் அத்தையம்மா எழுந்து விளக்கைப் பெரிதாக்கி விட்டு, மாடுகளுக்குக் கூளம் போட்டுவிட்டு வந்து வெற்றிலை உரலை எடுத்துவைத்துக்கொண்டு நங் நங் நங் என்று தட்டி வெற்றிலைபோட ஆரம்பிப்பாள். இரண்டாவது கோழி கூப்பிட்டதும் அனைவருக்கும் முழிப்புத் தட்டிவிடும். அக்காவும் தங்கையும் முற்றம் தெளிக்க எழுந்திருக்கும் சமயத்தில்தான் நாயக்கருக்கு முழிப்புத் தட்டும். எட்டி அவர்களில் யாரையாவது கைக்கு அகப்பட்டவர்களைப் பிடிப்பார். ஸ் . . . கையை விடுங்க; விடிஞ்சிட்டது என்று உதறிவிட்டு நழுவிவிடுவார்கள்.

தன்னை வந்து அமுக்கிய தூக்கத்தை நாயக்கர் சபித்துக்கொண்டே வேட்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு தொழுவைத் தூத்து குப்பையை

அள்ளப் புறப்படுவார்.

இப்படியே தினோமும் நடந்துகொண்டே போகிறது, எந்தவித மாற்றமும் இல்லாமல்!

***

26

தூக்கக் கலக்கத்தோடு மரத்தின்மேல் சாய்ந்து கொண்டிருந்த ரகுபதி நாயக்கரின் பக்கத்தில் உட்கார்ந்து கம்மாயின் அலைவாக் கற்களின்மேல் கால்களைத் தொங்கவிட்டுக் கொண்டிருப்பவரின் பெயர் ஜலரங்கன். தூக்கலான மூக்கு; அதனால் முகத்தைப் பார்க்கும்போதே மூக்கின் துவாரங்கள் தெரிகிறது.

இவனுடைய தாய் பிரசவ வேதனை தாங்காமல் தற்கொலை செய்துகொள்ள ஓடிச்சென்று கம்மாய்த் தண்ணீரில் குதித்துவிட்டாள். அவள் தெருவழியாய் அந்த நிலையில் ஓடிய காட்சியை ரொம்பப்பேர் ரொம்பநாளாய் மறக்கமுடியாமல் சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.

அவள் தண்ணீரில் குதித்தவுடன் பிரசவமாகிவிட்டது. குழந்தையைக் கண்டவுடன் அவளுக்கு உயிர்வாழவேண்டும் என்ற ஆசை உண்டாகிவிட்டது. கைகளில் குழந்தையை தலைக்குமேல் ஏந்திக்கொண்டு காப்பாத்துங்கோ; என்னைக் காப்பாத்துங்கோ என்று கூப்பாடு போட்டாளாம்! நல்லவேளையாக ஆழமில்லாத தண்ணீர்; ஜனங்கள் திரண்டு ஓடிச்சென்று அவளையும் குழந்தையையும் காப்பாற்றிவிட்டார்கள்.

தண்ணீரில் பிறந்ததினால் அவன் ஜலரங்கன் ஆனான்!

கூட்டத்துக்கு அப்போதுதான் கல்த்தொழு மரகதய்யா வந்தார். அவருக்கு இந்த விஷயமே தெரியாதாம். வெளியூர் போயிருந்தாராம். வந்து கொஞ்ச நேரங்கூட உட்காரவில்லையாம். ஊர் சாட்டப்பட்ட விஷயம் கேள்விப்பட்டதும் வருகிறாராம்.

முக்கியஸ்தர்கள் அனேகமாகக் கூட்டத்துக்கு வந்துவிட்டார்கள். இன்னும் சிலர் வேகமாக வந்துகொண்டிருக்கிறார்கள். வெளியூரிலிருந்து வந்து சேராதவர்கள், உடம்புக்கு வந்து நடமாடமுடியாமல் படுக்கையில்

இருப்பவர்கள், தவங்கிப்போன வயசாளிகள் இவர்கள் தவிர அனேகமாக வந்துவிட்டார்கள்.

கிராமக் கொண்டிக் காவல்காரர்கள் கூட்டத்துக்குப் பக்கம் குழந்தைகள் வராதவாறும், பிரேதத்தின் பக்கம் பெண்களும் மற்றவர்களும் கூட்டம் கூடி நிற்காமலும் பார்த்துக்கொள்கிறார்கள்.



கொண்டிக் காவல்காரர்களைப் பார்த்து கோவிந்தப்ப நாயக்கர் "எல்லாரும் வந்தாச்சா; யார் யார் இன்னும் வரணும்?" என்று கூட்டத்தில் சலம்பிக்கொண்டிருந்த மனித ஓசைகளுக்கு மத்தியில் கணீரென்ற குரலில் கேட்கிறார். இந்தக் குரலைக் கேட்டதும் கூட்டத்தின் ஓசை வற்றுகிறது. கூட்டம் ஆரம்பமான சுறு சுறுப்பு உணர்வு வருகிறது அனைவருக்கும். அப்பொழுதுதான் பஜனைமடம் பார்த்தசாரதி நாயக்கர் நெற்றியில் அகலமான திருமண் துலங்க நீண்ட வெண்தாடியுடன் வந்து கோவிந்தப்ப நாயக்கருக்குப் பக்கத்தில் போகிறார். அனைவரும் அவருக்கு மரியாதையோடு வழிவிட்டு

விலகினார்கள். பருமனும் அகலமுமுள்ள கோவிந்தப்ப நாயக்கரின் தோள்களில் ஒன்றைப் பற்றிக் கொண்டு "ராமச்சந்த்ர மூர்த்தே . . ." என்று சொல்லி உட்காருகிறார்.

பக்கத்தில் அவர் வந்ததும் கற்பூரம்போன்ற ஒரு 'கோவில் மணம்' வீசியது. அது நிறைவாகவும் இதமாகவும் இருந்தது.

"இது என்ன அநியாயம் கோயிந்தப்பா?" என்று இரண்டு கைகளையும் ஏந்தி விரித்துக் கேட்டார் அவர். சோகத்தில் முகம் ஒரு அழும் உணர்ச்சியைக் காட்டியது.

பார்த்தசாரதி நாயக்கரின் உள்ளம் ரொம்ப இளகியது. ஒரு சிறிய விஷயத்தைக்கூட அவரால் தாங்கமுடியாது. ஸ்ரீராமன் ஒரு ஓடக்காரனைப் பார்த்து 'நீ என் தோழன்' என்று சொன்னான் என்ற இடத்தைக் கேட்கும்போதெல்லாம் மெய்மறந்து கண்ணீர் விட்டுவிடுவார்.

அவர் முதிர்ந்த ராம பக்தர். சதா கையில் சுரைத் தம்புராவுடன் ராம நாமாவைப் பாடிக்கொண்டே இருப்பார். 'ராம நாமமு கல்க்கண்டு . . .' என்று அவர் உருகிப் பாடும்போது கேட்பவர் மெய்சிலிர்த்துப் போவார்கள்.

"கூட்டத்தை ஆரம்பிக்கலாமா?" என்று பார்த்தசாரதியைப் பார்த்துக் கேட்டார் கோவிந்தப்ப நாயக்கர். அவருடைய தலையசைப்புக் கிடைத்ததும் தொடங்கினார்.

கோவிந்தப்ப நாயக்கர் கூட்டத்தில் யாரையோ தேடுவது போல் கண்களால் துளாவினார். உடனே அனைவரும் அவரையே பார்த்தார்கள். நல்லமனசு திரவத்தி நாயக்கரின் மேல் வந்து அவரது பார்வை நிலைத்ததும், ஆள்க்காட்டி விரலால் எழுந்திருக்கும்படி சைகை காட்டி "அவனுடைய கட்டெல்லாத்தையும் அவுத்துவிட்டு அவனைக் கொண்டா இங்கே" என்று கூட்டத்தின் முன்னாலுள்ள இடத்தைக் காட்டினார்.

திரவத்தி நாயக்கர் அவனுடைய கட்டுகளை அவிழ்த்துவிட்டு கூட்டத்தின் முன்னுள்ள இடத்தில் கொண்டுவந்து வட்டமாகக் கோடு வரைந்து அதற்குள் அவனை நிறுத்திவிட்டு விலகி நின்றுகொண்டார். இளவட்டங்கள் உஷாராயினர்.

"நீ யாரப்பா? எந்த ஊரு? ஒம் பேரென்ன?" என்று எடுப்பான குரலில் அவனைப் பார்த்துக்கேட்டார் கோவிந்தப்ப நாயக்கர்.

வாயே திறக்காமல் அவன் மௌனம் சாதித்தான்.

திரும்பவும் அதேபோலக் கேட்டார் அவர். ஆனால் இந்தக் தடவை குரலில் காரம் அதிகமாய் இருந்தது.

அதற்கும் அவன் பதில் சொல்லவில்லை.

கூட்டத்தில் சிறு முணுமுணுப்பும் சலசலப்பும் உண்டானது. சில கண்கள் அதிசயத்தோடு பார்த்தன. சில கண்கள் கோபத்தால் சிவந்தன. சில கண்கள் திகைத்து ஒன்றையொன்று பார்த்தன. பல கண்கள் அவனையே கூர்மையாகக் கவனித்தன.



படீரென்று ஒரு தாட்டியமான குரல், "என்ன; கேக்கிறது காதுலெ விழலையா? என்ன நினைச்சுக்கிட்டிருக்கே ஒன் மனசுலே?" என்று கையை ஓங்கிக்கொண்டு அவன் மீது பாய ஆரம்பித்ததும் இளவட்டங்களும் எழுந்திருந்தார்கள்.

கையை உயர்த்தி கோவிந்தப்ப நாயக்கர் அவர்களை சாந்தப்படுத்தி "இனி அவனை யாரும் கை நீட்டப்படாது" என்று தீர்க்கமான குரலில் சொன்னார். சொல்லிவிட்டு பெரியவர் பார்த்தசாரதியைப் பார்த்தார். சரிதானே என்பது போல் அவர் தலையை அசைத்தார்.

பிறகு தனது தம்பி கிருஷ்ணப்ப நாயக்கரைப் பார்த்து, என்ன நடந்தது என்று சபைக்குச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்.

கிருஷ்ணப்ப நாயக்கர், அன்று காலை தங்களுடைய 'மதுரைப்பாதைப் புஞ்சை'க்கு நாத்துப் பாரம் சுமக்க வண்டி போட்டுக்கொண்டு போனதும், இரண்டாவது நடைக்குப் போகும்போது வண்டிப்பட்டை வெயிலுக்கு சூடாகி பைதாவிலிருந்து கழலும்போல் தெரிந்ததால் மங்கம்மா சாலை வழியாக வண்டியை ஓட்டிக்கொண்டு வந்து ஊருணியில் தண்ணீர் தெளிக்கப்போனது, அப்பொழுது அவனைப் பார்த்தது முதலிய எல்லா விபரங்களையும் ஒன்றுவிடாமல் நடந்ததைச் சொல்லிக்கொண்டே வந்தார்.

"நான் அவனைப் பார்த்தபோதே என் மனசுக்கு அவன் பேரில் ஒரு மாதிரியாகப் பட்டது. இங்கே என்னமோ நடந்திருக்கு என்று என்னையறியாமல் ஏதோ ஒன்று என்னிடம் புலப்படுத்துகிற மாதிரிப்பட்டது. எனக்கு ஒன்றும் தெளிவாக விளங்கலை.

"இந்த ஆசாரி வந்து சொன்னதும் அந்த விசயத்துக்கும் இவனுக்கும் ஏதோ சம்மந்தம் இருப்பது போல என் மனசுக்குப்பட்டது.



"நான் அவனை அரட்டி தண்ணியைவிட்டு வெளியேவரச் செய்தேன். நல்லவேளை, அவன் வந்தான்; இல்லை நானும் அவனை என்ன செஞ்சிருப்பனோ . . .

"அவன் வெளியே வந்த பிறகுதான் அந்தப் பயங்கரம் என் கண்ணுக்குத் தெரிஞ்சது. அவள் இவன் கால்ப்பெருவிரலைக் கடித்துக் கொண்டிருந்ததிலிருந்து இவன் அவளைத் தண்ணீரில் அமுக்கி முகத்தை மிதித்திருக்க வேண்டும்" என்று கிருஷ்ணப்ப நாயக்கர் சொல்லிக்கொண்டு வரும்போது, பார்த்தசாரதி நாயக்கர் உணர்ச்சி வசப்பட்டு "டேய், சண்டாளப் பாவீ . . ." என்று அவனைப் பார்த்து ஆங்காரமாகக் கூச்சலிட்டு எழுந்தார்.

அவரைப் பக்கத்திலிருந்தவர்கள் சாந்தப்படுத்தினார்கள். அவரும் தன் நிதானம் அடைந்து மூச்சு இறைக்க கண்கள் இரத்தமாய் சிவக்கக் கோபப் பார்வையோடு அவனையே பார்த்தார். பெண்ணுக்கு அநீதி என்றால் அவர் இப்படித்தான் கொதிப்பார். சாந்தமூர்த்தியான ராமனை தெய்வமாக வழிபட்டாலும், அவர் லக்ஷ்மணன் போலக் கோபியாகவே இருக்கிறார்.

சீதாதேவிக்கு ராவணன் இழைத்த கொடுமையைக் கேட்டதிலிருந்து அவருக்குப் பெண் இனத்தின் மீதே ஒரு பரிவு உண்டாகிவிட்டது. யார் பெண்களுக்கு ஒரு சிறிய தீமை செய்தாலும் அவரால் பொறுத்துக்கொள்ள முடியாது.

"அண்ணா சாந்தம் அடையுங்கள்; அண்ணா . . ." என்று கோவிந்தப்ப நாயக்கர் அவருடைய கொதிக்கும் தோள்களைத் தொட்டு அவரைத் தடவிக்கொடுத்தார்.

கூட்டத்தின் சலம்பல் அடங்கியதும் கிருஷ்ணப்ப நாயக்கர் தொடர்ந்து அங்கே நடந்ததை நிதானமாகவும் தெளிவாகவும் சொல்லிமுடித்தார்.

"சரி" என்று கோவிந்தப்ப நாயக்கர் சொன்னதும் கிருஷ்ணப்ப நாயக்கர் உட்கார்ந்துகொண்டார்.

அடுத்து ஆசாரியாரைக் கூப்பிட்டார்கள்.

அவர் கூட்டத்தில் வந்து நின்றதும் முகத்தை இருகைகளாலும் மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதார். கூட்டத்திலுள்ளவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு "ப்ச்சு, பாவம் . . ." என்று முணுமுணுத்தனர். இளகிய உள்ளம் உள்ளவர்கள் தங்கள் கண்களைத் துடைத்துக்கொண்டனர். சிலர் இதற்கெல்லாம் காரணமாக இருந்த அவனை குரோதமாகப் பார்த்தார்கள். சிலருடைய பார்வை வண்டியில் கிடத்தப்பட்டுள்ள அந்த உடலைப் பார்த்தது.

ஆசாரியாரின் அழுகை பலத்துக்கொண்டு வந்தது. யாராவது அவரை சாந்தப்படுத்தணுமே என்று சுற்று முற்றும் பார்த்தபோது பார்த்தசாரதி நாயக்கர்

"ராம்; ராம்; ராம்" என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டிருந்தார். மூடிய அவருடைய கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்து அவருடைய நீண்ட தாடியில் சொட்டுக்களாக நின்றது.

***

27

கோவிந்தப்ப நாயக்கர், ஜோசியம் எங்கட்ராயலு பக்கம் திரும்பி, "ராயலுகாரு இக்கட ரண்டி" என்று அழைத்து அவர் காதில் ஏதோ சொன்னார்.

எங்கட்ராயலு, ஆசாரியாரைக் கூட்டத்துக்கு வெளியே அழைத்துக்கொண்டுபோய் ஒரு போகணி குளிர்ந்த நீத்துப் பாகம் கொடுத்து குடிக்கச்செய்து, முகம் கை கால் எல்லாம் கழுவச் சொல்லித் தெளிவாக்கி, அவரைக் கொஞ்சம் உட்காரச் செய்து, வேண்டிய சமாதானங்கள் சொல்லி அழைத்து வந்தார்.

கிராமத்தில் இப்படி ஒரு வழக்கம் உண்டு. இறந்து போனவரின் நெருங்கிய சொந்தக்காரரைக் கொஞ்சதூரம் நடத்திக்கொண்டுபோய் நீத்துப்பாகம் குடிக்கச்சொல்லித் திரும்பக் கூட்டிக்கொண்டு வருவது என்பது.

ஆச்சாரியார் கூட்டத்துக்கு மத்தியில் வந்து நின்று சபை வணக்கம் செய்தார். அவரால் திரும்பவும் பேச முடியவில்லை. கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் வடிந்தது. அவரை உட்கார்ந்து சொல்லும்படி கேட்டுக் கொண்டார்கள்.

முகத்தைத் துடைத்துக்கொண்டு தொண்டையைச் செருமி சரி செய்துகொண்டார்.

"நேத்து இந்நேரத்துக்கெல்லாம் இப்படி ஒண்ணு எனக்கு நேரும்ண்ணு கனவுலகூட நினைக்கலை" என்று ஆரம்பித்தார்.

"எனக்கு, இப்படி ஒண்ணு நேரக்கூடாது." தொண்டையைத் திரும்பவும் சரி செய்துகொண்டார்.

"இந்தப் *போக்காளி இருக்காளே அவளுடைய அம்மாவின் உடன்பிறந்த அம்மான் நான்.

"எங்க குலத்தொழில் தங்க வேலை. எம்பேரு சொக்கலிங்க ஆசாரி. கயத்தாத்துக்குப் பக்கத்திலிருக்கிற மயில் ஓடைக் கிராமம். இண்ணைக்குக் காலையிலெ எழுந்திருச்சதிலிருந்து அவளுக்கும் எனக்கும் ஒரு சின்ன மனத்தகராறு. பொழுது விடிஞ்சதே சரியில்லெ. ஒரு நாக்கூட அவளை நா கை நீட்டி அடிச்சதில்லெ. இண்ணைக்குக் கோவத்திலே, லேசா ஒரு தட்டு தட்டிட்டேன்.

"ராத்திரி எங்களுக்குள்ளே சரியாக இணக்கமில்லெ. நா வெளியூர் போயிட்டு நேத்து சாய்ந்திரம்தான் வீட்டுக்கு வந்தேன். பத்து நாளாச்சி வீட்டெ விட்டுப்போயி. ஆவலோடெ வந்தேன்.

"என் அப்பா கூடப்பிறந்த அத்தைவீடு மஞ்சனங் கிணறுலெ இருக்கு. எனக்கு அங்கனே ஒரு முறைப் பொண்ணு உண்டும். அது பூத்து மூணுமாசமாச்சி. அதுக்கு ஒரு நகை செஞ்சி கொண்டு போனேன். இவளுக்கு அது பிடிக்கலை. பிடிக்கலைண்ணு வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொல்லி இருக்கலாம். சொல்லியிருந்தாக்கூட நா செஞ்சிருக்கமாட்டேன்.

"நா ஒண்ணும் ஊராருக்குச் செய்யலையே; செய்ய வேண்டியவுளுக்குச் செய்யணமில்லா? நாளைப் பின்னே அவுகளும் வேண்டாமா? ஆனால் . . ., இவ என்னை அப்படி நினைக்கலே; ஒரு மாதிரி நினைச்சிட்டா; வீட்டுக்கு வந்ததிலிருந்து ஒரே மோடி."

ஆசாரியின் குரல் திடீரென்று உயர்ந்தது.

"நா இந்த சபையிலெ வச்சி ஒரு உண்மையைச் சொல்றேன். அவளுடைய ஆவியும் இங்கே இருந்தா அதுவும் கேட்டுக்கிடட்டும். நான் என் மனசார இதுநா வரைக்கும் வேற ஒரு பெண்ணைத் தொட்டதும் இல்லெ; மனசிலே நினைச்சதும் கூட இல்லை.

"ஆனா, . . . பாதகத்தி என்னை வேறமாதிரி நினைச்சிட்டாளே . . .

"எனக்குக் கலியாணமாகி அஞ்சி வருசமாச்சி. இப்பத்தான் இவ 'உண்டாகி' இருந்தா.

"என் ஆத்தாவுக்கு நா ஒரே பிள்ளை. எனக்கு ஒரு பிள்ளை பிறக்கும்ண்ணு நம்பிக்கையிருந்தது; இவ மூலமா எனக்கு ஒரு பிள்ளைங்கிற நம்பிக்கை போச்சி. என் வீட்டிலெ இனி விளக்கு எரியாது.

"சின்ன வயசிலிருந்தே இவ மேல எனக்கு உசுரு; இவளுக்கும் எம் மேல உசுரு. அம்மானோவ், என்னைக் கட்டிக்கிடாமெ நீ வேற எவளையாவது கட்டிக்கிட்டெ நா கிணத்திலெ குளத்திலெ விழுந்து செத்துப்போவேன்ண்ணு சொன்னாள்; அப்படி என்னைக் கட்டிக்கிட்ட பிறகும் இவளுக்கு சாவு தண்ணியிலேயா இருக்கணும்? கடவுளே . . .

"எம்புட்டு ஆசையா இந்தப் பாம்படத்தை செஞ்சி இவளுக்குப் போட்டேன்! இந்தப் பாம்படமே இவ உசுரெ வாங்கீட்டதே."

ஆசாரியார் தரையையே கூர்ந்து பார்த்தார் சற்று நேரம்; பிறகு தலையை ஆட்டிக்கொண்டார். "ம் . . ." என்று ஒரு முனகலாகப் பெருமூச்சுவிட்டு "போச்சி . . . எல்லாம் போச்சி" என்று சொல்லிவிட்டு எழுந்து புறப்பட்டார்.

"எங்கே போறீர்?" என்று கேட்டார்கள்.

"நா எங்கே போவேன்; எனக்குப் போக்கடி எங்கே" என்று குலுங்கினார் அவர். "அய்யா அந்தத் துணியை விலக்குங்க, அவ முகத்தை நா ஒருதரம், கடசியா பாத்துக்கிடட்டும்" என்றார்.

அவரைக் கூட்டிக்கொண்டுபோய் ஆசுவாசப்படுத்தினார்கள்.

இனி; மேல்க்கொண்டு நடக்கவேண்டியதைக் கூட்டம் கவனிக்க ஆரம்பித்தது.

*

கோவிந்தப்ப நாயக்கர் கூட்டத்தைச் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தார். பிறகு அந்தப் பார்வை கொலையாளியிடம் வந்து நிலைத்தது.

அவர் என்ன சொல்லப்போகிறார் என்று அவரையே கூட்டம் கவனித்துக்கொண்டிருந்தது. அவர் பார்த்தசாரதியிடம் திரும்பி, "அண்ணா, இந்தப் பயலுக்கு என்ன தண்டனை கொடுக்கிறது?" என்று கேட்டார்.

அப்படிக் கேட்டுவிட்டு அவர் அங்கே கூடியிருந்தவர்களையெல்லாம் பார்த்து, "நமக்கு இப்பொ ராஜாங்கம்ண்ணு ஒண்ணு இல்லை; நமக்கு இப்பொ ராஜாங்கம் நாமதான்" என்றார்.

கூட்டம் திரும்பவும் அந்தக் கொலையாளியைப் பேச வைக்க முனைந்து தோற்றது. அவன் வாயைத் திறக்க வைக்க முடியவில்லை!

கோவிந்தப்ப நாயக்கர் சொன்னார், "அடேய், நீ மௌனம் சாதிச்சால் மட்டும் தப்பிவிடலாம்ண்ணு நினைச்சிராதே. உன் மனசுலேயும் உள்ளதைச் சொல்லு; வாயைத் திறந்து பேசு. நாங்களும் தெரிஞ்சிக்கிடட்டும்."

அவனுடைய தீவிர மௌனப் பிடிவாதம் கூட்டத்தின் ஆத்திரத்தைக் கிளப்பியது. அடிக்கடி பெரியவர்கள் தலையிட்டு விடலைகளின் வேகத்தைத் தணிக்க வேண்டியிருந்தது.

கடைசியாக அவனுக்குக் கொடுக்கவேண்டிய தண்டனையைப் பற்றி யோசித்தது கிராமம்.

முதலில் அவனை மாறுகால் மாறுகை வாங்குவது என்று தீர்மானித்து பின்பு அதை மாற்றி, உயிரோடு கழுவில் ஏற்றுவது என்று தீர்மானித்தது.

கோவிந்தப்ப நாயக்கரின் கேள்விக்குப் பார்த்தசாரதி நாயக்கர் பதில் தரவில்லை. அவருடைய அபிப்பிராயத்தில் கடவுள் ஒருவன்தான் தண்டனை வழங்க வேண்டியவன்; மனிதன் அல்ல என்பதே. ஆனால் இதைச் சொன்னால் கூட்டம் சிரிக்கும்! ஆகவே அவர் வாய் திறக்கவில்லை. கிராமக் கட்டின்படி கூட்டத்துக்கு வந்தார். முடிவு அறிவித்தவுடன் எழுந்து சென்றார். இனி அவரை,

மடியில் சுரைத் தம்புராவோடு பார்க்கலாம். அதன் ரீங்காரத்தில் மனசை லயிக்க விட்டு ராம நாமாவைப் பாடிக்கொண்டே இந்த உலகத்தை மறந்துவிடுவார்.

கிராமத்தின் கட்டளைப்படி கொண்டிக் காவல்காரர்கள் இரண்டு தச்சாசாரிகளைக் கூட்டிக்கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவர்களை உடனே ஒரு கழுமரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. கழுமரத்தின் உயரம் நீளம் அகலம் சொல்லப்பட்டது.

கழுவேற்றுவதில் பல முறைகள் உண்டு. உடனே கொல்லுகிற முறை, பலநாள் கழித்து வேதனையால் துடித்துச் சாகும் முறை இப்படி. உடம்பில் எந்த இடத்தில் குத்தி எந்த இடத்தில் வாங்குவது என்கிற முறையெல்லாம் உண்டு.

கிராமத்தின் உப்பு மூலையில் ஒரு இருபது குருக்கம் தொலைவில் தள்ளி ஒரு பெரிய வேப்பமரம் இருக்கிறது. அங்கே ஒரு திரடு உண்டு. அந்தத் திரடில் கொண்டுபோய் கழுமரத்தை நட்டார்கள்.

கழுமரத்தை நட்டு முடித்தவுடன், அந்தத் திரடுவின் ஈசான மூலையில் நாலு தச்சு முழம் நீளத்தில் ஒரு குழி தோண்டினார்கள். பிறகு, வண்டியில் கிடந்த அந்தப் பெண்ணின் சடலத்தை அப்படியே அந்த வண்டியில் வைத்து இழுத்துக்கொண்டு வந்தார்கள்.

புதைகுழியின் அருகே தோண்டிக் குவிக்கப்பட்ட மண்ணின் மீது தூக்கிக்கொண்டுவந்து படுக்கவைத்தார்கள். ஆசாரியார் அவள் முகத்தைக் கடைசியாக ஒருதரம் பார்த்துக்கொண்டார்.

தன் சாவு இல்லாத கர்ப்பிணிகளை அடக்கம் செய்வதற்கு முன்னால், வயிற்றில் குழந்தையோடு புதைக்கமாட்டார்கள். வயிற்றைக் கீறிக் குழந்தையை எடுத்துப் பக்கத்தில் வைத்துதான் புதைப்பார்கள்.

இந்த சமயத்தில் என்ன செய்வது என்று ஒரு கேள்வி வந்தது. "அவளை ஒரு 'கோலமும்' செய்யவேண்டாம்; அப்படியே புதைச்சிருங்கைய்யா" என்று கேட்டுக்கொண்டார் ஆசாரியார்.

அப்படியே புதைத்தால் சுமைதாங்கிக் கல் வைக்கணுமே என்று கூடியிருந்தவர்களில் ஒரு குரல் கேட்டது.

"ஊரிலிருந்து நீங்கதான் அதையும் செய்யனும்; இவ்வளவு செய்யிறவர்களுக்கு அது ஒரு பெரிய்ய காரியமா?" என்றார் அவர்.

"ஆசாரியாரே, நாங்க செய்யிறதில் ஆட்சேபணை இல்லை. நீர் ஊரில் போய் 'விசேசம்' வைத்து முடித்த பிறகுதானே இதைச் செய்யணும்?" என்று கிருஷ்ணப்ப நாயக்கர் கேட்டார்.

"ஊரா! எனக்கா? இனி ஊரேது வீடேது இந்த சன்னாசிக்கு. நா இனி ஊருக்குப் போகலை. நா வடக்காமெ பரதேசம் போறேன்."

கேட்போரின் மனசைக் குத்தும் இந்த வார்த்தைகளைக் கேட்டவர்கள் கலங்கினார்கள்.

குழிக்குள் சடலத்தை இறக்கினார்கள். மண்ணைத் தள்ளி மூடுவதற்குமுன் ஆசாரியார் இரண்டு கைகளாலும் மூன்று தடவை மண் அள்ளிப்போட்டார். "தாயீ, உன் கையாலே எனக்கு சோறு போட்டே; நா உனக்கு மண் அள்ளிப் போடுதேன்" என்றார்.

மண்வெட்டியால் மண்ணை இழுத்து குழிக்குள் தள்ளினார்கள். சடலத்தின்மேல் மண் விழும்போது திட் திட் என்று ஒரு சத்தம் கேட்டது. பாதிக் குழி நிறைந்தவுடன் ஒருவன் குழிக்குள் இறங்கி நன்றாக மண்ணைக்காலால் மிதித்து இறுகினான். மண் விழ விழ எல்லாப் பக்கங்களிலும் நடந்து அவன் மிதித்தான். முக்கால்வாசி நிறைந்தவுடன் இலந்தை முள்ளைப்போட்டு அமுக்கி அதன்மேல் மண் போட்டார்கள். இது நரி, ஓநாய் போன்ற காட்டு மிருகங்கள் வந்து தோண்டி உடலைத் தின்றுவிடாமல்

இருக்க. குழி நன்றாக மூடப்பட்டு விட்டது. இப்பொழுது அந்த இடத்தில் ஈர மண்ணால் ஆன ஒரு சிறிய மேடு மட்டுமே மிஞ்சியது.

"முடிஞ்சது உன் பாடு" என்று சொன்னார் ஆசாரியார். பிறகு அவர் அங்கே நிற்கவில்லை. விறு விறு என்று நடக்க ஆரம்பித்துவிட்டார்.

கோவிந்தப்ப நாயக்கரும் அங்குள்ள மற்ற கம்மாளர்களும் அவரைத் தங்கள் வீட்டுக்கு வற்புறுத்திக் கூப்பிட்டும் மறுத்துவிட்டார்.

பாம்படங்களை அவரிடம் ஒப்படைக்கும்போது அதையும் வாங்க மறுத்து, யாராவது பாம்படத்துக்கு ஆசைப்பட்ட ஏழை கர்ப்பிணியான ஒரு கம்மாளச்சிக்குக் கொடுத்து விடும்படி சொல்லிவிட்டார்.



"நீர் இப்போ எங்கே போறீர்?" என்று அக்கையா கேட்டதுக்கு, காசிக்கு நடந்தே போகப்போவதாகச் சொன்னார்.

"நீர் எங்கே போறதைப் பத்தியும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை; இந்தத் தீட்டோடெ தலையிலெ தண்ணி விடாமெ, கொதிக்கிற வயிறோட எங்க கிராமத்தை விட்டுப் போறீரே, இது சரியா இருக்கா உமக்கு?" என்று கேட்டார் வருத்தத்துடன் கிருஷ்ணப்ப நாயக்கர்.

"ராசாக்களே, என்னை தப்பிதமா நினைச்சிர வேண்டாம். உங்களுக்கு ஒரு குறையும் வராது" என்று தனது பூணூலைத் தொட்டுத் தூக்கிக் காண்பித்துவிட்டு வேகமாக நடந்து போய்விட்டார்.

***

28

கழுமரத்துக்குப் பக்கத்தில் அவனைக் கொண்டுவந்ததும், அங்குக் கூடியிருந்த கூட்டத்திலிருந்து முதலில் குழந்தைகள், கர்ப்பிணிகள் முதலியவர்களை அப்புறப்படுத்தினார்கள்.

அவனுடைய கைகளைப் பின்கட்டாகவும், கால்களைப் பின் பக்கம் மடித்துக்கட்டி அவனைத் தூக்கிக் கழுமரத்தின் நுனியில் உட்காரவைத்து அழுத்தினார்கள். கழுவின் நுனி ஊசி அவனுடைய அபானத்துக்குள் புகுந்து பின் கழுத்தின் பிடரி வழியாக வெளியே வந்தது. அந்த வினாடியில் அவனது உடம்பு நடுங்கித் துடித்தது. மலமும் ரத்தமும் அபானத்தின் வழியாய்க் கசிந்தது. கண்டத்திலிருந்து ஒரு பயங்கர ஓலம் வெளிவந்தது. சில வினாடிகளிலேயே இவ்வளவும் நடந்து முடிந்துவிட்டது.

கழுமரத்தின் நுனி அவன் தலைக்குமேல் ஒரு முழம் நீட்டிக்கொண்டிருந்தது. அவனுடைய கட்டுகளையெல்லாம் அவிழ்த்து விட்டுவிட்டார்கள்.

தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு, அவன் கழுமரத்தின் குறுக்கு விட்டத்தில் உட்கார்ந்து கால்களை தொங்கப் போட்டுக்கொண்டு, தலையைக் கவிழ்ந்து தரையைப் பார்ப்பது போலத் தெரிந்தது.

கையில் வேல்க் கம்புகளுடன் இரண்டு காவல்காரர்கள் மட்டுமே அவனுக்குப் பின்பக்கம் நின்றுகொண்டிருந்தார்கள். இப்படி நிலையிலுள்ளவனின் பார்வையில் படக் கூடாது என்பது பெரியவர்களின் அனுபவச்சொல்; இந்த சமயத்தில் அவன் எது சொன்னாலும் பலிக்குமாம்! அவன் பார்வை ஊரின் மேல் படாமல் இருக்க மறுபுறம் பார்த்து இருக்கும்படியாகத்தான் கழுவேற்றுவார்கள்.

இரண்டு நாட்கள் யாரும் அந்தப் பக்கம் வராதபடி காவல்காரர்கள் பார்த்துக்கொண்டார்கள்.

ராத்திரி நேரத்தில் ஊருக்குள் பயங்கரமான அமைதி குடிகொண்டது. அந்தக் குளிர்ந்த வேலையில் அவன் கூக்குரலிடும் கோரமான சத்தம் பயமாக இருக்கும்.

"தண்ணீ . . . தண்ணீ . . . ஐயா, கொஞ்சம் தண்ணியாவது குடுக்க மாட்டியளா . . ." என்று கதறுவான்.

காவலாளிகளில் ஒருவன் ஊருக்குள் வந்து கேட்டான், "அவன் தண்ணி தண்ணிண்ணு கேக்கானே குடுக்கலாமா?"

"தண்ணியா! அவனுக்கெல்லாஞ் சேத்துத்தான் அந்தப் பொம்பளை தண்ணி குடிச்சிச் செத்தாளே; இவனுக்கென்ன தண்ணி?" என்றார்கள்.

பெண்கள், "ஐயோ பாவம், கொஞ்சம் தண்ணியாவது குடுக்கப்படாதா; சாகப்போகிறவனுக்கு ஒருவாய்த் தண்ணியாவது குடுத்தா என்ன?" என்றார்கள்.

கோவிந்தப்ப நாயக்கரிடம் வந்து கேட்டார்கள். "தவிச்ச வாய்க்குத் தண்ணி கொடுக்கப்படாதுண்ணு யார் சொன்னா; கொடு. இந்த சமயத்திலெ அவன் என்ன கேட்டாலும் கொடுக்கணுமே; ஓடு ஓடு" என்றார்.

காவல்காரன் ஓடி, விடலைப் பனையில் ஒரு ஓலையை வெட்டி பட்டைபிடித்து அதில், மண் பானையிலிருந்து குளிர்ந்த தண்ணீர் ஊற்றி அவனுடைய வாயருகே நீட்டினான். ஆவலோடு அப்படியே அதில் வாய்பதித்து உறுஞ்சிக் குடித்தான். ஆனால் அவன் நினைத்த அளவு தண்ணீரைக் குடிக்க முடியலை.

அவன் தாங்கமுடியாத துக்கத்தினால் அழுதுகொண்டே சொன்னான். அது யாரையோ பார்த்து யாருக்கோ சொன்ன மாதிரி இருந்தது. "டே பாவியளா, கொலை செய்யாதீங்கடா; பெண் பாவம் பொல்லாதுடா . . ." தன் உள் உடம்பில் எங்கோ தாங்க முடியாத வலியினால் அவன் முகம் கோணலாக நெளியும்.

மூன்றாம் நாள் அந்த வேப்பமரத்தின் கீழ் வேப்பமுத்து பொறுக்கும் சாக்கில், பச்சேரியிலிருந்து சில பெண் குழந்தைகள் கையில் பனைநார்ப் பெட்டிகளுடன்

அங்கே வந்தார்கள்.

'வயதுக்கு' வராத, ஆனால் வயதை நெருங்கிக் கெண்டிருக்கும் அந்தக் குழந்தைகளின் கலகலப்பான பேச்சுக் குரல்கள் அந்த இடத்தில் நிறைந்த மரண அமைதியை விலக்கியது. அந்த 'கழுவன்' தலையை நிமிர்த்திப் பார்க்க முடியவில்லையென்றாலும் கேட்க முடிந்தது. அந்த அவஸ்தையிலும் அவனில் அது ஒரு மாறுதலை உண்டுபண்ணியது.

"ஏ . . . மக்களா, இங்கெ வாங்க" என்று அழைத்தான்.

அந்தச் சிறுசுகளுக்கு ஆச்சரியமாக இருந்தது; திடுக்கிட்டு பயந்து காவலாளிகளைப் பார்த்தார்கள். அவர்கள் நினைத்திருந்தது, இதுக்குள் அவன் செத்துப்போயிருப்பான் என்று. அவன் பேச்சைக்கேட்டு அதில் சிலர் மிரண்டு ஓடினார்கள். ஆனால் திரும்பவும் ஒருவர் முகம் ஒருவர் பார்த்துக்கொண்டு வர எத்தனித்தார்கள். அவனைக் கிட்டே வந்து பார்க்க அவர்களுக்கு ஆசை!

இதற்கிடையில், காவலாளிகளில் ஒருவனான சித்தையா ரொம்பவும் இரக்க சிந்தனையுடையவன். அவனுடைய மரண அவஸ்தையைக் கண்டு, "எப்பா, நீ யாரையாவது கடேசியாப் பாக்கணும்ண்ணு ஆசைப்படுறயா? சொல்லு; சீக்கிரம் ஏதாவது செய்யிறோம்" என்று அன்போடு கேட்டான்.

இந்த இதமான வார்த்தைகளும் அன்பும் அந்தக் கழுவனின் மனசைத் தொட்டதுபோலும். அவன் கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர் வடிந்தது. தனது தலையையும் கைகளையும் உயர்த்த முடியாத அந்த நிலையில் கண்களை இறுக்க மூடி கண்ணிலுள்ள நீரைப் பிழிந்துவிட்டு சித்தையாவைப் பார்த்து அழுதுகொண்டே அன்பாகச் சிரிக்க முயன்றான். உதடுகளும் மூக்கும் துடித்தனவே தவிர அவனது சிரிப்புக்கு அவை ஒத்துழைக்கவில்லை.

பிறகு அவன் ஏதோ பேசமுயன்றான். தொண்டையில் கபம் கட்டியதால் சரிசெய்யக் கஷ்டப்பட்டான். சாவு தன்னை நெருங்கிவிட்டது என்பதை வெகு சீக்கிரமே அறிந்தான்.

"ஏ மக்களா, இங்கெ வாங்க" என்று சிரமப்பட்டு அந்தப் பெண்குழந்தைகளைத் தன்னிடம் அழைத்தான்.

இது அவர்களுக்குப் பயமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. அவர்கள் காவலாளிகளின் முகத்தைப் பார்த்தார்கள். சித்தையா அவர்களைப் பார்த்து "ஏ பிள்ளையிளா, இங்கெ வாங்க; சும்மா வாங்கெ நாங்க இருக்கோம்; பயப்பட வேண்டாம்" என்று கூப்பிட்டான்.

தயங்கிக்கொண்டே அவர்கள் அவனை நெருங்கிவந்து பார்த்தார்கள்.

கிட்டே வந்ததும் அவர்களை அவனால் பார்க்க முடிந்தது. அதிலுள்ள ஒரு பெரிய பெண்பிள்ளையிடம் அவன் சொன்னான், "என் மக்களா, நா சாகப் போறவன். எனக்கு ஒரு ஆசை. எனக்கு வலி பொறுக்கமுடியலை. என்னைச் சுத்திவந்து கும்மியடிச்சி சாமிமேல ஒரு பாட்டுப் பாடுங்க" என்று இரக்கத்தோடு அவர்களை மன்றாடினான்.

அந்தப் பிள்ளைகள் முதலில் தயங்கினாலும் காவலாளிகளின் உற்சாகமூட்டுதலின் பேரில் சம்மதித்து, வேப்பமுத்துகள் அரைகுறையாக நிரம்பிய சிறிய பனைநார்ப்பெட்டிகளைக் கீழே வைத்துவிட்டு அந்தக் கழுமரத்தைச் சுற்றிவந்து கைகொட்டி குனிந்தும் நிமிர்ந்தும் பாடினார்கள்.

மாரியம்மன் கோவிலில் மாவிளக்கு ஏற்றிவைத்து அந்த மாவிளக்குகளைச் சுற்றிவந்து கும்மியடித்துப் பாடுகிற பாடல் அது. அவர்களுக்கே உரிய உச்சரிப்பில் அவர்களுக்கே உரிய கற்பனையில் அந்தப் பாடல் வந்தது.

மாரி யம்மேங் கோயிலிலே

மாவிளக்கு நூறு, மஞ்சப் பிள்ளைய நூறு

தரம்பாத்துக் கும்மியடிக்கிற

தண்டுப் பெண்டுக நூறு, தண்டுப்பெண்டுக நூறு.

மாறி பிறந்தது மாநாடு — மாரி

மக்க பிறந்தது காஞ்சி வனம்

காஞ்சிவனத்தில் பிறந்தவரை

கண்ணோட்டம் பாரம்மா முத்துமாரி.

ஆத்து மணலிலே சோறாக்கி

ஆவரங்காயை கறி சமைச்சி

மின்னட்டம் பூச்சியை விளக்கேத்தி

வேடிக்கை பாரம்மா முத்துமாரி.

பாவை படந்ததைப் பாத்தியளா — பாவை

பத்திப் படந்ததைக் கேட்டியளா

அத்தனை பேருக பத்தினிப் பொண்ணுக

பாடிக் கும்மியடியுங்கடி.

சுரை படந்ததைப் பாத்தியளா — சுரை

சுத்திப் படந்ததைக் கேட்டியளா

அத்தனை பேருக பத்தினிப் பொண்ணுக

பாடிக் கும்மியடியுங்கடி.

கோவை படந்ததைப் பாத்தியளா — கோவை

குத்திப் படந்ததைக் கேட்டீயளா

கோவைக்குள் இருக்கும் குத்திர காளிக்கு
கொத்துச் சரப்பளி மின்னாலெ.

அஞ்சி களஞ்சிக்கு மிஞ்சிகட்டி
ஆயிரம் களஞ்சிக்கு அரும்புகட்டி
காலிலே போட்டாக் கலகலங்கும்
கன்னி கழியாத பத்ரகாளி.

ஆலம் இலைபோல் அடிவயிறு
அசந்த நெத்தியில் புருவக்கட்டு
சோலைக்கிளிபோல எம்பிறவிக்கு
சொந்தக்கிராமம் கோபல்லம்.

அம்மா பிறந்தது அய்யோத்தி — அம்மா
சடை பிறந்தது சதுரகிரி
வேம்பு பிறந்தது வேனகிரி — நாங்க
விளையாட வந்தது கோபல்லம்.

செங்கல் அறுத்த கிடங்குக்குள்ளே — நாங்க
சீரகச் சம்பா விளையவச்சோம் — இப்பெ
பச்சைக்கிளிவந்து கெச்சட்டம் போடுது
பறந்தடிங்கடீ தோழிப்பொண்ணே.

***

அந்தப் பாடலையும் கும்மியையும் அவன் சரியாகக் கேட்டு அனுபவித்தானோ என்னவோ, அந்தக் குழந்தைகளின் கூட்டுக் குரலினூடே, பாடலோடு வரும் வார்த்தைகள் அவனை என்னவோ செய்தது என்பது மட்டும் நிச்சயம்.

சத்தங் குறைந்து முனகலுடன் அவன் கஷ்டத்தோடு முனகினான். அவன் மனக்கண் முன்னால் வீரப் பார்வையோடு நிற்கும் மாரி அம்மனின் அருள் வடிவம் வந்து தோன்றியது.

காலமெல்லாம் உடம்பை வளைத்து முறித்து, சரீரத்தைப் பிழிந்து பாடுபடும் தன் மக்களையெல்லாம் அவன் நினைத்தான்.

அவனது தாய் சொல்லுவாள்:

"பாவி, உனக்கு இரக்கம் இல்லையாடா?

என் எலும்பை சந்தனமாய் அறைச்சி அரும்பாடுபட்டு உன்னை வளத்தனேடா;

பெத்த தாயைக் கைநீட்டி அடிக்கெயடா பாவி" என்று கதறுவாள்.



அவன் முதலில் திருடக் கற்றுக்கொண்டது வீட்டில்!

விளையாட்டுப் பருவமான பால பருவம் முடிந்தவுடன் அவன் மற்றவர்களைப்போல உழைக்க கழனிக்குச் செல்லவில்லை. சோம்பேறியாக ஊரைச் சுற்ற ஆரம்பித்தான்.

வீட்டில் ஆள் இல்லாதபோது வந்து ஆக்கிவைத்திருக்கும் உணவைத் தின்பான். இப்படியாக குடும்பத்திலேயே, அடுத்தவர்களின் உழைப்பைத் தின்னத் தொடங்கினான். பெற்றவரும் மற்றவரும் எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவில்லை.

போக்கிரிகளுடன் சேர்ந்துகொண்டு வாடாவளியாக அலைந்தான். சூதாடுவதும் கஞ்சாப் பழக்கமும் வந்தது. வீட்டிலுள்ள சாமான்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு போக ஆரம்பித்தான். மூர்க்க குணம் வந்துவிட்டதால் தடுத்துச் சொல்பவர்களை அடிக்கத் தொடங்கினான்.

இவன் கொடுமை பொறுக்கமுடியாமல் ஒருநாள் உற்றாரெல்லாம் ஒன்றுகூடிச் செய்த முடிவின்படி அவனைப் பிடித்துக் கட்டிவைத்து உதைத்தார்கள். அதே நிலையில் மூன்று நாள் அவனைப் பட்டினி போட்டனர். பிறகு அவிழ்த்து விட்டு, 'நாயே ஓடிப்போ' என்று துரத்திவிட்டனர்.

கோபல்ல கிராமத்து மக்களும் அதன் சுற்றுப் பட்டிகளில் வசிக்கும் மக்களும் இந்தக் கள்ளிக் காட்டையும் முள்வனத்தையும் திருத்தி நிலங்களை மீட்டி அல்லும் பகலும் அனவரதமும் அரும்பாடுபட்டு உழைத்தது அவனுக்குத் தெரியாது. இப்பொழுது பூமாதேவி மஞ்சள் குளித்து மலர்ந்து சிரிக்கிறாள்.

கோவை படர்ந்திருந்த காட்டிலே இப்பொழுது பாவையும் சுரையும் பற்றிப் படர்ந்து மக்களுக்குப் பலன் தருகிறது. ஆனால் இன்னும் இந்த கோபல்ல கிராமத்தில் நெல் விளையவில்லை. அது எங்கோ உள்ள தீரவாசத்து உழைப்பாளி மக்களின் பாடல். அது இங்கே வந்து இந்தப் பாடலோடு எப்படி ஒட்டியது என்று தெரியவில்லை!

அவனுக்கு, தான் பிறந்த தீரவாசத்தின் ஞாபகம் வந்தது. இதேமாதிரியான மக்கள்தான் அங்கேயும். செங்கல் அறுக்க மண்ணை அள்ளிய சாதாரணப் பொட்டல் காட்டைத் திருத்தி சீரகச்சம்பா நெல்லை விளையவைத்தவர்கள். இப்பொழுது அந்த பொட்டல் காடு கழனியாகவும் சோலையாகவும் மாறி கிளிகள் வந்து கெச்சட்டம் போடுகின்றன.

அந்த உன்னதமான உழைப்பாளி மக்களின் மத்தியில் இவன் ஒரு களையாக முளைத்தவன். உடலை வளைத்து வேலை செய்யச் சோம்பி பிறர் பொருளைக் கொள்ளை கொண்டு இதுவரை ஜீவித்து வந்த அசல் புல்லுருவி இவன். தான் மரணத்தின் எல்லையைத் தொடும்போது இவனுக்கு இதுவெல்லாம் ஞாபகத்துக்கு வந்து வந்து போகிறது. உழைப்பாளி மக்களுடைய சந்தோஷம் அந்தப் பாடலிலே வந்து துள்ளிக் குதித்துக் கும்மியடிக்கிறது. அந்தப் பேரானந்தத்தின் மத்தியில் இவன், உடன்பிறந்த உற்றார் பெற்றோர் அனைவரிலிருந்தும் தனிமைப்பட்டு இங்கே வந்து இப்போது மரணமாகிக்கொண்டிருக்கிறான்.

சாவுக்கு முன்னதாக வரும் ஒரு பிரகாசமான தெளிச்சி அவனை வந்து தொட்டது. அந்தக் குழந்தைகளை அவன் ஆவலோடு பார்த்தான். கழுமரத்திலிருந்து துள்ளிக் குதித்து அவர்களுடன் கலந்துகொள்ள நினைத்தான் போலும். அவனுடைய உடம்பு பலமான ஒரு உலுக்கலுடன் துள்ளியது. அவ்வளவுதான். அந்த அவஸ்தையிலிருந்து நிரந்தரமாக விடைபெற்றுக்கொண்டான்.

*

கொஞ்ச நேரம் கழித்துத்தான், அவன் செத்துப்போனான் என்று அவர்கள் கண்டார்கள்.

உடனே காவலாளிகள் அந்தக் குழந்தைகளை அங்கிருந்து போகும்படி விரட்டினார்கள். விரட்டப்பட்ட குழந்தைகள் அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தார்கள்.

அதில் சில குழந்தைகளுக்கு ராத்திரியே பயந்ததின் காரணமாகக் காய்ச்சல் வந்துவிட்டதாகப் பச்சேரியில் பேசிக்கொண்டார்கள்.

ஒருபெண் குழந்தை அதே காச்சலில் சிலநாள் படுத்திருந்து இறந்துபோனதாகவும் சொன்னார்கள். மற்றொன்றுக்கு நிலைமை ரொம்ப மோசமாகி, கைமீறிப் போய்விடும் என்ற நிலையில் அந்தக் குழந்தையின்

பெற்றோர்கள் அந்தக் கழுவனுக்கு ஒரு வேண்டுதல் செய்து கொண்டார்கள். அதன் படிக்கு, அந்தப் பெண் குழந்தை பிழைத்து எழுந்தால் அதற்குக் கலியாணம் ஆகிப் பிறக்கும் தலைக் குழந்தைக்குக் கழுவன் என்று பெயர் வைப்பதாக நேர்ந்து கொண்டார்கள்.

இப்பொழுது அந்த வேப்பந் திரடுவை, கிராமத்து மக்கள் கழுவன் திரடு என்று அழைக்கிறார்கள்.

செத்துப்போன கழுவனைக் கழுமரத்திலிருந்து உருவி எடுத்து, அந்த கம்மாளச்சிக்குப் பக்கத்திலேயே புதைத்து அடையாளமாக ஒரு கல் நட்டார்கள்.

பச்சேரி மக்கள் அங்கே புதைக்கப்பட்ட அந்த இருவரையுமே இப்பொழுது தேவதையாகக் கொண்டாடுகிறார்கள். பொங்கலிடுகிறார்கள். தங்கள் பெண் குழந்தைகளுக்கு கம்மாடச்சி என்றும் ஆண் குழந்தை பிறந்தால் கழுவன் என்றும் பெயர் சூட்டுகிறார்கள்.

தன்னைக் கழுவில் ஏற்றுவதற்கு முன்னும் கழுவேற்றிய பிறகும்கூட அவன் தன்னைப்பற்றி ஒன்றுமே சொல்லாமல் சாதித்துவிட்டதால் அந்தச் சாதனைக்குக் 'கழுவன் சாதனை' என்ற பிரயோகமே புழக்கத்துக்கு வந்துவிட்டது.

இப்பொழுதும் கிராமத்தில் ஒரு குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் சாதித்தாலோ அல்லது யாரும் மனதிலுள்ளதை வாய்திறந்து எதையும் சொல்லாமல் சாதித்தாலோ உடனே ஜனங்கள் "என்னடா இது, கழுவஞ் சாதனையா சாதிக்கே!" என்று சொல்லுவார்கள்.

***

30

அன்று கோபல்ல கிராமத்துக்குப் புதூ மாதிரியாக விடிந்தது.

மேகமே இல்லாத அடிவானத்தில், பழுத்த கோவைப் பழத்தின் நிறத்தில், கண்கள் கூசாத பிரகாசத்துடன் சூரியன் பெரிய்ய வடிவத்தில் மேலே வந்துகொண்டிருந்தான்.

மங்கம்மா சாலையிலிருந்து கிராமத்தை நோக்கி வரும் வண்டிப்பாதையில், இரண்டு உயரமான குதிரைகளில் இருவர் வந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் இந்தக் கிராமத்துக்குப் புதியவர்கள், அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டுவந்த மொழியும் இந்த நாட்டிற்குப் புதிது.

கருப்புநிறக் குதிரையின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தவர் 'கும்பினி' யைச் சேர்ந்த ஒரு வெள்ளைக்கார அதிகாரி. வெள்ளை நிறக் குதிரையின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தவர் ஒரு 'கருப்பு' அதிகாரி. அந்த வெள்ளைக்காரரைவிட இவர் கம்பீரமாகவும் அழகாகவும் நல்ல சிகப்பு நிறமாகவும் இருந்தார்.

வெள்ளைக்கார அதிகாரி உயரமான தொப்பி அணிந்திருந்தார். அந்தத் தொப்பியின் கீழே காதோரங்களில் செம்பட்டை ரோமங்கள் அடர்ந்த பெரிய கிருதா.

'கருப்பு அதிகாரி' தன் தலையில் ஜரிகைப்பட்டை போட்ட சிகப்புநிறப் பட்டுத்துணியால் ஆன பெரிய்ய தலைப்பாகை அணிந்து கொண்டிருந்தார். இவரிடம் கிருதா இல்லை; வளமான திருகிவிடப்பட்ட மீசை, செம்மறி ஆட்டங் கிடாய் கொம்புகள் மாதிரி. தெறித்து விழுகிற மாதிரியான பெரும் விழிகள்; ஆட்களை மருட்டுகிற மாதிரி இருந்தது.

வெள்ளை அதிகாரி தனது பரங்கி மொழியில் கேட்டுக்கொண்டே வந்தார்; அதற்கு அந்த கருப்பு அதிகாரி அதே மொழியில் சொல்லிக்கொண்டே வந்தார்.

அவர்கள் சூரியோதயத்தைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டார்கள்! இந்தச் சூரியோதயம் ஒன்றை எத்தனை தரம் பார்த்தாலும் சலிப்பதில்லை. அது ஒரு நித்தப்புதுமை; அன்றலர்ந்த மலர்போல. இந்தக் கண் கூசாத சூரியனை, பூப்படையாத மங்கையைப் பார்ப்பது போலக் கூசாமல் பார்க்கலாம்!

இது சாந்தமுள்ள சூரியன்.

இந்த நிலையிலுள்ள சூரியனை சில விநாடிகளே பார்க்க முடியும். கொஞ்சம் மேலே வந்துவிட்டால் அப்புறம் பார்க்க முடியாது. உக்ரமுள்ளவனாக ஆகிவிடுகிறது.

பரவசமான முகத்தோடு அந்த வெள்ளை அதிகாரி சொன்னார்.

"நான் கடலிலும் மலையின் மேலுமே சூரியோதயத்தைப் பார்த்தவன். இப்படி வெறும் நிலத்தின்மீது ஒரு சூரியோதயத்தை இன்றுதான் பார்க்கிறேன். உண்மையிலே இது மனத்தை அள்ளுவதாக இருக்கிறது. இப்படி ஒன்றை நான் இங்கே எதிர்பார்க்கவே இல்லை."

"ஆம்; இது உண்மையிலேயே அற்புதம்தான்" என்றார் கருப்பு அதிகாரி.

அவர்கள் கோபல்ல கிராமத்திற்குள் நுழைவதற்கு முன்னால் பாதையின் இருபுறமும் களத்துமேடுகளில் தெரிந்த தீவனப் படப்புகளைப் பார்த்தார்கள்.

"இதென்ன! இவைகளெல்லாம் வீடுகள் தானா; ஜன்னல்கள், வாசல் ஒன்றையுமே காணோமே?"

"இல்லை ஐயா, இவைகள் வீடுகள் இல்லை. கால்நடைத் தீவனங்கள். தானிய அறுவடைக்குப்பின் விவசாயிகள் இவைகளைக் கொண்டு வந்து இப்படி அழகாகவும் ஒழுங்காகவும் அடுக்கிவிடுவார்கள்."

"ஏன் இதை இவ்வளவு சிரமப்பட்டு அடுக்கவேண்டும்? நெல் அறுவடைக்குப் பிறகு வைக்கோல்ப் போர் குவிப்பதைப் போலக் குவித்துவிடலாமே?"

"ஓ! வைக்கோல்ப் போர் நீங்கள் நினைப்பது மாதிரி வெறும் குவித்துவைப்பு அல்ல. அதிலும் ஒரு ஒழுங்கும் முறையும் உண்டு. இந்தக் கம்மந்தட்டைகளையும் சோள நாத்துகளையும் அந்த மாதிரிச் செய்தால் மழைக்காலத்தில் தண்ணீர் இறங்கி கூளம் வீணாய் மக்கிப் போய்விடும்; கால் நடைகள் தின்ன முடியாதபடி ஆகிவிடும். ஆகவே இவைகளை சரியான நீள அகலத்தில் அடுக்கி, அதுக்கென்றுள்ள தட்டுப் பலகைகளால் தட்டி சுவர் போல ஒழுங்குபடுத்தி பிறகு இந்த மாதிரி இருபக்கமும் சாய்ப்பாக இறக்கி சூரித்தட்டைகளால் குத்தி அவைகளால் பின்னி சரிசெய்து முடித்து விடுவார்கள். இதனால் காற்றிலிருந்தும் மழையிலிருந்தும் இவைகளுக்குக் காப்புக் கிடைக்கிறது."

அந்த வெள்ளை அதிகாரி தனது குதிரையை நிறுத்தி, புதிதாக அடுக்கியுள்ள ஒரு நாத்துப் படப்பைச் சுற்றிப் பார்த்து வியந்து ஆனந்தப்பட்டார்.

இந்த வெள்ளை அதிகாரி ஆச்சரியப்பட்டது பெரிசில்லை; தீரவாசத்துக்காரர்கள் வந்து ஒரு சமயம் ஆச்சரியப்பட்டுச் சொன்னதை கிராமத்து மக்கள் இன்னும் சொல்லிச் சிரிப்பார்கள்!

ரெண்டு தீரவாசத்துக்காரர்கள் வந்து படப்பை சுற்றிச் சுற்றி வந்து பார்த்தார்களாம். "என்னத்தைய்யா பாக்கிறீக?" என்று கேட்டார்களாம் இங்குள்ளவர்கள்.

"இல்லே . . . மேச்சல் முடிஞ்சதும் உள்ளேயிருந்து ஆக்கை பிடிச்சவன் எப்படிக்கூடி வெளியே வந்தான்னு பாக்கோம்," என்றார்களாம்!

வீட்டுக்கூரை மேய்ச்சல் நடக்கும்போது, மேலே ஒருவன் இருந்துகொண்டு ஓலையையோ தட்டையையோ வைத்து ஆக்கையை, ஆக்கை ஊசியின் நுனியிலுள்ள துவாரத்தில் கோர்த்து உள்ளே குத்திச் செலுத்துவான், கூரைக்கு அடியில் —உள்ளே — இருக்கும் ஆக்கை பிடிப்பவன் அந்த

ஊசிநுனியிலிருக்கும் ஆக்கையை உருவிக்கொண்டு "ம்" என்று ஒரு அடையாள ஒலி கொடுப்பான். மேலே உள்ளவன், ஊசியை உருவிக்கொண்டு நாலு விரல் அகலம் தள்ளி வெறும் ஊசியைக் குத்துவான். உள்ளே இருக்கும் ஆக்கை பிடிப்பவன் அதன் நுனியில் முதலில் தான் உருவிய ஆக்கையின் நுனியை ஊசியின் நுனியில் கோர்த்து அடையாள ஒலி கொடுத்தவுடன் மேலேயிருப்பவன் ஊசியை இழுத்து ஆக்கையை உருவி இரண்டு நுனிகளையும் இறுக்கி முடிந்துவிடுவான். இந்த மாதிரி ஆக்கை பிடித்து முடிந்தால்தான் கூரை, முகட்டுக் கம்புகளில் இருப்புக்கொள்ளும் சரிந்துவிடாமல்.

இது கூரை மேய்ச்சலுக்கு சரி. படப்புக்கு இந்த முறையை வேறுவிதமாக சம்சாரிகள் யோசித்து ஆக்கைக்குப்பதிலாக சூரித்தட்டையை உபயோகப்படுத்தினார்கள். படப்புக்கு ஆக்கை அவசியமும் இல்லை; அதை உபயோகப்படுத்தவும் முடியாது.

இந்த விஷயமெல்லாம் அந்த தீரவாசத்துக்காரர்கள் கண்டார்களா பாவம்.

ஆக்கை பிடிச்சதுதான் பிடிச்சான்; எப்படி வெளியே வந்தான்? என்று சொல்லிவிட்டு, கூடவே "வடையைத்தான் செய்தான்; துளையையும்தான் போட்டான்; நூலை எப்படிக் கோர்த்தான் பயல்?" என்று ஊசிப்போன வடையைப் பிட்டுப் பார்த்துச் சொன்னவனுடையதையும் சேர்த்துச் சொல்லிச் சிரிப்பார்கள் இவர்கள்!

தெருவுக்குள் குதிரைகள் நுழைந்ததும், நாய்கள் குரைப்பதுவும் சிறுவர்களின் சந்தோஷ ஆரவார ஒலியும் கேட்டது. பெண்டுகளும் பெரியவர்களும் நின்று வேடிக்கை பார்த்தார்கள். பலர், செய்துகொண்டிருந்த வேலையையும் போட்டுவிட்டு ஓடிவந்தார்கள்.

கிராமத்தின் சிறிய குறுகிய சந்துகளையும் தெருவையும் கடந்து அவர்கள் கோட்டையார் வீட்டின்முன் வந்து நின்றார்கள்.

***

31

கோட்டையார் வீட்டுத் தொழுவிலிருந்து பசுமாடுகள் வெளியே வந்துகொண்டிருந்ததால் அவர்கள் உள்ளேபோக முடியாமல் குதிரைமேல் உட்கார்ந்தபடியே காத்துக்கொண்டிருந்தார்கள்.

பசுமாடுகள் தொடர்ந்து உள்ளேயிருந்து வந்த வண்ணமாக இருந்தது. நாட்டு இனத்தைச் சேர்ந்த அந்தப் பசு மாடுகளின் பலவிதமான நிறங்களையும் பலமாதிரி திரும்பியுள்ள கொம்புகளையும், அவைகளின் கழுத்துகளில் கட்டியுள்ள மணிகளையும் அவைகள் எழுப்பும் பல ஸ்தாயை ஒலிகளையும் அவர்கள் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

"நிறைய்யப் பசுக்கள் இருக்கும் போலிருக்கிறதே!" என்றார் வெள்ளை அதிகாரி.

"ஆம்; கால்நடைகளும் நிலங்களும்தான் இவர்களது செல்வங்கள். அதிலும் நாம் இப்போ பார்க்கப்போகும் இந்தக் கோட்டையார்கள் இந்தப் பக்கத்திலேயே மிகுந்த செல்வந்தர்கள்."

குதிரைகளைக் கண்டு சில மாடுகள் வெருண்டதால் அவர்கள் பின்வாங்கி தெருவின் ஒரு பக்கமாக ஒதுங்கிக்கொண்டார்கள்.

பசுமாடுகள் வந்து முடிந்து, உள்ளே போகலாம் என்று நினைத்த சமயத்தில் எருமை மாடுகள் வெளியே வர ஆரம்பித்தன! இதை அவர்கள் எதிர்பார்க்காததால் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

"இந்த மாடுகளெல்லாம் எவ்வளவு பால் கறக்கும்?"

"இங்கே பாலை அளந்து பார்ப்பது கிடையாது; அளந்து பார்க்கக்கூடாது என்று ஒரு நம்பிக்கை. கலயங்களிலும் செம்புகளிலும்தான் பீய்ச்சுவார்கள். மாடுகளின்

சராசரி கறவையைச் சொல்ல வேண்டுமென்றால் இரண்டு நாழிப்பால் இருக்கும் என்று சொல்லலாம்."

நாழி என்கிற அளவு வெள்ளை அதிகாரிக்குப்புரியவில்லை. அதை எப்படி அவர்களுடய கணக்குப்படி விளக்குவது என்று அந்தக் கருப்பு அதிகாரி யோசித்துக்கொண்டிருக்கும் போது, இரண்டு எருமை மாடுகள் தங்களுக்குள் முட்டுப்போட ஆரம்பித்தன.

இவைகள் செம்மறியாட்டங்கிடாய்கள் மாதிரி பின்வாங்கி, ஓடிவந்து முட்டுவது இல்லை. இருந்த இடத்தில் நின்றுகொண்டே ஒன்றையொன்று தனது கொம்பின் உச்சசிமேட்டால் பலம் கொடுத்து மற்றதை நகர்த்துவது என்பதே இவைகளின் முட்டு. இப்படி நகர்த்துவதில் தோல்வி அடைந்த எருமைமாடு திடீரென்று பின்வாங்கி ஓடும். அப்படி அது பின்வாங்கி ஓடும்போது எதிரே என்ன இருக்கிறது என்று அதற்குக் கவலையில்லை! அப்படி எதிரே நிற்கும் பொருள்கள் அனைத்தும் தவிடுபொடியாகிவிடும். ஆகவே மனிதர்கள், தூரத்தில் நின்றுகொண்டுதான் இதை வேடிக்கை பார்ப்பார்கள்.

குதிரைகளில் ஆரோகணித்திருந்த மனிதர்களும் தங்கள் குதிரைகளை அந்த இடத்திலிருந்து விலக்கி இருந்து கொண்டு வேடிக்கை பார்த்தார்கள்.

இரண்டு எருமைகளும் சரிசமமாகப் போரிட்டன. எது ஜெயிக்கும் என்று அவர்களால் சொல்லமுடியவில்லை. இருவரும் மற்றவரைப் பார்த்து சிரித்துக்கொண்டார்கள்.

திடீரென்று ஒரு எருமை பின்வாங்கி ஓட ஆரம்பித்தது. ஜெயித்த எருமை அதேயிடத்தில் நின்றுகொண்டது. வெள்ளை அதிகாரி தனது பரங்கிமொழியில் ஏதோ சொல்லிக்கொண்டு கடிவாளத்தை விட்டுவிட்டு கரஒலி எழுப்பினார்.

அப்போது அந்தக் கருப்பு அதிகாரி சொல்லுவார், "மிருகங்களில் மட்டும், பின்வாங்கி ஓடுவதை ஜெயித்த மிருகம் துரத்தாமல் விட்டுவிடுகிறது; ஆனால் மனிதனில் மட்டும் ஏன் அப்படி இல்லை?"

இந்தக் கேள்வியிலுள்ள தாத்பரியத்தை அந்த வெள்ளை அதிகாரி வெகுவாக ரசித்தார். பிறகு சொன்னார்:

"மனிதர்களிலும் எப்படிச் சில உயர்ந்த பண்புகள் உண்டோ, அதைப் போலவே மிருகங்களிடத்திலும் அவைகளுக்கு என்று சில உயர்ந்த பண்புகளும் இருக்கின்றன."

கால்நடைகளின் அரவம் ஓய்ந்த பிறகு அவர்கள் கோட்டையாரின் வீட்டுக்குள் போனார்கள்.

கோவிந்தப்ப நாயக்கர் திகைத்து, எழுந்து அவர்களை வரவேற்றார்.

அறிமுகத்துக்குப்பின் வெள்ளைக்காரர், கோவிந்தப்ப நாயக்கரின் கையைப் பிடித்துக் குலுக்கியது அவருக்குப் புதிதாகவும் 'என்னவோ போல'வும் இருந்தது!

*

விருந்தினர்களுக்குக் குடிக்கப் பால் வழங்கப்பட்டது. நன்றி தெரிவித்துவிட்டு வெள்ளைக்காரர், பாலின் மணத்தையும் ருசியையும் புகழ்ந்து சொன்னார்.

இந்தப் பக்கத்திலுள்ள பசுக்களின் பாலே இப்படித்தான் ரொம்ப ருசியாக இருக்கும் என்றும், அதுக்குக் காரணம் இங்கே அவைகள் மேயும் அறுகம்புல்லும் உண்ணும் பருத்திக் கொட்டையும் நாத்தும் என்றும் சொன்னார்கள்.

பிறகு, தான் அங்கே விஜயம் செய்ததன் அடையாளமாக, 'சீமை'யில் செய்த வாள் ஒன்றை வெள்ளைக்கார அதிகாரி கோவிந்தப்ப நாயக்கரிடம் அன்பளிப்பாகக் கொடுத்தார். கோவிந்தப்ப நாயக்கருக்கு மகிழ்ச்சியால் இன்னது செய்வது என்று தெரியவில்லை!

சற்று நேரம் கழித்து, கோவிந்தப்ப நாயக்கரிடம் கொஞ்சம் தனியாகப் பேசவேண்டுமென்று வெள்ளை அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்கி,

வேடிக்கை பார்க்க வந்து கூடியிருந்த கிராமத்துக் கூட்டத்தை அப்புறப்படுத்த சிறிது சங்கடப்பட்டது.

அந்தக் கருப்பு அதிகாரி, ஒருவர் சொன்னதை மற்றவரிடம் மொழிபெயர்த்துச் சொன்னார்.

"துரையவர்கள், உங்களை இந்தக் கிராமத்துக்கு மணியமாக கும்பினியின் சார்பாக நியமிக்க வந்திருப்பதால், உங்களுடைய அபிப்ராயம் என்ன என்று அவர்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள்" என்று அவர் சொன்னார்.

இதைக் கேட்ட கோவிந்தப்ப நாயக்கரின் முகத்தில் திகைப்பும் செம்மையும் பரவியது. அவர் தமது தம்பிமார்களின் முகங்களைப் பார்த்தார். அவர்கள் கொஞ்ச தூரத்தில் தள்ளி நின்றுகொண்டிருந்ததனால் இவர்கள் பேசிக்கொண்டது அவர்களுக்குக் கேட்கவில்லை. கிருஷ்ணப்ப நாயக்கர் மட்டும், அண்ணாவின் மனசு இப்பொழுது ஏதோ நம்மை அவசரமாகக் கலந்துகொள்ளத் தேடுகிறது என்பதைப் குறிப்பறிந்து உணர்ந்துகொண்டார்.

***

"எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுங்கள்; நான் யோசித்துச் சொல்லுகிறேனே?" என்று கோவிந்தப்ப நாயக்கர் கேட்டுக்கொண்டார். அதற்கு அவர்களும் சம்மதம் கொடுத்தார்கள்.

அவர்கள் போனபிறகு அனைவருமே கூடி ஆலோசித்தார்கள். அக்கையா அந்த ஆலோசனையில் கலந்துகொள்ளாமல், அவர்கள் கொடுத்துவிட்டுச் சென்ற வாளை எடுத்துப் பார்த்து பரிசீலனை செய்துகொண்டிருந்தார். அந்த வாளால் அவர் மற்ற இரும்புகளை அழுத்தி மெதுவாகச் சீவினார். மரத்தைச் சீவுவதுபோல் அந்த வாள் சீவியது. அந்தச் சீவல்களை மற்றவர்களிடம் அவர் காட்டிக் கொண்டிருந்தார்.

கும்பினியிலிருந்து 'துரை' வந்துபோன விஷயம் கொஞ்ச நேரத்துக்குள் கிராமம் முழுவதும் பரவிவிட்டது.

கிராமத்திலுள்ள முக்கியஸ்தர்களையெல்லாம் கோட்டையார் கோவிந்தப்பநாயக்கர் தனது வீட்டுக்கு வரவழைத்து அனைவரோடும் கலந்து ஆலோசித்தார்.

பலபேருக்கு எந்தவிதத் தீர்மானத்துக்கும் வரமுடியாமல் திகைப்பாக இருந்தது.

இந்தத் திகைப்பை உடைத்து தனது கருத்தை முதலில் சொன்னவர் கோழி இறகு சின்னைய்ய நாயக்கர். அவர் தனது முகத்தை, தாங்கமுடியாத புளிப்பை ருசி பார்த்தவர் மாதிரி வைத்துக்கொண்டு "அவன் என்ன . . . ஆள் கொஞ்சங் கூட ராஜகளையே இல்லையே முகத்தில்? என்னமோ . . . வெள்ளை எலி மாதிரி . . ."

இதைக்கேட்டுப் பலர் சிரித்தார்கள். பெத்தகொந்த்து கோட்டையா அவரைத் தொடர்ந்தார். "அந்த ஆள்! கூட வந்தவன் . . . நல்ல ராஜ அம்சம்."

உடன் வந்த அந்தக் 'கருப்பு' அதிகாரியை எல்லார்க்கும் பிடித்திருந்தது.

"அந்த வெள்ளைக்காரன் கண்ணைப் பாத்தீயளா? அதென்ன அப்பிடி இருக்கு!" என்றார் செல்லப்பிள்ளை.

நம்ம பெண்டுகளின் கருவண்டுக் கண்களைப் பார்த்துப் பார்த்து அனுபவித்தவனுக்கு இந்தக் கண்ணைப் பார்த்தால் ஒரு மாதிரியாகத்தான் இருக்கும் என்று நினைத்தார் கோவிந்தப்ப நாயக்கர்.

கும்பினியார் ஏற்கெனவே இந்த நாட்டுக்கு வந்து பல இடங்களைச் சேர்த்துக்கொண்டு ராஜ்யம் பண்ணுகிறார்கள் என்கிற விஷயம் அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். மங்கத்தாயாரு அம்மாவிடம் இந்த விஷயமாகச் சொல்லி அபிப்ராயம் கேட்கவேண்டும் என்று கோவிந்தப்ப நாயக்கருக்குத் தோன்றியது.

அவரோடு கிராம முக்கியஸ்தர்களும் கூட இருந்தார்கள். விஷயத்தைக் கேட்டுக்கொண்டதும் மங்கத்தாயாரு அம்மாள் அபிப்ராயம் ஏதும் சொல்லாமல் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தாள்.

தொண்டையைச் செருமி சரிசெய்துகொண்ட மங்கத்தாயாரு அவர்களிடம் ஒரு கேள்வி கேட்டாள்.

"ஆமா . . . இந்த வெள்ளைக்காரன் நம்ம நாட்டுக்கு வந்து இத்தனை நாள் ஆகுதே, எங்கியாவது அவன் இந்த துலுக்க ராஜாக்களைப் போல நம்ம பெண்டுகளுக்கு ஏதாவது தொந்தரவு கொடுத்திருக்கானோ?"

அனைவருமே இந்தக் கேள்வியை உன்னிப்போடும் ஆச்சரியத்தோடும் கேட்டு மகிழ்ந்தார்கள்.

மங்கத்தாயாருவின் கேள்வியிலுள்ள மிக முக்கியமான நியாயத்தை அவர்கள் உணர்ந்தார்கள்.

அவர்கள் தெலுங்கு நாட்டிலிருந்து ஓடி வந்ததே இந்த ஒரே காரணத்துக்காக அல்லவா!

கும்பினியான் எந்த இடத்திலும் நம்முடைய பெண்டுகளைத் தூக்கிக்கொண்டு போனதாகவோ, பிடித்து பலாத்காரமாகக் கற்பழித்ததாகவோ அவர்களுக்குச் செய்திகள் இல்லை.

இந்த ஒரு காரணத்துக்காகவே அவர்களுக்குக் கும்பினியான் உயர்ந்து தோன்றினான்!

பூமாதேவியும் ஒரு பெண்தான். மற்றப் பெண்களை மதித்து நடக்கக்கூடியவனிடத்தில் பூமாதேவியையும் நம்பி ஒப்படைக்கலாம்; அவன் இந்த பூமியையும் நன்றாகவே பரிபாலனம் பண்ணுவான் என்றாள் மங்கத்தாயாரு அம்மாள்.

இந்தக் கருத்தை அனைவருமே ஏற்றுக்கொண்டார்கள்.

ஆகவே அவர்கள் கும்பினியாருக்கு தங்களுடைய சம்மதத்தைத் தெரிவித்து அனுப்பினார்கள்.

***

33

மங்கம்மா சாலை வழியாகக் கும்பினிப் படை வீரர்கள் அடிக்கடி போவதைப் பார்க்க முடிந்தது. அந்தப் படை வீரர்களோடு பலர் தலைச்சுமையில் சாமான்கள் சுமந்து கொண்டு போவதையும் காண முடிந்தது.

தலைச்சுமையாக ஆட்கள் அவர்களுக்கு சாமான்கள் தூக்கிக்கொண்டு செல்வது நாளுக்குநாள் அதிகரித்தது. கோபல்ல கிராமத்திலும் வந்து அவர்கள் சுமை தூக்க ஆட்களைக் கேட்டார்கள். ஆரம்பத்தில் இவர்களும் அதில் உற்சாகமாகக் கலந்துகொண்டார்கள்.

நாட்கள் ஆக ஆக இது ஒரு பெரிய்ய தொந்தரவாகவே நிலைக்க ஆரம்பித்துவிட்டது.

சுமை தூக்கும் ஆட்களை அவர்கள் கௌரவமாக நடத்தவில்லை என்று கோவிந்தப்ப நாயக்கரிடம் வந்து வருத்தப்பட்டார்கள். இதைக் கேட்ட கோவிந்தப்ப நாயக்கர் மனசு ரொம்பவும் சங்கடப்பட்டது.

இந்தக் கிராமம் சாலைக்குப் பக்கத்தில் அமைந்திருந்ததும் இந்தத் தொந்தரவுக்கு ஒரு காரணமாக இருந்தது!

நூற்றுக் கணக்கான ஆட்கள் வடக்கேயிருந்து தலைச் சுமைகளைக் கொண்டுவந்து, இந்தக் கிராமத்துக்கு நேராக வந்தவுடன் சாலையிலேயே வைத்துவிட்டுப் போய்விடுவார்கள். அதுக்குப் பிறகு அந்த சாமான்களை இங்குள்ளவர்கள் தூக்கிக் கொண்டு போய் குறிப்பிட்ட தூரத்தில் வைத்துவிட்டு வந்து விடவேண்டும். அதுக்குப்பிறகு அங்கிருந்து வேறு ஆட்கள் அவைகளைத் தூக்கிக் கொண்டு போகவேண்டும். இப்படி ஒரு ஏற்பாடு!

இந்தத் தொந்தரவிலிருந்து தப்பிக்க கிராமத்து ஜனங்கள் பல உபாயங்களைக் கையாள ஆரம்பித்தார்கள்.

ஈரக் கசிவுள்ள கருப்பட்டியைப் பிட்டு உடம்பில் — கால் கைகளில் — அங்கங்கே ஒட்டவைத்து, பழைய துணிகளைக் கிழித்து காயங்கள் புண்களுக்குக் கட்டுகள் போடுவது மாதிரி கட்டிக்கொள்வார்கள். அந்த இனிப்பு வாசனைக்குக் கணக்கில்லாமல் ஈக்கள் வந்து அந்தக் கட்டுகளின் மேல் மொய்க்கும்.

இப்படிக் கட்டுகள் போட்ட, ஈக்கள் மொய்க்கும் ஆட்களை வெள்ளைக்காரர்கள் வேண்டாம் என்று சொல்லிவிடுவார்கள்!

ஆனால் எல்லாருமே இப்படிக் கட்டுகள் போட்டுக் கொண்டு போக முடியுமா? சந்தேகம் வந்துவிடுமே. அக்கையா ஒரு தந்திரம் செய்தார். ஊருக்குள் நுழையும் இடங்களிலெல்லாம் வேப்பிலைத் தோரணம் கட்டச் செய்தார். வீடு தவறாமல் வாசலில் வேப்பங் குழையை சொருகச் சொன்னார். வேப்பங் குழைகள் சொருகிய நிறை குடங்களைத் தெருவின் மத்தியில் அநேகமாக ஒவ்வொரு வீட்டின் முன்னாலும் வைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார்.

வெள்ளைக்காரர்களுக்கு அம்மைநோய் என்றால் போதும்; திரும்பிக்கூடப் பார்க்காமல் ஓடிவிடுவார்கள். அம்மை நோய் கண்ட ஊர்களில், அதை வேற்று ஊர்க்காரர்களுக்குத் தெரிவிக்க இப்படி வேப்பிலைத் தோரணங்கள் கட்டுவதும் நோய் கண்ட வீடுகளின் நுழை வாசலில் வேப்பங்குழை சொருகுவதும் இங்கே வழக்கம் என்பதை வெள்ளைக்காரர்கள் எப்படியோ தெரிந்து வைத்திருந்தார்கள்!

கிராமத்து ஜனங்கள் வெள்ளைக்காரன்கள் மீது பல நாடோடி ஏசல் பாடல்கள் இயற்றிப் பாடினார்கள்.

ஐ சக்கை ஐ

அரைப்படி நெய்

வெள்ளைக்காரன் தொப்பியிலே

விளக்குப் பொருத்தி வை.

வாராண்டா வாராண்டா

வெள்ளைக்காரன்

வரட்டும் தாயோளி

தொப்பிக்காரன்.

கோபல்ல கிராமமும் சுற்றுப்புறமும் கும்பினியின் ஆட்சிக்குக் கீழே வந்து பல வருஷங்கள் ஆகியும் எந்தவித மாறுதலும் உண்டாகவில்லை.

மாறுதல் என்று ஒன்றைச் சொல்லவேண்டுமானால் அப்போது ஆகாயத்தில் தோன்றிய ஒரு அதிசய வால்நட்சத்திரத்தை வேண்டுமானால் சொல்லலாம். அதைப் பார்த்துவிட்டு ஜோசியம் எங்கட்ராயலு "தேசத்துக்குப் பீடை பிடித்துவிட்டது" என்று மட்டும் சொன்னார்.

***

34

ஸ்ரீனி நாயக்கர் பலகையில் வந்து சம்பரமாக உட்கார்ந்தார். அவருக்கு எதிரே செழிப்பாக வளர்ந்த ஒரு கறிவேப்பிலைச் செடி இருந்தது. பார்த்துக்கொண்டிருக்கும் போதே அதில் பல சிட்டுக்குருவிகள் வந்து உட்கார்ந்தன.

அவர் பிரியமாகத் தேடி எடுத்துக்கொண்டுவந்து நட்டு உண்டாக்கப்பட்ட செடி அது; இப்பொழுது மரமாகிக் கொண்டிருந்தது.

அவர் காலைவேளை சாப்பாட்டுக்கு வந்து உட்காரும் இடம் அது.

அது செங்காம்புக் கறிவேப்பிலை; துளசிச்செடியில் விஷ்ணு துளசி, லக்ஷ்மி துளசி என்று இருப்பது போல!

விஷ்ணு துளசியின் இலைக்காம்புகள் சிகப்பு நிறமாக இருக்கும்; இலையின் மணமும் காரமும் ஜாஸ்தி. லக்ஷ்மி துளசி எல்லாமுமே பச்சை; சாந்தமும் மணமும்கொண்ட ருசி.

அவருடைய பாரியாள் எங்கக்கச்சி கும்பாவில் வரகரிசிச் சாதமும் முளைத்தயிரும் கொண்டுவந்தாள். அவளைக் கண்டதும் குருவிகள் பறந்தன.

குருவிகள் பறந்த அதே வினாடி அந்த இடம் பூராவும் ஒரே கறிவேப்பிலை மணம். இருவரும் அதை இழுத்து முகர்ந்தனர். என்ன அருமையான வாசனை!

ஸ்ரீனி நாயக்கர் தனக்கென்று ஒரு தனி பொழுதுபோக்கு வைத்துக்கொண்டிருந்தார். அவருடைய நேரமெல்லாம் பிறத்தியார்க்கு என்று கழிந்தது. அதில் அவர் ஒரு ஆத்மார்த்திக சொகம் கண்டார்.

புளிச்சை நாரில் அவர் வகைவகையான கயிறுகள் திரித்தார். கட்டுக்கயிறு, பிணையல்கயிறு, தண்ணீர்க் கயிறு, உழவு தும்பு, வண்டித் தும்பு இப்படி.

பனைநார்களை நனையப்போட்டு பக்குவப்படுத்தி அதிலுள்ள 'சோற்றுப்பகுதி'யை நீக்கிவிட்டு சன்னமாகக் கிழித்து அவைகளில் அகணிவடங்கள் முறுக்குவார். மாடுகளுக்கு வாக்கூடு பின்னுவார்.

தறிக்காரர்களிடம் சொல்லிவைத்து தறியில் மிஞ்சிய கழிவு நூல்களை வாங்கி, ஆண்களுக்கு அரணாக்கயிறு பின்னிக் கொடுப்பார். பெண்களுக்குத் தாலிக்கயிறு பின்னிக்கொடுப்பார். இவைகளுக்கெல்லாம் பிரதி உபகாரமாக அவர் எதையும் பெற்றுக்கொள்வதில்லை.

கயிறுகளில் புதுப்புது மாதிரியான முடிச்சுக்கள் போட்டுக் காண்பிப்பார். அவர் போடும் முடிச்சுக்களை அவர் தவிர யாரும் அவிழ்க்க முடியாது. கயிறுகளில் அவர் போடும் கற்பனையான முடிச்சுக்களும், பின்னல்களும்தான் எத்தனை வகைகள்!

ரோமங்களைத் திரித்து அற்புதமான கம்பளிக்கயிறுகள் பின்னிக்கொடுப்பார். கிராமத்திலுள்ள காளைமாடுகள் அணிந்து கொண்டிருக்கிற நெற்றிக்கயிறுகள் இவர் பின்னிக் கொடுத்தவைதான்.

மத்தியான வேளைகளில் கம்மாய்க்கரை நிழலில் மரத்தின் வேரில் கயிற்றைக் கட்டி முறுக்கிக்கொண்டிருப்பார். நன்றாக முறுக்கேறிய நீண்ட கயிறை மூன்று பகுதியாகப் பிரித்துக் கொண்டு அதில் இரண்டு பகுதியை பிணைத்து ஒண்டிப்பார். மூன்றாவதை, அந்த இரண்டுகளின் இடையில் திரித்துக் கொண்டே இடையே பிணைக்கும்போது சிலம்பம் பழகுகிறவன் காலடி எடுத்து வைத்து பாவலாப் பண்ணி முன்னேறுகிற மாதிரி இடதும் வலதும் திரும்பி கயிற்றை ஒண்டிப்பதைப் பார்க்கவே நன்றாக இருக்கும்.

இடைவிடாத இந்த வேலையினால் அவருடைய கைகள் காய்ப்பேறி புஜங்களெல்லாம் முறுக்கேறிப் போயிருந்தது. குருவிகள் பறந்ததும் அதிலிருந்துவந்த கறிவேப்பிலை மணத்தை முகர்ந்து அனுபவித்துக்கொண்டே அவர் சாப்பிட ஆரம்பித்தார். கும்பாவுக்குப் பக்கத்தில் 'கொட்டுக்கூடை'யில் கொத்த மல்லி இலைத் துவையல். ஸ்ரீனி நாயக்கருக்கு கொத்தமல்லி இலைத் துவையல் என்றால் உயிர். அதை நாள் பூராவும் தொட்டு நாக்கில்

தடவிக்கொண்டே இருக்கலாம்! அதுக்குத் தோதாக வரகரிசிச் சோறும் முளைத் தயிரும்.

முளைத் தயிர் என்றால் புளிப்பில்லாதது. பால், தயிராக முளைவிடும் பக்குவத்தில் இருப்பது.

எங்கக்சிக்குப் பாலை உறைகுத்தும் பக்குவம் தெரியும். ரொம்பவும் ஆறிவிடாமல் நகவெதும்பலாய் பால் ஆறிவரும்போது தனது புருஷனுக்கு என்று ஒரு தனி ஏனத்தில் ஊற்றி, மோரில் ஆள்க்காட்டி விரலை இரண்டாவது கோடு வரைக்கும் முக்கி உதறிவிட்டு அந்த விரலை பாலில் கலக்கி மட்டுமே வைப்பாள். காலையில் பார்த்தால் அது கட்டித் தயிராக இருக்கும்.

பாலைக் காய்ச்சுவதிலும் கூட ஒரு பக்குவம் இருக்கிறது. அதெல்லாம் எங்கக்சிக்குத் தெரியும். அவள் பாகக் கலையில் ஒரு மேதை. கைபட்டாலே சமையல் மணக்கும்.

கோட்டையார் வீட்டு நல்லது பொல்லதுகளுக்குப் பொங்கி வைக்க எங்கக்சியை வந்துதான் கூப்பிடுவார்கள். அவள் அங்கே சாதாரண நாட்களில் போனாலே ராஜவரவேற்புத்தான். அந்த வீட்டுப் பெண்கள் இவளிடம் ஒவ்வொரு பாகத்தையும் பற்றியும், அதை எப்படிச் செய்கிறது; இதை எப்படிச் செய்கிறது என்றும் விசாரித்துக் கொண்டே இருப்பார்கள். 'செய்கிறவர்களுக்குச் சொல்லத் தெரியாது; சொல்கிறவர்களுக்குச் செய்யத் தெரியாது' என்று ஒரு சொலவம்.

எங்கக்சிக்கு, இவர்கள் தன்னை அநியாயமாகப் புகழ்கிறார்கள் என்று நினைப்பு. ஒருநாள் கோட்டையார் வீட்டுக்கு எதேச்சையாகப் போயிருந்த போது அங்கே சாப்பிடச் சொல்லி இவளை வற்புறுத்தினார்கள். ஆண்களெல்லாம் சாப்பிட்டு முடித்துவிட்டதால் பெண்கள் சாப்பிட உட்கார்ந்திருந்தார்கள். வற்புறுத்தலுக்கு ஆத்தமாட்டாமல் எங்கக்சியும் உட்கார்ந்தாள். குழம்பு பரிமாறியதும் சாப்பிடத் தொடங்கினாள்.

பிசைந்து உருண்டைச் சாதத்தை வாயில் வைத்துப் பார்த்ததும் எங்கக்சி "சீத்தம்மா, அந்தக் குழம்புச் சட்டியை அப்படியே இங்கெ கொண்டா;

கொஞ்சம் போலெ 12ருசிக்கல்லும் கொண்டா" என்றாள்.

குழம்புச் சட்டியையும் உப்பு மரவையையும் கொண்டு வந்து வைத்தார்கள். இடது கையின் நான்கு விரல்களில் கொஞ்சம் உப்பை எடுத்துப் பார்த்தாள். பெருவிரலால் சிறிது மரவையில் தள்ளினாள். துளியூண்டுதான்; போட்டு அகப்பையால் கிண்டி, தனக்கு ஊற்றிக்கொண்டு மற்றவர்களையும் ஊற்றிக் கொள்ளும்படி சொன்னாள்.

என்ன மாயம்! குழம்புக்கு இந்த மணம் எப்படி வந்தது? இப்போது அது கோட்டையார் வீட்டுக் குழம்பின் மணமே இல்லை. இக்குனூண்டு துளி உப்புக்கு இப்படியொரு மந்திர சக்தியா! உப்புக்கல்லுக்கு 'ருசிக்கல்' என்று பேர் வைத்தது யார்?

சீத்தம்மா சொன்னாள்: "எங்க்கச்சியக்கா நீ குழம்பில் உப்புப் போடலை; எங்க கண்ணுக்கு உப்பைக் காமிச்சிட்டு, என்னமோ மந்திரம்தான் போட்டிருக்கே!" என்றாள்.

சாதாரணமாகக் கிடைக்கிற காட்டுக் கீரையைக் கொண்டு வந்து எங்க்கச்சி அமிர்தத்தைக் கடைந்து பரிமாறுவாள். கீரைகளை எத்தனையோ விதமான பக்குவங்களில் ஆக்கித் தருவாள்.

கோவிந்தப்ப நாயக்கருக்குக் கீரையென்றால் போதும்; கீரை குலதெய்வம் அவருக்கு!

"எங்க்கச்சி கீரை கடைஞ்சி, அதைச் சாப்பிடணும்" என்பார் நாக்கைச் சொட்டாங்கி போட்டு.

***

35

குருவிகள் பறந்ததும் அதிலிருந்து வந்த கறிவேப்பிலை மணத்தை முகர்ந்து அனுபவித்துக் கொண்டே ஸ்ரீனி நாயக்கர் சாப்பிட ஆரம்பித்தார்.

பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அவர் சாப்பிடச் சாப்பிட சிறிது சிறிதாகப் பரிமாறிக்கொண்டே இருந்தாள் எங்க்கச்சி. அவர் ருசித்துச் சாப்பிடுவதைப் பார்ப்பதிலும் இன்னும் இன்னும் என்று அவரைத் திணற அடிப்பதிலும் அவளுக்கு ஆனந்தம். எல்லாத்திலுமே அவள் அப்படித்தான்!

எங்க்கச்சிக்கு தான் கருப்பு என்று ஒரு தாழ்வு எண்ணம். ஆனால் அவள் கருப்பும் இல்லை. கோட்டையார் வீட்டுப் பெண்களுக்கு மத்தியில் இருக்கும்போதுதான் அப்படித் தெரிவாள். மற்றபடி அவளை பொதுநிறம் என்றுதான் சொல்லவேண்டும்.

ஸ்ரீனி நாயக்கருடைய பிரகாசமான சிகப்பு நிறத்தில் அவள் மயங்கிப்போவாள். "ஒங்க நிறத்திலெ கொஞ்சம் எனக்குத் தரப்படாதா?" என்று கையோடு கையை ஒட்ட வைத்துக்கொண்டு கேட்பாள்.



நிறத்திலேயும் மயங்க வைக்கிற சிகப்பு, மருள வைக்கிற சிகப்பு, மிரட்டுகிற சிகப்பு, அடிக்க வருகிற சிகப்பு என்று உண்டு.

தன் நிறத்தினால் தாழ்வு எண்ணங்கொண்ட எங்க்கச்சிக்கு, அவருடைய நிறத்தை எத்தனை தடவை அருகிலிருந்து பார்த்தாலும் அலுப்பதில்லை. அந்த நிறத்தைக் கைகளால் தொட்டுத் தடவி அனுபவிப்பாள். சூரிய ஒளிபடாத இடங்கள் இன்னும் பிரகாசமாகவும் அதிமென்மையாகவும் இருக்கும். அவைகளையெல்லாம் உதடுகளால் தடவியும் கன்னங்களைக் கொண்டு உராய்ந்தும் மூக்கால் முகர்ந்தும் அனுபவிப்பாள். அப்படி சமயங்களில் அவள் மெய்மறந்து தெலுங்கில் "ஓனே" என்று ஆசையாய் அவரை அழைப்பாள்.

அவர் அவளை ஒரு குழந்தையைப்போல் தூக்கி தனது இடது தோளின்மேல் உட்காரவைத்துக்கொண்டு, இடது கையினால் அவளுடைய பாதங்களைத் தாங்கி வலது கையைப் பெருமையோடு வீசி நடப்பார்.

செண்டாய்த் தூக்கி தோளில் வைத்துக்கொள்ளும் போதெல்லாம் அவள் ஒரு சிரிப்புச் சிரிப்பாள். அந்தச் சிரிப்புக்கும் ஆசைப்பட்டு அவர் அப்படிச்

செய்வதுண்டு. "இப்படியே உன்னை உட்கார வைத்துக்கொண்டே இப்பொ நொண்டியடிக்கப்போறேன்!" என்பார். மீண்டும் அதே சிரிப்போடு திரும்பிக்கொண்டு அவரது தோளிலிருந்து வேகமாகச் சறுக்கி இறங்குவாள். அப்படிச் சறுக்கி இறங்கும்போது ஏற்படும் உராய்தலில்தான் எத்தனை கொள்ளை இன்பம்!

காலை உணவுக்குப்பின் இந்தக் களியாட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருக்கும்போதுதான் திடீரென்று சூரிய வெளிச்சம் மங்கி இருட்டியது.

குப்பையில் கிளறிக்கொண்டிருந்த கோழிகளெல்லாம், இருட்டத் தொடங்கிவிட்டது என்று நினைத்து கூடுகளை நோக்கித் திரும்பத் தொடங்கின.

எங்க்கச்சி வளர்க்கும் கூண்டுக்கிளி திடீரென்று கீச்சுக் குரல் கொடுத்து அலறியது.

என்னமோ ஏதோ என்று அவர்கள் முற்றத்துக்கு ஓடி வந்தார்கள்.

***

36

ஸ்ரீனி நாயக்கரும் எங்கக்கச்சியும் ஓடிவந்து முற்றத்தில் பார்த்தபோது திடுக்கிட்டுப் போனார்கள்.

அவர்கள் பிரியமாக வைத்து வளர்த்த கறிவேப்பிலைச் செடி மீது இலை தெரியாமல் விட்டில்கள் (வெட்டுக்கிளிகள்) மொய்த்துக்கொண்டிருந்தன.

அவைகளை விட்டில்கள் என்று சொல்வதா அல்லது அதுக்கு வேறு ஏதாவது பெயர் உண்டா என்பது அவர்களுக்குத் தெரியாது. பார்த்துக்கொண்டிருக்கும் போதே அந்த வளர்ப்புச் செடியில் ஒரு இலைகூட இல்லை!

அதில் உட்கார்ந்திருந்த விட்டில் பூச்சியின் நீளம் முக்கால் சாண் ஒருச்சாண் என்றிருந்தது! இதுக்கு முன்னால் அவர்கள் ஆயுளில் இப்படி, இத்தனை பெரிய விட்டிலைப் பார்த்தது கிடையாது; கேள்விப்பட்டதும் கிடையாது.

எங்கக்சி பயந்துபோய் புருஷனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டாள்.

என்ன இது! உலகம் அழிவுகாலத்துக்கு வந்துவிட்டதா?

உலகம், பிரளயம் வந்து அழியப்போகும் போது மழை பெய்யுமாம்; நாள் கணக்கில் நிற்காமல் சரமழை பெய்யுமாம். அந்த மழைச்சரத்தின் கனம் யானைத் துதிக்கைத் தண்டி இருக்குமாம். ஆனால் யாரும் விட்டில் பூச்சி வந்து உலகத்தை அழிக்கும் என்று சொல்லலையே?

அவர் மனைவியை உதறிவிட்டு கோபத்தோடு போய் அந்த விட்டில்களை அடித்து விரட்டினார். செழுமையான அந்தச் செடி இருந்த இடத்தில் ஒரு கம்பும் அதில் சில விளாருகளுமே நின்றுகொண்டிருந்தது பரிதாபமாக இருந்தது.

அவருக்குத் தொண்டையை அடைத்தது. எந்தப் பக்கம் எங்கே திரும்பினாலும் படபடவென்ற சத்தத்துடன் அதே விட்டில்கள்.

கோபல்ல கிராமமே ஒரு தேன்கூடு மாதிரியும் இந்த விட்டில்கள் அதில் மொய்க்கும் ஈக்களைப்போலவும் காட்சி தந்தது.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மனித அபயக்குரல்கள் கர்ண கடூரமாக ஒலிக்க ஆரம்பித்து. ஜனங்கள் நெஞ்சிலும் வாயிலும் அறைந்துகொண்டு அழும் கூக்குரல் கேட்டது.

காடுகளில், விளைந்த கம்மங் கதிர்களுக்குக் காவலாக பரண்மேல் உட்கார்ந்துகொண்டிருந்தவர்கள் திகைத்து, இறங்கிவந்து விட்டில்களை விரட்டிப்பார்த்தார்கள். கம்புகளால் அடித்துப் பார்த்தார்கள். சோ சோ என்று கூப்பாடு போட்டுப்பார்த்தார்கள். கதிர்களை மறைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த விட்டில், பிறகு கதிர் காணாமல் விட்டில் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தது! ஒவ்வொரு பயிரின் கீழிருந்து உச்சி வரைக்கும் விட்டில்கள். அவைகள் மேயும் சத்தம் நெறுக் நெறுக் என்று காடெல்லாம் ஒன்றுபோலக் கேட்டது.

எதைக் கொல்லுவது; எப்படிக் கொல்வது? விட்டிலைப் பிடித்தால் ரம்பம் போன்ற அதன் பின்னத்தங் கால்களால் உதைத்துக் கையை ரணமாக்கி விடுகிறது.

நல்லமனசு திரவத்தி நாயக்கர் அவருடைய புஞ்சையில் காவல் இருந்தார். கதிர் நன்றாக விளைந்திருந்தது. அவருக்கு மட்டுமல்ல, அந்த வருசம் கிராமம் பூராவுமே அப்படி. நாளைக்குக் கதிரைப் பிரக்கணம் என்று நினைத்திருந்தபோது இப்படி ஆகிவிட்டது.

நல்லமனசு நாயக்கர் விட்டில்களை விரட்டிப் பார்த்தார். தன்னை மூடியிருந்த துப்பட்டியை எடுத்து அவைகளை அடித்து அடித்து விரட்டினார். அசையவே இல்லை. அடியினால் பல விட்டில்கள் விழுந்து குற்றுயிராயின. சிலது செத்தன; ஆனால் போகவே இல்லை. அவ்வளவு பசி அவைகளுக்கு!

தன் கண்ணெதிரே தான் சிரமப்பட்டு உண்டுபண்ணிய மகசூல் அழிய எந்த சம்சாரிதான் சம்மதிப்பான். பக்கத்துப் புஞ்சைக்காரனைத் துணைக்குக் கூப்பிடலாமென்றால் அங்கேயும் இதே சோகம். நாயக்கர் ஓடி ஓடி அலுத்துப்போனார்.

வருஷத்துக்கு ஒரு மகசூல்; அடுத்த தை மாசத்தை இனி எப்படிப் பார்க்கிறது? மனுசருக்கு உணவு இல்லை; கால் நடைகளுக்கு கூளம் இல்லை. எல்லாம் முடிந்தது. முடிந்தது எல்லாம்.

"அய்யோ தேவுடா . . ." என்று மண்ணில் விழுந்து அழுதார். கைக்குக் கிடைத்த தின்பண்டத்தை காக்கை பறித்துக் கொண்டுஓட கீழே விழுந்து புரண்டு அழும் குழந்தை போலிருந்தது.

சம்சாரிகள் ஒன்றும் செய்வதறியாது காட்டிலிருந்து ஊரைப் பார்க்க ஓடிவந்தார்கள். அவர்கள் ஓடிவரும் பாதை எல்லாம், அவர்களுடைய புஞ்சையில் பார்த்தது போலவே இருந்தது.

தூரத்தில் வரும்போதே, கம்மாய்க் கரையின் உயரமான மரங்களின் மீதெல்லாம் அதே விட்டில்கள் இலைகள் தெரியாமல் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது.

வீட்டின் கூரைகளில் எல்லாம் விட்டில்கள்!

பெரும்பாலானவர்கள் பயந்துபோய் வீட்டுக்குள் இருந்து கொண்டு கதவைப் பூட்டிக்கொண்டார்கள்.

***

வந்த விட்டில்கள், வந்தபடியே போய்விட்டது.

அவை வந்து போனதுக்கு முதல் அடையாளம் கரை மரங்களுக்குக் கீழே தரையில் அவைகளின் கழித்த எச்சங்கள். இரண்டாவது அடையாளம் எங்கே நோக்கினும் பசுமை நீக்கம். பச்சை என்கிற பிறப்பையே கண்ணில் காணமுடியவில்லை. தரையினுள்ளிருந்து எட்டிப்பார்த்த சிறூ புல் நுனியைக்கூட அவை விட்டு வைக்கவில்லை. பனைமரங்களும் இலைகளைப் பறிகொடுத்துவிட்டு ராட்சத உலக்கைகளைப் போல மொட்டையாக நின்றது. கல்யாணக் கொட்டகையைப் பிரித்த வீடு மாதிரி ஊரே வெறீச் என்று களை இழந்து இருந்தது.

யாவருக்கும் முதலில் ஒரு வியப்பும் பயமுமாக இருந்தது; அப்புறம் தாங்கமுடியாத துக்கம். யாருக்கு யார் ஆறுதல் சொல்ல? யாரை இதுக்குக் குற்றம் சொல்ல?

கிராமத்தின் துக்கம் நெஞ்சைப் பிழிவதாக இருந்தது. கோட்டையார் சகோதரர்களின் இதயம் இளகியது. அவர்கள், அனைவரையும் கூப்பிட்டு ஆறுதல் சொன்னார்கள். அப்படிச் செய்தது அவர்களுக்கும் ஆறுதலாக இருந்தது! தங்கள் வீட்டின் தானியக் களஞ்சியங்களை கிராமத்துக்காகத் திறந்துவிட்டார்கள்.

"விதைக்காக, நமக்கும், கிராமத்துக்கும் போக பாக்கி எல்லாத்தையும் எல்லாரையும் கூப்பிட்டு அளந்து கொடுத்திருங்க" என்றார் தனது சகோதரர்களிடம் கோவிந்தப்ப நாயக்கர்.

அதோடு, கிராமத்தின் கால்நடைகளுக்காக, பல வருஷங்களாகப் பிடுங்கப்படாத பெரிய பெரிய பல தட்டைப் படப்புகளையும் நாத்துப்படப்புகளையும் கொடுத்தார்கள்.

எங்க்கட்ராயலு சொன்னார்: "கோவிந்தப்பா, இந்த வருஷம் நாங்க கம்மஞ்சோத்தைக் கட்டியாய் சாப்பிடுறதுக்குப் பதிலா கரைச்சியாவது குடிக்கிறோம் உங்க புண்ணியத்திலெ" என்றார்.

"அதெப்டி; எங்கள்ட்டெ இருந்தா மட்டும் அது எங்கள்து ஆயிருமா? அந்த நாள்ளே எல்லாருடைய பெரியாட்களும் சேந்துதான் இந்தக் கள்ளிக்காட்டைத் திருத்தி நிலமாக்கினாக" என்றார் கோவிந்தப்ப நாயக்கர், அடக்கத்தோடு.

***

38

'விட்டில் பஞ்சம்' ஏற்பட்டபோது கோட்டையார் செய்த உதவி கிராமத்துக்கு ஓரளவு நிவாரணம் தந்ததே தவிர அவர்களின் பெருங்கஷ்டத்தை நீக்குவதாக இல்லை.

இந்த நேர்வைப் பற்றியும் மக்களின் கஷ்டத்தைப் பற்றியும் மேலாவில் முறைப்படி தெரிவித்து அனுப்பினார் கோவிந்தப்ப நாயக்கர். அதுக்குக் கும்பினியாரிடமிருந்து எந்தவிதமான தாக்கலும் இல்லை.

திரும்பவும் கொள்ளை கொலை பற்றிய பீதி மக்களிடம் பரவியது.

கிடைக்கும் செய்திகள் எதுவும் நம்பிக்கை ஊட்டுவதாக இல்லை. அவர்கள் பல விஷயங்களைக் கேள்விப்பட்டார்கள். எது நிஜம் எது பொய் என்று தெரியவில்லை.

ராட்டை நூற்பவர்களையெல்லாம் கட்டை விரலை வாங்கிவிடுகிறார்கள் இந்த வெள்ளைக்காரர்கள் என்று ஒரு செய்தி!

இது என்னடா நூதனமா இருக்கு என்று பயந்து கொண்டே சிரித்தார்கள் ஜனங்கள்.

வெள்ளைக்காரர்களை யார் எதிர்த்துப் பேசினாலும் சரிதான்; உடனே தலையை வாங்கி விடுகிறார்கள்! இப்படி ஒரு செய்தி.

நம்ம நிலத்தில் முளைச்ச வெள்ளரிக்கொடியிலிருந்து கூட ரெண்டு பிஞ்சு பிடுங்கி, அவனைக் கேட்காமல் யாருக்கும் கொடுக்கப்படாதாமே!

இது என்னடா கூத்து என்று சொல்லிச் சிரித்தார்கள்.

இதுக்கு மத்தியில்,

பாஞ்சாலங்குறிச்சி ராஜா கட்டபொம்முவைக் கூட்டிக் கொண்டுவந்து கயத்தாற்றுக்குப் பக்கத்திலுள்ள ஒரு புளிய மரத்தில், கொன்று தொங்கவிடப்பட்டிருப்பதாக ஒரு செய்தி வந்தது. இது பரபரப்பும் பயமும் நிறைந்த விஷயமாக இருந்தது.

இதைப்பற்றிப் பலமாதிரியான பேச்சு அடிபட்டது.

வெள்ளைக்காரர்களைக் கட்டபொம்மு எதிர்த்ததுதான் காரணம் என்று சொல்லப்பட்டது.

கட்டபொம்முவின் தம்பியான ஊமைத்துரை, தன்னுடைய அண்ணனைக் கொன்றதுக்குப் பழியாக பத்து வெள்ளைக்கார அதிகாரிகளைப் பிடித்துக் கொன்று பதிலுக்கு மரத்தில் தொங்கவிட்டிருக்கிறார் என்றும் பேசிக்கொண்டார்கள்.

கும்பினியாரை எதிர்த்தும் ஆதரித்தும் ஜனங்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

எங்கேயோ சமுத்திரத்துக்கு அங்கிட்டுள்ள சீமையிலிருந்து வந்து நம்மை அடக்கி ஆள முடியுமா? என்று கேட்டார் அக்கையா.

அவன் துப்பாக்கியும் கரி மருந்தும் வச்சிருக்கானாமே. அதைவிடப் பெரீசு பீரங்கிண்ணு ஒண்ணு இருக்காமே!

ஒரு பீரங்கியை வெடிச்சா ஒரு ஊரே அழிஞ்சி போகுமாமே என்றெல்லாம் பேசிக்கொண்டார்கள்.

"பிரம்மாஸ்திரம் எங்கிறது அதுதான்; அது அவன் கையிலெ இருக்கிற வரைக்கும் யாராலேயும் அவனை ஜெயிக்க முடியாது, ஆமா" என்றார் பஜனைமடம் பார்த்தசாரதி.

வெள்ளைக்காரனிடம் நாம் சிக்கிக் கொள்ளக்கூடாது; நாம் தனியா இருக்கணும். அவன் சங்காத்தம் நமக்கு வேண்டாம் என்றார் அக்கையா.

அவனுக்கு நாம் வாக்குக் கொடுத்துட்டோம்; மீறக்கூடாது இனி என்பது கோவிந்தப்ப நாயக்கர் கட்சி.

*

கொஞ்ச நாள் கழித்து கும்பினியைச் சேர்ந்த அதே அதிகாரிகள் கோபல்ல கிராமத்துக்கு வந்தார்கள். இப்பொழுது அவர்கள் இரண்டு பேராக மட்டும் வரவில்லை. ஒரு பட்டாளமே வந்தது. அப்பொழுதுதான் அவர்கள் கையில் வைத்திருந்த அந்தத் துப்பாக்கிகளை இந்த கிராமத்து ஜனங்கள் முதல் முதல் பார்த்தார்கள் அதிசயத்தோடு.

கவணையும் வில்லையும் வேலையும் பார்த்த அவர்களுக்கு அது ஒரு பயங்கர அதிசயப் பொருளாக இருந்தது.

கும்பினியின் வெள்ளைப் பட்டாளத்தில் இப்பொழுது கருப்பர்களும் இருந்தார்கள். இவர்களைப் பழக்குவதற்குள் வெள்ளைக்காரர்கள் ரொம்ப சிரமப்பட்டுப்போனார்களாம்! அதைப் பற்றி அக்கையா சொல்ல ஆரம்பித்தால் கேட்க சுவாரஸ்யமாய் இருக்கும்.

வெள்ளைக்காரன் இவன்களை வரீசையாக நிறுத்தி அவன் இவர்கள் எதிரே நின்றுகொண்டு குயவன் மண்ணை மிதிக்கிற மாதிரி மாறி மாறி ஒரு காலை மாற்றி ஒரு காலை வெறும் தரையில் மிதிப்பானாம். எதிரே வரீசையாய் நிற்கும் இவன்களையும் அதே மாதிரி மிதிக்கச் சொல்லுவானாம்.

இவன்கள் அப்படி மிதிக்கும்போது அவன் "லெப்ட், ரைட்; லெப்ட், ரைட்" என்று சொல்லிக்கொண்டே இருப்பானாம்.

"லெப்ட் ரைட் என்கிறது அவனுடைய பாஷை. அது இந்தக் கழுதைகளுக்கு எங்கே தெரியும்? ஒண்ணுபோல மிதிச்சாத்தானே. எவ்வளவு சொல்லியும் தெரியலை. அவன் தந்திரக்காரனில்லையா; ஒரு காரியம் செஞ்சான். இந்தப் பயல்கள் ஒவ்வொருத்தன் இடது கால்லேயும் பச்சோலையைக் கிழிச்சி தண்டை மாதிரிக் கட்டினான். வலது கால்லெ சீலைத் துணியெக்கிழிச்சிக்

கட்டினான். இப்பொ அவன் சொன்ன மாதிரி இந்தப் பயல்களும் சொல்லிக்கிட்டே வெறும் தரையெ மாறி மாறி உதைக்க ஆரம்பிச்சாங்களாம்.

"ஓலைக்கால், சீலைக்கால், ஓலைக்கால், சீலைக்கால். ஓலைக்கால்ண்ணா இடது காலை உதைக்கணும்; சீலைக் கால்ண்ணா வலது காலை உதைக்கணும்" இப்படிச் சொல்லிச் சிரித்தார் அக்கையா.

காரணமில்லாமல் பூமாதேவியை இப்படிக் காலால் உதைக்கவிடுவது தப்பு என்று பட்டது பார்த்தசாரதிக்கு!

***

39

1858 ஆம் வருஷம் விக்டோரியா மகாராணி கும்பினி ஆட்சியை, தானே ஏற்றுக்கொண்டு இந்திய மக்களுக்கு சமாதானமும் ஆறுதலும் ஏற்படும்படி ஒரு அறிக்கை விட்டிருந்தாள்.

இந்தப் 'பேரறிக்கை'யை இந்திய மக்களிடமும் முக்கிய கிராமப் பிரமுகர்களிடமும் கொண்டுபோய்த் தெரிவிக்கும் கடமை கும்பினியின் பொறுப்பு அதிகாரிகளுக்கு ஏற்பட்டது. அதன்படிதான் அவர்கள் இப்பொழுது கோபல்ல கிராமத்துக்கு வந்திருக்கிறார்கள்.

முக்கியஸ்தர்களை ஒரு பொது இடத்தில் கூட்டினார்கள். அவர்களிடம் விக்டோரியா பேரரசியின் அறிவிப்பை வாசித்து விளக்கினார்கள்.

இனிமேல் மக்களுக்கு ஒரு குறைவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்படும் என்றும் மத விஷயங்களில் சர்க்கார் தலையிடாது என்றும் உறுதி கூறினார்கள்.

வெள்ளைக்காரர்கள் வேற்று மதத்தினர்களாக இருக்கிறார்களே என்கிற தயக்கம் வேண்டாம். இங்கே உள்ள எந்த மத விஷயங்களிலும் சர்க்கார் ஊடாடாது. உங்களுக்குப் பூரண மத சுதந்திரம் உண்டு.

இனிமேல் கொள்ளை கொலை முதலியன ஏற்படாமல் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்; நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்.

கும்பினியின் ஆட்சி போய் மகாராணியின் ஆட்சியின் கீழ் வந்துவிட்டோம் என்று கேள்விப்பட்டதும் இந்த ஜனங்களுக்குக் காரணமில்லாமல் ஒரு சந்தோஷம் வந்தது!

அவர்களுக்கு, ராணி மங்கம்மாவின் ஆட்சியைப் பற்றிய ஞாபகம் வந்தது.

ராணி மங்கம்மாவின் ஆட்சியில் நடந்தைவைகளைத் தங்கள் முன்னோர்கள் சொல்லக் கேள்விப்பட்டும், அதனால் விளைந்த நலன்களைக் கண்ணாரப் பார்த்துமிருப்பவர்கள் அவர்கள்.

'ராணி விக்டோரியா கூடப் பாக்கிறதுக்கு ஒரு வேளை ராணி மங்கம்மா மாதிரியே இருக்கலாம்' என்று கோவிந்தப்ப நாயக்கருக்கு சம்மந்தமில்லாத ஒரு கற்பனை வந்தது! ஆனால் அவர், மங்கத்தாயாரு அம்மாள் சொல்லி ராணி மங்கம்மாவைப் பற்றிக் கற்பனையில் அறிந்து கொண்டதுதான்.

மங்கம்மா சாலை எப்படி வந்தது என்பதற்கு ஜனங்கள் ஒரு கதை சொல்லுவார்கள்.

ஒருநாள், ஆலோசனை மண்டபத்தில் முக்கியமானவர்களோடு ராணி மங்கம்மா ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தாளாம். அவளுக்கு எதிரே தாம்பூலப் பெட்டி இருந்தது. வழக்கமாக வெற்றிலை மடித்துக்கொடுக்கும் பணியாள் பக்கத்தில் இல்லை. முக்கியமான அரசாங்க ஆலோசனைகளின் போது பணியாட்கள் அருகாமையில் இருப்பது வழக்கம் இல்லை.

ராணியின் கையில், வலதுகைப் பெருவிரலுக்கும் ஆள் காட்டி விரலுக்கும் இடதுகைப் பெருவிரலுக்கும் அதன் ஆள்காட்டி விரலுக்கும் ஆக நாலு விரல்களுக்கும் ஊடே ஒரு பாக்கு யோசனையில் உருண்டுகொண்டே இருந்தது.

ராணி, அவர்கள் ஒவ்வொருவர் சொல்லுவதையும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

பாக்கு, வலதுகை விரலின் இடுக்கில் சிறிது நேரம் இருக்கும்; பிறகு அது இடது கை விரலின் இடுக்குக்கு வந்து கொஞ்சநேரம் இருக்கும்; பிறகு அது திரும்பவும் வலது கை விரலுக்குப் போகும்; இப்படியே வந்தது.

ராணிக்கு பளிச்சென்று ஒரு முடிவு மனசுக்குள் தெரிந்தது. உடனே அவளுடைய இடதுகைக்குப் போன பாக்கு அவளை அறியாமலேயே

டக்கென்று வாய்க்குள் போய் விழுந்தது!

இடது கையினால் பாக்கை வாய்க்குள் போட்டதும் அங்கே கூடியிருந்தவர்களைப் போலவே ராணியும் திடுக்கிட்டாள்.

மங்களப் பொருளை இடது கையால் தொட்டதைவிட அதை இடது கையாலேயே சபையின் மத்தியில் வைத்து வாயில் போட்டுக்கொண்ட தப்பிதத்துக்குப் பரிகாரம் என்ன?

பாக்கை இடது கையினால் போட்டுக்கொண்டதுக்குப் பரிகாரமாகத்தான் ராணி மங்கம்மாள் இந்த சாலையைப் போட்டாளாம்!

இந்தக் கதையை மங்கத்தாயாரு அம்மாவிடம் யார் பிரஸ்தாபித்தாலும் மெதுவாகச் சிரித்துவிட்டு, அது இல்லை என்பதுபோலக் கையை அசைப்பாள். பிறகு ரகசியமான சன்னக் குரலில், "ரொம்ப பேருக்குத் தெரியாது நிஜம்! சின்ன வயசிலேயே எனக்கு ராணி மங்கம்மாவைப் பத்தித் தெரியும். நாங்க கொஞ்ச நாள் அங்கே அரமணையில் தங்கி இருந்திருக்கோம். அந்த மகராசிக்கு நம்மளைப் போல வலதுகை விளங்காது; எடதுகைதான். இது ரொம்ப பேருக்குத் தெரியவே செய்யாது!" என்பாள்.

'எது எப்படியோ, ஜனங்களுக்கு அது ஒரு நல்ல காரியமா அமைஞ்சீட்டது. ராஜாத்திங்கிறது அவள்தான்' என்று நினைப்பார் கோவிந்தப்ப நாயக்கர்.

ராணி மங்கம்மாவின் சிறப்பால் ராணி விக்டோரியாவும் ஓர் உயர்வாகத் தோன்றினாள் அவர்களுக்கு.

***

40

விட்டில் பஞ்சத்தின்போது ஜனங்கள் இங்கே பட்ட துயரத்தைப் பிரஸ்தாபித்து, அது சமயம் கோட்டையார் செய்த உபகாரத்தை அவர்கள் பெரிதும் சிலாகித்தார்கள். நன்றி சொன்னார்கள்.

இனிமேல் அரசு இப்படி சமயங்களில் மெத்தனமாக இருக்காது என்றும், விரைந்து வந்து உதவும் என்றும் உறுதி சொன்னார்கள்.

அரசாங்க விரோத சக்திகளுக்கு யாரும் ஒத்துப்போகக் கூடாது, வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள். பாரம்பரியமாகவே நீங்கள் ராஜ விஸ்வாசம் கொண்ட மக்கள். மகாராணி விக்டோரியா உங்களுக்கு வேண்டிய எல்லாவித நன்மைகளையும் செய்யவே எங்களை இங்கே அனுப்பி இருக்கிறார்கள் என்றார்கள்.

அங்கே கூடியிருந்த அனைவருக்கும் இது நல்லதாகவே பட்டது.


ஏகோபித்த நம்பிக்கையுடன் அவர்கள் விக்டோரியா மகாராணியின் ஆட்சியை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்கள்.

ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அந்த நம்பிக்கை மெல்ல மெல்ல சிதலமடைந்ததையும், நாட்டின், அந்த கிராமத்தின் மக்களுடைய சுதந்திர ஆவேசம் நீறுபூத்த நெருப்பாக இருந்ததையும் வெள்ளை ஆட்சி கண்டு கொள்ளவில்லை.

நிலவிய அப்போதைய அமைதி, வரும் ஒரு புயலுக்கு முன்னுள்ளது என்பதை அறியவில்லை யாரும்.


***


RAILWAY TRACK
NATIONAL HIGHWAY
TAR ROAD
KARISAL SEEMAI





















ISBN 978-81-968802-1-7
9 788196 880217



